கால்டுவெல்

பார்வையும் பங்களிப்பும்



பொதுப்பதிப்பாசிரியர்

கு. அரசேந்திரன்

யோ. ஞான சந்திர ஜாண்சன்

பதிப்பாசிரியர்

ப. டேவிட் பிரபாகர்

தமிழ்த்துறை

சென்னைக் கிறித்தவக் கல்லூரி

சென்னை – 600 059

கால்டுவெல்

பார்வையும் பங்களிப்பும்

பொதுப் பதிப்பாசிரியர்
முனைவர் கு. அரசேந்திரன்
முனைவர் யோ. ஞான சந்திர ஜான்சன்

பதிப்பாசிரியர்
முனைவர் ப. டேவிட் பிரபாகர்

தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி
சென்னை - 600 059

நூல் விவரக் குறிப்பு

நூலின் தலைப்பு	: கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும்
பொருள்	: ஆய்வு
பதிப்பாசிரியர்	: முனைவர் ப. டேவிட் பிரபாகர் இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை சென்னைக் கிறித்தவக் கல்லூரி சென்னை - 600 059.
பொதுப் பதிப்பாசிரியர்	: முனைவர் கு. அரசேந்திரன் முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன்
வெளியீடு, பதிப்புரிமை	: தமிழ்த்துறை சென்னைக் கிறித்தவக் கல்லூரி சென்னை - 600 059.
மொழி	: தமிழ்
பதிப்பு	: முதற்பதிப்பு, டிசம்பர் 2014
நூலின் அளவு	: 1/8 டெம்மி
பக்க எண்ணிக்கை	: 528
படிகளின் எண்ணிக்கை	: 600
விலை	: ரூ. **400/-**
ஒளி அச்சு	: ஜாஸ்மின் கணினி சேலையூர், சென்னை - 600 073.
முகப்போவியம்	: ஓவியர் அந்தோணி குரூஸ்
அச்சகம்	: RNR அச்சகம் 19, தாண்டவராயன் தெரு திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

கே.சி. வீரமணி
பள்ளிக் கல்வித் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள்: 15.12.2014

வாழ்த்துரை

சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாகக் 'கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும்' என்ற தலைப்பில் வெளியிடப்பெறும் ஆராய்ச்சி நூலினைக் கண்டேன்; மகிழ்ந்தேன். நூற்று எழுபத்தைந்து ஆண்டினைக் கடந்து கல்விப் பணியாற்றிவரும் புகழ்மிக்க சென்னைக் கிறித்தவக் கல்லூரி வரலாற்றில் இந்நூல் வெளியீடும் கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும். ஆயிரமாயிரம் அறிஞர்களை எண்ணற்ற தலைவர்களை மாணவர்களை இக் கல்லூரி உருவாக்கியது. கல்லூரியைப் போலவே கல்லூரியின் தமிழ்த்துறையும் புகழ்மிக்கது. இந்த வெளியீட்டின்மூலம் தமிழ்த்துறை தன் தமிழ்க் கடமையை உணர்ந்து செய்துள்ளதாகக் கருதுகின்றேன்.

டாக்டர் கால்டுவெல் 1856இல் வெளியிட்ட 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்' தமிழர் வரலாற்றில் மறுமலர்ச்சியையும் புத்தூழியையும் உருவாக்கியது. சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த் துறையில் பணியாற்றிய தனித்தமிழ் இயக்க முன்னோடியாகிய **பரிதிமாற்கலைஞர்**, தனித்தமிழியக்கத் தந்தையாகிய **மறைமலையடிகள்** ஆகியோர்தம் தமிழ் ஆய்விற்கும் கொள்கைக்கும் கால்டுவெல் ஊற்றுக்கண்ணாக இருந்தார்.

கோடிக்கணக்கில் திட்டங்கள் தீட்டித் தமிழகத்தை வளர்த்திட அல்லும் பகலும் அயராமல் உழைத்துவரும் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள் கால்டுவெல்லின் இருநூறாம் ஆண்டுப்பிறப்பு விழாவினை அரசு விழாவாகக் கொண்டாடவும், ஆண்டுதோறும் அவரது திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்துச் சிறப்புச் செய்யவும் அரசு ஆணை பிறப்பித்தார்கள். நாடெங்கும் விழா நடந்தது. இடையன்குடியில் அரசு விழா நடத்தியது. இவற்றிற்கெல்லாம் எடுத்துக்காட்டாக 2014 சனவரி 29, 30, 31 ஆகிய மூன்று நாட்களும் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறை, கால்டுவெல் பற்றி அறிந்த ஆராய்ச்சியாளர்களைக் கொண்டு கருத்தரங்கம் நடத்தி இப்பொழுது அக் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக்கியுள்ளது.

கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும் என்னும் இந்நூற் செய்திகள் உலகமெங்கும் சென்று பரவவேண்டும். திராவிட இனத்தின் திராவிட மொழிகளின் பெருமையை உலகம் அறியவேண்டும். இந்நூல் வெளிவரக் காரணமான அனைத்துப் பெருமக்களையும் வாழ்த்துகிறேன்; இதுபோன்ற தமிழ்ப்பணியைத் தொடர வேண்டுகின்றேன்.

அன்புடன்,

கே.சி. வீரமணி

டாக்டர் **இர.வி. அலெக்சாண்டர் ஜேசுதாசன்**
முதல்வர் & செயலர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)
சென்னை - 600 059.

வாழ்த்துரை

பாரம்பரியம் மிக்க சென்னைக் கிறித்தவக் கல்லூரி, உயர்ந்த மரபுகளைப் போற்றிக் கொள்ளும் அதே வேளையில், வருங்கால வளர்ச்சிக்கான திட்டங்களையும் தொலைநோக்குடன் தீட்டி வருகிறது. ஆய்வு மேம்பாட்டுக்குத் தனிப் பிரிவை உருவாக்கி அதன் வழி ஆய்வு வளர்ச்சிக்கான பணிகளைத் தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது. இச்சூழலில்தான் **பேராயர் டாக்டர் இராபர்ட் கால்டுவெல்** பற்றிய இந்த ஆய்வு நூல் வெளிவருகிறது.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியை நிறுவிய டாக்டர் **ஜான் ஆண்டர்சன்** டாக்டர் கால்டுவெல்லின் நெருங்கிய நண்பர். இத்தகையவர்களின் கனவுத் திட்டங்களே நாம் உயர்கல்வி பெறுவதற்கு அடிப்படைகளாக அமைந்தன. தம் ஒப்பற்ற ஒப்பிலக்கண ஆய்வின் மூலம் கல்வி உலகிலும், சமுதாயத்திலும் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் டாக்டர் கால்டுவெல். மொழி, வரலாறு, சமுகம், சமயம் போன்ற களங்களில் இவர் நிகழ்த்திய ஆய்வுகள் பிந்தைய ஆய்வுகள் பலவற்றுக்கும் முன்னோடியாக அமைந்தன; இவர் ஆற்றிய பணிகள் சமுதாய மேம்பாட்டிற்குத் துணைபுரிந்தன. இவர்தம் படைப்புகளையும், பங்களிப்புகளையும் ஆராய்வதும், அவற்றை நன்றியோடு நினைப்பதும் நமது கடமையாகும்.

மிகவும் திறம்பட செயலாற்றிவரும் தமிழ்த்துறை, டாக்டர் கால்டுவெல் குறித்த தேசியக் கருத்தரங்கை நிகழ்த்தியதோடு, ஆய்வுரைகளைத் தொகுத்து தற்பொழுது நூலாக்கம் செய்து வெளியிடுகிறது. இவ்வரிய முயற்சியில் ஈடுபட்ட தமிழ்த் துறையினரைப் பாராட்டுகிறேன். தரம் மிக்க ஆய்வுப் படைப்புகளையும் பணிகளையும் தமிழ்த்துறை சிறப்பாகச் செய்து வருகிறது. இத்தகைய பணிகள் தொடர இறைவனின் பெயரில் தமிழ்த் துறையினரை வாழ்த்துகிறேன்.

நன்றி. வணக்கம்.

14.12.2014
சென்னை - 59.

இர.வி. அலெக்சாண்டர் ஜேசுதாசன்

பதிப்புரை

தமிழ் மொழியைப் பற்றியும் தென்னிந்தியாவைப் பற்றியும் இந்தியர்களும் அயல் நாட்டவரும் கொண்டிருந்த தவறான பார்வையை மாற்றியமைத்து, உயர்வான எண்ணத்தை ஏற்படுத்தியவர் கால்டுவெல். 'இந்தியவியல்' என்றாலே 'சமஸ்கிருதவியல்' எனக் கருதிய மேனாட்டவரின் எண்ணத்தை கால்டுவெல்லின் ஆய்வுகள் தகர்த்தன. எல்லிஸ் அவர்கள் முன்மொழிந்த திராவிடக் கருத்தை விரிவாகவும் விளக்கமுறவும் நிறுவியவர் கால்டுவெல். தமிழ் தனித்தியங்கும் ஆற்றல் கொண்டது எனவும் சமஸ்கிருதச் சார்பின்றித் தமிழ் இயங்கக்கூடியது என்பதையும் அவர் அழுத்தமாக எடுத்துரைத்தார். தமிழின் செவ்வியல் தன்மையை அறிவியல் முறையில் அடையாளம் காட்டியவர் அவர். பின்னர் எழுந்த தனித்தமிழ் இயக்கம், திராவிட இயக்கம், தமிழிசை இயக்கம் போன்றவற்றுக்கும் இவர்தம் ஆய்வுகளே மூல ஊற்றுகளாக அமைந்தன.

மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, கலைகள், சமயம், வழிபாடு தொடர்பாக, கால்டுவெல் நிகழ்த்திய திராவிடவியல் ஆய்வுகளைப் புலமைச் செயல்பாடாக மட்டும் கருத இயலாது. அவற்றைத் தென்னிந்திய மக்களைப் பற்றிய மறைக்கப்பட்ட பெருமைகளையும் தனித்தன்மைகளையும் உலகுக்கு உணர்த்தும் அக்கறை கொண்டதாகவும் நோக்க வேண்டும். காலனியம், இனம், சாதியம், கல்வி பற்றிய கால்டுவெல் பார்வையும் தனித்துவமானது. பின்தங்கிய வறண்ட பகுதியை கால்டுவெல் தம் பணிக்களமாகக் கொண்டு, அடித்தள மக்களின் விடுதலைக்கும் பெண்கள் கல்விக்கும் பாடுபட்டார்.

தம் ஆய்வுத் திறத்தால் தமிழின் மறுமலர்ச்சிக்கும். தமிழர்களின் எழுச்சிக்கும் வித்திட்ட கால்டுவெல்லின் நினைவைப் போற்றும் வகையில், அவர்தம் 200 ஆம் பிறப்பு ஆண்டில், கருத்தரங்கு ஒன்றைச் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறை நடத்திற்று. 'கால்டுவெல்: பார்வையும் பங்களிப்பும்' எனும் பொருண்மையில் ஜனவரி 29,30,31 ஆகிய நாட்களில் நடைபெற்ற இக்கருத்தரங்கினைப் பேருவகையோடு தமிழ்த்துறை நடத்தியதற்கு வேறு காரணங்கள் சிலவும் உண்டு. ஒன்று, கால்டுவெல்லும் எமது கல்லூரியைத் தோற்றுவித்த டாக்டர் **ஜான் ஆண்டர்சன்** அவர்களும் நெருங்கிய நண்பர்களாகவிருந்தது. இன்னொன்று, எங்கள் கல்லூரியின் இணையற்ற வளர்ச்சிக்கு வித்திட்ட மேனாள் முதல்வர் டாக்டர் மில்லர் அவர்கள் பயன்படுத்திய கால்டுவெல் ஒப்பிலக்கண நூலின் முதல் பதிப்பை (1856) நூலகத்தில் பத்திரமாகப் பேணுவது. மற்றொன்று, எங்கள் துறையில் பணியாற்றித் தமிழின் செம்மொழித் தகுதிப்பாட்டிற்கும் தனித்தமிழ் இயக்கத்திற்கும் முன்னோடிகளாக விளங்கிய எங்கள் துறைப் பேராசிரியர்கள் **பரிதிமாற்கலைஞர்**, **மறைமலையடிகள்** ஆகியோரின் பணிகளை கால்டுவெல்லின் தொடர்ச்சியாகக் காண்பது.

இக்கருத்தரங்கிற்குச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் எங்கள் கல்லூரியில் இயங்கும் ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பிரிவும் நிதிநல்கை புரிந்தன. கால்டுவெல் பங்களிப்பு செய்துள்ள களங்கள் கண்டறியப்பட்டு, பொருத்தமான அறிஞர்கள் ஆய்வுரை வழங்க அழைக்கப்பட்டனர். ஆய்வுக் களங்களின் அடிப்படையிலேயே இந்நூலிலும் கட்டுரைகள் நிரல்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வரங்கில் வழங்கப்படாத கட்டுரைகள் சிலவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்த அறிஞர்களுக்கு நன்றி.

தமிழ்த்துறையின் தலைவர் பொறுப்பு வகித்த முனைவர் **கு. அரசேந்திரன்** அவர்களின் வழிகாட்டுதலில் சிறப்புற நடைபெற்ற இக்கருத்தரங்கின் ஆய்வுரைகள், தற்பொழுது துறைத் தலைவராக விளங்கும் முனைவர் **யோ. ஞான சந்திர ஜாண்சன்** அவர்களின் முயற்சியால் நூலாக்கம் பெற்றுள்ளன. இவர்களோடு இணைந்து ஆய்வுரை வழங்கியும் கருத்தரங்க அமர்வுகளுக்குப் பொறுப்பேற்றும் தம் அயராத பங்களிப்பை இந்நூலுக்கு வழங்கியுள்ள எம் துறை பேராசிரியர்கள் முனைவர் **சா. பாலுசாமி**, முனைவர் **பாலின் எடிசன்**, முனைவர் **சா. சவரிமுத்து**, முனைவர் **பு. ஜார்ஜ்**, முனைவர் **ந. இளங்கோ**, முனைவர் **ஏ. பால்பிரபு சாந்தராஜ்**, முனைவர் **து. மேஷாக்**, முனைவர் **நா. காணிக்கராஜ**, பேரா. **த. செபுலோன்**, முனைவர் **முத்துகந்தன்** ஆகியோர் நன்றிக்குரியவர்கள்.

இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ள தமிழ்நாடு அரசின் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் **கே.சி. வீரமணி** அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் **இர.வி. அலெக்சாண்டர் ஜேசுதாசன்** அவர்களுக்கும், துறைப் பணிகளுக்கு ஆதரவு நல்கும் நிதியாளுநர் **சி. சுந்தர்ராஜ்** அவர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றி. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் பதிவாளர் முனைவர் **மு. முத்துவேலு** அவர்களுக்கும், எங்கள் கல்லூரியின் ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பிரிவின் முதன்மையர் முனைவர் **து. நரசிம்மன்** அவர்களுக்கும் நன்றி படைக்கிறோம்.

தமிழ் ஒருங்குறியில் ஆக்கப்பெற்ற ஆய்வுரைகளை அடோப் இன் டிசைன் CS6 மென்பொருள் கொண்டு நூலுரு வழங்கிய எங்கள் துறையின் மேனாள் மாணவர் முனைவர் **இல. சுந்தரம்** (SRM பல்கலைக்கழகம்) அவர்களுக்கு நன்றி. மெய்ப்புத் திருத்தத்தில் துணைநின்ற முனைவர் பட்ட ஆய்வாளர்கள் **இர. ஹேமலதா**, **ஏ. மேரி நேசபிரியம்** ஆகியோருக்கு நன்றி சொல்வதும் எங்கள் கடமை.

முனைவர் **ப. டேவிட் பிரபாகர்**
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

பொருளடக்கம்

கால்டுவெல் வாழ்வியல்

1. பேராயர் இராபர்ட் கால்டுவெல்லின் வாழ்வியல் 11
முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன்

2. கால்டுவெல்: மலரும் நினைவுகளில் மலர்ந்த கனவுகள் 29
ஜே. கிங்ஸ்லி எபநேசர் ஜெபசெல்வன்

மொழி ஒப்பியல், மொழி வரலாறு, சொல்லாய்வு

3. கால்டுவெல்: பொது வாசிப்பு 37
முனைவர் செ.வை. சண்முகம்

4. Dravidian studies from Caldwell to Modern Times (A Survey) 57
Dr. P.S. Subrahmanyam

5. Robert Caldwell's Concept of the Convertibility of Surds and Sonants 71
Dr. Punal Ka. Murugayyan

6. கால்டுவெல் பார்வையில் திராவிட வினைகள் 79
முனைவர் இரா. கோதண்டராமன்

7. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தில் பொருண்மைச் செய்திகள் 87
முனைவர் செ. சண்முகம்

8. இராபர்ட் கால்டுவெல் பார்வையில் திராவிடப் பழங்குடி மொழிகள் 95
முனைவர் கோ. சீனிவாசவர்மா

9. கால்டுவெல் நோக்கில் திராவிட மொழிகளும் கிளைமொழிகளும் 101
முனைவர் இரா.கு. ஆல்துரை

10. கால்டுவெலார் ஆய்வின்வழி வெளிப்படும் தமிழ் - கன்னட உறவுநிலை 115
முனைவர் கு. பூங்காவனம்

11. கால்டுவெல் பார்வையில் தமிழ் மலையாள உறவு 133
முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்

12. Dravidian Loans in Sanskrit 145
Dr. Venugopala Panieker

13. கால்டுவெல் பார்வையில் தெலுங்குச் சாரியைகள் 151
முனைவர் சி. சாவித்ரி

14. கால்டுவெல் பார்வையில் கன்னடமும் தமிழும் 165
முனைவர் கி. அன்பன்

15. தமிழ் - யப்பானிய மொழி ஒப்பீட்டாய்வும் கால்டுவெல்லும் 171
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்

16. அறிஞர் கால்டுவெல் பெருமகனாரின் கூரிய நோக்கின் நேரிய ஆக்கம் 181
பேரா. ப. அருளி

17. கால்டுவெல்லும் பாவாணரும் 201
முனைவர் கு. அரசேந்திரன்

18. ஆயர் கால்டுவெல் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்: ஒரு பார்வை 221
முனைவர் அ. சண்முகதாஸ்

19. வேர்ச்சொல்: கால்டுவெல்லார் செல்நெறியும் அரசேந்திரனார் ஆய்வும் 231
முனைவர் இ. இராவணன்

20. Robert Caldwell: the 19th century pioneer in Nostratic/Mother Tongue studies... 243
Mr. P. Ramanathan

அரசியல், திராவிடம், தமிழம்

21. கால்டுவெல்லும் திராவிடர் இயக்கமும் 267
முனைவர் க. நெடுஞ்செழியன்

22. இராபர்ட் கால்டுவெல்லும் தனித்தமிழ் இயக்கமும் 307
முனைவர் கு. திருமாறன்

23. கால்டுவெல் : தமிழ்மொழியின் அடையாளம் 325
திரு. பொ. வேல்சாமி

24. கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பதிப்புச் சிக்கல்கள் 329
முனைவர் எம். வேதசகாயகுமார்

25. கால்டுவெல் அரசியல் - மீளாய்வு 341
முனைவர் தெ. வெற்றிச்செல்வன்

சமூகம், வரலாறு, இனவியல்

26. கால்டுவெல்லும் இடையன்குடியும்: ஒரு கிராமத்தின் உருவாக்கம் 353
முனைவர் ஞா. ஸ்டீபன்

27. கால்டுவெல்லின் சமூகவரலாற்றுப் பார்வை 361
முனைவர் பு. ஜார்ஜ்

28. இராபர்ட் கால்டுவெல் - இருநூற்றாண்டு (1814-2014): திராவிடக் கருத்தியல் - வரலாறும் கருத்து நிலையும் 397
முனைவர் வீ. அரசு

29. கால்டுவெல் முன்னெடுத்த கீழ்த்திசையியல்: தமிழ் இனவியம் பற்றிய நோக்குநிலை 409
முனைவர் பக்தவத்சல பாரதி

30. The Art of Writing Tamil History in Nineteenth Century British India and Robert Caldwell's Historical Outlook 425
Dr. S. Jeyaseela Stephen

31. பேராயர் கால்டுவெல்லின் திருநெல்வேலி வரலாறு 439
முனைவர் ஆ. சிவசுப்பிரமணியன்

32. கால்டுவெல் தரும் ஒரு வரலாற்றுப் பதிவு 449
முனைவர் நா. இராமச்சந்திரன்

33. தொல்லியல் நோக்கில் கால்டுவெல் ஆய்வுகள் 457
திரு. மோ. பிரசன்னா

34. Robert Caldwell's Lectures on the Tinnevelly Missions: 461
Rev. Dr. D.Arthur Jeyakumar

சமயம், சமய ஆய்வு

35. கால்டுவெல் அடிகளாரின் சமய ஒப்பாய்வு
ஒரு கண்ணோட்டம் 467
முனைவர் மோசசு மைக்கேல் பாரடே

36. கால்டுவெல்லின் இராமாயண ஆய்வும்
திராவிட இயக்க இராமாயண எதிர்ப்பில் அதன் பங்கும் 475
முனைவர் சா. பாலுசாமி

37. கால்டுவெல்லின் நற்கருணைத் தியானமாலை 485
முனைவர் இரா.செ. டென்சன் எக்டர்

இலக்கியம், நுண்கலைகள்

38. கால்டுவெல் வகுத்த 'தமிழ் இலக்கிய வரலாறு' 501
முனைவர் ப. டேவிட் பிரபாகர்

39. கால்டுவெல்லின் பார்வையில் தமிழ்ப் புலவர்கள் 511
முனைவர் பா. இரவிக்குமார்

40. கால்டுவெல்லாரின் கட்டட, சிற்ப, ஓவிய, இசைப் பங்களிப்பு 519
பேரா. த. செபுலோன் பிரபுதுரை

1. பேராயர் இராபர்ட் கால்டுவெல்லின் வாழ்வியல்

முனைவர் யோ. ஞான சந்திர ஜாண்சன்
தமிழ்த்துறைத் தலைவர்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

தென்னிந்தியாவிற்கு வருகை புரிந்த இறைத்தொண்டர்களுள் மிகவும் புகழ் பெற்றவர் பேராயர் பேரருள்திரு. டாக்டர் இராபர்ட் கால்டுவெல் ஆவார். இவர் இறைப்பணியுடன் சமூகப் பணியும் கல்விப் பணியும் ஆற்றினார். தமிழ்மொழியை ஆழ்ந்து கற்றதனால் அதன் ஈடு இணையில்லாச் சிறப்பை உலகம் அறியச் செய்தார். வாழ்வின் பெரும்பாகத்தை இந்தியாவில் கழித்ததனால் தன்னை இந்தியன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டார். கால்டுவெல் தமது வாழ்க்கை வரலாற்றைப் பற்றிச் சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

நான் அயர்லாந்து நாட்டிலே பிறந்தேன். ஸ்காட்லாந்து நாட்டிலே கல்வி பயின்றேன். ஆங்கில நாட்டுக் கிறித்தவச் சங்கத்தைச் சார்ந்தேன். ஆயினும் இந்திய நாட்டிலே நெடுங்காலமாக வாழ்ந்து, இந்தியரது வாழ்க்கையில் ஈடுபட்டமையால் நான் இந்தியருள் ஒருவனாகி விட்டேன்.

பேராயர் கால்டுவெல் (*Robert Caldwell*) (*1814-1891*) அயர்லாந்து நாட்டின் வட பகுதியில் கிளாடி (*Clady*) என்னும் ஆற்றங்கரையிலுள்ள அண்டிரிம் (*Antrim*) என்னும் ஊரின் அருகிலுள்ள ஷெப்பர்ட்யார்டு (*Shepherdyard*) என்னும் சிற்றூரில் *1814* ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் நாள் பிறந்தார். இவரது பெற்றோர் ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள். இவரது பத்தாம் வயதில் பெற்றோர்கள் ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள கிளாஸ்கோ (*Glasgow*) பட்டணத்தில் சென்று வசித்தனர். இவருடைய பதினாறு வயதில் இவரது மூத்த சகோதரனுடன் டப்ளின் (*Dublin*) என்னுமிடத்தில் தங்கி ஓவியக் கலைக் கல்லூரியில் படித்தார். கால்டுவெல் டப்ளினில் தங்கியிருக்கும்போது அங்குள்ள புகழ்பெற்ற

டாக்டர் உர்விச் என்னும் அருளுரையாளரின் தொடர்பும் அந்நகரத்திலுள்ள சில பக்தியுள்ள கிறித்தவர்களின் தொடர்பும் கிடைத்தது. அதனால் கிறிஸ்துவுக்காக உழைக்க வேண்டும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. அவ்வுணர்வே பின்னாளில் அருட்தொண்டராக மாறுவதற்கு ஊக்கமாக அமைந்தது. இவருக்கு ஓவியக் கலையில் நாட்டமிருந்ததாலும் கிறித்தவ ஊழியத்தில் பலவிதமான துன்பங்கள் ஏற்படும் என்னும் எண்ணத்தாலும் இறைத்தொண்டராகப் பணி செய்ய வேண்டும் என்னும் எண்ணம் எழவில்லை. இச்சூழலில் ஒருநாள் இறைவன் அவரிடம் "நீ இவ்வாறு நாட்களைக் கழிப்பது சரியா? அது சரியல்ல" எனச் சொல்லியது போலிருந்தது. இந்த நாளை கால்டுவெல் தமது வாழ்க்கையில் முக்கியமான நாளாகக் கருதினார்.

1833 ஆம் ஆண்டு டப்ளினிலிருந்து கிளாஸ்கோவிற்குத் திரும்பிச் சென்றார். அங்கு பாதிரியார் கிரிவைல் ஈவிங்குடன் ஆலயங்களில் இறைத்தொண்டாற்றினார். அவர் இலண்டன் மிஷனெரி சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு *1834* ஆம் ஆண்டு கிளாஸ்கோ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டார். அங்கு ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளைப் பயின்றதுடன் ஒப்பியல் மொழிநூல் பயின்று *1837* ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னாளில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலினை எழுதுவதற்கு ஒப்பியல் மொழிநூல் அறிவு மிகவும் உறுதுணையாக இருந்தது. அங்கு கிரேக்க மொழிப் பேராசிரியரான டானியேல் கெய்ட் சான்ட்போர்டு *(Daniel Keyte Sandford)* என்பவரின் விரிவுரைகளில் தம் மனதைப் பறிகொடுத்தார். கால்டுவெல்லின் மொழிநூல் ஆர்வத்திற்குத் தூண்டுகோலாக இருந்தவர் இவரேயாவார். பின்னர், இலண்டன் மாநகரில் சமயத் தொண்டர் கழகத்தில் சேர்ந்தார். இச்சமயத் தொண்டர் கழகம் தமிழ் நாட்டில் இறைப்பணியாற்ற கால்டுவெல்லைத் தேர்ந்தெடுத்தது.

கால்டுவெல் இந்தியாவிற்குத் தமது பயணத்தை ஆரம்பிக்கையில் அவரது தாயார் மிகவும் சுகவீனமாகப் படுக்கையில் காணப்பட்டார். தமது படுக்கையின் அருகில் முழங்கால்படியிட்டிருந்த தன் மகனை ஆரத்தழுவி முத்தமிட்டு "நான் உன்னை எனது முழுமனதுடன் கடவுளின் ஊழியத்திற்காக மகிழ்ச்சியுடன் அனுப்புகிறேன்" என்று சொல்லி வாழ்த்தி அனுப்பினார்கள். கால்டுவெல் *1837* ஆம் ஆண்டு ஆகஸ்டு *30* ஆம் நாள் இங்கிலாந்து நாட்டிலிருந்து மேரி ஆன் *(Mary Ann)* என்னும் கப்பலில் பயணமானார்.

இவர் பயணம் செய்த கப்பல் வழியில் பிரெஞ்சுக் கப்பலுடன் மோதியது. அதனால் கால்டுவெல் பயணம் செய்த கப்பல் சிறிது சேதமாகியது. பின்னர் சரிசெய்யப்பட்டது. கப்பல் பயணத்தின்போது

சென்னையில் சமூகப் பணியாற்றிய சி.பி. பிரௌன் (Charles Philip Brown) என்பவரின் மூலம் தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். அத்துடன் தென்னாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் அறிந்து கொண்டார். கால்டுவெல் கப்பல் பயணத்தின்போது எலும்புருக்கி நோயினால் துன்பமடைந்து பின்னர் குணமடைந்தார். இங்கிலாந்திலிருந்து கப்பல் சென்னை வர நான்கு மாதங்கள் ஆனது.

சென்னையில் கால்டுவெல்

கால்டுவெல் 1838 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் நாள் தமது 24 ஆவது வயதில் சென்னை வந்து சேர்ந்தார். சென்னை வந்தபின் இலண்டன் மிஷனெரி சங்கத்தைச் சார்ந்த W.H. டிரு (W.H.Drew) என்னும் ஐரோப்பியரிடம் தமிழ் மொழியைக் கற்றுக் கொண்டார். கால்டுவெல் சுமார் மூன்றரை ஆண்டுகள் சென்னையில் செலவிட்டார். சென்னையில் இறைத்தொண்டாற்றி சிறந்த தமிழ் அகராதியை எழுதிய டாக்டர் வின்சுலோ, டாக்டர் ஜி.யு. போப், சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தொடக்க நிலையிலுள்ள பள்ளியைத் தொடங்கிய அருள்திரு. ஜான் ஆண்டர்சன், ஹென்றி பவர், ஜான் டக்கர், பேராயர் ஸ்பென்சர், டாக்டர் ஸ்கட்டர், ஜென்ரல் சி.எ. பிரௌனி ஆகியோரின் நட்பினால் கால்டுவெல்லின் புலமை ஆழங்காற்பட்டது. மட்டுமன்றி இவர்களின் உரையாடல்களின் மூலம் இறையியல் பணிக்கான விரிவான தொலைநோக்குப் பார்வை அவருக்குக் கிடைத்தது. கால்டுவெல்லின் பெரும்பாலான நண்பர்கள் கிறித்தவத்தின் பிற பிரிவுகளைச் சார்ந்தவர்களாக இருந்தனர். 1841 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமது மாணவப் பருவத்திலிருந்தே உள்ள விருப்பப்படி ஆங்கிலத் திருச்சபையில் சேர்ந்தார். கால்டுவெல் 1841 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 ஆம் நாள் போதகராக சென்னைப் பேராயர் பேரருள்திரு. ஜார்ஜ் டிரிவர் ஸ்பென்சர் (George Trevor Spencer) அவர்களால் உதகமண்டலத்தில் வைத்து அருட்பொழிவு செய்யப்பட்டார். பின்னர் 1841 ஆம் ஆண்டின் இறுதியில் ஆங்கிலத் திருச்சபையில் பணியாற்றுவதற்கென்று தாம் தெரிந்து கொண்ட திருநெல்வேலி மாவட்டத்திற்குச் சென்னையிலிருந்து புறப்பட்டார்.

இடையன்குடிப் பயணம்

கால்டுவெல் சென்னையிலிருந்து இடையன்குடிக்குக் கால்நடையாகவே சென்றார். இந்த 800 மைல் (1300 கி.மீ.) தூர நடைப் பயணத்தின் சிறப்பு எண்ணவெனின், அவர் பல இடங்களையும் சுற்றிப் பார்த்து அங்குள்ள வரலாற்றுச் சிறப்பு மற்றும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் பேச்சு முறைகளையும் அறிந்து கொண்டார்.

சென்னையிலிருந்து புறப்பட்ட அவர் சிதம்பரம் சென்றடைந்தார். அங்குள்ள தில்லைச் சிற்றம்பலத்தின் பழமையையும் பெருமையையும் பார்த்தார். பின்னர் மாயூரம் (மயிலாடுதுறை) வழியாகக் கடற்கரையிலமைந்த தரங்கம்பாடி வந்தடைந்தார். 1706 ஆம் ஆண்டு சீகன்பால்குமுதல் பல்வேறு சீர்திருத்தத் திருச்சபை இறைத்தொண்டர்கள் வந்து தங்கி தமிழைக் கற்று இறைப்பணியாற்றிய இடத்தின் சிறப்பைக் கண்டு பெருமிதம் கொண்டார். கிறித்தவ வரலாற்றில் முக்கியமான தரங்கம்பாடியில் நடைபெறும் இறைப்பணியையும் தரங்கம்பாடியின் இயற்கையழகையும் இரசித்த பின்னர், கும்பகோணம் வழியாகத் தஞ்சாவூர் வந்தடைந்தார்.

தஞ்சாவூரில் அமைந்துள்ள சிறப்புமிக்க கோவிலைப் பார்த்து அதன் கட்டடக்கலையின் சிறப்பை எண்ணி வியந்தார். மேலும் சோழமன்னர்கள் கட்டிய கோட்டையையும் கண்டு வியந்தார். பின்னர் தஞ்சாவூரிலுள்ள கீர்த்தனைக் கவிஞர் வேதநாயக சாஸ்திரியாரைப் பார்த்து மகிழ்ந்து உரையாடியதுடன் கீர்த்தனைகளின் சிறப்பையும் கீர்த்தனைகள் எழுதும் முறைகளையும் கேட்டறிந்து கொண்டார். மட்டுமன்றி அவர் கீர்த்தனைகளைப்பாடக் கேட்டு பக்திப் பரவசமானார். அங்கிருந்து புறப்பட்டு திருச்சிராப்பள்ளியிலுள்ள மலையின் அழகையும் காவிரியாற்றின் வளமையையும் பார்த்து பின்னர் அருகிலுள்ள திருவரங்கத்தின் அழகையும் கண்டு இரசித்தார். பின்னர் அங்கிருந்து நீலகிரி சென்று அருள்திரு. ஸ்பென்சர் அவர்களுடன் ஒரு மாதம் தங்கியிருந்து மலையின் அழகைக் கண்டு அகமகிழ்ந்தார். அதன்பின்னர் கோயம்புத்தூர் வழியாக மதுரைக்குப் புறப்பட்டார். ஒரு நாள் மழை அதிகமாக வழிப்பயணத்தின் போது பெய்தது. அப்போது தங்குவதற்காகச் சத்திரத்தில் இடம் கேட்டார். அதற்குச் சத்திரக்காரர்கள் வெள்ளையர்களுக்கு இடம் இல்லை என்று கூறி விட்டனர். கால்டுவெல்லின் துயரத்தைக் கண்டு இரங்கிய சிலர் அங்குள்ள ஒரு மாட்டுத் தொழுவத்தில் தங்குவதற்கு ஆலோசனைக் கூறினர். இதைக் கேட்ட கால்டுவெல் மிகவும் வருந்தினார். பின்னர் ஒரு வீட்டின் திண்ணையில் இரவைப் போக்கினார். பின்னர் மதுரை வந்தடைந்தார்.

மதுரையில் வைகை ஆற்றின் அழகையும் வளமையையும் கண்டு இரசித்தார். பின்னர் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும் திருமலை நாயக்கரின் மாளிகையையும் பார்வையிட்டார். பின்னர் திருமங்கலத்தை அடைந்து அங்கிருந்த அமெரிக்க இறைத்தொண்டர் அறிவர் திரேசி அவர்களிடம் கலந்துரையாடினார். அதன் பின்னர் மங்கம்மாள் சாலை வழியாகத் திருநெல்வேலிக்குப் புறப்பட்டார். பின்னர் தாமிரபரணி ஆற்றினைக் கடந்து கிறித்தவக் கம்பன் எச்.ஏ.

கிருஷ்ணபிள்ளை வாழ்ந்து வந்த பாளையங்கோட்டையைச் சென்றடைந்தார். பாளையங்கோட்டையிலுள்ள கிறித்தவர்களும் இறைத்தொண்டர்களும் கால்டுவெல்லை வரவேற்றனர். சில நாட்கள் அங்கு தங்கியிருந்த பின்னர், நாசரேத் என்னும் ஊரைச் சென்றடைந்தார். அங்குள்ள ஆலயத்தில் அருளுரை ஆற்றினார். பின்னர் முதலூரைச் சென்றடைந்தார். ஞாயிற்றுக்கிழமை அங்குள்ள ஆலயத்தில் மக்களுக்கு அருளுரை ஆற்றினார். அதன் பின்னர் இறுதியாக இடையன்குடியை வந்தடைந்தார். கால்டுவெல் இடையன்குடி ஊருக்கு அருகில் சென்றபோதும், ஊர் சிறிது தூரத்தில் உள்ளது என்பதனை அறியாததால், வழி தவறி அதிக தூரம் சுற்றி, இறுதியில் இரவு நேரத்தில் அவ்வூரைச் சென்றடைந்தார். இந்த வழிநடைப் பயணம் கால்டுவெல்லிற்கு பல அனுபவங்களைக் கொடுத்தது. இந்த அனுபவங்களே பிற்காலத்தில் கிறித்தவக் கீர்த்தனை, வரலாறு, ஒப்பிலக்கணம், தியான நூல்கள் எழுதுவதற்குத் துணையாக இருந்திருக்கலாம்.

இடையன்குடியில் இறைப்பணி

இடையன்குடியின் பழைய பெயர் வல்லிடையன் குடியிருப்பு என்பதாகும். இப்பெயரிலுள்ள வல், யிருப்பு என்னும் பகுதிகள் மறைந்து இடையன்குடி என்று மாறியிருக்கலாம். அல்லது கால்டுவெல் தாம் பிறந்த ஷெப்பர்ட்யார்டு (*Shepherdyard*) என்னும் ஊரினை மனதில் கொண்டு இடையன்குடி என்னும் பெயரினை வழக்கில் கொண்டு வந்திருக்கலாம். அல்லது நானே நல்ல மேய்ப்பன் என இயேசு கிறிஸ்து கூறியதை ஆதாரமாகக் கொண்டு இடையன்குடி என்னும் பெயரை வழக்கத்தில் கொண்டு வந்திருக்கலாம். இவ்வூரின் தென்கிழக்கில் கடற்கரைப் பகுதியிலுள்ள குட்டம் என்னும் ஊரிலுள்ள நிலக்கிழார் குடும்பங்களுக்கு இவ்வூர் சொந்தமானதாக இருந்தது. அவர்களிடமிருந்து கால்டுவெல் 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பணம் கொடுத்து இப்பகுதியை வாங்கினார்.

பனைமரங்கள் நிறைந்த இடையன்குடியை மக்கள் வாழ்வதற்கேற்ற இடமாக மாற்றி தம் திருப்பணியைத் தொடங்கினார். கிணறுகள் தோண்டினார்; அகலமான சாலைகள் அமைத்தார்; மரங்கள் நட்டார்; நாள்தோறும் ஒரு மரமாவது நடுவது கால்டுவெல்லின் வழக்கமாகும். மக்கள் வாழ்வதற்காக வீடுகள் கட்டப்பட்டன. குழந்தைகளுக்காகப் பாடசாலைகள் நிறுவினார். மக்களுக்கு மருந்தகம் ஏற்படுத்தினார். பெண்களுக்குக் கல்வியும், கைத்தொழிலும் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் கல்வி வழங்கியதால் சமுதாயம் விழிப்படைந்து மேன்மையுற்றது. ஆலயத்தின் அருகில் தான் வசிக்க ஒரு வீட்டையும் கட்டினார்.

தூய திரித்துவ ஆலயம்

1847 ஆம் ஆண்டு இடையன்குடியில் ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆலயக் கட்டுமானத்திற்காக இங்கிலாந்து நாட்டிலும் தமிழ் நாட்டிலும் நிதி திரட்டினார். இவ்வாலயம் 1880 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் நாள் கட்டி முடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. பிரதிஷ்டையின் போது சுமார் ஐயாயிரம் மக்கள் அங்கு குழுமியிருந்தனர். இவ்வாலயத்தின் முன்பகுதியில் உயர்ந்த கோபுரம் உள்ளது. கோபுரத்தில் உள்ள மணிகளை இங்கிலாந்திலிருந்து கால்டுவெல்லின் சகோதரர் ஜேம்ஸ் கால்டுவெல் அனுப்பிக் கொடுத்துள்ளார். இந்த மணிகள் ஜாய் பெல் (Joy Bell) என அழைக்கப்படுகின்றன. இவற்றை மணிக்கூண்டில் இருந்தவாறே ஆங்கில இசைக்குறிப்புகளுக்கு ஏற்ப இசைப்பர். இன்றும் இம்மணிகளை அவ்வூரிலுள்ளோர் வழி வழியாக ஆங்கில இசைக்குறிப்புகளின்படி இசைத்து வருகின்றனர். இது அம்மக்களுக்கு மிகவும் பெருமையான ஒரு காரியம் ஆகும். கால்டுவெல் இரவு நேரத்தில் இடையன்குடிக்குத் திரும்பி வரும்போது பாதை மாறிவிடாமல் இருப்பதற்காக இம்மணிகளை அடிப்பது வழக்கம். இதனால் வழி தவறிவிடாமல் கால்டுவெல் இடையன்குடிக்குத் திரும்பி வந்துவிடுவார். இதில் காணப்படும் ஐந்து மணிகளுள் நான்கு மணிகள் ஆராதனை அறிவிப்பு மணிகளாகவும் ஒரு மணி ஊரிலுள்ளவர் எவரேனும் காலமானால் அதை அறிவிக்கும் துக்க மணியாகவும் பயன் படுகின்றன. இந்த மணிகளின் ஒலி சுமார் ஐந்து கி.மீ வரையிலும் கேட்கக்கூடியதாக விளங்கியது. அன்றைய சென்னை ஆளுநர் லார்டு நேப்பியர் இவ்வாலயத்தின் அழகைப் பாராட்டி ஐந்நூறு ரூபாய் அன்பளிப்பாகக் கொடுத்தார். இந்த ஆலயம் தூயதிரித்துவ ஆலயம் என்றழைக்கப்படுகிறது.

இல்லற வாழ்க்கை

கால்டுவெல் 1844 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் நாள் தமது 29 ஆவது வயதில் நாகர்கோவிலில் இறைப்பணியாற்றி வந்த இலண்டன் மிஷனைச் சார்ந்த மிஷனெரி அருள்திரு. சார்லஸ் மால்ட் (Charles Mault), மார்த்தா மால்ட் தம்பதியரின் மூத்த மகள் எலிசா (Eliza) அம்மையாரைத் (1822 - 1899) திருமணம் செய்தார். இவர்களது திருமணம் நாகர்கோவில் கஸ்பா ஆலயத்தில் (கல் கோவில்) நடைபெற்றது. அருள்திரு சார்லஸ் மால்ட் நாகர்கோவிலில் 1819 ஆம் ஆண்டு முதல் 1855 ஆம் ஆண்டு வரையிலும் இறைப்பணியாற்றினார். எலிசா அம்மையார் சமூகப் பணிகளில் மிகவும் ஈடுபாடுடையவர்கள். இடையன்குடி பாடசாலையிலுள்ள மாணவிகளுக்குக் கல்வி கற்றுக் கொடுத்தார். அங்குள்ள பெண்களுக்கு ஓய்வு நேரங்களில் தொழிற்கல்வியைக் கற்றுக் கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை

மேம்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டார். கால்டுவெல்வின் இறைப்பணியிலும் இலக்கியப்பணியிலும் சமூகப்பணியிலும் எலிசா அம்மையார் மிகவும் உறுதுணையாக இருந்தார்கள். இத்தம்பதியினருக்கு வில்லியம் (*William*) (*1852*), ஆடிங்டன் (*Addington*) (*1857*), ஆர்தர் (*1862*), இராபர்ட் சார்லஸ் என்னும் நான்கு ஆண்களும் இசபெல்லா (*Isabella*) (*1847*), மார்த்தா லூயிசா (*Martha Louisa*) (*1849*), மேரி (*1854*) என்னும் மூன்று பெண்களும் குழந்தைகளாவர். இவர்களுள் இராபர்ட் சார்லஸ் தந்தையைப் போன்று தமிழார்வம் மிக்கவராக விளங்கினார்.

கால்டுவெல்லின் மூத்த மகள் இசபெல்லாவிற்கும் எஸ்.பி.ஜி. மிஷனெரி *J.L* வியாட் (*J.L.Wyatt*) என்பவருக்கும் *1868* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *19* ஆம் நாள் இடையன்குடியில் வைத்துத் திருமணம் நடைபெற்றது. இவ்விருவரும் கால்டுவெல்லின் பணிகளுக்கு மிக்க பக்க பலமாக இருந்தனர். இரண்டாவது மகள் மார்த்தா லூயிசாவுக்கும் இராணுவப் பொறியாளர் ஷெப்பர்டுவுக்கும் (*F.S.Shepherd*) *1870* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *9* ஆம் நாள் இடையன்குடியில் வைத்துத் திருமணம் நடைபெற்றது. மார்த்தா லூயிசா *1872* அக்டோபர் மாதம் *8* ஆம் நாள் இடையன்குடியில் வைத்து ஒரே பிரசவத்தில் இரண்டு ஆண்குழந்தைகளைப் பெற்றெடுத்தார். ஆனால் இரண்டு குழந்தைகளும் தாயும் அன்றே இறந்துவிட்டனர். இவ்விழப்பு கால்டுவெல்லை மனதளவில் மிகவும் பாதித்தது. லூயிசாவுக்கு தூய திரித்துவ ஆலயத்தில் கல்வெட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

எலிசா அம்மையாரின் பணிகள்

கால்டுவெல்லின் துணைவியார் தமது திருமணத்திற்கு முன்னர் தந்தையாருடன் தாம் பிறந்த ஊரான நாகர்கோவிலில் வாழும்போது கல்விப்பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டிருந்தார். நாகர்கோவிலில் பிறந்து வாழ்ந்தமையால் தமிழில் நன்கு பேசும் திறமை உடையவராக விளங்கினார். இதனால் பொதுமக்களிடம் அதிகமாகப் பழகி வந்தார். அன்றைய பெண்களுக்குக் கைத்தொழில் மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. எனவே அவர்களின் வருமானத்திற்காக பூத்தையலை அறிமுகப்படுத்தி அதன் மூலம் அவர்களுக்கு வருவாய் கிடைக்க வழிவகை செய்தார். திருமணத்திற்குப் பின்னர் இடையன்குடிக்குச் சென்ற நிலையில், அங்குள்ளப் பெண்களுக்கு பூத்தையல் பயிற்சிப் பள்ளியை நிறுவி பயிற்சி கொடுத்தார். பின்னர் பூத்தையல் வேலைப்பாடு கொண்ட லேஸ்களைத் தயாரிக்கும் தொழிற்கூடத்தையும் நிறுவினார். இடையன்குடியில் தயாரிக்கப்பட்ட பூத்தையல்கள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு மட்டுமன்றி இங்கிலாந்திற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

படைப்புகள்

கால்டுவெல் பதினெட்டு மொழிகளில் புலமையுடையவராகத் திகழ்ந்தார். கால்டுவெல் எழுதிய நூல்கள் பின்வருமாறு:

1. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்
2. திருநெல்வேலி வரலாறு
3. நற்கருணைத் தியானமாலை (1853)
4. தாமரைத் தடாகம் (1871)
5. பரத கண்ட புராதனம்

இவரது ஞானஸ்நானம், நற்கருணை என்னும் இரண்டு நீண்ட கட்டுரைகள் 1841 இல் ஹென்றி பவர் எழுதி வெளியிட்ட வேத அராதியில் இடம்பெற்றுள்ளன. கால்டுவெல் சில துண்டுப் பிரசுரங்களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

1. திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்

கால்டுவெல்லின் படைப்புகளில் மிகவும் சிறப்பாக இன்றும் பேசப்பட்டுவருவது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் (*A Comparative Grammar of Dravidian Languages*) என்னும் நூலாகும். இந்நூலை 1856 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். கால்டுவெல் பதினைந்து ஆண்டுகள் ஆராய்ச்சி செய்ததன் விளைவாக இந்நூல் எழுதப்பட்டது. தென்னாட்டு மொழிகளையும் வடநாட்டு மொழிகளையும் ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டது. திராவிட மொழிகளில் தனித்தன்மை இருப்பதையும் அதன் அடிப்படையில் அவை ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்பதையும் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் ஆகிய பத்து மொழிகளைப் பற்றிய ஆய்வுகளின் மூலம் விவரித்து, அதை முதன்முதலாக உலகிற்கு உணர்த்தியவர் கால்டுவெல். இவ்வாராய்ச்சிக்காக கிளாஸ்கோ பல்கலைக்கழகம் கால்டுவெல்லிற்கு டாக்டர் பட்டம் வழங்கியது. இந்நூலின் திருந்திய விரிவான இரண்டாம் பதிப்பு 1875 ஆம் ஆண்டு வெளியானது. மீண்டும் திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பு கால்டுவெல்லின் மருமகன் வியாட் அவர்களால் 1913 ஆம் ஆண்டு வெளியானது. இதனையே 1956 ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகம் மீண்டும் வெளியிட்டுள்ளது. தற்போது இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

2. திருநெல்வேலி வரலாறு

திருநெல்வேலி வரலாறு என்னும் நூலிற்காக அன்றைய அரசு, கால்டுவெல் பேராயருக்கு ரூபாய் ஆயிரம் நன்கொடை அளித்தது. இந்நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. தென்பகுதியிலுள்ள மாவட்டங்கள் குறித்து தெளிவாகத் தெரியாத சூழலில் கால்டுவெல்லின்

நூல் வரவேற்கத்தக்கதாக அமைந்திருந்தது. ஊர்களின் பெயர்களைப் பகுத்து அவற்றின் வேர்களை ஆராய்ந்து கால்டுவெல் சில முடிவுகளுக்கு வருகின்றார். கால்டுவெல் ஏறத்தாழ நான்கு அத்தியாயங்களில் பாளையக்காரர் வரலாற்றை ஆராய்ந்துள்ளார். இந்தப் பகுதியில் கட்டப்பொம்மன் என்பது குடிப்பெயர் என்பதைக் குறிப்பிட்டு நான்கு கட்டப்பொம்மன்களைப் பற்றிச் சுட்டியுள்ளார்.

இந்நூலில் பாண்டியநாடு கடல்வளத்தால் அழகுபெற்றதையும், ரோம் நாட்டு அரசன் அகஸ்டனுக்கு பாண்டியன் தூது போன செய்தியும், கொற்கைத் துறைமுகம் மார்க்கோபோலோ காலத்தில் முத்துக்குளித் துறையாகவும் வணிகத்துறையாகவும் விளங்கியமையையும், அங்கு சீனரும் அராபியரும் வந்து வாணிகம் செய்தமையையும், காயல் துறைமுகத்தில் பாரசீகக் குதிரைகள் வந்து இறங்கியமையையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். நெல்லை மாவட்ட மக்கள் கடுமையான பஞ்சத்தில் சிக்கித் தவித்துத் துன்பப்பட்ட நிலையினையும் கால்டுவெல் விரிவாகச் சித்திரித்துள்ளார். அக்காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்த புலவர்கள், கவிஞர்கள் ஆகியோர்களது பெயர்ப்பட்டியலை இந்நூலில் இணைத்துள்ளார்.

3. நற்கருணைத் தியானமாலை (1890)

நற்கருணைத் தியானமாலை (*A Companion to the Holy Communion*) என்னும் நூல் 1890 ஆம் ஆண்டு மே மாதம் கால்டுவெல்லால் எழுதி வெளியிடப்பட்டது. தமிழ் கிறித்தவர்கள் திருவிருந்திற்கு ஒரு வார காலத்திற்கு முன்னராவது தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கத்துடன் இந்நூல் எழுதப்பட்டது. அழகிய தமிழ் நடையில் மேலைநாட்டு நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஜெபங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இந்நூலில் தழுவி எழுதியச் சாயலைக் காணஇயலாது. இவரது உரைநடைக்கு நற்கருணைத் தியானமாலை என்னும் நூலிலிருந்து சான்று:

> ஒரு மாதத்தில் சில தியானங்களையும் அடுத்த மாதத்தில் மற்றுஞ் சில தியானங்களையும் வாசித்தால் எப்பொழுதும் எழுப்புதல் உண்டாக ஏதுவாக இருக்கும். இப்புத்தகம் உதவியேயன்றித் தடையல்ல; மாலையே யன்றி, விலக்கல்ல. இயேசு இரட்சகரின் அன்பை நினைவு கூர்ந்து கொண்டாடுவதற்குக் கிறித்தவர்கள் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்க வேண்டியதால் இப்படிப்பட்ட செபத் தியானங்களை வாசிக்கச் சமயம் கிடைக்காவிட்டாலும் கர்த்தருடைய பந்தியில் சேராமல் இருக்கக் கூடாது.

இந்நூலின் இறுதிப்பகுதியில் நற்கருணை பெற்று இருக்கைக்குத் திரும்பிய பின்னர் செய்ய வேண்டிய ஜெபங்கள் ஆறினையும், இல்லத்திற்குத் திரும்பிய பின்னர் செய்ய வேண்டிய ஜெபங்கள் இரண்டனையும் தந்துள்ளார். கால்டுவெல் எழுதியுள்ள இந்தத் தியானங்கள், ஜெபங்கள் ஆகியனவற்றை வாசிப்பவர்கள் அவற்றை எளிதாகப் புரிந்துகொள்வதுடன் பக்தி உணர்வையும் பெற்றுக் கொள்வர் என்பது தெளிவு.

4. தாமரைத் தடாகம் (1871)

இந்நூல் கிடைக்கவில்லை.

5. பரத கண்ட புராதனம் (*Indian Antiquities*)

பரதகண்ட புராதனம் என்னும் நூல் முதன் முதலாக பாளையங்கோட்டை யிலிருந்து வெளிவரும் நற்போதகம் என்னும் இதழில் தொடராக எழுதப்பட்டது. பின்னர் 1893 ஆம் ஆண்டு கிறித்தவ இலக்கியச் சங்கத்தின் மூலம் நூலாக வெளிவந்தது. அதன் பின்னர் இந்நூல் 2012 ஆம் ஆண்டு நியூ செஞ்சுரி புக் ஹவுசின் மூலம் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல் நான்கு பாகங்களை உடையது. முதலாம் பாகம் சதுர்வேதத்தைப் பற்றிச் சொல்லியது என்பதாகும். இரண்டாம் பாகத்தில் இராமாயணத்தைப் பற்றியது, இராமன் கதையடக்கம், இராமாயணத்தைக் குறித்துக் கவனிக்கவேண்டிய விசேஷங்கள் என்னும் மூன்று தலைப்புகள் உள்ளன. மூன்றாம் பாகம் மகாபாரதத்தைப் பற்றிச் சொல்லியது, பாண்டவர் கதையடக்கம், மகாபாரதத்தைக் குறித்துக் கவனிக்க வேண்டிய விசேஷங்கள் என்னும் மூன்று பகுதிகளால் ஆனது. நான்காம் பாகம் புராணங்களைப் பற்றியது, வாயுபுராணத்தில் கண்டிருக்கிறபடி தக்ஷயாக கதையடக்கமாவது, 1841 ஆம் வருஷம் சென்னப்பட்டணத்தில் இரண்டு புஸ்தகமாக அச்சு பதிப்பிக்கப்பட்ட நான்கு காண்டங்களிலுள்ள தக்ஷயாகக் கதையடக்கமாவது, மேற்கண்டிருக்கிற கதையைப் பற்றிக் கவனிக்க வேண்டிய விசேஷங்கள் என்னும் நான்கு தலைப்புகளைக் கொண்டது.

வரலாற்றுக்காலம் முழுமையிலும் இந்து மதம் ஒரே தன்மையுடையதாக இருந்ததா அல்லது கால மாற்றத்தால் பல நிலைகளைக் கடந்து இன்றைய நிலைக்கு வந்துள்ளதா என்பதை ஆய்வு நோக்கில் கால்டுவெல் விவரித்துள்ளார். வேதங்கள், இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவற்றைக் காலவரிசைப்படி ஆய்வு செய்து பல வரலாற்றுத் தகவல்களைத் தக்க சான்றுகளுடன் வழங்கியுள்ளார். இந்நூல் முற்கால பாரதம், இந்து மதத்தின் பண்டைய நிலை, வேதங்கள் பற்றிய முழுமையான விளக்கம் முதலியனவற்றை அறிந்துகொள்ளப் பயன்படும்.

சொந்த நாட்டிற்குச் சென்று திரும்பியது

கால்டுவெல் இடையன்குடியில் இறைப்பணியாற்றிய காலங்களில் மூன்று முறை சொந்த நாட்டிற்குச் சென்று வந்தார். முதலாவதாக 1854 ஆம் ஆண்டு முதல் 1857 ஆண்டு வரை மூன்று ஆண்டுகள் தமது நாட்டில் தங்கியிருந்தார். இரண்டாவது முறையாக 1873 ஆம் ஆண்டு முதல் 1875 ஆம் ஆண்டு வரை இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். மூன்றாவது முறையாக 1883 ஆம் ஆண்டு முதல் 1884 ஆம் ஆண்டுவரை ஓர் ஆண்டு மட்டும் தங்கியிருந்தார். தான் தங்கியிருந்து இறைப்பணியும் இலக்கணப்பணியும் இலக்கியப்பணியும் ஆற்றிய இடையன்குடியையே சொந்த ஊராகக் கருதியதால் தமது சொந்த நாட்டிற்கு அதிகமாகச் செல்வதை அவர் விரும்பவில்லை.

சில நிகழ்வுகள்

கால்டுவெல்லின் வாழ்க்கையில் ஏராளமான நிகழ்வுகள் உண்டு. சில நிகழ்வுகள் மகிழ்ச்சியான நிகழ்வுகள்; பல நிகழ்வுகள் துன்பமான நிகழ்வுகள். ஒரு சமயம் இடையன்குடி தூய திரித்துவ ஆலயத்தில் திருமணத்திற்காக மணமகன் வந்து நெடுநேரமாகியும் மணமகள் வரவில்லை. கால்டுவெல் எவ்வித சலமும் இல்லாமல் பொறுமையின் வடிவமாகத் திருமண ஆராதனை நடத்துவதற்காகக் காத்திருந்தார். ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் மணமகள் வருகை புரிந்தார். திருமண ஆராதனையின் போது மணமகள் சொல்ல வேண்டிய வாக்குறுதிகளைக் கால்டுவெல் சொல்லி மணமகளைச் சொல்லச் சொன்னார். ஆனால் மணமகள் வாய் திறக்கவில்லை. சற்று நேரம் பொறுத்திருந்த கால்டுவெல் மீண்டும் வாக்குறுதியைச் சொல்லிச் சொல்லச் சொன்னார். இவ்வாறு மூன்றுமுறைச் சொல்லியும் மணமகள் அமைதியாகவே நின்றிருந்தாள். மணமகளின் உற்றார் உறவினர் கூறியும் எவ்விதப் பயனும் இல்லை. அப்பொழுது கால்டுவெல் மணமகளைப் பார்த்து, "இதோ பார், ஒரு முறைக் கூறினேன், இருமுறைக் கூறினேன், மும்முறையும் கூறினேன். நீ ஒன்றும் பேசாதிருக்கிறாய். இனிமேல் அவ்வாசகத்தைச் சொல்ல மாட்டேன். இன்னும் நீ பேசாதிருப்பாயானால் நானும் பேசாமல் உன்னை வீட்டுக்கு அனுப்பி விடுவேன்" என்று உறுதியாகக் கூறினார். உடனே மணப்பெண் வாக்குறுதிகளைத் திறம்பட மொழிந்தாள். கால்டுவெல் மிக்க மகிழ்வுடன் திருமணத்தை நடத்தி மணமக்களை ஆசீர்வதித்து அனுப்பினார்.

ஒரு நாள் நாசரேத் ஊரில் தம் நண்பர்களைக் காண்பதற்காகச் சென்றிருந்தார். கால்டுவெல் அங்குள்ள ஆலயத்தைச் சுற்றிலும் உள்ள பூந்தோட்டத்தில் ஊரிலுள்ளவர் சிலருடன் நடந்து கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த பணியாளர் ஒருவர் கால் தவறி கிணற்றுக்குள் விழுந்து விட்டார். இதைப் பார்த்த கால்டுவெல் தம் உடைகளைக் கழற்றி எறிந்து விட்டு

உடனே கிணற்றுக்குள் குதித்து அப்பணியாளைக் காப்பாற்றினார். இதைப் பார்த்த உடனிருந்தவர் ஒருவரும் பின்னர் கிணற்றுக்குள் குதித்துக் கால்டுவெல்லிற்கு உதவி செய்தார். பின்னர் ஏணியும் கயிறும் கொண்டு வந்து மூவரையும் ஊர்மக்கள் காப்பாற்றினர்.

ஒருமுறை கால்டுவெல் ஆழ்வார் திருநகரி என்னும் ஊருக்குச் சென்றிருந்த போது கால்டுவெல்லின் திறமைகளையும் அறிவு நுட்பத்தையும் கேள்விப்பட்டிருந்த அவ்வூரிலுள்ள வைதீக பெரியவர் ஒருவர் தம் கோவிலில் விரிவுரை நிகழ்த்தும்படி வேண்டினார். இது கால்டுவெல்லின் புலமைக்கும் புகழுக்கும் ஒரு சான்றாக விளங்குகிறது.

ஒரு நாள் கல்கத்தாவிலிருந்து விருந்தினராக வருகை புரிந்த அருள்திரு. காட்டன் அவர்களைக் கன்னியாகுமரிக்கு அழைத்துச் சென்றார். அப்போது கடலில் நீராட காட்டன் ஆசைப்பட்டார். கால்டுவெல் காட்டனின் கைகளை இறுகப் பிடித்து வைத்திருந்தார். எனினும் ஒரு அலை வந்து காட்டனை கால்டுவெல்லிடம் இருந்து இழுத்துச் சென்று புரட்டி கரையில் போட்டது. கால்டுவெல் ஓடிச் சென்று காட்டனைப் பிடித்துக் காப்பாற்றினார். கால்டுவெல்லால் காப்பாற்றப்பட்ட காட்டன், கல்கத்தாவில் கங்கையாற்றில் தவறி விழுந்து காலமானார்.

கால்டுவெல் பிற இடங்களுக்குச் சென்றபோதெல்லாம் அவ்விடத்திலுள்ள மக்கள் பெருந்திரளாகக் கூடுவர். அவர்கள் மேளதாளங்கள், கொடிகள், தீவட்டிகளுடன் கால்டுவெல்லை வரவேற்று அழைத்துச் செல்வர். கால்டுவெல் தமது நீண்ட பயணத்தாலுள்ள களைப்பினையும் மறந்து வரவேற்புரைகள், சொற்பொழிவுகள், பாடல்கள் ஆகியனவற்றை ஏற்றுக்கொண்டு, அவர்கள் கேட்கும் வினாக்களுக்குப் பொறுமையாகப் பதிலளிப்பார். வாரத்தில் ஆறு நாட்களிலும் ஊர் ஊராகத்திரிந்து கொண்டு ஏழாவது நாள் இடையன்குடியில் ஆராதனை நடத்துவார்.

ஒரு நாள் இடையன்குடியிலுள்ள சிறுவர்கள் மணல் தேரியிலிருந்து சுத்தமிட்டுக் கொண்டிருந்த ஒன்றை, பெரிய அளவிலான வண்டு என நினைத்து இரண்டு குச்சியின் மூலம் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு வந்து ஒரு பாளையில் மூடி வைத்தனர். மறுநாள் அதைத் திறந்து பார்க்கையில் அது ஒலி எழுப்பவில்லை. அது இறந்துவிட்டது என நினைத்தனர். இதைக் கேள்விப்பட்ட கால்டுவெல் அதை எடுத்துக் கொண்டு வரச் சொன்னார். அவரிடம் கொண்டு அவர்கள் காண்பித்தவுடன் அது தனது தொலைந்து போன கடிகாரம் என்பதை அறிந்து அவர்கள் முன்னால் அதற்குச் சாவி கொடுத்து அதை இயங்க வைத்தார். மட்டுமன்றி அக்கடிகாரத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்துரைத்தார்.

ஒருமுறை கால்டுவெல்தம்குடும்பத்தினருடன்இங்கிலாந்திற்குச் சென்றிருக்கும் போது இலண்டன் மாநகரில் நடைபெற்ற பொருட்காட்சிக்குச் சென்றிருந்தனர். அப்போது கால்டுவெல்லின் இளைய மகள் லூயிசா கூட்டத்தினரிடமிருந்து பிரிந்ததால் காவல்துறையினர் அவளை அழைத்துக் கொண்டு சென்று விசாரித்தனர். அப்போது அவளிடம் உனது ஊர் எது எனக் கேட்டபோது இடையன்குடி எனக்கூறினாள். காவல்துறையினருக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் கால்டுவெல் அங்கு வந்து லூயிசாவை அழைத்துக் கொண்டு சென்றார்.

கால்டுவெல் இடையன்குடிக்கு அருகிலுள்ள காரிகோவில் என்னும் ஊருக்குச் செல்லும் போது அவர் செல்லும் வழிகளில் முட்களைப் போட்டு, பள்ளம் எடுத்து அதன் மேல் பனை ஓலைகளைப் போட்டிருப்பர். எனினும் தடைகளைத் தாண்டி அவ்வூருக்குச் சென்று பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் கல்வி கற்றுக் கொடுப்பார். இதற்காகப் பனை ஓலையால் வேய்ந்த ஓர் இடத்தை ஆயத்தப்படுத்தியிருந்தார். அடுத்த வாரம் அந்த இடத்திற்குச் செல்லும்போது அந்த இடத்தில் அவ்வூரிலுள்ளோர் கழுதைகளை அடைத்து வைத்திருப்பர். அந்த ஊரில் ஓர் ஆலயம் எழுப்ப வேண்டும் என்னும் எண்ணம் உடையவராகக் கால்டுவெல் காணப்பட்டார். ஆனால் அந்த எண்ணம் ஈடேறவில்லை.

வேதாக மொழிபெயர்ப்பில் கால்டுவெல்

விவிலிய நூலின் திருத்தமான மொழிபெயர்ப்புக் குழுவினர் பன்னிருவரில் கால்டுவெல் ஒருவராக இருந்து திறம்பட அப்பணியில் ஈடுபட்டார். இக்குழு *1858* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கி, *1869* ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தம் பணியை நிறைவு செய்தது. மேலும் கால்டுவெல் சில பாமாலைகளையும் ஜெபங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். *The Church's one foundation* என்னும் ஞானப்பாடலை ஆங்கிலத்திலிருந்து "சபையின் அஸ்திபாரம் நல்மீட்பர் கிறிஸ்துவே" எனத் தமிழுக்கு மொழிபெயர்த்தார்.

அகழ்வாய்வு

தமிழகத்தின் பல்வேறு இடங்களில் கால்டுவெல் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். தென்கடற்கரையில் தூர்ந்து கிடந்த சிற்றூர்களையும் ஆங்காங்கு கிடைத்தப் பழங்காசுகளையும் ஆராய்ந்து தமிழ்நாட்டின் சிறப்பினையும் பழம்பெருமையினையும் எடுத்தியம்பினார். பழைய ஈபுரூ மொழியில் வழங்கும் துகி என்னும் சொல், தமிழ் தோகையின் சிதைவென்றும், மேலைநாட்டுச் செம்மொழிகளுட் சிறந்த கிரீக்கு மொழியில் அருசா என்று வழங்கும் சொல், தமிழ் அரிசியின் சிதைவென்றும் கால்டுவெல் நிருபணம்

செய்தார். முற்காலத்திலுள்ள கொற்கைத் துறைமுகம் பிற்காலத்தில் அதிலிருந்து கடல் விலகிச் சென்ற காரணத்தால் அத்துறை பழம்பெருமையை இழந்ததென்று எண்ணினார். கொற்கைப் பகுதியில் சென்று கொற்கையையும் அதைச் சார்ந்த ஊர்களைப் பற்றியும் ஆராய்ந்தார். அக்கசாலை என்னும் ஊர் நாணயம் செய்யும் இடமாக அக்காலத்தில் திகழ்ந்தது என்பதனைக் கண்டுபிடித்தார்.

கொற்கையில் செய்த அகழ்வாய்வின் மூலம் ஆறடி மண்ணின் கீழ் மணற் பாறையும், அப்பாறையின் அடியில் ஓரடி ஆழத்தில் கடற்கரைக் குறுமணலும் அமைந்திருக்கக் கண்டனர். மேற்பரப்பிலுள்ள மணலின் கீழ் சங்குகளும் சிப்பிகளும் காணப்பட்டன. ஆறடி மண்ணின் கீழ் அமைந்த மணற் பாறையின் பரப்பே முற்காலத்தில் கடற்கரையாக இருந்திருக்க வேண்டும் என்றும், ஆற்று நீரில் கலந்து வந்த மண்ணும் மணலும் துறைமுகத்தில் படிந்து நாளடைவில் கடலைத் தூர்த்தன என்றும் அவ்வாறு படிந்த மண்ணால் அழுத்தப்பட்ட அடிமணல் இறுகி ஓரடிப் பாறையாக உறைந்ததென்றும் கால்டுவெல் முடிவுக்கு வந்தார். மேலும் பழைய காயல், கொற்கையை அடுத்துத் துறைமுகமாக விளங்கியதை நிரூபித்தார். பழங்காயலுக்கு புன்னைக்காயல் என்னும் பெயரும் உண்டு. இலங்கையிலுள்ள மகாவம்சநூலை ஆதாரமாகக் கொண்டு தமிழகத்திற்கும் இலங்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்தார். விசயன் என்னும் சிங்கள மன்னன் பாண்டிய அரசனின் மகளைத் திருமணம் புரிந்து, பாண்டிய அரசனுக்கு ஆண்டுக்கு இருநூறாயிரம் ரூபாய் மதிப்புள்ள முத்தும் சங்கும் கொடுத்தான் என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பழந்தமிழர்கள் கடல் கடந்து பிற நாடுகளில் குடியேறி செய்த வாணிபத்தைப் பற்றி கால்டுவெல் விவரித்துள்ளார்.

சிறப்புகள்

பேராயர் கால்டுவெல் ராயல் ஆசியாச் சங்கம், சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உறுப்பினராக இருந்தார். டாக்டர் கால்டுவெல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் இருபத்தி இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேருரை ஆற்றினார். இவர் 1877 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வேத விளக்கச் சங்கத்தின் சார்பாக கல்கத்தாவில் வைத்து பேராயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் நன்னூல், திருக்குறள், சீவகசிந்தாமணி ஆகிய நூல்களில் மிக்கப் புலமையுடையவர்.

கீர்த்தனை

வரலாற்றிலும் மொழி ஆராய்ச்சியிலும் தீவிரமாக ஈடுபட்டிருந்த கால்டுவெல் கீர்த்தனை இயற்றுவதிலும் தேர்ச்சி யுடையவராகக்

காணப்பட்டார். கால்டுவெல் தம் நடைப் பயணத்தின்போது தஞ்சாவூருக்கும் சென்றார். அங்கு வேதநாயக சாஸ்திரியாரிடம் உரையாடினார். அவர்களது உரையாடலில் கீர்த்தனை முக்கிய இடம்பெற்றிருந்தது. இந்த உரையாடலின் தாக்கத்தினாலும் கீர்த்தனைகளை மக்கள் ஆர்வமுடன் பாடிவருவதாலும் கால்டுவெல் கீர்த்தனை இயற்றினார். அக்கீர்த்தனை பின்வருமாறு:

சங்கராபரணம் ரூபகதாளம்

பல்லவி

ஏசையா பிளந்த ஆதிமலையே
மோசநாளில் உன்னில் ஒளிப்பேனே

சரணங்கள்

1

மோசமுள்ள பாவ நோய் முழுதும் என்னில் தீர், ஐயா;
தோஷம் நீக்கும் இரு மருந்தாமே-சொரிந்த உதிரம் நீருமே -ஏசையா

2

இகத்தில் என்னென் செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே - மீளாப்பாவ ரோகமே; - ஏசையா

3

பேரறம் அருந்தவம் பெருமிதமாய்ச் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ? - நீங்காதே உன்னாலல்லால் - ஏசையா

4

வெறுங்கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சி,
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து, - தியங்கி அணைத்தே நிற்பேன்; - ஏசையா

5

அருளிலிருளோன் ஆனாலும், அபயமுன் தன் நீதிக்கே!
கருணை ஊற்றிக் கழுவமாட்டாயோ? - கழுவாயாகிற் சாவேனே - ஏசையா

6

ஜீவனோடே தங்கிலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்க - தேவலோக மேறிலும், - ஏசையா

இக்கீர்த்தனையை இன்றும் சபைகளில் பாடிவருகின்றனர். இக்கீர்த்தனைக்கு 1938 ஆம் ஆண்டுப் பதிப்பில் *Rock of Ages* எனத் தலைப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொடைக்கானலில் தூய பேதுரு ஆலயம்

கால்டுவெல் தமது முதுமையில் கொடைக்கானலில் தங்கியிருந்த போது வழிபடுவதற்கு ஓர் ஆலயம் கட்ட வேண்டும் என்னும் எண்ணம் உடையவராகக் காணப்பட்டார். தமது எண்ணத்தை அரசாங்க அதிகாரியான லெவிங்சு துரையிடம் தெரிவித்தார். லெவிங்சு துரை

கால்டுவெல்லின் கருத்துக்கு ஆதரவு கொடுத்ததுடன் ஆலயம் கட்டுவதற்கான இடத்தையும் நன்கொடையையும் அளித்தார். கால்டுவெல்லின் மருமகன் வியாட் (J.L.Wyatt) அவர்களின் துணையுடன் கொடைக்கானல் மலையில் 1886 ஆம் ஆண்டு தூய பேதுரு ஆலயத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்தார். ஆலயத்தின் திருத்திறப்பு அன்று கால்டுவெல் சிறந்ததொரு அருளுரையை ஆற்றினார்.

இறுதிக்காலம்

ஐம்பத்து மூன்று ஆண்டுகள் தமிழ்நாட்டில் இறைப்பணியாற்றிய பேராயர் கால்டுவெல், உடல் தளர்ச்சியுற்றதன் காரணமாக சென்னைப் பேராயரிடம் தமது நிலையினைக் கூறி, 1891 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் நாள் தம் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் இடையன்குடியிலிருந்து தமது மனைவியுடன் கொடைக்கானலுக்குச் சென்றார். அப்போது கொடைக்கானலுக்கு ஒழுங்கான பாதை கிடையாது. எனினும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பயணம் செய்து கொடைக்கானலைச் சென்றடைந்தனர். அங்குள்ள தூய பேதுரு ஆலயத்தின் வழிபாடுகளில் கலந்து கொண்டார். தமது தந்தையாருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதை அறிந்த மகன் ஆடிங்டன் கொடைக்கானல் வந்து தம் தந்தையாரை நன்கு கவனித்துக் கொண்டார். அத்துடன் திருச்சியிலிருந்த கால்டுவெல்லின் மருமகன் வியட் என்பவரும் உடனிருந்தார். இறைவனின் அழைப்பின்படி கால்டுவெல் 1891 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் கொடைக்கானலில் காலமானார்.

அவரது உடல் கொடைக்கானல் மலையிலிருந்து மலையடிவாரம் வரை பேழையில் வைத்து சுமந்து செல்லப்பட்டது. பின்னர் அங்கிருந்து மாட்டுவண்டியின் மூலம் இரயில் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. நண்பகலில் வந்த இரயில் வண்டியில் அவரது உடலை ஏற்றினர். இரயில் மாலை நேரத்தில் திருநெல்வேலியைச் சென்றடைந்தது. கால்டுவெல்லின் உடலை பாளையங்கோட்டையிலுள்ள ஆலயத்திற்கு எடுத்துச் சென்று இறைவேண்டுதல் செய்தனர். அன்று இரவு முழுவதும் அவரது உடல் ஆலயத்திலே வைக்கப்பட்டிருந்தது. மறுநாள் காலையில் பேழையை வண்டியிலேற்றி இடையன்குடிக்கு எடுத்துச் சென்றனர். அவ்வண்டி மறுநாள் காலையில் இடையன்குடியைச் சென்றடைந்தது. திருச்சியிலுள்ள மருமகன் இடையன்குடி வந்து கால்டுவெல்லின் அடக்கத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கால்டுவெல்லின் உடல், அவரால் கட்டப்பட்ட தேவாலயப் பீடத்தின் அருகே நல்லடக்கம் செய்யப்பட்டது. அவரது நினைவாக சென்னையிலுள்ள தூய ஜார்ஜ் ஆலயத்தில் நினைவுக் கல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த நினைவு கூருதல் என்னும் தலைப்பில் கால்டுவெல்லின் கல்லறையின் மீது எழுதப்பட்டுள்ள வாக்கியங்கள் பின்வருமாறு:

மேன்மைமிகு பேரருள்திரு. இராபர்ட் கால்டுவெல் D.D., L.L.D.,சென்னைப் பல்கலைக்கழக உறுப்பினர். 53 ஆண்டுகள் தமது ஆற்றல் மிக்கத் திறமைகளை நற்செய்திப் பரப்புவதற்காகவும் கிறிஸ்துவின் திருச்சபையைக் கட்டி எழுப்பவும் திருநெல்வேலித் தமிழ் மக்கள் நல்வாழ்வுக்காகவும் தம் வாழ்க்கையை அற்பணித்தவர். இறுதி 14 ஆண்டுகள் சென்னைப் பேராயருக்கு உதவிப் பேராயராகவும் பொறுப்பேற்றிருந்தார். கல்வியிற் சிறந்த மேதை, மொழியியல் அறிஞர், தமிழ் மக்களுடன் நெருங்கி அன்புடன் பழகியவர், தமிழர் தம் வரலாறு, மொழி, பழக்க வழக்கங்கள் நன்கறிந்தவர். தலைசிறந்த எழுத்தாளர், மக்கள் பாராட்டைப் பெற்றவர், ஊழிய அழைப்பிற்கும் வலிமைக்கும் உயர்வு சேர்த்தவர். தாய்நாட்டில் அருட்தொண்டர்களின் நலனுக்காக உழைத்தவர்.

தி இலண்டன் டைம்ஸ் என்னும் செய்தித்தாள் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் நாள் கால்டுவெல் குறித்துப் பின்வரும் செய்திகளை வெளியிட்டிருந்தது.

திருநெல்வேலிப் பேராயர் பேரருள்திரு. டாக்டர் இராபர்ட் கால்டுவெல் மறைவில் நெல்லைக் கிறித்தவ சமுதாயம் உயர்தனிச் சிறப்புகள் மிக்க தங்கள் தந்தையை இழந்து வருந்துகிறது. இந்தியக் கல்வித்துறை தனித்தன்மையுடைய புதியதொரு பாதையில் பணி செய்த கல்வியாளரை இழந்து விட்டது. சுவிஷேச ஆர்வம் கொண்ட திருச்சபைத் தலைவராக மட்டுமல்லாது, தனித்ததொரு கல்வித்துறையில் ஈடு இணையற்ற மேதையாகத் திகழ்ந்த கால்டுவெல் அவர்கள், அரை நூற்றாண்டிற்கும் மேலாக இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களில் முதன்மையான இடத்தைப் பெற்றவராக விளங்கினார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக மனுக்குலத்திற்கு அவர் ஆற்றிய தொண்டுகளினால் அனைவராலும் போற்றப்படுகிறார். சென்ற மாதம் கொடைக்கானலில் நடைபெற்ற அவரது மறைவு வழிபாட்டில் திருநெல்வேலியில் கிறித்தவர்களின் எண்ணிக்கையை ஆறாயிரத்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தியவர் கால்டுவெல் என்று புகழாரம் சூட்டப்பட்டது. தென்னிந்திய மொழிகள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதைக் கண்டறிந்தவர் என்னும் சிறப்பே இவர் புகழ் எங்கும் பரவச் செய்தது. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் இவரது நூல் 1856 இல் வெளியிடப்பட்டது. மேலைநாட்டு மொழியியல் அறிஞர்களுக்கு அன்றும் இன்றும் இது ஒரு புதிய கண்டுபிடிப்பு. 1875 இல் இந்நூலின் இரண்டாவது பதிப்பு வெளியானது. போட்டியாளரும் பின்செல்லுவாரும் இன்றி இவரே

அத்துறையின் நிலையான அதிகாரம் பெற்றவராக விளங்குகிறார். இக்கால இலக்கியத் துறையில் இவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றும் நிலையான அழியாத அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இந்த இலக்கிய முயற்சியிலும் சமயப் பணிகளிலும் சோர்வின்றிப் பணிசெய்த கால்டுவெல் அவர்களை அனைத்துப் பணிகளும் இறைவனுக்குச் செய்யும் உண்மையான சேவைகளே என்னும் நம்பிக்கை ஊக்குவித்தது. வேதாகம தமிழ் மொழிபெயர்ப்பைத் திருத்தியமைக்க பன்னிரெண்டாண்டுகள் உழைத்தார். அவரது இலக்கியப் பணிகளில் அவருக்கு முழு திருப்தியும் மகிழ்வும் தந்த பணிகள் தமிழ் வேதாகம சீரமைப்பும் தமிழில் அனைவரும் பயன்படுத்தும் ஜெபப் புத்தகத்தைத் திருத்தி வெளியிட்டதும் ஆகும்.

கால்டுவெல்லின் பணிகளைப் பாராட்டி ஆங்கில நாட்டு முதலமைச்சர் கிளாட்சன் அவர்கள், மன்னரின் நிதியிலிருந்து 150 பவுன் அவரது மனைவி எலிசா அம்மையார்க்கு வழங்கினார். 1899 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18 ஆம் நாள் பேராயர் கால்டுவெல்லின் மனைவி எலிசா அம்மையார் காலமானார்கள். அவரது உடல் கால்டுவெல்லின் கல்லறைக்கு அருகாமையில் அடக்கம் பண்ணப்பட்டது.

நினைவுச் சின்னங்கள்

கால்டுவெல்லை நினைவுகூரும் சின்னங்களாக அவரால் கட்டப்பட்ட இடையன்குடியிலுள்ள ஆலயமும், தூத்துக்குடியில் அமைந்துள்ள கால்டுவெல் மேனிலைப் பள்ளியும், இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது சென்னைப் பேராயத்தால் வழங்கப்பட்டு தமிழக அரசால் மெரினா கடற்கரையில் நிறுவப்பட்ட பேராயர் இராபர்ட் கால்டுவெல்லின் திருவுருவச் சிலையும் உள்ளன. இத்துடன் அவரால் எழுதப்பட்டுள்ள நூல்களும் அவரது நினைவுச் சின்னங்கள் என்பதில் வியப்பில்லை.

கால்டுவெல்லின் மருமகன் எஸ்.பி.ஜி. மிஷனெரி J.L. வியாட் (J.L.Wyatt) தமது மாமனாரைப் பற்றிப் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்:

பரந்து விரிந்த அறிவுத்திறன் அமையப் பெற்றவர், மரியாதைக்குரிய ஐரோப்பியக் கல்வியாளர், தத்துவ ஞானமும் நடைமுறைச் செயலாற்றும் ஞானமும் அமையப் பெற்றவர். இவர் அரை நூற்றாண்டுக் காலம் திருநெல்வேலியின் தென்கோடிக் கிராமம் ஒன்றில் மக்களுடன் வாழ்ந்து, அம்மக்கள் நன்மைக்காக செலவிடவும், செலவிடப்படவும் தன்னை ஒப்புக் கொடுத்தார். திருநெல்வேலித் திருச்சபை அவருக்குத் திரும்பச் செலுத்த முடியாத அளவிற்கு நன்றிக்கடன் பட்டுள்ளது.

❀ ❀ ❀

2. கால்டுவெல்: மலரும் நினைவுகளில் மலர்ந்த கனவுகள்

ஜே. கிங்ஸ்லி எபநேசர் ஜெபசெல்வன்
பிஷப் ஸ்டீபன் நீல் ஆய்வு மையம்
திருநெல்வேலி

இந்திய மண்ணில் திருமறைப் பரப்ப வந்த இறைப்பணியாளர்களுள் பலர் சமயப் பணி மட்டுமே தமது முதற்பணி எனக் கருதாது, இந்திய மொழிகளின் இலக்கண, இலக்கிய வளர்ச்சிக்கும், சமுதாய மறுமலர்ச்சிக்கும் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள். அவர்களுள் கால்டுவெல்லின் பங்களிப்புக்கு இணையாக எதையும் குறிப்பிட இயலாது. திருநெல்வேலியில் அவர் ஆற்றியப் பணிகளை இறைப்பணி, மொழிப்பணி, இனப்பணி என மூன்று நிலைகளாகப் பகுத்துணரலாம். அளப்பற்காணீய அப்பணிகளை அவரது சுயசரிதைப் படைப்பான மலரும் நினைவுகள் (*Reminiscences of Bishop Caldwell*) வாயிலாக உற்று நோக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

கால்டுவெல்லின் மலரும் நினைவுகளில் பரிணமிக்கும் முப்பரிமானங்களாக,

1 முதன்மைப் பணியாக 'இறைப்பணி'.
2 இறையியல் கல்வியினூடே ஏற்பட்ட 'மொழி ஆராய்ச்சி'
3 சமூக மாற்றத்திற்கு அடிகோலிய 'இனப்பார்வை' விளங்குகிறது

இறைப்பணிக்கு அடித்தளமிட்ட இளமைக் கல்வி

அயர்லாந்தில் பிறந்த கால்டுவெல் தனது பத்தாவது வயதில் தன் மூதாதையரின் சொந்த நாடான ஸ்காட்லாந்திலுள்ள கிளாஸ்கோ நகரில் தன் வாழ்வைத் துவக்கினார். சிறு வயது முதலே ஆங்கில

இலக்கியங்களையும் அரிய நூல்களையும் அக்காலத்திய புகழ்பெற்ற நூற்களையும் படிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இறைநம்பிக்கை மிக்க குடும்பத்தில் பிறந்தபடியால், ஆலய வழிபாடுகளில் தவறாது கலந்து கொள்ளவும் இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் திருமறை வசனங்களை மனப்பாடமாகக் கற்கவும் உதவியாக அமைந்தது. ஆலயத்தில் அளிக்கப்படும் இறைசெய்தியை கேட்பது மட்டுமே இவரது சமயத்தொடர்புகளின் எல்லையாக இருந்தது. அன்றைய சூழலில் இறையியல் மற்றும் சமய நூல்களைக் கற்கும் ஆர்வம் அவரிடத்தில் காணப்படவில்லை. அங்கிருந்து டப்ளின் நகருக்குச் சென்ற கால்டுவெல் கலைப்பள்ளியில் சேர்ந்து தனது திறமைகளை வளர்த்துக்கொண்டதோடு பரிசுகள் பலவும் பெற்றதால் கலைமீதிருந்த ஆர்வம் அதிகரிக்கத் தொடங்கியது. அதே சமயம் அயர்லாந்திலுள்ள இறையடியவர்களுடன் ஏற்பட்ட தொடர்பினிமித்தம் ஆன்மீக வாழ்வைப் பற்றி ஆழமாக சிந்திக்க நேர்ந்தது. தொடரவேண்டிய துறை கலையா அல்லது ஆன்மீகமா என்பதில் ஏற்பட்ட பெரும் மனக்குழப்பத்திற்குப் பின் ஆன்மீக வழியில் பயணிக்க தன்னை அர்ப்பணம் செய்த கால்டுவெல், மீண்டும் கிளாஸ்கோ நகருக்கு 1833ம் ஆண்டு சென்ற கால்டுவெல், அறிவர் அர்விக் (*Dr. Urwick*) அவர்களின் பரிந்துரையின்பேரில் கிரவெல் யுயின்ங்(*Greville Ewing*) தலைமையிலான சபையில் தன்னை இணைத்துக் கொண்டார். திருமறையில் ஆழ்ந்த புலமையுடையவராக கிரவெல் இருந்த காரணத்தினாலும், கிறித்தவரல்லாத மிகவும் பின்தங்கிய பகுதிகளில் நற்செய்திப்பணியில் ஈடுபடுவதே இச்சபையின் பிரதான நோக்கமாக கொண்டிருந்த காரணத்தினாலும் கால்டுவெல்லின் திருமறைப் புலமையும் நற்செய்திப்பணி பற்றிய ஆர்வமும் மேலோங்கத் தொடங்கியது. இந்த உந்துதல் தனது இறைப்பணியை எளிய மக்களிடையேயும் ஞாயிறு பள்ளி வாயிலாகவும் துவக்க அடித்தளமிட்டது எனக் குறிப்பிடுகின்றார்.

இலண்டன் இறைப்பணி இயக்கத்துடன் இணைதல்

நற்செய்திப் பணியில் அடுத்த நிலைக்குச் செல்ல எண்ணிய கால்டுவெல் 1834 ஆம் ஆண்டு இலண்டன் இறைப்பணி இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டார். நாடுகடந்த நற்செய்திப்பணிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வியக்கத்தாரால் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் இறையியல் கற்க அனுப்பப்பட்டார்; பட்டப்படிப்பு முடிந்ததும் வெப்பமண்டல பகுதியான தென்னிந்திய மண்ணில் இறைப்பணியாற்ற இலண்டன் இறைப்பணி இயக்கம் தனது சென்னைக் கிளையில் பணியமர்த்தியது.

இங்கிலாந்திடமிருந்து பிரியாவிடை

நாட்டையும் வீட்டையும் பெற்றோரையும் நண்பர்களையும் விட்டுப் பிரிந்து இறைவனின் வழிநடத்தலுக்கு தன்னை அர்பணித்தார். இறுதியாக, உடல் நலக்குறைவால் படுக்கையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த வயது முதிர்ந்த தனது தாயிடமிருந்து விடைபெறும்போது கால்டுவெல்லின் உள்ளம் உருகியது. கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தாயின் அரவணைப்பிலிருந்து விடுபட்டு தனது பயணத்தை தொடரலானார். 'அதற்குப் பின் எனது பெற்றோரை நான் பார்க்கவே இல்லை' என கால்டுவெல் குறிப்பிடும்போது படிப்பவர் கண்களும் குளமாகி நிற்கின்றன. இந்த உலகப்பற்றுகளிலிருந்து விடுபடும் துணிவை தந்ததன் மூலமாக அவரிடம் எழுந்த இறைபற்று எத்தகையதாய் இருந்திருக்கும்? என உணர முடிகிறது.

இந்தியாவிற்கான பயணம்

1837ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30ம் நாள் மேரி-ஆன் கப்பலில் தொடங்கிய பயணம் பழுது, விபத்து, உயிரிழப்பு போன்ற பல இன்னல்களுக்கிடையே தொடர்ந்தது. பயணத்தின்போது சி.பி. ப்ரௌன் என்பவரின் நட்பினை பெற்றுக்கொண்டார். இவர் சென்னை மாநிலத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர், நீதிபதி போன்ற உயர் அரசுப்பணியில் பணியாற்றி வருபவர்; மராத்தி, பாரசீகம், அரபி, சிரியா, எபிரேயம், இத்தாலி சமஸ்கிருதம், தெலுங்கு, இந்துஸ்தானி, கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் புலமை பெற்ற இவரிடமிருந்து இந்தியாவைப் பற்றி தெரிந்து கொண்டார். சிறுவயது முதலே இது போன்று கல்விப்புலமையுடையோரின் நட்பு கிடைக்கும்போதெல்லாம் வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக்கொண்டு தன்னுடைய நுண்ணறிவை வளர்த்துக் கொள்ளும் நற்பண்புடையவராக கால்டுவெல் விளங்கினார். 1838ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ஆம் நாள் சென்னை வந்தடைந்த கால்டுவெல் 1841ம் ஆண்டு நவம்பர் திங்கள் திருநெல்வேலியை அடைந்தார். இந்தியாவிலுள்ள வெப்பமான பகுதிகளுள் ஒன்றான திருநெல்வேலியில் மூன்று மாதங்கள் கோடைகாலமாகவும் ஒன்பது மாதங்கள் கடுங்கோடைகாலமாகவும் வெப்பநிலை உள்ளது என குறிப்பிடுகின்றார். இவ்வெப்பத்தினிமித்தம் அடிக்கடி ஏற்படும் உடல்நலக் குறைவையும் பொருட்படுத்தாது இறைப்பணிக்காக தன்னை அர்பணித்துக்கொண்டவர் கால்டுவெல்.

திருநெல்வேலி சபை வளர்ச்சியின் புள்ளி விவரங்களை விக்டோரியா பேரரசியின் பொன்விழா மலரில் வெளியிட்டுள்ளதை

கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். இதை ஆழமாக சிந்திக்கும்போது திருநெல்வேலி கிறித்தவ வளர்ச்சியின் மீது பேரரசியார் எத்தனை கரிசனை கொண்டுள்ளார் என்பது புலனாகிறது.

திருநெல்வேலி ஒரு கிறித்தவக் களம்

சமயப்பணி மட்டுமன்றி கல்விப் பணிக்காகவும் கால்டுவெல் ஆற்றிய பணி அளப்பரியது. இலண்டன் இறைப்பணி இயக்கத்தினரின் பணித்தளங்களுள் தென்னிந்தியாவிலேயே முதன் முதல் பெண்கள் விடுதிப்பள்ளியை துவக்கியவரும் பின்னற்கலையை அறிமுகப்படுத்தியவரும் திருமதி கால்டுவெல் அம்மையாரே. திருநெல்வேலி திருச்சபையின் தந்தை ஸ்வார்ட்சு என்றும் இரண்டாம் தந்தை இரேணியசு என்றும் குறிப்பிடும் கால்டுவெல், விக்டோரியா பேரரசியின் காலத்தை திருநெல்வேலியின் முன்னேற்றக் காலம் என்று குறிப்பிடுகிறார். இடையன்குடிப் பகுதியை தலைமையிடமாகக் கொண்டு வேகமான கிறித்தவ வளர்ச்சிக்கு கால்டுவெல் ஆற்றியப் பணிகளும் அடைந்த இன்னல்களும் அவரது தியாகத்திற்கு சான்று பகர்கிறது. சமயப்பரப்புதலோடு நின்றுவிடாது, திருநெல்வேலி சபையின் ஆரம்பகால வரலாறு (*Records of the Early History of the Tinnelvely missions*) என்னும் நூலையும்1881-ல் வெளியிட்டு காலத்தால் அழிக்கமுடியாத சேவையையும் புரிந்துள்ளார்.

இறையியல் கல்வியினூடே ஏற்பட்ட மொழி ஆராய்ச்சி

கிளாஸ்கோ நகரில் அறிவர் சார்ல்மார்ஸ் போன்ற அறிஞர்களின் அருளுரைகளில் பொதிந்து கிடந்த அழகிய மொழிநடை, கருத்துச் செறிவு, கற்பனை வளம், ஆகியன மொழி மீதான கவனத்திற்கு அடிகோலியது. கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தபோது, மொழியியல் பேராசிரியர் டேனில் சாண்ஃபோர்டு அவர்களின் மொழியியல் புலமையைக் கண்டு வியப்படைந்ததாகவும் அதுவே தனக்கு ஒப்பு மொழியியலின் ஆர்வத்திற்கு வித்திட்டது எனவும் குறிப்பிடுகின்றார். இதன் விளைவாக 1856ஆம் ஆண்டு 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நிகரற்ற நூல் வெளிவரக் காரணமாக அமைந்தது. தமிழ்மொழி செம்மொழிக்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளது என உலகிற்குப் பறைசாற்றியதும் அதைத் தொடர்ந்து தமிழகத்தில் எழுந்த தொடர் முயற்சிகளின் பலனாக தமிழ் மொழி செம்மொழி எனும் உயர்நிலையை அடைய நேர்ந்ததும் கால்டுவெல்லையே சாரும்.

சமூக மாற்றத்திற்கு அடிகோலிய இனப்பார்வையும் ஒடுக்கப்பட்ட நாடார் இன மக்களோடு ஏற்பட்ட ஈர்ப்பும்

இந்திய சமயத்தை சாதிய அடிப்படையில் எழுந்த சமயமாக கருதலாம். வருண அமைப்பில் உயர்நிலையில் இருந்த மக்கள் தங்கள் தனித்தன்மையைக் காக்க சமயத்தை தங்கள் ஆயுதமாகக் கொண்டு, மற்றவர்களை அடிமைப்படுத்தி, தொடர்ந்து மேல்நிலையில் அமர்ந்திருக்க எண்ணினர். அதன்படி சமயச்செயல்களிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு ஆலய மறுப்பு, வழிபாடு, திருமண முறை, பண்பாடு, நீர் போன்றவற்றில் விலக்கினை அடைந்து துயருற்றிருந்த இனங்களுள் ஒன்றான சாணார் (நாடார்) இன மக்களை முதன்முதல் மதுரையில் சந்தித்ததாகக் குறிப்பிடுகின்றார். அண்மையில்தான் கிறித்தவ சமயத்தை தழுவியிருந்த அவர்கள் திருநெல்வேலியிலிருந்து வந்திருந்ததாக குறிப்பிடுகின்றார். அவர்களுடைய நீண்ட காதுகள், நீண்ட கடுக்கன்கள், பெண்களைப் போல நீண்ட கொண்டையுடைய புறத்தோற்றமும் அவர்கள் அன்போடு அளித்த பனங்கற்கண்டு, இருகரங்களையும் கூப்பி நளினமாக வணக்கம் செலுத்திய முறை அடக்கமான ஒடுக்கமான பேச்சு போன்றவற்றைக் கண்டு வியந்துவிட்டதாகவும் அவர்கள் மீது ஓர் ஈர்ப்பு ஏற்பட்டதாகவும் குறிப்பிடுகின்றார். வடக்கே உள்ளவர்களின் கனிவற்ற, முரட்டுத்தனமான பேச்சில் பழக்கப்பட்டிருந்த தனக்கு நாடார் இன மக்களின் பணிவான, கனிவான பேச்சு முற்றிலும் மாறுபட்டிருந்ததாகவும் இந்த அடையாளங்கள் அனைத்தும் இந்த இன மக்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை உறுதியாக காட்டுவதாக உள்ளது எனக் குறிப்பிடுகின்றார். கடுமையாக உழைக்கும் திறனுடைய உடலமைப்பும் வேகமாய் முன்னேறக்கூடிய செயல்திறன் கொண்ட உள அமைப்பும் கொண்டவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயத்தில் நாடார்களின் நிலைகளாக கால்டுவெல் கூறியவை

திருநெல்வேலிப் பகுதிகளில் சாணார்களும் பள்ளர்களும் பறையர்களும் தீண்டத்தகாதவர்களாக, தாழ்த்தப்பட்டவர்களாக கருதப்பட்டனர். உயர் சாதியினருக்கு இச்சாதியினர் அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். நாடார்கள் சாணார்கள் என்றழைக்கப்பட்டனர். பனைத்தொழில் செய்து வாழ்க்கை நடத்தினர். செய்யும் தொழிலின் தன்மையாலும் பொருளாதாரத்தில் தன்னிறைவு நிலையின்றிப் பிறரைச் சார்ந்து எதிர்நோக்கி நிற்றலாலும், மேல்மட்டத்தினரை அண்டி நிற்கும் தகுதி பெறாமையாலும் இப்பிரிவினர் சாதி தட்டுகளின் கடைநிலைக்குள் அமிழ்த்தப்பட்டனர். எனினும் சூத்திர வருணத்தில்

இடம்பிடித்திருந்தவாகளின் பட்டியலில் மேல்நிலையில் காணப்பட்டார்கள். நாட்டார் வழிபாட்டு மரபுகளை பின்பற்றி வந்தவர்கள். சமூதாய ஒடுக்கு முறைக்கு ஆளானவர்கள். சமூதாயத்தில் ஒதுக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டவர்கள். கோவிலுக்குள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆகவேதான் சாதியக் கட்டுகளை உடைக்க சமயப் பரப்புதலை மட்டுமே கையில் எடுக்காது அடிப்படைத் தேவைகளான கல்வி, பொருளாதாரம் போன்றவற்றை அளிக்கவும் கால்டுவெல் முனைந்தார். தொழில் திறனும், கடின உழைப்பும் இருந்தபோதிலும், உழைப்புக்கேற்ற ஊதியமும் வாழும் வழியும் பெறாதிருந்தனர். மேலைநாடுகளின் உதவிகொண்டு இவர்கள் வாழ்வு வளம்பெற 1849ம் ஆண்டு எழுதப்பட்ட நூலே 'திருநெல்வேலி சாணார்' என்னும் நூலாகும்.

குழும சமயத்தழுவல் (Mass conversion)

ஆதிக்க சாதியினரின் ஒடுக்குமுறைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள, நாடார் சமூகத்தினர் கையாண்ட போராட்ட வடிவங்களுள் ஒன்றே கிறித்தவ சமயத் தழுவலாகும். சமய மாற்றத்திற்கு ஆன்மீகத் தேடல்களின் விளைவு மட்டுமே காரணமாக அமையாது குழும மதமாற்றத்திற்குப் பின்னால் பல்வேறு சமூகக் காரணிகளும் அமைந்திருந்தன. சமூக, சமய, அரசியல் மற்றும் பொருளாதார நிலைகளில் தொடர்ந்து ஒடுக்கப்பட்டு வரும் சூழலில் பிற இனத்தவரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், தங்கள் நலன்களை வளர்த்துக் கொள்ளவும், தங்களிடையே வலுவான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ளவும், திறத்துடன் எதிர்த்து போராடவும் இச்சமுதாயம் விரும்பி எடுத்துக்கொண்ட முடிவே கிறித்தவ குழும சமயத் தழுவலாகும். சமூக உயர்நிலையின் அடையாளமாக திகழும் பண்பாட்டினை பெறுவதின் நிமித்தம் தங்களை சாதிய ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவித்துக் கொள்ளலாம் என்று உணர்வு ஏற்பட கிறித்தவ சமயமே காரணமாயிருந்தது.

1785-இல் கால்டுவெல் கண்ட 'முதல் திருநெல்வேலி கிறித்தவப் பதிவேட்டில்' கிளாரிந்தா உட்பட 40பேர் இடம் பெற்றிருந்த பட்டியலில் ஒருவர்கூட நாடார் இனத்தவர் அல்ல. சீர்திருத்தக் கிறித்தவ ஆவண புத்தகத்தின்படி 1880ம் ஆண்டு திருநெல்வேலியில் சீர்திருத்தக் கிறித்தவத்தை தழுவிக்கொண்டவர்கள் 50000 பேர்களாவார். அவற்றுள் 95 விழுக்காடினர் நாடார்குலத்தைச் சார்ந்தவரே ஆவர். 2013ம் ஆண்டு கணக்கின்படி, 736 கிறித்தவ கிராமங்களும், 695 சீர்திருத்த கிறித்தவ ஆலயங்களும் 119 அருட்பணியாளர்களும்

3,30,858 பேர்கள் அங்கத்தினர்களாகவும் கொண்டு பரந்து விரிந்த திருநெல்வேலித் திருச்சபை 6 மருத்துவமனைகளையும் 350 கல்வி நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டு நிகரில்லா சேவை மனப்பான்மையுடன் சமுதாயப் பணியாற்றி வருகிறது.

தொகுப்புரை

1. திருநெல்வேலியில் கிறித்தவத்தின் வளர்ச்சியானது எண்ணிக்கையிலும் ஆன்மீகத்திலும் தொடர்ந்து வேகமாக பயணிக்கிறது.
2. தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாக பரிணமிக்கிறது.
3. நாடார்களின் குழும சமயத்தழுவலுக்கு கால்டுவெல்லின் அணுகுமுறைகளும் முக்கிய காரணமாகும். சமயத்தழுவல் வாயிலாகக் கிடைத்த கல்வியும் பொருளாதார உயர்வும், சாதிய அடக்குமுறைகளுக்கும் பண்பாட்டு ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான உணர்வினை வெளிப்படுத்தும் துணிவை பெற்றதோடு சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடையும் இலக்கினில் வெற்றியும் பெற்றனர்.

தான் மேற்கொண்ட முப்பணிகளையும் தொய்வின்றி ஒருசேர செய்யும் திறனையும் ஒருங்கிணைக்கும் ஆற்றலையும் கால்டுவெல் பெற்றிருந்தார். தான் கண்ட மூன்று கனவுகளுமே பிற்காலத்தில் புகழின் உச்ச நிலையை அடைந்தன.

மலரும் நினைவுகளில் காணக்கிடக்கின்ற அரிய தகவல்களுள் நினைவை விட்டு நீங்க மறுப்பவைகள்:

இங்கிலாந்து முதல் இந்தியா வரையுள்ள கப்பற்பயணங்களில் எழுந்த அனுபவங்கள், சம்பவங்கள், கடற்கொள்ளை போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

நீலகிரியிலிருந்து திருநெல்வேலி வரையுள்ள கால்நடை பயணக்குறிப்புகள் வியப்பை அளிக்கின்றன. உயர்குலத்தைச் சார்ந்தவர்கள் ஓய்வெடுக்க அரசு செலவில் கட்டப்பட்ட சத்திரங்களும், பிற பயணிகள் தங்க பராமரிக்கப்படாத கொட்டகைகளும் சாலையோரங்களில் இருந்த வரலாற்றுக் குறிப்பை அறிய முடிகிறது.

திருநெல்வேலியில் நிலவிய தட்பவெப்பநிலை, இயற்கை அழகு, வயல் வெளிகள், மக்கள் வாழ்க்கை முறை, பண்பாடு, நடைமுறையில் இருந்த வருண அமைப்பு போன்றவை காணக்கிடக்கின்றன.

விவிலிய மொழியாக்கம், வழிபாட்டுப் புத்தகம், கிறித்தவக் கீர்த்தனைகள், இறையியல், இலக்கிய வளர்ச்சி, இன வளர்ச்சி, கிறித்தவ வரலாறு, திருநெல்வேலி வரலாறு போன்றவற்றை மையமாகக் கொண்டு எழுந்த பல அரிய நூல்களைப் படைக்கும் சிறந்த களமாக திருநெல்வேலி இருந்திருப்பதை அறிய முடிகிறது.

சுருங்கச் சொல்லின் 'கால்டுவெல்லின் மலரும் நினைவுகள்' ஒரு வரலாற்றுப் புதையல்.

❦ ❦ ❦

3. கால்டுவெல்: பொது வாசிப்பு

முனைவர் செ.வை. சண்முகம்
இயக்குநர் (ஓய்வு), மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

ராபர்ட் கால்டுவெல் (1819-1891) (சுருக்கமாகக் கால்டுவெல்) என்ற பெயரே அவர் வெளிநாட்டவர்; ஐரோப்பியர் (குறிப்பாக ஐரிஷ் நாட்டவர்) என்பதையும், கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதையும் புலப்படுத்துகிறது. அவர் திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆங்கில நூல் (முதல் பதிப்பு 1856 இலும், அவரால் திருத்தப்பட்ட இரண்டாவது பதிப்பு 1875 இலும், வயட் - ராமகிருஷ்ண பிள்ளையால் (J.L. Wyatt and T. RamakrishnaPillai) திருத்தப்பட்ட பதிப்பு 1913 இலும் வெளிவந்தன. அந்தப் பதிப்பு சென்னைப் பல்கலைக்கழகத்தால் 1956, இல் மறுபதிப்பு செய்யப்பட்டதே இன்று பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.) எழுதி இந்திய மொழியியல் வரலாற்றிலும், சிறப்பாகத் திராவிட மொழியியல் வரலாற்றிலும், தமிழ்க் கல்வி உலகிலும் தடம் பதித்துவிட்டார்.

அந்த நூல் அடிப்படையில் மொழியியலில், வரலாற்று ஒப்பிலக்கணம் (Historical& comparative grammar) என்ற துறையைச் சார்ந்தது என்பதோடு, திராவிட மொழிகள் ஒரு தனி மொழிக் குடும்பம் என்று நிறுவி, உலக மொழிக் குடும்பங்களோடு திராவிட மொழிக்குள்ள உறவு முறையை ஆராயும் முதல் நூல் என்ற பெருமையும் உடையது.

வரலாற்று நிலை ஒப்பாய்வு (Comparative & Historical study) என்பது 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய புதிய அறிவுத் துறை ஆகும். அதன் அடிப்படை, மொழிக் குடும்பம் (Language family) அதாவது சில மொழிகள் இன உறவு (Genetic relation) உடையவை

என்ற கருத்தமைவே. அந்த முறையில் தென்னிந்திய மொழிகளான தமிழ், மலையாளம், கன்னடம், துளு, தெலுங்கு முதலிய 12 மொழிகள் (அவர் கருத்துப்படி) திராவிடம் என்ற தனி மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பதை நிறுவியதோடு, அந்தக் காலகட்டத்தில் பரவலாகக் கருதப்பட்ட சமஸ்கிருத மொழியோடு இன உறவு உடையது அல்ல என்று நிரூபித்த நூல்.

அந்த மொழிக் குடும்ப மொழிகளின் தொல் வடிவத்தையும், அதன் மூலம் தனி மொழிகள் பிரிந்த வரலாற்று மாற்றத்தையும் இந்த நூல் ஓரளவு புலப்படுத்துகிறது. அதாவது மொழி வரலாறு (History of a lanugage) என்ற புதிய துறையும் தோன்ற அடித்தளமாக அமைந்தது. அவைகளுக்கு மேலாகத் தமிழகத்தில் அரசியல், பண்பாடு, மொழி சார் உணர்வுக்கும் கூட இந்த நூல் வித்திட்டுள்ளதும் குறிப்பிடத்தகுந்தது.

கால்டுவெல் 37 ஆண்டுகள் தமிழ் படித்ததோடு தமிழ் நாட்டிலேயே தங்கிச் சமயப் பணி செய்து, சமயம் சார்ந்த தமிழ்ப் பணிகள் அதாவது கிறித்துவ சமய நூல்கள் வெளியிடும் பணியில் ஈடுபட்டு உழைத்துள்ளார். திராவிட மொழிகள் பற்றிய நூலறிவோடு, திராவிட மொழி அறிஞர்களோடு நேரடித் தொடர்பும் பெற்றிருந்தார். எனவே அவர் முன்னுரையிலும் முகவுரையிலும் தமிழ், மலையாளம், கன்னடம் தெலுங்கு மொழி அறிஞர்களைப் பற்றியும் இலக்கிய மொழி வளர்ச்சி பற்றிக் கூறும்போது, ஐரோப்பிய அறிஞர் பண்புகளோடும் ஐரோப்பிய இலக்கிய மொழிப் பண்புகளோடு மாறுபடுவதைச் சுட்டிக்காட்டிக் கூறிய கருத்துகளில் சமூக ஒப்பு நோக்கு, இலக்கிய ஒப்பு நோக்கு, இலக்கிய மொழி உருவாக்க ஒப்பு நோக்கு ஆகியவை அடங்கியுள்ளதால் அவை இன்னும் அதிகக் கவனம் பெறுவதற்கு உரியவை. அவைகளே இங்கு விளக்கப்படுகின்றன.

திராவிட மொழி அறிஞர்கள்

'இரண்டாம் பதிப்பைத் தயாரிக்கும்போது திராவிட மொழிகளைப் பற்றி ஐரோப்பியர்களுக்குத் தேவையான, ஆர்வமூட்டக் கூடிய செய்திகளை எல்லாம் கொடுக்க முயன்றுள்ளேன். அதே சமயத்தில் ஐரோப்பியர்களைவிடவும் திராவிட மொழி அறிஞர்களின் தேவையைப் பற்றியே சிந்தித்தேன் [1] (ப. xi) என்று கூறும்போது அவருடைய சமூக உணர்வு புலனாகிறது. ஆய்வு நோக்கோடு, தன்னுடைய நூல் புது அறிவுத் துறை ஆனதால் அந்த மொழி அறிஞர்கள் அதை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எண்ணியதையும் அது புலப்படுத்துகிறது.

'திராவிட மொழி அறிஞர்கள் தாய் மொழி இலக்கணத்தையும் இலக்கியத்தையும் நல்ல முறையில் ஆழமாகப் படித்துள்ளதைப் போல் உலகத்தில் பிற மொழியாளரிடம் பார்க்கமுடியாது என்றும் அதற்கு ஒரு விலக்கு விதி வடமொழிக் கற்கும் பிராமணர்கள்'[2] என்று குறிப்பிட்டுள்ளார் (ப. xi).

பொதுவாகஐரோப்பியர்கள்இந்தியர்களைத்தாழ்ந்தவர்களாகப் பார்த்தபோது மொழித்துறையில் அவர்களின் ஆற்றலைப் புரிந்து பாராட்டியிருப்பது சிறப்பானது. ஆனால் தொடர்ந்து கூறும் மூன்று கருத்துகள் விளக்கத்துக்கும் விவாதத்துக்கும் உரியவையாக அமைந்துள்ளன. அவையாவன : 1. 'இலக்கணக் கல்வியை அப்படிப் படித்ததன் ஒரு பயன் நுண்மான் நுழைபுலன் (Intellectual acuteness) வளர்ந்துள்ளது. 2. இன்னொரு பலன் அவரவர் மொழிகளைத் தொடர்ந்து செம்மைப்படுத்தியது. அவைகளின் பலன்கள் ஒன்றை ஒன்று சார்ந்தும் தழுவியும் அமைந்துள்ளன. 3. ஆகையால் ஏதாவது ஒரு திராவிட மொழியில் குறிப்பாகத் தமிழில் தகுதி வாய்ந்த அறிவைப் பெற்ற அளவுக்கு ஐரோப்பியர்களால் நுழைபுலத்தைப் பெறமுடியாது' (ப. xi).

தமிழ் இலக்கண வரலாற்றைப் பொறுத்த வரையில் முதல் கருத்து தொல்காப்பியருக்கு மட்டுமே பொருந்தும். நன்னூலார் எழுத்தியலுக்கும் புணரியலுக்கும் இடையே பதவியலை அமைத்து கோட் பாட்டு அளவில் சிறப்பானது ; பாராட்டுவதற்கு உரியது. பிற இலக்கண ஆசிரியர்களின் நூல்கள் முன்ஆசிரியர்களின் கருத்தின் தழுவலாக அமைந்துள்ளன.

இரண்டாவது கருத்தான இலக்கண ஆய்வால் மொழி மெல்ல மெல்ல திருத்தம் பெற்றது என்பதும் தமிழ் இலக்கண வரலாற்றால் அறிய முடியவில்லை. மேலும் மொழி திருத்தத்துக்கும் மொழிச் செம்மைக்கும் இலக்கண ஆய்வு உதவும் என்பது விவாதத்துக்கு உரியது. எனவே இலக்கண அறிஞர்களை அளவுக்கு அதிகமாகப் புகழக் காரணம் என்ன என்பதை அறிய முயலவேண்டும்.

மூன்றாவது கருத்தில் தமிழர்களை அளவுக்கு அதிமாக உயர்த்தி, ஐரோப்பியர்களின் இந்திய மொழி அறிவைக் குறை கூறுவதாக அமைந்துள்ளது வியப்பாக உள்ளது. சமய உட்பிரிவு மாறுபாடு காரணமாகத் தமிழ் கற்ற சில ஐரோப்பியர்களைக் குறை கூறுகிறாரா என்று எண்ணத் தோன்றுகிறது.

'தாய் மொழி இலக்கிய இலக்கணங்களை மட்டும் ஆழ்ந்து கற்றுள்ளதால் ஐரோப்பியர்களை விட உள்ளுணர்ந்து கொள்ளுதலிலும்

(grasp) முழுமையாக உணர்ந்து கொள்வதிலும் (Comprehensiveness) குறைவு உடையவர்களாக உள்ளார்கள். ஆழமாக உணர்ந்த அளவுக்கு அகலமாக உணரவில்லை'[4] (ப. xii) என்று கூறியுள்ளவை விவாதத்துக்கு உரியவை. ஒருக்கால் அவர் காலத்தில் சராசரி அறிஞர்கள் சிலரை வைத்துப் பொதுமைப்படுத்தியதாகவே கருதத் தோன்றுகிறது. 18 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிவஞான முனிவர் போன்றவர்கள் இலக்கணக் கல்வியிலும் தத்துவம் போன்ற பிற துறையிலும் குறிப்பிடத் தகுந்தவர்கள். ஆனாலும் கோட்பாட்டு நோக்கு ஆய்வு ஐரோப்பியர்களிடம் வளர்ந்த அளவுக்கு இந்தியர்களிடம் இன்னும் வளரவில்லை என்பது உண்மைதான். ஆனால் உழைத்தால் முன்னேற முடியும் என்பதும் உண்மை.

'தென்னிந்திய மொழியாளர்கள் பிற மொழிகளோடு குறிப்பாகப் பிற திராவிட மொழிகளோடு ஒப்பிடும் முயற்சியில் இறங்கவில்லை. மொழிக் குடும்பம் என்ற கருத்தமைவும் தோன்றவில்லை'[5] (ப.xii) என்று அவர் கூறியுள்ளது அவருடைய எதிர்பார்ப்பையும் வருத்தத்தையும் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

உலகளாவிய நிலையில் மொழியியல் ஆய்வு, எழுத்தாக்க ஆய்வில் தொடங்கிப் பின்னர் மொழிக்கு விளக்க அல்லது வருணனை முறை இலக்கணம் எழுதும் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது இப்போது தெளிவாக புலனாகியுள்ளது (சண்முகம், 1989 (2009)). அதன் ஒரு பகுதியாய் இந்தியாவில் குறிப்பாகத் தென்னிந்தியாவில் வடமொழி திராவிட ஒப்பாய்வு பழங்காலம் தொட்டே நடைபெற்றிருக்கவேண்டும் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. அந்த ஒப்பாய்வு, மாறுபாட்டு (Contrastive) ஆய்வாக மட்டுமே அமைந்துள்ளது. அதற்குத் தமிழில் தொல்காப்பிய இலக்கணமும், பரிபாடல் இலக்கியமும், மலையாளத்தில் லீலாதிலக இலக்கண உரையும் சான்றாக உள்ளன. லீலாதிலக உரையில் வரலாற்று ஒப்பிலக்கணத்துக்கும் ஒரு ஆணிவேர் இருப்பது இப்போது கண்டறியப்பட்டுள்ளது. (சண்முகம், 1992). ஆனாலும் இந்தியாவில் அடிப்படை மொழியியல் விளக்கமுறை ஆய்வே கோலோச்சியது. மேலும் விளக்கமுறை ஆய்வுக்கு இந்தியா, தாய் என்று கூடக் கூறலாம். ஐரோப்பாவிலும் முதலில் விளக்கமுறை ஆய்வே மேற்கொள்ளப்பட்டாலும் வரலாற்று ஒப்பிலக்கண ஆய்வுக்கு 18-ஆம் நூற்றாண்டு இறுதியில் கால்கோள் செய்யப்பட்டு 19 ஆம் நூற்றாண்டில் முழு வீச்சில் ஐரோப்பியர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதன் ஒரு விளைவே கால்டுவெல்லின் திராவிடமொழி இலக்கணம். அது இன்றைய நோக்கில் ஒரு மொழிக் குடும்பத்தின் வரலாற்று

ஒப்பிலக்கணம் மட்டும் அல்ல, அன்றைய ஆய்வுக் கோட்பாட்டின்படி அதன் மூலம் மொழியின் தோற்றத்தையும் ஆதி மொழியின் மொழிக் கூறுகளையும் கண்டறியும் முயற்சியும் ஆகும். அதனால் அதை வரலாற்றின் ஆய்வின் கொடுமுடி என்றும் கூறலாம். அவைகளைக் கால்டுவெல்லே தன் நூலில் குறிப்பிட்டிருப்பது எடுத்துக்காட்டத் தகுந்தது.

'தென்னிந்தியர்கள் தங்கள் மொழியின் ஒப்பாய்விலும், பொது ஒப்புமொழி நூல் ஆய்விலும் ஆர்வம் கொண்டால், தங்கள் மொழி இலக்கணத்தைக் கற்று பயன் பெறுவதைவிட பல வகைகளில் பயன் அடைவார்கள். அ) இலக்கணத்தைக் குருட்டுப் பாடமாகப் படிப்பதைக் கைவிட்டு, ஆ) மொழி அறிவின் குறிக்கோளையும் நோக்கத்தையும் உணர்ந்தும், இ) மொழிக்கு தனக்கென வரலாறு உண்டு என்பதை அறிந்தும், ஈ) அந்த வரலாறு பிற வரலாற்றுக்கும் குறிப்பாக இனவரலாற்றுக்கும் (*Ethnology*) தொல்லியல் (*Archeology*) ஆய்வுக்கும் துணைநிற்கும் என்பதை உணர்வார்கள். உ) இந்த முறையில் கற்கப்படும் மொழிநூல் கல்வி, பரந்த மானிடம் தொடர்பான கருத்துகளில் ஆர்வத்தை ஏற்படுத்தி மனதைக் குறுக்காமல் விரிவுபடுத்துவதையும் காண்பார்கள்'.[6] (*ப. xii*) (விவாதத்தில் குறிப்பிடுவதற்காக எண் கொடுக்கப்பட்டுள்ளது.) என்ற கருத்துடன்பாட்டு நோக்கு உடையது. இருந்தாலும் , ஒப்பாய்வின் பலனை அழுத்தமாகச் சொல்வதாகக் கொள்ளலாம்.

'ஒப்பாய்வின் இன்னொரு நன்மை உடனடியாக ஏற்படாமல் போனாலும் விலை மதிப்பற்ற பலன் என்பது நல்ல, வாசிக்கத் தகுந்த, பயனுள்ள திராவிட இலக்கியங்கள் பண்டிதத் தன்மை அற்ற, கொச்சை இல்லாத கருத்திலும், தொனியிலும் நடையிலும் தென்னிந்திய மக்களைப் போல அறிவுடை மக்களின் தகுதிக்கு ஏற்ப உருவாக்கும்' (*ப. xii*. இறுதி வாக்கியம்).

இதுவும் ஒப்பாய்வின் பயனை மிகைப்படுத்திக் கூறியதாகவே தோன்றுகிறது. ஆனாலும் அது அன்றைய இலக்கியம், இலக்கிய நடை பற்றிய அவருடை விமர்சனமும், ஓரளவு ஏற்றுக் கொள்ளத்தகுந்ததே. அவர் காலத்தில் பாடல் வடிவில் அமைந்த சிற்றிலக்கியங்களே அதுவும் சிற்றரசர்கள் ,செல்வந்தர்கள் சார்ந்தவையே எழுதப்பட்டன. அவை பொதுமக்களைப் பற்றிக் கவலைப்பட்டதில்லை. அதனால் உரைநடையில் நல்ல பொது மக்கள் சார்இலக்கியம் அதாவது சிறு கதை, நாவல் முதலானவை 20 ஆம் நூற்றாண்டிலிருந்து தோன்றத் தொடங்கியது மொழி ஓரளவு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது எனலாம்.

'ஐரோப்பியர்கள் தென்னிந்தியர்களின் மொழி, இலக்கியம், தொன்மை ஆகியவைகளில் காட்டும் ஈடுபாடு, தென்னிந்தியர்களையும் தூண்டாமல் போகாது. அதை நட்போடு கூடிய போட்டியாகத் தென்னிந்தியர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நம்புகிறேன். அதிக அளவில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தென்னிந்திய அறிஞர்கள் மொழி நூல், தொல்லியல் ஆகிய ஆய்வில், கற்ற ஐரோப்பியர்கள் ஐரோப்பாவின் மொழி நூல், தொல்லியல் காட்டும் ஆர்வத்துக்கு இணையாக ஈடுபட்டால் அதன் பலன், விடை காணமுடியாத சிக்கல்கள் என்று கருதப்படுவையும் சீக்கிரமாகத் தீர்வு கண்டு, வெட்டி முயற்சி என்று கருதப்படுபவை முழு பலனையும் தரும்'. (ப. xiii. முதல் பாரா).

அது அவருடைய உண்மையான ஆய்வு ஈடுபாட்டையும் எதிர்பார்ப்பையும் புலப்படுத்துகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலிருந்து தென்னிந்தியர்கள் வரலாற்று ஆய்விலும் குறிப்பாகத் திராவிட மொழி ஒப்பிலக்கண ஆய்விலும் உலகளாவிய நிலையில் தடம் பதித்துள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்கும் பெருமைப்படுவற்கும் உரிய செய்தி.

அந்த முறையில் ஒப்பிலக்கண ஆய்வில், சுப்பையா (1908), ராமஸ்வாமி ஐயர் (1928. 1930. 1932 முதலியன), உஸ்மானிய பல்கலைக்கழக மொழியியல் பேராசிரியர் (ஹைதராபாத்) கிருஷ்ணமூர்த்தி, (1961. 2003), அண்ணமலைப் பல்கலைக்கழகம் மொழியியல் உயராய்வு மையம் திராவிட மொழி பேசுவோர் ஆய்வு என்ற முறையில் மீனாட்சிசுந்தரனார் (1965) குமாரசுவாமி ராஜா (1969) சுப்பிரமணியம் (1971. 1983) சண்முகம், (1971) முதலியோர் செய்த ஒப்பிலக்கண ஆய்வு இன்று திராவிட மொழி ஒப்பிலக்கண ஆய்வு பரவலாக உலக அளவில் உணரப்பட்டுள்ளது.

'தென்னிந்திய அறிஞர்கள் கடின உழைப்பிலோ அல்லது தகவல்களைச் சரியாகத் தெரிந்துகொள்வதிலோ யாரையும் மிஞ்சியவர்கள் அல்ல. அவர்கள் கூடுதலாக வரலாற்று உண்மைகளைத் தெரிந்துகொள்ளும் ஆர்வம், பாகுபடுத்தி, வேறுபடுத்தி அறியும் ஆற்றல், அவைகளோடு பொதுமைப்படுத்துதல், ஆகியவை இதுவரை ஐரோப்பியர்களின் சிறப்புப் பண்புகளாகக் கருதப்படுகிறவைகளைப் பெற முயல வேண்டும்.'[8] (ப. xiii.)

என்பது மிக முக்கியமான அறிவுரையாக எனக்குத் தோன்றுகிறது. ஆங்கில மொழி அறிவால் உலகளாவிய இலக்கண இலக்கியக் கோட்பாடுகள் அறிமுகமாகி, தமிழ் இலக்கண இலக்கியங்கள்

உலகளாவிய நோக்கில் பார்க்கப்பட்டாலும், ஒப்பிலக்கண ஆய்வில் முன்னேற்றம் கண்ட அளவுக்கு இலக்கிய ஆய்வில் முன்னேற்றம் ஏற்படவில்லை. இலக்கண ஆய்விலும் தமிழில் ஆய்வு நூல்கள் வந்த அளவுக்கு ஆங்கிலத்திலோ பிற ஐரோப்பிய மொழிகளிலோ நூல்கள் வராதது பெரிய குறை.

இலக்கிய ஆய்வைப் பொறுத்த வரை இரண்டு நிலைகள் காணப்படுகின்றன: 1. இலக்கிய ஆய்வு, 2. இலக்கியம் பற்றித் தமிழில் காணப்படும் தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு. ஒப்பு நோக்கில் பொருளதிகாரத்தைப் படித்ததால்தான், மலையாள ஆங்கிலப் பேராசிரியரான ஐயப்பப் பணிக்கர் தொல்காப்பியத் திணைக் கோட்பாடு உலகளாவியது என்று மலையாள இலக்கியத்துக்கும் ஆங்கில இலக்கியத்துக்கும் பொருத்திக் காட்டித் திராவிட மொழி ஒப்பிலக்கிய ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் வாதிட்டுள்ளார். (1984-85 : 45)[9]

'அவை அண்மையில் பம்பாய் இந்தியன் தொன்மை (*Bombay Indian Antiquary*) என்ற இதழில் வட இந்தியாவைப் பற்றி வரும் கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. அதே முறையில் தென்னிந்தியர்கள் அதே விமர்சன, விழிப்பான உணர்வுகளை வளர்த்துக்கொண்டு அதுவரை கவனிக்கப்படாத தங்கள் நாட்டுக்கே உரிய இலக்கிய முயற்சியில் ஈடுபட்டால் வெற்றி பெறுவார்கள் என்று நம்புவதாகக்' குறிப்பிட்டுள்ளார் (மேலது 2 வது பாரா)'.

அது தமிழர்கள் ஊக்கம் பெறுவதற்குத் தூண்டும் செய்தி. ஆனாலும் அது இன்றும் தொடர்கிறது. வட இந்தியர்கள் உலகப் புகழ் பெற்ற அளவுக்குத் தென்னிந்தியர்கள் உலகப் புகழ் பெறவில்லை என்பது உண்மையே. கால்டுவெல் கூறிய தென்னிந்தியர்கள் பற்றி அறிவு சார் குறைகளை நீக்கிக் கொண்டு இலக்கண, இலக்கிய வரலாற்று அதிகம் ஈடுபட வேண்டும் என்றவை அவரது எதிர்ப்பார்ப்பும் அதில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் அவை கால்டுவெல் ஒரு திராவிட மொழி ஆய்வாளர் என்பது மட்டும் அல்லாமல், தான் ஆய்வு மேற்கொண்ட மொழிச் சமூகமும், மரபு முறையிலிருந்து மாறுபட்டு உலகளாவிய ஆய்வு முறைகளைப் பின்பற்றி அந்த ஆய்வில் இன்னும் தீவிரமாக ஈடுபட்டு வெற்றி பெற வேண்டும், வெற்றி பெறுவதற்கான திறமை உள்ளுக்குள் பொதிந்துள்ளது என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளது சமூக உணர்வுடைய ஒரு பேரறிஞர் என்பதைப் புலப்படுத்துகிறது.

மொழி வளர்ச்சி நிலை

நூலின் முன்னுரையில் திராவிட மொழிகளைப் பற்றித் தனித்தனியே விளக்கிவிட்டு இலக்கியம், இலக்கணம் ஆகியவை பற்றிப் பொதுக் கேள்விகளை எழுப்பிச் சில கருத்துகளைக் குறிப்பிட்டுள்ளது அவருடைய அறிவாழத்தைப் புலப்படுத்துவதோடு ஒப்பிலக்கண ஆய்வின் பல பரிமாணங்களை வெளிக்கொணர்ந்துள்ளதும் ஆகும். அதாவது இந்திய மொழிகளின் இலக்கிய உருவாக்க நிலையை விளக்குவதால் கால்டுவெல்லின் பரந்துப்பட்ட இலக்கிய அறிவு, இலக்கிய சமூகவியல் அறிவு ஆகியவைகளையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. சுருங்கச்சொன்னால் ஒப்பிலக்கண ஆய்வுக்கு வித்திட்டு, நன்றாகப் பயிர் செய்ததோடு, ஒப்பிலக்கிய ஆய்வுக்கும் அடித்தளம் அமைத்த கால்டுவெல்லின் புதிய முகம் புலனாகிறது.

முதலில் எந்த மொழி தொல் திராவிடத்தைப் பிரதிநிதிப்படுத்துகிறது என்ற பெருந் தலைப்பில் *(Which language or Dialect best represents the primitive condition of the Dravidian language?)*, திராவிட மொழிகளின் இலக்கிய அல்லது செவ்வியல் கிளைமொழிகள், அவை எவ்வளவு தூரம் மொழியின் தொன்மைக் கால நிலையைப் பிரதிநிதிப்படுத்துவதாக எடுத்துக் கொள்வது *(Literary classical dialects of the Dravidian Languages: To what extent may they be regarded as representing the primitive condition of those Languages?)* என்ற முதல் உள் தலைப்பு உண்மையில் பழங்காலத்தில் இலக்கியத் தகுமொழி உருவான முறைகளைப் பொதுநிலையிலும் திராவிட மொழிகளின் இலக்கியத் தகுமொழி உருவான முறைகளையும் சுருக்கமாகவும் விளக்குகிறது. இதைப் பொதுவாகத் தகுமொழி உருவாக்க முறையில் ஒப்பாய்வு என்று குறிப்பிடலாம்.

இலக்கிய மொழியாக உருவாகும்போது பொதுவாக, வழக்கு மொழியிலிருந்து மாறுபட்டு சொற்களஞ்சியமும் இலக்கணமும் வேறுபட்டு காணப்படுவது எல்லா இந்திய மொழிகளின் குறிப்பிடத் தகுந்த பொதுப் பண்பு அது ஆரிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் பொருந்தும் (ப.78)[10] என்பதைப் பொதுக் கோட்பாடாகக் குறிப்பிட்டு முதலில் ஆரிய மொழிகள் பற்றியும் பின்னர் திராவிட மொழிகள் பற்றியும் விளக்குகிறார்.

ஆரிய மொழிகளில் சமஸ்கிருத மொழிக்கும் பிராகிருத மொழிகள், தற்கால வட இந்திய மொழிகள் ஆகியவைகளுக்கும் உள்ள உறவு ஐரோப்பாவின் இறந்த மொழிகளுக்கும் அவைகளில் தோன்றிய இன்று வழங்கும் ஐரோப்பிய மொழிகளுக்கும் உள்ள உறவிலிருந்து மாறுபட்டது. இறந்த மொழிகளாகக் கருதப்படும்

ஐரோப்பிய மொழிகள் பழங்காலத்தில் பேச்சு வழக்கில் இருந்துள்ளதோடு அவை பேசியவாறே எழுதப்பட்டு வந்தன என்பதற்கு டெமாஸ்தெனிஸ், பேச்சுகள் நல்ல சான்று. அவைகளை இறந்த மொழி என்று கூறுவதற்குக் காரணம் இன்று அவை பழங்காலத்தில் பேச்சு வழக்கில் இருந்து இன்றைய வழக்கில் இல்லை என்பதுதான்.

வட இந்தியாவைப் பொறுத்த வரையில் சமஸ்கிருதம் இறந்த மொழி என்று முறையாகக் கூறமுடியாது. உத்தேசமாக எந்தக் காலத்திலும் அதாவது மிகப் பழங்காலத்திலும் கூட சமஸ்கிருதம் இந்திய ஆரியர்களின் -இனத்தின் பகுதியின் மொழியாக இல்லாமல், குறிப்பிட்ட வகுப்பாரின் அதாவது பாணர்கள், பூசாரிகள், இலக்கியவாதிகளின் பேச்சு மொழியாக இருந்து, குறிப்பாக முதல் காலகட்டத்தில் இலக்கிய மொழியாக நீண்ட காலம் வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். காலஞ் செல்லச் செல்ல மொழியில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. வேத மொழியிலிருந்து புராணங்களின் மொழியில் மாற்றம் காணப்படுகிறது. பழங்கால சமஸ்கிருத மொழியே மெல்ல மெல்ல திருத்தம் பெற்றிருக்க வேண்டும். பின்னர் சமஸ்கிருதம் பழமைவாதிகளின் பல்வகையான பழமை கருத்துகளைப் புலப்படுத்தவல்ல மொழியாகக் கருதப்பட்டு வந்தது.

கி.மு.ஆறாம் நூற்றாண்டில் புத்தர் தன்னுடைய கருத்துகளை மக்களிடம் கொண்டுசெல்லப் பேச்சு மொழியையே (அதாவது பிராகிருதம்) கையாண்டார். ஆனால் அதுவே புத்த மதத்தினரின் வேத மொழியாகக் கருதப்பட்டபிறகு பின்னால் வந்த புத்த மத அறிஞர்கள் அந்த மொழியில் மாற்றம் ஏற்படுத்துவதில் தயக்கம் காட்டினார்கள். புத்தர் கால மொழியே புத்த சமய மொழி ஆகிவிட்டது' (ப. 78-79).

அது கால்டுவெல்லின் பரந்த மொழி அறிவின் புலப்பாடு. அதாவது பேச்சு மொழியாக இருந்தது கூட சமய நோக்கில் முக்கியத்துவம் பெற்றுவிட்டால் அதில் இயற்கையாக நடைபெறும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளாமல், சமய மொழியே செவ்வியல் தகுதி பெற்றுவிடுகிறது. அதாவது சமய வழிப்பட்ட மொழி உணர்வு, மொழிநிலையில் ஏற்படும் தாக்கத்தைப் புலப்படுத்துகிறது. மொழி வரலாற்றில் இலக்கிய மொழி உருவாக்க நிலை, இலக்கிய மொழி வளர்ச்சி ஆகியவைகளைப் பொதுமைப்படுத்தியது சிறப்பானது.

இதே முறையில் திராவிட மொழிகளும் அமைந்திருப்பதாகக் கூறியதில் மலையாளம், தமிழ் என்ற இரண்டு மொழியின் கருத்துகள் விவாதத்துக்கு உரியவை.

'தென்னிந்தியாவிலும் இந்த நிலை காணப்படுகிறது. நாலு திருந்திய திராவிட மொழிகளிலும் இலக்கியச்செவ்வியல் கிளைமொழி என்றும் பரவலான பொது மக்கள் மொழி என்றும் பிளவு ஏற்பட்டது. கன்னடத்தில் செவ்வியல் மொழி பழங்கன்னடம் (ஹள கன்னடா) என்று அழைக்கப்படுகிறது. உண்மையில் அது பழைய மொழியும் இல்லை, புதிய மொழியும் அல்ல, இலக்கிய மொழி என்று கூறுவதே பொருந்தும். கேசவரின் இலக்கணம் (கேசி ராஜாவின் சப்த மணி தர்ப்பனா) எழுதப்பட்ட 12 ஆம் நூற்றாண்டிலிருந்து இலக்கியம் எழுதப்பட்ட மொழி என்பதே பொருந்தும். அது இன்று வரை தொடர்கிறது.

மலையாள மொழியைப் பொறுத்த வரையில் பழைய மலையாளம் என்று சொல்வது பொருந்துவது போலக் கன்னட மொழியில் பழைய கன்னடம் என்பது பொருந்தாது. ஏனெனில் அதில் வழக்கில் இல்லாத சொற்கள் அதிகம். மலையாளத்தில் தற்கால மலையாளம் வடமொழி தாக்கம் அதிகம் பெற்றிருக்கப் பழைய மலையாளம் பழமையான செவ்வியல் மொழியின் தாக்கம் அதிகம் பெற்றுள்ளது. தெலுங்கின் கவிதை மொழி அன்றாட மக்கள் மொழியிலிருந்து அதிகம் மாறுபட்டாலும் அதற்கு எனத் தனிப்பெயர் எதுவும் இல்லை. அதைத் தெலுங்கு மொழி அறிஞர்கள் தூய உயர்த்தப்பட்ட (elevated) மொழி என்று கருதுகிறார்கள்' (ப.80) என்பது அவருடைய கருத்து.

இந்தக் கருத்துகள் பொது நிலையில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தவையே. ஆனாலும் மலையாள மொழி வரலாறு ஆசிரியருக்குப் பரிச்சயம் ஆனதால், அது பற்றி சில விளக்கங்கள் தரப்படுகின்றன.

பழைய மலையாள இலக்கியத்தில் பாட்டு, மணிப்பிரவாளம் என்று இரண்டு இலக்கிய வகை இருப்பது இப்போது தெளிவாகியுள்ளது. பாட்டு என்பது ஒரு இலக்கிய வகை. அது இடைக்கால தமிழ்க் கூறுகளையும் மலையாள மொழியின் சிறப்புக் கூறுகளையும் உடையதாகக் கருதப்படுகிறது. மாறாக, மணிப்பிரவாளம் என்ற இலக்கிய வகை வட மொழி தாக்கம் அதிகம் உடையது. அதன் உச்சக் கட்டம் வடமொழியின் இலக்கணக் கூறுகளைக் கூட கையாளும் உரிமை கொண்டது என்பதுதான். அதனால், தமிழின் வட்டெழுத்து வடிவத்தைக் கையாண்டுவந்தவர்கள் 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு ஆரிய எழுத்து என்ற புதிய எழுத்து வகையே ஏற்படுத்திக்கொண்டார்கள். 17 ஆம் நுற்றாண்டில் துஞ்சத்து எழுத்தச்சன் என்ற கவிஞர் மலையாளத்துக்கு என ஒரு ஒருங்கிணைந்த மொழி நடையை உருவாக்கியவர் என்று பொதுவாகக் கருதப்படுகிறார்.

தமிழ் பற்றிய கால்டுவெல் கருத்து

1. 'இலக்கியக் கிளைமொழிக்குத் தமிழில் கொடுக்கப்பட்ட பெயர் பொருத்தமானது தான். அது செந்தமிழ் என்று அழைக்கப்படுகிறது. அதாவது செவ்வியல் (*Classical*) அல்லது சரியான (*correct*) தமிழ் என்பது. அதன் பொருள் நேரான தமிழ் (*straight Tamil*).

2. பொதுமக்களின் பேச்சு மொழியிலிருந்து மாறுபட்டது என்பதோடு, தமிழ் இலக்கணங்களில் வளைந்த (*crooked*) தமிழ் என்ற பொருளில் கொடுந்தமிழ் என்ற பொதுப் பெயரால் குறிக்கப்படுகிற 12 திருந்தாத உள்நாட்டு கிளைமொழிகளிலிருந்து (*rude local dialects*) மாறுபட்டது.

3. ஐரோப்பியர்களால் இலக்கிய மொழிக்குப் கொடுக்கப்பட்ட பெயர் உயர் (*High*) தமிழ் என்பது. அந்தப் பெயர் கன்னடர்களால் அவர்களின் இலக்கிய மொழிக்குக் கொடுக்கப்பட்ட பெயரைவிட மிக பொருத்தமான பெயராகத் தோன்றுகிறது.

4. ஒவ்வொரு இலக்கிய மொழியும் பழைய மொழி என்று கூறுவது பொருந்துமாயினும், அவைகளின் சிறப்புத் தன்மை செம்மைப்படுத்தமும். அழகுபடுத்தப்பட்டதும் (*polish and refinement*) ஆகும். பழைய பிராகிருத மொழிக்கும் தற்கால கௌரியன் உள்நாட்டு மொழிகளுக்கும் (*Modern Gaurian vernaculars*) சமஸ்கிருத மொழிக்கும் (அதாவது இந்திய ஆரிய மொழி மொழியின் செவ்வியல் மொழி) உள்ள உறவே, செவ்வியல் தமிழுக்கும் பொதுமக்களின் பேச்சுத் தமிழுக்கும் உள்ள உறவு.

5. தற்பொழுது கிடைக்கும் மிகப் பழமையான இலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்தில் கூட, தற்காலப் பேச்சு மொழிக்கும் இலக்கிய மொழிக்கும் உள்ள வேறுபாடுகளைப் போலவே இலக்கிய மொழிக்கும் அந்தக் கால பேச்சு மொழிக்கும் வித்தியாசங்கள் இருந்திருக்க வேண்டும்.

6. மிகவும் விரிவாகச் செம்மைப்படுத்தப் பட்ட இனிமைப்படுத்தப்பட்ட மொழி நடை எந்தக் குழு மக்களின் பேச்சு மொழியாக ஒரு காலும் இருந்திருக்கமுடியும் என்று நினைத்துப்பார்க்க முடியவில்லை.

7. பழைய இலக்கியங்கள் பழைய வடிவங்களைப் பெற்றிருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இலக்கிய வழக்கு தொடங்கிய கட்டத்தில் கொச்சை வழக்காகக் கருதப்பட்ட வடிவங்கள் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டன.

8. பொது மக்கள் மொழியில் இலக்கியத் தமிழுக்கு இணையான சில கூறுகளில் இலக்கிய மொழியைவிட பழமையான கூறுகள் இருக்கலாம். இருந்தாலும் இரண்டுக்கும் முக்கியமான வேறுபாடு இருப்பது கவனத்துக்கு உரியது.

9. ஒரு சொல்லின் தொன்மைக்குச் சான்று அது பேச்சு மொழியில் காணப்படுகிறது என்ற வாதம் பொருந்தாது.

10. ஒரு சொல் அல்லது அதன் வடிவம் இலக்கியத்தில் குறிப்பாக இலக்கணங்களில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அந்த சொல் அல்லது அதன் வடிவம் அந்த காலத்தில் இருந்து அதாவது குறைந்தது 1000 ஆண்டுகளுக்கு முன் இருந்திருக்க வேண்டும் என்பது உறுதி ஆகிறது. மேலும் அதன் தொன்மைக்கு இன்னொரு கருதுகோளும் உதவியாக உள்ளது.

11. எல்லாக் கவிஞர்களும் குறிப்பாகப் பழங்காலக் கவிஞர்களும் அவரவர் காலத்தில் தொன்மையாகக் கருதப்பட்ட வடிவங்களே கவிதை பொருத்தமானது என்று கருதும் பண்பு உடையவர்கள்' (ப. 80-81) என்பது அவரது கருத்து. (விவாதத்தில் குறிப்பிடுவதற்காக எண் கொடுக்கப்பட்டுள்ளது) அவைகளை அ. செந்தமிழ்/ கொடுந்தமிழ் என்ற சொற்களின் பயன்பாடு. ஆ. இலக்கிய மொழி உருவாக்கம். இ. கவிஞர்களின் மொழி உணர்வு என்று பொதுமைப்படுத்தலாம். அவை ஒவ்வொன்றாக விளக்கப்படும்.

முதல் கருத்தான செவ்வியல் இலக்கிய மொழிக்குச் செந்தமிழ் என்றும் இரண்டாவது கருத்தான பேச்சு மொழிக்கு கொடுந்தமிழ் என்றும் பெயர் கொடுக்கப்பட்டது என்பது விவாதத்துக்கு உரியவை. ஏனென்றால் அவை இடைக்கால உரையாசிரியர் வழக்கு. தொல்காப்பியர் 'செந்தமிழ்' என்ற சொல்லை மட்டுமே அதுவும் அடைச்சொல்லாக அதாவது 'செந்தமிழ் நிலம்' என்ற தொடரை மட்டுமே கையாண்டுள்ளார்.

தொல்காப்பியர் 'செய்யுள் ஈட்டச் சொற்களாக' இயற் சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று நாலு வகையைக் குறிப்பிட்டு (எச்சம்.1) அவை ஒவ்வொன்றுக்கும் விளக்கமும் அளித்துள்ளார். 'இயற்சொல்' என்பது இன்று தகுமொழியாகக் கருதப்படுகிறது. அதை விளக்கும்போதான் 'செந்தமிழ் நிலத்து வழக்கு' என்றும், மொழி அமைப்பு நோக்கில் 'தம் பொருள் வழாமை இசைப்பது' என்றும் குறிப்பிட்டுள்ளார் (எச்சம்.2). உரையாசிரியர்களிடையே தமிழகத்துக்குள் 'செந்தமிழ் நிலம்' எது என்று அடையாளம் காணுவதில் கருத்து வேறுபாடு இருந்தாலும், அது இன்று பாண்டிய நாடு என்று அடையாளம் காணப்பட்டது

பலராலும் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதாவது பாண்டிய நாட்டு வழக்கே தமிழகம் முழுவதும் தகு வழக்காகக் கருதப்பட்டது என்று பொருள். மொழி அமைப்பு நோக்கில் சொல்லின் பொருள் மாறுபடாமல் வழங்குவது என்று கூறுவது முழுமையானதாகக் கொள்ள முடியாது இன்று கருதப்படுகிறது (முழு விளக்கத்துக்கு சண்முகம் 1984 (2004: 58தொ. பார்க்கவும்). தொல்காப்பியர் திசைச்சொல் என்று கூறியது வட்டாரக் கிளைமொழி என்றும் அது 'செந்தமிழ் நிலம் சேர்ந்த பன்னிரு நிலம்' என்று கூறியது, தமிழகத்தில் பாண்டிய நாடு நீங்கிய வட்டாரங்கள் (சோழ நாடு, தொண்டை நாடு போன்றவை) என்று கருதப்படுகிறது. அவைகளை அடையாளம் காணுவதிலும் கருத்து வேறுபாடு காணப்படுகிறது (பார்க்க, சண்முகம், 1984 (2004: 78 தொ.). ஆனாலும் தொல்காப்பியர் திசைச்சொற்களையும் செய்யுள் ஈட்டச் சொற்களாகக் குறிப்பிட்டுள்ளதால், அவையும் தேவையும் சூழலும் கருதி இலக்கிய மொழியாகக் கையாளப்படலாம் என்பதால், கால்டுவெல் கருத்தான திசைச்சொல் என்பது கொடுந்தமிழ் என்றதும் அவர் கூறிய அதன் பயன்பாடும் விவாதத்துக்கு உரியதாகிவிடுகிறது.

மேலும் தொல்காப்பியர் ஒலி, எழுத்து, சொல், தொடர் ஆகிய பல நிலையிலும் மாறுபட்ட வழக்குகளை உறழ்ச்சி என்று குறிப்பிட்டுள்ளாரே தவிர, அவைகளில் உயர்வு தாழ்வு கற்பிக்கவில்லை. மேலும் தொல்காப்பியர் எழுத்து, சொல் அதிகாரங்களில், 'வழக்கு' (பேச்சு வழக்கு), 'செய்யுள்' (இலக்கிய வழக்கு) என்று வேறுபடுத்திக் காட்டியிருப்பது கவிதை மொழியின் சிறப்புப் பண்புகளாகக் கருதப்படுகிறது. அவை 'விகாரம்' என்ற முறையில், கருத்தாடல் உத்தியாக அமைந்தனவே (சண்முகம், 2012).

நன்னூலாரும் 'செந்தமிழ்' (இயற்சொல் சூத்திரம்) , 'செந்தமிழ் நிலம்' (திசைச்சொல் சூத்திரம்) என்ற தொடர்களைத் தான் பயன்படுத்தியுள்ளார். ஆனால் நன்னூல் உரையாசிரியரான மயிலைநாதர்தான் (13ஆம் நூற்) (சூ. 272) திசைச் சொல்லை விளக்கும் சூத்திர உரையில் 'தமிழ் ஒன்றே இப் பதின்மூன்றுபாலும் அடங்கும் பட்டது என்க. அவற்றுள்ளும் ஒன்று செந்தமிழ் என்றும், அல்லன கொடுந்தமிழ் என்றும் கூறப்படும்' என்று கூறியுள்ளதால் திசைச்சொல் கொடுந்தமிழ் என்று அழைக்கப்பட்டது இடைக் கால வழக்கு என்பது புலனாகும். 18 ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர் லத்தீன் மொழியில் தன்னுடைய தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றின் தலைப்பு கொடுந் தமிழ் எனப்படும் பொது மக்கள் மொழியின் இலக்கணம் என்றும் (*A Grammar of the common dialect of the Tamil language called*

Koduntamil, 1728) என்றும் இன்னொன்றுக்கு தமிழின் உயர்வழக்கு மொழியின் இலக்கணம் என்றும்(*A Grammar of the High dialect of the Tamil language termed Shen Tamil, 1730*) என்றும் தலைப்புகள் கொடுத்திருப்பதே கால்டுவெல்லுக்கு வழிகாட்டி.

ஐரோப்பியர்கள் உயர் தமிழ் என்று கொடுத்தது (3 வது கருத்து) இந்த அடிப்படையில்தான். இருபதாம் நூற்றாண்டில் தமிழ் பேச்சு வழக்கும் எழுத்துக்கும் அதிகம் மாறுபட்டுள்ளதைத் தமிழக அறிஞர்களும் (ரா.பி. சேதுப்பிள்ளை, முத்து சண்முகம் பிள்ளை) விளக்கினாலும் அதற்குப் பெர்சூசன் (*Ferguson, 1964*) என்ற அமெரிக்க மொழியியலார் ஒரு இரட்டை வழக்கு மொழி (*Diglossia*) என்று பெயர் கொடுத்து, கிரேக்கம், அராபிக், தமிழ் போன்ற மொழிகளை உதாரணங்களாகக் காட்டி விளக்கியுள்ளார். அந்தக் கருத்தின் ஆணி வேர்தான் கால்டுவெல் கருத்து. ஆனால் பழந் தமிழ் காலத்திலேயே அந்த நிலை இருந்திருக்கவேண்டும் என்று கால்டுவெல் கூறுவதுதான் (5 வது கருத்து) விவாதத்துக்கு உரியது.

கொடு என்பது வளைந்தது (கொடுவாள் என்ற தொடரிலும் அதே பொருள்) என்றும் செம் என்பது நேரானது என்றும் கால்டுவெல் விளக்கிய பொருள் சரியானதே. அவைகளின் உள்கிடை என்ன ? செந்தமிழிலிருந்து மாறுபட்ட தமிழ் அதாவது இலக்கிய தமிழிலிருந்து பேச்சு மொழி திரிந்து உண்டானது என்று பொருள். அப்படியானால் இது 4 வது கருத்தான பேச்சு மொழியின் செம்மைசெய்யப்பட்ட திருந்திய வடிவம் (*polish and refinement*) என்பது முரணே ஆகும். இதன்படி பேச்சு மொழியிலிருந்து செவ்வியல் உருவாக்கப்பட்டது என்று ஆகும்.

ஒப்பிலக்கண ஆய்வு தோன்றிய பிறகு மொழி வரலாறு என்பது சான்றாதார வரலாறு (*recorded History* - அதாவது அந்த மொழியின் மிகப் பழைய எழுத்துச் சான்றாதார காலத்திலிருந்து இன்று வரை உள்ள மொழி அமைப்பில் ஏற்பட்ட மொழி அமைப்பு மாற்றத்தின் வரலாறு) , தொல் வரலாறு (*Pre History*, அதாவது அந்த மொழிக் குடும்பத்திலிருந்து தனி மொழியாக பிரிந்த வரலாறு அதாவது பிரிய காரணமான மொழி மாற்றங்கள்) ஆதி வரலாறு (*Proto history*) மொழிக் குடும்பத்தின் தொல் வரலாறு என்று மொழி வரலாறு மூன்று நிலையில் ஆராயப்படுகின்றன.

தமிழில் இரண்டு நிலையிலும் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன (மீனாட்சிசுந்தரம், 1965, சண்முகம், 1969, 1971). மிகப் பழைய எழுத்துச் சான்று தமிழ் பிராமி கல்வெட்டு மொழிக்கும் தொல்காப்பியம்

சங்க இலக்கிய மொழிக்கும் நிறைய வேறுபாடுகள் காணப்பட்டாலும், சில கூறுகளில் தமிழ் பிராமி கல்வெட்டு மொழி பழமையானது என்று கண்டறியப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தைப் பொறுத்த வரையில் மொழி உறழ்ச்சிகளாகக் கூறியவைகளில் சேர நாட்டு வழக்கு பதிவு செய்துள்ளதை அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். உதாரணமாக பணி,(உயிர் மயங்கு. 19) வளி, (40) மழை (85) , வெயில் (புள்ளிமயங்கு. 82) ஆகிய சொற்கள் ஏழாம் வேற்றுமையில் 'அத்து, இன்' என்ற இரண்டு சாரியைகளை ஏற்று வரும் என்று கூறியதில் தமிழ் இலக்கியங்களில் 'இன்' மட்டுமே வர மலையாள மொழியில் அத்து சாரியை பரவலாக வழங்குவது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியர் நிபந்தனை எச்சமாக 'செயின்' என்ற வாய்பாட்டு வடிவத்தை மட்டும் கூற, சங்க இலக்கியத்தில் 'செய்தால்' என்ற வாய்பாட்டு வடிவமும் பயின்றுள்ளன. அவை போன்றவை கொச்சை வழக்குகளாகக் கருதப்படவில்லை. எனவே, வட்டாரக் கிளைமொழி, கொடுந்தமிழ் என்பவை மாறுபட்ட கருத்தமைவுகள்.

இலக்கிய வழக்கு மொழி அதாவது தகு வழக்குகூட காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளது அறியத் தகுந்தது. அதாவது அந்த மொழிச் சமூகத்தின் அரசியல், சமூகப் பொருளாதார மாறுபாட்டு ஏற்ப காலந்தோறும் தகுமொழியின் வட்டாரமும், சமூகமும் மாறுபடும் என்று இப்போது உணரப்பட்டுள்ளது. சங்க காலத்தில் பாண்டிநாட்டு வழக்கும் இடைக்காலத்தில் சோழ நாட்டு வழக்கும் தகுமொழிகளாக இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது (சண்முகம்,1989).

தொல்காப்பிய மொழி சில கூறுகளில் பழமைக் கூறுகளை உடையது ஆனாலும், அவை ஒரு கிளைமொழி வழக்காகக் கருதலாம் என்பதும் சுட்டிக்காட்டத்தகுந்தது. உதாரணமாகச் சகரம் சொல்லுக்கு முதலில் வராது என்று தொல்காப்பியம் கூறியதற்கு மாறாக சங்க இலக்கியத்தில் சில சொற்கள் வந்தாலும் அவைகளை ஒப்பிலக்கண நோக்கில் ஆராயும் போது சில சொற்கள் வட்டார அல்லது சமூக வழக்குச்சொற்களாக இருந்திருக்கவேண்டும் என்று முடிவுக்கு வர வேண்டியுள்ளது (சண்முகம், 1989 (2009 : 127 தொ.) அதாவது சகடம், சண்பகம், சந்தனம், சமை போன்ற சொற்கள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டாலும் அவை தமிழ்ச் சொற்கள் ஆனதால் கிளைமொழி வழக்குகளாக இருந்து இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது. சண்பகம் என்பது செண்பகம் என்றும் சந்தனம் என்பது சாந்து என்றும் சமை என்பது அமை என்று தகுமொழி வழக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று

கருதவேண்டியுள்ளது. எனவே அவருடைய 6,7,8வது கருத்துகளும் விவாதத்துக்கு உரியவைகளாக அமைந்துள்ளன.

பொதுவாக ஒரு மொழியின் வரலாற்றுத் தொன்மை என்பது அந்த மொழிக்கு கிடைக்கும் எழுத்துச் சான்று அடிப்படையில் அமைந்தது. அந்த முறையில் திராவிட மொழிகளில் தமிழே வரலாற்றுப் பழமையான மொழி என்ற கருத்தில் வேறுபாடு இல்லை.

ஆனால் தமிழில் வழங்கும் பெரும்பான்மையான வடிவங்களும் வரலாற்று பழமை உடையனவாக அமைந்தும், சில வடிவங்கள் தொல் வடிவங்களாகக் கொள்ளமுடியாது என்று திராவிட மொழி ஒப்பாய்வு புலப்படுத்தியுள்ளது குறிப்பிடத் தகுந்தது. உதாரணமாகத், தமிழில் செய், சென்னி, சிதல், சில போன்ற சொற்களின் வடிவம் சங்க காலத்திலிருந்து வழக்கில் இருந்தாலும் ஒப்பாய்வு நோக்கில் அவை முறையே கெய் (DED. 1628) , கென்னெ (DED 1655) கெதில் கெல (DED. 1308) என்பவையே தொல்வடிவங்களாக் கருதப்படுகினறன (ப.152). சங்க இலக்கியத்திலே கை என்ற வடிவம் செய் என்ற பொருளில் ('காமந் தருவதோர் கைதாழ்ந் தன்றே' = மெய்யுறு புணர்ச்சியைத் தருகிறி செயலில் தங்கியது (குறுந். 308.7), கையறுநிலை என்ற இன்னொரு சொல் செயலற்ற நிலை என்ற பொருளில் சங்க காலத்திலேயே வழங்குவதும் அதை உறுதி செய்கிறது.

ஒன்பதாவது கருத்தைப் பொறுத்த வரையில் தொல்காப்பியரே சில தொல்வழக்கு வடிவங்களைக் குறிப்பிட்டு அவை செய்யுள் வழக்கு என்று கூறியிருப்பது அறியத்தகுந்தது.

தொல்காப்பியரே 'இன்றி' என்ற வினையெச்சம் 'இன்று' என்று வழங்கப்படுவதை 'தொன்றியல் மருங்கின் செய்யுளுள்' (உயிர் மயங்கியல். 35) வழங்குவது என்றும், முன் + இல் > முன்றில் என்று வழங்குவது 'தொல்லியல் மருங்கின் மரீஇய மரபு' (புள்ளி மயங்கு. 60) வடிவம் ஆகும் என்று கூறியுள்ளது கவிதையில் தொல்வழக்கு வழங்கப்படுவதற்கு இலக்கணச் சான்று ஆகும் , மேலும் 'பொன்' என்பதன் செய்யுளில் 'பொலம்' என்று வழங்கப்படுவதைச் 'செய்யுள் மருங்கில் தொடரியல்' என்றும் (புள்ளி மயங்கு 61) என்றும் இரண்டாம் வேற்றுமை உருபாக ஐகாரத்துக்குப் என்பதற்குப் பதிலாக 'அம்' என்ற வடிவம் 'சிவணும் செய்யுளுள்ளே' (வேற்றுமை மயங்கு. 25) என்று கூறியதும் தொல் வடிவங்களே. ஏனெனில் 'பொன்' என்பதன் தொல் வடிவம் 'பொலம்' என்பதே. போலும் என்பது போன்ம் என்று

மாறும் என்று தொல்காப்பியரே கூறியபடி (மொழி மரபு.18) பொலம் என்பது பொன் என்று மாறியதாகக் கொள்ளலாம். இரண்டாம் வேற்றுமை உருபாக ஐகாரம் சங்க காலம் முதல் இன்று பெரு வழக்காக இருக்கிறது. ஆனால் ஒப்பாய்வு நோக்கில் அது தமிழிலும் மலையாளத்திலும் மட்டும் காணப்படப், பிற திராவிட மொழிகளில் அம்/ அன் என்பதே காணப்படுவதால் பின்னதே தொல் வடிவம் என்பார் கால்டுவெல் (ப 275). இன்றும் அந்த மீட்டுருவாக்கம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது (சண்முகம், 1971). அவைகளையும் தொல் வழக்குகளாகக் கருதப்பட வேண்டும். அதுபோலச் சங்க இலக்கியத்தில் காணப்படும் நால்கு (நான்கு), வையக்கு (வையத்திற்கு), நிலக்கு (நிலத்திற்கு) போன்றவையும் தொல் வழக்குகளே. பாரதியார் கவிதையிலும் பல தொல்வழக்கு வடிவங்கள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன (சண்முகம், 2000 (2009:121). எல்லாக் காலக் கவிதைகளிலும் தொல் வழக்கு வடிவங்கள் காணப்படுவதை ஒட்டி மொழியியல் இலக்கியத் திறனாய்வில் கவிதை மொழியின் ஒரு சிறப்புக் கூறாகத் தொல் வழக்குகள் (*Archaic forms*) கருதப்படுகின்றன (சண்முகம் , 2012). ஆனால் இதற்காகக் கவிஞர்கள் தொல் வழக்குகளை விரும்புவார்கள் என்பது தீவிர வாதம் ஆகும்.

அந்த நோக்கில் பார்க்கும்போது இன்னொரு வரலாற்று உண்மையும் குறிப்பிடத்தகுந்தது. சங்க இலக்கியத்தில் பயின்றுள்ள எல்லா வடிவங்களும் காலத்தால் பழமை உடையவாகக் கொள்ளமுடியாது. இதில் வேடிக்கை என்னவென்றால் மொழி பேசும் எல்லா மக்களும் தினந்தோறும் பயன்படுத்தக் கூடிய முன்னிலைப் பன்மைச்சொல்லின் சங்க கால வடிவமான நீயிர் (அதன் திரிந்த வடிவம் நீர்) ஒப்பிலக்கண நோக்கில் தொல் வடிவம் இல்லை. இடைக்காலத்தில் கையாளப்பட்ட நீம் (அதன் இரட்டைப் பன்மை வடிவமான நீங்கள்) என்பதே வரலாற்று பழமை வடிவம் என்பது ஒப்பிலக்கணம் காட்டும் உண்மை (சண்முகம். 1971). இங்கு இரண்டு உண்மை புதைந்துள்ளன. சங்க கால தகு வழக்கு, தொல்காப்பியர் மொழியில் இயற் சொல் வழக்கும் இலக்கிய வழக்கும் வேறுபட்டது. ஆனாலும் அது பேச்சு வழக்காகச் சில வட்டாரத்திலும் சில குழுக்களிடம் பேச்சு வழக்கில் இருந்ததே இடைக்காலத்தில் இலக்கிய வழக்காக மாறிப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அதாவது இடைக்காலத் தகுவழக்கு மாறிவிட்டது. அதற்கு இன்னும் நிறைய உதாரணங்கள் உண்டு.

முடிவுரை

காலந்தோறும் புதிய சிந்தனைகள் தோன்றுவதாலும், புதிய தரவுகள் கிடைப்பதாலும் முன்னோர் சொன்ன சில கருத்துகள் மாறுபடுவது உலகு எங்கும் காணப்படுவதே. கால்டுவெல் திராவிட மொழி ஒப்பிலக்கணத்தைத் தாண்டி, பொதுவாகத் திராவிட மொழி அறிஞர்கள் பற்றிக் கூறியது இன்று பின்பற்ற வேண்டிய உண்மையே. திராவிட மொழிகளின் மொழி உணர்வு, இலக்கிய மொழிகள் பற்றியும் கூறியவை புது ஆய்வுக் களத்தின் தோற்றுவாய் என்ற முறையில் பாராட்டுவதற்கு உரியதே.

அடிக் குறிப்புகள்

1. *"I have thought , more, however, of the requirements of the natives of than those of foreigners. It has been my earnest and constant desire to stimulate the natives of the districts in which Dravidian languages are spoken to have intelligent interest in the comparative study of their own languages'.*

2. *"Educated Tamilians have studied Tamil & educated Telugu have studied Telugu& the educated classes in each lanugage & district have studied the language and literature of that District with an earnestness and assiduity which are highly creditable to them and which have never been exceeded in the history of any of the languages of the world & except by the earnestness and asssiduity with which Sanskrit has been studied by the Brahmins'.*

3. *"One result of this long &continued devotion to grammatical studies has been the development of much intellectual acuteness ; another result has been progessive refinement of language themselves; and these results have acted and reacted one upon another. Hence it is impossible for any European who has acquired a competent knowledge of any of the Dravidian languages & say Tamil to regard otherwise than with respect the intellectual capacity of a people amongst whom so wonderful an organ of thought has been developed'.*

4. *"On the other hand in consequence of the most exclusive devotion of the native literati to grammatical studies they have fallen considerably behind the educated classes in Europe in grasp and comprehensiveness. What they have gained in acuteness, they have lost in breadth'.*

5. "*If the natives of South India began to take an interest in the comparative study of their own languages and in comparative philology in general, they would find it in a variety of ways much more useful to them than the study of the grammar of their own languages alone ever has been. They would cease to content themseves with the learning by rote versified egimas and harmonious platitudes*'.

6. "*They would begin to discern the real aims of and objects of language and realize the fact that language has a history of its own throwing linght upon all other history, and rendering ethnology and archaelogy possible. They would find that philology studied in this manner enlarged its horizons and provided it with a plentiful store of matters of wide human interest*'.

7. "*I trust the interest taken in thier language, literature, antiquities by foreigners will not be without its effects in kindling amongst the natives of southern India a little wholesome, friendly rivalry. If a fair proportion of the educated native inhabitants of each district were only to apply themselves to the study of philology and archaelogy of thier district with anything like the same amount zeal with which the phiolology and archaelogy of Europe are studied by the Educated Europeans, the result wiould probably be that many questions which are now regarded as insoluable would speedily be solved and that pursuits now generally as barren would be found full of fruit*'.

8 "*Native pundits have never been surpassed in patient labour or in accurate knowledge of details. They require in addition that zeal for historic truth and that power of descrimination as well as of generalization which have hitherto been supposed to be characterisrtic of the European mind*'.

9 "*All the Dravidian Literatures, it is believed, can claim to have to have descended from the common Proto&Dravidian ancestor represented by the Sangam anthologies and thier basic grammatical text, Tolkappiyam*' (*1984&85 : 45*)

10. "*It is remarkable peculiarity of the Indian languages that, as soon as they begin to begin to be cultivated, the literary style evinces a tendency to become a literary dialect distinct from dialect of common life, with a grammar and vocabulary of its own*'. *This is equally characteristic of the speech of the Aryans of the north and of the Dravidian of the south*'. (*P. 78*)

துணையன்கள்

சண்முகம், செ.வை.

1971 Dravidan Nouns (A Comparative study) Annamalai University, Annamalainagar

1984. சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம், முதல் தொகுதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *2008,*

1989. சங்க கால மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், மறு பதிப்பு *2009*

1992, மலையாள மொழியின் முதல் இலக்கணம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

தொல்காப்பியம் முழுவதும் விளக்கவுரை (ப.ஆ) சுப்பிரமணியன்,ச. வே., மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், உ.வே.சா பதிப்பு, *1946.*

Ayyappa Panikkar, 1984&85. "The Nature and scope of Comparative study in South Indian Literature' RESEARCH PAPAERS, Dept of Tamil. Kerala University, Kariavattom, Vol. XIV. Pp. 45&47

Caldwell, R. 1856. A Comparative Grammar of Dravidian or South&Indian Family of Languages, Reprint, Revised 1875. 1913, Reprint, University of Madras,1956.

Ferguson, C.A. 1964. "Diglossia' in Language in Culture and Society (Ed. Dell Hymes) Pp. 429& 39, Allied Publishers, New Delhi.

Meenakshisundaram,T.P. 1965. A History of Tamil lanugage, Deccan college, Pune

A Dravidian Etymological Dictionary (DED.) by Burrow, T & Emeneau, M.B. Oxford. 1961

Subrahmanyam, P.S

1971. Dravidian Verb Morphology, Annamalai University, Annamalainagar,

2008. Dravidian Comparative Grammar & 1 , CIIL, Mysore

4. Dravidian studies from Caldwell to Modern Times (A Survey)

Dr. P.S. Subrahmanyam
Former Director, CAS In Linguistics
Annamalai University

1. Francis Whyte Ellis identified the Dravidian family in 1816, that is just thirty years after Sir William Jones adumbrated for the first time the concept of a language family by identifying the Indo-European family (Ellis called the family 'the dialects of Southern India' but the name 'Dravidian' was coined later by Caldwell). He included Tamil, Malayalam, Kannaḍa, Telugu, Tuḷu, Koḍagu and Malto in the family. Caldwell, rightly called the father of Dravidian comparative grammar, added five other languages to the list, namely Kota, Toda, Gonḍi, Kui and Kuṛux. Thirteen new ones, namely Iruḷa, Kurumba, Baḍaga, Koraga, Konḍa, Pengo, Manḍa, Kuwi, Kolami (with the Naikṛi dialect), Naiki, Parji, Gadaba and Brahui have been added now to those known to Caldwell making the total number twenty-five. The dialects of some of these tribal languages are considered as separate languages by some and this makes the number to go up; there is good justification for considering Koya as a separate language though it is generally considered as a dialect of Gonḍi. In the case of the literary languages, detailed information is now available on their older stages by the analysis of literary works, inscriptions and grammars and on the modern stages including dialects. In the case of non-literary languages, two grammars written in the beginning of the twentieth century, namely the Kui grammar by Winfield (1928) and the Brahui grammar by Bray (1909) have won the appreciation of scholars for their

exhaustiveness. Even in the case of the non-literary languages known from a long time like Toda and Gondi, we have a better understanding of their structure only in recent times. Perhaps Kuṛux remains the much-neglected language with no modern book-length treatment of it. As for the grammar of Kota, we still have to content ourselves with the grammatical sketch provided by Emeneau in his Kota texts (1944-46) in spite of the voluminous texts collected by him. More information should be collected on all non-literary languages with regard to their phonetics, grammar, dialects and folk literature but there is an urgent need for detailed work on Koraga, Naiki, Manḍa and Kuṛux.

13. கொடுக்குவர் (புறம் 182.5), அகழ்க்குவன் (பட். 271), வீழ்க்குவன் (பட். 272), பெயர்க்குவை (மது. 132), கேட்குநர் (குறு. 29.7) முதலான வினைகள் பழந்தமிழில் காணப்படுகின்றன. இவற்றின் வினைப்பகுதிகள் கொடுக்கு, அகழ்க்கு, வீழ்க்கு, பெயர்க்கு, கேட்கு ஆகியவையாகும். கொடுக்கும் கடிக்கும் கேட்கும் விற்கும் முதலான வினைகளின் வினைப்பகுதிகளும் கொடுக்கு, கடிக்கு, கேட்கு, விற்கு என்றே இனங்காணப்படும். இத்தகைய வினைப்பகுதிகள் வல்வினைக்குரியவை. இதனைக் கருத்தில் கொண்டு படிக்கின்றான் என்ற வல்வினை முற்றின்

அமைப்பு படிக்கு-இன்ற்+ஆன் என ஆராயப்படும். இந்த அமைப்பில் நிகழ்கால விகுதி -இன்ற்- என்பதாகும். ஆனால் இந்த வினை பிறழாய்வு செய்யப்பட்டு படி-க்கின்ற்+ஆன் என்ற அமைப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த நிலையில் படிக்கிறான் என்பதன் அமைப்பியல் ஆய்வு திசைமாறிவிட்டது. இதன் விளைவாக -க்கின்று- என்பதில் உள்ள -கின்ற்- என்பது படியெடுக்கப்பட்டு மெல்வினைப் பகுதியையடுத்து அது கொண்டுசேர்க்கப்பட்டு செய்கின்று+, கொய்கின்று+, காண்கின்று+ முதலான வினைகள் தோற்றுவிக்கப்பெற்றன. உண்மையில் காண்கின்று+ என்ற வினையானது எடுத்துக்காட்டாக காண்கு-இன்ற்+ என்று ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். இதுதான் கிறு கின்று ஆகிய நிகழ்கால இடைநிலைகளின் வரலாறு. இந்த வகையில் கால்டுவெல் ஆய்வு மரபிலிருந்து விலகி மாற்று ஆய்வு மரபில் நெடுந்தூரம் வந்துவிட்டோம்.

14. மலையாள நிகழ்கால விகுதிகளைப் பொருத்தவரையில் -இந்நு, என்பதற்கும் -உந்நு என்பதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. புறநானூற்றில் நிகழும் செயுந்து வாய்பாட்டு இறவாக்காலப் பொதுவினைமுற்றுக்கள் செயுந்நு வாய்பாட்டினவாக மலையாளத்தில் திரிந்து வழங்கத்தொடங்கின. இந்த வினைகளில் நிகழும் -உந்நு என்ற நிகழ்கால விகுதி -உந்து என்பதன் திரிபாகும். இந்த விகுதி நிகழும் செயுந்து வாய்பாட்டு வினைகளின் தோற்றத்தை உம்உந் தாகும் இடனுமா ருண்டே (சொல். சேனா.292) எனத் தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

15. பழைய மலையாளத்தில் -கின்று என்பது -கிந்நு எனத் திரிந்து குடிக்கிந்நு, அடிக்கிந்நு என்பனப் போன்ற வல்வினைகள் தோன்றி அமைந்தன. இவற்றில் நிகழும் -கிந்நு என்பது படியெடுக்கப்பட்டு மெல்வினைப் பகுதிகளையடுத்துக் கொண்டுசேர்க்கப்பட்டு செய்கிந்நு, வருகிந்நு போன்ற வினைகள் தோற்றம் கொண்டன. மெல்வினைகள் ஆதலின் -கிந்நு என்பதில் உள்ள தகரம் உரசொலியாகத் திரிந்து பின்னர் கெட்டு செய்யிந்நு, வரிந்நு முதலான வினைகள் நிகழலாயின. கால்டுவெல் இந்நு என்பது உந்நு எனத் திரிந்ததாகக் கருதுவார். இவை இரண்டும் வெவ்வேறு அடிநிலை வடிவங்களைக் கொண்டவை என்பது நமது ஆய்வில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

சுருக்க விளக்கம்

ஐங்.	-	ஐங்குறுநூறு
கலி.	-	கலித்தொகை
குறள்	-	திருக்குறள்
சேனா.	-	சேனாவரையம்
சொல்	-	சொல்லதிகாரம்

நற்.	-	நற்றிணை
நெடு.	-	நெடுநல்வாடை
பட்.	-	பட்டினப்பாலை
பதி.	-	பதிற்றுப்பத்து
புறம்.	-	புறநானூறு
மது.	-	மதுரைக்காஞ்சி

அடிக்குறிப்பு

1 *Most of the Dravidian tenses or formed from participial forms of the verb. (Caldwell 1974: 486)*

2 *The Dravidian preterite tense is ordinarily formed, like the present, by annexing the pronominal signs to the preterite verbal participle. It is in the participle that the idea of past time resides: by it alone that idea is expressed. (Caldwell. 1974:496)*

3 *In a considerable number of instances the formation of the preterite in i appears to be a modern corruption. Intransitive verbal themes ending in u form their preterite in d in the classical dialect; and it is in the colloquial dialect alone that i forms their preterite - e.g., instead of bāl-i (coll.), having lived, the classical dialect has bāl-d-u; and as the classical dialect is undoubtedly more authoritative and probably also more ancient than the colloquial, d or d-u may be considered as the legitimate form of the preterite of this class of verbs. This conclusion is confirmed by the analogy of Tamil, in which the corresponding verbal theme forms its preterite verbal participle by suffixing nd, an euphonised form of d - e.g., vāl-nd-u, having flourished, which is the equivalent, not of the modern Canarese bāl-i, but of the ancient bāl-d-u.*

கருவி நூல்

Caldwell, Robert. (First Edition. 1856) 1974 (Reprint). A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, New Delhi, Oriental Books Reprint Corporation (Distributed by Munshiram Manoharlal Publishers Pvt. Ltd.,)

❦ ❦ ❦

7. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தில் பொருண்மைச் செய்திகள்

முனைவர் செ. சண்முகம்
மொழியியல் துறைத் தலைவர் (ஓய்வு)
பாரதியார் பல்கலைக்கழகம்

இறைப்பணிக்காகத் தமிழகம் வந்து, தமிழைத் திறம்படக் கற்றுணர்ந்து, புலமை பெற்று, தமிழைத் தாய்மொழி போல் பாவித்து, திராவிட மொழிகளில் செம்மையான ஆய்வை நிகழ்த்தி, அம்மொழிகளின் தனிப் பண்பை சான்றுகளுடன் நிறுவி, திராவிட மொழிக்குடும்பம் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டது என விளக்கி, மரபு வழி இலக்கணங்களையும் உரைகளையும் வழங்குகின்ற தமிழ் மரபை மீறி, திராவிட மொழிகளை ஒப்பிடுவதற்கான நெறிமுறைகளை முதன் முதலில் வகுத்து, முன்னோடியாகத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை இயற்றி, அம்மொழிகளின் பெருமையையும் தமிழ் மொழியின் தொன்மையினையும் உலகறியச் செய்த பெருமகனாரே கால்டுவெல் அவர்கள்.

ஒப்பிலக்கணம்

மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்தல் என்பதே ஒப்பிலக்கணத்தின் தலையாய கடன். மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்து அவை ஒத்திருத்தலையும் வேறுபட்டிருத்தலையும் வெளிப்படையாகக் காட்டுவதோடு, அவை எவ்விதம் ஒத்திருக்கின்றன அல்லது வேறுபடுகின்றன என்பதை விதிகளின் உதவியால் பொதுமைப்படுத்தி, ஒப்பிடும் மொழிக் கூறுகளின் வேறுபாட்டிற்குப் பின்னால் படிந்திருக்கும் வேறுபாடற்ற மூலக்கூறுகளைக் கண்டு, அந்த மொழிக் குடும்பத்தின் மூல மொழியை மீட்டுருவாக்கம் செய்வதே ஒப்பிலக்கண ஆய்வின் குறிக்கோள்.

மொழிகளில் காணப்படும் சொற்களின் ஒலி, இலக்கண, பொருண்மைப் பண்புகள், குறிப்பாக, கூறுகளின் சொன்மை

பொருண்மைப் பண்புகள் மொழிகளை ஒப்பிடும் நிலையில் முன்னுரிமை பெறுகின்றன. காரணம், அப்பண்புகளில் வெளிப்படுகின்ற வேறுபாடுகளே ஒப்பிடப்படும் மொழிகளைத் தனிமொழிகளாகக் கருதுவதற்கான சான்றுகளாக அமைகின்றன.

ஒப்பிலக்கண நூலின் பொருண்மைச் செய்திகள்

கால்டுவெல் தனது ஒப்பிலக்கண நூலில் மொழிக்கூறுகளின் பண்பான பொருண்மைப் பண்பைக் கையாண்ட விதத்தை விளக்குமாறு அமைகிறது இந்த கட்டுரை. குறிப்பாக, கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தில் ஆங்காங்கே தோன்றுகின்ற பொருண்மை சார்ந்த செய்திகள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றன.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல் திராவிட மொழிகளையும் மொழிக்குடும்பத்தையும் குறித்த அறிமுகத்தை முதல் பாகத்திலும், திராவிட ஒலிகளையும் வேர்ச்சொற்களையும் குறித்த விளக்கத்தை இரண்டாம் பகுதியிலும், திராவிட பெயற்சொற்களைக் குறித்த விளக்கத்தை மூன்றாம் பாகத்திலும், திராவிட வினைச்சொற்களையும் திராவிட மொழிக்கும் பிற மொழிகளுக்கும் இடையிலான சொல் ஒருமைப்பாட்டைக் குறித்த விளக்கத்தை நான்காம் பாகத்திலும் வழங்குகிறது.

நூலின் முதல் பாகத்தில்

முதல் பாகத்தில் திராவிட மொழிகளின் பெயர்ப் பிறப்பும் திராவிடச்சொற்கள் பிறமொழிகளில் காணப்படுவதும் நிறுவப்படுகிறது. மொழிப்பெயரின் பிறப்பும் மொழிச் சொற்களின் பெயர்வும் விளக்கப்படும் நிலையில் சொற்களின் ஒலி மாற்றம் முன்னுரிமை பெறுகிறது. சொற்களின் வரலாற்றை விளக்க, சொல் மாற்றம், பிற நாட்டு அறிஞர்களின் படைப்புகளில் சொற்களின் பதிவு, சொல்லின் நெருக்கம் ஆகியன சான்றுகளாகத் தரப்படுகின்றன. சொற் பொருட்களில் நெருக்கம் சொல்லின் பிறப்பை நிலை நாட்டும் அடிப்படை சான்றாக அமைகிறது.

'திராவிட' என்ற சொல் மொழியையும் மக்களையும் குறிக்கும் வகையில் சமஸ்கிருத மக்களால் பயன்படுத்தப்பட்டது எனவும் ஆனால் தமிழ் அறிஞர்களோ, சமஸ்கிருத அறிஞர்களோ அதன் பிறப்பை விளக்குவதில் அக்கறை கொள்ளவில்லை என்ற கருத்து வெளிப்படுகிறது. மேலும் திராவிட என்ற சொல்லிலிருந்து 'தமிழ்' என்ற சொல் வந்ததென சான்றுகளுடன் நிறுவப்படுகிறது.

திராவிட - திராமிழ

ட - ழ ஒலி சான்று சமஸ். நாடி - நாளி/ நாழி. சோட - சோழ

புற சான்று: மேலை நாட்டு படைப்புகளில் சொல்லின் பதிவுகள் '(திமிர், தமுலிக, தமிரிகே)

இதைப்போன்று பல சொற்களின் பிறப்பும் அவைகளின் பொருளும் விளக்கம் பெறுகின்றன.

மதராஸ் < மதுரு 'மதில்' +ஆஸ்

சதராஸ் < சதுரு 'சதுரங்கம், நான்கு படை' + ஆஸ் (டச்சு)

மலையாளம் < மலை + ஆள்மை

கொரோமண்டல் < சோழ மண்டலம் (31) கரு மணல், கர மண்டலம் என்பவை அல்ல

மலபார் < மலை + பாரசீக பார் 'நாடு'

தெலுங்கு <தேனுகு 'இனிமை'

துளு 'எதிர்க்கும் ஆற்றலற்ற, அமைதியான, பணிவுடைய பண்பு வாய்ந்த'

குடகு < குட 'மேற்கு'

கூ, கோந்த் < குன்று 'மலை' 47

புறச்சான்றுகளில் முக்கியமாக திராவிட சொற்கள் போன்ற சொற்கள் பிற மொழிகளில் காணப்படும் விதமும் பிற நாட்டு அறிஞர்கள் திராவிட பெயர்களைக் குறித்த விதமும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். பிறனாட்டு அறிஞரின் பதிவுகள் சில பின்வருமாறு:

பாண்டியொனே	பாண்டியன்
கெரோ பொத்ரோசஸ்	சேரன்
சுபீரோஸ்	காவிரி

ஒரு பொருளைக் குறிக்க, பிற திராவிட மொழிகளில் வேறுபட்ட வடிவங்களில் இருக்கும் தனிச்சொற்கள் எல்லாம் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களாகத் தமிழில் நிலைபெறுகின்றன எனவும் இது தமிழின் தொன்மையைக் காட்டும் சான்று எனவும் விளக்கப்படுகிறது. கன்னட மொழியின் மனெ என்ற சொல்லும் (மனை), தெலுங்கின் இல் என்ற சொல்லும் (இல்லாள், இல்லம், கோயில்) தமிழின் வீடு என்ற சொல்லும் தமிழில் உள்ளன.,

நூலின் இரண்டாம் பாகத்தில்

பாகம் இரண்டில் வேர்ச்சொற்களைக் குறித்த விளக்கத்தில் பொருண்மை சார்ந்த பல செய்திகள் வெளியிடப்படுகின்றன. ஒரே வேர்ச்சொல் பெயர் வினை என இரண்டு கூறுகளாக நிலைகொள்ளும்போது இரண்டு பொருள்களைக் காட்டும் என விளக்கப்பட்டு அதற்கான எடுத்துக்காட்டாக 'சொல், தறி, முறி' என்ற சொற்கள் தரப்பட்டுள்ளன.

பொருள்		பொருள்
சொல்	சொல்லுதல் (வினை)	வார்த்தை (பெயர்)
தறி	வெட்டு (வினை)	நெய்யும் எந்திரம் (பெயர்)
முறி	உடை (வினை)	பனை ஓலைப் பத்திரம் (பெயர்)
கடு	பெயர்	வினை
பழு	'வயதால் மூத்தல்' (பாழ்)	பண்படுதல் (பழம்)

திராவிட மொழிச்சொற்கள் பொருள் மாறாமல் இன்றும் இளமையாய் உள்ளன எனவும் விலங்குகளின் பெயர்கள் அவை தோற்றுவிக்கும் ஒலிகளிலிருந்தல்லாமல் ஏதாவது ஒரு பண்பினைக்கொண்டே அமைந்துள்ளன எனவும் உயிர் நீட்டல் ஒரு தொடர்புடைய பொருள் காட்டும் சொல்லுருவாக்க முறை எனவும் விளக்கபடுகிறது.

மின்	-	மீன்
பல்	-	பன்றி
குதி	-	குதிரை
கண்	-	காண்
நக்கு	-	நாக்கு

சிறப்பீனும் சொற்கள் என்னும் பகுதியில் வேர்ச்சொல்லோடு வரும் ஈற்றசையின் காரணமாக சற்றே வேறுபட்ட பொருள் உருவாகுவதற்கான எடுத்துக்காட்டுகள் வழங்கப்படுகின்றன. கடு என்ற சொல்வின் பொருளும் அதிலிருந்து பிறக்கும் சொற்களின் பொருள்களும் பின் வருமாறு;

சொல்		பொருள்
அடு		அருகில் வருதல், அமைக்க, சொல்ல, ஒன்று சேர்க்க, ஒன்றுடன் உரிமையுடையதாக
+ங்கு	அடங்கு	உள் சேர்ந்திரு
+க்கு	அடக்கு	`உள் சேர்ந்திருக்கச் செய்
+இ	அடி	உட் செலுத்தல், அடிகொடுத்தல், பாதம்
+ஐ	அடை	உட் சேர்தல், சுற்றி வளைத்து அடக்கல்

+ஐக	அடைக	திணி
+அர்	அடர்	நெருக்கமாதல், போருக்குச்செல்லல்
+உக்கு	அடுக்கு	குவித்து வை, ஒரு பொருளின் மேல் ஒன்றை வை

நூலின் மூன்றாம் பாகத்தில்

மூன்றாம் பாகத்தில், குறிப்பாக, எண் பெயர்களின் சொற்பிறப்பை விளக்கும் இடங்களில், திராவிட வேர்ச் சொற்களைத் தழுவி நின்று ஆணித்தரமாக எண்ணுப்பெயர்கள் திராவிடச்சொற்கள் என விளக்கும் பகுதியில் சொற்பொருண்மைக்கு முதலிடம் வழங்கப்படுகிறது. சொல்லின் பொருண்மை விளக்கங்கள் பழங்கால வரலாற்றை உற்று நோக்கச் செய்வதோடு வியப்பைத் தருவதாகவும் அமைகின்றன. எண்ணுப்பெயர்களின் பெயர் பிறந்த முறையும் அதை நிறுவும் சான்றுகளும் பொருண்மையை மையமாகக் கொண்டமைகின்றன.

ஒன்று	<	ஒன்று 'ஒன்றுபடுதல்' ஒன்று, ஒற்றி ஒன்றி, ஒற்றை என்ற வினை வடிவங்களோடு தொடர்புடையது
இரண்டு	<	ஈர் 'பிளத்தல்' ?
மூன்று	<	முர் மீறு 'கடந்து செல்லுதல்', மாறு 'இடம்பெயர்', முறுகு 'திருப்பு' என்ற சொற்களோடு தொடர்புடையவை
நான்கு	<	நல்/நள் 'மிகுதியாதல், வரையற்றதாதல்' நான்கு 'அழகு', கன்னட. நன்மை, நலி 'இன்பம்' 'வரையற்ற, மிகுதியான'
ஐந்து	<	ஐமை 'ஒட்டுவதன்றி அணித்தாக அடுத்து நிற்கும் நிலை, இடைவெளி உண்டாக ஒன்றுபட்டுக் கிடத்தல்' (கையை விரிக்கும்போது விரல்கள் தெரிவதைப்போல)
ஆறு	<	அறு 'மிகுதிப்படுத்தல், மேலும் மேலும், பகுத்துக் காணப்படும் முதல் எண்' (ஒரு கை விரல்களை எண்ணி முடித்து அடுத்த கை விரல் ஒன்றை எண்ணுதல்)
ஏழு	<	எழு 'எழுந்திரு'
எட்டு	<	எண் 'ஏழை அடுத்து எண்ண நினைத்தல் (ஏழு வரைதான் முதலில் எண் இருந்திருக்கலாம்)

ஒன்பது	<	தொல்+பது
பத்து	<	பகு, பஃது 'மிகுதியாக்குதல், விரித்தல், பெருக்குதல்'
நூறு	<	நுறு 'பொடியாக்குதல், சாம்பல், தூள், பொடி (எண்ண முடியாத துகள்கள்)
ஆயிரம்	<	சமஸ், சகஸ்ர
	<	தெலுங்கு வேய் ? 'மிகுதியாகு, கூடாகு, கடுமையாகு

நூலின் நான்காம் பாகத்தில்

நான்காம் பாகம் முழுவதிலும் திராவிட மொழிச் சொற்களுக்கும் பிற மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளான சமஸ்கிருதம், இந்தோ ஐரோப்பிய மொழிகள், செமிடிக், சித்திய மொழிகளில் காணப்படும் சொற்களுக்கும் இடையிலான ஒற்றுமை விளக்கம் பெறுகிறது. அந்த விளக்கங்களில் பொருண்மை குறித்த பல செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. முக்கியமாக சமஸ்கிருதத்தில் இருக்கும் ஒரு சொல் திராவிட மூலத்திலிருந்து வந்தது என நிறுவ, அச்சொல் உணர்த்தும் பொருளைச் சுட்ட சமஸ்கிருதம் பல வேறு சொற்களைப் பெற்றிருக்க திராவிட மொழி அச்சொல் ஒன்றையே பெற்றிருக்கும் நிலை போதுமானதாக அமையும் (590)

சொல்லியல் ஒருமைப்பாடு எனும் தலைப்பில் சமஸ்கிருதத்தில் இருப்பவை எனக்கருதத்தக்க திராவிட மொழிச்சொற்கள் விளக்கப்படுகின்றன. இந்த பட்டியலும் சொல் விளக்கமும், பின்னர் திராவிட மொழிகளின் சொற்பிறப்பு அகராதி உருவாக்கத்திற்கும் திராவிட பிறமொழி ஒற்றுமையை நிறுவ மேற்கொண்ட ஆய்வுகளுக்கும் வழிகாட்டியாக அமைந்தன எனலாம்.

ஒருமைப்பாடுடையவை எனக் காட்டப்பெற்ற சொற்கள் அனைத்தும் தொடர்பான பொருள் கொண்டவை என விளக்கப்படுவதால், சொல்லின் ஒருமைப்பாட்டை விளக்கும் சான்றாக சொற்பொருண்மை அமைகிறது. ஒவ்வொரு சொல்லையும் விளக்கும்போது அதன் திராவிட மூலம் அதன் பொருள், அதன் பிற மொழி பிறப்பு விளக்கத்தின் முறியடிப்பு, தொடர்பான பிற திராவிட சொற்கள் போன்ற பல செய்திகள் ஒரு சொல்லின் மூலச்சொல் திராவிட மொழிச்சொல் என்பதற்கான சான்றுகளாக வழங்கப்படுகின்றன. அத்தகைய சொற்கள் சிலவும் அவற்றின் எண்ணிக்கையும் பின் வருமாறு:

ஒருமைப்பாட்டுச் சொற்கள்

- சமஸ்கிருத — திராவிட சொற்கள் 27

1. அடவி காடு அலைந்து திரி
   அட் அடர் கூட்டம் சேர், நெருக்கமாக வளர்
   +வி திராவிட உருபு (கேள்+வி)
2. ஆணி கடையாணி அண்
   ஆணி 'உறுதியாக, அணை 'தழுவு', அணி 'மேலே அணிந்துகொள்', அணவு 'ஒட்டிக்கொள்', அணு 'தொடு
3. கடுக, கடு 'கூர்மை, காரம், கொடுமை' (சமஸ். கட்'போ' என்பதிலிருந்தல்ல)

கடு 'மிகுதி', கடு 'கூர்மைப்படுத்து', கடுகு 'விரைவு படுத்து', கடி 'கடித்தல்', கறி 'துணை உணவு, கடுகடு 'சினத்தல், கடி 'வெட்டு, திட்டு'

- குண்டர்ட் காட்டியவை 24

உறுண்ட	'அரக்கன், உறுண்டை' < உருள்
ஏட, ஏடக	'ஆடு, குதித்து மகிழ்தல்' <ஆடு 'விலங்கு'
கரபால	'கை வாள்' < கர வாள்
கர் நாடக	< கரு + நாடு+ அகம்
குண்ட	'துளை < குண்டு, குழி

- கிட்டல் காட்டியவை 8

அட்ட	'மேல்மாடி' <அட் 'மாடி'
அட்ட	'புழுங்கல் அரிசி' < அட் 'சமை'
ஆட், ஆட	'விளையாடு' சமஸ் வாசாட 'வாயாடி)

- சமஸ்கிருத திராவிடபொதுவான சொற்கள் 36

அடி,,	
கடு	'நோய், வெப்பம், காரம்' (கடுக),
தீ	'நெருப்பு, (தீப்)
தூறு	'மழை தூவுதல்' (த்ஹூ),
நெய்	'ஆடை பின்னுதல்' (நஹ)
பால்	'ஒரு பகுதி' (ப்ஹால்)

- திராவிட — செமிடிக் சொற்கள் 28

ஆறு	'நதி'	(ய் ஓர்),
அவா	'ஆசை'	(அவாஹ், அவ்வஹ்),
கிளை	'மரத்தின் கிளை	(கலுச)
குறு	'சிறிய, குறைதல்'	(கொர்த், குர்ஸ், குர்த் உஸ்)

- திராவிட — சித்திய மொழி சொற்கள் 82

அக்க	'தமக்கை,
அரு	'கிடைத்தற்கரிய,
அலை	'கடல் அலை, திரி', ஆறு,
உள்	"இருக்கிறது'
கப்பல்	<கப்பு 'மூடி'

- திராவிட — இந்தோ ஐரோப்பிய மொழிச்சொற்கள் 104

சொல்	பொருள்	இந்தோ. சொல் பொருள்
அசை	நிலை தளர்த்தல் சையோ	முன் பின்பாக நகர்
அருவி	நீர் வீழ்ச்சி	ரிவுஸ் சிற்றாறு
அவா	ஆசை	அவ ஓ (+உரு, +பொருள் ஒற்றுமை) (617)
அலை	நிலையின்மை	அலிக் அலை
இரும்பு	ஓர் உலோகம்	இரென், ஐர்ன்

முடிவுரை

தொடர்பான மொழிகளின் காணப்படும் சொற்களின் ஒற்றுமையையை விளக்குவதோடு அச்சொற்களில் காணப்படும் ஒலி, இலக்கண, பொருள் மாற்றங்களை ஒப்பிலக்கணங்கள் விளக்க முயல்கின்றன. திராவிட ஒப்பிலக்கணத்தின் தந்தையான கால்டுவெல் அவர்களின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலில் திராவிட மொழிகளின் உறவும் திராவிட மொழிச்சொற்களின் ஒற்றுமையும், திராவிட மொழிச்சொற்களுக்கும் பிற மொழிக்குடும்பத்தைச் சார்ந்த மொழிகளின் சொற்களுக்கும் இடையிலான ஒருமைப்பாடு விளக்கப்படுகிறது. அவரது ஆய்வு திராவிடஒப்பிலக்கண ஆய்வுக்கு உறுதியான வழித்தடத்தை அமைத்தது. பொருண்மை நோக்கில் பார்க்கையில், ஒப்பிடப்படும் சொற்களின் பொருண்மை மாற்றங்கள் வெளிப்படையாக விளக்கப்படவில்லை. சொற்களின் பொருளும் பொருண்மைப்பண்பும் சொற்களின் ஒப்புமையை நிலை நாட்டும் ஒரு சான்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம் புலவர் கா. கோவிந்தன், க. ரத்னம்), முல்லை நிலையம்: சென்னை 2010

❀ ❀ ❀

8. இராபர்ட் கால்டுவெல் பார்வையில் திராவிடப் பழங்குடி மொழிகள்

முனைவர் கோ. சீனிவாசவர்மா
இயக்குநர் (ஓய்வு), மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

இராபர்ட் கால்டுவெல் அயர்லாந்து நாட்டில் 1814 ஆண்டு பிறந்தார். பெற்றோர்கள் அவர்களின் பிறந்த இடமான ஸ்காட்லண்டு நாட்டிற்குச் சென்ற பொழுது கால்டுவெல் பத்து வயது சிறுவனாக இருந்தார். அங்குள்ள கிளாஸ்கோ நகரில் தம்முடைய பதினாறாம் வயதுவரை ஆங்கில இலக்கியங்களைப் பயின்றார் பின்னர் இலண்டன் மாநகரில் உள்ள சமயத்தொண்டர் சங்கத்தில் சேர்ந்தார். அச்சங்கத்தின் சார்பாக கிளாஸ்கோவிலேயே பல்கலைக்கழகத்தில் சேர்ந்து, ஐரோப்பிய மொழிகளிலுள்ள நூல்களையும் சமய நூல்களையும் கற்றார். கிரேக்கமொழிப் பேராசிரியர் சர் டேனியல் சான்ஃபோர்டு(*Sir Daniel Stanford, Professor of Greek Language, Glasgow*) அவர்களின் விரிவுரைகளால் மொழிநூல் முறையை நன்கு அறிந்தார். அதுவே தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தது. இலண்டன் மாநகரத் தொண்டர் சங்கம் தென்தமிழ்நாட்டில் சமயப்பணிக்காக கால்டுவெல் அவர்களைத் தேர்ந்தெடுத்து அன்னமேரி என்னும் ஆங்கிலக் கப்பல் மூலம் அனுப்பியது. அப்பயணத்தில் சென்னை அரசாங்கத்தில் பணிபுரிந்த சி.பி. பிரௌன் (*C.P. Brown, Madras Civil Service*) என்பவரை நண்பராக்கிக் கொண்டார். பிரௌன் தெலுங்கு, வடமொழிகளையும் அறிந்த அறிஞராவார்.

நான்கு மாத நீண்ட பயணத்திற்குப்பின் சென்னைத் துறைமுகம் வந்து சேர்ந்தவரைச் சங்கத்தினர் வரவேற்று அழைத்துச் சென்றனர். சென்னையில் தமிழ்ப்புலமைவாய்ந்த ஆங்கிலேயர் திரு. துருவர் (*Mr. Drew*) என்பவரிடம் முறையாகத் தமிழ் மொழியை மூன்றாண்டுகளில் பயின்றார். அதன்பின்னர் சமயப்பணிசெய்ய பாண்டிய நாடான

திருநெல்வேலிக்கு (பொருனை நாடு) நடைப்பயணமாகப் புறப்பட்டார். சென்னையிலிருந்து கால்டுவெல், பொருனை நாட்டிற்கு (திருநெல்வேலி) நானூறு மைல்தூரம் நடந்தே செல்லத் துணிந்தார். அவ்வாறு நடந்து சென்றால், வழியில் உள்ள பொது மக்களின் பழக்கவழக்கங்களையும், பேசும் மொழியையும் நன்கு அறியலாம் என்று கருதினார். சிதம்பரம், மயிலாடுதுறை, தரங்கம்பாடி, கும்பகோணம், தஞ்சை வழியாகப் பயணம் தொடர்ந்தது.

தஞ்சையில் நெல்லை மாநகரில் பிறந்து, கிறிஸ்து மதத்திற் சேர்ந்து தஞ்சையில் குடியேறி வாழ்ந்த வேதநாயகம் அவர்களைச் சந்தித்தார். பின்னர் திருவரங்கம், திருச்சி வழியாக நீலகிரி நோக்கிச் சென்றார். நீலகிரியில் டேனிஷ்மிஷன் பிஷப் ஸ்பென்சரின் விருந்தினராக ஒருமாதம் தங்கி இளைப்பாறினார். பின்னர் கோவைவழியாக மதுரை சென்று தங்கி, தன் பயணத்தைத் தொடர்ந்தார். 1841 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் 28 ஆம் தேதி திருநெல்வேலிக்குத் தென்கிழக்கே நாற்பது மைல் தூரத்தில் செக்கச்சிவந்த தேரியில் இடையன்குடி என்னும் சிற்றூரில் தங்கி பல ஆண்டுகள் தம் சமயப்பணியைத் தொடர்ந்தார். மொழி நூற்புலமைவாய்ந்த கால்டுவெல் ஐயர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்திற் சமயத்தொண்டு புரியப்போந்தார். அத்தொண்டு சிறக்கும் வண்ணம் ஐயர் தமிழ்மொழிபயின்றபோது அம்மொழியின் நீர்மை அவர் உள்ளத்தைக் கவர்ந்தது; தென் மொழியாய தமிழொடு தென்னிந்தியாவில் வழங்கும் பிறமொழிகளை ஒத்துநோக்கித் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் உயரிய நூலை ஆங்கிலத்தில் இயற்றினார். அந்நூல் திராவிட மொழிகளுக்குப் புத்துயிர் அளித்ததென்று கூறுதல் மிகையாகாது என ர்ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்

தென்னிந்திய குடும்பத்தில் ஆறுமொழிகள் திருந்திய மொழிகள் என்றும், ஆறுமொழிகள் திருந்தாத மொழிகள் என்றும் கால்டுவெல் கூறியுள்ளார். அவற்றுள் பிராஹூயி சேர்க்கப்பட்டவில்லை. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்னும் ஆறும் திருந்திய மொழிகளாகும். நீலகிரியில் வாழும் தோடர்மொழியும், கொண்டவனத்தில் வாழும் கோண்டு மொழியும், ஒரிசா நாட்டில் பேசப்படும் கூயி மொழியும், நாக்பூரில் வழங்கும் ஒடியா மொழியும் வங்காளத்தில் உள்ள மலையில் வழங்கும் மேலர் மொழியும், பெலுச்சிஸ்தானத்தில் வழங்கும் பிராஹூயி மொழியும் திருந்தாத மொழிகள் என்று கூறியுள்ளார். இவற்றில் இன்று மொழியியலார், தோடா, கோண்டு, கூயி, பிராஹூயி ஆகிய நான்கினையும் திராவிடப் பழங்குடியினர் மொழிகள் என்று தக்க ஆய்வுளின் மூலம் நிலைநாட்டியுள்ளனர்.

இந்தியாவில் வழங்கும் யாவும் ஆரிய குடும்பத்தைச் சேர்ந்ததென என்று ஐரோப்பிய மொழியியலார் நெருங்காலம் கருதிவந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நேப்பாளநாட்டில் பெரும்புகழ் பெற்ற (Dr.Hodson- LS.Vol.1) ஹாட்சன், மத்திய இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் வழங்கும் மொழிகளிலுள்ள சொற்களைத் தொகுத்து ஆராய்ந்து, ஆங்கில இதழ்களில் வெளியிட்டார். அதன்வழியாக ஐரோப்பிய அறிஞர்கள், ஆரிய குடும்பத்தைச் சேரந்த திராவிட முண்டா மொழிகள் உள்ளன என்று அறிந்தனர். திராவிட மொழிகளைப் பற்றி விரிவாக இந்திய மொழிகளின் ஆய்வு நூலில் நான்காம் தொகுதியில் கிரியார்சன் (Dr. Grierson,Linguistic Survey of India,Vol.4) எடுத்துக்காட்டுகளுடன் நன்கு விளக்கியுள்ளார்.

தென்னிந்திய மொழிகளின் சிறப்பினை உணர்ந்த கால்டுவெல் அவர்களின் தமிழ்ச்செம்மொழியினை நாட்டுமக்கள் பேசும் முறையிலேயேயும் பேசப்பழகினார். எழுத்து நடைக்கும் , பேச்சு நடைக்கும் உள்ள வேற்றுமையை நன்குணரந்து பேச்சு முறைக்குரிய தமிழைப் பெரிதும் முயன்று பயின்றார். அப்பழக்கத்தின் அடிப்படையில் அவருடைய பேச்சு எல்லோராலும் விரும்பப்பட்டது.

பழந்தமிழ்ச் சொற்களைப் பழங்கன்னடச் சொற்களுடனும் (ஹளகன்னட) ஆதி ஆந்திரச் சொற்களுடனும் கால்டுவெல் ஒத்து நோக்கிய பொழுது நூற்றுக்கணக்கான இயற்சொற்களும் மொழிகளிலும் ஒன்றுபட்டிருக்கக் கண்டார்.மேலைநாட்டு மொழிகளை ஆராய்ந்தார் அதனடிப்படையில் திராவிட மொழிகளின் இலக்கணக் கூறுகளும், சொல்லாக்க முறைகளும் , அடிப்படையில் உள்ள ஒற்றுமைகளைக் கண்டறிந்து மகிழ்ந்தார். பதினைந்து ஆண்டுகளுக்குமேல் அயராது உழைத்து 'தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் பெயரால் திராவிட மொழிநூலை 1856ஆம் ஆண்டு வெளியிட்டார் (A Comparative Grammar of Dravidian or South Indian Family of Languages -1856)

கால்டுவெல் கண்ட பழங்குடி மொழிகள்

திராவிட மொழிகளைப் பேசும் பழங்குடியினரிடம் களப்பணி மூலம் நடத்தப்பட்ட மொழியியல் ஆய்வுகள் மொழிகளை அடையாளங்கண்டதோடு பல கலாச்சார, சமூகக்கருத்துகளுக்கும் ஆதாரமாகவிளங்கின.

நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோடர்கள் இனத்தால் கிரேக்க நாட்டுடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற கருத்து நிலவிவருகிறது. ஆயினும் தோடர் பேசும்மொழி திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது தான் என்று எம்.பி. எமனோ.,சு.சக்திவேல் ஆகியோர்

விரிவாக ஆராய்ந்து உறுதிப்படுத்தியுள்ளனர். பதினோறு மந்துகளில் வாழும் தோடர் மக்களைப்பற்றி நானூறுக்கும் மேலான கட்டுரைகள் ஆய்வின் அடிப்படையில் வெளிவந்துள்ளன.

கொண்டா (*Kunda*) அல்லது கூபி (*Kubai*) மொழி பேசும் மக்கள் கொண்டதுரை (*Kundadura*) கொண்ட காப்பு (*Ko*) ஓஜா (*OJA*) பாண்டவர் (*Pandava*) எனும் பல பெயர்களால் அழைக்கப் படுகின்றனர். கொண்டா என்பது மலை எனும் பொருள்படும்.

இவர்கள் தங்களின் பூர்விகப்பெயர் கூபி (*Kubi*) என்றே கூறுகின்றனர். கூபி எனும்சொல் கூ-மலை (*ku-hill*), *ku - yi > kuyi* கூயி என்று மாறியுள்ளதாகவும் கூறுகின்றனர்.

ஆந்திரப்பிரதேசம் ஒடிஸா, மத்தியப் பிரதேசம் மாநிலங்களில் பாயும் கோதாவரி ஆற்றின் இருமருங்கிலும் உள்ள மலைப்பகுதிகளில் கோயாப்பழங்குடியினர் வாழ்கின்றனர். கோண்டி மொழிபேசும் பழங்குடியினர் வாழும் பகுதிகளுக்கு அருகில் கோயாப் பழங்குடி மக்களும் வாழ்கின்றனர். கோயாப்பழங்குடி மக்களிடையே கொம்மு கோயா, குட்டகோயா, லிங்கு அல்லது ராஜ்கோயா என மூன்று பிரிவுகள் உள்ளன. கோயா ஒரு தனி மொழியாகக் கருதப்படுவதற்குப் பல சான்றுகள் உள்ளன. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் வாழும் பலுச்சிஸ்தான் பழங்குடியினர், பிராஹூயி(வரை மொழி அல்லது மலைமொழி) எனப்படும் திராவிட மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். மத்திய ஆசிய நாட்டிலிருந்து பலுச்சிஸ்தான் வழியாக இந்தியாவிற்கு மொழிகள் வந்ததாக ஒரு கருத்தும் உள்ளது.

பழங்குடியினர் பேசும் வளர்ச்சியுறாத மொழிகள் ஆறு என்று கால்டுவெல் கூறியுள்ளார் அவற்றினுள்ளே பிராஹூயி அடங்கவில்லை. அதனை அது இந்தியாவிற்கு வெளியில் பேசப்படும் பழங்குடியினர் என்று ஒருவேளை கருதியிருக்கக்கூடும். எனினும் பிராஹூயி பற்றி அவர்வாழ்ந்த காலத்தில் கிடைத்த தரவுகளை நன்கு ஆராயந்து, தமது நூலில் பின்னிணைப்பாக பக்கம் 633முதல் 635வரை விரிவாக ஒப்பிட்டு விளக்கியுள்ளார்.

திராவிடமொழி	பிராஹூயி
கண்	கண்
வாய்	பாய்
காது	காஃப்
முகம்	மோன்
மூளை	மிளெ
மகன்	மார்
தாய்/ஆய்	ஆயி

நீர்	தீர்
பால்	பா(ஹ)ல்
கல்	கல்
வில்	பில்
அறு	தே
கொல்	ஹறே
செய்	கே/கர்
வா/வர்	பர்
இரு/இர்	அர்

இன்றளவில், பல மொழியியல் அறிஞர்கள் திராவிடமொழிகள் வழங்கும் இடங்களுக்குச் சென்று களப்பணி செய்து, மொழித் தரவு சேகரித்து அவற்றை ஆராயந்து ஆதாரப்பூர்வமாக திராவிட மொழிகளை நிலைநாட்டியுள்ளனர். அவர்களின் நுண்ணிய ஆய்வுகளினால் வெளியிடப்பட்டுள்ள நூல்கள், அறிக்கைகள் கட்டுரைகள் முதலியவற்றிலிருந்து, தற்பொழுது 40 மொழிகள் திராவிடமொழிகளாகக் கருதப்படுகின்றன.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கும் தென்னிந்திய இலக்கிய மொழிகளாகும். ஏனயவை பழங்குடி மொழிகள் அல்லது இலக்கியம் இலக்கணம், வரிவடிவம் போன்றவைகளில் முழுவளர்ச்சி பெறாத மொழிகள் என்று எண்ணுகின்றனர். அவை,

1. ஆலு குறும்பா/பாலு குறும்பா (*Alu kurumba/palu kurumba*)
2. இந்தி/ஆவே (*Indi/Ave*)
3. இருளா (*Irula*)
4. எருக்கலா (*Yerukhala*)
5. ஒல்லாரி (*Ollari*)
6. கசபா/கசபா இருளா (*Kasaba/ kasaba Irula*)
7. கதபா/கொண்டேகோர் கதபா (*Gadaba / kunodekore gadaba*)
8. கன்னடம் (*kannada*)
9. காடர் (*Kadar*)
10. குடுக்/ஓரான்/டாங்கர் குடுக் (*Kurubh, oron / danger kurukh*)
11. குறும்பா - ஊராளிக்குறும்பா (*Kurumba - uralikurumbha*)
12. கூய் (*kui*)
13. கூவி (*Kuvi*)
14. கொடகு/கூர்கி (*kodagu/goorgi*)
15. கொண்டா/கூபி (*konda/kubi*)
16. கொரகா (*koraga*)
17. கோத்தா(*koraga*)
18. கோண்டி-ஜோரியாகோண்டி- அடிஜ் மாடியா.பைசன் ஹார்ன் மாடியா. முடியா. மாடியா (*Gondi-joria gondi*)
19. கோயா (*koya/kol*)
20. கொலாமி (*kolami*)
21. சோலகா சோலிகா- ஊராளிச் சோலகா (*Sholaga/soliga-Urali sholaga, podu sholaga*)

22. தமிழ் (*Tamil*)
23. துளு (*Tulu*)
24. தெலுங்கு (*telugu*)
25. தோடா (*Toda*)
26. நாய்க்டி (*Naiktti*)
27. நாய்கி (*Naiki*)
28. படகா (*Badaga*)
29. பட்ஜி (*Parji*)
30. பிராஹூயி (*Brahmi*)
31. பெங்கோ (*Pengo*)
32. பெட்டகுறும்பா (*Betta kurumba*)
33. பேலாரி (*Belari*)
34. மண்டா (*manda*)
35. மலவேடா (*malaveda*)
36. மலையாளம் (*Malayalam*)
37. மால்தோ (*malto*)
38. முதுவா/முதுகா (*muduva / muduga*)
39. முள்ளுகுறும்பா (*Mullu kurumba*)
40. ஜேனுக்குறும்பா/காட்டு நாயக்கா (*Jenu kurmba / kata nayakka-colai naykka*)

முடிவுரை

கால்டுவெல் ஐம்பத்து மூன்றாண்டுகள் தமிழ்நாட்டில் அரும்பணிபுரிந்தார். கொடைக்கானலின் குளிரில் நோய்வாய்ப்பட்டு இயேசுவின் அடிசேர்ந்தார். ஆயினும் அவர் தொண்டாற்றிய இடையன்குடியில் ஆலயக்கல்லறையில் அமைதியுடன் நல்லடக்கம் செய்யப்பட்டார். கிறிஸ்தவ சமயத்திற்காக அறப்பணியாற்றி அளவிறந்த நலம்புரிந்தவர், திராவிட மொழிகளுக்கும் நல்லதோர் பங்களிப்பை அளித்துள்ளார்.

துணைநூல்பட்டியல்

சேதுப்பிள்ளை,ரா.பி. *1944.*, கால்டுவெல் ஐயர் சரிதம்,(பூம்புகார் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 2009)

மனோகரன், க. , *2013* திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும். உலகத்தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

Caldwell, Robert, 1856, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Lan-guages, 3rd revised edition, London, 1913. Edited by. J.L. Wyatt and T. Ramakrishnan pillai, Reprint, 1956, Madras University of Madras.

Sakthivel, S., (1977) A grammar of Toda Language, Annamalai University, Annamalai Nagar.

Subbaih, S., A Grammar of Kota language, Annamalai University, Annamalai nagar.

ꕥ ꕥ ꕥ

9. கால்டுவெல் நோக்கில் திராவிட மொழிகளும் கிளைமொழிகளும்

முனைவர் இரா.கு. ஆல்துரை
மேனாள் சிறப்புநிலைத் தொகுப்பாளர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டம்

பேராயர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் தம் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் சிறப்பு வாய்ந்த நூலில் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளு, குடகு ஆகிய ஆறு மொழிகளைத் திருந்திய திராவிடமொழிகள் என்றும் தொதவம், கோத்தம், கோண்டி, கோந்த் அல்லது கூயி, ஒராவன், இராஜ்மகால் ஆகிய ஆறு மொழிகளைத் திருந்தாத் திராவிட மொழிகள் என்றும் பிரித்து விளக்கியுள்ளார். இவற்றுள் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகள் இலக்கியம் அமைந்த மொழிகள். இம்மொழிகள் தத்தமக்கென்று தனியான எழுத்து முறைகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் இவற்றைத் திருந்திய மொழிகள் எனக் கொண்டதைப் பொருத்தம் எனக் கொள்ளலாம். எஞ்சியவை இலக்கியமோ எழுத்து முறையோ கொண்டிராத மொழிகள். என்றாலும் துளு, குடகு ஆகிய இரு மொழிகளை அவர் திருந்திய மொழிகள் எனக் கொண்டுள்ளார்.

மூலத் தென்திராவிட மொழியிலிருந்து முதலில் பிரிந்த மொழி துளு (*Subrahmanyam 1983:iv.*) இம் மொழி தனக்கே உரிய தனிப்பண்பும் நயமும் வாய்ந்தது. தனக்கென்று தனியான எழுத்துமுறை பெறவில்லை என்றாலும் கன்னட எழுத்துமுறை இப்பொழுது இம் மொழியோடு பிரிக்க முடியாதபடி இரண்டறக் கலந்துவிட்டது. இது தன் நலம் குறித்துத் தானே திருந்திச் செந்நிலை பெற்ற மொழி. இம்மொழி ஆழ்ந்து ஆராயவேண்டிய தகுதி வாய்ந்தது (*Caldwell 1987:31*). திராவிடக் குடும்ப மொழிகளுள் துளு குறிப்பிடத் தகுந்த மொழி. இம்மொழி பேசுவோரிடையே சமயக் கோட்பாட்டுமுறை, கலைமரபுகள், நாடக அமைப்புகள் போன்றவற்றால் தனியான குமுகாயப் பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன. இது தென் திராவிட

மொழிகள் பேசும் பகுதியில் இருந்தாலும் நடு திராவிடமொழிக் கூறுகள் பலவற்றைக் கொண்டுள்ளது (*Upadhyaya 1985:Preface*) பார்ப்பனர் வழக்கு, பார்ப்பனர் அல்லாதோர் வழக்கு என்ற மிகுதியான வேறுபாடுகளைக்கொண்ட இரண்டுகிளைவழக்குகளைக்கொண்டுள்ளது (*McAlpin 1981:18*).. துளு தென் திராவிட மொழிகளுள் இலக்கியம் அமைந்த மொழிகளுக்கு அடுத்து அதிகமான மக்கள் பேசும் மொழி.

கால்டுவெல் தம் திராவிட மொழிகள் ஒப்பிலக்கணத்தின் முதற்பதிப்பில் (கி.பி.*1856*) குடகு மொழியைத் திருந்திய திரவிடமொழியாகக் கொள்ளவில்லை. குடகு மொழியின் அமைப்பையும் வளர்ச்சியையும் நன்கு உணர்ந்த நிலையில் இதனைத் தம் ஒப்பிலக்கணத்தின் இரண்டாம் பதிப்பில் (கி.பி.*1875*) திருந்திய திராவிடமொழியாகக் கொண்டுள்ளார் (*அகத்தியலிங்கம் 1978:75*). என்றாலும் குடகுக்கு இத் தகுதி அளிப்பதில் அவருக்குத் தயக்கமே இருந்துள்ளது (*Caldwell 1987:32*). அண்மைக்காலத்தில் துளு, குடகு ஆகிய இரண்டு மொழிகளிலும் கன்னட எழுத்துமுறையினைக் கொண்டு எழுதி வருகின்றனர். முன்னர் துளுவில் மலையாள எழுத்துமுறையைக் கொண்டும் எழுதியுள்ளனர். எவ்வாறாயினும் இவ்விரு மொழிகளிலும் நடந்துள்ள இலக்கியம் அமைக்கும் முயற்சியைக் கருத்திற்கொண்டே கால்டுவெல் இவற்றை இலக்கியம் அமைந்த மொழிகளோடு வைத்துள்ளார். அவ்வகையில் வளர்ச்சியுடன் இருந்ததால் இலக்கியம் அமையாத நிலையில் இருக்கும் இவற்றிற்கு ஒரு தனியிடம் அமைத்துப் பார்ப்பது பொருத்தம். அதனால் ஒட்டு மொத்தமாகத் திருந்திய மொழிகள் எனக் கொள்வதைக் காட்டிலும் அவற்றை இலக்கியம் அமைந்த மொழிகள்(*literary languages*) (தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு), இலக்கியம் அமைவதற்கு அணியமான நிலையில் இருக்கும் மொழிகள் (*pre literary languages*) (துளு, குடகு), என இரண்டாகப் பிரித்து விளக்குகின்றனர். எஞ்சியவை இலக்கியம் அமையாத மொழிகள் (*non literary languages* (*Zvelebil 1984:10*). கால்டுவெல் திருந்தாத் திராவிட மொழிகளாகக் கருதியவை இன்றைய நிலையில் பழங்குடியினர் மொழிகளாக இருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

கால்டுவெல் பிராகுயி மொழிபற்றிய குறிப்புகளைத் தம் ஒப்பிலக்கணத்தின் இரண்டாம் பதிப்பின் (கி.பி.*1875*) பின்னிணைப்பில் இணைத்துள்ளார். அதைச் சேர்த்தால் கால்டுவெல் ஆராய்ந்த திராவிட மொழிகளின் எண்ணிக்கை பதிமூன்றாகும். படகு, இருளா, குறும்பா, குருக் முதலியவைப்பற்றியும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். இலக்கியம் அமையாத மொழிகளின் இன்றியமையாமையைக் குறைத்து மதிப்பிடலாகாது. ஒப்பிலக்கண ஆய்வுக்கு இம்மொழிகளின் விளக்கம் மிகவும் இன்றியமையாதன.

பண்படுத்தம்

மொழிப் பண்படுத்தம் என்பது மொழியை நேரிதாக்குதல் அல்லது மொழி மேம்பட சிறிய அளவில் மாற்றங்களை மேற்கொண்டு சிறப்பானதாக ஆக்குதல் ஆகும்.'பெரும்பாலும் தமக்கென எழுத்துமுறைகளையோ பழைய இலக்கியங்களையோ கொண்டிருக்காத காரணத்தால் சில மொழிகளைத் திருந்தாத மொழிகள் எனக் கொள்ளும் நிலை உண்டாகிறது என்று பலர் நினைக்கின்றனர். மேலும் அம் மொழிகளைப் பேசுவோரின் பழம்பாணித்(*primitive*) தன்மையாலும் இவ்வாறு கொள்ளப்படுகிறது என்றும் கருதுகின்றனர். ஆனால் மொழியியல் அடிப்படையில் மொழி அதைப் பேசுவோரின் தேவையை நிறைவேற்றி வருவதனால் எந்த மொழியையும் பழம்பாணி மொழி அல்லது திருந்தாத மொழி என்று கருதுவதற்கு இடம் இல்லை' (*Shanmugam 1980:*). *Foreword*)

மொழி பேச்சுவழக்கில்தான் வாழ்கிறது. மொழி எழுதும் நிலையை எய்தியது முற்றிலும் நேர்ச்சியானது. இலக்கியமொழி இயல்பான பேச்சுவடிவம் அன்று. எவ்வாறாயினும் செம்மொழி அல்லது இலக்கியமொழி இயல்பல்லாததாக இருந்தாலும் அதனைக் கைவிடுவது அவ்வளவு எளிதன்று. இதுவரை எழுத்துமுறை பெறாத மொழிகளும் எழுத்துமுறை பெறுவதற்கே முயல்கின்றன (*Maxmuller 1965:50,51*). இலக்கியத்திற்கு மதிப்பு அளிப்பது காலந்தோறும் இருந்து வந்துள்ளது. அதுவும் பழமை வாய்ந்த செவ்விலக்கியங்கள் பெரும் மதிப்புடன் போற்றப்படுகின்றன. எழுத்து மொழிக்கும் பேச்சுமொழிக்கும் இடையேயான வேறுபாடு எல்லா மொழிகளிலும் காணக்கிடக்கின்றது. தமிழ் போன்ற நீண்ட வரலாறு உடைய மொழிகளில் இவ் வேறுபாடு அதிகமாக இருக்கும். எழுத்துமொழி அல்லது இலக்கியமொழி செம்மையாதல் என்னும் வகையில் பண்படுத்தத்துடன் இருக்கும் என்று கூறலாம்.

பழங்குடி

தொதவப் பழங்குடி, கோண்டி பழங்குடி என்றாற்போன்று திராவிடப் பழங்குடி மக்களைப்பற்றிக் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். என்றாலும் இப் பழங்குடியினர் பேசும் மொழிகளைப் பழங்குடியினர் மொழி எனத் தனியாகக் கொண்டு தம் ஒப்பிலக்கணத்தில் ஆராயவில்லை. பழங்குடியினர் மொழிகளை அவர் திருந்தாத் திராவிட மொழிகளாகக் கொண்டே விளக்கியுள்ளார். பழங்குடியினர் பேசும் மொழிகள் பழங்குடி மொழிகள். பழங்குடி மொழி என்பதற்கு மொழியியல் நோக்கு வரையறை எதுவும் இல்லை. இந்திய அரசியல் அமைப்புச்சட்டம் 342இன் படி சில இனக் குழுவினர் பழங்குடியினர் தகுதியைப் பெற்றுள்ளனர். இத்தகுதி குடியரசுத்தலைவர் பாராளுமன்ற ஒப்புதலுடன் அளிப்பதாகும். இந்தியாவில் பழங்குடியினர் என்னும்

கருத்துரு சட்டத்துறை, அரசியல்துறை ஆகியவற்றைச் சார்ந்த ஒன்று (ஞானசுந்தரம் 2009:12). பழங்குடி என்னும் சொல்லாட்சியே அவ்வளவு பொருத்தமாக இல்லை என்கின்றனர். மிகப் பழங்காலத்திலிருந்து ஒரே திராவிட இனத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர் (Caldwell 1987:1) என்று கால்டுவெல்தாமே குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் ஓர் இனமக்களில் ஒரு பிரிவினரைப் பழங்குடி என அழைப்பது அங்குள்ள எஞ்சியோரைப் புதுக்குடி என வழங்குவதற்கு இடமளிக்காதா? என்னும் வினாவிற்கு அங்கு இடம் உண்டாகிறது.

திராவிட மொழிகளுள் கதபா, கோண்டி, குவி, இருளா, முடுகா, காடர், காணிக்கர், காட்டு நாயக்கர், கொலாமி, கோயா, கொண்டா, பரோஜா, ஊராளி, கொரகா, கோத்தம், தொதவம், யெருக்கலா ஆகிய பதினேழு பழங்குடியினர் பேச்சுகள் இருக்கின்றன. இவற்றுள் கதபா, கோண்டி, குவி, இருளா, கொலாமி, கோத்தம், தொதவம் ஆகிய ஏழு தனியான மொழிகள் (Ramakrishna Reddy 2009:6,7). எஞ்சியவை கிளைமொழிகள். பொதுவாகச் சமதளப்பகுதியில் வாழும் பழங்குடியினர் தங்கள் மொழியினை அல்லது கிளைமொழியினை எளிமையாக இழந்து விடுகின்றனர். இதற்குச் சான்றாகக் கேரளத்தில் மலையாளக் கிளைமொழிகளைப் பேசிவந்த பழங்குடியினர் இப்பொழுது மலையாளத்தை முதல் மொழியாகக் கொண்டிருப்பதைச் சான்றாகக் காட்டுகின்றனர். அதேநேரத்தில் மலைப்பகுதிகளில் வாழும் பழங்குடியினர் தங்கள் மொழியை அவ்வளவு எளிமையாக இழப்பது இல்லை.

ஒரு பழங்குடியினர் ஒன்றுக்கும் மேற்பட்ட பழங்குடியினர் மொழிகளைப் பேசி வருவதும் உண்டு. வடக்கு ஆந்திராவிலும் தெற்கு ஒரிசாவிலும் வாழும் கோந்த் (Kondh) பழங்குடியினர் கூயி, குவி, பெங்கோ, மண்டா, இண்டி ஆவ் ஆகிய மொழிகளைப் பேசிவருகின்றனர் (Ramakrishna Reddy 2009:10). அண்மைக் காலம் வரை நீலகிரி வாழ் கோத்தர், தொதவர், குறும்பர் போன்றோரிடையே படகுமொழி தொடர்பு மொழியாக இருந்து வந்துள்ளதையும் இதற்குச் சான்றாகக்காட்டலாம். பழங்குடியினர் மொழிகளிலும் கிளைவழக்குகள் உண்டு. படகு மொழியில் ஆறு கிளைமொழி வழக்குகள் இருப்பதாகக் கணக்கிட்டுள்ளனர்.

தனிமைப்பட்டநிலை

இந்தியத் துணைக்கண்டத்தில் பொதுவான மொழி அமைப்பு பொதுவான பண்பாடு ஆகியவற்றைக் கொண்ட சில தனியான பழங்குடியினர் மொழிக் குழுக்கள் இருக்கின்றன. இவற்றுள் சில கிளைமொழி வழக்கு வேறுபாடுகளுடன் இருக்கின்றன. பழங்குடியினர்

இந்திய மக்கள் தொகையில் 8.2 விழுக்காட்டினராக இருக்கின்றனர். இந்தியப் பழங்குடியினர் தங்களுக்கென்று தனியான வழக்காறுகள், மொழிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள தொல்குடியினர். பெருமளவில் நேர்மையுடன் கூடிய தனியான வாழ்க்கை முறையைக் கொண்டுள்ள பழங்குடியினர் ஏறக்குறைய முழுமையாக வளர்ந்த பிற சமூகாயங்களுடன் தொடர்பு இல்லாத நிலையில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றனர்.'திருந்தாத் திராவிட மொழிகளைப் பேசுவோரெல்லாம் மலைப் பகுதியிலேயே வாழ்வது நமக்கு வியப்பினை அளிக்கிறது' (மீனாட்சி சுந்தரம் 1982 :23).

உண்மையில் திருந்தாத் திராவிட மொழிகள் பேசுவோர் மலைப்பகுதியில் இருந்ததனாலேயே வெளித்தாக்கம் இல்லாமல் அல்லது குறைவான வெளித்தாக்கத்துடன் நீண்ட காலம் இருக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் அம்மொழிகளுக்கு வெளித் தாக்கத்தால் ஏற்படும் மாற்றம் இல்லாமல் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தங்கள் மூலமொழிகளுடன் தொடர் பில்லாமல் இருந்ததனால் அவற்றினின்று வேறுபட்டுத் தனி மொழிகளாக உருப்பெறுவதற்கும் இடம் அளித்துள்ளது. இவ்வாறான மொழியியல் சூழல்களை யெல்லாம் அறிந்தவராகவே கால்டுவெல் இருந்துள்ளார். இதனை நீலகிரி மலைவாழ் மக்களின் மொழியைப் போலவே குடகு மொழியும் பிறமொழியாளர்களால் எளிதில் புக இயலாத ஒதுக்கிடமான மலை முகடுகளில் இருப்பதனால் அது தன் சொல்லுருவங்களை உருவிழந்து போகாதவாறு காத்து நிற்கிறது என்பதில் சிறிதும் ஐயம் இல்லை என்று பேராசிரியர் பர்னல் குறிப்பிட்டதைத் தம் ஒப்பிலக்கணத்தில் பதிவு செய்துள்ளது (Caldwell 1987:33) போன்றவற்றைக் கொண்டு அறியலாம்.

இந்தியப் பழங்குடியினர் மொழியை நாட்டுப்புற மொழி என்று குறிப்பிடலாம். எழுத்து முறையோ இலக்கியமோ உருவாகாத நிலையில் அவை பேச்சு மொழியாகவே வழக்கில் இருக்கின்றன. பழங்குடியினர் மொழிகள் சிக்கலான அமைப்பைக் கொண்டன. இருந்தாலும் இவை பழங்காலத்து வளர்ச்சியைப் பெருமளவில் அடையாளப் படுத்துவனவாக இருக்கின்றன. வெளித் தாக்கம் இல்லாத நிலையில் இவை தம்மளவில் இயல்பான புத்தாக்கங்களைக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் பழையனவற்றைத் தக்கவைக்கும் இயல்பும் பழங்குடியினர் மொழியில் கூடுதலாகக் காணப்படுகின்றது.

'தெற்காசிய வழக்காற்றில் பழங்குடி (tribal) என்னும் சொல்லின் பயன்பாடு ஒரு வகையான குமூகாய அமைப்பைக் குறிப்பிடுகிறது அல்லாமல் அது வளராத நிலையையோ பொருளாதார முன்னேற்றம் இல்லாததையோ குறிப்பிடுவதில்லை. அது பொதுவாக

இப்பொழுது இல்லை என்றாலும் கடந்த காலத்தில் ஒரு வகையில் தனிமைப் பட்டிருந்ததைக் குறிப்பிடுகிறது. இச் சூழலில், தெற்காசிய குமுகாயத்தில் பரந்த நிலையில் இருக்கும் அமைப்புமுறைக் கோட்பாட்டில் சாதி (caste) என்பதற்கு மாற்றாகப் பழங்குடி விளங்குகிறது' (McAphin 1981:19).

இலக்கியம் பெறாத மொழிகள்

திராவிடமொழிகளுள் இலக்கியம் பெறாத மொழிகள் எதுவும் கல்வியில் பயிற்று மொழியாக இல்லை. அரசியல், ஆட்சி அல்லது தேசிய அளவில் வேறு ஆட்சிப்பரப்பு எதிலும் அதிகாரம் பெற்றதாக இல்லை. இவற்றிற்குத் தனியான எழுத்துமுறைகள் எதுவும் உருவாகவில்லை. இவை வட்டார மொழிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. இவை மதிப்புக் குறைவான மொழிகளாகக் கருதப்படுகின்றன. இவை எழுத்தறிவு பெறாத இருமொழியாளர்கள் அல்லது மும்மொழியாளர்கள் மொழிகளாக இருக்கின்றன. வாய்மொழி இலக்கியங்களை மட்டும் கொண்டனவாக இருக்கின்றன. இவை இக்கால மின்னணு ஊடகங்களில் இடம்பெறாத மொழிகள். இப்படிப் பட்ட எதிரான நிலை இருந்த போதிலும் இம் மொழிகள் இதுவரை அழியாமல் வழக்கில் இருக்கின்றன. இம் மொழிகள் இவற்றைப் பேசுவோர்களை அடையாளம் படுத்தும் குறியீடாக விளங்கி வருகின்றன. பெரும்பாலும் இம் மொழிகளின் பெயர்களை வைத்தே இம்மொழிகளைப் பேசுவோரின் இனப்பெயர்கள் அமைந்துள்ளன. இம்மொழிகள் மரபுரிமை, மண்ணுக்குரிய அறிவு, பண்பாட்டுக் கூறுகள், சடங்குமுறைகள் போன்றவற்றைக் கொண்டு செல்லும் கருவிகளாக விளங்குகின்றன. வட்டாரமொழித் தொலைக்காட்சி, திரைப்படம், தொலைத்தொடர்பு அமைப்பு போன்றவற்றால் இம் மொழிகளைப் பேசுவோர் குறிப்பாக இளைய தலைமுறையினர் ஈர்க்கப்படுவதற்கு வாய்ப்புகள் மிகுதி. இதனால் தங்கள் தாய்மொழி இழப்புக்கு வாய்ப்பு உண்டு. அதிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரால் பேசப்படும் மொழிகள் வழக்கிழப்பதற்கு வாய்ப்புகள் மிகவும் அதிகம்.

திராவிடம்

தென் இந்தியாவில் கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமற்கிருத இலக்கண ஆசிரியரும் மெய்யியலாளருமான குமாரில பட்டர் தம் தந்ரவார்த்திக என்னும் நூலில்'தத்யதா த்ராவிடாதி பாஷாயாம் ஏவ - திராவிடம் முதலான (தொடர்புடைய பிற) மொழிகள் என்று குறிப்பிட்டுள்ளார். சமற்கிருதச் சொல் த்ராவிட என்பதும் தமிழ் என்ற சொல்லும் வேரளவில் தொடர்புடையன (Zvelebel 1984:10). அவ்வாறெனில் த்ராவிடாதி பாஷாயாம் என்னும் தொடருக்குத் தமிழ் முதலான மொழிகள் என்று பொருள் கொள்ள

வேண்டும். ஆனால் இத்தொடரை 'ஆந்த்ர த்ராவிட பாஷாயாம் ஏவ' என ஏ.சி.பர்னல் (கி.பி.1872) பிழையாகக் கொண்டதை கால்டுவெல்லும் பின்பற்றியதனால் கன்னடம் தெலுங்கிலும் மலையாளம் தமிழிலும் சேர்த்துப் பார்க்கத்தக்கன வென்றும் தமிழ், தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளையே தென்னாட்டு மக்களில் பெரும்பாலோரால் வழங்கப்பெற்ற மொழிகள் என்றும் குறிப்பிட நேர்ந்தது (Caldwell 1987:4). தமிழையும் தெலுங்கையும் ஒருசேரக் குமரிலபட்டர் குறித்தார் என்று தவறாகக் கொள்ள நேர்ந்தது. கால்டுவெல்லைப் போலவே இசுடென் கோனோ (கி.பி.1906) போன்ற பலரும் தவறாகப் பொருள் கொண்டு வந்துள்ளனர். என்றாலும் திராவிடம் என்னும் சொல் தென் இந்திய மொழிகளைக் குறிக்கப் பயன்படுத்தி வந்துள்ளதையும் கால்டுவெல் சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ளார்.

நோக்கம்

1. பல்வேறு திராவிட மொழிகளின் இலக்கண நெறிகள், சொல் வடிவங்கள் ஆகியவற்றை ஒன்றோடொன்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் வழி திராவிட மொழிகளின் மிகப்பழைய அமைப்பு முறை, அவற்றின் தனிச்சிறப்பு ஆகியவற்றைப் பற்றிய முழு விளக்கங்களைக் காட்டுவதே இந் நூலின் நோக்கம் (Caldwell 1987:1). திராவிட மொழிக் குடும்பத்தைப் பற்றி விளக்கும் வகையில் அதுவரை நிலவிவந்த திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து பிறந்தன என்னும் கருத்தை ஆணித்தரமாக மறுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்குரிய விளக்கங்களை அளிக்கும் வகையில் மொழிக் கும்பத்தின் இயல்பு, சமற்கிருதம் சார்ந்த இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பம், இக் குடும்பம் திராவிடக் குடும்பத்திலிருந்து வேறுபட்டுச் செயல்படும் இலக்கணமுறை, சொற்கள் அமைப்பு, வேர்ச் சொற்கள் என்பனபோன்று பல்வேறு வகைகளில் தெளிவுபட உரிய சான்றுகளுடன் விளக்கமாக ஆராய வேண்டிய நிலை உருவாகியது.

திருந்தாத் திராவிடமொழிகளில் சமற்கிருதச் சொற்கள் அரிதாகவே இடம்பெற்றுள்ளன. ஏறக்குறைய முழுமையாகச் சமற்கிருதச் சொற்கள் இல்லாமலிருக்கும் திருந்தாத திராவிட மொழிகளின் நிலை திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து பிறந்தவை அல்ல என்பதைக் காட்ட ஒரு வலுவான சான்றாகத் திகழ்கிறது. சில திராவிடமொழிகளால் தம்மிடமுள்ள சமற்கிருதச் சொற்களை முழுமையாக நீக்கி வழங்க இயலும். சமற்கிருதச் சொற்கள் திராவிடமொழிகளில் பெரும்பாலும் தேவை அடிப்படையில் இல்லாமல் அழகுப் பொருள்களாகவும் பகட்டொப்பனைப் பொருள்களாகவும் இருக்கின்றன (Caldwell 1987:45). என்பன போன்று அவர் குறித்துள்ளது எல்லாம் திராவிடமொழிகள் சமற்கிருதத்திலிருந்து வேறானவை எனக் காட்டுவதற்கே ஆகும்.

'கால்டுவெல்லின் ஒப்பிலக்கண ஆராய்ச்சி, அக்காலத்தில் அறியப்பட்ட எல்லாத் திராவிட மொழிகளையும் கருத்திற் கொண்டதெனினும், அடிப்படையில் அது தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு திருந்திய திராவிடமொழிகளை அடிப்படையாகக் கொண்டதே ஆகும். அக்காலத்தில் ஏனைய மொழிகளைப் பற்றிய ஆய்வுக்குரிய செய்திகள் குறைவே. ஆகையால் கால்டுவெல்லின் நூலை, தெலுங்கினை உள்ளடக்கிய நான்கு தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்றே கூறலாம்' (மீனாட்சி சுந்தரம் 1982 :18).

2. திராவிட மொழிகளுக்குள் மிகப்பழங்காலத்தில் திருந்திய நிலைபெற்றதும், நனிநாகரிகமாக ஆக்கப் பெற்றதும் பலவகையில் திராவிட இனத்திற்குப் படிநிகராளியாக விளங்குவதுமான தமிழ் மொழியின் அமைப்பு முறைப் பற்றிய விளக்கங்களைப் பெருமளவில் தருவதே இந்நூலாசிரியரின் இடைவிடாச் சிறப்பு நோக்கமாகும் (Caldwell 1987:1) என்று அவரே குறிப்பிட்டிருப்பதால் அவர் தமிழல்லாத பிற திராவிட மொழிகளுக்குத் தமிழை நோக்க குறைந்த அளவே இடம் தந்துள்ளார் என்பதைப் புரிந்துகொள்ளலாம். அதிலும் அவர் காலத்தில் ஆராயப் பெறாத திருந்தாத் திராவிடமொழிகளைப் பற்றிச் சுருக்கமாகவே குறிப்பிட்டுள்ளார். அவ்வகையில் தமிழால் கடனாகக் கொண்டிருக்கும் சமற்கிருதச் சொற்களை அறவே கைவிட்டு இயங்க இயலும் என்றும் அவ்வாறு அக்கடன் சொற்களை நீக்குவதனால் தமிழ் உயர்தனிச் செம்மொழியாம் பெருநிலை பெறும் என்றும் குறிபிட்டுள்ளார் (Caldwell 1987:46,47). கால்டுவெல்லின் தமிழ் அறிவு ஆழங்கால் பட்டது. இவரிடம் தமிழ் அல்லாத பிற திராவிட மொழிகளில் நேரடியான புரிதல் தமிழை நோக்கக் குறைந்த அளவே இருந்துள்ளது.

மூலமொழி

திராவிடமொழிகள் எல்லாம் பொதுவான இலக்கணப் பண்புகளைக் கொண்டுள்ளன. இவை தேவையான தனித்த இயல்புள்ளனவாக இருக்கின்றன. இம்மொழிகள் மிகப் பெருமளவிலான அடிப்படை வேர்ச்சொற்களைப் பொதுவாகக் கொண்டுள்ளன. இவற்றால் இவை அனைத்தும் ஒரே மூலத்திலிருந்து பிறந்தவை என்றும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்றும் மதிக்கும் உரிமையுடையவாகின்றன (Caldwell 1987:3).

இலக்கண அமைப்பில் காணும் ஒற்றுமை, ஒத்தவடிவுடைய சொற்கள் ஆகிய இரண்டும் மொழியினத்தைக் காட்டும் தன்மைகள். இவற்றுள் முதலாவது அடிப்படையானது. கடன் அடிப்படையில் சில சொற்கள் ஒத்த வடிவுடையனவாக இருக்கக் கூடும். அவ்வகையில்

இது மொழியினத்தைக் காட்டும் அடையாளமாகா (Caldwell 1987:38). பெரும் பகுதிச் சொற்களில் ஒத்த வடிவம் காணும் போது அது இலக்கண அமைப்பைப் போன்று அடிப்படையானதாகக் கொள்ளும் தன்மை பெறும். கால்டுவெல் இலக்கண விளக்கத்திற்கு விரிவாக இடம் அளித்துள்ளார். இதனை ஒப்புநோக்கும்போது ஒத்தவடிவுடைச் சொற்கள் (இனச்சொல்) தொகுப்பிற்கு அவ்வளவு இடம் அளிக்கவில்லை என்றுதான் குறிப்பிட வேண்டும். என்றாலும் இவர் திராவிடச் சொற்பிறப்பியல் அகரமுதலியின் தேவையைக் குறித்துள்ளார். ஒலியனியல், உருபனியல் ஆகியவற்றைப் பற்றிய விரிவான விளக்கம் கொடுத்துள்ளார். என்றாலும் தொன்மொழியை மீட்டுருவாக்கம் செய்யும் வகையைக் காட்டவில்லை என்கின்றனர் (Gopinathan Nair 2004:2).

'குடும்ப மொழிகள் பெரும்பாலானவற்றில் காணப்படுதல் என்ற அடிப்படையில் மூலத் திராவிட வடிவங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. அருகி வழங்கும் வடிவங்கள் சில சமயங்களில் மூலத் திராவிட மொழி வடிவங்களாக இருத்தலும் உண்டு' (மீனாட்சி சுந்தரம் 1982 :24).'செந்தமிழ் என்றழைக்கப்படும் இலக்கியத்தமிழ் திராவிடத் தொன்மொழியின் நிலையினைத் தெளிவாகக் காட்ட வல்லது என்று சிலர் கருதுகின்றனர். செந்தமிழின் பெருமையைக் குறைத்துக் கூற வேண்டியது இல்லை. என்றாலும் திராவிடத் தொன்மொழியைக் காட்டும் தனித்தகுதி எம் மொழிக்கும் இல்லை என்று நான் கருதுகிறேன். வழக்கிலிருக்கும் திருந்தாத் திராவிட மொழிகள் உட்பட அனைத்து மொழிகளின் ஒப்பீட்டு ஆராய்ச்சியே திராவிடத் தொன்மொழியைக் காட்டவல்லது என்று நான் கருதுகிறேன்' (Caldwell1987:77) என்றுகுறிப்பிடுவதிலிருந்து அவர்தொன்மொழியைக் காண்பதற்கு ஒப்பிலக்கண ஆராய்ச்சியை முழுமையாகச் செயல்படுத்த முயன்றுள்ளதை அறியலாம்.

ஒப்பிலக்கணத்தின் பணி இனத்தொடர்புடைய மொழிகள், கிளைமொழிகள் ஆகியவற்றின் இலக்கண அமைப்புகளைப் பகுத்தாய்வதும் ஒப்பிடுவதும் ஆகும். ஒப்பிடுவதன் மூலம் பழங்காலத்துச் சொல் வடிவங்களையும் அவற்றின் பொருள்களையும் கண்டறிவது இதன் நோக்கம் ஆகும் (Encyclopeadia Britanica 1911: Grammar). 19ஆம் நூற்றாண்டில் நடந்த ஒப்பிலக்கண ஆராய்ச்சிகளெல்லாம் அடிப்படை விளக்கங்களுடன் பொது மூலத்திலிருந்து உருவான , மொழிகளுக்கிடையே நிலவும் இனத் தொடர்புகளை நிலை நாட்ட முயன்றுள்ளன. மொழியில் காலந்தோறும் மாற்றங்கள் நிகழ்கின்றன. பெரும்பாலும் இம் மாற்றங்கள் முறையாகவும் ஒழுங்குக்கு உட்பட்டும் நிகழ்கின்றன. இக்கருத்தின் அடிப்படையில் இனமொழிகளுக்கிடையே நிலவும் உறவினை விளக்குவதன்வழி

அவை கிளைத்து வந்துள்ள பழங்காலத்துப் பொது மொழியை விளக்க ஒப்பிலக்கணம் முயல்கிறது. பழங்காலத்துப் பொதுமொழியைப் பதிவுகளுடன் காட்ட வேண்டும் அல்லது அது வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் என்னும் கட்டாயத்தை ஒப்பிலக்கண ஆய்வு கொள்வது இல்லை. பழங்காலத்துப் பொதுமொழியைக் கருதுகோளாகவே கொண்டு ஒப்பிலக்கணம் ஆராய்கிறது.

திராவிடமொழிகள்

1. தமிழ், 2. மலையாளம், 3. கன்னடம், 4. தெலுங்கு, 5. கோண்டி (*Gondi*), 6. குருக் அல்லது ஓரான், 7. துளு, 8. குவி, 9. கூயி அல்லது கோந்த் (*Khond*), 10. கோயா, 11. பிராகூய், 12. மால்டோ (இராஜ்மகால் அல்லது மாலர்), 13. குடகு, 14. படகு, 15. கொலாமி, 16. இருளா, 17. குறவா, 18. பார்ஜி, 19. கொண்டா அல்லது கூபி, 20. கதபா, 21. நாய்க்கி, 22. பெங்கோ, 23. கோத்தம், 24. ஒல்லாரி, 25. தொதவம் (மீனாட்சி சுந்தரம் 1982 :21,22), 26. இண்டி அவெ (*Indi-Ave*) (*Nagamma Reddy 2004:1*) ஆகியவை இப்பொழுது திராவிடமொழிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. மேலும் சில மொழிகளை அடையாளப்படுத்தி வருகின்றனர்.

கால்டுவெல் தாம் குறிப்பிட்ட 12 திராவிடமொழிகளுள் தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவுடைய மொழிகள் என்றாலும் அவற்றிற் கிடையேயும் புரிந்துகொள் தன்மை மிகக்குறைவு எனக் குறிப்பிடுகிறார். தாம் குறிப்பிட்ட பன்னிரண்டு மொழிகளுக்கிடையே புரிந்துகொள்ளும் தன்மைகொண்ட உறவுடைய இருமொழிகள் எவையும் இல்லை (*Caldwell 1987:40*). ஆகையால் திராவிட இன மொழிகள் பலவும் பொதுவான ஒரே மூலத்தினின்று தோன்றியனவே ஆயினும் அவற்றை ஒரு மொழியின் கிளைமொழிகளாகக் கருதாமல் இனத்தொடர்புடைய தனி மொழிகளாகவே கருதவேண்டும் (*Caldwell 1987:73*) என அவர் குறிப்பிட்டுள்ளார். திராவிடத் தொன் மொழியின் பழைமை, இம்மொழி பேசியவர்களுள் வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு தொடர்பு இல்லாத இடங்களில் வாழ்ந்து வந்தமை, திராவிடத் தொன்மொழி வழக்கிலிருந்த பெரிய நிலப்பரப்பு போன்றன இன்றைய திராவிடமொழிகள் உருப்பெறக் காரணங்களாகும்.

'துளு, குடகு, தொதவம், கோத்தம் ஆகிய தென் இந்திய சிறுமொழிகள் தமிழ், கன்னடம் ஆகிய இரு மொழிகளுக்கு இடைப்பட்ட நிலையில் இருக்கின்றன. அதுவும் மிகுதியான கன்னடச்சார்புடன் இருக்கின்றன' (*Griersion 1906: iv 284*). தமிழும் மலையாளமும் நெருங்கிய உறவுடைய மொழிகள். கன்னடமொழி தமிழிலிருந்து வேறுபடுவதைக் காட்டிலும் மிக அதிகமாகத் தெலுங்கிலிருந்து வேறுபடுகிறது (*Caldwell 1987:40*) என்பன போன்று

மொழிகளுக்கிடையே காணும் உறவுகளைக் குறிப்பிட்டிருந்தாலும் அவர் மொழிகளை உட்குழு (sub group) படுத்த முயலவில்லை என்கின்றனர் (Gopinath Nair 2004:2).

திராவிடவியல் களப்பணியில் இதுவரை அடையாளம் காணப்படாத மொழிகளைக் கண்டறிவது முதன்மையான பணியாகும். வயநாடு, நடுவண் இந்தியா போன்ற பகுதிகளில் இதுவரை கண்டறியப் படாத மொழிகள் இருப்பது வியப்பளிக்கிறது. அதேபோல் கடந்த சில ஆண்டுகளில் கண்டறியப்பட்ட மொழிகள் இன்னும் விளக்கப்படாமல் இருக்கின்றன. குருக் மொழியுடன் உறவு உள்ளதாகக் காணப்படுவதும் நேபாளத்தில் ஏறக்குறைய பத்தாயிரம் பேரால் பேசப்படுவதுமான தங்கார் (Thangar) மொழி கிளைமொழியா தனிமொழியா என்று இதுவரை விளக்கப்படவில்லை. நீலகிரியில் உள்ள மொழிகளுள் தொதவம், கோத்தம், படகு போன்ற ஒரு சில மொழிகளே இதுவரை விளக்கப் பெற்றுள்ளன. அங்கு இன்றைய அளவில் 16 முதல் 18 வரையான பழங்குடியினர் மொழிகள் உள்ளன. இருளா மொழியில் மேலெநாடு இருளா, வேட்டைக்காடு இருளா, கசபா, ஊராளி என்னும் நான்கு கிளைமொழிகள் உள்ளன. குறும்பா மொழியில் ஆலு குறும்பா, பாலு குறும்பா, முடுகா, ஜேனு குறும்பா, முள்ளு குறும்பா என்னும் ஆறுமொழிகள் இருக்கின்றன (Zvelebil 1984:5). இன்னும் கண்டறியப்பட வேண்டிய திராவிடமொழிகள் இருக்கின்றன; அடையாளம் கண்டுள்ள திராவிடமொழிகள் சில விளக்கப் படாமல் இருக்கின்றன. ஒப்பிலக் கணத்தில் சேர்க்க வேண்டிய சில செய்திகளாவது இம் மொழிகளில் இருக்கும் என்று நம்பலாம். அவ்வகையில் இவற்றை யெல்லாம் உள்ளடக்கி ஆராயப்பெறும் திராவிடமொழி ஒப்பிலக்கணமே முழுமையானது என்று குறிப்பிடலாம்.

கிளைமொழி

இலக்கியத் தமிழ் பேச்சுத்தமிழ் என்றோ பழந்தமிழ் புதுத்தமிழ் என்றோ செந்தமிழ் கொடுந்தமிழ் என்றோ பெயரிடப்பெற்று ஏறக்குறைய வேற்றுமொழிகளோ என மதிக்கத்தக்க வகையில் மாறுபடும் இருவகை மொழிநடைகளைத் தமிழ் கொண்டுள்ளது (Caldwell 1987:6) என்று குறிப்பிடுவதிலிருந்து அவர் இலக்கியக் கிளைமொழி, பேச்சுக்கிளை மொழி ஆகியவற்றைப் பற்றித் தெளிவாகவே அறிந்துள்ளார் என்பதை உணரலாம். இதைப் போலவே மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் எழுத்துக் மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் எழுத்துக் கிளைமொழி பேச்சுக் கிளைமொழி இருப்பதைச் சுட்டியுள்ளார். இவற்றால் கிளைமொழிபற்றிய தெளிவான கருத்தைக் கொண்டிருந்தார் என்பதை அறியலாம். மேலும் புரிந்துகொள் தன்மையை வைத்தே மொழி, கிளைமொழி ஆகியவற்றின் நிலையை உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் அறிந்துள்ளார்.

குடகுமொழியைக் கன்னடத்துக் கிளைமொழி என்று தம் ஒப்பிலக்கணத்தின் முதல் பதிப்பில் (கி.பி.1856) கால்டுவெல் கருதி இருந்தார். ஆனால் இரண்டாம் பதிப்பில் அதனைத் தனியான மொழி என்று குறிப்பிட்டுள்ளார். கால்டுவெல் படகு மொழியைக் கன்னடத்துக் கிளைமொழி அதுவும் பழங் கன்னடக் கிளைமொழி என்று குறிப்பிட்டுள்ளார் (Caldwell 1987:30). ஆனால் இப்பொழுது மொழியியல் அறிஞர்கள் இம்மொழியைத் தனியான மொழி என்று குறிப்பிட்டுள்ளனர்.

தமிழ் நாடு கேரளம் ஆகிய மாநிலங்களில் இருக்கும் சுசபா, காடர், ஊராளி, குறும்பா, முடுகா போன்றவை தனியான மொழிகளா இல்லை கிளைமொழிகளா என்று இன்னும் ஆய்வு முடிவுகள் வெளிவரவில்லை (Nagamma Reddy 2004:1).

தெற்காசிய மொழிக்குடும்பம்

கால்டுவெல் தம் ஒப்பிலக்கண நூலுக்குத் திராவிடம் அல்லது தென் இந்திய மொழிகள் குடும்பம் என்று பெயரிட்டுள்ளார். ஆனால் பாகித்தானம், நேப்பாளம், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் திராவிடமொழிகள் இருக்கின்றன. ஆகையால் இக் குடும்ப மொழிகளைத் தெற்காசிய மொழிகள் குடும்பம் என அழைப்பதே பொருத்தம் (Nagamma Reddy 2004:1). மற்ற இடங்களைப் போலில்லாமல் ஏறக்குறைய தென் இந்தியா முழுவதும் திராவிட மொழிகள் பேசுவோர் இருப்பதைக் கருத்திற் கொண்டு கால்டுவெல் அவ்வாறு பெயரிட்டுள்ளார் போலும். திராவிடம், தமிழ் ஆகிய சொற்கள் வேரளவில் தொடர்புடையன. தமிழும் இக் குடும்பத்தில் ஓர் உறுப்பாக இருப்பதால் இக் குடும்பத்திற்குத் திராவிடம் என்னும் பெயர் அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று கருதியதனாலேயே தென் இந்திய மொழிகள் குடும்பம் என்ற இன்னொரு பெயரையும் அவர் கொடுத்துள்ளார் எனலாம். எவ்வாறோ இப் பெயர் வேரூன்றவில்லை. திராவிடம் என்னும் பெயரே உலக முழுவதும் பரவியுள்ளது. இன்றைய நிலையில் இச் சொல் பொதுநிலையில் தன் பொருளை இழந்து ஓர் அடையாளக் குறியீடு என்னும் அளவில் பயன்பாட்டில் உள்ளது.

இன்றையநிலையில்மொழியியலாளர்கள்திராவிடமொழிகளைத் தென் திராவிடம், நடு திராவிடம், வடதிராவிடம் என வகைப்படுத்தி விளக்குகின்றனர். தென் திராவிடம் (தமிழ், மலையாளம், குடகு, கோத்தம், தொதவம், கன்னடம், துளு), நடு திராவிடம் (தெலுங்கு, கோண்டி, கொண்டா, பெங்கோ, மண்டா, கூயி, குவி, கொலாமி, நாய்க்கி சந்தா, பர்ஜி, கதபா), வடதிராவிடம் (குருக், மால்தோ, பிராகுயி) என்னும் உட்பகுப்பில் நடு திராவிடத்தில் அதிகப்படியான மொழிகள்

இருக்கின்றன. ஆகையால் நடு திராவிடம் மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் முன்னதாக மூலமொழியிலிருந்து பிரிந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர் (*Subrahmanyan 1983:iv, v*).

முன்னோடி

'ஓரினமொழிகளாகக் காணப்படும் மொழிகள் அனைத்தும் ஒரு காலத்தில் ஒரே மொழியாக, அதாவது தொன்மொழியாக இருந்தது என்றும், பின்னர் பல்வேறு கிளைமொழிகளாகப் பிரிந்தன என்றும், அதன் கிளைமொழிகளே சில பல காரணங்களால் பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் மாறுபாடு பெற்றுத் தனித்தனி மொழிகளாகப் பிரிந்து நின்றன என்றும் கருதுவர்...மூலமொழியைத் தொன்மொழி என்றும், பிரிவுபட்ட மொழிகளை இனமொழிகள் என்றும் மொழியியல் அறிஞர்கள் கருதுவர்.....இனமொழிகள் அனைத்திலிருந்தும் குறிப்பாக அவற்றிடையே காணப்படும் பண்புகளிலிருந்து மூலமொழி அல்லது தொன்மொழிக் கூறுகளைக் கண்டுபிடிப்பதே ஒப்பிலக்கண ஆராய்ச்சியின் நோக்கம்' (அகத்தியலிங்கம்*1978:63,64*). இவ் வொப்பிலக்கண அடிப்படைக் கருத்துகளைத் திராவிடமொழிகளுக்கு முழுவதுமாகப் பொருத்தி ஆராய்ந்துள்ள தன்மையையே திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

திராவிடக் குடும்ப மொழிகளுக்கு ஒப்பிலக்கணம் வரைந்த முதல் அறிஞர் கால்டுவெல். ஒரே குடும்ப மொழிகளை ஒப்பிட்டு ஆராய்தல் என்னும் அடிப்படையிலான ஆராய்ச்சி 19ஆம் நூற்றாண்டுக்கு முன் திராவிடக் குடும்பத்து மொழிகளுக்கு மேற்கொள்ளப்படவில்லை. கால்டுவெல் தம் ஒப்பிலக்கண ஆராய்ச்சியை மேற்கொண்ட காலத்தில் மொழியியல் துறையின் வளர்ச்சி மிக மிகக் குறைவாகவே இருந்தது. அக்காலத்தில் இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைப் பற்றிய ஒப்பிலக்கண ஆய்வும் வளர்ச்சி பெறாத நிலையில் இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இச் சூழல் பின்னணியில் பார்த்தால் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணத்தின் சிறப்பினையும் இன்றியமையாமையையும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

திராவிட மொழியியலுக்கு வித்திட்டவர் கால்டுவெல். இவருக்கு முன் இக் குடும்பம் தனியானது எனத் தெளிவற்ற நிலையில் அறியப்பட்டிருந்தாலும் அதைத் தெளிவுடையதாக்கி முழுமையாக வளர்த்தெடுத்த பெருமை இவரையே சாரும். இம் மொழிக் குடும்பத்திற்குத் தனியான ஒரு பெயர் (திராவிடம் அல்லது தென் இந்திய மொழிக் குடும்பம்) அமைய காரணமாக இருந்தவரும் இவரே.

குறிப்புதவி நூல்கள்

1. அசத்தியலிங்கம், க.,1978 உலக மொழிகள் ஐந்தாம் பகுதி திராவிட மொழிகள், அனைத்திந்திய மொழியியற் கழகம், அண்ணாமலை நகர்

2. ஞானசுந்தரம்,வ.,2009, இந்தியச் சூழலில் மொழி இழப்பு: ஒரு சமுதாய மொழியியல் பார்வை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை

3. மீனாட்சிசுந்தரன்,தெ.பொ.,1982, தமிழ்மொழி வரலாறு (தமிழாக்கம் ச.செயப்பிரகாசம்), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை

4. *Caldwell,Robert, 1987, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, AES, New Delhi (first published 1913)*

5. *Encyclopaedia Britannica, 1978, University of Chicago, USA*

6. *Gopinathan Nair,2004, A Dravidian Etymological Dictionary and its impact on Comparative Dravidian Studies, 32nd All India Conference of Dravidian Linguists, Warangal*

7. *Grierson (Sten Konow), 1906, Linguistic Survey of India, Calcutta*

8. *MaxMuller, 1965, Lectures on The Science of the Language, Munshi Ram Manoharlal, New Delhi (first published 1861)*

9. *McAlpin, David W., 1981, Proto & Elamo & Dravidian: The Evidence and its Implications, The American Philosophical Society, Philadelphia.*

10. *Nagamma Reddy, K., 2004, Dravidian Phonology ,Contribution of Prof. M.B.Emeneau, 32nd All India Conference of Dravidian Linguists, Warangal*

11. *Ramakrishna Reddy, B.,2009, Language Endangerment and Fieldwork on Tribal Languages and Literature,IJDL,Thiruva nanthapuram*

12. *Shanmugam,S.V., 1980, Foreword, The Lanuage of Kattunaicka, A Linguistic Study by S.Natanasabapathy,AnnamalaiUniversity*

13. *Subrahmanyam, P.S., 1983, Dravidian Comparative Phonology, Annamalai University, Annamalai Nagar*

14. *Upadhyaya, U.P., 1985, Karaajina Tulu Lexicon Specimen Volume&2, M.G.M.College ,Udupi 15.Zvelebi, Kamil V.,1984, Dravidian Linguistic Today, Journal of Asian Studies, Vol. 2 No.1 September 1984*

❦ ❦ ❦

10. கால்டுவெலார் ஆய்வின்வழி வெளிப்படும் தமிழ் - கன்னட உறவுநிலை

முனைவர் கு. பூங்காவனம்
மேனாள் பேராசிரியர், பெங்களூரு

கால்டுவெலார் நாற்பதாண்டுக் காலம் தமிழாராய்ச்சியும் திரவிடமொழி ஆராய்ச்சியும் மேற்கொண்டவர். அவர்தம் 'திரவிடமொழிகள் - அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பத்தின் ஒப்பீட்டாராய்ச்சி' என்னும் நூல் 1856 ஆம் ஆண்டு வெளியானது. அதன் திருந்திய இரண்டாம் பதிப்பு 1875 இல் வெளிவந்தது. அந் நூல் திரவிட மொழி ஆராய்ச்சியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது; புதிய வழியை வகுத்துக் கொடுத்தது.

அவர் ஆய்வை மேற்கொண்ட காலச்சூழல் - ஆரிய, அல்லது வடமொழி மாயை என்னும் இருள் கவ்வியதாக இருந்தது - இது ஒருபுறம்;

தொல்காப்பியமும் கடைக்கழக (கடைச்சங்க) இலக்கியங்களிற் பலவும் வெளிப்படாமல் இருந்தமை - மற்றொரு புறம்;

தமிழின் உண்மையையும் தொன்மையையும் உணர்த்தும் கல்வெட்டு, செப்பேடு, புதைபொருள் ஆய்வு முதலானவையும் பெரும்பாலும் மறைப்புண்டு கிடந்தமை - இன்னொரு புறம்;

இயல்பான தமிழுணர்ச்சி மங்கியும் மழுங்கியும் கிடந்தமை - வேறொரு புறம்;

இவற்றுக்கிடையே அப்பெருமகனார், தமிழையும் - 'மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழி'யாகவே கொண்டுதான் இவ் ஒப்பியல் ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டியவராக இருந்தார். அம்மட்டிலேயும் கூட அவர்தம் ஆராய்ச்சியால் வெளிப்போந்த உண்மைகள் பல அசைக்கமுடியாத உறுதியுடன் நிலைப்பட்டன.

அந்நூலின் முதற்பதிப்புக்கும், திருந்திய இரண்டாம் பதிப்புக்கும் இடையே இருந்த வேறுபாடுகளே - அவர்தம் ஆராய்ச்சியின் செம்மைப்பாட்டையும் உண்மைச் சார்பையும் காட்டுவனவாகும்.

அந் நூலில் திரவிட மொழிகளுக்கு இடையே காணப்படும் பொதுவான உறவுநிலையில் - குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழ் - கன்னட உறவுநிலையை இக் கட்டுரை எடுத்துரைக்கின்றது.

தமிழ் - கன்னட உறவு நிலையை நேரடியாகக் காண்பதற்கு முன் - அதற்கு உதவுமாறுள்ள சில செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும்.

திரவிட மொழிகளின் கொடிவழி மரபு யாது?

உலக மொழிகள் அனைத்தையும், அல்லது அவற்றில் பலவற்றையும் - அவை தமக்குள் காணப்படும் உறவையும் ஒற்றுமையையும் கொண்டு பல்வேறு மொழிக் குடும்பங்களாக மொழியாராய்ச்சியாளர்கள் வரையறை செய்துள்ளனர். அவற்றின் சுருக்கமாக, உலக மொழிக் குடும்பங்களை -

ஆத்திரேலியம் முதல் தென்னாப்பிரிக்க மொழிகள் வரை உள்ள மொழிக் குடும்பங்கள் பதினெட்டு என்றும்;

வட அமெரிக்க மொழிக் குடும்பங்களாக அல்காங்குவியம் முதல் தனோவம் வரை உள்ளவையாகிய மொழிக் குடும்பங்கள் பதினைந்து என்றும்;

மொழிப் பேரறிஞர் பாவாணர் சுருக்கமாகச் சுட்டுகின்றார்.[1]

திரவிட மொழி ஆராய்ச்சியாளராகிய கால்டுவெலார், திரவிட மொழிகள் சித்திய (துரேனிய) மொழிகளுக்கு இனமானவை என்று கூறுகின்றார்.

> 'இந்தோ ஐரோப்பிய மொழிகளுக்கும் துரேனிய அல்லது சித்திய மொழிகளுக்கும் இடையே - திராவிடமொழிகள் தங்களுக்கு உரிய இடத்தைப் பெறுகின்றன என்பதும், அவ் இடம், அவ் இரண்டு மொழிகளுக்கும் நடுவேயானதாக இல்லாமல், பின்னர்க் கூறப்பட்ட துரேனிய (அல்லது சித்திய) மொழிகளுக்கு நெருக்கமானதாக உள்ளது என்பதுமே எனது கொள்கையாகும்'[2]

என்றும்,

> 'இவ் உறவு - ஒலிமுறைத் தொடர்பினதாக இல்லாமல், ஏதாவது

> ஒருவகையில் கணித்துக் கூறத்தக்கவாறு - கொடிவழித் தொடர்பாகவே உள்ளது என்றே எனக்குப் படுகிறது[3]

என்றும் அவர் கூறுகின்றார்.

ஆயின், இவ் ஆராய்ச்சி மேலும் மேலும் என வளர்ந்த நிலையில் -

> 'தென்னிந்தியாவிலும் நடுவிந்தியாவிலும் வட இந்தியாவின் கீழைக்கோடியிலும் மேலைக்கோடியிலும் பேசப்படும் மொழிகள், தென்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. இவை மேலை வழக்கில் திரவிடம் (Dravidian) எனப்படும். இற்றையாராய்ச்சியால், ஆரியக் கலப்பை நீக்க முடியாத தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளே திரவிடம் என்றும், அதை நீக்க முடியும் தமிழ் அவற்றினின்று பிரிந்து தனித்து நிற்பதென்றும், வேறுபடுத்தப்பட்டுள்ளன. தென்மொழிக் குடும்பத்தைத் தென்னிந்தியம் அல்லது தமிழியம் என்றும் கூறலாம்.[4]

என்று பாவாணர் கூறுவதே ஏற்புடையதாக உள்ளது.

திரவிடம் என்னும் சொல் வரலாறு

'தமிழ்' என்பது 'திரவிடம்' எனத் திரிந்ததா? அல்லது திரவிடம் என்பதில் இருந்துதான் தமிழ் என்னும் சொல் வந்ததா? என்னும் மயக்கத்துக்கு இப்போது இடம் இல்லை. ஏனென்றால் 'தமிழ்' என்பதன் ஆரியத்திரிபே 'திராவிடம்' என்னும் உண்மை இப்போது உறுதிப்பட்டுவிட்டது. ஆயின் கால்டுவெலார் காலத்தில் அவ் ஐயப்பாடு மேலோங்கி இருந்ததால், அவர் 'திரவிடம்' என்பதுதான் 'தமிழ்' ஆயிற்று என்னும் கொள்கையைக் கொண்டவராக இருந்தார். அது பற்றி அவர் பின்வருமாறு கூறுகின்றார்.

> 'தமிழ்' என்பதற்கு இணையான சமற்கிருதச் சொல் 'திராவிடம்' என்பதாகும். அச் சொல் அங்கு வாழும் மக்களையும் அவர்கள் பேசும் மொழியையும் குறிப்பதாகும். தமிழ், திராவிடம் என்னும் இரண்டு சொற்களும் பெருமளவில் வேறுபடுகின்றவையாய்க் காணப்பட்டாலும் அவற்றின் தோற்றம் மிகவும் ஒத்துள்ளது என்னும் முடிவுக்கே நான் வருகின்றேன். அவ்வாறு அவ் இரண்டையும் ஒன்றாகக் கொள்ளும் போது - தமிழ் என்பதில் இருந்து திராவிடம் திரிந்தது என்பதைக் காட்டிலும் திராவிடம் என்பதில் இருந்துதான் தமிழ் என்ற சொல் திரிந்தது என்று கொள்வதே எளிதாகின்றது[5]

கால்டுவெலாரின் இப் பிழைபாட்டுக்குக் காலத்தின் கோலம் தான் காரணமாகும்.

தமிழ்மொழிக் குடும்பமா ? திரவிடமொழிக் குடும்பமா ?

திரவிட மொழிகளாகக் கூறப்படுபவற்றைத் தமிழ்க் குடும்பத்தின என்று கூறுவதா? அல்லது அவற்றைத் திரவிடக் குடும்பத்தின என்பது தகுமா? என்னும் வினாக்களுக்கு விடைகாண்பது, திரவிட மொழிகளுக்கு இடையே தமிழுக்கு உரிய இடம் எது என்பதையும்; தமிழுக்கும் பிற திரவிட மொழிகளுக்கும் இடையே உள்ள உறவு எத்தகையது என்பதையும் உறுதிப்படுத்தும்.

தமிழ் மொழிக் குடும்பம் என்று குறிக்கப்படுமாயின் தமிழின் தலைமையும் தாய்மைத் தன்மையும் ஐயத்துக்கு இடம் இன்றி ஏற்கப்படுவதாகும். அன்றித் திரவிட மொழிக்குடும்பம் என்று குறிப்பதாயின் - ஏனைய திரவிட மொழிகளுக்கு இடையே தமிழும் ஒன்று என்னும் கருத்தே புலப்படுவதாகும்.

கால்டுவெலார், அவர்தம் காலத்தில் இருந்த இருண்மையான சூழலிலும் தமிழின் தலைமை இடத்தைச் சரியாகவே அறிந்திருக்கிறார் என்பது -

> 'திராவிட மொழிகள் அனைத்திலும் மிகவும் முந்திப் பண்பட்டது தமிழாகும். அது மிகவும் வளமானதாகவும் மிக முந்திய மொழிவடிவங்கள் பலவற்றையும் சற்றும் ஐயத்துக்கு இடமில்லாமல் கொண்டுள்ளதாகவும் உள்ளமையால் அது தலைமையான இடத்தில் சுட்டுவதற்கு உரியதாக உள்ளது'[6]

என்றும்;

> 'தற்காலக் கன்னடமும் தற்காலத் தெலுங்கும் தமிழினின்றும் வேறுபடுவனவற்றில் - பழங்கன்னடமும் பழ மலையாளமும், துளுவும் துடவும் கோண்டும், கூவும் தமிழுடன் ஒத்திருப்பவையாய் உள்ளன. இது தமிழின் தொன்மைக்கும் தூய்மைக்கும் மற்றொரு சான்றாகும்'[7]

என்றும்;

பிறவாறும் அவர் எடுத்துரைத்திருப்பனவற்றில் இருந்து அறிய முடிகின்றது. எனினும் அவர் தமிழ்மொழிக் குடும்பம் என்னாமல், திரவிட மொழிக்குடும்பம் என்றே சுட்டுவதற்கு முற்படுகின்றார். அதற்கு அவர் கூறும் காரணங்களாவன:

1. 'ஆந்திர - திராவிட பாசை' என்னும் குமரில பட்டரின் கூற்று

இதுபற்றி அவர் கூறுவது:

> 'அம் மொழிக் குடும்பத்தைக் குறிப்பதற்கு ஆந்திர - திராவிட பாசை - அதாவது - தமிழ் - தெலுங்கு மொழி அல்லது தெலுங்க - தமிழ நாடுகளின் மொழி என்ற பழமையான சமற்கிருதச் சொல்

பயன்படுத்தப்பட்டுள்ளது. இது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரில பட்டர் என்பவரால் குறிக்கப்பட்டது. இங்குக் கன்னடமொழி தெலுங்கு மொழிக்குள்ளும், மலையாளம் தமிழ் மொழிக்குள்ளும் அடக்கிக் கூறப்பட்டன போலும்[8]

கால்டுவெலாரின் இக்கூற்று வலிந்து கூறுவதாகவே உள்ளது. குமரில பட்டர் தம் கூற்றுக்கு 'ஆந்திரம் ஆகிய இடத்தில் வழங்கிய தமிழ்' என்பதே நேர்மையான பொருளாக இருத்தல் வேண்டும். அக் காலத்தில் கொடுந்தமிழ்த் திரிபாகவே தெலுங்கு வழங்கியிருக்கக் கூடும். கன்னடத்தின் நிலையும் அத்தகையதாகவே இருந்திருத்தல் வேண்டும். இன்னும் பிந்திய மலையாளம் தமிழில். அடக்கப்பட்டது போலும் என்பது காலவழு என்னும் பிழையுடையதாகும்.

2. தமிழ் என்பது தமிழைமட்டும் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.

என்பது அவர் கூறும் இரண்டாவது காரணம் ஆகும்.

> 'ஐரோப்பிய ஆராய்ச்சியாளர்கள் தமிழியம் (Tamulic) அல்லது தமிழன் (Tamilian) என்ற பெயராலேயே அம் மொழிக்குடும்பத்தைக் குறித்தனர். ஆனால் அக் குடும்ப மொழிகளுள் தமிழ் மிகப் பழமையானதாகவும், மிகவும் உச்சமான பயன்பாட்டினதாகவும், அம் மொழிக் குடும்பத்தின் சொல்வடிவங்களிலும் வேர்ச் சொற்களிலும் மிக அதிகமான அளவில் அம் மொழிக்குடும்ப உடைமைகளைக் கொண்டதாகவும் இருப்பதால் - அம் மொழியையும், அம் மொழி பேசும் மக்களையும் குறிப்பதற்கு மட்டும் அச் சொற்களைப் பயன் படுத்துகின்றேன். எனவே அம் மொழிக்குடும்பத்தை - இன்னும் விரிந்த பொருளை உணர்த்தும் வேறு ஒரு சொல்லால் குறிப்பதையே நான் விரும்பி ஏற்கிறேன்'[9]

என்று 'திராவிடம்' என்னும் சொல்லை விரும்பி ஏற்றதற்கு அமைதி கூறுகின்றார். எனினும் திராவிடம் என்னும் சொல்லின் போதாமையையும் பொருத்தமின்மையையும் உள்ளுர உணர்ந்து கொண்ட அவர், தமது நூற்பெயரின் பிற்பாதியாக - 'அல்லது தென்னிந்திய மொழிகள்' என்று குறித்திருப்பதையும் அறியலாம் !

'தமிழ்' என்னும் சொல்லைத் 'திரவிடம்' என்னும் சொல்லின் திரிபாக அவர் ஏற்றதே - அவர்தம் கூற்றுக்கு உண்மைக் காரணமாதல் கூடும்.

கன்னடம் என்னும் சொல்

'கன்னடம்', 'கருநாடகம்' என்பவை பற்றிப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன, அவை:

1. நூற்றுவர் கன்னர் ஆண்ட வானவாசி என்னும் நாட்டின் பெயரடியாகத் தோன்றிய 'புன்னாடு' என்பதே கன்னடநாடு என்றாயிற்று என்பது ஔவை. சு. துரைசாமி அவர்கள் கூறும் காரணம்[10]

இது பெயரளவில் காணப்படும் ஒற்றுமையேயாகும்.

2. மேற்குக் கடற்கரையை ஒட்டியிருந்த நாடு என்பதால் கரைநாடு - கருநாடு ஆயிற்று என்று பொதுவாகச் சிலரால் கூறப்படுகிறது. இவ் விளக்கம் கரை ஓர ஊராகிய கார்வார் என்பதற்குப் பொருந்துமே யன்றி, நாட்டைக் குறிப்பதாகாது.

3. கூத்து வகைகளில் இழிந்த வகை கருங்கூத்து என்று கூறப்பட்டது. நாடகம் என்பது கதை தழுவி வரும் கூத்து. இன்னும் 'யக்சகானம்' என்னும் கருங்கூத்து நடிக்கப்பட்டு வருவது - என்பனவாகிய காரணங்களைக் கூறி அதனால் கருநாடகம் என்னும் பெயர் தோன்றியிருக்கலாம் என்று பாவாணர் கூறினார்.[11]

4. கரிசல் பாங்கான மண்ணை உடைய நாடு என்று கால்டுவெலார் கூறினார்.

'திராவிடச் சொற்களாகிய கர் - கருப்பு, நாடு - தேயம் கருமையான நாடு - கரிசல் பாங்கான மண்ணை உடைய நாடு என்று அச் சொல்லைத் திரிப்பதை முனைவர் குண்டர்டு அவர்களுடன் நான் ஒப்புகின்றேன்'[12]

என்பது அவர் கூற்று. கருநாடகம் என்பதன் திரிபே கன்னடம் என்றும், கருநாடகத்துக்குப் பண்டிதர்கள் சமற்கிருத மூலம் கற்பிப்பது பொருந்தாது என்றும் அவர் மேலும் கூறினார்.

இங்கு ஒரு வரலாற்றுச் செய்தியை நினைவு கூர்தல் தகும். கருநாடக மாநிலத்தின் முன்னைப் பெயராகிய மைசூர் (மாநிலம்) என்பதைப் பெயர் மாற்றம் செய்வதற்கு அம் மாநிலச் சட்டப்பேரவையில் சிலர் 'கன்னட நாடு' என்றும் வேறுசிலர் 'கருநாடகம்' என்றும் கூறினர். அன்றைய முதலமைச்சர் தேவராச அர்சு அவர்கள்;

'கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்' (சிலப். 25: 156)
'கொங்கணக் கூத்தரும் கொடுங்கரு நாடரும்' (சிலப். 26:106)

என்னும் சிலப்பதிகார மேற்கோள்களைக் காட்டிக் 'கருநாடகம்' என்னும் பெயரை ஏற்கச் செய்தார்.

கருநாடகம் என்னும் சொல் திரவிடத் தோற்றத்தை யுடையது என்பதைக் கால்டுவெலார் கண்டு கொண்டாரேனும்[13]

- அவர்க்கு இச் சிலப்பதிகாரச் சான்று அறியப்படாததாகவே இருந்தது போலும்.

தமிழின் முன்மையும் - கன்னடம் முதலானவற்றின் பின்மையும்

தமிழின் தொன்மையையும், (அதனால் ஏனைய திரவிட மொழிகளின் பின்மையையும்) பற்றிக் கால்டுவெலார் கூறுவனவற்றுள் பின்கண்டவாறு மூன்று சான்றுகளை மட்டும் இங்கு எடுத்துக் காட்டலாம்.

1. திரவிட மொழிகள் அனைத்திலும் தமிழே மிகவும் முந்திப் பண்பட்ட மொழி என்று கூறுதல். (அடிக்குறிப்புகள் 6, 7 இல் கூறப்பட்டவை)

   தமிழின் பல்லாயிர ஆண்டுக்காலப் பழமையை அறியமுடியாத காலத்தினராகிய கால்டுவெலாருக்கு - அது திரவிட மொழிகள் அனைத்திலும் முந்திப் பண்பட்டது; மிக்க வளமானது என்று மட்டும்தான் உறுதிப்படுத்த முடிந்தது.

2. தமிழரசன் பாண்டியனின் (கடற்கரைத்) தலைநகரமாகிய கொற்கையைத் தாலமியும் பெரிப்புளூசு ஆசிரியரும் குறித்துள்ளதைச் சான்று காட்டுதல்

   'கொற்கை ஆகிய இவ்விடத்தின் பெயர் தாலமியாலும் பெரிப்பிளசுவின் ஆசிரியராலும் சுட்டப்படுகின்றது. அவ் இருவருமே அது பாண்டியனின் மீன்பிடித் தலைநகரமாக விளங்கியது என்பதை ஒப்புகின்றனர்'[14]

   குமரிக்கண்ட வரலாறு, முக்கழகங்கள் (முச்சங்கங்கள்) பற்றிய குறிப்புகள் என்னும் தொல்பழஞ் சான்றுகளைக் கால்டுவெலார் அறிய முடியாதவரானர். அதனால் தமிழரின் தொன்மைக்குத் தாலமியையும் பெரிபுளூசு நூலையும் சான்றாகக் கொண்டார்.

   தாலமி, கொலம்பசு, தலைமகன் குக் (*Captain Cook*), அமெரிக்கோ வெசுபுகி, யுவான்சுவாங்கு, பாகியான் என்னும் வழிப்போக்கர்களின் குறிப்புகள் அரிய வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுகின்றன. தலைக்கழக நூலாசுச் செங்கோன் தரைச் செலவு என்னும் நூலைப்பற்றிய குறிப்பு மட்டும் அறியப்படுகின்றது. காலத்தால் அது குறைந்தது பத்தாயிர ஆண்டுக்காலப் பழமையுடையதாக இருத்தல் வேண்டும். பொருளால் அதுவே உலகில் முதன் முதலில் தோன்றிய வழிப்போக்கு (பயண) நூலாகவும் இருத்தல் வேண்டும். அதில்கூறப்பட்டிருந்த வரலாற்றுக்குறிப்புகள்தாம் எத்தனையோ? எத்தன்மையவோ? அவலம்! பேரவலம்!

3. இவ் இரண்டு சான்றுகளைக் காட்டிலும் மிகவும் வலிமையான கல்வெட்டுச் சான்று பற்றிக் கால்டுவெலார் சுட்டுவது ஓர் அறுதலாகின்றது. தமிழ்நாட்டிற் காணப்பட்ட கல்வெட்டுகள் பற்றியும், பிற திரவிட நாட்டுக் கல்வெட்டுகள் பற்றியும் அவர் கூறுவது வருமாறு:-

'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் இருந்து தமிழின் தொன்மையை முடிவு செய்யக்கூடும். கருநாடகத்திலும் தெலிங்கானாவிலும் - பழைமையான எல்லாக் கல்வெட்டுகளும்; அண்மைக்காலக் கல்வெட்டுகளில் மிகப் பலவும் - சமற்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளன. பழைமையான கன்னட, தெலுங்குக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்து வடிவங்களும் (சமற்கிருத ஒலிப்பு முறைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ள) சமற்கிருத மொழியிலேயே உள்ளன. அதற்கு மாறாகத் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பழைமையானவை அனைத்தும் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக உள்ள எக் கல்வெட்டும் சமற்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளதாக நான் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. பழம் பாண்டியரின் ஒன்றிணைந்த நாட்டுப்பகுதியாகிய திருவாங்கூர், திருநெல்வேலிக் கல்வெட்டுகள் அனைத்தின் அச்சுப்படியையும் நான் பெற்றுள்ளேன். அவ்வாறு நான் கொண்டுள்ள கல்வெட்டுப் படிகளின் எண்ணிக்கை நூற்றைம்பதாகும்'[25]

தமிழ் - கன்னடம் உள்ளிட்ட திரவிட மொழிகளின் மொழித் தூய்மையும், மொழிக் கலப்பும்

தமிழும் அதன் இன மொழிகளாகிய திரவிட மொழிகளும் கொடிவழித் தொடர்புடையவை என்பது ஐயத்துக்கு இடமின்றி உறுதியாகியுள்ளது. அத் தொடர்பு நாளடைவில் விலகிச் சென்று விட்டதற்குக் காரணம் - அவற்றுக்கு இடையே புகுந்த ஆரிய மொழித்தாக்கம் என்பதும் அவ்வாறே அறியத்தக்கதாக உள்ளது.

ஆரிய மயமாதலைத் தமிழால் எதிர்க்க முடிந்தது. சிற்சில இழப்புகளுடன் ஆரிய மயமாதலில் இருந்து தற்காத்துத் தப்பிக்கவும் தமிழால் முடிந்தது. அந்த நிலை ஏனைய திரவிட மொழிகளுக்கு இல்லாமையால், அவை அத் தாக்கத்துக்கு உள்ளாகித் தங்களுடைய திரவிட அடையாளங்களிற் பலவற்றை இழக்க வேண்டியதாயிற்று. அதற்கு ஏற்றவாறே அவற்றின் தமிழ்த் தொடர்பிலும் விரிசல் மிகுவதாயிற்று.

இவ் அவல நிலையை முதன்முதலில் அடையாளம் கண்டு காட்டியவர் கால்டுவெலார், அவர்தம் கூற்று வருமாறு :-

'தெலுங்கிற்குத் தன்னிடத்தில் உள்ள சமற்கிருதத்தை விலக்குவது

அரிதாகும் என்பது உண்மை. கன்னடத்திற்கு அவ்வாறு செய்வது இன்னும் மிகவும் அரிதாகும். மலையாளத்துக்கோ இன்னும் மிகமிக அரிதாகும். அம் மொழிகள் சமற்கிருதச் சொற்களைப் பேரளவில் கடன் வாங்கியதோடு, அவை சமற்கிருதத்தின் உதவியை இன்னும் வேண்டி நிற்பதையே வழக்கமாக்கிக் கொண்டு விட்டன. அதனால் அம்மொழிகள் தத்தம் தனித்தன்மையை நிலைநாட்டிக் கொள்வது இயலாததாகின்றது. ஆனால் திரவிட மொழிகளுக்குள் மிக உச்சமாகப் பண்படுத்தப் பட்டதாகிய தமிழ் - தேவைப்பட்டால் அதனிடம் உள்ள எல்லாச் சமற்கிருதச் சொற்களையும் விலக்கிவிட்டுத் தனியே நிற்க முடியும் என்பதோடு - அச் சமற்கிருதத் துணையில்லாமல் வளமாக இருக்கவும் முடிவதாகும்'[16]

தமிழ்ச் சொற்களும் - கன்னடம் முதலான பிற திரவிட மொழிச் சொற்களும்

பல்லாயிரக்கணக்கான தமிழ்ச்சொற்கள் கன்னடம் முதலான பிற திரவிட மொழிகளில் இருவகை வழக்கிலும் திரிந்தும் திரியாமலும் வழங்குகின்றன. தமிழில் முன்னர் இருவகை வழக்கிலும் வழங்கிய திங்கள் என்னும் சொல் இன்று பேச்சு வழக்கு ஒழிந்தும் இலக்கிய வழக்கில் அருகியும் காணப்படுகிறது. அச் சொல் கன்னடத்தின் இருவகை வழக்கிலும் இன்றும் வழங்குவதாய் உள்ளது.

ஒரு பொருட் பன்மொழியாகவும், பொதுச் சொல் சிறப்புச் சொல் என்னும் முறையிலும் உள்ள தமிழ்ச் சொற்கள் - பிற திரவிட மொழிகளில் சென்று வழங்குவதைக் கால்டுவெலார் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் இது பற்றிக் கூறியது வருமாறு :

> 'ஒருபொருட் பல சொற்கள் பற்றி ஆராயுங்கால் - அவை தமிழில் மிக்கிருப்பனவாகவும், பிற திரவிட மொழிகளில் மிகக் குறைவாகவும் உள்ளமையைத் - தமிழ் ஆய்வாளர் எளிதாகக் கண்டு கொள்ளமுடியும்.... இவ்வாறு தமிழில் பொதுவாக வழங்கும் ஒரு சொல் வீடு என்பதாகும். ஆயின் அதனைக் குறிக்கும் பலசொற்களில் - தெலுங்கில் வழங்கும் 'இல்' (தெலுங்கில் இல்லு); கன்னடத்தில் சிறப்பாக வழங்கும் மனை (கன்னத்தில் மனெ); சமற்கிருதத்திலும் பின்னிய மொழிகளிலும் பொதுவாக வழங்கும் 'குடி' - ஆகிய சொற்களைக் காணமுடியும். இவ்வாறு, இலக்கணம், சொற்றொகை ஆகியவற்றுக்கான திரவிட வடிவங்கள், வேர்கள் ஆகியவற்றின் சேமக் கருவூலமாகத் தமிழ் திகழ்கின்றது'[17]

தமிழ் - கன்னட இலக்கணக் கூறுகளின் ஒப்பீடு

'ஒப்பியல் இலக்கணம்' என்னும் பெயருக்கு ஏற்றவாறு - திரவிட மொழி இலக்கணக் கூறுகளைக் கால்டுவெலார் தக்க சான்றுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளதோடு - அவ் ஆய்வைத்

திரவிட மொழிகளுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் - உலக மொழிகளில் சிலவற்றுடனும் ஒப்பீடு செய்துள்ளார். அவ் ஆய்வில் மிகவும் நுணுக்கமான இலக்கணக் கூறுகள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

அவற்றுள் சில இலக்கணக் கூறுகளை மட்டும் அவற்றையும் கன்னடம் முதலான திரவிட மொழிகள் அளவிலும் என இங்கு எடுத்துரைக்கப்படுகின்றன. அவை வருமாறு;

1. எழுத்து முறை (வரிவடிவும் ஒலிப்புமுறையும்)

திரவிட மொழிகளின் எழுத்து வரிவடிவங்களைப் பற்றிக் கால்டுவெலார் பின்கண்டவாறு கூறியுள்ளார்.

> 'திராவிட மொழி எழுத்துகளின் வரிவடிவில் இப்போது மூன்று வகைகள் உள்ளன. அவை - தமிழ்வடிவம், மலையாளவடிவம், தெலுங்கு - கன்னட மொழிகளின் ஒன்றிணைந்த வடிவமாகிய - வேறுபாடுகள்மிகச்சிலவாகவும் - அவையும் முதன்மையற்றவையாகவும் உள்ள வடிவம் என்பவை'[18]

ஆயின் திரவிட மொழிகளின் ஒலிவடிவங்களைப் பொறுத்த மட்டில் அவை இரண்டாகவே உள்ளன. அவை:

1. தமிழ்மொழி வண்ணமாலை
2. ஏனைய திரவிட மொழிகளின் வண்ணமாலை - என்பவை

கன்னடமும் பிற திரவிட மொழிகளும்

1. சமற்கிருதத்தின் உயிர் எழுத்துமுறையை ஏற்றுக் கொண்டுள்ள நிலையும்,
2. சமற்கிருத மெய் எழுத்துகளின் வருக்க எழுத்துகளையும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையும்,

என்பவை திரவிட மொழிகளின் ஒலிவடிவ வண்ணமாலையில் காணப்படுகின்றன.

எனினும் சமற்கிருத மொழியின் எழுத்துமுறையைக் கன்னடம் ஏற்றுக் கொண்டபோதும் - சிற்சில மாற்றங்களையும் கன்னடத்தில் காணமுடிகிறது. அவை:

(1) சமற்கிருதத்தில் எகர ஒகரக் குறில்கள் இல்லையாக - தமிழில் உள்ள எகர ஒகரக் குறில்களைக் கன்னடம் தக்கவைத்துக் கொண்டமை.

(2) தமிழ்ச் சிறப்பு எழுத்துகளில் ழ, ற, ன என்பவை பழங்கன்னடத்தில் இருந்தபோதும் தற்காலக் கன்னடத்தில்

அவை வழக்கு வீழ்ந்துள்ளமை.

எனவே அங்கு

றகரம்	-	ரகரமாகவும்
னகரம்	-	நகரமாகவும்
ழகரம்	-	ளகரமாகவும்

ஆளப்படுகின்றன.

2. உடம்படு மெய்

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஆகிய ஈருயிர்கள் புணரும் போது அங்குத் தோன்றும் விட்டிசையைத் தடுப்பதற்கு யகர வகர உடம்படுமெய்களில் ஒன்றைக் கொள்வது தமிழ் இலக்கண முறையாகும். கன்னடத்திலும் இதே முறை பின்பற்றப்படுவதைக் கால்டுவெலார் எடுத்துரைக்கின்றார்.

> 'தமிழிலும் கன்னடத்திலும் - பொதுவாகத் திராவிட மொழிகளிலும் - அடுத்தடுத்து வரும் இரண்டு உயிர்களுக்கு இடையில் உண்டாகும் விட்டிசையைத் தடுப்பதற்கு வ அல்லது ய என்பவை பயன்படுத்தப் படுகின்றன'[19]

அவர் அதோடு நில்லாமல், தமிழில் பின்பற்றப்படுகின்றவாறே யகர வகரங்களுள் ஒன்று கன்னடத்திலும் சேர்க்கப்படுவதையும் அவர் சுட்டியுள்ளார்.

> 'தமிழில் தவறாது பின்பற்றப்படும் இந் நெறிமுறையே கன்னடத்திலும் பின்பற்றப் படுகிறது. ஆ, ஊ, ஓ என்னும் உயிர்களுக்கும் ஔ என்பதற்கும் யகர உடம்படுமெய் பயன்படுத்தப் படுகிறது'[20]

3. ஐம்பால் பெயரீ ஈறுகள்

ஐம்பாற் பெயர் ஈறுகள் பால் உணர்த்துபவையாகவே திரவிட மொழிகளில் பெரும்பாலும் காணப்படுகின்றனவாயினும் தெலுங்கில் (கோண்டு மொழியிலும்) பெண்பால் படர்க்கை ஒருமையின் ஈறு பால் உணர்த்தாமல் அஃறிணைப் பொது ஈறாகவே உள்ளது. ஆனால் கன்னடத்தில் பெண்பால் ஒருமை ஈறு தமிழில் உள்ளதைப் போலவே உள்ளது. அதுபற்றிக் கால்டுவெலார் பின்கண்டவாறு கூறியுள்ளார்.

> 'கன்னடமும் மலையாளமும் - உயர்திணைப் பெண்பால் ஈறுகளில் பன்மைக்கு மட்டுமன்றி ஒருமைக்கும் - இவ்வகையில் தமிழின் அமைப்பை ஏற்கின்றன. அவ்வாறே அவற்றில் அவள் என்னும் பெண்பாற் பகரப்பெயர்(Pronoun)க்கு - ஆண்பாற் பகரப்பெயர் போன்ற அமைப்பே உள்ளது'[21]

அதுமட்டும் இன்றி உயர்திணை ஆண்பால் ஒருமையில் உள்ள நிலையையும் அவர் காட்டுகின்றார்.

'கன்னடத்தில் ஆண்பால் ஒருமையைக் குறிக்கும் அனு என்பது தமிழில் உள்ள அன் என்பதற்கு ஒத்திருப்பதாகும். இது தற்காலக் கன்னடத்தின் ஒலிப்புத் தேவையாகும். பழங்கன்னடத்தில் அம் என்னும் ஈறு பயன்படுத்தப்பட்டது. அன் - அம் என்பவற்றுள் அம் என்பது ஒன்றுக்கு ஒன்று மாறிவரக் கூடிய மூக்கொலியாகும்'[22]

4. எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்களில் ஒன்றுமுதல் பத்து, நூறு, ஆயிரம் என்பவை திரவிட மொழிகளில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கால்டுவெலார் விளக்கியும் பட்டியல் இட்டும் காட்டினார்.[23] அதன் சுருக்கமாக அமைந்த தமிழ் கன்னட வடிவங்கள் வருமாறு

ஒன்று ஒரு, ஓர், ஒண்ணு - தமிழ்
ஒந்து, ஓர் - கன்னடம்

இரண்டு இரண்டு, இரு, ஈர் - தமிழ்
(இரடு) - எரடு, ஈர் - கன்னடம்

கன்னடத்தின் இரடு என்பது முந்திய வடிவமாக இருத்தல் வேண்டும் என்று அவர் கருதினார்.

மூன்று மூன்று, மூ, மு - தமிழ்
மூரு, மூ, மு - கன்னடம்

நான்கு நான்கு, நாலு, நால் - தமிழ்
நாலு, நால்கு, நால் - கன்னடம்

ஐந்து ஐந்து, அஞ்சு, ஐ - தமிழ்
ஐது, ஐ - கன்னடம்

ஆறு ஆறு, அறு - தமிழ்
ஆரு, அர - கன்னடம்

ஏழு ஏழு, எழு - தமிழ்
ஏளு, ஏ - கன்னடம்

எட்டு எட்டு, எண் - தமிழ்
எண்ட்டு, எண் - கன்னடம்

ஒன்பது ஒன்பது, ஒன்பான், தொண்டு, ஒண்பத்து, தொள் - தமிழ்
ஒம்பத்து, ஒம்பயி, தொம் - கன்னடம்

பத்து பத்து, பான், பது, பதின், பன் - தமிழ்
பத்து, அ(Ha)த்து, ப(Bha)த்துவட்டு, பதின், பதி, பன்
-கன்னடம்

நூறு நூறு - தமிழ்
நூரு - கன்னடம்

ஆயிரம் ஆயிரம் - தமிழ்
சாவிர, சாவர - கன்னடம்

இங்கு இரண்டு என்பதுபற்றிக் கால்டுவெலார் கூறியதை எண்ணிப்பார்க்க வேண்டும். கன்னட ஏரடு (இரடு) என்பதை முந்திய வடிவமாக அவர் கருதினார்.

ஒரு சொல்லின் இடையே உள்ள மெல்லொலியை நழுவ விடுவது கன்னடத்திரிபு முறைகளில் ஒன்றாகும். மலையாளத்தில் மூக்கொலியாகிய மெல்லொலி மிகுவதற்கும் கன்னடத்தில் அது குறைவதற்கும் அவ்வப் பகுதிகளின் தட்பவெப்ப நிலை காரணமாதல் கூடும். சான்றுகளாவன:

தமிழ்	மலையாளம்	கன்னடம்
உழுந்து	உழுந்து	உத்து
எழுந்து	எழுந்து	எத்து
இருந்தான்	இருந்து	இத்தனு

இம் முறையிலேயே,

மூன்று (த) - மூரு (க)
நான்கு (த) - நால்கு (க)
ஐந்து (த) - ஐது (க)

எனக் கன்னடத்தில் திரிந்துள்ளன. இதற்கு நேர்மாறாக, மெல்லொலி இடம்பெறாத வல்லொலிக்கு முன் மெல்லொலியைச் சேர்ப்பதும் கன்னடத்தின் திரிபு முறையாக உள்ளது. இதுவும் இன்னொரு வகையில் முன்னர்க்கூறிய திரிபு முறையை உறுதிப்படுத்துகிறது.

எ -டு, எட்டு (த) - எண்ட்டு (க)

இவ் விதிக்கு விலக்காகவும், வேறு ஒரு திரிபு முறையாகவும் உள்ளமையும் கன்னடத்தில் காணப்படுகிறது. தற்காலக் கன்னடத்தில்

னகரம் வழக்கு வீழ்ந்துள்ளது. எனவே னகரம் வரும் இடங்களில் - அதை அடுத்துவரும் வல்லொலியை மாற்றி அதற்கேற்ற மெல்லொலியைச் சேர்ப்பதும் கன்னடத்தில் வேறு ஒரு திரிபு முறையாக உள்ளது.

ஏ -டு, ஒன்று (த) - ஒந்து (க)
ஒன்பது (த) - ஒம்பத்து (க)

எனவே இரண்டு - இரடு - எரடு என்னும் கன்னடத்திரிபு இயல்பானதாகவும், பிந்திய வடிவமாகவும் உள்ளதைக் காணலாம்.

5. வேற்றுமை

திரவிட மொழிகளில் காணப்படும் வேற்றுமை இலக்கணம் பற்றிக் கால்டுவெலார் விரிவாக ஆராய்ந்துள்ளார். திரவிட மொழிகளின் வேற்றுமை அமைப்பைப் பற்றி அவர் கூறுவதாவது -

> 'திராவிட மொழிகளில் வேற்றுமைகள் பற்றி ஆராயுங்கால், அவை இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் இருந்து வேறுபடுகின்றவையாகவும், - வேற்றுமை உருபுகள், வேற்றுமைகளில் ஒருமை பன்மைகள் ஆகியவற்றில் அவை சித்திய மொழிகளுடன் மிகவும் ஒத்தவையாகவும் உள்ளன'[24]

என்று கூறிய அவர்,

> தமிழ் இலக்கண நூலார் வேற்றுமைகளுக்குப் பெயரிடுங்கால் அவற்றைக் கிழமைப் பொருள் வேற்றுமை, நீங்கற் பொருள் வேற்றுமை என்று பெயரிடாமல் - சமற்கிருத முறையில் உள்ளவாறே அவற்றை எண் வரிசையில் - முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை முதலாக எட்டு வேற்றுமை வரை குறித்தனர்'[25]

என்றும் கூறினார். இதுவும் அவர் வழுக்கிய இடங்களில் ஒன்றாகும்.

திரவிட மொழிகளின் வேற்றுமை அமைப்புப்பற்றி அவர் சுட்டியுள்ளவற்றில், தமிழ் - கன்னட அமைப்பு மட்டும் இங்கு எடுத்துக் காட்டப்படுகிறது. எட்டு வேற்றுமைகளிலும் மரம் என்பதன் ஒருமை பன்மைகள் கூறப்பட்டன. பழங்கன்னடச் சான்றுகள் மட்டுமே கால்டுவெலாரால் கூறப்பட்டன.[26]

தற்காலக் கன்னடச் சான்றுகளும் வேற்றுமை எண்களும் இக் கட்டுரையாளரால் சுட்டப்பட்டவை.

வேற்றுமை	தமிழ்	பழங்கன்னடம்	தற்காலக் கன்னடம்
பெயர்	மரம்	மரம்	மர, மரவு
	மரங்கள்	மரகள், மரங்கள்	மரகளு
2ஆம் வேற்றுமை	மரத்தை, மரத்தினை	மரமம், மரவம், மரனம்	மரவண்ணு
	மரங்களை, மரங்களினை	மரகளம்	மரகளண்ணு
மூன்றாம் வேற்றுமை	மரத்தால், மரத்தினால்	மரதிம், மரதினம	மரதிந்த
	மரங்களால், மரங்களினால் மரமொடு, மரத்தொடு - மரத்தினோடு மரங்களோடு, மரங்களினோடு	மரகளிம்	மரகளிந்த
நான்காம் வேற்றுமை	மரத்திற்கு	மரக்கு, மரக்கெ	மரக்கெ
	மரங்களிற்கு	மரகள்கெ	மரகளகெ
ஐந்தாம் வேற்றுமை	மரத்தின் மரங்களின்	மரதத்தினம் மரகளத்தினம்	மரதிந்த மரகளிந்த
ஆறாம் வேற்றுமை	மரத்தினோடு, மரத்தினோடு	மரத, மரதர	மரத
	மரங்களினோடு, மரங்களின்	மரகன	மரகனத
ஏழாம் வேற்றுமை	மரத்தின்கண், மரத்தில், மரத்தினில் மரங்களின்கண்	மரதொள், மரதோள் மரகளொள், மரகளேள்	மரதல்லி மரகளல்லி
எட்டாம் வேற்றுமை	மரமே மரங்களே	மர, மரா, மரமே மரகளிர, மரகளிரா	மரவே மரகளே

திரவிட மொழிகளின் இலக்கணக் கூறுகள் பற்றிக் காட்டப்பட்டவையும் வேற்றுமைகள் பற்றித் தமிழ் - கன்னட ஒப்பீடாக இங்குக் கூறப்பட்டவையும் நம்முடைய இப்போதைய ஒப்பீட்டு நோக்கத்துக்குப் போதுமானவையாகும்.

தமிழ் - கன்னட உறவு நிலை

ஏற்கனவே கூறியவாறு கால்டுவெலார் திரவிட மொழிகளை ஆராய முனைந்த காலத்தில் காணப்பட்ட இருண்மைச் சூழல்கள் அவ்வழியில் அவரை முழு உண்மையைக் காணவொட்டாமல் தடுத்துவிட்டன. அதனால்,

- 'தமிழர் நாகரிகம் கொற்கையில் இருந்து தொடங்கியது என்றும்,

- தமிழர்க்கு இலங்கை தவிர வேறு ஒரு தீவும் தெரியாது என்றும்,

- தமிழ் நெடுங்கணக்கும், எண் வேற்றுமை அமைப்பும் சமற்கிருதத்தைப் பின்பற்றியவை என்றும்

- உயர் கலைகளை எல்லாம் தமிழர் ஆரியரிடத்தில் இருந்து கற்றுக் கொண்டனர் என்றும்'

கூறிய கால்டுவெலார்தம் பிழைபாடுகளைப் பாவாணர் சுட்டிக் காட்டினார்.[27]

மேலும், கால்டுவெலார் -

- திரவிடம் என்பதே தமிழ் என்றாயிற்று என்றும்

- தமிழர் வந்தேறியர் என்றும்,

- தமிழும், திரவிட மொழிகளும் உடன்பிறப்பு (Sister) மொழிகள் என்றும் -

பிழைபாட்டுக் கருத்துகளைக் கூறியிருப்பினும், அவர்தம் நடுநிலை ஆய்வுப் போக்கினால் தமிழின் தலைமையும் தாய்மையும் பற்றிய அடையாளங்கள் அவர்தம் ஆய்வுப் போக்கு நெடுகிலும் காணக் கிடைக்கின்றன என்பதையும், அவற்றை அவர் பதிவு செய்யத் தவறவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.

இங்குக் காட்டப்பட்ட இவ் உறவு நிலை கன்னடத்துக்கு மட்டுமே யன்றி ஏனைய திரவிட மொழிகளுக்கும் பொருந்தும் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

முடிவுரை

கால்டுவெலார் ஆய்வில் சில தவறான முடிவுகள் கூறப்பட்டன என்றாலும் - அதற்கு அக்காலச் சூழலே காரணமாகும் என்பதையும் அத்தகைய சூழலிலும் - தென்னிந்திய மொழிகளை அடர்ந்து சூழ்ந்திருந்த ஆரிய மாயையை அடையாளம் காணுமாறு - அவர் ஆய்வுலகில் விடிவெள்ளியாய்த் திகழ்ந்தார் என்பதையும் அறிதல் வேண்டும்

அவர்தம் ஆராய்ச்சியின் பயனாகவே, தென்னிந்திய மொழிகளைப் பற்றிய ஆய்வு திருத்தமான வழியில் நடையிடத் தொடங்கியது. அதன்விளைவாகவே, அவ்வாராய்ச்சிக்குப்பின் - ஏறத்தாழ எண்பதாண்டுகளுக்குப் பிறகு - ஆரிய மாயையின் திரையை முற்றிலும் கிழித்தெறியவும் - தமிழையும் அதன் சேய் மொழிகளையும் சூழ்ந்திருந்த இருளை ஓட்டவும் எழுந்த ஞாயிறரகப் பாவாணரின் திரவிடத்தாய் நூல் எழுந்து உண்மை ஒளியைப் பரப்பியது.

புகுந்த வீடு சென்ற மகளும், தனிக்குடித்தனம் சென்ற மகனும், தத்தம் இல்லத்தைச் செப்பமாய்ப் பேணுவதே எல்லார்க்கும் சிறப்பாகுமேயன்றி, அவர்கள் மீண்டும் தாய்வீடு திரும்புவது சற்றும் ஏற்கத் தகுந்ததாகாது. மகனைச் சான்றோன் எனக் கேட்டலும்

அவனை, அவையத்து முந்தியிருப்பச் செய்தலுமே பெற்றோர்க்கும் உவகையளிப்பதாகும்.

இத் தாய் - சேய் உறவு பெருகும் போதுதான்,

- தாய்மொழி வழிக் கல்விமறுப்பு,
- மாநில எல்லை வரையறுப்புக் குறைபாடு,
- ஆற்றுநீர்ப் பங்கீட்டுப் பகைமை

என்னும் சிக்கல்கள் தீர்வதற்கும் வழிபிறக்கும்.

அடிக்குறிப்புகள்

1. பாவாணர், வண்ணனை மொழி நூலின் வழுவியல் (1968) பக்கம் 79 - 85
2. கால்டுவெலார் - திரவிட மொழிகள் அல்லது தென்னிந்திய மொழிக்குடும்பத்தின் ஒப்பீட்டாராய்ச்சி (ஆங்கிலம்) - (1976) சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு - முகவுரை பக். IX
3. மேற்படி நூல் முகவுரை பக்கம் X
4. பாவாணர், வண்ணனை மொழிநூலின் வழுவியல் (1968) பக்கம். 80
5. கால்டுவெலார் , மேற்படி நூல் - முன்னுரை பக்கம் 8
6. கால்டுவெலார் , மேற்படி நூல் - முன்னுரை பக்கம் 6
7. கால்டுவெலார் , மேற்படி நூல் - பக்கம் 84
8. கால்டுவெலார் , மேற்படி நூல் - முன்னுரை பக்கம் 4
9. கால்டுவெலார் , மேற்படி நூல் - பக்கம் 4
10. ஔவை சு.துரைசாமி,சேரமன்னர் வரலாறு(1960) பக்கம். 183
11. பாவாணர் , திரவிடத்தாய் (1964) பக்கம். 86, 87
12. கால்டுவெலார் , முற்குறித்த நூல் பக்கம். 31
13. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 9
14. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 101
15. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 87, 88
16. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 47
17. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 84
18. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 125
19. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 176
20. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 176

21. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 224
22. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 227
23. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 324 - 360
24. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 256
25. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 257
26. கால்டுவெலார் , மேற்படி நூல் பக்கம். 320
27. பாவாணர், வண்ணனை மொழி நூலின் வழுவியல் (1968) பக்கம் 75



11. கால்டுவெல் பார்வையில் தமிழ் மலையாள உறவு

முனைவர் ப. ஜெயகிருஷ்ணன்
தமிழ்த்துறைத்தலைவர்
கேரளப்பல்கலைக்கழகம்

மேலை நாடுகளில் பிறந்து சமயப் பணிக்காக இந்தியாவிற்கு வந்த சமயத்தொண்டர்கள் இந்திய மொழிகளைக் கற்று சமயத் தொண்டாற்றினர். தமிழகத்திற்கு வந்த சமயத் தொண்டர்கள் தமிழ் மொழியைக் கற்றதோடல்லாமல் தமிழ் மொழியின் சிறப்புக்களையும் தொன்மையினையும்உலகறியச்செய்தனர். அத்தகையோரில்குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்கள் பலர் அவர்களில் ஒருவர் கால்டுவெல்.

தமிழ் மொழியைக் கற்றுப் புலமை பெற்றதோடு நில்லாமல் தமிழ் மொழியை ஆய்வு செய்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் அறிய ஆய்வு நூலையும் தந்தவர் கால்டுவெல். விரிவான விளக்கங்கள் ஆதாரங்கள் ஒப்பீட்டு ஆய்வு ஆகியவற்றில் இதற்கு நிகரான நூல் இன்றளவும் இல்லை என்றுதான் கூற வேண்டும். கால்டுவெல் 18 மொழிகளில் புலமை பெற்றிருந்தார். அவர் கற்ற அறிவு இப்பெரும் நூலை எழுத அவருக்குத் துணை புரிந்தது. திராவிட மொழிகளின் இலக்கணத்தைக் கற்று அதன் இயல்புகளை விளக்கி அவற்றில் தமிழ் மொழியே சிறந்தது. தனித்தியங்கும் ஆற்றல் பெற்றது என்றும் உயர்தனிச் செம்மொழி என்றும் உறுதி செய்தார். தென்னிந்திய மொழிகளில் பரந்த அறிவுடையவர். அவரின் இலக்கிய ஆர்வமும் அவர் எழுதிய நூல்களும் அவரது சமயப் பணியைத் தடை செய்யவில்லை. சமயத் துறையில் அவர் நிறைவான பணியைச் செய்தார்,

தமிழ் தெலுங்கு மலையாளம் கன்னடம் என்ற நான்கு தென்னிந்திய மொழிகளுக்கும் அடிப்படை இலக்கணம் ஒன்றே என்று தெளிவு படுத்தினார்.

With regard to the phonological and morphological similarities Robert Caldwell(1856) Gundart(1851-1872) A.R.Rajarajavarma(1859), Ramasamy Ayyar(1936) and many others(such as Dr.K.Nachimuthu, Dr.Venugobalapanikar,Dr.K.V.N .Namboodiri) have presented clear proofs of the close relationship between Tamil and Malayalam

மலையாளச் சொல்லாட்சி

மலையாளம் தமிழ் மொழியோடு நெருங்கிய உறவு உடைமையால் இது திராவிடமொழி வரிசையில் தமிழுக்கு அடுத்து வைக்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது. இரு மொழிகளின் ஒப்பீட்டு ஆய்வுகளை முதன்முதலில் தொடங்கி வைத்தவர் கால்டுவெல். மலையாளம் என்ற பெயர் மலயாழ்மா என்று வழங்கப்பெறும். அதன் பிரிதொர் வடிவம் மலையாய்மா , இரண்டுச் சொற்களும் ஒரே பொருளைத் தரும். உழவன் எனப் பொருள்படும் வெள்ளாளன் என்ற தமிழ்ச் சொல் சில இடங்களில் வெள்ளாழன் எனத் திரிந்து வருவது போன்று ஆழம் என்பதும் ஆள்ம என்பதிலிருந்து திரிந்து வந்ததாகும் என்கிறார். அதில் ழகரம் ளகரமாகத் திரிவது இயல்பே. இதனால் மலையாழ்மா மலையாய்மா என மாறியது. கொச்சைத் தமிழில் இந்த 'ள 'அடியோடு மறைந்து விடுகிறது. உழவுத்தொழில் எனப் பொருள்படும் வெள்ளாண்மை என்ற தமிழ் சொல் மலையாளத்தில் வெள்ளாய்மா என ஆகும் என்றும் கொச்சைத் தமிழில் வெள்ளாமை என்றும் மாறுகிறது என்றார் கால்டுவெல். அதாவது நாட்டாண்மை என்ற தமிழ் சொல் நாட்டாய்மா என ஆகும் என்றால் நாட்டான்ம என வழங்கப்படும். ஆளன், ஆளி தமிழ் மலையாளத்தில் பெருவழக்காய் வழங்குகிறது. எனவே மலயாழ்ம என்பதன் அடியாகப் பிறந்த குறிப்பு வினைதான் மலையாளி என்று விளக்குகிறர்.

சமஸ்கிருத எழுத்தாளர்களால் தமிழிலிருந்து வேறுபட்டதாக மலையாளம் பிரித்து உணரப்படவில்லை. அவர்கள் வழங்கிய 'திராவிட' என்ற சொல் அவ்விரு மொழிகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது என்று விளக்குகிறார் கால்டுவெல்.

கேரளநாடு, சேரநாடு

பழைய கேரள நாடு இரு பகுதிகளாகப் பிரிந்து இருந்ததாகத் தெரிகிறது அவற்றுள் கடலை ஒட்டி இருந்த பகுதி கேரளநாடு என்ற வடமொழிப் பெயரையே பெற்றிருந்தாலும் 'சேர ' நாடு என்று தமிழ் பெயராலும் அழைக்கப்பட்டிருந்தது.

கிளைமொழி

மலையாளம் நான் கருதுவது போல் தமிழிலிருந்து மிகப் பழைய காலத்தில் தோன்றிய ஒரு மொழியாதலின் அது தமிழின் கிளை மொழிகளுள் ஒன்று எனக் கருதப்படுமே அல்லாமல் திராவிட இனத்தைச் சேர்ந்த தனித் தன்மை வாய்ந்த மொழியாகக் கருதப்படாது. தமிழுக்கும் மலையாளத்திற்கும் இடையே உண்டான பிரிவினை நனி மிகப் பழைய காலத்திலேயே ஏற்பட்டுவிட்டது.

மலைநாடு, மலையாள நாடு

தமிழர் பாண்டிய நாட்டிற்கு மேற்குப் பகுதியில் பரந்து கிடக்கும் மலைப் பிரதேசத்தை மலைநாடு என்று அழைத்தனர். ஆரியர்கள் இந்தப் பகுதியைத்தான் கேரளம் என்று அழைத்தனர். மலைநாட்டில் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தவர்கள் தமிழர்களும் அவர்களது மொழி தமிழுமாக இருந்தது என்கிறார் கால்டுவெல். தமிழைச் செந்தமிழ் என்றும் கொடுந்தமிழ் என்றும் இரண்டாக வழங்கும் பாகுபாடு இருந்தது. பலவகையான கொடுந்தமிழ்களுள் ஒன்றே மலையாளம். தமிழ் என்ற சொல்லின் வடமொழி வடிவமே திராவிடம். தமிழின் கிளை மொழியே மலையாளம்.குடநாடு, குட்டநாடு, கற்கா நாடு, வேணாடு, பூழிநாடு என்ற ஐந்து பகுதிகளிலிருந்து உருவாக்கப்பட்ட கொடுந்தமிழே மலையாளம். மலையாளம் கொடுந்தமிழாக மாறுவதற்கு மூன்று காரணங்களைச் சுட்டுகிறார்.மலைநாட்டின் அமைப்பு,கிழக்குப் பகுதி எல்லையில் பரந்து கிடக்கும் மலை அடுக்கு மலைநாட்டை வேறுபடுத்தியது. 1. சடங்கு முறையில் வேறுபாடு 2.தமிழ் நாட்டில் இல்லாத சில வாழ்க்கை முறைகள் (மருமக்கள்தாய முறை முன்குடுமி, வேட்டி அணிதல், 3. நம்பூதிரிகளின் ஆதிக்கமும் ஆரிய திராவிடக் கலப்பும்) இவை மூன்றும் ஆகும் என்கிறார்

மலையாளச் செய்யுள்

பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் வழி நான் அறிந்த அளவில் மலையாள மொழியின் மிகப் பழையச் செய்யுள் சமஸ்கிருதத்தைக் காட்டிலும் தமிழையே பெரிதும் ஒத்துள்ளது என்கிறார்.தமிழ் நெடுங்கணக்கு ஏற்றுக்கொண்டுள்ள 32- எழுத்துக்களில் இடம் பெறாத எழுத்துக்கள் அனைத்தையும் அது அறவே கைவிட்டுள்ளது. தமிழ் நாட்டில் சிறப்பாகத் தென்கோடித் தமிழகக் கல்வெட்டுகளில் காணப்படுவதும் இன்று பயன்பாட்டிலுள்ள மலையாள வரிவடிவோடு மிகப் பெரிய அளவில் வே படுவதுமாகிய வரிவடிவே மலையாளப் பழஞ் செய்யுற்களில் ஆளப்பட்ட வரிவடிவமாகும் என்கிறார்.

இராமச் சரிதம்

இராமச் சரிதம் என்ற மலையாள நூல் சமஸ்கிருத எழுத்துக்களின் நுழைவிற்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டவை என்கிறார் கால்டுவெல். மலையாளத்திற்கும் தமிழுக்கும் இடையேயுள்ள வேற்றுமைத் தொடக்கத்தில் சிறிதே எனினும் மலையாளம் இன்றுள்ள நிலையில் தமிழின் கிளை மொழிகளில் மலையாளம் உண்டு என்று கருதுதல் கூடாது என்றும் மாறாகத் தமிழில் உடன் தோன்றிய மொழிகளுள் அதுவும் ஒன்றே என்று கருதுதல் வேண்டும் என்ற நிலையில் அது வளர்ந்து பெருகி விட்டது. தொடக்கத்தில் அதைத் தமிழின் தங்கை எனக் கருதாது அதன் மகள் என்றே நானும் கருதினேன் ஆனால் மிகப் பெரும் அளவில் வேறுபடும் கிளை மொழி எனப் பொருத்தமுற பெயர் சூட்டலாம் என்கிறார் கால்டுவெல்.

கிழக்கு, மேற்கு

தமிழிலிருந்து தோன்றியது மலையாளம் என்ற உண்மை கிழக்கு திசையை உணர்த்த அதை ஆளும் சொல்லினாலேயே விளங்கப்படும் கிழக்கு என்பது பள்ளம் நோக்கி அல்லது அடிநோக்கி என்ற பொருளுடையதாகும். இது மேல்நோக்கி அல்லது மேடுநோக்கி என்ற பொருளுடைய மேற்கு என்ற சொல்லோடு உறவுடையது என்கிறார். இது மேற்குக் கடற்கரையில் தோன்றியிருக்க இயலாது என்றும் தமிழ் நாட்டிலிருந்து மேல்நோக்கி செல்லவேண்டியிருப்பதால் மேற்குத்தொடர்ச்சி மலைகளுக்கு கீழ் உள்ள ஒரு நாட்டில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்கிறார்.

கேரள மக்கள் தமிழர்களே

மலையாளமும் தமிழும் பண்டு ஒரே மொழியாக இருந்தது என்றும் மலையாளிகள் தொடக்கத்தில் கேரள நாட்டிற்கு வந்து குடியேறிய தமிழர்களே ஆதல் வேண்டும் என்றும் அவர்கள் பாலக்காட்டுக் கணவாய் வழியாக மலையாள நாடு அடைந்து அங்கிருந்து வடக்கில் சந்திரகிரி ஆற்றங்கரை வரையும் தெற்கில் நெய்யாற்றங்கரை வரையிலும் பரவி வாழ்ந்தவராதல் வேண்டும் என்கிறார்.

ஒலி - ஒப்பீடு

பல்லொலி வரிசை ஒலிகள் பொதுவாக வட மொழியில் ஒலிக்கப் படுவது போன்றே திராவிட மொழிகளில் ஒலிக்கப்படுகின்றன. ஒரேயொரு விதி விலக்கு உண்டு. ஈர் உயிர்களுடன் வரும்போது தமிழிலும் மலையாளத்திலும் ட்ட (*t*) என்ற வல்லொலி ட(*d*) என்ற மெல்லொலியிலும் குறைந்து (*th*) போன்று ஒலிக்கப்படுகிறது

என்கிறார் கால்டுவெல். மூக்கொலியுடன் சேர்ந்து உச்சரிக்கப்படும் போது ட்ட (ṭ) ட் (ḍ) மெலிந்து ஒலிக்கிறது என்றும் வல்லொலி ட்ட (ṭ) மிக மெலிந்து (ṯh) ஒலியாக உச்சரிக்கப்படுவது தமிழிலும் தமிழின் மகளான மலையாளத்திலும் மட்டுமே காணப்படுகிறது என்றும் கால்டுவெல் கூறுகிறார். ழகரம் தமிழுக்குத் தனிச்சிறப்புடையது என்றும் அது மலையாளத்திலும் வழங்கப்படுகிறது என்றும் கண்டு பிடித்துக் கூறியுள்ளார். ஆனால் ழகரத்தின் உச்சரிப்பு தமிழகத்தில் வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுவதாகவும் கூர்ந்து கவனித்துக் கூறியுள்ளார்.

படுஞாயிறு

படிஞ்ஞாயிறு என்ற சொல் திருத்தமாக வழங்கப்பெற வேண்டுமாயின் படுஞாயிறு என்றே வழங்கப்படல் வேண்டும். அச்சொல்லே மேற்கு என்ற சொல்லைக்காட்டிலும் மேலைத்திசையை உணர்த்த பயில வழங்கப்பெறுகிறது என்பது உண்மை என்கிறார். ஆனால் படிஞ்ஞாயிறு என்னும் சொல் தமிழ்சொல்லே ஆகும் என்றும் கிழக்கு மேற்கு என்ற இரு சொற்களும் தமிழ் நாட்டிலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பதை டாக்டர் குண்டர்ட் ஒத்துக்கொள்வதையும் விளக்குகிறார்.

பகர 'மகர மெய்கள்

மலையாளத்தில் 'வ' வகரம் 'ம 'கரமாய் மாறும் தமிழில் 'ப' கரம் வரும் இடங்களில் மலையாளத்தில் 'ம' கரம் வரும் என்பது தெரிந்ததே. தமிழில் உண்பான் என்பது மலையாளத்தில் உண்மான் என்பதாகும் காண்பான் என்பது 'காண்மான் ' என்றாகும்.

'ள'கரம் சிலபோது மலையாளத்தில் 'ழ' கரமாய் மாறி பின்பு 'ய' கரமாய் மாறுதலை ஆள் என்ற சொல்லிலிருந்து ஆள்மா என்பதற்குப் பதிலாக ஆழ்மா என வரும் என்று விளக்குகிறார்.

ஓடு, ஓடு

மலையாளச்செய்யுள்களில் வரும் ஒடு (தமிழிலும்) என்பதன் நெடில் உருவமே ஓடு என்கிறார் டாக்டர் குண்டர்ட்.இக்கருத்தை கால்டுவெல்லும் ஏற்றுக்கொள்கிறார்.

உயர்திணைவிகுதி

தமிழும் மலையாளமும் உயர்திணைப் பொருள்களுக்கு ஏற்புடைய பிரிதொரு விகுதியையும் பெற்றுள்ளன இது மார் என்னும் விகுதியாகும். உயர் நடைத் தமிழில் அது மர் என வரும். இது'அர் ' என்னும் விகுதியோடு ஒப்பும் உறவும் உடையது.

புருஷர், புருஷமார்,
கள்ளர் -கள்ளன்மார்

தமிழிலும் மலையாளத்திலும் உயர்திணை இருபாற் பன்மைக்குறிப்பு வினையாலணையும் பெயர்ச்சொல் விகுதியாக 'வர்' என்பது பொதுவாக வரும். அது பெரும்பாலும் 'அவர்' எனவே தோன்றும் இதனால் அதைப் பன்மைச் சொல்லாக்க விகுதியாக வந்த அவர் எனக்கொள்ள வேண்டும் என்கிறார்.

விண் +அவர் = விண்ணவர்

'கள்' விகுதி கள், க்கள் என்றே இரு மொழிகளிலும் வரும்.

சோழமண்டலம்

கொரோ மண்டலம் என்ற சொல் சோழமண்டலம் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாக இருக்கலாம் என்கிறார்.

வேற்றுமை

தமிழிலுள்ள இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ' மலையாளத்தில் 'எ' என்பதாகும் அது தமிழ் 'ஐ' என்பதன் பிரிதொரு வடிவமே 'எ' என்கிறார். தமிழில் ஐ மலையாளத்தில் எ, பழைய கன்னடத்தில் அம் புதிய கன்னடத்தில் அன்னு,அன்ன, னு தெலுங்கில் னு,னி என்பவை பழைய கன்னடத்திலுள்ள அம் என்பதன் மெல்லினம் கெடுவதால் 'அ' என்றாகியது மலையாளத்தில் எ என்றும் தமிழில் 'ஐ' என்றும் மாறியிருக்க வேண்டும் என்றும் கால்டுவெல் ஊகிக்கின்றார்

It indicates that both these markers were prevalent in that period at least in certain types of literary compositions. If not in spoken dialects.

Caldwell commenis that during fourteen century, ai was being used as the case marker for second case in the dialect of the local Kerala people. He further adds than ai was completely replaced by 'e' only a century after.

மூன்றாம் வேற்றுமை

தமிழிலும் மலையாளத்திலும் வழங்கும் கருவி வேற்றுமை உருபு 'ஆல்' செந்தமிழ் நடையில் ' ஆன்' என்பது வரும். தமிழ் மலையாள உடன் நிகழ்வுப்பொருள் உருபுகள் ஒடுவும் ஒடுவும் ஆகும். 'உடன்' என்பதும் வரும் வற்புறுத்துதல் பொருளில் 'ஒடு'என்னும் உருபு ஒடே என்றும் வரும்.

Instrument -இலக்குவன் கத்தியால் அறுத்தான்

Sociative - சீதை பிள்ளைகளோடு காட்டுக்கு போனாள்

-சீதா குட்டிகளோடு காட்டில் போயி

ஓடு - பழைய மலையாளத்தில் உடன் என்பது இது ஒட்டுதல் என்ற வினை வடிவமே.உடன் ஒடன் என்று அமைய வேண்டும்.அன் என்ற சாரியை வீணே சேர்ந்தாயிருக்கவேண்டும். தெலுங்கில் தொடு என்ற வினை பயன்படுத்தப்படுகின்றது. அது தொ எனச் சுருக்கப்பட்டுள்ளது.

நான்காம் வேற்றுமை

இதன் உருபு தமிழில் 'கு' மலையாளத்தில் 'க்கு'.நான்காம் வேற்றுமைக்கு இரு வகையான உருபுகளைப்பெற்றிருப்பது திராவிட மொழிகளில் மலையாளம் ஒன்றே. அவையாவன 1. 'க்கு' மற்றொன்று 'னு' அல்லது 'உ'.வேற்றுமை உருபுகளை இணைப்பதோடு உருபேற்கும் சொற்களோடு ஒலி நயம் குறித்த இன்சாரியையினை இணைப்பது தமிழ் மொழியின் இயல்பாகும். இவ்வழக்கம் மலையாளத்திலும் நிகழ்கிறது.

'கு' எல்லாத் திராவிட மொழிகளிலும் ஒன்று போலவே அமைகின்றது. அதன் உயிர் மட்டும் சில இடங்களில் 'ஏ' எனவும் 'இ' எனவும் மாறுபடுகிறது.மலையாளத்தின் னகர இறுதிச்சொற்களின் அங்கங்களின் ககரம் குன்றிப் போகும். ன்கு-ன்னு என்று மாறுபட்டு அமையும்.

Caldwell says the fourth case is Dative case. Its marker is 'ku'. This case is having meaning as offering something, In Tamil and Malayalam languages the Dative case is having this meaning.

In Keralapaniniyam the Dative case marker that is the udheesika marker is 'kku' and'u'

Eg. Kavithaikku koduththu

ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமைத் தமிழில் 'ல்' 'ன்' ஆகும் மலையாளத்தில் 'ஆல்'. கால்டுவெல் இதனை வாய்க்கால் முதலிய சொற்களில் காணப்படும் வழி என்ற பொருளுடைய கால் என்பதிலிருந்து தோன்றியது என்கிறார்.அல் என்ற சுட்டெழுத்தின் உருவம் நீண்டும்

இது அமைந்திருக்கலாம் என்கிறார்.குண்டர்ட்டின் கருத்தில் இருந்து ஆதல் என்ற வினையின் ஆகல் என்ற தொழில் பெயரிலிருந்து ஆல் தோன்றியுருக்கலாம் என்கிறார்

It means moving from a place to other place that is oblation.
Eg. Muruganin moothavan Muniyan
In Keralapaniniyam the Ablative prayojika case suffix is 'aal'

Eg. Baggyaththaal aagrahum saadhiccu

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமைக்குத் தமிழிலுள்ள பல உருபுகளில் 'உடே' என்ற வடிவத்தைமட்டுமேமலையாளமஏற்றுக்கொண்டுள்ளது. உடய,உடெ,டெ,உடம,உடய, முதலிய வடிவங்களில் காணப்படும் சுவாமி வாசகமாகிய உட என்ற வினையின் பெயரெச்ச உருவமாகும் இது. அவனுடைய பட்ஜ்ஜனம் சகோரம் போன்றவற்றில் உள்ளது போல கவிஞர்கள் இதைத் தனியாகப் பயன்படுத்தியிருக்கலாம்.

Caldwell denotes three markers Atu (அது) and Authu (ஆது) A (அ) as markers.

In Malayalam
the sixth case is sambanthika case marker is 'ute'
eg. Janakiyude pustakam

ஏழாம் வேற்றுமை

இல், கல், வீட என்ற பொருளுடைய இல்லம் என்ற சொல்லே 'இல்' உருபு ஆயிற்று என்பது தெளிவு. 'கல்' என்ற உருபு நன்னூலில் கூறப்படும் கால் என்பதன் குறுகிய வடிவமே என்று மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் கருதுகின்றனர்.தமிழிலே உள்ள 'கண்' என்ற உருபின் மற்றொரு உருவமாக இருக்க வேண்டும் என்பதே பெரிதும் நிகழத்தக்கதெனத் தோன்றுகிறது. கண் என்பதற்கு இடம் எனவும் பொருளுண்டு.இப்பொருள் மலையாள வழக்கிற்கு நன்கு பொருந்தும் என்கிறார்

Eg. Malayinkan iruntha murugan

Here the meaning of the case is the place where the event is happening.

In Malayalam the aathaarika case or seventh case markers are 'il' and 'kal'

Eg. Meththayil kidannu, Padikkal nilkunnu. These two have inessive and adessive meanings respectively 'il' very often is used non specifically denoting general Locational meaning.

எட்டாம் வேற்றுமை

இரு மொழிகளிலும் விளியை ஒரு தனி வேற்றுமையாகக் கருத வேண்டியதில்லை.' ஏ' என்ற இடைச்சொல்லைப் பல பெயர்களோடும் விளிப்பொருளைக்குறிக்கச் சேர்ப்பதுண்டு. உயிர் இறுதிச் சொற்களில் உயிர் நீட்டப்பட வேண்டும் என்கிறார்

Eg. Murugaa

Malayalam agrees with Tamil while defining the eighth case marker. This sambothana case has no marker. The word itself elongates and conveys the marker. Kerala paniniyam explains that the eight case is not a case. It is just a sound

Ramaa
Devii

Modern grammarian are having the eight case is not a case. It is just a sound. But Sanskrit is considering this as a case

உருபேற்கும் முறை

மலையாளத்தில் முன்னிலை இடப்பெயர் வடிவங்களான ஒருமைப்பெயர் தமிழில் உள்ளவாறே 'நீ உருபேற்கும் பெயரடியாகும். இலக்கியத் தமிழில் உள்ளது போல் 'நின்'ய பன்மைப் பெயருக்கு 'நீங்கள்' 'நிங்கள்' பெயரடியாகும்.

நிகழ்கால இடைநிலை

மலையாள நிகழ்கால இடைநிலையையும் தமிழ் நிகழ்கால இடைநிலையையும் ஒன்றே எனக்கொள்வதில் ஒரு சிறு ஐயமும் இடம் பெறாது என்கிறார் கால்டுவெல்.

வினை முற்று

மலையாளச்செய்யுட்களில் ஒரு சில இடங்களில் தமிழில் நிகழ்வது போலவே வினைமுற்று விகுதிகள் வினை மூலங்களோடு நேரே இணைக்கப்படுதலும் உண்டு. அது போன்ற இடங்களில் அவை இரண்டிற்குமுள்ள ஒருமைப்பாடு தெளிவாக விளங்கும். (எடு) அடிக்கின்றான் என்ற தமிழ் சொல்லை அதே பொருள்படும் 'அடிக்குன்னான்' என்ற மலையாளச்சொல்லோடு ஒப்பிட்டு உணர்க என்கிறார்.

மலையாள இறந்தகாலம்

மலையாள இறந்த கால வடிவம் முற்றிலும் தமிழ் இறந்த கால வடிவமே என்கிறார். மலையாளத்தில் காணலாகும் ஒரே வேறுபாடு அம்மொழியில் வினைமுற்று விகுதிகள் இல்லாமை ஒன்றே ஆகும். தமிழில் இறந்த கால வினையெச்ச வடிவமாக வருவது மலையாளத்தில் இறந்தகால வினைமுற்றாக வரும்

சான்றாக 'நடந்து' தமிழில் எச்சம். நடன்னு மலையாளத்தில் முற்றாக வரும். இறந்த கால வினை எச்ச வடிவமாகிய 'நடன்ன' என்பதை இறந்தகால பெயரெச்ச வடிவோடு ஒப்புடையதாகக் கொண்டு 'நடன்ன' என எழுதுவதால் மலையாள நடையில் ஒரு குழப்ப நிலை உண்டாகிறது என்கிறார்.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் திராவிட மொழிகளின் பொதுப்பண்பு இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலிருந்து வேறுபடுவதைக் கால்டுவெல் விரிவாக விளக்கியுள்ளார். திராவிட மொழிகளைக் குறித்து குறிப்பாகத் தமிழ் மலையாள உறவைக் குறித்து கால்டுவெல் பின் வருமாறு விளக்குகிறார்.

1. தமிழ் திராவிட மொழிகளில் தொன்மை வாய்ந்த மொழி என்று குறிப்பிடுகிறார்.
2. ஐரோப்பியர்கள் திராவிடக் குடும்பத்தை தமுழியன் அதாவது தமுழுக் என்று குறிப்பிடுகின்றனர்.
3. மலையாளத்தை மலையாழ்மா, மலையாய்மா என்றும் குறிப்பிடுகின்றனர்.
4. மலையாளத்திலிருந்து எழுந்த சொல் தான் மலையாளி. தமிழின் ஒரு கிளை மொழியே மலையாளம்.
5. வினை இறுதி வடிவங்களில் பால்காட்டும் விகுதியைப் பெறாத மொழியே மலையாளம் என்று குறிப்பிடுகிறார்.
6. மலையாளம் திராவிடக் குடும்பத்தில் ஒரு தனி மொழி என்று கூறுவதை விட தமிழின் கிளை மொழி (Dialect) என்றே கால்டுவெல் குறிப்பிடுகிறார்.
7. கிரந்த எழுத்தின் வளர்ச்சி நிலையே மலையாள எழுத்து என்று குறிப்பிடுகிறார்.
8. தோற்றத்தில் தமிழின் சகோதரியாக மலையாளத்தைக் கருதாமல் மகளாகவே கருதுகிறார். ஆனால் நாளடைவில் ஏராளமான மாற்றங்கள் பெற்ற மொழியாக மலையாளம் மாறிவிட்டது என்று குறிப்பிடுகிறார்.

9. கிழக்கு, மேற்கு என்ற சொற்களின் பயன்பாடு தமிழைப்போன்றே மலையாளத்திலும் வழங்கப்படுகிறது.

10. தமிழில் வழங்கப்படும் அவர், அவர்கள் மலையாளத்திலும் பயின்று வந்துள்ளன.

11. வாக்கியங்களை எடுத்துக்கொண்டால் தமிழ் மலையாள வாக்கியங்கள் சித்தியன் மொழியோடு தொடர்புள்ளவையாக உள்ளன.

12 ல,ள.ழ ,ய,ர,ற,ண,ன ம இந்த ஒன்பது எழுத்துக்களும் தமிழிலும் மலையாளத்திலும் ஒன்று போல் வழங்கப்படுகின்றன.

13 தமிழில் இருந்து மலையாளத்தை வேறுபடுத்திக் காட்டுபவை இரண்டு முக்கிய இலக்கணக் கூறுகளாகும் என்று குறிப்பிடுகிறார்.

1. மலையாள வினைகளில் பால்பாகுபாடு இல்லை. 2. மலையாள மொழியில் வடமொழிச்சொல்லின் மிகுந்த பயன்பாடு காணப்படுகிறது

மலையாளம் பிரிந்ததற்கான காரணங்களாகத் தமிழ்நாட்டில் மக்கட் பெருக்கம், எழுத்தொலித் திரிபு, சொல் திரிபு, பொருள் திரிபு, இயற்கைத் தெரிப்பு, வழக்கற்ற சொல் வழங்கல், குடியேற்றப் பாதுகாப்பு (இப்போது தமிழில் வழங்கா விடினும் குமரிநாட்டில் வழங்கியவாகத் தெரிகின்ற சொற்களும் சொல் வடிவங்களும் பிற திரவிட மொழிகளிற் பாதுகாக்கப் பட்டிருத்தல்) புத்தாக்கச் சொல், தாயொடு (தமிழொடு) தொடர்பின்மை, வடசொற் கலப்பு, வடமொழி எழுத்தையும் இலக்கணத்தையும் மேற்கொள்ளல், தமிழின் பண்படுத்தம் ஆகியனவற்றைக் குறிப்பிடுகிறார்.

எடுத்துக் காட்டாக, தமிழில் வெள்ளையான புதுப் பெருக்கைக் குறிக்கும் வெள்ளம் எனும் சொல் மலையாளத்தில் நீரைக் குறிக்கப் பயன்படுத்துவதால் பொருள் வேறுபடுதலை அவர் காட்டலைக் கூறலாம்.

மலையாளம்

1. சாரல் நாட்டு (மலை நாட்டு) மன்னனாகிய சேரன் எனும் பெயர் முறையே சேரல்>> சேரலன்>> கேரலன்>> கேரளன் என மருவும். பின் ஈறு திரிந்து கேரளம் என்றாகும். மலை+ஆளி =மலையாளி என்றாகும். அவனது நாடும், மொழியும் சேரநாட்டுடனான தொடர்புக்கு மலை தடுப்பாக இருந்தமை.

2. 12 ஆம் நூற்றாண்டோடு பாண்டிய மரபும் 13ஆம் நூற்றாண்டோடு சோழ மரபும் சேர மரபுடன் மணவுறவு நிறுத்தியமை.

3. வடமொழிக்கும் வடமொழியாளர்க்கும் தெய்வ உயர்வு கற்பிக்கப்பட்டமையும் வரம்பிழந்த வடசொற் கலப்பும்.

4. மிகு மழையால் மலையாளியர்க்கு மூக்கொலி சிறந்தமை.

5. மலையாளியர் முன்னோரின் செந்தமிழ் நூல்களைக் கல்லாமை.

6. மலையாளியரின் ஒலிப்புமுறைச் சோம்பல்.

மேற்கூறிய கருத்துக்களைக் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழின் ஒரு கிளை மொழியே மலையாளம். திராவிட மூல மொழியிலிருந்து தமிழைப் பிரித்துப் பார்க்க முடியாது என்கிறார் கால்டுவெல். தமிழிலிருந்து மலையாளத்தை வேறு பிரிக்கின்ற ஆறு காரணங்களில் பால்பாகு மட்டுமே முக்கியம் என்கிறார்.

பார்வை நூல்கள்

1. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் -கால்டுவெல்

2. கேரளப்பாணினியம் (மலையாள மொழி இலக்கணம்)

3. கேரளப்பாணினியமும் கால்டுவெல்லின்றே திராவிட பாஷையாகிரணமும் ஒரு தாரதம்மிய படணம் (சி ஆர். பிரசாத் அச்சிடப்படாத முனைவர் பட்ட ஆய்வேடு, கேரளப் பல்கலைக்கழகம்)

4 மலையாள இலக்கணக் கோட்பாடு (பேரா. கி நாச்சிமுத்து அச்சிடப்படாத ஆய்வுக்கட்டுரை)

❀ ❀ ❀

12. Dravidian Loans in Sanskrit

Dr. Venugopala Panieker
Professor & Head (Retd.)
Calicut University

Even R. Caldwell, the 'Father' of Dravidian comparative linguistics has thought of Dravidian (Dr.) loans in Sanskrit (Skt.), the old stage of Indo - Aryan (IA.) part VII section I of his comparative grammar (revised in 1875) contains a detailed discussion of indebtedness of SKt. To Dr. languages. It is generally accepted that Dr. languages have borrowed profusely from SKt. Even Tamil (Ta.), which is resistant to external influences has such loans and Tolkappiyam permits phonologically nativized loans (Tol. Col. 402). But Dr. loans in SKt. was a new idea during 19th century. Probably it was Gundert in 1869 who first thought of it and influenced Caldwell. Caldwell out lines six conditions to determine whetter a word in SKt. Is from Dr. T. Burrow later revises these in his paper published in 1946 (Burrow 1968: 285 - 318) and Emeneau summarizes than in 1954 (Emeneau 1968:164) with some comment as follows: (1) the Sanskrit word should have no Indo - European etymology which is obvious; (2) there should be wide currency of the etymon in Dravidian languages and it should be a basic element in the vocabulary; (3) a word is shown to be Dravidian in origin if it is clearly to be derived from Dravidian root (e.g. Candana - 'sandal wood tree, ointment' is Dravidian in origin since the corresponding Dravidian nouns Cantu etc. are specialized derivatives of a verb meaning 'to rub to paste'); (4) the word

should be of some antiquity in Dravidian (e.g. occurring in the earliest Tamil texts); (5) comparative lateness of the appearance of the word in sanskrit (or.... Appearance only or first in Sanskrit lexica) increases the probability of its being a borrowing; (6) in each case possible phonetie eriteria should be looked for; (7) likewise, semantie developments can sometimes be taken as criteria. Emeneau adds a corollary to (2), that if the word denotes something peculiar to the Indian geographical scene, a Dravidian origin is more probable than an Indo - European one.

Caldwell has a list of 31 words which contains atavi 'jungle' ani 'pain of axle', amba 'mother/father', ali 'female friend to a woman', katu 'sharp' kuti 'house', kotta 'fort', nira 'water' pattana 'city', palli 'village' and mina 'fish'.

After a gap of 70 years Burrow takes up this problem and the total number goes up to 750 or more. Even frequent SKt. words like Kataka 'bracelet' and kantla 'throat' for him are Dr. loans. Not all in his list are beyond doubt. Kunapa 'corpse' formed in Athar va Veda he connets with kuz 'to become soft'. Some of the etyma he suggests are excellent. SKt. Kokila 'cuckoo' he connects with Ta. Kuyil. It is convincing because in Kannada we have Kukil. But sound changes in all cases are not so transparent. Some could be loans to prakrit languages and adopted to SKt. Later. It saspa of SKt. is related to Ta.cappu an intermediate prakrit stage may be posited. In certain cases the similarity between Dr. and SKt. could be the result of borrowal to both targets from a common source. It is known that SKt. Srrigivera 'ginger', the later part is from Dr. ver 'root' and the former is from some Austric language. In Ta. and Malayalam (Ma.) we have 'inci' which also is an Austrie loan with relevant sound ouanges in Dr (Burrow 1968: 313, 314).

Same words found right from Rig Vedic times are Dr. loans according to Burrow (1968: 309). He has a list of such 25 words which include Kuta 'mallet', danda 'stick', puspa 'flower', bala 'strength', bija 'seed' and puj 'to honour' many such words

resembles languages in central Dravidian branch than those in South Dravidian. He tells us that the adoption of Dr. words started in early vedic times from the Dr. speakers the Aryans came in contact in the north - western part of south Asia and when their descendants spread to other parts of the sub-centiment in later days contact also increase resulting in larger number of loans. Thus middle as well as new IA languages have more loans. The most pronounced external influence on IA is from Dr. It is also interesting to note that many evident Dr. loans we find in SKt. Literature have no reflexes in the present - day IA. languages. Instead of kanana 'forcot', kuntala 'hair', mina 'fish' and nira 'water', hindi has only ban, Kes, machl and pani. These can be traced to Indo - European sources. So we can assume that many earlier loans from Dr. were only loans to the literary dialect than to spoken dialects. Among the long list of synonyms for 'elephant' hasti alone survives. Hindi has hathi mataing is retained in Divehi spoken in Male islands and in those islands we have no wild elephants. However many Dr. loans are retained in newer languages and they have borrowed more and more depending on the intensity of contact.

Caldwell has not given serious thought regarding structural loans in IA. From Dr. this has become concern of a few Dravidianists only after the concept of linguistic area has been recognized. The epoch making paper in this filled is by Emeneau in 1956 (Emeneau 1967: 172 - 186). He revisits this topic at a later date also (1974). We now know that South Asia is a linguistic area and linguistic traits diffuse across genetic boundaries. After centuries of co - existence IA. And Dr. languages along with Austrie and Seno - Tibetan have developed a number of common features not shared by their nearest relatives outside South Asia. It means that IA languages have adopted Dr. features in grammar and lexicon in addition to lexical loans. IA consequently has come closer to Dr. and away from Indo - European. This shift has started in vedic or even in pre-vedic times. Emeneau writes that 'even our earliest Sanskrit

texts show features that historically are Indo - European in their nature but resembles Dravidian languages and that as time went an more such features appeared in Indo - Aryan' (1967:176).

We may now try to list some such structural and phonological 'loans' in IA.

(1) Most of the Indian languages starting from Rg. Veda have a contrast between dental series and retroflex series in their consonantal system. These feature has spread from Dr.

(2) The post - vedic IA., has completely lost the Vedic accentual system.

(3) Starting from middle IA., prakrit stage, we see no dual number.

(4) IA. Languages in later days have no pre-positions. They have post positions like Dr. languages. What used to be prepositions have merged to become prefixes even in classical SKt. In later days starting from middle IA. We see that the prefixes are merged with the root to form another root. In examples like SKt a yati 'come', in vedic times a was separable and he put away from the root and hence it was a pre position. Later on such separation become impossible. Now in languages like Hindi ati a-yati is different from the root without a-, ie jati yati. They are two different verbs with different roots and are comparable with var 'come' po(k) 'go' in Ta. And Ma.

(5) New IA. Languages like Dr. languages add the same case suffixes to distinet stem of singular and plural. It is a clear departive from the inflexional native of SKt.

SKt. Balasya 'of a child' batanam 'of children'

Hindi bal - ka balo - ka

Ta. Balan - utaiya balar - utaiya

(6) *Adverbial participles of IA, starting from SKt. are Dravidian - like SKt. Gam - tum Ma. Poku - van 'togo'*

(7) *The quotative iti, the indeclinable api etc are comparable to enru / ennu and - of Dr.*

One may be able to multiply this list. All lead to the point that Dr. gets me structural pre dominance in South Asian linguistic area.

Even many of the cultural concepts we find exclusely clotheel in sanskritie terms can be of Dravidian origin. The concepts like asceticism in was new vedic religion which was mainly ritualistic. How far Dravidians contributed to the development of these concepts cannot have an easy answer.

Many IA. Language speakers of later dates could the descendants of those Dr. language speakers who shifter their languages. hance we can think of sub-stratum influence an IA. This may be evident in eastern and southern areas of IA language areas. All through the history IA. felt the presence of Dr. this is true on the other side also. Even the earliest account of grammar and literary thought in Ta. has ansiderable sanskrite influence in them. We see in Tolkappiyam a number parallels with various pratisakhya-s. the society it reflects has caste-like stratification with which we are familiar in sanskritic sources. Even the excusively Ta. Grammatical terms have parallels in Aranyaka. Aitareya Aranyaka for example comparts voice to 'soul' and consonants to 'today'. One is reminded of wyier 'vowel', literally 'soul' and may 'consonant', literally 'today' of Tamil grammatical tradition. (siddheswar varma (1961:3) gives a description of grammatical concepts of Aranya).

We see the reference to Tamil kings in Asoka inscriptions and we have his inscriptions in far solution as karnata written IA. dialects of those days pointing to the presence of IA speakers in that region old Ta. Literare frequently refer to Maura conquerors and some Ta. Kings imitate the Asokan title 'devanam priya' as 'vanavar - aspen'

The IA is thoroughly South Asian zed by non - indo - European influence, mainly Dravidian. The Dravidian all thought its history has IA influence. A discussion of Dr. Loans in SKt. gives us a peep into this reality.

References:

1. *Burrow, T. 1961. Collected papers on Dravidian Linguistics. Annamalai university*
2. *Caldwell, R. (1875) 1961. A comparative grammar of Dravidian or south Indian family of languages. University of Madras.*
3. *Emeneau, M.B. 1967. Collected papers, Annamalai University*
4. *Emeneau, M.B. 1974. 'Indian Linguistic area re-visted', International Journal of Dravidian linguistics - III Trivandrum.*
5. *Siddheswar varma (1929) 1961. Critical studies in the phonetic observations of Indian grammarians, Delhi: Munshiram Manoharlal*
6. *Venugopala panicker. 2013. 'phonology and phonetics in pratisakuya-s, Tolkappiyam and lilalalakam', Rajamahima. University of Calicut.*
7. *Zuelebil, Kamil, V. 1990. Dravidian linguistics an introduction Pondicherry institute of linguistics and culture.*

13. கால்டுவெல் பார்வையில் தெலுங்குச் சாரியைகள்

முனைவர் சி. சாவித்ரி
இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி
தமிழ்ப் பல்கலைக்கழகம்

சமஸ்கிருதத்தில் த்ராவிட, த்ரவிட என்ற சொற்கள் தமிழ் மொழியினையும் தமிழர்களையும் குறிக்கும் சொற்களாகும். 'பஞ்ச திராவிட' என்ற சொல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, குசராத்தி மொழிகள் பேசுபவர்களைக் குறிக்கின்றது. இந்தத் திராவிட மொழிகளுக்கு முதன் மூதலில் ஒப்பிலக்கணத்தை வகுத்தவர் பிஷப் கால்டுவெல். திராவிடச் சொல்லில் இருந்து வந்த 'திராவிடியன்' என்ற சொல்லை இம்மொழிக் குடும்பத்திற்குச் சூட்டியுள்ளார். இவரைப் பின் பற்றியே மற்ற மொழி அறிஞர்களும் இச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர் (பி.எஸ்.சுப்பிரமணியம் : ப.ீ)

கால்டுவெல் காலத்தில் தற்போது நாம் அறிந்த திராவிட மொழிகள் கண்டறியப்படவில்லை. அவர் 12 மொழிகளை மட்டுமே திராவிட மொழிகளாகக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் தமிழ், மலையாளம், தெலுகு, கன்னடம், துளு, கொடகு மொழிகளைத் திருந்திய மொழிகளாகவும், தொத, கோண்டி, கூயி, கூடுக், ராஜ்மஹால் மொழிகளைத் திருந்தா மொழிகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். பிராஹூயி மொழியில் திராவிட மொழித் தன்மைகள் இருந்த போதிலும் அவர் இம் மொழியைச் சித்தியன் மொழியாகக் கருதி அதில் திராவிட மொழித் தன்மைகள் பிராஹூயியில் கலந்துவிட்ட பழங்கால திராவிட இனத்தின் எச்சங்களாக எண்ணியுள்ளார்.

கால்டுவெல் திராவிட மொழி ஒப்பிலக்கணத்தின் நோக்கங்களாகக் கீழ் வரும் நான்கு முக்கியக் கருத்தியல்களைக் குறிப்பிடலாம் (பி.எஸ். சுப்பிரமணியம் : ப. 67).

1. கால்டுவெல் அவர் காலத்தில் கண்டறியப்பட்ட 12 மொழிகளை ஒரு மொழிக் குடும்பமாக உறுதி செய்து, அம் மொழிக் குடும்பத்திற்குத் 'திராவிட மொழிக் குடும்பம்' என்று பெயரிடுவது (சமஸ்கிருதத்தில் 'திராவிட' என்ற சொல் குறிப்பாகத் தமிழையும், தமிழர்களையும் மட்டுமே குறிப்பதாகும். அதைக் கால்டுவெல் மொழிக் குடும்பத்திற்குப் பயன்படுத்தியது).

2. திராவிட மொழிகளின் சிறப்புகளை விளக்கிக்கூறித் திராவிட மொழிகளுக்கும், சமஸ்கிருதத்திற்கும் உள்ள வேறுபாட்டினை விளக்கி, இவை சமஸ்கிருதத்தில் இருந்து பிறந்தவை அல்ல என்று உறுதி செய்வது.

3. திராவிட மொழிகளுக்கு முதன் முதலில் மிகவும் விளக்கமான ஒப்பிலக்கணத்தை உருவாக்கியது.

4. சில திராவிட மொழிச் சொற்கள் சமஸ்கிருதத்தில் சேர்ந்துள்ளன என்ற கோட்பாட்டை உருவாக்கி இக்கருத்தியலில் ஆராய்ச்சிகள் மேற்கொள்வது.

கால்டுவெல்லுக்குப் பிறகு 19ஆம் நூற்றாண்டில் எந்த ஒப்பாய்வுகளும் நடைபெறவில்லை. இதற்குக் காரணம் அக்கால இந்திய மக்களுக்கு இவ்விதமான ஆய்வுகளில் திறமையும் ஆர்வமும் இல்லாமல் போனதே. மேலும் கால்டுவெல் கோட்பாடுகள் 'சமஸ்கிருதம்தான் அனைத்து மொழிகளுக்கும் தாய்' என்ற பழைய கோட்பாட்டை நம்பிய அக்காலப் பண்டிதர்களிடம் போய்ச் சேராமை, அக்காலத்தில் அயல் நாட்டவரான மிஷனரிகள், அரசு ஊழியர்கள் ஒப்பீட்டு ஆய்வுகளுக்குப் போகாமல் இருப்பது, இலக்கியம் அற்ற மொழிகளுக்குச் சுருக்க இலக்கணங்கள், அகராதிகள் இயற்றுவதிலேயே திருப்தி அடைந்தனர். கால்டுவெல் காலத்தில் சி.பி.பிரௌனின் தெலுகு - ஆங்கிலம் (1852) அகராதி, எச்.குண்டர்ட் மலையாளம் - ஆங்கிலம் (1872) அகராதி, எம்.பி.கிட்டல் கன்னட - ஆங்கிலம் (1893) அகராதிகளை உருவாக்கினார்கள்.

ராபர்ட் கால்டுவெல் இந்தியா வருவதற்குக் கப்பலில் பயணம் மேற்கொண்ட தருணத்தில் அவர் பிரௌன் என்பவரைச் சந்தித்தார். பிரௌன் ஆரிய மொழியையும், தெலுங்கையும் நன்கு அறிந்தவர். அவர் தெலுங்கு மொழிக்கும் இலக்கியத்திற்கும் தொண்டாற்றியவர். அவரிடம்தான் கால்டுவெல் முதன் முதலில் ஆரியம் பயின்றார்.

கால்டுவெல்லும் தெலுங்கு மொழியும்

கால்டுவெல் அவர்கள் தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எடுத்துரைப்பதற்காக 1856ல் 'எ கம்பரேடிவ் க்ராமர் ஆஃப் த்ரவிடியன்

லாங்வேஜஸ்' என்ற நூலை எழுதி இருக்கின்றார். இதற்காக அவர் 'இடியன்குடி'யில் இருக்கும்போது 1840 - 1872 இடைப்பட்ட காலத்தில் தமிழோடு தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு மொழிகளைக் கற்றார். (The Hindu, February 18, 2011. கலைஞர் கருணாநிதி அவர்களின் உரை)

கால்டுவெல் ஓசை நயத்தில் திராவிட மொழிகள் அனைத்திலும் தெலுங்குக்கே முதலிடம் பெறத்தக்க உரிமையுடையது என்றாலும், பழமைப் பெருமையிலும், சொற் பெருக்கத்திலும் திராவிட மொழி வரிசையில் தெலுங்கு, தமிழை அடுத்தே வைக்கப்படும் என்கிறார்.

இவர் தெலுங்கு தொடர்பான சொல்லின் மற்றவர்களின் கருத்துக்களைத் தெளிவு பெறத் தம் நூலில் பதிவு செய்துள்ளார். அவ்வ கீழ் வருமாறு :

- ஆலந்து நாட்டவர் மொழியிலிருந்து தோன்றியதான 'ஜெண்டோ' என்ற பெயரினாலும் ஒரு காலத்தில் இந்தியர் அனைவரையும் குறித்து, நாளடைவில் தெலுங்கரை மட்டுமே குறித்த 'ஜெண்டில்ஸ்' என்ற பெயரினாலும் இம்மொழி பெயரிடப்பட்டிருந்தது.
- தெலுங்கு பேசும் மக்களைக் குறிப்பிடும் பகுதிகளாகப் பல இடங்களைக் கூறிய போதிலும் குறிப்பாக உள்நாட்டில் மராட்டிய மொழி புழங்கும் மாவட்டங்களிலும் கிழக்கு எல்லை வரை பரவிய மைசூர் மாநிலம், கடப்பை, கர்னூல் மாவட்டங்கள், ஹைதராபாத், நாகபுரி மாவட்டங்கள், கோண்ட் வனத்தில் ஒரு பகுதி ஆகிய இப் பெருநிலப்பரப்பில் புழங்கியதும் தெலுங்கே.
- மேற் கூறிய நிலப்பரப்பை முகமதியர்கள் 'தெலங்கான' எனப் பெயரிட்டு அழைத்தார்கள்.
- தெலுங்கு மொழி, சமஸ்கிருத எழுத்தாளர்களால் 'ஆந்திரம்' அதாவது ஆந்திரர் புழங்கும் மொழி என்று அழைக்கப் பெற்றுள்ளது. பண்டைய காலம் தொட்டே இரண்டு இனங்களாகப் பிரிந்து வாழ்ந்த தெலுங்கர்களில் ஒரினத்தவர் ஆந்திரர். மற்றோர் இனத்தவர் கலிங்கர்.
- ஆதி ஆரியர்க்கு கலிங்கரைக் காட்டிலும் ஆந்திரரே நன்கு அறியப் பட்டிருந்ததாகத் தெரிகின்றது. ஐத்தரேய பிராமணத்தில் ஆந்திர அரச இனத்தவர் இந்தியாவை ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது.
- மெகஸ்தனீஸுக்குப் பிறகு வாழ்ந்த பிளைனியால், ஆந்திரர் ஆற்றல் மிக்க இனத்தவர் எனக் கூறப்பட்டது.

- கங்கையின் வடதிசை நாடொன்றில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டின் ஆசிரியரால் அறியப்பட்ட பல்வேறு இனத்தவருள் ஆந்திரரும் ஒருவராக அக்கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது.

- நான் அறிந்த வரையில் வெளிநாட்டவரால் இம் மொழி அறிந்து குறிப்பிடப்பட்ட முதல் நிகழ்ச்சி, கி.பி.ஏழாம் நூற்றாண்டின் இடையில் இந்நாட்டிற்கு வந்து, 'ஆந்திரர் வழங்கும் மொழி மத்திய இந்திய மக்கள் வழங்கும் மொழிகளிலிருந்து வேறுபடுகின்றது.

ஆனால், அவ்விருவரின் எழுத்துருவங்கள் மட்டும், பெரும் பகுதி ஒன்றாகவே உள்ளன' என்று கூறும் சீன யாத்திரிகன் யுவான்ஸ்வாங்கின் 'நினைவு அலைகள்' என்னும் குறிப்பில் இடம் பெற்றிருப்பதேயாகும். இதனால், தெலுங்கு மொழியின் நாகரிகம், சிறப்பாக ஆந்திரர் வழங்கும் தெலுங்கு மொழியின் நாகரிகம், மதிக்கத்தக்க அளவு வளர்ந்திருக்கின்றது என்பது புலனாகும் என்று கால்டுவெல் கூறுகின்றார்.

- தெலுங்கர் தங்கள் மொழிக்கு இட்ட பெயர் 'தெலுகு'. அப் பெயரின் பிற வடிவங்கள் 'தெலுங்கு, தெலிங்க, தைலிங்க, தெனுகு, தெனுங்கு' என்பனவாம்.

- தங்கள் மொழியை உணர்த்தும் பொதுவான பெயராகிய 'தெலுகு' அல்லது 'தெலுங்கு' என்பதற்கு அம்மொழிப் பண்டிதர்கள் விரும்பி மேற்கொள்ளும் பிறப்பியல் முறை, லிங்க வடிவம் அமைந்த மூன்று கோயில்களை எல்லைக் கற்களாகக் கொண்டு விளங்கும் 'த்ரிலிங்க' நாட்டு மொழி என்று பொருள்படும் 'த்ரிலிங்க' என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகக் கொள்வதேயாகும். பேராசிரியர் கேம்பெல் அவர்கள் இக்கூற்றை ஏற்றுக் கொள்வார். ஆனால் பேராசிரியர் பிறௌன் அவர்கள் 'இக்கூற்று, இக்காலத்தவர் கண்டுபிடித்த ஒரு வெற்றுரை. 'தெலுகு' என்று அச் சொல்லுக்குத் தெரிந்த வேறு சொல் ஏதும் இல்லை' என்று கூறுகின்றார். கோயில்களின் பெயர்களோடு இணைத்துக் கூறப்பட்ட இக்கொள்கை பெரும்பாலும் பெயர் ஆராய்ச்சிக்கு உட்படாமலே தள்ளப்பட்டது போலும். ஆனால், லிங்கம் எனும் அச்சொல் எப்பொருளில் ஆளப்படுகின்றது என்பது

குறித்து ஏதும் கருதாமல் 'திரிலிங்கம்' என்பதிலிருந்தே 'தெலுகு' பிறந்தது என்ற முடிவு அறவே கைவிடப்படும் அந்நிலை ஆராய்ந்து காணும் தகுதியுடையதேயாகும் என்று கால்டுவெல் தனக்கு கிடைத்த தரவுகள் அடிப்படையில்

தெலுங்குக்கு இணையான சொற்கள் பற்றிய கருத்தியல்களையும் தெலுங்கு மக்களின் பண்புகளையும் எடுத்துக் கூறியுள்ளார்.

- வடதிசையில் வாழும் மக்கள் என்பதால் தமிழர்கள் இவர்களை 'வடுகர்' என்று அழைத்தார்கள்.
- மேலும், ஐரோப்பியர்கள் மதத்தைப் பரப்புபவர்களாகவும், அரசு ஊழியர்களாகவும் பணிபுரியும் நிலையில் நம் நாட்டுக்கு வந்து அவர்கள் இந்திய மொழிகளைக் கற்றறிந்தனர். தெலுங்கு மொழியைக் கற்றறிந்த மிஷனரிகளும் சிவில் சர்வெண்ட்டுகளும் தெலுங்கு மொழி கற்பது மட்டுமின்றித் தெலுங்கு மொழிக்கு அகராதிகளையும் இலக்கணநூல்களையும், வாசகங்களையும் உருவாக்கினார்கள். இவற்றில் அவர்கள் இயற்றிய இலக்கண நூல்களின் தலைப்புகளை மட்டுமே ஆராய்ந்தால் அவர்கள் தெலுங்கு மொழியை என்னென்ன பெயர்கள் கொண்டு அழைத்தனர் என்பது புலனாகும். சான்றாகச் சில நூல்கள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

1. பெஞ்ஜமின் ஸ்கால்ஜின் 'வரூகியன் க்ராமர்' (1728),

   க்ரமடிக தெலுகிக (1728) (*Grierson.G. A Linguistic survey of India - vol.IV,1967*)

2. ஆசிரியர் பெயர் தெரியாத 'எ க்ராமர் ஆஃப் தி 'ஜெந்தோ' லாங்வேஜ்' (1807) (*Grierson.G. A Linguistic survey of India - vol.IV,1967. page.581*)

3. வில்லியம் கரியின் 'எ க்ராமர் ஆஃப் தி தெலிங்க லாங்வேஜ்' (1814)

   இவர் தெலுங்கைத் 'தெலிங்க' என்று குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமின்றி இவர் தெலுங்கு மொழி சமஸ்கிருத்தில் இருந்து பிறந்த மொழி என்றும் கருதுவதால்1 'தேசிய'ச் சொற்களின் தோற்றம் தெரிய வருவதில்லை என்று குறிப்பிட்டார். தெலிங்க, கர்னாடக, தமிளம், மலயாளம், சிங்களீஸ் - இந்த ஐந்து மொழிகளில் தெலுங்கு மிகவும் வளர்ச்சி பெற்ற மொழியாகக் காணப்படுகிறது என்றும் தெலுங்கு மொழி கற்பதற்குக் கடினமாக இருந்த போதிலும் கற்க வேண்டிய மொழிகளில் ஒன்று என்று குறிப்பிட்டுள்ளார். இது வேற்றுமைகளைக் கொண்டுள்ளதால், சரள சுந்தர பொருள் வெளிப்பாட்டிற்கு அனுகூலமாக உள்ளது என்ற தன் கருத்தை வெளிப்படுத்தினார்.

4. எ.டி.கேம்பெல், 'எ க்ராமர் ஆஃப் தெலோகோ லாங்வேஜ்' (1816)

இவர் தெலுங்கு இலக்கிய, வழக்கு மொழிகளை நன்கு அறிந்து 'ஆந்திர மொழி சமஸ்கிருத்தில் இருந்து பிறந்தது அன்று' என்று உறுதி செய்ததம்கருத்தைவெளிப்படுத்துவதற்குத் தயங்கினார் (ஜி.லலித, ப.245). இதற்குக் காரணம் தெலுங்கு மொழி தத்லமச் சொல் மயமாவதே. சமஸ்கிருத எழுத்து வடிவங்கள் தெலுங்கு எழுத்து வடிவங்களைக் காட்டிலும் மாறாக உள்ளதால் தெலுங்கு தனி மொழி என்று அவர் கூறுகின்றார்.

5. வில்லியம் பிரௌனின் 'எ க்ராமர் ஆஃப் தி ஜெந்தோ லாங்வேஜ்' (1817). இவர் தெலுங்குக்கு இணையான சொல்லாக 'ஜெந்து' என்று கூறினார். முதன் முதலில் தெலுங்கை 'ஜெந்து' என்று கூறியவர் இவரேயாவார். கி.பி. 1648 -இல் இந்த ஜெந்து சொல் முதல் முதலாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. சி.பி.பிரௌன் இது பொருளற்ற சொல் என்று புறக்கணித்து விட்டார்.

6. ஜெ.ஸி. மொர்ரிஸிஸ் 'தெலோகோ செலக்சன்ஸ் வித் ட்ரான்ஸ்லேஷன்ஸ் அண்ட் க்ரமடிகல் அனலைஸிஸ்' (1823)

7. டபிள்யூ.எம்.ஹாவெல்லின் 'கம்பெண்டியம் ஆஃப் தி ஆந்திர வியாகரணம்' (1834)

கால்டுவெல்லின் தெலுங்குச் சாரியைகள்

சாரியை விளக்கம்:

திராவிட மொழிகளில் பெயர்ச் சொற்கள் சிலவற்றுக்கு (எண், பதிலிடு பெயர்களுடன்) இரண்டாம் மற்றும் பிற வேற்றுமைகளில் சில உருபுகள் வந்து சேருகின்றன. இவற்றைத் தெலுங்கில் 'ஊபவிபக்திகாலு' என்பர்.

இவற்றைக் கால்டுவெல் *Inflectional increments* என்று கூறியுள்ளார். சிலர் *Augments* என்று சொல்கின்றனர். தமிழ் இலக்கணங்கள் இவற்றைச் 'சாரியை' என்கின்றன. இவற்றுக்குத் தனித்த பொருள் ஏதுமில்லை. ஆனால் இவற்றின் பயன் இவற்றுக்குப் பின்பு வேற்றுமைகள் வரும் என்பதைக் காட்டுவதேயாகும் (பி.எஸ் சுப்பிரமணியம், ப.252).

தொல்காப்பியர் சாரியை வரும் இடத்தைப் பற்றிக் கூறுங்கால்,

'அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே' (புணார்ச்சி:16)

(சொல்லப்பட்ட உயர்திணை அஃறிணைப் பெயர்களின் பின்பே சாரியைச் சொற்கள் வரும்)

(ஈடு) : ஆடூஉவின்கை, மகடூஉவின்கை, பலவற்றுக்கோடு

சாரியை வரும் இடங்களைப் பற்றிக் குறிப்பிட்ட தொல்காப்பியர் சாரியைகளின் வகைகளைப் பற்றி அடுத்த நூற்பாவில் கூறியுள்ளதாவது :

அவைதாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே (புணர்ச்சி; 17)

இந்த நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்ட சாரியைகள் இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக், இக், அன் என்ற ஒன்பதுமாகும்.

தெலுங்கு இலக்கண ஆசிரியர்களும் மொழியியலாளர்களும் இச் சாரியைகளை 'ஔபவிபக்திகாலு' (துணை வேற்றுமைகள்) என்றே கூறுகின்றனர். தெலுங்கு மொழியில் உள்ள சாரியைகள் மூன்று. அவை -இ, -டி, -தி என்பனவாகும்.

இவையல்லாமல் சில பெயரடிகளுக்கும் இரண்டாம் மற்றும் பிற வேற்றுமைகளுக்கும் வருகின்ற சில எழுத்துகளையும் துணை வேற்றுமைகளாகக் கொள்ளலாம் (பி.எஸ். சுப்பிரமணியம்: ப.259).

தமிழ் மொழியில் பெயருக்கு முன்பு வரும் பண்புப் பெயர்களைப் பெயரடை என்றும் வினைக்கு முன்பு வருபனவற்றை வினையடை என்றும் கூறுவது போலத் தெலுங்கு அறிஞர்கள் வேற்றுமைகளுக்கு முன்பு வருவதால் சாரியைகளைத் துணை வேற்றுமைகள் என்றார்கள்.

தமிழில் சுட்டிய ஒன்பது சாரியைகளும் தெலுங்கில் சுட்டிய மூன்று சாரியைகளையும் கொண்டு கால்டுவெல் திராவிட மொழிகளில் குறிப்பிட்ட சாரியைகள், அவற்றுக்கு அவர் தரும் விளக்கங்கள் இங்கு எடுத்துரைத்துக் கால்டுவெல் குறிப்பிட்ட சாரியைகளின் பின்புலம் என்னவாக இருந்திருக்கலாம் என்ற கருத்துக்கள் இங்குப் பதிவு செய்யப்படுகின்றன.

கால்டுவெல் குறிப்பிட்டுள்ள சாரியைகள்:

கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலில் சாரியைகளைப் பற்றி விளக்கியுள்ளார் (ப.341-321). அவர் குறிப்பிட்ட சாரியைகளின் வகைகள் மொத்தம் ஏழு. அவை :

1. 'இன்' சாரியை
2. 'அத்', 'அர்' சாரியைகள்
3. 'டி' சாரியை
4. 'அத்து' அல்லது 'அற்று'ச் சாரியை
5. ஈற்று மெய் இரட்டித்து வல்லொலியாதல்
6. 'இ' கரச் சாரியை
7. பன்மைச் சாரியை

என்பனவாம். கால்டுவெல் குறிப்பிட்டுள்ள ஏழு சாரியைகளுள் 'இன்', அத்து' என்ற இரண்டும் தொல்காப்பியதில் இடம் பெற்றுள்ளன. 'டி','இ' என்பன தெலுங்கு மொழிக்குரியன. ஏனைய நான்கு சாரியைகள் கால்டுவெல் குறிப்பிட்டவை. அவற்றின் விளக்கங்களை இனிக் காண்போம்.

1. 'இன்'சாரியை:

கால்டுவெல் திராவிட மொழிகளில் 'இன்' சாரியை பற்றிக் குறிப்பிடும் போது முதலில் 'இன்' வடிவம் தமிழ், கன்னட மொழிப் பெயர்ச் சொற்கள் சிலவற்றில் வரும் என்று கூறி இதற்கு ஒப்பாகத் தெலுங்கில் நு, நி' என்பவை சாரியைகளாக வரும் என்கின்றார். இவையனைத்தும் இயல்பால் ஒரே தன்மையுடையவை என்று கூறி, 'இன்' சாரியை தமிழில் ஒருமை பன்மை ஆகிய இரண்டு இடங்களிலும் ஒரேவகையாக வருகின்றது என்றும் இவற்றின் வேலை உருபேற்கும் பெயரடிகளை உருவாக்குவதே என்கிறார்.

'இன்' என்பதன் இனமான தெலுங்குச் சாரியைகளாகிய 'நி, ந' இரண்டும் சில பெயர்ச் சொற்களில் உடைமைப் பொருள் உணர்த்துவதோடு சில பெயர்ச் சொல்லடிகளோடு அவை வேற்றுமை உருபுகள் ஏற்பதன் முன் சாரியைகளாக இணைக்கப்படுவது உண்டு என்று தீனிகி = இதற்கு, குருவுனகு = குருவிற்கு என்பவற்றைச் சான்று காட்டியுள்ளார். இச் சாரியைகளெல்லாம் தெலுங்கில் ஒருமைப் பெயர்களோடு மட்டுமே இணைக்கப் பெறும். தெலுங்கின் 'நி' சாரியையும் தமிழ், கன்னடத்தில் 'இன்' சாரியையும் பிறப்பால் ஒரே தன்மை என்பதில் சிறிதும் ஐயமில்லை என்று கூறுகின்றார்.

2. அத், அர் சாரியைகள்:

தெலுங்கில் அழகிய பெண் என்ற பொருளில் வரும் 'சொகஸுராலு' (சொகஸு + ர் + ஆலு) என்பது போன்ற சில

இடங்களில் பெயரடியாக வரும் பண்புப் பெயரையும், பெண்பால் விகுதியாகிய 'ஆலு' என்பதையும் இணைக்க வரும் ஒலித்துணை கருதிய 'ர்'கர மெய்யைக் கன்னட 'அர்' என்பதோடும், அதையொட்டி 'அத்' என்பதோடும் முடிவாக அஃறிணைச் சுட்டோடும் உறவு உடையதாகத் தொடர்புபடுத்தலாம். ஆனால் 'ர்'கர மெய்யை உடம்படுமெய்யாகக் கொள்வதே சிறப்பு என்றார் கால்டுவெல்.

கால்டுவெல் இவ்வாறு கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. இவர் தெலுங்கு மரபிலக்கணங்களை ஆராய்ந்து பார்த்திருக்கலாம். ஏன் என்றால் தெலுங்கு இலக்கணங்கள் 'ஆலு' என்பதைப் பெண்ணைக்குறிக்கும் சொல்லாக மட்டுமே பயன்படுத்தியுள்ளன.

சான்று :

'பேதாதி சப்தம்புலகு ஆலு சப்தம்பு பரம்பகுனபுடு கர்மதாரயம்புநந்து ருகாகமம்பகு' (பாலவியாகரணம்: சந்தி-30)

(பேதா வாய்பாட்டிற்கு ஆலு சொல் சேரும்போது கர்மதாரய (பண்பு) தொகையில் 'ர்'கரம் தோன்றும்)

கால்டுவெல் 'ர்'கரத்தை உடம்படுமெய்யாகக் கூறுவதற்குக் காரணம்:

அ. தெலுங்கில் 'ஆலு' என்பது 'பெண்' என்பதற்கு நிகரான சொல். பெண்ணின் பண்புகளைக் கூறும் நிலையில் இந்த 'ஆலு' என்ற பெயர்ச் சொல் முன் 'ர்' கரம் தோன்றியதால் இதை உடம்படுமெய் என்று கருதியிருக்கலாம்.

ஆ. தெலுங்கு இலக்கணங்கள் 'ஆலு' என்ற சொல்லை வேற்றுமை உருபாகக் கூறவில்லை. ஆகையால் அதற்கு முன் வந்த 'ர்'கரம்சாரியையாகஎண்ணலாகாதுஎன்றுநினைத்திருக்கலாம்.

2. சமஸ்கிருத்தில் இந்த அமைப்பு இருப்பது. 'பெண்' என்ற சொல்லுக்கு நிகராகச் சமஸ்கிருத்தில் 'அதிவ்' என்ற சொல் உள்ளது. பெண்ணின் பண்புகளைக் குறிக்கும் நிலையில் பெயரடைகளாக வரும்நிலையில்'வ்'கரம்உடம்படுமெய்யாக வருகிறது.

சான்று :

சௌபாக்கியவதி, குணவதி, சௌந்தர்யவதி

கால்டுவெல் சமஸ்கிருத மொழி அமைப்பினை நன்கு அறிந்தவராக இருப்பதால் சமஸ்கிருதத்தில் 'வ' கரம் உடம்படுமெய்யாகவும், தெலுங்கில் 'ர்'கரம் உடம்படுமெய்யாகவும் வந்திருகிறது என்பதை உணர்ந்திருக்கலாம். ஆகையால், 'ர' கரம் சாரியை என்று முதலில் கூறினாலும் பின்னர் அதை உடம்படுமெய்யாகக் கருதினார்.

3.'டி' சாரியை

தெலுங்கில் அஃறிணை ஒருமைப் பெயர்களின் சாரியையாக, முறையாகவும் பெரும்பான்மையாகவும் பயன்படுவது 'டி' அல்லது 'தி'. தமிழில் 'அத்து'ச் சாரியை வருவது போல், இச் சாரியை தெலுங்கில் உரு பெற்றும் பெயரடிகளோடும் இணைக்கப்பெறும் சாரியையாக மட்டுமே இல்லாமல் இடத்தின் தேவைக்கேற்ப ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளும் பெயரடைப் பொருளும் உணர்த்தும் பெயரடியாகவும் காணப்படுகின்றது.

தெலுங்கு மொழிச் சாரியையாகச் சொற்களின் ஈற்றில் வரும் சொல்லுருபு, தொடக்கத்தில் 'தி' என்பதே. 'டி' என்பதன்று. ஈற்றெழுத்து 'ர' கரம் அல்லது 'ல'கரமாக வரும் சொற்களை, 'ட'கரம் ஒன்றே தொடர்வதற்கு இதுவே காரணமாகும். 'த' கரம், 'ர' கரம் அல்லது 'ல'கரத்தின் பின்பு வந்தால், அவ்விரண்டு எழுத்துகளும் அம்மொழி இயல்பையொட்டி இரண்டறக் கலந்து, 'ட'கரமாக மாறும். பல்லினமான 'த'கரம், ஏனைய மெய்யெழுத்துகளோடு இணைக்கப்பெறின் இயல்பாகவே, நாவினமாகும். ஆனால் நாவினம் பல்லினமாக மாறுவது அரிது. இத் தெலுங்குச் சாரியை தொடக்கத்தில் 'தி' என்பதே, 'டி' என்பதன்று என்று முடிவு செய்தால் 'அத்' என்ற கன்னடச் சாரியையும் 'அத்து' என்ற தமிழ்ச் சாரியையும் தமிழ், கன்னட அஃறிணைச் சுட்டாகிய 'அது' என்பதோடு தொடர்புபடுத்துவதைப் போன்றே, 'தி' என்ற இத் தெலுங்குச் சாரியையும் அம்மொழி அஃறிணைச் சுட்டாகி 'அதி' என்பதோடு தொடர்புபடுத்துவதும் பொருந்தும்.

4. ஈற்றுமெய் இரட்டித்து வல்லொலியாதல்

தமிழ்ப் பெயர்ச் சொற்கள் 'டு'வையும் 'று'வையும் ஈறுகளாகக் கொண்டு வேற்றுமையுருபேற்க அவ்வீறு 'ட்'கரமும், 'ற்'கரமும் இரட்டிக்கப் பெறும் என்கிறார் கால்டுவெல்.

சான்று : காடு - காட்டில் , ஆறு - ஆற்றில்

தெலுங்கில் இவ்வினப் பெயர்களின் ஈற்றுப் பெயர்கள், சாரியை அல்லது வேற்றுமையடிகளாக மாறும்போது வல்லொலியாக ஆக்கம் பெறுகின்றன. ஆனால், இரட்டிக்கப் பெறுவதில்லை. ஆறு எனப் பொருள்படும் 'ஏறு' என்ற சொல், சாரியை ஏற்பின் 'ஏட்டி' என ஆகாது 'ஏடி' என்றே ஆகும். சில இடங்களில் 'ற்ற்' என்ற மெய்களைக் கொண்ட பெயர்ச் சொற்களை உருபேற்கும் பெயரடிகளாக மாற்றினால் அம்மெய்களை 'ற்த்' என மாற்றுவதில் தெலுங்கு, தமிழ் மொழியை அடியொற்றி நிற்கிறது. கழுத்து எனப் பொருள்படும் 'அற்று' என்ற சொல்லின் சாரியை வடிவம் 'அற்தி' என்று வரும்.

5. 'இ'கரச்சாரியை

தெலுங்கு உயர்திணை இருபாற் பன்மைச் சுட்டுப் பெயர்களின் சாரியையாக 'இ'கரம் வரும் என்கிறார் கால்டுவெல். அவர் எனப் பொருள்படும் 'அவரு' என்பதிலிருந்து பெற்ற 'வாரு' என்ற பெயர், வேற்றுமை உருபேற்கும் பெயரடியாக மாறி 'வாரி' என்றாகிறது. சாரியை ஏற்ற உயர்திணை ஆண்பாற் சொல் 'வானி' என்பதன் ஈற்று 'இ'கரம், தெலுங்கு மொழி ஆண்பாற் பெயர்களின் இயல்பான சாரியையாகிய 'னி' என்பதின் ஒரு பகுதியன்று. 'வாரி' என்பதன் ஈற்றில் வந்த 'இ'கரச் சாரியை போன்றதே இந்த 'இ'கரச் சாரியையாகும். அவர்களுடைய எனப் பொருள்படும் உடைமைப் பொருள் குறித்த சுட்டுப் பெயராகிய 'வாரிதி' என்ற சொல்லை, அதே பொருள்படும் 'அவரது' என்ற தமிழ்ச் சொல்லோடு ஒப்பிட்டு நோக்கின் இரு மொழிகளிலும் அச் சொற்களில் ஈறு, தமிழில் 'அது' எனவும், தெலுங்கில் 'அதி' எனவும் வரும் அஃறிணைச் சுட்டே ஆகும். இச் சொல்லின் ஈற்று 'இ'கரத்தின் முன் நிற்கும் 'இ'கரமும், தெலுங்குக்கே உரிய இயல்பாகத் தன்னைத் தொடர்ந்து வருவதும் 'அதி' என்ற அஃறிணைச் சுட்டின் ஈற்றெழுத்தாய் வருவதுமாய் 'இ'கரத்தினின்றே பெறப்பட்டது என்பதும் அறியப்படும். ஆகவே, வாரி என்பதன் 'இ'கர ஈற்றினை, 'அதி' எனபதன் சுருங்கிய வடிவமாகவோ அதிலிருந்து தோன்றிய ஒரு சொல்லுருபாகவோ கொள்ளலாம்.

6. பன்மைச் சாரியை 'அ'

தெலுங்குப் பேச்சு மொழியில் பெரும்பாலான பெயர்ச் சொற்களின் பன்மைச் சாரியையாக 'அ'கரம் வரும். தெலுங்கு மொழியில் எல்லா அஃறிணைப் பெயர்களிலும் உயர்திணைப்

பெயர்கள் சிலவற்றிலும் பன்மை விகுதியாக வருவது 'லு' என்பதே. 'லு' என வரும் அவ்வீற்றினை 'ல' வெனத்திரிப்பதால் அவை உருபேற்கும் பெயரடைகளாக மாறுகின்றன. இந்த 'அ'கரச் சாரியையின் பின்னரே, எல்லா வேற்றுமை உருபுகளும் இணைக்கப்பெறும். 'சுத்துலு' (சுத்திகள்), சுத்துல (சாரியை ஏற்ற பெயரி) 'சுத்துல சே' (மூன்றாம் வேற்றுமை உடைமைப்பொருள் உருபாகிய 'அ'கரத்தோடு உறவுடையதாம் என்பதில் சிறிதும் ஐயமில்லை) நடைமுறையில் வெறும் சாரியையாகவே பயன்படினும் இச் சாரியையும் தொடக்கத்திலே ஆறாம் வேற்றுமைப் பொருள் உடையதே.

இப்பொருள் பற்றிய ஆராய்ச்சியினை முடிப்பதன் முன் பெயரையும் சாரியையும் பெயரையும் வேற்றுமை உருபையும், சாரியையும் வேற்றுமை உருபையும் ஒன்றிணைக்க அவற்றினிடையே நின்று உதவ வரும், ஒலிநயம் குறித்த சொல்லுருபு குறித்துச் சிலவற்றைக் கூறுகின்றார் கால்டுவெல்.

உகர உடம்படு மெய் :

தமிழில் இரு உயிர்கள் இணையும் போது (முன் கூறியதைப் போல) அந்த உயிர்களிடையே உடம்படுமெய்யாக 'வ்'கரம் அல்லது 'ய்'கரம் தோன்றும். அம் முறையை யொட்டி உயிரீற்றுப் பெயர்களுக்கும், உயிர் முதற்சாரியை அல்லது உருபுகளுக்கும் இடையே அவ்வுடம்படுமெய்கள் தோன்றும். ஆனால் தெலுங்கில் 'வ்'கரத்திற்குப் பதிலாக 'ன்'கரம் உடம்படுமெய்யாக வரும் என்கிறார் கால்டுவெல்.

முடிவுரை

1. பிராஹூயி மொழியைத் திராவிட மொழிகளில் ஒன்றாகக் குறிப்பிடாமை. இன்றைய திராவிட மொழி அறிஞர்கள் ப்ராஹூயி மொழியைத் திராவிட மொழிகளில் ஒன்றாகவே குறிப்பிட்டுள்ளனர்.

2. தெலுங்குக்கு உள்ள பெயர்களையும் தெலுங்கு மக்களைப் பற்றியும் சான்று காட்டிக் கூறியது.

3. தெலுங்கு மொழிக்குத் தெலுகு, ஆந்திரம், த்ரிலிங்க, ஜெந்து, வடுக போன்ற சொற்கள் உள்ளதாக அறிவது.

4. தெலுங்கு சமஸ்கிருத்தில் இருந்து பிறந்தது அன்று என்ற கால்டுவெல்லின் கருத்தியலுக்கு எ.டி. கேம்பெல்லின் கருத்து

ஒத்துப் போகிறது. ஆனால் வில்லியம் கேரி இதை மறுக்கின்றார்.

5. 'டி' சாரியை 'தி' சாரியையாகக் குறிப்பிட்டு அதைத் தமிழ், கன்னட மொழிகளோடு தொடர்புபடுத்தி 'டி', 'தி' இரண்டும் ஒன்றே என்று கூறுவது. ஆனால் தெலுங்கு இலக்கணங்கள், மொழியியலாளர்களும் 'டி', 'தி' இரண்டையும் தனித் தனித் சாரியைகளாகவே குறிப்பிட்டுள்ளார்கள்.

சான்றாக :

'டிவர்ணம்பு கொன்னிடிகி அந்தாகூரம்புநகு ஆதேசம்புனு, கொன்னிடிகி அந்தாகமம்புனு, கொன்னிடிகி பர்யாயம்புன ரெண்டுனு ப்ராயிகம்புகானகு (பாலவியாகரணம்-ஆச்சிக- 31)

ஆதேசம்-ஏறு-ஏடினி, ஆகமம்-எநிமிதி-எநிமிதிடிநி, இரண்டும்-ரெண்டு-ரெண்டிநி, ரெண்டி டிநி

'விபக்தி பரம்பகுநபுடு கோயி ப்ரப்ருதுலு துதி யகூரம்பு தி வர்ணகம்பகு' (பால- ஆச்சிக-35)

(எ-டு) : கோயி - கோதுலு -கோதிநி, கோதுலநு

சேயி - சேதுலு - சேதிநி, சேதுலநு

அவர் குறிப்பிட்டுள்ள சாரியைகளை ஆராய்ந்து பார்க்கும் போது அவர் தெலுங்கு இலக்கண நூல்களைப் படித்ததாக எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. ஆகவே அவர் வழக்கில் உள்ள மொழிகளை மட்டுமே நன்கு ஆராய்ந்து அதில் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆதாரமாக்கிக் கொண்டு சாரியைகளை விளக்கியுள்ளார் என்று கருதலாம்.

நோக்கீட்டு நூல்கள்

1. *Caldwell. Robert : A Comparative Grammar of Dravidian on South Indian Family of Languages, Paa Mall, Landon, 1856.*
2. புலவை கோவிந்தன் (தமிழாக்கம்), டாக்டர் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், நான்கு பாகங்கள், சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
3. பி.எஸ்.சுப்பிரமணியம், திராவிட பாஷலு, பொட்டி ஸ்ரீராமுலு தெலுங்குப் பல்கலைக் கழகம், ஹைதராபாத். 2006.

4. ஜி.லலித, தெலுகு வ்யாகரணமூல சரித்ர, தி வெலகபூடி ஃபௌடேஷன், சென்னை,1996.

5. சிவ கண்ணுசாமி, அப்பாதுரை, கால்டுவெல் ஒப்பிலக்கணம், க்ரியர்ஸன் மொழியாராய்ச்சிக் குறிப்புகள், சாரதாப் பதிப்பகம், சென்னை, 2011.

6. ரா.பி.சேதுப்பிள்ளை, கிருஸ்துவத் தமிழ்த் தொண்டர், எஸ்.ஆர். கூப்பிரமணிய பிள்ளை பப்ளிஷர்ஸ் திருநெல்வேலி.

7. *Robert Caldwell, Wikipedia*

8. *C.P.Brown, A Grammar of the Telugu Language, Asian Educational services, New Delhi, 1985.*

❧ ❧ ❧

14. கால்டுவெல் பார்வையில் கன்னடமும் தமிழும்

முனைவர் கி. அன்பன்
ஓய்வுபெற்ற மொழியியற் பேராசிரியர்
கருநாடகப் பல்கலைக்கழகம், தாரவாட்

அரும்பெரும் அறிஞரான கால்டுவெல் அவர்களுடைய பார்வையில் கன்னடமும் தமிழும் எப்படிக் காட்சியளித்தன என்பதைச் சுருக்கமாகப் பார்ப்பதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சென்னையில் மூன்றாண்டு தங்கியிருந்து தமிழ் கற்று இடையன்குடியைக் கால்நடையாகவே சென்றடைந்த கால்டுவெல் அவர்கள் 1856-ஆம் ஆண்டு 'A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages' என்னும் நூலை வெளியிட்டார். 19 ஆண்டுகளுக்குப் பின் 1875-ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பு மேலும் திருத்தங்களோடு வெளிவந்தது. 1913-ஆம் ஆண்டு கால்டுவெல் அவர்களின் மருமகனால் கால்டுவெல் அவர்களின் மறைவுக்குப் பின் மூன்றாம் பதிப்பு வெளிவந்தது. இம்மாபெரும் புத்தகத்தின் அடிப்படையில் கன்னடமும் தமிழும் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரையில் எடுத்துக்காட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முதலாவதாக கால்டுவெல் அணுகுமுறைபற்றிக் குறிப்பிட வேண்டும். பல ஆண்டுப் பட்டறிவு, நூற்றுக்கணக்கான நூலறிவு, காய்தலுவத்தலின்றித் தமக்குத் தோன்றியதை எடுத்துரைக்கும் இயல்பு, பிற அறிஞர்கள் கருத்தைச் சீர்தூக்கிப் பார்த்து, இசையும் அல்லது மறுக்கும் பண்பு, ஆழ்ந்தகன்று நுண்ணிய விளக்கம், உலகளாவிய மொழிகளோடு மொழிக்கூறுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் அரிய முயற்சி இவர் தம் அணுகுமுறையில் மிகுந்து காணப்படுகிறது.

இந்நூலின் மிக நீண்ட முன்னுரையில் தென்னிந்திய மொழிகளைப் பற்றித் தெளிவான விளக்கம் அளிக்கிறார். திருந்தி

மொழிகள் ஆறனுள் தமிழும் கன்னடமும் இடம் பெறுகின்றன. திருந்தா மொழிகளாக ஆறையும் பலூசித்தானில் பேசப்படும் பிராகுயி மொழியையும் சுருக்கமாக அறிமுகப்படுத்துகிறார். இவர் கருத்துப்படி திராவிட மொழிகளில் முதன்மையானதும், உயர்தனிச் செம்மொழியென எடுத்தியம்பட வேண்டியதும், குடும்பப் பண்புகளைப் பெரிதும் உட்கொண்டுள்ளதும் வடமொழித் துணையின்றிச் செயல்படவல்லதும் தமிழ்மொழியாகும். தமிழ், மலையாள மொழிகள் மிகவும் நெருக்கமானவை. கன்னடம், துளு, குடகு மொழிகள் தம்முள் நெருக்கமுடையவை. இக்கருத்துக்களில் பெரும்பாலும் ஒப்புக்கொள்ளத் தக்கவை என்றாலும் குடகு தமிழைவிடக் கன்னடத்தோடு நெருங்கிய உறவுடையது என்பதை ஏற்க முடியாது. மோக்லிங் என்னும் பாசல்மிசன் பெரியார் குடகுத் தமிழுக்கு நெருக்கமானது என்னும் கருத்தே தற்போதைய ஒப்பாய்விலிருந்தும் வெளிப்படுகிறது. தமிழ் என்னும் சொல்லும் திராவிட/திராமிட/திரமிட என்னும்வட மொழிச் சொல்லின் திரிபே என்னும் இவர் கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதாயில்லை 'தரமிழம்' என்னும் பழஞ்சொல்லே வடமொழியில் திராமிட முதலான சொல்லாய் மாறுபட்டிருக்க வேண்டும் என இக்கட்டுரையில் கருதுகிறார். 1976-ல் வெளியான இரண்டாம் குறிப்புரை இதனை விரித்துரைக்கிறது. கர்நாடகம் எனும் சொல் மட்டும் திராவிடச் சொல் என்பதை ஒப்புக் கொள்ளலாம். பாண்டியன் என்பதை மாபாரத பாண்டு அரசரோட தொடர்புபடுத்தியும், சோழர்கள் என்பதையும் தமிழ் அல்ல என்று விலக்கியும் இருப்பது பொருத்தமாகப்படவில்லை. சோழமாண்டல் என்பதைச் சோழமண்டலம் என எடுத்துக்காட்டுவதும் திராவிடம் என்னும் சொல் பெரும்பாலும் தமிழையும், தமிழ் நாட்டையும் குறித்ததாகச் சொல்வதும் ஒப்பற்பாலனவாகும்.

திராவிட ஒலிகள் (எழுத்துக்கள்) பற்றி விரிவாக விளக்கம் தரும் முறை சிறப்பாக உள்ளது. உயிரெழுத்துக்களில் எ, ஒ இருப்பதும் இவற்றின் நெடில்களோடு சேர்ந்த சொற்கள் வெகுவாகவிருப்பதால் வடமொழியோடு இம்மொழிகளுக்கு மரபுத் தொடர்பு இல்லையென்பது வலியுறுத்தப்படுகிறது என்பது நுணுக்கமான கருத்தாகும். ஆனால் தமிழ் அறிஞர் ஒருவர் ஐந்தெழுத்தனொடு ஒருபாடை உள்ளதென அறையவும் நானுகுவர் அறிவுடையோரே என்று இலக்கணவியல் உரைத்ததைப் பார்க்கும்போது கால்டுவெல்லின் சிறப்பு விளங்கும்.

'ஐ' என்பதை 'ai' என்பதைவிட 'ei' எனச் சொல்வது சிறப்பெனக் கூறுவது சரியாகத் தோன்றவில்லை. மலையாளத்தில் 'ஐ' சொல்லிறுதியில்

'அ'எனவும் கன்னடத்தில் 'எ'எனவும் 'தலை'- தல - தலெ என்பதைச் சுட்டிக்காட்டி விளக்குகிறார். *ay - a என்றும் அய் - எய் - எ என்றும் ஆகியதும் என்பது சிறப்பு. மெய்யொலிகளில் வளை ஒலிகளான ட, ண பற்றிய விளக்கம் மற்றும் க,க,ற,த,ப என்னும் வல்லின ஒலிகள் அதிர்வில் ஒலிகளாக இருந்தவை அதிர்வொலிகளாக Voiced (sonanch) மாற்றம் அடைவதைச் சிறப்பாக விளக்குகிறார். கன்னடத்தில் Gadaba adebha எனச் சொல்வர். சொல் முதலில் கன்னடத்தில் 'க'இருந்து தமிழில் 'ச'இருப்பின் கன்னட எழுத்தே பழமையானது என்பது சரியான கூற்றாகும். செவி - கிவி போன்றவை. (ச= ch/s) என ஒலிப்பு முறையைச் சுட்டுவது கன்னடத்தில் தமிழ்ச் 'ச'கரச் சொற்களை /s/ என ஒலிப்பது.

மூவிடப் பெயர்ச் சொற்களாகக் கூறும்போது படர்க்கை எனப் பெயர் சொற்களாகப் பயனப்படுத்தும் அவன், அவள், இவன், இவள் முதலியவை சுட்டுப் பெயர்களேயொழிய இடப் பெயரல்ல என்பதும் கருதற்பாலன. தந்தை, தகப்பன், தமக்கை முதலிய உறவுப் பெயர்ச்சொற்கள் தன் - தம் என்னும் அடியடியாகப் பிறந்தவை என்பது நுணுக்கப் பார்வைக்கு எடுத்துக்காட்டாகும். தன்மை ஒருமை பன்மைகளில் யா/ நா வேறுபாட்டு விளக்கம் இன்னும் தெளிவுபடத்தக்கதாகும்.

வேற்றுமை உருபுகளில் முதன்மையாக ஆறாம்வேற்றுமை உருபாகத் தமிழ் கன்னடத்தில் அ ஆ இருப்பதை விளக்குவதும் குறிப்பிடத்தக்கதாகும். மகர ஈற்றுப் பெயர்கள் தமிழில் அத்துச்சாரியை பெறுவது போலக் கன்னடத்தில் 'த் 'என்பதை விளக்குவதும் ஏற்ற இடங்களில் வேற்றுமொழிக் குடும்பத்தோடு ஒப்பிட்டுக் காட்டுவதும் சிறப்புடைத்து.

வினைச் சொற்கள் பற்றிய பகுதியில் காலஇடைநிலைகள், திணை எண் உருபுகள் பற்றிய விளக்கம் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. தமிழ் - அன், ஆன், ஓன் கன்னடம் - அன், அனு முதலியவை - அவன் வடிவின் சுருக்கம் என்பது எண்ணிப் பார்க்கத்தக்கது.

தொழிற்பெயர் என நடக்கை, நடப்பது, நடத்தல் என்பன போன்றவை காட்டப்பட்டாலும் பெயரடை என்பது தொழிற்பெயர் ஆகாது என்பதும் அப்படிப்பட்டவை பெயர்ச் சொற்கள் எனக்கருதப்படல் வேண்டும் என்பதும் நுண்ணிய பார்வையாகும்.

பெயரடைச் சொற்களைப் பற்றிய விரிவான பகுதியில் தமிழின் பெயரடை உருபு 'ஆன'மற்றும் கன்னட உருபு - 'ஆத' என்பவை ஆகு என்னும் வினையடிப் பிறந்தவை என நன்கு விளக்குகிறார்.

சொல்லாக்க உருபுகளைப் பட்டியல் செய்து காட்டும் பாங்கு வியப்பிற்குரியதாகும். பெரும்பாலான சொற்களின் வேர் வினைச் சொற்கள் என்பதையும் வேர்ச்சொற்கள் எல்லாம் ஓரசைச் சொற்கள் என்னும் நிலை நாட்டும் போக்குச் சிறப்புற அமைந்துள்ளது.

கன்னட எடுத்துக்காட்டுகளைப் பெரும்பாலும் குண்டர்ட் மற்றும் கிட்டல் என்னும் இருபேரறிஞர்கள் எடுத்துக்கூறுவது தொடர்பின் அடிப்படையில் கொடுத்தாலும் தமக்குச் சரியெனறு படாவிட்டால் தம் நிலையைத் தெளிவுபடுத்துகிறார்.

எண்ணுப்பெயர்களில் ஒன்பது பற்றிய நீண்ட விவரம் முற்று முடிந்ததாகவில்லை எனினும் பெருமுயற்சியாகும். தேவநேயப் பாவாணர் கொடுக்கும் தொண்டு, மறைந்தாய் மதிப்பிழந்து '90'- 9, 900 - 90 எனப் பயன்பட்டதாகக் கூறுவதும் ஒப்புநோக்கத்தக்கதாகும். இங்கு கால்டுவெல் அவர்கள் தொண்டின் வேர் தொல் - பழமை எனும் அடிப்படையில் முந்தையது எனப் பொருள் கொடுப்பது எண்ணிப்பார்க்க வேண்டியதாகும். 'பத்து'என்பது வடமொழியின் 'பங்த்தி'என்பதிலிருந்து பிறந்தது என்னும் குணடர்ட்டின் கருத்தை 'நூறு'என்னும் பெரிய எண் கண்ட திராவிடமொழியார் 'பத்து'என்ற எண் தெரியாமலிருந்தார் என்று சரியன்று என மறுத்துரைப்பது பாராட்டத்தக்கது. பாசல் மிசன் அறிஞர்கள் குண்டர்ட், கிட்டல் இவர்களின் கன்னட வடமொழி அறிஞரை மிகவும் புகழ்ந்துரைக்கும் கால்டுவெல் அவர்கள் தமக்குச் சரியன்றென்றுபடும் இடங்களில் விளக்கமளித்து மென்மையாக மறுத்துரைக்கிறார்.

வடமொழிக்குத் திராவிட மொழிச்சொற்கள் சென்றுள்ளதை விவரிக்கும்போது மலையாள - ஆரிய அகராதி படைத்த குண்டர்ட் மற்றும் கன்னட - ஆரிய அகராதி படைத்த கிட்டல் இவரிருவரின் கட்டுரைகளையும் மேற்கோள் காட்டுகிறார். கிட்டல் அகராதி 1894-ல் வந்தபின் வாழ்ந்திருந்தால் கால்டுவெல் இன்னும் விரிவாக இதைப்பற்றி எழுதியிருக்க முடியும். இருப்பினும் இரு குடும்பங்களிலும் காணும் தொடர்புடைய சொற்கள் முதலில் எக்குடும்பத்தைச் சார்ந்தவை என்பதை அடையாளங்காணக் கால்டுவெல் அவர்கள் ஐந்நூறு அடிப்படை அணுகுமுறைகளைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது மிகவும் பயனுள்ளதாக உள்ளது. திராவிட வேர்ச்சொல் அகராதி படைத்தவர்களில் ஒருவரான தாமசு பரோ அவர்கள் அணுகுமுறை இதன் அடிப்படையில் அமைந்ததெனலாம்.

கால்டுவெல் அவர்கள் திராவிடச் சொற்களின் வேர்ச் சொற்களை விவரிக்கும் போது அவருக்குத் தெரிந்த வெவ்வேறு மொழிக் குடும்பங்களிலுள்ள தொடர்புடையன போலுள்ள சொற்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. ஒரே மூலத்திலிருந்து வந்தனவோ, கடன்பெற்றனவோ, ஐயப்பாட்டுக்குரியனவோ எனத் தெளிவாக உரைப்பது இவர்தம் பெருந்தன்மையாம் அவர் முயற்சி போற்றத்தக்கதாகும். பாவாணர் தமிழிலிருந்தே உலக மொழிகளனைத்தும் (வடமொழி முதற்கொண்டு) பிறந்தன என்னும் அளவுக்குப் போகாவிட்டாலும் உலக மொழிகள் அனைத்திலும் பொதுமை காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் என்பதும் முற்காலத் தொடர்பைக் காட்டும் ஆடியாகும் என்பதும் கால்டுவெல் அவர்களின் உள்ளுணர்வாக இருந்திருக்கும் எனப்படுகிறது. இவ்விடத்தில் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். சிலர் (அருண்சூரி, பே....றோ) கால்டுவெல் வீணாக ஆரிய, திராவிட இனக்கொள்கையை உருவாக்கிப் பிரித்தாளும் சூழ்ச்சியை உருவாக்கினர் என்பதை இந்நூலை ஆழந்து பார்க்கும்போது நம்ப முடியவில்லை. பல இடங்களில் பார்ப்பார் அறிவில் சிறந்தவர் என்று சொல்கிறார். மெய்யியல் தத்துவச் சொற்கள் வடமொழிச் சொற்களாக இருப்பதை எடுத்துக்காட்டுகிறார். அப்படிப்பட்ட தத்துவ நூலான பகவத்கீதையையும் புலவர் பாண்டியன் என்பவர் 1948-ல் தனித்தமிழில் எழுதியுள்ளமை கால்டுவெல் அவர்கள் தமிழால் தனித்தியங்க இயலும் என்றமைக்குக் காட்டாகச் சொல்லலாம்.

ஒட்டுமொத்தமாகக் கூறுவதானால் கால்டுவெல் பார்வையில் கன்னடமும் தமிழும் தொடர்புடைய மொழியாயினும் தமிழ் வடமொழிக் கலப்பின்றித் தனித்தியங்க வல்லதாயுள்ளது. ஆனால் கன்னடம் பெருமடங்கு வடமொழிக் கலப்பால், வடசொல் துணையின்றிச் சிறப்புற இயங்கவல்லதன்று. சொல்மட்டுமின்றி எழுத்துக் கோவையிலும் வடமொழி வழி நின்று வடமொழியினின்று பிறந்ததே என எண்ணும்படி கன்னடம் உள்ளது என்பதாம். (இங்கு நான்கு அணிகளுக்கு முறை செய்த ஆய்வின்படி நூற்றுக்கு 85 விழுக்காடு வடமொழி நிறைந்த கன்னட நூல்களும் உள என்பதாம். தமிழ் மணிப்பிரவாளக்கலப்பு போன்றதன்று இது. கன்னட உருபுகள் இருக்கும். வடமொழிச் சொற்கள் மிகுந்திருக்கும்.) பேராயர் கால்டுவெல் அவர்கள் நுண்மான் நுழைபுலம் மிக்க நேர்மைசால் நல்லறிஞர் என்பது இந்நூலைப் படிக்கும் எவர்க்கும் புலனாகும் என்பதில் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

1. *Kumaradoss, Vincent y., Robert Caldwell: A Scholar - Missionary in colonial south india ISPCK 2007*

2. கால்டுவெல் ஒப்பிலக்கணம் - இரீயர்ஸன் மொழியாராய்ச்சிக் குறிப்புகளுடன் - கழக வெளியீடு, 1966. மொழிபெயர்ப்பு திரு காழிசிவ கண்ணுசாமிப்பிள்ளை திரு கா. அப்பாத்துரைப்பிள்ளை

3. *A Comparative Grammar of the Dravidian or south Indian family of language By Rt. Rev. Robert Caldwell, DD.LL.D. Third edition, Rev. J.L. Wyatt, M.A. and T. Ramakirnnan pilai. B.A.(Eds) Reprinted madras university 1956. (1913).*

15. தமிழ் - யப்பானிய மொழி ஒப்பீட்டாய்வும் கால்டுவெல்லும்

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வுப் பேராசிரியர்
கக்சுயின் பல்கலைக்கழகம், தோக்கியோ.

தமிழ்நாட்டில் சமயம் பற்றிய தெளிவை மக்களுக்குப் புகட்டவந்த கால்டுவெல் தென்னிந்திய மொழிகளோடு தமிழை ஒப்பிட்டு நோக்குவதற்கு அக்காலச் சூழ்நிலையும் ஏதுவாக இருந்தது. அவருக்குத் தமிழ் என்ற சொல்லே ஆய்வுக்குரியதாக அமைந்திருந்தது. 'திராவிடம்' என்ற சொல்லை இந்தியாவின் தென்பகுதியில் வழங்கிவந்த மொழிக்குடும்பத்திற்குக் கால்டுவெல் முதன்முதலில் பயன்படுத்தினார். திராவிடம் என்ற சொல் ஏழாம் நூற்றாண்டிலேயே பயில்வுற்றதாகவும் குமாரில பட்ட ஆந்திர திராவிட பாஷா என மொழிப்பெயராக இச்சொல்லைக் குறிப்பிடுகிறாரெனவும் கால்டுவெல் கூறுகிறார். கால்டுவெல் திராவிடம் என்ற சொல்லைப் பயன்படுத்தியதால் பின்னர் கிட்டல், குண்டர்ட், பறோ, எமனோ, போன்ற அகராதித் தொகுப்பாளர்களும் இச்சொல்லையே பயன்படுத்த நேர்ந்தது. திராவிடம் என்ற சொல் ஒருவர் பெயர், மக்கள், மொழி எனப்பல பொருள் தருவதை வடமொழி அகராதியும் குறிப்பிடுகிறது.

'திராவிடம்' என்னும் சொல் பற்றியும் 'தமிழ்' என்னும் சொல் பற்றியும் கால்டுவெல், கிரியர்சன் இருவரும் வேறுபட்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். 'திராவிடம்' என்ற மூலச் சொல்லே 'தமிழ்' எனத் திரிந்தது என்கிறார் கால்டுவெல். இக்கருத்தை மறுத்து 'தமிழ்' என்பதே 'திராவிடம்' என்னும் சொல்லின் மூலம் எனக் கிரியர்சன் கூறுகிறார். எம். ஸ்ரீநிவாசஐயங்கார் இச் சொல்லை வடசொல்லாகக் கொண்டு இச்சொல் குறிப்பிடும் பொருள்களின் அடிப்படையில் 'திராவிடம்' முதலில் இடத்தையும் பின்னர் அங்குவாழ் மக்களையும் அதன்பின்னர் மக்கள் பயின்ற மொழியையும் குறித்திருக்கவேண்டுமென்கிறார். திராவிடமொழிக் குடும்பத்தில் தமிழ்மொழி முதல் நிலை பெறுவதை தேவநேயப்பாவாணர் வருமாறு விளக்குவார்.

'உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் *TURANIAN, SEMITIC, ARYAN* என மூப்பெருங் கவைகளாயடங்கும். இவற்றுள் ஒவ்வொரு கவையும் பற்பல கிளைகளாய்ப் பிரியும். ஒவ்வொரு கிளையும் ஒவ்வொரு மொழித் தொகுதியாகும். இவற்றுள் துரேனியக் கவையில் திராவிட மொழிகளுக்குத் தலைமையாகக் கருதப்படுவது அமிழ்தினும் இனிய தமிழ் மொழியே.'

மொழிக்குடும்பங்கள் பற்றிய ஆய்வில் உலகமொழிகளை *ARYAN, TURANIAN, SEMITIC,* என மூன்று பெரும்பிரிவுகளாக மாக்ஸ்முல்லர் பிரித்துள்ளார். அவற்றுள் *TURANIAN* என்னும் பிரிவைச் சார்ந்ததாகக் கருதப்படும் திராவிடக் குடும்பத்தின் மொழிகளை ஆராய்ந்து திறம்பட வகுத்தவர் கால்டுவெல் ஆவார். கால்டுவெல்லுக்கு முன் பிரான்சிஸ் எல்லிஸ் என்பவர் திராவிட மொழிகள் என்ற பெயர் இன்றி ஒரு மொழிக்குடும்பம் இருந்தது எனக் குறிப்பிடுவர். எல்லிஸ், கால்டுவெல், கிரியர்சன், பரோ, எமனோ போன்றவர்களின் திராவிடமொழிக் குடும்பம் சார்ந்த மொழிகளின் வகுப்பைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள்

எல்லிஸ்	கால்டுவெல்	பரோ,எமனோ	கிரியர்சன்
1. தமிழ்	தமிழ்	தமிழ்	தமிழ்
2. தெலுங்கு	தெலுங்கு	தெலுங்கு	தெலுங்கு
3. கன்னடம்	கன்னடம்	கன்னடம்	கன்னடம்
4. மலையாளம்	மலையாளம்	மலையாளம்	மலையாளம்
5. துளு	துளு	துளு	துளு
6. குடகு	குடகு	குடகு	குடகு
7.	தோடா	தோடா	தோடா
8.	கோட்டா	கோட்டா	கோட்டா
9.	கொண்ட்	கொண்ட்	கொண்ட்
10.	கோண்ட்	கோண்ட்	கோண்ட்
11.	ஓரன்	ஓரன்	ஓரன்
12.	ராஜ்மகால்	ராஜ்மகால்	ராஜ்மகால்
13.		பர்ஜி	
14.		கதபா	
15.		கூயி	
16.		கூவி	

ஆனால் பிற்பட்ட மொழியியலாய்வாளர்களின் கருத்துப்படி திராவிட மொழிக்குடும்பத்தில் 23க்கு மேற்பட்ட மொழிகள் இருப்பதாகக் கருதப்படுகிறது. கால்டுவெல் திராவிடமொழிகளுள்

பண்பட்ட மொழியான தமிழ் மொழியைப் பல்வேறு மொழிச் சொற்களோடு ஒப்பிட்டுத் தமது நூலிலே எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழ் - யப்பானிய மொழி ஆய்வு

கால்டுவெல் தம்முடைய நூலிலே தமிழ்மொழிச் சொற்களையும் யப்பானியமொழிச் சொற்களையும் ஒப்பிட்டுக்காட்டியுள்ளார். 1856ஆம் ஆண்டில் திராவிட மொழிகளுக்கான ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளியிடப் பட்டது. நீண்ட காலம் தென்னிந்திய மொழிகளுடன் பயிற்சி பெற்ற கால்டுவெல் இத்தகைய ஒரு நூலை வெளியிட்டமை மொழி ஒப்பீட்டாய்வாளர்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. தென்னிந்திய மொழிகளுக்கு அப்பாலும் பல்வேறுமொழிகளுடன் தமிழ்மொழியை அவர் ஒப்பிட்டு நோக்கியுள்ளார். அத்தகைய ஒப்பீட்டில் யப்பானிய மொழியுடனும் தமிழ் மொழியை ஒப்பிட்டு நோக்கிச் சில எடுத்துக்காட்டுகளையும் தந்துள்ளார். அவை வருமாறு:

தமிழ்ச் சொல்		யப்பானியச் சொல்
IRU	- இரு	ARI, IRI,ORI, URI
KARU	- கரு	KURO, KOROI
PARA	- பர	BARU, HARU
PARA	- பழ	BURUI, FURUI

இந்தச் சொற்களின் எடுத்துக்காட்டு ஒரு சிறு துளியாக தமிழ்-யப்பானிய மொழி ஒப்பீட்டாய்வில் அன்று அமைந்திருந்தது. ஆனால் அது ஒரு பெரு வெள்ளமாக இன்று பரந்துள்ளது. யப்பானிய மொழியியற் பேராசிரியர் சுசுமு ஓனோ (சுக்சுயின் பல்கலைக்கழகம், தோக்கியோ) தமிழ்மொழிக்கும் யப்பானிய மொழிக்கும் நெருங்கிய ஒப்புமை இருப்பதை 30 ஆண்டுகளாக ஆய்வுசெய்து நிறுவி யுள்ளார். (அந்த ஆய்விலே 20 ஆண்டுகள் கட்டுரையாளர் இணைந்திருந்தார்) கால்டுவெல் சொற்களை எடுத்து ஒப்புநோக்கியது போலவே ஓனோவும் தனது ஆய்வின் முதற்கட்டத்திலே செய்தார். 20 ஆம் நூற்றாண்டின் பின் அரைவாசியில் மொழி ஒப்பீட்டாய்வுத்துறை உலகம் எங்கும் செயற்பட்டது. அந்த வகையில் யப்பானிலும் பல யப்பானிய மொழியியலாளர் யப்பானிய மொழியைத் திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டு ஆய்வுசெய்துள்ளனர். இத்தகைய ஆய்வை மேற் கொள்வதற்குக் கால்டுவெல் ஒப்பாய்வு அடித்தளமாக அமைந்தது. யப்பானில் *Shiba, Fujiwara, Minoru Go, Muryama* போன்றோர் 1970களில் யப்பானிய மொழியைத் திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டு கட்டுரைகள் வெளியிட்டு உள்ளனர். *Fujiwara* யப்பானிய-திராவிட, சிரியன் மொழிகளில் உள்ள உடற்கூறு பற்றிய சொற்களை ஒப்பிட்டு ஆய்வுசெய்துள்ளார். *Shiba* திராவிட-யப்பானிய மொழிகளின் எய்கள்

பற்றிய சொற்களை ஒப்பிட்டு ஆய்வுசெய்துள்ளார். *Muryama* யப்பானியச் சொற்களையும் தெலுங்குச் சொற்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்துள்ளார். *Uchida* என்பவரும் திராவிட மொழியுடன் யப்பானிய மொழியை ஒப்பிட்டு ஆய்வுசெய்துள்ளார். இக்கால கட்டத்தில் ஓனோவும் முதலில் யப்பானியச்சொற்களையும் தெலுங்குச் சொற்களையுமே ஒப்பிட்டு ஆய்வுசெய்ய முற்பட்டார். கால்டுவெல் எடுத்துக்காட்டிய தமிழ்-யப்பானியச் சொல்லொற்றுமை அவரது ஆய்வைத் தமிழ் மொழியின்பால் திருப்பியது. இந்நிலையில் அவர் இருமொழிச் சொற்களையும் தேடினார். அப்போது *A Dravidian Etymological Dictionary* என்னும் நூல் அவருக்குக்கிடைத்தது. அதுவே தமிழ் மொழியோடு யப்பானிய மொழியை ஒப்பிட்டு நோக்கச் சிறந்த தரவுநூலாக அவருக்குப் பெரிதும் உதவியது. திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளில் தமிழ்மொழியே முதன்மையும் வளமும் கொண்டது என்ற கால்டுவெல்லின் கருத்தும் ஓனோவை வெகுவாக ஈர்த்தது. எனவே அந்த ஆய்வை ஆழமாகச்செய்ய முற்பட்டார். மேலும் சொற்கள் பற்றிய தேடுதலை மேற்கொண்டபோது அவருக்குச் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ்ப் பேராகராதி தொகுப்புகளும் துணைவேந்தர் தாமோதரன் உதவியால் கிடைத்தன. முனைவர் பொன் கோதண்டராமனின் உதவியையும் பெற்று 8 மாதங்கள் சென்னையில் தங்கியிருந்து இருமொழிச் சொல் ஒப்புமை பற்றி நுணுக்கமான ஆய்வை மேற்கொண்டார். தமிழ் மொழியை யப்பானிய மொழியோடு ஒப்பிட்டு ஆய்வதற்குத் தான் தெரிவு செய்தமைக்கான காரணத்தை ஓனோ தனது நூலிலே (யப்பானிய மொழியில் எழுதப்பட்டது) வருமாறு எழுதியுள்ளார்.

'தமிழ்மொழி கி.மு. 2ஆம் நூற்றாண்டு வரையில் வளர்ச்சியடைந்த இலக்கியத்தொகுப்புகளைக் கொண்டுள்ளது. யப்பானிய இலக்கியமான மன்யோசுவைக் காட்டிலும் 1000 ஆண்டுகள் பழைமையான 2500 பாடல்களைக் கொண்டுள்ளது. இதன் பின்னரும் காலத்துக்குக் காலம் தோன்றிய இலக்கியங்கள் பல உள.'

திராவிட மொழிகளின் தொகுப்பு அகராதி யப்பானிய பழைய இலக்கியங்களில் நிறைந்த புலமை பெற்றிருந்த ஓனோவுக்குத் தமிழ்மொழியின் பழைய இலக்கியங்களின் சொல்லாட்சியையும் வளத்தையும் நன்குணரவைத்தது. தமிழ்ப் பேரகராதி தமிழ்ச் சொற்களின் வேறுபட்ட பொருள்களையும் இலக்கியங்களில் அந்தச்சொற்கள் பயன்பட்டவாற்றையும் விளக்கிக்காட்டியது. இதன் மூலம் ஓனோ தனது ஒப்பீட்டாய்வுக்கு ஏறக்குறைய 300 சொற்களைத் தெரிந்து எடுக்கும் நிலை உருவாகியது. தெரிவுசெய்த சொற்களை யப்பானியமொழிச் சொற்களுடன் ஒலியமைப்பு, பொருள்

நிலையொப்பு என்பவற்றுடன் எடுத்துக்காட்டினார். இவ்வாறு சொல் ஒப்புமையை விரிவாகக் கால்டுவெல் செய்யமுடியாமைக்கு உரிய காரணம்பற்றியும் இங்கு எண்ணிப் பார்க்கவேண்டியுள்ளது. திராவிட மொழிகளின் தொகுப்பு அகராதியும் தமிழ்ப்பேரகராதியும் அப்போது இல்லை. இன்னும் பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் அவருக்குக் கிடைக்கவில்லை. சி.வை. தாமோதரம்பிள்ளை சங்க இலக்கியமான கலித்தொகை ஏட்டுப்பிரதியை முதன்முதலில் நூல்வடிவமாக வெளியிட்ட பின்னர்தான் சங்க இலக்கியம் பற்றி எல்லோரும் அறியவும் கற்கவும் வாய்ப்பேற்பட்டது. கலித்தொகை 1887ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது. கால்டுவெல் 1891இல் உயிர் நீத்தார். இந்நூல் அவரது வாழ்வின் இறுதிக் காலத்திலே வெளிவந்தமையால் அவரால் சங்க இலக்கியம் பற்றிய அறிவைப் பெறமுடியவில்லை. 40 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வாழ்ந்தபோதும் சங்க இலக்கிய ஏடுகளைக் கால்டுவெல் பார்க்கவில்லையா என்ற ஒரு வினாவும் எழுகூடும். ஆனால் அவர் வாழ்ந்த காலத்தில் மடங்களில் பழந்தமிழ் இலக்கியம் பற்றிய கல்வி பெரிதாக முன்னெடுக்கப்படவில்லை. சமய இலக்கியங்களுமே புராணங்களுமே பயிலப்பட்டு வந்தன. எனவே அவர் சங்க இலக்கிய ஏடுகளைப் பெறுவதற்கும் வாய்ப்பேற்படவில்லை எனலாம்.

கால்டுவெல்லுக்கு கிடைக்காத அந்த வாய்ப்பு ஓனோவுக்குக் கிடைத்தது. அவர் பழந்தமிழ் இலக்கியச் சொற்களை பழைய யப்பானிய இலக்கியச் சொற்களோடு ஒப்பிட வாய்ப்பு ஏற்பட்டது. சங்க இலக்கியப் புலமை தமிழ்மொழி ஒப்பீட்டாய்வுக்கு இன்றியமையாதது என்ற தெளிவும் ஏற்பட்டது. எனவே இக்கட்டுரையில் ஓனோவின் ஒப்பீட்டாய்வின் முதற்கட்டமான சொல் ஒப்புமை பற்றிய தகவல்களைத் தரவேண்டியுள்ளது. அரிசிப் பண்பாட்டுநிலையில் இருமொழியிலும் ஒற்றுமைப்பட்டுள்ள சொற்களைத் தொகுத்து ஓனோ 1979இல் ஒரு கட்டுரை முதலில் *Ashahi Shinbun* என்னும் நாளிதழில் வெளியிட்டார். இக்கட்டுரை யப்பானிய மக்களுக்கு இந்த ஒப்பாய்வின் முதல் அறிவிப்பாக அமைந்தது. அதன்பின்னர் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் *'The Relationship of the Tamil and Japanese Languages'* என்ற ஆய்வுக் கட்டுரையை 1981இல் சமர்ப்பித்தார். அக்கட்டுரை உலகின் பல பாகங்களிலுமிருந்து வந்த தமிழியல் ஆய்வாளர்க்கு நல்லதொரு அறிவிப்பாக அமைந்தது. தன்னுடைய சொற்களின் ஒப்பீடு பற்றி தை தொடக்கம் ஐப்பசி வரை *Gengo* என்னும் யப்பானிய மாத இதழிலும் தொடராக எழுதியிருந்தார். 1980இல் *Sound Correspondences Between Tamil and Japanese*

என்னும் ஆங்கில நூலையும் கக்சுயின் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிட்டிருந்தார். இது ஓனோவுக்கு ஒரு பல்கலைக்கழக நிலையான ஆய்வுக்களத்தையும் உருவாக்கித் தந்தது.

ஓனோவின் ஒப்புமைச் சொற்கள் முழுவதையும் பேராசிரியர் *J.Vacek* பார்வையிட்டுத் தன்னுடைய ஆய்வுநிலையான கருத்துகளையும் வெளியிட்டார். இதனால் ஓனோவின் ஒப்பீட்டாய்வில் மேலைநாட்டு மொழியியல் ஆய்வாளர் ஒருவர் தொடர்புறும் வளர்ச்சிநிலை ஏற்பட்டது. உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் ஓனோவின் ஒப்பீட்டாய்வு கோட்பாட்டு நிலையில் வெளிப்படுத்தப் பட்டுப் பரவலாக்கம் பெற்றதை யப்பானிய அறிஞர் சிலர் விமர்சித்தனர். மொழியியல் ஆய்வு மேற்கொள்ளாதவரும் எதிர்ப்புக்குரல் எழுப்பினர். இவர்களில் யப்பானிய வரலாற்றுப் பேராசிரியர் *Norubu Karashima* குறிப்பிடத்தக்கவர் மொழியியல் பேராசிரியர்களில் *Muryama, Tokunaga* போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தமிழ்மொழி பற்றி அறிந்தவர்களாயினும் பண்டைய யப்பானிய இலக்கியப் புலமையற்றவராயிருந்தனர். எனவே ஓனோ பழந்தமிழ் இலக்கியப்பயிற்சி அற்றவர். அவருடைய ஆய்வுச்சொற்கள் பழந்தமிழ் இலக்கியப்புலமை பெற்ற தமிழரால் ஆராயப் படவேண்டும் என்ற கருத்தை ஒருங்கிணைந்து வெளியிட்டனர். இக்கால கட்டத்தில் ஈழத்துப் பேராசிரியர் (மொழியியல்) அ. சண்முகதாஸ் யப்பான் நிறுவனப் புலமைப்பரிசில் பெற்று மனைவியுடன் (கட்டுரையாளர்) யப்பான் வந்து ஓனோவின் சொற்களை முழுமையாக ஆராய்ந்தார். சங்கஇலக்கியப் புலமையாளர் இருவர் இதனால் ஓனோவின் ஒப்பீட்டாய்வில் இணைந்துகொண்டனர். இது ஒப்பீட்டாய்வை இருமொழிப் புலமையாளர் இணைந்து செயற்படும் வளர்ச்சி நிலையாயிற்று. இக்கால கட்டத்தில் சங்க இலக்கியம் பற்றியறியாத அமெரிக்க மொழியியல் ஆய்வாளர் ஒருவர் ஓனோவின் ஒப்பீட்டாய்வை விமர்சித்து ஒரு கட்டுரையை ஆங்கிலத்தில் வெளியிட்டார். அ. சண்முகதாஸ் அவருடைய கருத்துத் தெளிவின்மையை ஓனோவுடன் இணைந்து அறிவித்தார். இதனால் தமிழ்-யப்பானிய ஒப்பீட்டாய்வு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தோடும் தொடர்புபெற்றது. ஓனோவின் ஆய்வுப்பரப்பு ஒலியமைப்பு, சொற்பொருள் என்ற ஒப்பீட்டு நிலைக்கும் மேலாக இருமொழிகளினதும் இலக்கண வகைப்பாட்டு நிலையிலும் பண்பாட்டு நிலையிலும், செய்யுள்மரபு நிலையிலும் தொடரலாயிற்று. அ. சண்முகதாஸ் பல்கலைக்கழகப் பணிக்காக இலங்கை திரும்ப நேர்ந்தது. கட்டுரையாளர் யப்பானிலே தங்கிநின்று யப்பானிய மொழியைக்கற்றுப் புலமைபெற்று 20 ஆண்டுகள் ஓனோவுடன் இணைந்து ஆய்வினை மேற்கொண்டார். ஆய்வுபற்றி

மும்மொழியிலும் (தமிழ், யப்பானியம், ஆங்கிலம்) நூல்கள், கட்டுரைகள் வெளியிடப் பட்டுள்ளன. மேலும் இந்த ஒப்பீட்டாய்வின் இன்னொரு பெறுபேறு பண்டைய இலக்கியமான மன்யோசுப்பாடல்களின் பொருளமைதியை விளக்க தமிழ்மொழியின் இலக்கணமான தொல்காப்பியம் பெரிதும் உதவும் என்பது உணரப்பட்டதாகும். கட்டுரையாளர் மலேசியாவில் நடைபெற்ற ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் 'தமிழர் - யப்பானியர் அகப்பொருள் மரபு ஒற்றுமை' என்னும் கட்டுரை மூலம் அதனை முதன்முதலாக முன்வைத்தார். இந்த ஆய்வு யப்பானிய செவ்வியல் இலக்கியமான மன்யோசுவை தமிழில் மொழிபெயர்க்க வழிகாட்டியது. கட்டுரையாளர் மனயோசு பத்தாவது தொகுதிப் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அதனை ஐப்பானியக் காதற் பாடல்கள் என்ற தலைப்பில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் (2000) நூலாக வெளியிட்டுள்ளது. எனவே சொல் ஒப்பீடு என்ற நிலையிலிருந்து இலக்கியங்களை மொழிபெயர்க்கும் நிலைக்கு தமிழ்-யப்பானிய ஒப்பீட்டாய்வு இன்று வளரந்துள்ளது. ஓனோ மறைந்தபின்னரும் இன்னும் பல்வேறு நிலைகளில் ஒப்பீடு செய்ய ஆய்வுத் தடங்களை அவர் இனங்காட்டிச் சென்றுள்ளார். ஆய்வு பற்றிய முழுமையான தகவல்களை விரிவாக இக்கட்டுரையில் தருவதற்கில்லை. அவை பற்றிய நூற்பட்டியலொன்று பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இக்கட்டுரை கால்டுவெல் சுட்டிச்சென்ற தமிழ்-யப்பானிய ஒப்பீடு எவ்வாறு இன்றுவரை தொடரப்படுகிறது என்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. ஓனோ கால்டுவெல்லின் ஒப்பாய்வுத் தடத்தைப் பின்பற்றி ஆய்வுசெய்து தமிழ்மொழியின் ஆற்றலை உலகறியச் செய்த பெருமைக் குரியவர். கால்டுவெல்லின் இருநூறாவது ஆண்டில் தமிழ் மொழியும் யப்பானிய மொழியும் ஒப்புடையனவே எனச் சான்றுகளோடு நிறுவமுடிந்துள்ளது. கால்டுவெல் தமிழ்-யப்பானிய மொழி ஒப்பீட்டாய்வுக்கு ஓனோவுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்றுள்ளார்.

பொருள் அடிப்படையில் இருமொழிச் சொற்களையும் ஒப்பிட்டு நோக்கிய ஓனோ அவற்றைச் சில வகைப்பாடுகளாக விளக்கியுள்ளார். அவற்றில் சில எடுத்துக்காட்டுகள் இங்கு இணைக்கப்பட்டுள்ளன. வகைமாதிரிக்கு 5 சொற்களே தரப்பட்டுள்ளன.

தமிழ்ச்சொல்	யாப்பானியச் சொல்
நிலம்	நிலம்
NILAM -நிலம்	NI
YARU - யாறு	YARA
KUVAL - கூவல்	KUBO
MAN - மண்	MANA, MANAG
KAL - கல்	KARA
பறவை	பறவை
VAVAL - வாவல்	FABURI
POTTU - போத்து	FOTUTAKA
KURUVI - குருவி	KURA
TUVAL - துவல்	TUBASA
TUMPI - தும்பி	TOBAU > TOMBO
இயற்கை நிலை	இயற்கை நிலை
NARAL - நரல்	NARA
TARAI - தழை	TARU
REY - பெய்	FURU
VANKU - வாங்கு	VAGU
TATI - தடி	TARU
உடல்	உடல்
ATI - அடி	ASI
TOL - தோள்	TA
PAL - பல்	HA
PITAR - பிடர்	FITI
MEY - மெய்	MU
கருவி	கருவி
URAL - உரல்	USA
KARU - கழு	KARI
MARU - மழு	MASAKARI
MURAM - முறம்	MUMI
VEL - வேல்	FARA
உடை	உடை
ACCU - அச்சு	AZATASE, AZAFU
UCC - உச்சி	UZU
UTU - உடு	OSOKI
UTUPPU - உடுப்பு	NUFU
NEY - நெய்	NEYVU -நெய்வு
தொழில்	தொழில்
ATIR - அதிர்	ADIRU

தமிழ்ச்சொல்	யப்பானியச் சொல்
உறவுமுறை	உறவுமுறை
AYYA -ஐயா	AYA
TANTAI - தந்தை	TADA
ANNAI - அன்னை	ANE
AVVAI - அவ்வை	ABA
AYAL - ஆயாள்	AYA
பயிர் செய்கை	பயிர் செய்கை
AVAI - அவை	AFA
ITTI - இத்தி	ITIZIKU
NEL - நெல்	NI
CAMPA - சம்பா	SABA
VARAL - வறல்	WARA
தொழில்	தொழில்
KALAI - களை	KARU
KIRI - கிழி	KIRU
TUKAI - துகை	TUKU
NATTU - நாட்டு	NASU
நோய்	நோய்
KATTI - கட்டி	KASA
KOTTAI-கொத்தை	KATAI
TIMIR - திமிர்	SIMUMU
MUTTU -முத்து	MUTYA
VATU - வடு	FATA
உணவு	உணவு
AMPALI - அம்பலி	AMARI
KALI - களி	KAYU
KATI - கடி	KASU
KAR - கார்	KARA
CATTI - சட்டி	SASI (NABE)
உறைவிடம்	உறைவிடம்
ARAI - அறை	ARATO
KATAI - கடை	KADO
PATI - படி	FASI
MACCU - மச்சு	MASA
MATIL - மதில்	MATI
தொழில்	தொழில்
AKAL - அகல்	AKU

AMIR - அமிழ்	AMARU	ATI - அடி	ATU
PATU - படு	FARU	EY,E - ஏய், ஏ	IRU
MUNKU - மொங்கு	MOGURU	KUVAVU - குவவு	KAFUFU
VILAMPU - விளம்பு	WIRAFU > URAFU	TUMI - துமி	TUMU
இடம், நேரம்	இடம், நேரம்	புலப்பாடு	புலப்பாடு
UVAN - உவண்	UFA	PAR - பார்	FARU
UL - உள்	URA	PANI - பணி	FANASU
NATU - நடு	NA	NAMPU - நம்பு	NAMU
MI - மீ	MI	AVALAM - அவலம்	AFARE
ITAI - இடை	ITO	UKA - உக	UKARU

ஆய்வு தொடர்பான நூல்கள், கட்டுரைகள்.

1. தமிழ்ப் பேரகராதி - *UNIVERSITY OF MADRAS*
2. *Robert Caldwell - A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages - University of Madras.*
3. *Burrow T. & Emeneau M.B. - Dravidian Etymologial Dictionary, Oxford.*
4. தேவநேயப் பாவாணர் ஞா. மொழியாராய்ச்சி. சென்னை.
5. *Susumu Ohno - Nihongo Izen, Iwanami Shisho, Tokyo.*
6. *Susumu Shiba - Dravida Go To Nihongo, Jinbunronshu Kyoto Joshidai, Kyoto.*
7. *Akira Fujiwara - Japanese And Dravidian And Scythain With Special Refernce to the Vocabulary of Parts of the Body, Kinki Daigaku Kyoyo Bunken Kyūkyo.*
8. *Minoru Go - Nihongo No Genryū Wo Motomete Nihonbunka. 4.*
9. *Murayama Shichiro - Nabu Goto Nippon Go, Tokyo.*
10. *Susumu Ohno - Sound Correspondences Between Tamil And Japenese, Gakushuin University, Tokyo.*
11. *Noburu Kara Shiman - Comments on The Japenese-Tamil Relations, Dla News Vol 5 No 4.*
12. *Murayama Shichiro - Ohno Hakase No Kattai (Raijin) Gogen Setsu, Kaishaku Gakkai Gekkankikanshi, Tokyo.*
13. *Miller Roy Andrew - Review of S. Ohno's Nihongo Totamirugo,Languages 59*
14. *Susumu Ohno - Japanese Tamil Relationship Kokusai Gengo Gakusho, Kaigi Happyo, Berlino*

15. *A. Sanmugadas - Japanese-Tamil Relationship Supporting Evidences S. Ohno's Hypothesis Kokusai Gengo Gakusho Kaigi Happyo, Berlino.*

16. *Asher. R. E - Tamil And Japanese: Some Typologial Analogies* ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு. கோலாலம்பூர்

17. மனோன்மணி சண்முகதாஸ் - தமிழர்-யப்பானியர் காதற் பாடல்களில் அகப் பொருள் மரபு: ஓர் ஒப்பீட்டாய்வு, ஆறாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, கோலாலம்பூர்

18. *Yamashita Hiroshi - Some Remarks on So Called Tamil-Japanese Genealogial Hypothesis Proposed By Prof Susumu Ohno: From A Tamilologist Point of View. Kokusai Nihon Bunka Kenkyu Senta, Tokyo.*

19. *Susumu Ohno - Nihongo No Seiritsu, Chuokoronsha, Tokyo.*

20. *Susumu Ohno - Tamil And Japanese: A Comparative Study Gengo Jan- Sept, Taishukan 1980*

21. *Susumu Ohno - Murayama Shichiro Shi Ni Koteru Yoriyoi Tamirugaku No Tam Ni (An Answer to Mr. Murayama Shichiro For A Better Story of Tamil) Nihongogaku 3:9 1984.*

❦ ❦ ❦

16. அறிஞர் கால்டுவெல் பெருமகனாரின் கூரிய நோக்கின் நேரிய ஆக்கம்

முனைவர் ப. அருளி
இயக்குநர்
வேரியல் ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி

தமிழிய (திரவிட) மொழிகளின் (அதாவது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின்) மிகப் பண்டைய கட்டமைப்புமுறை, அவற்றின் தனிச்சிறப்பு ஆகியன பற்றிய முழு விளக்கங்களையும் பெறுதற்கான ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் நம்பிக்கை நிலையில் அப்பல்வேறு மொழிகளின் இலக்கண நெறிகளையும், அமைப்பு முறைகளையும் ஆய்வதை அடிப்படையாகக் கொண்டு, அவற்றுக்கு இடையிலான ஒப்புமைகளை நுனித்துக் காண்பதனை நோக்கமாகக் கொண்டே, கால்டுவெல் பெருமகனார் இவ் ஆய்வேட்டினை அரும்பாடுபட்டு உருவாக்கினார்.

நூலின் பெயர்,'திரவிடம் அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளுக்கான ஒப்பு இலக்கணம்' என்பதாகும். *(A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages)*'திரவிடம் அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகள்' எனும் அடைவுக் குறியீட்டில் அவரின் திருத்தமான தொடக்க ஆய்வுப் பார்வை துலக்கமாக விளங்கி நிற்பதைக் காணுகின்றோம்.

கால்டுவெல் பெருமகனாரின் ஆய்வேடு 1856-இல் நூலாகப் பதிப்புற்று வெளியிடப்பெற்றது. அது பின்னர் 19 ஆண்டுகள் கழித்து - இரண்டாம் பதிப்பு 1875-இல் வெளியிடப்பெற்றது. இரண்டாம் பதிப்பு விரிவாக்கமும் மீள்பார்வையையும் கொண்டமைந்த சிறப்பு நிலை உடையதாகும். (இலண்டனில் பதிப்புற்றது). (இதன் மூன்றாம் பதிப்பு தமிழகத்திற் பதிப்புற்றதாயினும் - இவ்விரண்டாம் பதிப்புள்ளடங்கிய ஆய்வுக் கூறுகளில் பலவற்றை நீக்கிய சூழ்ச்சியார்ந்த

வெளிப்பாடாகவே அது அமைந்தது. அதன் உண்மைகளைப் அறிஞர். கவிதாசரண் 133 ஆண்டுகட்குப் பிறகு சென்னையில் 2008 இல் வெளிப்படுத்திய அவ் இரண்டாம் பதிப்பிற் காணலாம்.

தென் தமிழகத்திலுள்ள திருநெல்வேலி - இடையங்குடியில் நற்செய்திப் பரப்புரைக்கான விடையூழியராகப் பணியாற்றிய அறிஞர் பெருமகனாராகிய இக் கால்டுவெல் இவ் ஆய்வு வெளிப்பாட்டுக்கெனத் தமிழ் மொழியுள் 37 ஆண்டுக்காலம் தோய்ந்திருந்தார். தமிழிய மொழிகளை உடன் ஆராய்ந்தார்.

இவ் ஆய்வின் முடிவால் அவர் நெஞ்சில் துலக்கமாகிய முடிவு, இது!

'தமிழ்மொழி - தமிழிய (திரவிட மொழிகளிலேயே - மிகப் பழங்காலத்திலேயே திருந்திய நிலைபெற்றதும் - மிக மேம்பட்ட நிலையில் வளர்ந்தோங்கியது ஆகும். அத்துடன் மிகப் பல கூறுகளில் படிநிகராளியாக விளங்கும் தகைமையுடையதாகும். (The earliest cultivated, and most highly develped of the Dravidian languages - in many respects the representative language of the family) (C.G.D Introduction. P:1)

இவ் இரண்டாம் பதிப்பு வெளியிடப்பெற்றதற்கு முன்பிருந்த பத்தொன்பது ஆண்டுக் காலங்களுக்கிடையில் - ஆழங்காற்பட்ட பல்வேறு அறிஞர் பெருமக்களிடம் தொடர்புகொண்டு இதனை மிகச் செப்பப்படுத்திருக்கின்றார். ஓர் ஆய்வு வெளிப்பாட்டுக்குப் பின்னும் ஓயாது அதனுள்ளேயே தோய்ந்திறங்கி இயன்றவரை அதனை மேம்படுத்திச் செழுமையுள்ளதாக ஆக்கவேண்டும் என்னும் நேரிய சிறப்புப் பண்பு ஆய்வாளன் ஒவ்வொருவருக்கும் அமைந்திருக்க வேண்டும் என்பதற்குரிய அடையாள இலக்கணக் காட்சி, இது!

திருத்தந்தை - பிரிகெல் (Rev. J. Bringel. - திரு.சி.பி. பிரௌன் (C.P. Brown) - முனைவர். ஏ.சி. பர்னெல் (Dr. A.C. Burnell) - திருத்தந்தை சே. கிளே (Rev. J. Clay) - திரு. டபிள்யூ - இரய்சு டேவிட்சு (T.W. Rhys Davids) - திருத்தந்தை இ. இடையசு (Rev. E. Diez) - பேரா. எக்கலிங்கு (Prof. Eggeling) - வயவர் வால்டர் எலியட்டு (Sir. Walter Elliot) - திரு. சி. கோவர் (C. Cover) - திருத்தந்தை எப். கிட்டெல் (Rev. F. Kittle) - திருத்தந்தை எப். மெட்சு (Rev. F. Metz) - பேரா. மாக்சு முல்லர் (Prof. Max Muller) - திரு. என்.பி. நரசிம்மையங்கார் (N.P. Narasimmiengar) - திருத்தந்தை முனைவர். போப்பு (Rev. Dr. Pope) - திரு. பெ.இலெ. பகே ரெனுப்பு (P.Le. Page Renouf) - முனைவர். உரோசுட் (Dr. Rost) - பேரா.

தெசா (*Prof. Teza*) - பேரா. எர்னசுகு ட்ரம்பு (*Prof. Ernest Trumpp*) - திரு. கொலனெல் யூல் (*Colonel Yule*) - திருத்தந்தை முனைவர் குண்டர்ட்டு (*Rev. Dr. Gundert*) - ஆகியோர் அத்தகு அறிஞர்களில் குறிப்பிடத்தக்க சிலராகுவர்.

இரண்டாம் பதிப்புக்கென ஆழ்ந்து தோய்ந்து படித்து - உரிய இடங்களில் முறையாகப் பதிவுசெய்துள்ள கருத்துக்களுக்கான நூல்களும் - ஆய்வேடுகளும் தெலுங்கு இலக்கணம் (1872) - ஓரையோன்மொழி அகராதி மற்றும் இலக்கணம் - இந்திய ஆரிய மொழியின் ஒப்பிலக்கணம் (1872) - கீழ்த்திசைசார் மொழியியலில் பழைய இந்திமொழியின் இன்றைய நிலை (1872) - மீ முந்தைய வங்காளப் பாவலர்கள் இயற்றிய தேவாரங்கள் (1872) - சிந்துவிலிருந்து திகிரிசு வரைக்கும் (உள்ளடக்கம் பிராகுவி மொழிச் சொல்வரிசை மற்றும் இலக்கணம்) (1873) - தென்னாப்பிரிக்க மொழிகளின் ஒப்பிலக்கணம் - ஆசுத்திரேலிய மொழிகள் பற்றி (1871) - தமிழ் மொழி மற்றும் இலக்கியங்கள் பற்றி - ஔவையார் பற்றிய உரை - துளு இலக்கணம் - சமற்கிருத நாவொலிகளின் தோற்றம் பற்றி - குமரில பட்டரின் தாந்திரிக வார்த்திகத்தில் சுவையார்ந்த ஓர் உரைப்பகுதி - அறியப்பெற்ற மிகப்பழைய தென்னிந்திய அகரநிரல் (இந்தியத் தொன்னிலை ஆய்வாளர் ஏடு - நவம்பர் 1872) - தென்னிந்திய வட்டாரவழக்குக் குறிப்பீட்டுச் சான்றுகள்: 1. கொங்கணி 2. குடகு 3. மாப்பிள்ளை மலையாளம் (1872) - இந்தியக் குலவியல் - இந்திய மொழிகளின் குறிப்பீட்டுச் சான்றுகள் (1874) - தமிழ்ச் செல்வராட்சி (1859) - குடகு இலக்கணம் (1867) - இந்தியப் பழைய நிலவரைவியல் (1871) - வங்காள வண்ணனைக் குலவியல் (1872) - கோண்டுமொழி இலக்கணம் மற்றும் சொல்வரிசை (1871) - பன்னிரண்டாம் நூற்றாண்டிடில் தென்னிந்தியக் கீழ்ப்படுத்தல்கள் (அடக்கி அடிப்படுத்தல்கள்) (1872) - மொழியியலில் சீனாவின் இடம் (1870) - சேர - சாளுக்கிய மன்னர்களின் குலங்கள் பற்றி (1872) - ஒரிசாவின் உரியர் - கோண்டு மக்கள்தொகையைப் பற்றி (1872) - நாக்பூர் நடுவண் மாவட்ட அரசிதழ் (1870) - தென்னிந்திய நாட்டுப்புறப் பாடல்கள் (1871) - குடகுப் பாடல்கள் மற்றும் குடகு இலக்கணம் (1870) - தமிழிலக்கணத்தின் விளம்பெல்லைகள் (1856) - திருவள்ளுவரின் திருக்குறள் (பிரஞ்சு மொழிபெயர்ப்பு) (1856) - இந்திப் பேச்சுவழக்கில் ஆரியங் கலவாத கூறுகள் பற்றி (1872) - மலையாள இலக்கணம் (1872) - சமற்கிருதத்தில் தமிழிய மொழிகளின் கூறுகள் பற்றி - நடுவண் மாவட்ட தொன்முது பழங்குடிகள் பற்றிய ஆய்வேடு (நாக்பூர்) (1866) - நேப்பாளம், திபெத் மற்றும் இவை சார்ந்த அடுத்த நாடுகளின் மதம் - இலக்கியம் - மொழிகள் மீதான கட்டுரைகள் - கன்னட இலக்கணம் (1864) - துரானிய மொழிகள் பற்றிய ஆய்வு (1874) - இந்திய - மேலை

ஆரிய அல்-ஆரிய மொழிகளின் ஒப்பீட்டு அகராதி (1868) - மீழ்ந்திப் பதிப்புற்றனவாகிய தமிழ்நூல்கள் பற்றிய குறிப்புரைகள் (1873) - சமற்கிருத அகராதிகளில் திரவிடச் சூறுகள் (1872) - தொல் திரவிடர்களின் எண்கள் தொடர்பான குறிப்புரைகள் (1873) - கேசிராசாவின் இலக்கணத்துக்கான நகைக் கண்ணாடி (மிகப் பழங்கன்னட இலக்கணம்) (1872) - பழங்கன்னட இலக்கியங்கள் மீதான கட்டுரை (1875) - போர்னு கணூரி மொழிகளின் இலக்கணம் - தோடர்களிடையே மண்டையபப்பு வழி மனப்பண்பாய்வியலர் ஒருவர் (1873) - நீலகிரிக் குன்றுகளில் வாழும் தொன்முது பழங்குடிகள் (1864) - மூலச் சமற்கிருத நூல்கள் (1868) - மொழி அறிவியல் பற்றிய ஆய்வுரைகள் (1864) - பதிப்புற்ற தமிழ்நூல்கள் வகைப்படத்தப்பெற்ற பட்டியலேடு (1865) - மதுரை நாடு (1868) - சேலம் மாவட்டத்தில் துமுலி (1873) - தமிழ்மொழிப் பேரிலக்கணம் (1859) - தமிழ்க் கையேடு (1859) - அனைத்து இந்தியாவுக்குமான ஒரே அகரநிரல் (1859) - மலையின் மீது நிகழ்த்திய பொழிவு (ஆங்கிலம் - மலையாளம் - கன்னடம் - தெலுங்கு) - தோடா மொழி இலக்கணம் (1873) - இந்தியாவும் உரோமும் (1858) - கன்னட அகராதி (1858) - ஒப்பீட்டு மொழியியலுக்கான நெறிமுறைகள் (1858) - தோடர்கள் மீதான ஆய்வு (1873) - தாரநாதரின், இந்தியாவில் புத்தமதப் பரப்புகை பற்றிய வரலாறு (1870) - சிலோன் (1860) - கோ என்னும் கோலாரிய மொழி ஒன்றன் சொல்வரிசை மற்றும் இலக்கணச் சுருக்கம் - தென் திருவதங்கோடு - திருநெல்வேலிக் கல்வெட்டுக்கள் (1873) - சிந்திமொழி இலக்கணம் (1872) கிரேக்கமொழியின் இந்தியப் பலுக்கல்களும், இந்துச் சொற்களின் கிரேக்கப் பலுக்கல்களும் (1873) - உரோமானிய எழுத்துக்களை இந்திய மொழிகளுக்குப் பயன்படுத்தல் (1859) - தமிழ் அகராதி (1862)

1814-இல் பிறந்து 1938-இல் அதுவாவது தம் 24-ஆம் அகவையில் திருத்துவ விடையூழியராகச் சென்னைக்கு வந்தார். வரும்போதேயே, 'சென்னை' என்னும் இடப்பெயருக்கு என்ன அடிப்படை என்றவாறான கருத்தோட்டம் நெஞ்சில் ஊடாடி விளக்கம் தெரிந்து கொண்டு அதனையும் ஆய்வேட்டில் உரிய இடத்தில் பதிவு செய்திருக்கின்றார்.

சென்னப்ப நாயக்கன் என்பவர் செங்கல்பட்டு நாய்க்கனின் மாமனார். அச் சென்னப்ப நாய்க்கன் கோட்டையை ஆங்கிலேயர் விலைக்கு வாங்கியுள்ளனர். அக்கோட்டையைச் சூழ்ந்த நகரப் பகுதி சென்னப்ப நாய்க்கன் பட்டினம் என்னப்பெற்றுப், பின்னர் சென்னப்பன் பட்டினம் என்றாகி சென்னைப் பட்டினம் என்று தேய்ந்து இறுதியில் 'சென்னை' என்றவாறு குறுகி நிலைநின்றது எனும் இடப்பெயர் ஆய்வு

(Topology) நோக்கும் அவரின் ஆய்வுப் போக்கில் ஊடாடிக் கிடந்தமையையும் நாம் உணர்கின்றோம்.

எந்தச் செய்தியை விளக்க முற்படும்போதும் - அவ்வவ்விடத்தேயும் துலக்கமும் விளக்கமும் தெளிந்த நிலையிலேயே குறிப்பீடுகள் அமைய வேண்டும் என்பதில் வல்ல கருத்து வரைவாளராக அவர் இயங்கியுள்ளார்! அனைத்து நிலைகளினுள்ளும் அவர் விழிப்பானவராகவே இயங்கியுள்ளமையை ஆய்வேடு முழுமையிலும் மிகப் பரவலுற நம்மால் காணவியல்கின்றது!

(சான்றுக்கென: இரண்டாம் பதிப்பு - பக்கம்: 3)

பாண்டிச்சேரி (Pondicherry) - கரிக்கால் (Carrical) மாகே (Mahe) எனப்பெறும் பிரஞ்சு ஆட்சிக்குட்பட்டிருந்த மூன்று பகுதிகளையும் நூலுள் குறிக்கும்போது, அவ்வப் பெயருக்கும் அடுத்து அடைப்புக் குறிக்குள்ளாக Pondicherry (PUDUCHERI) Carrical (Karaikkal), Mahe (Mayyuri) என்றவாறு பதிவேற்றியிருக்கும் அழகினுள் ஆய்வுத் தெளிவும் உடன் அடங்கியுள்ளமையைக் காணவியல்கின்றது.

அவரின் அறிவும் வாழ்வின் பயன்விளைவும் பெருமையும் இரண்டரம் பதிப்பெய்திய ஆய்வேட்டுக்குள்தான் முழுமையாக நிறைந்துள்ளன! 37 ஆண்டுகள் தமிழ்த் தோய்வின் பழுத்த வெளிப்பாடு, அது! முதற்பதிப்பு வெளிவந்து 158 ஆண்டுகள் ஆகின்றன! திருத்திய விரிவாக்கிய அவரின் ஆய்வேட்டுச் செம்பதிப்பு வெளியாகி 139 ஆண்டுகள் ஆகின்றன! தமிழ் அறிவுலகமும் - உலக மொழியியல் ஆய்வுலகமும் அவரை இன்னும் சிறிதளவும் விளங்கிக் கொள்ளவில்லை. அவரின் அறிவுப் பரப்பையும் ஆய்வியல் நேர்மையையும் உழைப்பையும் அறியவே முடியவில்லை! அவரை விளங்கிக் கொள்ளுவதற்கான முறையான களமே இன்னும் கைக்கப்பெறவில்லை!

கிருத்துவ விடையூழியம் புரிவதற்கென வந்தவர் - அறிவுலகப் பயனுக்கெனவே சிறக்கப் பணிபுரிந்துவிட்டு - உலகுத்திற்கே புதிய உண்மைகள் பலவற்றை முன்வைத்துச் சென்றுள்ள பெருமை மிகுந்த அவரின் நோக்கையும் வீற்றையும் விளங்கிக்கொண்டு மதித்துப் போற்றும் மனவளர்ச்சியே ஒட்டு மொத்த அறிவுலகத்திற்கும் இல்லாது போய்விட்டது! கிருத்துவத் தொண்டூழியர்களிடத்தும் அறிவர்களிடத்துங் கூட அறவே இல்லாது போயினமை, வருத்தத்தோடு குறிப்பிட்டாக வேண்டிய செய்தியாகும்!

மொழியியல் ஆய்வாளர் ஒருவர், எவ்வளவுக்கு அடிப்படையில் தெளிவார்ந்தவராக இருக்க வேண்டும் என்பதற்கு அவரே ஓர் ஒப்பற்ற இலக்கண விளக்கொளியாகத் திகழ்ந்திருக்கின்றார் என்பதற்கான பல்வேறு அறிவார்ந்த நெறிமுறைப் பதிவுகளை அவரின் ஆய்வேட்டினுள்ளேயே மிகப் பரவலாக நம்மால் காணவியல்கின்றது! சான்றுக்கென ஒன்று!...

சொல்லியல் ஒருமையுறவுகள் பற்றிய ஆய்வுக் கட்டுரையின் முற்பகுதியில் இவ்வாறு தன் கருத்துரையை முன்வைக்கின்றார்!

'தெள்ளிய (தெளிவார்ந்த) நெறிமுறைகள் இல்லாமல் வழக்காறு மாற்றங்களைக் கருதாமல் - அம் மொழிகளின் இலக்கண வடிவங்கள் - கட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு இடையேயான ஒப்பீடுகளைக் கைவிட்டுவிட்டு - அம் மொழிகளிடையே வழங்கும் சொற்களை மட்டுமே ஒரு மேம்போக்கான தளர்வு நடைமுறையிலாக ஒப்பீடு செய்வது என்பது, - மொழியியல் துறையில் மிக நெடுங்காலத்திற்கு முன்பே ஏற்றுக் கொள்ளத்தகாத ஒரு நிகழ்ச்சியாகப் போய்விட்டது.

ஒப்பீட்டுச் சொற்பட்டி (அதாவது பல்வேறு மொழிகளின் ஒப்பீட்டுப் பட்டியல்) எவ்வளவு விழிப்போடு ஆக்கப்படினும் அது, மொழிநூல் அறிவியல் துறையில் ஒப்பீட்டு இலக்கணத்தைக் காட்டிலும் மிகக் குறைந்த மொழியியல் தகைமை உடையதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

ஒரு மொழியின் எலும்புடை தசையுமாகக் கருதத்தக்க பெயருரிச் சொற்களும் வினையுரிச் சொற்களும் அதாவது பெயர் மூலங்களும் வினை மூலங்களும் மட்டும், பல்லூழிக் காலம் கடந்து போயினும் தம் பண்டை வடிவையும் - தாம் பண்டு பெற்றிருந்த பொருட்பாட்டையும் விடாமல் மிக்க உறுதிப்பாட்டோடு பெற்றிருக்க, தனிநிலைப் பெயர்களும் வினைகளும் தத்தமக்குரிய பொருள் காலவெள்ளத்தில் ஆழ்ந்து அறவே மறந்து கைவிடப்பெறும்வரை பொருள் நிலையிலும் சிறிது சிறிதாக மாறி, வடிவமும் திரிந்து வேறுபடும் இயல்புடையனவாகும். எனினும் பொறுப்புணர்வோடும் மிக்க விழிப்போடும் மேற்கொள்ளப்பெறும்போது சொற்களின் ஒப்பீடும் மொழிகளுக்கிடையேயான இனவுறவினை உறுதி செய்வதில் சிறந்த துணைபுரிய வல்லதாகும் என்றே யான் கருதுகின்றேன்!' (*C.G.D. II Edition. Page:* 621)

தமிழ்மொழியின் இண்டு இணுக்குகளையும் மூலை முடுக்குகளையும் ஆழ அகலங்களையும் மிக உழைப்பெடுத்துக்

கணித்துள்ளார் என்பதனை - அக்காலத்தே அவர் தேடித் தொகுத்துத் தோய்ந்துள்ள அறிவு நூல்களை ஆய்வேட்டில் பயன்படுத்தியுள்ள பல்வேறிடங்களிலான பதிவுகளின் வழி அறிகின்றோம்.

தொல்காப்பியம் - திருக்குறள் - நாலடியார் - சீவகசிந்தாமணி - திருவாசகம் - பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர்புராணம் - நாலாயிரத் திவ்விய பிரபந்தம் - சிவஞான சித்தியார் - கம்பராமாயணம் - அதிவீரராமபாண்டியனாரின் நைடதம் - திருமூலரின் திருமந்திரம் - பத்திரகிரியார், சிவவாக்கியார் போன்ற சித்தர்களின் பாடல் தொகுதிகள் - சிவப்பிரகாசரின் பிரபுலிங்க லீலை - நீதிநெறி விளக்கம் - ஆத்திசூடி - கொன்றைவேந்தன் - மூதுரை - தாயுமானவர் பாடல்கள் - வீரமாமுனிவரின் தேம்பாவணி என்பன போலும் பல நூல் தொகுதிகளில் அவர் தோய்ந்திருக்கின்றார்.

அக்காலத்திருந்த தெளிவற்ற மொழியியல்குழப்படியாளர்களின் கலங்கலான பரிமாற்றக் கருத்துரைகளையெல்லாம் நன்கு உட்கொண்டு ஆய்ந்து பார்த்து - அவர்களின் திருந்தா மூளைகள் துலங்க விளங்கிக் கொண்டு திருந்திக் கொள்ளும் முறையிலாகப் பல தெளிவுகளை அவர்தம் ஆய்வேட்டினுள் முறையுற வழங்கியுள்ளார்.

திரிபெய்தி உருக்கொண்டு வழங்கும் தமிழிய மொழிகளின் தோற்ற நிலைகள் பற்றியும் - அவற்றின் உளப்பாட்டு நிலைகள் பற்றியும் - வடமொழியாகிய சமற்கிருதத்தின் மெய்த்தகைமை பற்றியும் தம் ஆய்வேட்டினுள் மிகப்பல இடங்களில் பதிவு செய்துள்ளார். அவற்றின் விளக்க முறையே தனித்த அழகு வாய்ந்ததாகும்.

(சான்றுக்கென ஒரு பகுதி:)

'திரவிட மொழிகளைச் சமற்கிருதத்திலிருந்து பிறந்தனவாகக் கொள்ளுதல் வேண்டும் என்று கூறும் மொழிநூல் அறிஞர்கள் - சமற்கிருதச் சொற்கள் எங்கோ அருகி இடம்பெறுவதல்லது பொதுவாக அறவே இடம்பெறாதனவாய் திருந்தாத் திரவிட மொழிகள் இருப்பதை அறிந்தவரல்லர்!

சமற்கிருதச் சொற்களை மேற்கொள்ளும் திரவிடமொழிகள்தாமும் அச்சொற்களைப் பகட்டுப் பொருளாகவும் - அழகு தரும் அணிவுப் பொருளாகவும் மதிப்பதல்லது மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதனவாக மதிப்பதில்லையாதலின் அவற்றை அறவே கைவிட்டும் வாழவல்லவாம் என்பதையும் அவர்கள் அறிந்தவரல்லர்!

தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் தத்தம் தனிநிலைகளை நிலைநாட்டுவது அறவே இயலாத அளவு சமற்கிருதச் சொற்களை அளவுக்கு மீறிக் கடன் வாங்கியுள்ளன! ஆதலின் - தன்னுடைய சமற்கிருதக் கலவைகளைக் கைவிடுவது தெலுங்கு மொழிக்கு இப்பொழுது அரிதாம் என்பது உண்மை! கன்னடத்திற்கு அதனினும் அரிதாம்! மலையாளத்திற்கு அவை எல்லாவற்றைக் காட்டிலும் அரிதாம்!

அவற்றின் இயல்பு அதுவேயாயினும் - திரவிட மொழிகள் அனைத்தினும் உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ் - தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமற்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமலேயே வளம்பெற்று வளர்வதும் இயலும்!' (C.G.D. II Edition: P: 49 - 50)

அடிப்படைய அறிவை - மானத்தை - தெளிவை இந்நிலையில் நமக்கு வழங்கியவர், கால்டுவெல் பெருமகனார் ஆவர்! இவ்வுண்மையை அவர் ஆய்வேட்டினுள் பல்லிடங்களிலும் காணவியல்கின்றது!

ஆரியர்கள் இம் மண்ணில் வந்தேறியவர்கள் என்பதில் தெளிவார்ந்தவராக, அவர் இருந்தார்! அதுவே போல், அவர்களின் சமற்கிருதம் பேச்சுவழக்கு அற்ற ஒன்று என்னும் தெளிவும் அவர்க்கு இருந்தது.

இந்நாட்டுள் வழங்கிய பல்வேறு வட்டார மொழிகளின் சொற்களையும் தம் மொழிக்கு உரியவாகவே ஆரியர் வகைசெய்து கொண்டனர் எனும் அகராதியியல் உண்மையையும் மிகத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார், நம் கால்டுவெல் பெருமகனார்.

'சமற்கிருதம் பேச்சு வழக்கற்றுப் போன நிலையில் - சமற்கிருத மொழியாளர், வாழும் நாட்டில் வழங்கிய உள்நாட்டு மொழிச்சொற்கள் கருத்துணர்வு கருதி அச் சமற்கிருத மொழியாளரால் வழங்கப் பெறுவது இயல்பேயாதலின் - அம் மொழியாசிரியர்களால் வழங்கப் பெற்ற அத்தகைய உள்நாட்டுச் சொல் ஒவ்வொன்றும் - அவை எழுத்துருவில் இடம்பெறும் தகுதி உடையவாயின் அம் மொழிச்சொல் தொகுதியில் சமற்கிருதச் சொற்களாகவே வகைசெய்யப் பெற்றுள்ளன!' (C.G.D. P:622, Para:2) (II Edition)

(..... and any writer had happened to make use of a local or provincial word, that is a word belonging to the vernacular of the district in which he resided (and it was natural that such

words should occassionally be used for variety of meter or some other cause especially after sanskrit had ceased to be a spoken tongue) every such word provided only it were found written in sanskrit charecters was forthwith Set down in the vocabularies as sanskrit)

இங்கு வந்தேறிய ஆரியராகிய பிராமணர், செயற்கை நிலையில் முதிர்வுறுமாறு நுட்ப உழைப்பெடுத்துத் தம் வடமொழியைப் பல்வேறுகோணங்களிலாகவடிவமைத்துச்செயற்படுத்தியமையாலேயே - பயன்படுத்தவே முடியாதவாறு அறவே வழக்குறாது போய்விட்டது.

பிராமணர்கள் அனைவரும் தம் செயற்கைப் பதுமையாகிய வடமொழியைத் தம்மால் இயன்றவாறெல்லாம் அனைத்து அதிகார வலிவுகளையும் பயன்படுத்திப் படாதபாடுபட்டுத் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். அதுவும் வெறித்தனத்தோடு, சூழ்ச்சியோடு, எதிர் உணர்வோடு.

'திராவிடம்'என்றவாறு மிகப் பரவலாக அறியப்பட்டுள்ள தமிழிய மொழிகள் பற்றிய அடிப்படை உண்மைகளையெல்லாம் - ஒரு முற்றாய்வுக்கு உட்படுத்திப் பல செய்திகளையும் உலகின்முன் பரவலாகப் பரப்பி வைத்தவர், அறிஞர். கால்டுவெல் அவர்களே ஆவார். இந்நிலையிலாக அவரின் விளக்கமார்ந்த குறிப்புக்களில் ஒரு கீற்று இங்கு முன்வைக்கப் பெறுகின்றது. காண்க!

'திராவிட மொழிகள் எல்லாவற்றிற்கும் 'தமிழம்'என்னும் பெயரே பொதுப் பெயராக முதலாவதாக வழங்கி வந்தது! திராவிடம் என்னும் வடிவும் 'தமிழம்'என்னும் பொருளிலேயே முதன்முதலில் வழங்கியதாகும்! தெலுங்கு, தமிழினின்றும் பிரிந்துபோன பின்பு முன்பு நன்றாயெண்ணப்பட்ட திராவிடமொழி இரண்டாய்க் கருதப்படபெற்று 'ஆந்திர திராவிட பாஷா'என்றவாறான இணைப் பெயராற் குறிக்கப்பட்டது! அதன்பின் கன்னடம் மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்து திராவிடம் பல்கிய பின் தமிழம் என்னும் பெயரின் மறுவடிவமான தமிழ் - திராவிடம் என்னும் சொற்களுள் முன்னது தமிழ் மொழிக்கும் பின்னது திராவிட மொழிகள் எல்லாவற்றுக்குமான வரையறுக்கப்பட்டன! இதுகாறும் கூறியவற்றால் தமிழே திராவிட மொழிகட்குள் மிகத் தொன்மையானதும் - மிகத் திருந்தியதும் - மிக வளமுள்ளதும் அதனால் மிகச் சிறந்த திராவிட எச்சமானதும் என்றறிந்து கொள்க!'

(காண்க: *C.G.D. PP: 1,4,9,80,370*)

தமிழம்> த்ரமிள> த்ரமிட> த்ரவிட> த்ராவிட

திராவிட> திராவிடம். இதுவே படிநிலை.

இதனை அறிஞர் கிரையர்சன் ஆழ்ந்துணர்ந்துள்ளார். (அவரின் குறிப்பு இது - காண்க) 'தமிழம்'என்பது தமிள> தவிள> தவிட என்றவாறு பிராகிருதத்துள் திரிபெய்திய பின்னர் - த்ரமிள> த்ரமிட> த்ரவிட >த்ராவிட என்றவாறு வடமொழியில் திரிபெய்தியது. (காண்க: *Linguistic Survey of India. PP:298. Vol:IV. Dr. Grierson*)

பல்வேறு மொழிகளின் சொற்களையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் அவருக்குப் புதிய பேருண்மைகள் பல புலப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மிக மிக வியப்புக்குரியது.

'திரவிட (தமிழிய) வழக்காறுகள் - இந்தோ - ஐரோப்பிய மக்களின் பழம்பெருந் தாய்மொழி எனக்கருதி மதிக்கப் பெறுகின்ற சமற்கிருதத்திற்கு முந்தைய ஒரு முந்து - சமற்கிருத தொடர்புடையனவாக இருந்துள்ளன என்னும் முடிவினை நிலைநாட்டவல்ல நல்ல சான்றுகளையும் - உரிய அடிச்சுவடுகளையும் இவ் ஒவ்வீட்டுச் சொல் வரிசைகள் பெற்றுள்ளன' (பக்: 621. C.G.D.)

தமிழ்ச் சொற்கட்டமைப்புகளினுள் மிக ஆழந்திறங்கித் தீர எண்ணி அவர் முடிபு கண்டுள்ளார் என்பதுவும் - ஆய்வின் வழியே தெளிந்த உண்மைகள் பல அவர்க்குப் புலப்பட்டுள்ளன என்பதுவும் ஆய்வேட்டின் பல பகுதிகளில் பதிவெய்தியுள்ளன. தமிழர் வாழ்வியலின் வரலாற்றுச் சார்புடைய உரிமைச் செய்திகளுங்கூட சொல்லாய்வின் வழியே அவர்க்குப் புலப்பட்டுள்ளன.

அறிஞர் கால்டுவெல் அவர்களின் நுண்மாண் நுழைபுலம் பற்றிப் பாவாணர் பெருமகனார் ஓரிடத்தே இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

'கிழக்கு மேற்கு என்பவை மொழிநூற் பெரும்புலவர் கால்டுவெல் ஐயர் நுனித்தாய்ந்து கண்டபடி, முறையே கீழ் மேல் என்னும் சொற்களைடியாயப் பிறந்தவை' (ஒப்பியன் மொழிநூல் - பக்கம் : 116)

நூறு:

[உய்: நுண்மைக் கருத்து மூலவேர். உய் > நய் > அய் அய்: நுண்மை அய் > ஐ. ஐ + ம் + மை > ஐம்மை. 'அரியே ஐம்மை' (தொல். சொல்.உரி.58) உய் > ஞய் > நுய். நுய்: நுண்மைக் கருத்துக் கிளைவேர். நுய் > நுய் > ஐ > நுயை > நுழை. ஒ.நோ: 'நுண்மாண் நுழைபுலம்'

நுய் > நொய். நொய் > நொய் + இ > நொயி > நொசி. நொசிவு = நுண்மை, சிறுமை. ('நொசி மடமருங்குல்' கலி 60). நுய் > நுய்ல் > நுல் > நூல் = நுண்ணிய அறிவுக் கருத்துக்களைப் பொதிந்துவைத்துள்ள ஏட்டுச் சுவடிகளின் தொகுப்பு. நுய் > நுய்ல் > நுல் > நுள். நுள் > நுண். நுண் + அங்கு > நுணங்கு. நுணங்குதல் = நுண்ணிதாதல், நொய்ம்மையுறுதல். நுண் > நுண் > மை > நுண்மை = நுணுக்கம். (காண்க: 'நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை' (தொல். சொல். உரி: 857) நுள் + பு > நுட்பு > நுட்பு + அம் > நுட்பம் = நுண்மை.

நுய் > நுய்ல் > நுல் > நுல் + து > நுற்று (ந.நோ: கல் + தல் > கற்றல்) நுற்று > நுறு. நுறுகு > நுறுங்கு = பொடியாகு (நுண்ணிய துகளாகு) நுறுகு > நுறுக்கு > நொறுக்கு = பொடியாக்கு. நுறு > நூறு = பொடி. சுக்குநூறு = சுக்குப்பொடி. நூறு > நீறு. திருநூறு > திருநீறு = திருப்பொடி.]

பொடிகளின் பேரெண்ணிக்கைத் தொகுதி குறித்தே தமிழுள் 'நூறு' எனும் எண்ணிக்கை குறிக்கப்பட்டுள்ளது என்னும் பேருண்மை, அறிஞர் கால்டுவெல் பெருமகனார்க்குப் புலப்பட்டுள்ளமை மிகவும் வியப்புக்குரியது. அவரின் கருத்துரைப் பகுதி, இது!

'The Numerals.
(A Hundred)
Nuru (=powder) Niru = powder.

There cannot be any doubt that we have here the origin of the Dravidian word for hundred. Dust, powder would nuturally appear to a printitive race an appropriate name for a number which must have seemed to them innumerable.

(C.A.D. part IV. P:415)

இக்கருத்து வெடியே பாவாணர் பெருமகனாரின் அறிவு மூளைக்குள்ளும் படர்ந்து, 'ஆயிரம்' என்னும் எண்ணிக்கைப் பெயரின் வேரடிப்படையை அவர்க்கு விளங்கச் செய்துள்ளது. 'அயிர் = நுண்மணல். அயிர் + அம் > அயிரம் > ஆயிரம்' என்றவாறு அவர் முடிபுகண்டு உரைத்தமைக்கு அறிஞர் கால்டுவெல் அவர்களின் நூறு குறித்த வழிகாட்டுதலே வேர்மூலமாயிருந்துள்ளமையை நாம் உணர்கின்றோம்!

எந்த அடிப்படைச் சொல்லினின்று எந்தச் சொல்லாக்கம் முறையாக நேர்ந்துள்ளது என்பதில் மிகத் தெள்ளிய கூர்நோக்கு

அவர்க்கு இருந்துள்ளமையைக் கண்டு நாம் வியப்படையவே வேண்டியுள்ளது!

சான்றுக்கென: (வினைத்திரிபுகள் (Verbal Derivatives) பகுதியில்: 1. கரி < கரு (Block) 2. சேரி < சேர் (to join) 3. நன்கு < நல் (good) 4. கொடுக்கு < கொடு (crooked) 5. பண்டிகை < பண்டு (ancient) 6. திரிகை < திரி (to turn) 7. காங்கை < காய் (to burn) 8. பருக்கை < பரு (large) 9. வாழ்க்கை < வாழ் (to flourish) 10. அமைச்சு < அமை (to settle) 11. பொலிசை < பொலி (to increase) 12. பதடி < பதர் (chaft) 13. உறுதி < உறு (to be strong) 14. பருத்தி < பரு (to expand) 15. குருத்து < குரு (tenoler) 16. குழந்தை < குழ (young) 17. காட்சி < காண் (to see) 18. தேர்ச்சி < தேர் (to ascertain) 19. வெற்றி < வெல் (to congner) 20. தொண்டை < தொள் (to puforete) 23. ஊத்தை (un-dei) ஊன் (flesh) 24. நரம்பு < நார் (fibre) 25. கருப்பு < கரு (Black) 26. பழம் < பழு (mature) 27. ஆக்கம் < ஆகு (to become) 28. வீக்கம் < வீங்கு (to swell) 29. கூட்டம் < கூடு (to join) 30. நீத்தம் < நீந்து (to swim) 31. விருப்பம் < விரும்பு (to desire) 32. குழாம் < குழு (to gather, together) 33. குழாய் < குழி (hole) 34. சுடர் < சுடு (to be hot) 35. குதிரை < குதி (to leap?) 36. சுடலை < சுடு (to burn) 37. மழலை < மழ (a young) 38. விடுதலை < விடு (to leave) 39. தொட்டில் < தொட்டி (a trough) 40. பறவை < பற (to fly) 41. உருளை < உருள் (a wheel).

ஆய்வேட்டினுள் இத்தகு சான்று அடைவுப் பட்டியல்கள் பல அவரின் ஆய்வுநெறிச் செலவுள் அடிப்படைகளாக நின்றுள்ளன!

சொல்லியல் இனவுறவுகள் காண்பதற்கென அவர் மிகவும் உழைப்பெடுத்து ஆய்ந்துள்ளார்.

இந்தோ - ஐரோப்பிய மொழிகளின் சொல்லியல் உறவுகள் பற்றிய ஆய்வியலில் தொடக்கக் கட்டுரையாகத் திராவிட மொழிகளுக்குச் சமற்கிருதம் பட்டிருக்கும் கடன்பாடு என்னும் பொருள்பற்றி விளக்கும் அழகே, மிகத் தனிச் சிறப்புடையதாகும்.

அவர்காலத்தே திரவிடமொழிகள் பற்றிய கூர்ந்த ஆய்விலும் - அகராதி - உருவாக்கத்திலும் ஆழ்ந்து ஈடுபட்டவாறிருந்த பண்டாரசர். குண்டர்ட்டு, திருவாளர். கிட்டெல் ஆகிய அறிஞர்களின் ஆய்வுப்பட்டியல்களையும் இதற்கெனச் சான்றுகாட்டி எழுதியுள்ளார்.

சமற்கிருதத்தோடு தமிழியமொழிகளின் சொல்லியல்

உறவுகளையும் மேற்கிந்திய - ஐரோப்பிய மொழிகளுடனான சொல்லியல் உறவுகளையும் மிக நுண்ணியதாகக் கூர்ந்து ஆய்ந்துள்ளார்.

மேற்கிந்திய - ஐரோப்பிய மொழிகள் சமற்கிருதத்தோடு குறிப்பிடத்தக்க தெள்ளிய உறவுடையனவல்ல என்னும் கருத்துத் துலக்கத்தோடு, தமிழியல் சார்பிலாக அவர் தரும் பட்டியல் மிகுந்த மொழியியல் - சொல்லியல் பயன்பாடு நிரம்பியதாகும்!

காண்க: (பக்:644:C.G.D.)

அசை > *as-ei = to shake. Comp. sei_o = to shake, to move to and fro.*

அருவி > *aru-vi = a water fall. Comp. riv-u > (Eng) river. (ak) rhuo... rhue..... = to flow.*

அலை > *al-ei = to wander. ala-omai. to wander. ale. (Germ.) welle. (Armen) alike = a wave.*

அவா > *ava = desire. (Latin) aveo = to desire.* (பக்:645.C.G.D.)

இரும்பு > *irumbu. (Tel) irumu. (Latin) oer-is, (Saxon) iren. (Danish) iern, (Old German) er. (Armenian) erketh. (the root of the Tamil word (ir) appears to near dark and irul darkness. Ira = night.*

ஈன் > ஈனு > *inu = to bring forth young. (Eng.) to ean or yean. (shakespear) - ean. (Anglo - Saxon) eanian.*

உயர் > *uyar = high. To raise. air-o = to raise up. aerden = lifted up. (Armenian) wor = high.*

உரு > *uri. (Latin) uro = to burn (Armenian) or = fire. (Afghan) or, wulr. (Hebrew) ur = fire, or = light.*

உளை > *ulei = mire. (ak) el-os = a marsh*

ஊளை > *ulei = howling (Latin) ulu = to howl. (Gk) lo. (English) howl.*

எய் > *ey. = to shoot (an arrow), (ak) ios = an arrow hio = to shoot, to cast. heo = to sewd.*

எல்லாம் > *ell-a = all. (osseta) ali - all (saxon) eal. (High German) al. (English) all. (Gk) hol - os. (Herbrew) hol = whole.*

ஏர் > *er = plough* (p:646.C.G.D.)

ஓரம் > *oram = border, brim, margin. (Latin) ora = border, margin.*

கடி > *kadi = to cut. (skt) krit = to cut. but especially the English cut. Norman French: 'coto'. (Welsh) cateia = to cut. (Latin) caed-o. (Persian and ossete) Kard = Knife. (P:647. C.G.D.)*

கள, களவு > *kala (Latin) clepo. = to steal. (GK) Klap-eis. (P:648. C.G.D.)*

காய் > *Kay = to be hot, to burn. (GK) Kaio = to burn, to be hot.*

கிண்டு > *kindu = to stir, to turn up the ground. (GK) Kent eo = to prick, to goad.*

கிழ > *kira = old (sht) jar - as = age (GK.) gera - s = ger-on*

கிளை > *kilei = a young braned (ossete) Kalius (servian) galusa (p:649.C.G.D.) (Greek) Klowlos = a young shoot, a brand*

குளிர் > *Kulir = cold (German) Kühl. (Saxon) cyl. col, cele. (Russian) cholod (Eng.) cool, cold. (Latin) gelu. (English) chill.*

கேள் > *Kel = to hear. (comp.) (Latin)*

கொல் > *kol = to kill. (English) kill. and quell*

சாத்து > *sattu = to close a door (Saxon) scytt-an-to shut in. (Dutch) schutt-en = to stop. (Eng.) to shut.*

சுவை > *suvei = taste, flavor. (Eng.) sap. (German) saft.*

சுருங்கு > *surungu-u to shrink. (comp.) (English) shrink*

சுடு > *sudu. (Persian) sus - an. (kurd) sodj-an (ossete) Suds-in = to burn.*

செப்பு > *sepp-u = to speak. (Gk) gepo = to speak*

செல் > *sel = to go, to proceed. Selavu = expenditure. (Skt) sal = to go or move. Chal = to go. (Hindustani) chal = to go. Obsolete Latin root. celer excello, proecello. (Greek) kel. Kelas = a runner.*

தகு > *tagu = fit, proper, worthy. (German) taugen = to be fit for. (Gothic) dugen. (Eng.) doughty.*

தயிர் > *tayir = curds. (Gk) Tur-os = cheese.*

தெள் > *tel = clear. (Gk) del - os = clear*

தொலை > *tolei (base) tol. (Greek) tel os = an end. tele = far off.*

திருப்பு > *tiruppu. (Greek) trepo = to turn. (C.G.D. P:651)*

நசு (நசுங்கு) *nasu = to a crush, to squrash narsso = to squeeze close.*

நர (நரம்பு) *nar = fibre. (Latin) ner-vus. (Gk) neur - on = a temton, a ligament. (C.G.D. P:652)*

நெய் > *ney = to weave. (Gk) neo = to spin. nema = a thread. (Latin) neo = to spin, to enutwine. (German) nah-en = to sew. (Latin) necto = to knit, to join*

படு > *padu = to suffer. (comp.) slavonian. Pad = to fall. (Zend) pat. (Latin) pet. im-pet-o = to fall upon.*

பண்ணு > *pannu = to make (Greek) pon-eo = to toil, to work hard. Pon-os = a task. Pen-omai = to work., to toil. Babylonian ban-as = to do, to make (C.G.D. P: 654)*

பழு > *paru = to be old. (comp.) (Persian) ber = fruit (Armenian) perk. (Latin) fru-or, fru-x.*

பழ (பழைய) > *(Greek) palai-os = old, ancient. Palai = in olden times.*

பல் > *pal = many pala = many people. Pala = many things. (Gk) polus = many (Latin) plus (Goth.) (Old German) filu = much. (Gk) polus = the many, the majority.*

பள்ளி > *palli = a town, a school, a place of worship. (comp) Gk. Polis = a city*

பிள்ளை > *pillei = a child. (Latin) puell-us = puella = a boy, a girl; fil-ius, fil-ia = a son, a daughter (C.G.D. P:655)*

புழுதி > *purudi = dust. (comp.) (Latin) = pulvis*

பூசை > *pus-ei = a cat. Cashgar dialect of the Afghan: pusha - a cat, (Irish) pus = a cat. (Eng.) purss.*

பெரு > *peru = great. (Zend) berez, barez = great beregalti = to grow (C.G.D. P:656)*

பொறு > *poru = to sustain, to bear. Comp. (Sanskrit) bhar = to bear. (Gothic) bair-on, bar, beram = to bear. (Old*

High German) beran, peran. (English) bear. (Greek) phero = (Latin) fero.

போடு > *podu = to put. (Dutch) pooten = to set (English) put = to put.*

விழு > *viru = to fall. (Eng.) fall. (German) fallen (C.G.D. P:657)*

மகன் > *Magan = son (Gothic) mag-us = a boy, a son. (Gaelic) Mak = a son (comp.) (Latin) mas = a male.*

மன்னு > *man = to remain. (L) manere.*

மயிர் > *mayir. = hair. (Persian) mui. (Armenian) mas = hair.*

மிகு > *migu = much, great (Latin) magnus, magis (Persian) mih, meah, (Greek) mega, megalos (Old High German) mihil, michil (Norse) mihil (Danish) megan. (C.G.D. P:658)*

மூழ்கு > *mur-gu = to plunge, to sink. (comp.) (Latin) merg-o = to plung, to immerse. margo*

முகில் > *mugil = a cloud (skt) megha = a cloud. (Greek) o - michl-e = a cloud. (Lithuanian) migla. (Slavonian) mugla*

முயல் > *muyal = to labour, to endeavour. (Greek) mol-os = (English) moil = to moil, labour, or strive.*

மூக்கு > *mukku = the nose. (Gk) muxa (Latin) mucus*

மெல் > *mel = fine, thin, soft, tender. (Gk) malakos = soft, gentle.*

வல் > *val = strong (skt) bala. (Latin) valeo = to be strong, validus. (C.G.D. P:660)*

விண்டு > *vindu = a wind. (Latin) vent-us (English) wind.*

விறை > *(virei) to shiver from cold, to grow stift from cold. (Gk) phrisso = to tremble, to shiver. (Latin) frigeo = to be cold. Frig-us = cold (English) freeze.*

வீண் < *vin = useless, vain. L. van-us = empty, unreal.*

வேண்டு < *vendu = to wish. (English) want. (saxon) wanian.*

வேறு < *veru = different, other. (also) var - us. Vari-us. = various.*

செமித்தியச் சொல்லியல் உறவுகள்:
(C.G.D. P: 661)

அப்பா < *appa The mech (a Bhutan dialect) appa.*

(Bhotiya) aba

(Sinhalese) appa.

(Hebrew) ab = father

(chalde) abba = father. (syriac) abō

அம்மா < *amma (Hebrew) em. = mother. (syr.) amo*

ஆறு < *aru = river (comp.) Hebrew. Y'or = a river Coptic jaro.*

அவா < *ava = desire. (comp.) avvah = desire. (Latin) aveo = to desire. (Hebrew) abah = to will.*

உரி < *uri = to burn. (Acb.) ur = fire. Or = light.*

கூர் < *kur = a sharp point. (Heb.) Kur = to pierce.*

சாய் < *say = to lean (Heb.) sha-an, sha = to lean.*

சுவர் < *suvar = a wall (Heb.) shur = a wall*

நாட்டு < *nattu = to fix, to setup. (Heb.) nata = to plant.*

மாறு < *maru = to change. (Heb.) mur = to change or exchange (syriac) mor = to buy.*

மெத்தை < *metha = a bed. (Heb.) mittah = a bed, a cushion, (Latin) matta.*

சித்தியன் மொழிகளுடனான சொல்லியல் உறவுகள்

அத்தன் > *attan = father. Attei = mother. (Turkish) ata. (Hungerian) atya. (Finnish) atta (Gothic) attan = father (Gk) atha. (Latin) atta = a salutation used to old men, equivalent to father.*

அன்னை < *annei = mother (finnish) anya. (Hungerian) anya = mother. (mordvin) anai. (ostiak) ane. (Turkish) anna, ana.*

அம்மை < *ammei = mother (comp.) samoiede. amma = amother. (Jenesei) amma or am. (Eastrian) emria (Finnish) ema (malay) ama = mother*

ஆறு < *aru = river. (comp.) Lesghian or Avar. uor. Yakutan (Siberian Turkish) oryas. (Lappish) wiro. (Armenian) aru (coptic) jaro. (C.G.D. P:670)*

ஒக்க < *okka = all. Mordvin wok = all*

கட்டு < *kattu = to bind, to tie. (Hung) Kot (Ostiak) kattem. To fasten. (Syrianian) kuta (finn) keitt. (C.G.D. P:671)*

கல் < *kal = a stone (Lappish) kale.*

காற்று < *karru (pronounced kattru = wind) (kal-du = kattru) (kangazian) kat = wind. (sayoten) kat.*

கிழ < *kira = old, aged. (wotiak) keres. (Lesghian) Heran.*

குடி < *kudi = a habitation. (mordvin) kudo = a house (cheremiss) kuds. (finnish) kota (ostiak) chot.*

கோன் < *kon = a king (Turkish) Khan (mongolien) khan. (Ostiak) khou*

தோல் > *tol = skin. (comp.) (togal) towl, toul = skin*

பல > *pal, pala (Finnish) palyo (Manchu) fulu*

புகை > *pugei. (comp.) Aung. Fus = smoke. (English) fog*

மரம் > *maram = a tree. (Lappish) muor, muorra = a tree (Turkish) murm*

தமிழ், - அதனின்று கிளைத்தெழுந்த தமிழிய மொழிகள் ஆகியவற்றின் இலக்கண இலக்கியத் தொகுப்புகளைத் தெரிவு செய்து அவற்றில் தொடர்ந்து தோய்ந்தவாறிருந்தவர், அறிஞர். கால்டுவெல் அவர்கள். அவர் ஆய்வு செய்துகொண்டிருந்த காலத்தே, இந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மொழியியல் ஈடுபட்டு ஆழங்காற்பட்டிருந்த அறிஞர் பெருமக்கள் பலருடனும் தொடர்ந்த அறிவுத் தொடர்பில் தோய்ந்திருந்துள்ளார். அவர்கள் செய்து முடித்த பல்வேறு ஆய்வு முடிபுகளிலும் தவிராது கவனஞ்செலுத்தி வந்துள்ளார். முப்பத்தேழு ஆண்டுக்காலம் இத்தவ முயற்சியில் தோய்ந்து ஈடுபட்டுப் பேருழைப்பு எடுத்துத் தமிழிய மொழிகளின் தலைமை மொழியாகிய தமிழின் மேன்மையையும் முன்மையையும் வளமையையும் உலகிற்கு வெளிப்படுத்திய பெருமைக்குரிய முனைவர், அவர்.

அவரின் இவ் ஒற்றை ஆய்வேடு மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் எனும் பெருமகனார்க்கு பெருத்த தெளிவுநிலையையே உருவாக்கியிருக்கின்றது. வேரியல் சார்பான ஊற்றுக்கண் எழுச்சி பாவாணரிடம் பெருக்கெடுத்துப் புறம்போந்தமைக்கு அறிஞர் கால்டுவெல் அவர்களின் உழைப்பு வெளிப்பாட்டுத் துலக்கம் பேரளவுக்கு வழிகாட்டியுள்ளது. உலக மொழிகளுக்கெல்லாம் தொடக்கப் பெருமொழியாகத் தமிழ் முந்தித்தோன்றியுள்ள பேருண்மையைப் பாவாணர்க்கு ஊட்டிய திறஞ்சான்ற ஊற்றம் மேற்கிந்திய ஐரோப்பிய மொழிகள்.... செமித்திய மொழிகள்.... சித்தியன் மொழிகள் ஆகியவற்றிற்கானச் சொல்லியல் உறவுகள் பற்றி அறிஞர் கால்டுவெல் ஆய்ந்து பட்டியலிட்டுள்ள ஒப்பீட்டுத் தொகுப்பினின்று எழுந்துள்ளதாகவே தோன்றுகின்றது. ஏதோ பொத்தாம் பொதுவாக ஒலியொப்புமை கண்டு மட்டுமே கூறாது இலக்கண இலக்கிய மரபுணர்ந்து தெளிந்த பின்னரே ஒவ்வொரு தீர்வையும் அறிஞர் கால்டுவெல் பதிவு செய்துள்ளார். அவர் காலத்தில் அவர்க்குக் கிடைத்த பெரும்பான்மையான திரவிட இலக்கண நூல்களையும் - சொற்றொகுப்புக்களையும் இயன்றவரை தொகுத்துத் துருவி உள்நோக்கியுள்ளார். உலக மொழியறிவில் தலைசிறந்திருந்த அறிஞர் பெருமக்கள் பலரிடமும் கருத்துகள் கேட்டு உணர்ந்து முடிவெடுத்துள்ளார். சமற்கிருத நூல்களிலும் வரலாற்றுத் தொகுப்புகளிலும் நிரம்பிய தெளிவு அவர்க்கு இருந்துள்ளது.

இன்றைய பாக்கித்தானத்திலிருக்கும் பெலுச்சிசுத்தானில் வழங்கப்பெறும் 'பிராகுவி' மொழியும் திரவிடமொழிகளுள் ஒன்றேயென நிறுவுவதற்கு பின்னிணைப்பில் அவர் பதிவு செய்துள்ள சுருக்கக் குறிப்பு நேரிய அறிவுக்கிற்றாகும்.

உலகமொழிகள் பலவற்றுக்கும் பெருங்கொடையினை வழங்கிய தமிழின் பதிவுகளாக இன்றைக்குப் பலரும் பட்டியற்படுத்திக்காட்டும் ஆய்வுகள் பலவற்றுக்கும் அடிநிலை ஊற்றமும் - ஊட்டமும் - ஊக்கமும் அறிஞர் கால்டுவெல் அவர்களின் ஆய்வுத் தொடக்கத்தாலேயே மிகப் பெரும்பாலும் ஏற்பட்டுள்ளன என்னும் உண்மையை இவரின் ஆய்வேட்டினுள் தோய்ந்தால் மட்டுமே தெளிவாக உணரவியலும்.

தமிழிய மொழிகளின் தாயாகத் தமிழ் இருந்துள்ளமையை அவர் முடிபுரைத்துள்ளார். அப் பாரிய பேருண்மை பின்னர் மிக விரிவு விளக்கங்களாகப் பரப்பெய்தியுள்ளது. உலகமொழிகள் முந்தை

மொழியாகவும் - மிகப் பெரும்பான்மையான உலகமொழிகளுக்கு அறிவுக்கொடையைச் சொற்களின் வழியாக வாரி வழங்கிய மொழியாகவும் நம் தமிழ்மொழி இருந்துள்ளமையைப் பரந்துபட்ட - ஆழங்காற்பட்ட நேரிய ஆய்வுகளால் நாம் நிலைநிறுத்த வேண்டியுள்ளது. இந்நிலைகளிலாகிய அனைத்து ஆய்வுகளுக்கும் எழுச்சி முன்னோடியாக இருந்தியங்கிய அறிஞர் கால்டுவெல் அவர்கள் பணியின் உரஞ்சான்ற பெரும்பயன்விளைவு பற்றிய நினைவு மட்டும் அறிஞர் நெஞ்சங்களில் என்றும் நீளிதாகத் தொடர்ந்தவாறேயிருக்கும்.

❀ ❀ ❀

17. கால்டுவெல்லும் பாவாணரும்

முனைவர் கு. அரசேந்திரன்
தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

இருநூறாண்டுகட்கு முன்பிறந்த கால்டுவெல் (1814-1891) பெருமகனாரையும் நூற்றுப் பன்னிரெண்டு ஆண்டுகட்கு முன் பிறந்த பாவாணர் (1902-1981) அவர்களையும் இணைத்துக் காண்கின்ற ஆய்வுக் கட்டுரை இது. கால்டுவெல், பாவாணர் இருவரும் மொழியாய்வுத்துறையில் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள். தமிழ் - தமிழியல் சார்ந்த வரலாறு, சமயம், இலக்கியம், மெய்யியல் போன்ற துறைகளிலும் இருவரின் பங்களிப்புப் பாரிது. ஆயினும் இக்கட்டுரை இருவரின் மொழியாய்வுக் களத்தில் அமைந்த பொருத்தப்பாட்டு உறவுகளையே ஆய்கிறது.

பாவாணர் போற்றும் லெவிற்று

தமிழுக்கும் பிற உலக மொழிகளுக்கும் இடையிலான உறவினை வரலாற்று மொழியியல் அடிப்படையில் இன்றைய ஆய்வறிஞர்கள் ஆயத்தலைப்பட்டுள்ளனர். தமிழுலகத்திலேயே பெரியதாக ஏற்றுப் போற்றப்பெறாத ஆய்வாகப் பாவாணர் ஆய்வு இன்றும் உள்ளது. பாவாணர், தன் ஆய்வினை மேலைமொழிநூலறிஞரும் ஏற்கும் காலம் வரும் என்று கூறினார். ஆயின், அவர் காலம்வரை(1981) அது, நடைபெறவில்லை. தமிழுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகட்குமான உறவுகளைக் கால்டுவெல், போப், பர்ரோ, எமினோ போன்றோர்கட்குப் பின், இன்று ஆய்ந்து வருபவர்களில் முதன்மையானவர் ஸ்டீபன் ஹில்யர்லெவிற்று (Stephan Hillyer Levitt)என்னும் அமெரிக்கப் பேராசிரியர் ஆவார். பெனிசில்வேனியப் பல்கலைக்கழக சமற்கிருதப் பேராசிரியரும் மொழியியற் பேராசிரியரும் ஆகிய இவர், ஞால முதன்மொழிக்கொள்கை (Mother tongue studies) சார்ந்த ஆய்வுகளில் கவனம் செலுத்தி வருபவர். பாவாணரின்,

தமிழ்- இந்தோ ஐரோப்பிய உறவு ஆய்வினை இந்தோ- ஐரோப்பிய மொழியாய்விதழில் (The Journal Of Indo - European Studies) (1998) Some more possible Relationships Between Indo- European and Dravidian) கட்டுரை எழுதி ஏற்றுக் கொண்டவர்.

முனைவர் லெவிற்று, வரலாற்று மொழியியலாய்விற்குப் பாவாணரின் பங்களிப்பினையும் அவ்வாய்விற்குத் திராவிட மொழிகளின் இன்றியமையாமையையும் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்.(Chemmozhi volume 2 number 1 October-december2007) Dravidian and Indo European)

'நாஸ்திராதிக் ஆய்வுகளை 1960-1970களில் தொடங்கிப் பேரளவில் வளரச் செய்தவர்கள் (உருசியர்) விளாதிசுலாவ் இல்லிச்-சுவிதிச், இந்தியாவில் ஞா.தேவநேயன் ஆகியோராவர். பல்கலைக் கழக மொழியியல் துறைகளில் கோலோச்சியவர்கள் நாஸ்திராதிக் ஆய்வுகளைத் தீண்டத் தகாதனவாகக் கருதிய காலம் அது. இல்லிச் சுவிதிக், தேவநேயன் இருவரும் இத்துறையில் வழிகாட்டிய முன்னோடிகள். பல்வேறு மொழிக்குடும்பங்களை இணைத்து மொழிப்பெருங்குடும்பங்களாக வகைப்படுத்திச் செய்யும் ஆய்வுகளைப் பல்கலைக்கழக மொழியியலறிஞரும் ஏற்கும் காலம் இன்று உருவாகியுள்ளது. அத்தகைய ஆய்வுகளில் முதலிடம் பெற வேண்டிய திராவிட மொழிகளின் முக்கியத்துவம் இன்னும் உணரப்படவில்லை.'

இந்தோ- ஐரோப்பிய மொழிகட்கு மூலமாக தமிழ் இருக்கும் உண்மையை விளக்கும் இருபது தனிச்சொற்களையும் இரண்டு தொகுதிச் சொற்களையும் உள்ளடக்கிப் பாவாணரால் எழுதப்பட்டது 'தமிழின் தனித்தன்மையை நிலைநாட்டும் தலைமைத் தமிழ்ச் சொற்கள்' என்னும் நூலாகும். இந்த நூலினை அறிஞர் பி.இராமநாதன் 2004இல் : Nostratic the light from Tamil according to Devaneyan என்னும் பெயரில் மொழிபெயர்த்து நீண்ட முன்னுரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடாக வெளியிட்டார். பாவாணரின் இந்த நூலினையும் பாவாணர் ஆங்கிலத்திலேயே வெளியிட்ட The primary Classical Language of the World (1966) நூலினையும் பாவாணரின் பிற தமிழ் நூல்களையும் நன்கு கற்ற அறிஞர் லெவிற்று. இவர், தமிழ் - இந்தோ ஐரோப்பிய மொழி உறவு பற்றி நிறைய எழுதி வருகின்றார். சொற்பொருள் உறவுகளை. பாவாணரின் தமிழ், இந்தோ - ஐரோப்பிய மூலம் என்னும் கருதுகோளினை லெவிற்று ஏற்று வழிமொழிந்து வருகின்றார்.

திராவிடர் ஏற்றக்கொள்கை

உலகமொழிக் குடும்பங்களுள் இந்தோ ஐரோப்பியமே பெரிது. இக்குடும்ப மொழிகளை உலகமக்கள் தொகையில் 60 விழுக்காட்டினர் பேசுவதாகச் சேம்பர்சு அகராதி கூறும். சற்றொப்ப 350 கோடி மக்கள் இம்மொழிக் குடும்பம் சார்ந்தவர்கள் உலகில் உள்ளனர். இவ்வளவு பெரிய இந்தோ - ஐரோப்பிய மொழிபேசுவோர் 20-30 ஆயிரம் ஆண்டளவில் இந்தியா முழுவதும் பரவியிருந்த தொல் தமிழின் வழியில், இந்தியாவைத் தாண்டி வடமேற்காகச் சென்று பரவியவரே என்னும் பாவாணர் கருதுகோள் இன்று உலகத்தால் உற்றுப் பார்க்கப்படுவதற்குரிய கருத்தாயிருக்கிறது. மொழியாய்வுப் புலத்தில் நிகழ்ந்த ஆய்வுகள் மட்டுமல்லாமல் உலகில் வேறுவேறு புலங்களிலும் நிகழ்ந்த ஆய்வுகளின் ஒட்டுமொத்த முடிவுக் கருத்தாகவே இன்று இது கொள்ளப்படுகிறது.

1814இல் பிறந்த கால்டுவெல் 1856இல் தமது 42ஆம் அகவையில் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் அல்லது தென்னிந்திய மொழிக் குடும்பம் (*A Comparative Grammar of the Dravidian or South Indian family of Languages*) என்னும் உலகப்புகழ் பெற்ற நூலினை வெளியிட்டார். கால்டுவெல் காலத்தினும் பார்க்க இன்று மொழியியற் புலத்திலும் அது சார்ந்த பிற புலத்திலும் நிகழ்ந்துள்ள ஆய்வுகள், தமிழியல் ஆய்விற்கு மேலும் ஒளிதருவதாக அமைந்துள்ளன. கால்டுவெல் உட்பட உலக வரலாற்று அறிஞர்கள் பலரும் தமிழர்கள் வெளியிலிருந்து இந்தியம் புகுந்தவர்கள் என்னும் கருதுகோளினையே கொண்டிருந்தார்கள். அதாவது வடகிழக்கு ஈரான் பகுதியிலிருந்து திராவிட மொழி பேசுநர் இடம்பெயர்ந்து கி.மு. 3000ஐ ஒட்டி இந்தியா- தென்னிந்தியா - இலங்கை நோக்கி வந்து சேர்ந்தவர் என்று கருதினர். திராவிடர்கள் இறக்கக்(*The decent of the Dravidians*) கொள்கைக்கு மாற்றாகத் தற்போது, தமிழ்பேசுநர் கடல்கொண்ட தென்னாட்டினை உள்ளடக்கிய தமிழகத்தில் தென்னிந்தியப் பகுதியினின்று வடக்குநோக்கி நகர்ந்து பிறகு இந்தியம் தாண்டி வடமேற்காக ஐரோப்பாவரை பரவினர் என்னும் கருதுகோள் (*Dravidian Ascent from south*) தற்பொழுது நிறுவப்பட்டுள்ளது.

பத்திராஜு கிருஷ்ண மூர்த்தி திராவிட மொழிகள் (*The Dravidian Languages*2003) நூலில் 'திராவிட மொழி பேசுநர் இந்திய நாட்டில் தோன்றி வாழ்ந்தவர் என்றும் கி.மு. 1500ஐ ஒட்டி ஆரிய மொழி பேசுநர் இந்தியாவிற்குள் நுழையும் காலத்திற்கு முன்னரே இந்தியா முழுமையும் பரவியிருந்தனர் என்றும் கூறுவதே தற்போதைக்கு வலுவான கருத்தாகத் தோன்றுகின்றது என்பார்.

ஸ்டீவ்-ஜோன்ஸ், (1992) என்பார், மாந்த இனப் பரவல் (*The Cambridge Encyclopedia of Human population*) பற்றி, இன்றைய மாந்தஇனம் ஆத்திரேலியாவில் 50000 ஆண்டுகட்கு முன்னரே குடியேறிவிட்டது. ஆப்பிரிக்க மையக் கிழக்கு நாடுகளைத் தவிர உலகின் பிற பகுதிகளில் இன்றைய புதிய மாந்த இனம் முதன் முதலில் குடியேறியதற்கான சான்றுகள் ஆத்திரேலியாவில்தான் உள்ளன. புதிய மாந்த இனம், ஆப்பிரிக்காவிலிருந்து முதலில் வடக்கே வந்து நண்ணிலக் கரை நாடுகள், மையக் கிழக்கு நாடுகள் ஆகியவற்றுக்கு முதலில் பரவி, பின்னரே பிற இடங்களுக்குச் சென்றது என்ற கோட்பாடு இச்செய்தியுடன் முரணுவதால் அக்கோட்பாடு பற்றி மேலும் யோசிக்க வேண்டும் போலத் தோன்றுகின்றது என்றார்.

ஸ்டீவ் ஜோன்ஸின் ஐயத்தைத் தெளிவிக்கும் வகையில் காலின்மாசிகா (*Masica.Colin.p.2001. The year book of south Asian Languages and Linguistics. (presented at Dec1999 Tokyo seminar on south Asian Languages; contact, convergence and typology);New Delhi. Sage publications*) நூலில், தென்ஆசியாவில் கழிபழங்காலத்தில் ஒருபொதுவான மூதாதை மொழி இருந்திருக்க வேண்டும். தற்போதைய மாந்தஇனம் (ஏறத்தாழ 50000ஆண்டுகட்கு முன்னர்) உலகெங்கும் பரவத்தொடங்கிய காலக்கட்டமே தொல்திராவிடமொழிகளின் தொடக்க காலம் ஆகலாம் (*It may be a question of a very ancient common substratum in South Asia, pre- Dravidian going back even to the original peopling of the world*)என்று தன் நூலில் கூறியுள்ளார்.

தற்கால மாந்த இனம்(*AMH*)150000ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய ஆப்பிரிக்காவிலிருந்து 70000-50000 ஆண்டளவில் தென்னிந்தியாவிற்குள் வந்துவிட்டனர். ஆப்பிரிக்காவிலிருந்து புறப்பட்ட இத்தொல்மாந்தர் சில ஒலிகளைப் பயன்படுத்தும் நிலையிலேயே இருந்தனர் என்றும் அப்பொழுது அவர்கள் எழுப்பிய ஒலிகளை மொழிகளாகக் கொள்ளமுடியாதென்றும் மொழிதோன்றி 50-60 ஆயிரம் ஆண்டுகளே ஆகின்றன என்றும் அந்தமொழி தமிழின் முந்து மொழியாகிய தொல் தமிழாகவே இருக்கவேண்டும் என்றும் அந்த மொழிபேசுநரே தென்னிந்தியாவிலிருந்து ஆத்திரேலியாவிற்கு 40000 ஆண்டுகட்கு முன்னர்ப் புலம்பெயர்ந்தனர் என்றும் திராவிடர் ஏற்றக்கொள்கையின்படி திராவிடமொழி பேசுநர் தென்னிந்தியாவிலிருந்து வடநாடு சென்றனர் என்றும் பின்னர் அங்கிருந்து பாரசீகத்திற்கும் அதைத் தாண்டிப் பிற நிலப்பகுதிகளுக்குச் சென்றனர் என்றும் அந்த நிலப்பகுதிகளில் மூலதிராவிட

மொழிக்குடும்பத்திலிருந்து பிரிந்து உராலிக், அல்தாயிக், இந்தோ-ஐரோப்பியம் ஆகிய மொழிக்குடும்பங்கள் உருவாயின என்றும் ஸ்டீபன் ஹில்யர் லெவிற்று IJDL சூன் 2007 இல் கட்டுரையொன்றில் எழுதினார்.

இக்கோட்பாடு இன்றைய நிலையில் பெரும் வலிவு பெற்றுள்ளதை இக்கட்டுரை இறுதியல் உள்ள சிரில் அய்தன் (2009) நூல், nature 3rd May2012 இதழ் இவற்றிலுள்ள மாந்த இனப் பரவல் படங்களில் காணலாம்.

கால்டுவெல் பற்றிப் பாவாணர்

கால்டுவெல், பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள் என்ற மூவரையும் பாவாணர் தனது ஆசானாக வழிகாட்டியாகக் கூறியுள்ளார். ஆயினும், பாவாணரின் ஆய்வுப் பாதை பெரிதும் கால்டுவெல் ஆய்வினை ஒட்டியே விரிந்து பரந்து இயங்கியுள்ளது. 'தமிழ், திராவிடத்தாயும் ஆரிய மூலமும் உலக முதன்மொழியும் ஆகும்' என்பது பாவாணரின் ஆய்வு முடிபு. இம் முடிபினைப் பாவாணர் எட்டுவதற்குக் கால்டுவெல்தான் பெருந்துணை புரிந்துள்ளார். இதனைப் பாவாணர் எடுத்து மொழிகின்றார்.

'கால்டுவெல் கண்காணியார் தமிழை அல்லது திரவிடரை வடக்கினின்று வந்தவராகக் கருதியிருந்தும், தம் நுண்மாண் நுழை புலத்தினால் தென்மொழியின் தொன்முது முதன்மையைக் கண்டு பின்வருமாறு தம் திரவிட ஒப்பியல் இலக்கணத்திற் கூறியுள்ளார்.

திராவிடமொழிக் குடும்பத்தை, இந்தோ-ஐரோப்பிய மொழித் தொகுதிக்கும் சித்திய மொழித்தொகுதிக்கும் இடைப்பட்ட இணைப்பாக மட்டுமன்றிச் சிலவகைகளில், சிறப்பாகப் பகரப்(பதிற்) பெயர் பற்றிய வகையில் மாந்தன் மொழிவரலாற்றில் இந்தோ-ஐரோப்பிய நிலைக்கு முற்பட்டதும் சித்திய நிலைக்கு முற்பட்டதுமான, ஒரு காலத்தின் நிலைமையைக் காட்டும் சான்றுகளால் இறவாது எஞ்சி நிற்பனவற்றுள் தலை சிறந்ததாகக் கருத இடமில்லையா? (சென்னைப் பதிப்பு.முகவுரைபக்.10)

சில திரவிடச் சொல் வடிவங்களும் வேர்களும் மக்களினத்தின் முதற்பெற்றோர் மொழியினின்று வழிவழிவந்து முந்து திரவிடருக்கு மொழியியலுரிமையாகச் சேர்ந்துள்ளவற்றுள் ஒரு பகுதியாய் இருக்கக் கூடாதாவென்பது மற்றொரு வினா? (மேற்படி.பக்.17)

திராவிடமொழிக்குடும்பம் சமற்கிருதத்திற்கு முற்பட்ட சில முது பழங்கூறுகளைப் போற்றி வைத்திருக்கின்றதென்றும் சிறப்பாக

அதன் சுட்டுச்சொற்கட்கும் இந்தோ- ஐரோப்பிக் குடும்பத்தைச் சேர்ந்த வேறுபட்ட பிறமொழிச் சுட்டுச்சொற்கட்கும் மூலமான அந்தப் பழைய யாப்பெத்தியச் சுட்டடிகளை நிகர்த்து நிற்கின்றனவென்றும் யான் முன்னமே ஒரு கருதுகோளினை வெளியிட்டிருக்கிறேன். (மேற்படி. பக்.422)

பின்வரும் சொல்வரிசைகள், நாம் இலக்கண வொப்பிட்டினால் வந்த முடிபிற்கே, தனிப்பட்ட முறையில் தமக்குரிய அளவில் சான்றுபகர்கின்றன. அம்முடிபாவது, திரவிடமொழிகள் சமற்கிருத்திற்கு முற்பட்டதும் இந்தோ- ஐரோப்பிய மொழிக் குடும்பத்திற்குத் தாயாகக் கருதப்படுவதுமான அந்த இறந்துபட்ட மொழியோடு கொண்டுள்ள தொன்மையான மிக நெருங்கிய தொடர்புக் குறிகளைக் காட்டுகின்றன என்பது (மேற்படி. பக்.565)

கால்டுவெல்லார் கருத்துடன் சிலமாறுபாடுகள்

பாவாணர், கால்டுவெல்லார் உரைத்த ஆய்வு முடிபுகள் சிலவற்றில் முரண்பட்டுள்ளார். அவ்விடங்களைப் பாவாணர், தம் ஆய்வின்கண் சுட்டியுள்ளார். அவற்றுள் ஓர் இடம் -

'கால்டுவெல் கண்காணியார், தமிழ் வடமொழித் துணை வேண்டாத தனிமொழி யென்றறிந்தும், தமிழர் உயர்நிலைக் கலைகளை ஆரியரிடத்தினின்று கற்றதாகத் தவற்றெண்ணங் கொண்டமையால், தமிழில் மனம், ஆன்மா என்பவற்றைக் குறிக்கும் சொல்லில்லையென்றும் திரவிடம், சேரன், சோழன், பாண்டியன் என்னும் பெயர்கள் வடசொற்கள் என்றும் இன்ன என்னும் வடிவிற்கொத்த அகரச் சுட்டடிச்சொல் தமிழில் இல்லையென்றும் பிறவாறும் பிழைபடக் கூறினார். (ஒப்பியன் மொழிநூல்.ப.1.பக்.115)

'கனமிகு கால்டுவெல் கண்காணியார் காய்தல், உவத்தல் அகற்றி ஒரு பொருளை ஆயும் பெருந்தகையரேனும், திராவிடமொழிநூலை தோற்றுவிக்க இறைவனாலேயே அழைக்கப் பெற்றவரேனும், எதிர்காலத் திரவிட மொழிநூல் ஆராய்ச்சியாளர்க்கெல்லாம் இன்றியமையாத வழிகாட்டியரேனும், கண்டறற்கரிய வேர்ச்சொற்களைக் கண்டறிந்த நுண்மாண் நுழைபுலத்தரேனும், தம் அயன்மை காரணமாகவே சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர் குடிப்பெயர்களையும் முத்தமிழ் நாட்டு மக்கட்பெயர்களென்றும் வடசொற்களென்றும் பிறழக் கொண்டார். (பேராசிரியர் டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர். கட்டுரை.'ககர சகரப் பரிமாற்றம்' பக்.341)

பாவாணர்க்கு உள்மன ஊக்கமளித்தவர் கால்டுவெல்

கால்டுவெல் காட்டிய தடத்தில் பாவாணர், தமிழ் - இந்தோ ஐரோப்பிய உறவினைப் பற்றிமட்டுமே அதிகமாக ஆய்வு செய்தவர். இவ்விருமொழிக் குடும்ப உறவினைக் கால்டுவெல்லாரினும் பார்க்க அதிகமாக விரிவாக ஆய்வுசெய்து மொழியாய்வுலகிற்குப் பெரும் பங்களிப்பினைப் பாவாணர் செய்துள்ளார். ஆயினும், கால்டுவெல்லார் தம் 42 அகவையில் 1856இல் வெளியிட்ட நூல் இல்லையென்றால் பாவாணர்க்கோ அவரின் வழிவந்தோர்க்கோ இப்படியொரு தடம் எளிதில் கிடைத்திருக்குமா என்பது ஐயமே. இந்த உண்மையைப் பாவாணர் உணர்ந்திருந்தார். அதனால்தான், 'கால்டுவெல்லாரைத் திராவிடமொழி நூலைத் தோற்றுவிக்க இறைவனாலேயே அழைக்கப்பெற்றவர்' என்று புகழ்ந்தார்.

பாவாணர்க்கென்று ஓர் தனித்த நுண்மாண்நுழைபுலம் இருந்தது. 'சான்றோர் சான்றோர் பால ராப' என்ற புறநானூற்றுப்படிப் பாவாணர் கால்டுவெல்லாரை இறுகப் பற்றிக் கொண்டார். ஆய்வுத் துறை ஒவ்வொன்றும் ஓர் தொடரோட்டம் அனையது. முன்னோர் நிறுத்திய இடத்தில் பின்னோர் தொடர்வர். கால்டுவெல் இல்லையேல் பாவாணர் இவ்வளவு தெம்பினராய் விரைந்திருக்க மாட்டார் என்பது உண்மையே. பாவாணர்க்கும் கால்டுவெல்லிற்கும் பின்வந்த ஞானப்பிரகாசரும்பெருந்துணையாய்வழிகாட்டியாய்இருந்திருக்கிறார். மாகறல் கார்த்திகேயனாரின் மொழிநூலும் பாவாணர்க்கு முந்திவந்த முதல் நூலே. இவையாவும் பாவாணரை உயர்த்தின என்பது உண்மையென்றாலும் பாவாணரைப் போலப் பிறர் எவரும் இவர்கள் வழியில் உயரவில்லை என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

கால்டுவெல், ஞானப்பிரகாசர், மாகறல் கார்த்திகேயனார் ஆய்வுகளைப் பாவாணர் ஏற்றுக்கொண்ட அளவிற்கு அவர்களை அடையாளப்படுத்தத் தவறிவிட்டார் என்பதும் மொழிநூல் அறிஞர்களிடையே ஒரு கருத்தாக இருந்து வருகிறது.

கால்டுவெல் தடத்தை மூவகையில் விரித்த பாவாணர்

தமிழ் - இந்தோ - ஐரோப்பிய உறவுகளைப் பாவாணர் காட்டிய தடத்தில் அவருக்குப் பின்வந்தோர் மேலும் விரித்து விளக்கியுள்ளனர். எனவே, பாவாணர் கண்ட ஆய்வுகள் மேலும் பல படிநிலைகளைக் கடந்து இன்று வளர்ந்து வருகிறது. இவ்வாறே கால்டுவெல் காட்டிய தமிழ் - இந்தோ - ஐரோப்பிய உறவுத் தடத்தினைப் பாவாணர் கால்டுவெல்லாரினும் மிக விரித்து வளர்த்தெடுத்துள்ளார். ஓர் ஆய்வு சரியான தடத்தினதென்பதற்கு

அது மேன்மேலும் வளர்ந்து செல்வதிலிருந்து அறியலாம். தக்க தடமே விரியும் பொக்குத்தடம் முடங்கி மடியும்.

கால்டுவெல் தமிழகம் வருவதன் முன்னமே இங்கிலாந்தில் இலத்தீன், கிரேக்கம் முதலிய மேலை இந்தோ ஐரோப்பிய மொழிகளை மொழிநூல் பேரறிஞர்களிடம் பயின்று வந்தவர். அவரின், கூர்த்த மதிநுட்பம் மொழியாய்வு உலகத்தினையே வழிநடத்தும் பெருஞ்சிறப்பிற்றாய் ஒளிவிட்டு இலங்குவதாய் இருந்தது. ஆதலின், கழிஇளமைப் பருவத்தில் தாய்மொழியாகவோ பழக்கமொழியாகவோ இல்லாத தமிழை வந்துசேர்ந்த நாட்டின் புதுமொழியை அவரால் ஊன்றிக் கற்க முடிந்தது. அதுமட்டுமல்லாமல் தாய்மொழிவாணரினும் வந்துகலந்த நாட்டவரின் தாய்மொழியாம் தமிழின் நுட்பத்தை அறிந்து உணர்ந்து உலகிற்கு உணர்த்தும் பெற்றியராகவும் அவரால் திகழ முடிந்தது. வியந்து மகிழ நெகிழ வேண்டிய கால்டுவெல்லின் இந்நுண்மாண் மொழிபுலத்திறத்தினைத் தமிழுலகம் இன்னும் முழுதாய்க் கண்டு பாராட்டவில்லை. கால்டுவெல்லின் சொல்லாய்வுப் பேரறிவுத்திறத்தினை பாவாணர் மூன்று வகைகளில் பயன்படுத்திக்கொண்டார்.

1. கால்டுவெல் இணைத்துக்காட்டிய தமிழ் - இந்தோ ஐரோப்பிய சொல் உறவை மேலும் விரித்துக் காட்டியதுடன், அங்கு அடிப்படையாய் அமைந்த தமிழ்ச்சொல்லுக்கு முழுமையான மூலவேரினை நுணுகிக்கண்டு நிலைநிறுத்துவது.
2. கால்டுவெல் வழியில் தமிழ் இந்தோ - ஐரோப்பிய உறவுத்தடங்களைப் புதிது புதிதாகக் காட்டுவது.
3. வடசொல் எனக் கால்டுவெல் கூறிய சொற்கட்குத் தமிழ் மூலம் காட்டுவது.

இங்கு உரைத்த மூவகைகட்கும் ஓரிரு எடுத்துக்காட்டுகள் தருதல் போதுமானதாகும்.

1. கால்டுவெல் காட்டிய உறவினை மேலும் விரிப்பது

(அ) 'கண்' என்னும் உடலுறுப்புச் சொல், கள்-கண் என அதன் கருமை நிறம் கருதிப் பிறந்த தமிழ்ச்சொல் என்பார் பாவாணர். இந்த உறுப்புக்கண்தான் 'காண்' என்ற வினைக்கும் மூலமாகும்.

கண்-காண்-சொல், கீழை மேலை இந்தோ ஐரோப்பிய மொழிகளில் திரிந்து பரவிய உண்மையைக் கால்டுவெல் தம் ஆய்வு நூலில் தொட்டுத் துலக்கியுள்ளார். கால்டுவெல்லின் இக்கண்டுபிடிப்பினைப் பாவாணர் பின்வருமாறு பாராட்டுகின்றார்.

'கால்டுவெல்லார் தொல்காப்பியமும் பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளும் தமிழர்க்கும் தெரியாது மறைந்து கிடந்த காலத்தில் வழிகாட்டியுமின்றி தன்னந்தனிமையாய் ஆராய்ந்தபோதும் தமிழின் தொன்மை முன்மைகளையும் மூலத்தன்மையையும் உணர்ந்து தம் திரவிட ஒப்பிலக்கண நூலினிறுதியில், சொல்லியல் உறவுகள் என்னும் பகுதியில் கீழ்வருமாறு வரைந்துள்ளார்.

kaṇ, the eye ; kāṇ (in the preterite kaṇḍu), to see ; also secondarily, to mark, to consider, to think. In the latter sense it comes kaṇṇu in Tamil, but the base unchanged... comp. the Welsh ceniaw, to see ; English ken, view, power of reach of vision, to ken, to know by sight.

Possibly the Dravidian kāṇ, to see, kaṇṇu, to consider, may have some ulterior connection with the Gothic kunn - an, to know : Greek gnō - nai : sans. nā : Latin gna (gnarus) ; Old High German chann. The different shades of meaning which are attributed to Greek to gnō - na and eide - nai ; Seem to corroborate this supposition for the latter is represented as meaning to know by reflection, to know absolutely, whereas the former means to perceive, to mark, and may therefore have an ulterior connection with the Dravidian root'
-(Caldwell.1857. p. 593)

கண்-காண் சொல்லினை இந்தோ - ஐரோப்பிய மொழிகளுடன் இணைத்துக்காட்டிய கால்டுவெல் விளக்கத்திற்கு அப்பால், பாவாணர் கூடுதல் விளக்கத்தைத் தம் தலைமைத்தமிழ் நூலில் தருகின்றார். ஞானம் என்னும் வடசொல், தமிழின் கண்-காண் வழி உருவானதைக் கால்டுவெல்லே காட்டியிருக்கிறார். இந்தச் சமற்கிருத 'ஞானம்' பற்றிப் பாவாணர் நகைச்சுவையாய் பின்வருமாறு பேசுகிறார். 'காணம் அல்லது காட்சி என்னும் மூலச்சொல் சிறவாது, ஞானமென்னும் அதன் திரிசொல்லே சிறந்து தோன்றுவது உண்மையான ஒளிக்கல்லினும் போலிக்கல்லேபொலிந்து தோன்றுவதுபோலும்! எனினும், சமற்கிருதத்திற்கு ஞானத்தைத் தந்தது தமிழே என்னும் புகழ் நிலைத்து நிற்கும்'

சமற்கிருதத்தில் தமிழில் கண்-காண் வழிப் பிறந்த சொற்களை முன்னொட்டுப் பெறாதவை, முன்னொட்டுப்பெற்றவை என இருவகையில் பிரித்து அச்சொல் தொகுதியைப் பாவாணர் தம் ஆய்வில் காட்டியுள்ளார்.

முன்னொட்டுப் பெறாதவை

ஜ்ஞாத்வ, ஜ்ஞாப்தி, ஜ்ஞாதி, ஜ்ஞாத்ரு, ஜ்ஞாதேய, ஞாத்ர, ஜ்ஞாந, ஜ்ஞாநி, ஜ்ஞாபக, ஜ்ஞேய முதலியன.

முன்னொட்டுப் பெற்றவை

அஜ்ஞா, அஜ்ஞாதி, அஜ்ஞாத, அஜ்ஞாநி, அஜ்ஞேய, அநுஜ்ஞப்தி, அனுஜ்ஞா, அநுஜ்ஞர்பக, அநுஜ்ஞாபன, ஆஜ்ஞா, ஆஜ்ஞாப்தி, ஆஜ்ஞாத்ரு, ஆஜ்ஞாபந, ப்ரஜ்ஞா, ப்ரஜ்ஞ, ப்ரஜ்ஞாத்ரு, ப்ரஜ்ஞாந, ப்ரஜ்ஞாபந, ப்ரதிஜ்ஞா, ப்ரதிஜ்ஞாந, ப்ரதிஜ்ஞேய, விஜ்ஞா, விஜ்ஞாந, விஜ்ஞாநி, விஜ்ஞாபக, விஜ்ஞாபந, விஜ்ஞாப்தி, விஜ்ஞேய, ஸம்ஜ்ஞா, ஸம்ஜ்ஞர்பந, ஸம்ஜ்ஞாந, ஸம்ஜ்ஞாநி முதலியன.

"கண்' ,"ஞான்' ஆனது : பாவாணர் :

"காணுதல் என்னும் சொல், தமிழில் புறக்கண்ணாற் காணுதலையும் அகக்கண்ணாற் காணுதலையும் குறிக்கும். முன்னது பார்த்தல்; பின்னது அறிதல். தியூத்தானிய மொழிகளில் காண் என்பதன் திரி சொற்களெல்லாம் பின்னதையே உணர்த்துகின்றன.'

'காண் என்னும் சொல் ஆங்கிலத்திலும் அதன் இனமொழிகளிலும் கன் (cun), கான் (con), கென் (ken), கெஅன் (can)என்று திரிந்துள்ளது. கீன் (keen) என்று திரிந்துள்ளதாகவும் கிற்று கூற்றினின்று தெரிகின்றது" (தலைமைத் தமிழ். ப.44)

முதற்கண், "கான்' (con, kon) என்னும் தியூத்தானியச் சொல், முதலெழுத்துயிர் முன்பின்னாக முறைமாறி "க்னா' (cna, kna) என்றும் "க்னோ' என்றும் திரிந்தது.

AS. cnāwan, Ice. knā, ON. kna, M.E. knowen, E. know, OHG. chnaan, chahan.

ககரம் சில மொழிகளில் 'ga' என்னும் எடுப்பொலியாக (voiced sound) மாறுகின்றது.

L. gna : gnarus. knowing, having knowledge of, acquainted with ; OIrish gnāth, known, accustomed, w. gnowd, accustom.

கிரேக்கத்தில் இவ்வெடுப்பொலிக் ககரம் (ga) இரட்டிக்கிறது. GK. gignnōskō. சமற்கிருத்தில் எடுப்பொலிக் ககரம் (ga) ஜகரமாகத் திரிகிறது. Skt.jnā (ஜ்ஞா). g-j. ந - ஞ போலித்திரிபு. வ. ஜ்ஞான. இந். ஜ்ஞான். ஜகரம் சில மொழிகளில் ஸகர எடுப்பொலியாக (za) மெலிந்து விடுகிறது.

Russ. Znatae to know : Pers. far - zān- knowledge.

இவ்வெல்லாத் திரிபுகட்கும் மூலவேர் *GEN* (கென்) எனக் குறிக்கின்றார் கிற்று -(தலை. தமி. ப. 45)

(ஆ) திருப்பு - turn

திரும்பு, திருப்பு என்னும் தமிழ் வழக்கும் *trippu* என்னும் தெலுங்கு வழக்கும் கிரேக்க மொழியில் *trep-o* என திரும்புதல் பொருளில் சென்று மாறியதையும் *tarku* என சமற்கிருதத்தில் இராட்டையைக் குறிக்கும் சொல்லும் *turn* என ஆங்கிலத்தில் திரும்புதலைக் குறிக்கும் சொல்லும் ஒன்றோடொன்றாக உறவுபட்டிருப்பதைக் கால்டுவெல் சுருக்கமாக எடுத்தியம்பினார். பாவாணர், இக்கருத்தினை மனங்கொண்டு 'திரும்பு' என்னும் தமிழ் வடிவம் இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் சென்று திரிந்த வரலாற்றை விரிவாக விளக்கியுள்ளார். ஆயினும், அவ்விடத்தில் கால்டுவெல் காட்டிய திரும்பு-திருப்பு- *trep-o- tarku- turn* இணைப்புகளைப் பாவாணர் முதற்சான்றாக எடுத்துரைக்கவில்லை. கால்டுவெல் ஆய்வு குன்றின்மேலிட்ட விளக்காக ஒளிர்வதால் அவர் உரைத்தவற்றை அனைவரும் அறிவர் என்னும் வகையில் பாவாணர் எடுத்துரைக்காமல் விட்டிருக்கலாம்.

'திருப்பு - திருப்பம் = திரும்புகை, திசை மாறுகை, நிலைமை மாறுகை.

திருப்பு - திருப்பி = புரட்டி, முறுக்காணித் திருப்பி.

திரும்-E. turn, move round from center or axis, change from one side to another, take new direction, more to other side of, cause to go, change in nature, translate.

OE. tyrnan, turnian. OF. turner, torner. f.L. tornare f. GK. tornos.

E.attorney, n.ME. f. OF. atorne p.p. of atorner (a) to, torner turn.

E. return, ME. returner, returner f. Rom. re (tornare, turn).

ம்ன், போலி. ஒ.நோ. :கடம்- கடன். இரும். (இரும்பு) - iron.

E.tornado, n. violent storm of small extent with whirling winds Sp. tornada, thunder, storm, tornar, to turn.

E.tourney, ME. f. OF. tornei, torneier f. Rom. tonidiare f. L. tornus, a turn.

E. tournament, ME. f. OF. torneiement, torneier, tourney.

E.tourniquet, n. bandage etc. for stopping flow of blood through

artery by compression effected with sarew of twisted bar. (?).

திருப்பு - திருப்பி - *E. trope, n. figurative use of a word. L.F. GK. tropos. turn, way, trope, trepo. turn.*

E.trophy, 1. arms etc. of vanquished enemy set up on field of battle or elsewhere to commemorate victory. F. trophee f. L. trop(h)aeum f. GK. tropaion (trope, root f. trepo, turn).

வெற்றியரசன் தோற்ற அரசனைப் போர்க்களத்திலின்று திருப்பியடித்தல் அல்லது துரத்துதல் என்னும் அடிப்படைக் கருத்துக் கொண்டதே *trophy* என்னுஞ்சொல். இதே கருத்தை விளையாட்டுப் போருக்கும் ஏற்றிக் கூறுவனவே *tourney, tournament* என்னுஞ்சொற்களும் என அறிக.

E.Trophy. 2. Thing made or kept or awarded as memorial of victory in tournament.

E.trope, n. 'Parallel of latitude 23o 27l north (Tropic of Cancer) or south (Tropic of Capricorn) of the equator (the Tropics, region between these); each of the two corresponding circles on celestial sphere where sun appears to turn after reaching greatest destination' ME.f.L.GK. tropikos (trope, turning f. trepo, turn)

E. tropical, a. OF. peculiar to suggestive of the tropics.

E.tropism, (Biol.) Turning of (part of) Organism in particular direction in response to external stimulus. (f. second element of heliotrorpism).

E. heliotrope, n. Herb or shrub of genus Heliotropium eith fragrant ourple flowers; f.L.f.GK. heliotropion, plant turning flowers to the sun; helios, sun, tropos f. trepo, turn.

ஒ நோ. : ஞாயிறு திரும்பி = சூரியகாந்தி.

E. tropology, n. Figurative use of words; figurative interpretation esp. of the Scriptures; f. LL: f. GK. tropologia, tropos f. trepo. turn. logy. suffix forming nouns denoting scinces.

அணியியலில், சொற்களின் பொருள்கள் பல்வேறு வகையில் திரிக்கவும் திருப்பவும் படுதல் காண்க.

E. tropopause. n: Interface between troposphere and stratosphere.

E. troposphere, n. Layer of atmospheric air extending about seven miles upwards from earth's surface, in which temperature falls with increasing height. GK. tropos, turning + sphere.

E.strophanthin n. White crystalline poisonous glucoside extracted from various species of the genus Strophanthus tropical plants and used as a heart - tonic; f. Mod. L strophanthus f. GK. strophes, twisted cord + anthos, flower.

E.strophe, n. (Lines recited during) turn made in dancing by ancient Greek chorus; GK. strophe. lit turning, strepho. turn.

E. antistrophe, f.GK. antistropho, turn against.

E.apostrophe, n.f. GK. apo, away from. strepho, to turn away.

E.catastrophe, n. Sudden or widespread or noteworthy disaster; even subverting system of things; disastrous end; ruin; denouement of drama; f.L. catastrophe f. GK. cata, down. strophe, turning, strepho, turn.

tort (twist), tortus (crooked), tortum (wrong), tortor (twister) முதலிய இலத்தீனச் சொற்களும், இலத்தீனத்தினின்று கொண்ட கடன் சொல்லாகக் கூறப்படும் *tort* என்னும் ஆங்கிலச் சொல்லும், அதினின்று திரிந்த *tortion, tortuous, torture, tortrix* முதலிய தனிச்சொற்களும், *torticollis* என்னும் கூட்டுச் சொல்லும், *contort, distort, extort, retort* முதலிய முன்னொட்டுப் பெற்ற திரிசொற்களும், திரித்தல் அல்லது திருகற்பொருளையே அடிப்படையாகக் கொண்டுள்ளமையின், திரி என்னும் வேர்ச்சொல்லினின்று திரிந்தனவாகக் கொள்ளத் தக்கனவே.' (தலை.த.ப.176-177)

பாவாணர், தம் நெடிய வாழ்நாளில் தமிழையும் இந்தோ - ஐரோப்பிய மொழிகளையும் மிக நெருக்கமாக வைத்து ஆய்வுசெய்தவர். அதன் விளைவாகத் தமிழ், திரவிடத்தாயும் ஆரிய மூலமும் என்னும் கருத்தினை ஆய்வு முடிவாக வெளியிட்டவர். மேலை மொழிநூல் அறிஞர்கள் மெத்தப்படித்த மேதைகள் என்றாலும் தங்கள் மொழியின் மூலம் காண முடியாமல் குன்றுமுட்டிய குரீஇப்போல் இடர்ப்படுகிறார்கள். தங்கள் மொழிக்கான திறவுகோல் தமிழில்தான் உள்ளது என்று பெருமிதத்துடன் மொழிந்தவர். ஒரு சொல்லின் வேரினையும் வேர்ப்பொருளையும் மிகநெருங்கிக் கண்டவர்.'மக்களைப்

போன்றே சொற்களும் குடும்பம் குடும்பமாகவும் குலம் குலமாகவும் இனம் இனமாகவும் கொடிவழி முறையில் இயங்குகின்றன' என்று தெரிவுற மொழிந்தவர். உலக மொழிகள் மூவாயிரத்துள்ளும் வேர்ச்சொல் காண்பதற்கு எளிதாகவும் மிகுதியாகவும் இடம்தரும் மொழி, தமிழ் ஒன்றே! இங்ஙனம் கூறும் நிலை வேறு எம்மொழிக்கும் இல்லை என்றும் நுனித்தறிந்து உரைத்தவர். உழவில், 'கரும்பிற்குக் கலசால்' என்பது பழமொழி. ஒரு நிலத்தை பன்னிரெண்டு முறை உழுவது கடினமில்லை. முதல் சாலினையும் இரண்டாம் சாலினையும் உழுவதே கடினமானதாகும். கி.மு. இரண்டாயிரம் அளவில் ஆரியர் இந்தியா வந்தனர். அவர்கள் மொழியில் இந்தியாவின் மூலெலிமொழியான தமிழ்ச்சொற்கள் சேர்ந்திருப்பது இயல்பானதே. ஆயின், மேலை இந்தோ - ஐரோப்பிய மொழிகட்குத் தமிழை மூலமாக வைத்து ஆய்வுசெய்த திறம் கால்டுவெல் பெருமகனாருக்கு முன், ஆய்வுலகில் எவருமில்லை.

2. தமிழ் இந்தோ - ஐரோப்பிய உறவுத்தடங்களைப் புதிதாகக் காட்டுவது.

நாட்டியம் குறிக்கும் சமற்கிருதச் சொல் ந்ருத் என்பது. ந்ருத்திய என்னும் வடிவோடு ஒட்டிய பல சொற்கள் சமற்கிருதத்தில் வழங்குகின்றன. இந் ந்ருத் சொல், நட, நாடக என்னும் தமிழ் வடிவிலிருந்து வந்திருக்கலாம் என்று கால்டுவெல் உரைத்தார். *nat-nrit* என்பது அவரின் வருவிப்பு. நட- நடம் என்னும் தமிழோடு ஒட்டிய அதே பொருள்தரும் பிறிதொரு தமிழ்ச்சொல் 'நட்டம்' என்பது. 'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்' என்பது திருவாசகம். பாவாணர், கால்டுவெல் வழியில் மேலும் விளக்கமாகத் தமிழின் நட்ட- ந்ருத்த எனத் திரிந்தது என்று கூறினார். இது மட்டுமில்லாமல் வட்டம் என்னும் தமிழே வட்ட- வ்ருத்த என வடமொழியில் திரிந்தது என்றும் கூறினார். பாவாணர் இதற்கு ஒப்பு நோக்காக நட்ட- ந்ருத்தவினை இயைபு படுத்தினார்.

தமிழின் வட்ட- வ்ருத்த திரிபினை *vert* என மேலை இந்தோ ஐரோப்பியத்திற்கும் பாவாணர் கொண்டு சென்றார். ஆயின் இவ்விடத்தில் கால்டுவெல்லின் தொடக்க முயற்சியைப் பாவாணர் சுட்டவில்லை.

பாவாணர் காட்டிய வட்ட- வ்ருத்த *vert* உறவினை மேலும் விரித்து *vert -vertex ; vert - vort; vert -verse ; verse- vorse; vert-worth; vert- verse-fers* என்னும் வகையில் தனிச்சொற்களையும் முன்னொட்டுக்கள் சேர்ந்த நிலையில் *divert, diverse, converse, wellverse, universe* என உருவான சொற்களையும் எல்லாம் இக்கட்டுரையாளர் விரித்து எழுதியுள்ளார்.

'வடமொழி வரலாறு'என்னும் நூல் பாவாணர் வரைந்த நூல்களில் தனிச்சிறப்பினது. உலகம் முழுவதும் உள்ள மொழிநூலறிஞர்கள் நாளும் நாளும் ஒதித் தெளிதற்குரிய ஆழம் சான்றது. அந்நூலில் வடசொற்களெனக் கருதப்பட்ட பல சொற்களை அவை தமிழென நிறுவுவார். அவ்வாறு விளக்கப்பட்ட சொற்றொகுதிகளில் முன்னமே கால்டுவெல் விளக்கியவை பலவுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல் தான் கண்ட சொற்களையும் கிட்டல், குண்டர்ட் கண்ட சொற்களையும் பெயர் சுட்டிப் பட்டியல் இட்டுள்ளார். அவற்றுள் சில வருமாறு : -

அக்கை - அக்கா ; அடவி- அடவீ ; அட்டம் - அட்டம்(boiled rice) ; அம்மா - அம்பா; அடை-அட்(to attain) ; அரு-அர்க்கு(value) ஆணி-ஆணி; ஆம்-ஆம்; இரா - ரா-ராத்திரி; இஞ்சிவேர் சுருங்கவேரா ; உறு -உர் (to ride. to go) உருவம்-ரூப; ஏழகம் - ஏட; கழுதை - கர்த்த; கடுகு- கடுக; கலை-கலா; காவிரி- காவேரி; குடி-குடி; குயில் -கோகிலா; குரை-குர் குர (நாய்) கோட்டை - கோட்ட; சின்ன - கின்ன; செம்பு - செம்பக; நாலா-நானா; நீரம்- நீர்; பழம் - பல; பட்டணம் - பட்டன; பகு -பஜ்; பாகம்- பாக; பிடகம்- பீடகா; பெட்டி -பெட்டா; மரம்- மர்க்கடம் (குரங்கு) மருந்து - மருத்த; மீனம் - மீன; வாலுகம்- வாலுக; வளையம் -வலய; வலத்தல் -வல(சூழ்தல்) ; சவம்-சவ; சாயை- சாய.

தக்க ஆசிரியனிடத்தில் பயிற்சி பெற்ற நன்மாணாக்கன், 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை'என்னும் குறள்மொழிக்கு ஏற்ப பேரறிஞனாகப் பிறங்குவது இயலும் ஒன்றே.

கால்டுவெல் உலகமொழிக் குடும்பங்கள் பலவற்றையும் தமிழிலிருந்து உறவுபடுத்தி ஆய்ந்த மொழிநூல் பேரறிஞர். இந்தியாவில் சிந்துவெளி அகழ்வாய்வு 1920-35களில் நிகழ்ந்தது. இத்தொல்நாகரிகம், தமிழ் நாகரிகமெனவும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்நாகரிகம் இலங்கைவரை தெற்கே பரவியிருந்தது. திருத்தந்தை ஈராசு பாதிரியார் சிந்துவெளி நாகரிகத்தையும் நைல் நதிக்கரை நாகரிகத்தையும் இணைத்துச் சிந்துவெளி நாகரிகத்தின் முதன்மையை நிறுவினார். கால்டுவெல் காலத்தில் இத்தகைய அகழ்வாய்வு முடிவுகள் வெளிவரவில்லை.

தமிழரின் தொன்மையை நிறுவுவதற்கு மிகப்பெரிய வரலாற்றுத் தடயங்கள் இல்லாத காலத்தில் தமிழ்மொழி, மாந்தன் பேசிய முதல்மொழிக்கு நெருக்கமானதாக இருக்கலாம் என்னும்

கால்டுவெல்லின் கருத்துரை கால்டுவெல்லின் மொழியாய்வுப் பேரறிவினை மட்டுமல்லாமல் அவரின் உள்மன அறிவையும் காட்டுவதாய் உள்ளது. பாவாணர் தம்காலத்துத் தரவுகள் பலவற்றையும் துருவித்துருவி ஆய்ந்து ஆயிரக்கணக்கான இந்தோ -ஐரோப்பிய சொற்கட்குத் தமிழ், மூலமாக இருப்பதனை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஐம்பது நூல்களில் ஆய்ந்து எழுதினார். இக்கட்டுரையின் முதற்பகுதிகளில் ஆத்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகளே உலகின் மூத்தமொழி என்றும் அம்மொழிகள் தொல்தமிழோடு உறவுடையவை என்றும் மேலை அறிஞர்கள் இன்று கண்டதை எடுத்துக்காட்டினோம். காலின் மாசிகா, உலகின் மிகுதொல் மாந்தர் இந்தியாவின் தென்னகத்தில்ஐம்பது - அறுபதாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்திருக்கவேண்டும் எனவும் அவர்களில் ஒருபிரிவினரே இன்றைய நிலையிலும் பார்க்க முன்னூறு அடி கடல் மட்டம் தாழ்ந்திருந்த அக்காலத்தில் ஆத்திரேலியாவிற்குச் சென்று சேர்ந்தனரென்றும் வரலாற்றில் துலக்கமாகச் சொல்லப்பட்ட கருத்துகளைப் பாவாணர்மறைந்த 1981 சனவரிக்குப் பின்னர்தான் *Human Paleontology Human Genetics Nostratic and Mother Tongue Studies*ஆகிய புலங்கள் சார் அறிஞர்கள்நிறுவியுள்ளனர்.

கால்டுவெல்லார் காலத்தினும் கூடுதலாகப் பாவாணருக்கு தரவுகள் கிடைத்த காரணத்திற்கு அப்பால் கால்டுவெல்லாரைப் பற்றிப் பாவாணர் கூறியதுபோல், மொழியாய்வுத் துறைக்கு இறைவனால் பாவாணரும் அழைக்கப்பெற்றவர் என்னும் தகுதியுடையவராகத் திகழ்ந்தார். தெற்கே தோன்றிய தமிழர் இந்தியா முழுவதும் பரவி வாழ்ந்து இந்தியாவைத்தாண்டி 20-30 ஆயிரம் ஆண்டுகட்கு முன் வடமேற்காக நகர்ந்து சென்றனர் எனவும், அவ்வாறு சென்றவர்கள்துருக்கிப்பகுதிகளில்நெடுங்காலம்தங்கியிருந்தனரெனவும் அவர்களில் ஒருபிரிவினர் புறப்பட்ட இடத்திற்கே திரும்பிவந்தனர் எனவும் அவர்களே இன்றைக்கு நான்காயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்தியாவிற்குள் நுழைந்த கிழை ஆரியர் எனவும், துருக்கியில் தங்கியிருந்த பெரும்பகுதியினர் ஐரோப்பாவிற்குள் சென்று பரவினர் எனவும் அவர்களே மேலை ஆரியர் எனவும் தமிழ் இந்தோ - ஐரோப்பிய உறவை பாவாணர் கண்ணாடிபோல் கண்டு காட்டினார்.

பாவாணரின் கருதுகோள், மேலும் பல அறிவியற் புலங்களால் அறிஞர் பலரால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளது. பாவாணருக்கு ஐயமறத் தெரிந்த தமிழ் இந்தோ - ஐரோப்பிய உறவுக்காட்சிகள் மேலும் மேலும் அவர் மனத்தில் வலுப்பெறுவதற்குத் தமிழிலிருந்து தமிழ் கிளைத்து வளர்த்த வரலாற்றை மிகத்தெளிவாக விளங்கிக்கொண்ட அவரின் வேர்ச்சொல்லியல்

அறிவும் பெருங்காரணமாகும். இத்தகைய பாரிய பின்புலத்தில்தான் பாவாணரால் துணிந்து தமிழை முன்னிறுத்தி ஒட்டுமொத்த இந்தோ - ஐரோப்பியத்தையும் வழிமொழிகளாக்கி ஆய்வு செய்ய முடிந்தது. இத்தடத்தில் அவர் சென்று சேர்த்த வேர்ச்சொல் வரலாற்றுச் செல்வத்தை அவரின் வேர்ச்சொல் கட்டுரைகள், ஒப்பியல் மொழிநூல், தலைமைத்தமிழ் முதலிய பல நூல்களிலிருந்தும் பெறலாம். அவற்றையெல்லாம் இக்கட்டுரையில் எடுத்துரைக்க வேண்டியதில்லை.

3. வடசொல் எனக் கால்டுவெல் கூறிய தமிழ்ச் சொற்கட்குத் தமிழ் மூலம் காட்டுவது

கால்டுவெல் கண்காணியரின் கடுஞ்சறுக்கல்கள் என்னும் தலைப்பில் ஒப்பியல் மொழி நூலில் கால்டுவெல் ஆய்வுமுடிவுகள் சிலவற்றின்மீது பாவாணர் ஐயமெழுப்பினார். சேரன், சோழன், பாண்டியன், மனம் போன்ற பலசொற்கள் தமிழ் இல்லையென கால்டுவெல் கூறியிருந்தார். இச்சொற்கட்கெல்லாம் பாவாணர் தமிழ் மூலம்காட்டி கால்டுவெல் கருத்தினை மறுத்துரைத்தார். சேரன் என்னும் ஒரு சொல் பற்றி மட்டும் பாவாணர் உரைத்த கருத்தினை இங்கு உரைப்போம்.

பரு-பெரு: பரியது - பெரியது: சார் - சேர் போன்ற இடங்களில் அகர - எகர மாற்றமும் ஆகார - ஏகார மாற்றமும் நிகழ்கிறது. இந்த அடிப்படையில் சாரல் மிகுந்த பண்டைய தமிழ்நாடு சாரல்நாடு என அழைக்கப்பெற்று அதுவே பின்னர் சாரல் - சேரல் எனவும், சகர - ககர மாற்றத்தில் சேரல் - கேரல் எனவும் ஆகிப் பின்னர் கேரலம் - கேரளம் என ஆயிற்றென்பதும் பாவாணர் கருத்தாகும்.

மேலையாரிய மொழியில் *kenotophion- cenotaph; caster-chester; kirk-church* போல் ககரம் - சகரமாதல் இயல்பு. ஆயின் தமிழில் இரண்டும் அதாவது க-சவும் ச-சவும் உண்டென்று கூறும் பாவாணர் இரண்டுக்கும் எடுத்துக்காட்டுகள் தருவார்.

கீரை- சீரை(மலையாளம்); கெடு-செடு(தெலுங்கு)

சாண் -கேண்(கன்னடம்); சிரட்டை - கெரத்த(கன்னடம்) ; செந்தாமரை- கெந்தாபர (கன்னட); செவ்வரி- கெம்பரி(கன்னடம்) ; செவி- கெவி(துளு)

சகர- ககர பறிமாற்றம் என்னும் தலைப்பில் பாவாணர் எழுதிய கட்டுரையில் இச்செய்தி விரிவாக உள்ளது. இவ்வாறு கால்டுவெல் தமிழ்நாட்டில் வழங்கிய பழந்தமிழ்ச் சொற்கள் பலவற்றிற்கு வேர்காண முடியாமல் போயிருக்கலாம். அவற்றையெல்லாம் பெருங்குறையாகப் பாவாணர் தம் நூல்களில் எழுதியது பெருங்குறை. அடர்ந்த காட்டில்

செறிந்த இருளில் ஒளிவிளக்கேற்றி வழிகாட்டிய கால்டுவெல் பெருமகனாரின் பெருமையை அவரின் ஆய்விற்குள் சென்று காணும்போது 'வாய்படைத் துடையாரெல்லாம் வாழ்த்தினார் வணக்கம் செய்தார் என்ற கம்பன் வாசகமே நன்றியுடையவர்களின் நெஞ்சில் பீறிட்டெழுகின்றது.

உலகம் ஏற்கும் கால்டுவெல் பாவாணர் ஆய்வு

கால்டுவெல் தமிழ்மொழி உலக முதன்மொழிக்கு நெருக்கமானதாக இருக்கலாம் என்னும் கருதுகோளினை தன் நூலில் எழுதினார். பாவாணர் தமிழ் திரவிடத்தாயும் ஆரிய மூல்மும் உலகமுதன்மொழியும் ஆகும். என்னும் கருத்தினை உறுதிப்படக் கூறினார். இவ்விருவரின் கருத்துகளும் எதிர்காலத்தில் மொழியாய்வு வரலாற்று அறிஞர்களால் ஏற்கப்படலாம் என்பதற்கு இந்தோ ஐரோப்பிய மொழிகளின் வரலாறு பற்றியும் உலகமொழிகளின் வரலாறு பற்றியும் மேனாட்டு அறிஞர்கள் தெரிவித்த கருத்துகளடங்கிய இரண்டு வரைபடங்களை இக்கட்டுரையின் நிறைவுப் பகுதியாகத் தருகின்றேன்.

7-9-2013 *New Scientist* இதழில் இ.ஐ.மொழியின் மூதாதையர் உருவாகினர். *proto-IE* இ.மு(*BP*)9000 இல் தான் அனதோலியா (பழைய ஆசியமைனர்). பின்னர் இ.மு. 4900இல் தான் *Indo- Iranian* பேசுநர் அனதோலியாவை விட்டு நீங்கிப் பாரசீகம் -இந்தியா நோக்கிப் பெயர்ந்தனர் என்பதை *Douglas Heaven* வரைபடவழியாக விளக்கியுள்ளார். *On spread of Indo - European out of Anatolia (Now In Turkey) circa 9000 B.P- see Douglas Heaven 'Whispers from the past' in New Scientist 7 Sep,2013.* அவ்வரைபடம்வருமாறு,

ஞால முதன்மொழி/நாசுதிராதிக்கு ஆய்வறிஞர் ஏ.ஆர். பொம் கார்டு(*AR.Bomhard*) தமிழையும் உலகமொழிகளையும் இணைத்து உருவாக்கிய (2008) உலக மொழி வரை படம் கீழ் வருவதாகும்.



Chronology of the major part of the Worlds languages.



*Irina pugach et al: 2013

**See Pagel et al PNAS May 2013

(PNAS :*proceedings* of National Academy Of Sciences)

*** On spread of Indo – European out of Anatolia (now in Turkey) circa 9000 B.P- see Douglas Heaven "Whispers from the past" in New Scientist 7 Sep,2013

உலகில் மாந்த இனப் பரவல் பற்றி மாந்தவியல் அறிஞர்கள் அண்மையில் வெளியிட்ட இரண்டு வரைபடங்கள் :-





18. ஆயர் கால்டுவெல் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்: ஒரு பார்வை

முனைவர் அ. சண்முகதாஸ்
தகைசார் வாழ்நாட் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தமிழ் மொழி வரலாற்றிலே ஒரு முக்கியமான கால கட்டம் 1856 ஆகும். 'ஐந்தெழுத்தாலொரு பாடையென் றறையவே நாணுவர் அறிவுடையோரே' என்று மொழிஏளனம் நமது தமிழ்நாட்டிலே நடைபெற்று வந்ததை நாம் மறக்கமுடியாது. தமிழ் மொழிநூல் வல்லோன் எவனும் பிறமொழி எதனையும் ஏளனம் செய்ததாக நாம் அறியவில்லை. ஆனால் சுவாமிநாத தேசிகர் வடமொழிக்கல்வி கற்றதாலோ அல்லது பிறர் தூண்டுதலாலோ அல்லது சன்மானம் எதுவும் பெற்றதாலோ தமிழ் மொழியை ஏளனம் செய்து பாடல் இயற்றினார். அவரை நாம் தனியனாகக் குற்றம் சொல்ல முடியாது. அக்காலத்தில் தமிழ் மொழியும் சமஸ்கிருத மொழியிலிருந்து மருவி வந்ததே என்ற கருத்து பெருமளவு ஏற்புடையதாயிருந்தது. தமிழ் மொழிக்கெனத் தனித்துவமான தொல்காப்பியம் என்னும் இலக்கணமும் செம்மொழி இலக்கியங்களான சங்கப்பாடல்களும் ஏட்டு வடிவிலே பலரும் அறியப்படாத நிலையில் இக்கருத்தினை எவரும் மறுபரிசீலனை செய்யாமலிருந் தார்கள். இத்தகைய ஒரு பின்னணியிலேதான், இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகளான சமஸ்கிருத மொழியிலிருந்து வந்த ஹிந்தி, வங்காளி, குஜராத்தி போன்றவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டனவான மொழிகளையுடைய ஒரு மொழிக்குடும்பம் இந்தியாவிலே உள்ளது என எடுத்துக்காட்டி, அதற்கு 'திராவிடம்' என்னும் பெயரை முதன்முதலாகச் சூட்டி வரலாறு படைத்தார் திருநெல்வேலி பேராயர் அதிவண. டாக்டர் றொபேட் கால்டுவெல். அவர் ஆராய்ந்து எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலே 1856இல் வெளிவந்தது. அந்நூலிலேதான்,

'No person who has any acquaintance with the principles of comparative philology, and who has carefully studied the grammars and vocabularies of the Dravidian languages and compared them with those of Sanskrit, can suppose the grammatical structure and inflexional forms of those languages and the greater number of their more important roots capable of being derived from Sanskrit by any process of development or corruption whatsoever.'

'ஒப்பாய்வு மொழியியற் கோட்பாடுகளுடன் பரிச்சயமுடைய எவரும், திராவிடமொழிகளின் இலக்கணங்களையும் சொற்களையும் மிகக் கவனத்துடன் கற்று அவற்றை சமஸ்கிருதத்துடன் ஒப்பிட்ட எவரும், அம்மொழிகளின் இலக்கண அமைப்பும் ஆக்க வடிவங்களும் பெரும் எண்ணிக்கையிலான அவற்றின் முக்கியமான வேர்களும் சமஸ்கிருத மொழியிலிருந்து எவ்வித வளர்ச்சி அல்லது சிதைவு முறையினாலே பெறப்படத்தக்கன, என்று கூறமாட்டார்கள் என்று திராவிட மொழிகளின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டினார்.

திராவிடமொழிகளை உலகம் இனங்காணவைத்த கால்டுவெல் தமிழ்மொழி பற்றிக் கூறியது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

'Tamil, however, the most highly cultivated and intra of all Dravidian idioms, can dispose with its Sanskrit altogether, if need be, and not only stand alone but flourish without its aid'

'எல்லாத் திராவிட மரபுச்சொற்களுள் மிகவும் உயர்முறையில் பண்பட்ட தமிழச்சொற்கள், எவ்வாறாயினும், சமஸ்கிருதத்தை முற்றாக நீக்கவும், வேண்டுமெனில், தனியாக நிற்கவும் அல்லது அதன் துணையின்றி வளமுறவும் முடியும்.' என்று எடுத்துக்கூறி 'ஐந்தெழுத்தால் ஆனஒருபாடை... என்றபாட்டுக்காரரையும் அவர்வழிவந்தவர்களையும் வாயடைக்கச்செய்தார்

அப்பெருமகனார் பிறந்து 200 ஆண்டுகள் ஆகிவிட்டன. தமிழர்களாகிய நாம் தலைநிமிர்ந்து நிற்கவைத்த அந்த மொழியியல் முனிவரை நாம் நூற்றாண்டு தோறுமாவது நினைவுகூர்ந்து நம்முடைய நன்றியினைத் தெரிவிக்கவேண்டும். 1814ஆம் ஆண்டு ஐக்கிய இராச்சியத்திலே பிறந்த கால்டுவெல்லின் 200 ஆவது பிறந்த ஆண்டினை நினைவுகூர்ந்து அவரைப் பெருமைப்படுத்தும் பெருமக்களுக்கு நான் இந்தவேளையில் நன்றிகூறுகிறேன். அவர்களுடைய தமிழ்ப்பணி மேலும் மேம்பட வாழ்த்துகிறேன்.

தமிழ்மொழி பற்றிக் கால்டுவெல் மிகச் சிறப்பாகக் கூறவேண்டிய காரணம்என்ன? இதனால் கால்டுவெல் இல்லாத சிறப்புகளைத் தமிழுக்குக் கூறினார் எனப் பொருளாகாது. ஆயர் கால்டுவெல் அவர்களும் அவருடைய துணைவியாரும் சாதி, தீண்டாமை முதலியவற்றுக்குஎதிராகப் பணிசெய்தவர்கள். பிராமணர்களுக்கும் ஏனையோருக்குமிடையே இருந்த வேறுபாடுகளை நன்கு அறிந்தவர்கள். மொழி தொடர்பாகவும் தமிழ் ஒரு தனியான மொழி அல்ல. அது வடமொழியி லிருந்தே உருவானது என்பதைத் தமிழ்நாட்டிலுள்ள வடமொழி அறிஞர்களும் கூறுவதைக் கால்டுவெல் நன்கு அறிந்தவர். தமிழ்மொழி பற்றி ஏனைய திராவிட மொழிகளுடன் ஆராய்கின்ற பொழுது உண்மை நிலைகளை அவர் ஆய்வுமூலமாகக் காணக்கூடியதாக இருந்தது. சமஸ்கிருத மொழியின் செல்வாக்குத் தமிழ் மொழியிலிருந்ததை அவர் கண்டுகொண்டார். ஆனால் அத்தகைய செல்வாக்கு தமிழ் மொழியின் தனித்துவத்தினை இழக்கவைக்காது என்பதனையும் உணர்ந்துகொண்டார். அதற்குக் காரணம் ஏனைய திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியன சமஸ்கிருத மொழி இன்றி இயங்காத நிலையினை அவர் அறிந்திருந்தார். அதனை,

'It is true it would now be difficult for Telugu to dispense with its Sanskrit: More so for Canarese; and most of all for Malayalam: - those languages having borrowed from Sanskrit so largely, and being so habituated to look up to it for help that it would be scarcely possible for them now to assert their independence.'

'தற்போது தெலுங்கு, சமஸ்கிருதத்தை நீக்குவது என்பது கடினம் என்பது உண்மையாகும். கன்னடத்துக்கும், அதற்கு மேலாக மலையாளத்துக்கும் இது பொருத்தமாகும். அம்மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து பெருந்தொகையாகக் கடன்பெற்றிருப்பதாலும், அம்மொழியின் உதவியை நாடும் வகையில் வளர்ந்துள்ளமையாலும், அவை இப்பொழுது தம் தனித்துவத்தை நிறுவுவது முடியாததாகும்' என்று கால்டுவெல் கூறுகின்றார்.

சங்க இலக்கியங்கள் பற்றி அறியாமலேயே கால்டுவெல் தமிழ் மொழியின் பண்புகளை எடுத்துக் கூறினார். திராவிட மொழிகளுள் அது சிறப்பானது என்று அவர் கூறுதற்குக் காரணம் தமிழ் இலக்கியங்களே. அதனை அவர்,

'The ancient or classical dialect of the Tamil languages, called Shen-Tamil (Sen-Damil) or correct Tamil, in which nearly all the literature has been written, contains exceedingly little Sanskrit; and differs from the colloquial dialect, or the language of prose, chiefly in the sedulous and jealus care with which it has rejected the use of Sanskrit derivatives and characters, and rejected itself to pure Dravidian sounds, forms, and roots.'

'தமிழ் மொழியின் பண்டைய அல்லது செவ்வியல் கிளைமொழி செந்தமிழ் அல்லது திருத்தமான தமிழ் எனப்படும். ஏறக்குறைய எல்லா இலக்கியங்களும் அம்மொழியிலேயே எழுதப்பட்டன. அதில் குறைந்த அளவிலேயே சமஸ்கிருதம் உண்டு. மிக அர்ப்பணிப்புடனும் பொறாமைக் கவனத்துடனும் சமஸ்கிருத ஆக்கஅமைப்புகள் எழுத்துக்களின் பயன்பாட்டினை மறுத்து பேச்சு வழக்கு அல்லது உரைநடைமொழியிலிருந்து அது வேறுபடுகின்றது.' என்று கூறியுள்ளார். சங்க இலக்கியங்களை அவர் அறிந்திருந்தால் அவருடைய தமிழ்மொழியின் தொன்மை பற்றிய கோட்பாட்டிற்கு எந்தத் திராவிட மொழியிலும் கிடைக்கமுடியாத இலக்கியச் சான்றுகள் கிடைத்திருக்கும். எனினும் கிடைத்தவற்றை வைத்தே ஒப்பியல் அடிப்படையில் முடிவுகளை அவர் எடுத்துள்ளார்.

கால்டுவெல் தன்னுடைய நூலின் நிறைவுப் பகுதியிலே கொடுத்திருக்கும் மொழித்தரவுகள், அவருடைய ஒப்பியல் ஆய்வுத் திறனைக் காட்டுவதாகும். அதைவிட அவை எதிர்கால ஆய்வாளர்களுக்கு அருமையானதரவுகளாக அமைந்தமையை நாம் கண்டுள்ளோம். அவர் ஸ்கித்தியன் மொழிக்குடும்பம், செமிற்றிக் மொழிக்குடும்பம் சார்ந்த மொழிகளுக்கும், சீன, யப்பானிய, மொங்கோலிய மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்குமிடையே ஒற்றுமை இருப்பதை உணர்த்தும் வகையில் பல ஒற்றுமைப்பட்ட சொற்களைச் சான்றுகளாகக் கொடுத்துள்ளார். அச்சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களே என்பதை இவ்விடத்தில் நாம் மனங்கொள்ளவேண்டும். இதனாலேயே யப்பானிய மொழிக்கும் திராவிட மொழிகளுக்கும் தொடர்பு உண்டெனத் தன்னுடைய ஆய்வினைத் தொடங்கிய பேராசிரியர் சுசுமு ஓனோ பின்னர் யப்பானியஃதமிழ்மொழி ஆய்வாக அதனை மாற்றியமைத்துப் பெருந்தொகையான தரவுகளை முன்னிலைப்படுத்தி பல முடிவுகளை எட்டமுடிந்தது. அது பற்றி முனைவர் மனோன்மணியின் கட்டுரையிலே பார்க்கலாம். கால்டுவெல் திராவிட மொழிகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைப்பாட்டினை எடுத்துக்காட்டியமை பிற்காலத்திலே திராவிட ஆய்வு வளர்ச்சிபெறவும்,

கால்டுவெலின் பெயர் நிலைக்க வைத்த பேராசிரியர் தொமஸ் பறோவும் பேராசிரியர் எம்.பி.எமனோவும் *Dravidian Etymological Dictionary* என்னும் அருமையான சொற்பிறப்பு அகரமுதலியை உருவாக்கவும் உதவியது. ஆனால் கால்டுவெல் அதற்கும் மேலாக திராவிடமொழிகளுக்கும் பிற உலகமொழிகளுக்குமிடையே உள்ள உறவினை எடுத்துக் காட்டவும் தரவுகளைத் தந்தார். இவ்விடத்தில்தான் வண. பிதா நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், ஞா. தேவநேயப்ப பாவாணர், வண. பிதா எச்.எஸ். டேவிட், பேராசிரியர் மில்லர், பேராசிரியர் சுசுமு ஓனோ, முனைவர் லோகநாதன் முத்தரையன் போன்றவர்களை எண்ணவேண்டியுள்ளது. சுவாமி ஞானப்பிரகாசரை மட்டும் இங்கு விரிவாகக் கூறவுள்ளேன்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் இராசலிங்கம் சாமிநாதப்பிள்ளை, தங்கமுத்து இணையரின் மகனாக 30.08.1875 இல் பிறந்தார். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் வைத்தியலிங்கம். அவருடைய தந்தையார் காலமாகியதால், தாய் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த தம்பிமுத்துப்பிள்ளை என்பவரை மறுமணம் செய்துகொண்டார். இவ்வேளை தாயும் மகனும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவிக்கொண்டனர். வைத்தியலிங்கத்துக்கு ஞானப்பிரகாசர் என்னும் பெயர் சூட்டப்பட்டது. ஞானப்பிரகாசர் தொடக்கக் கல்வியை அச்சுவேலி அமெரிக்க மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் பெற்றார். பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலே பயன்றார். 1835இல் இறைபணியாற்ற யாழ்ப்பாணம் குரு மடத்தில் சேர்ந்து 01.12.1901 தொடக்கம் குருவானவரானார். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளுடன் இலத்தீன், பிரெஞ்சு ஆகிய மொழிகளை அறிந்தவர். பின்னர் அவர் மொழியாய்விலே ஈடுபட்டபோது பெருந்தொகையான மொழிகளை அறிந்துகொண்டார். தமிழ் மொழியின் அடிப்படை பற்றியும், ஏனைய மொழிகளுடன் அதன் தொடர்பு பற்றியும் ஆராய்ந்து அவரது காலம் வரை யாரும் எடுத்துரைக்காத, இம்மொழிக்கு முதன்மையளிக்கும், கோட்பாடு ஒன்றை உருவாக்க முயன்றார்.

அக்கோட்பாடு எத்தகையது? பழைய தமிழ்ச் சொற்களைப் பற்றிய ஆராய்ச்சி, ஓர் அடிப்படையான உண்மையைத் தெளிவுபடுத்துகிறது. தமிழ் மொழியின் ஆதிச்சொற்கள், இடக்குறிப்புப் பற்றி அமைந்த ஒலிகளால் எழுதப்பட்டுள்ளன. அவைகள் அ, இ, உ, எ என்னும் சுட்டுக்களைச் சார்ந்தன. அகரம் அண்மையையும், உகரம் சேய்மையையும், இகரம் கீழுறும் தன்மையையும், எகரம் மேலுறும்

தன்மையையும் சுட்டுகின்றன. இந்த ஆதித் தமிழ்ச்சொற்களே எல்லா இந்தோ ஐரோப்பிய மொழிகளினதும் நெடுங்காலமாக மறக்கப்பட்ட ஆதிச்சொல்லடிகள். இத்தமிழ்ச் சொல்லடிகள் மிகவும் பண்டைய மனிதவரலாற்றுக் காலத்துக்கு இட்டுச்செல்கின்றன. அது ஆரியதிராவிட இனத்தவரின் மொழியில், எண்ணிக்கையில் ஆகக் கூட ஒரு சில நூற்றுக்கணக்கான வேற்றுமை அறியா ஓரசைச் சொற்கள் மட்டும் இருந்த காலம். இதுதான் சுவாமி ஞானப்பிரகாசரின் கோட்பாடாக அமைந்தது. இது எப்படி உருவாகியது என்பது பற்றி நோக்கும்போதுதான் ஆயர் கால்டுவெல்லின் வழிகாட்டல் எப்படியிருந்தது என்பதை உணரக்கூடியதாயுள்ளது. சுவாமி ஞானப்பிரகாசர் அது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

'சிறப்பாக அமைந்த ஒத்த தன்மைத்தான மொழியின் சொற்கள் அனைத்தும் ஒன்றுக் கொன்று தொடர்புள்ள சொற்கூட்டத்துள் இடம்பெறுகின்றன. கால்டுவெல்லும், ஏனையோரும் ஒரு சில சொற்கள் சம்பந்தமான உண்மையைக் குறிப்பட்டுள்ளனர். ஆனால் இத்தொடர்பு எல்லாச் சொற்களையும் அடக்கும் என்பதை இப்பொழுதுதான் நான் காணத் தொடங்கியுள்ளேன்.'

பிற்காலத்திலே சுவாமி ஞானப்பிரகாசர் அவரைப்பின்பற்றி சுவாமி டேவிட், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் ஆகியோருடைய விரிவான மொழி ஆய்வுக்குக் கால்டுவெல் வழிகாட்டி யுள்ளதை மேற்காட்டிய கருத்து நமக்குப் புலப்படுத்துகிறது.

திராவிட மொழிகளும், இந்தோ-ஐரோப்பிய மொழிகளும் இரு வேறுபட்ட குடும்பங்களென அறிஞர் பலர் நிறுவியவிடத்து, அவ்விரு குடும்ப மொழிகளுக்கும் அடிப்படையாயமைந்த ஆதிச்சொற்கள் ஒரு வகுப்பினவே என்பது சுவாமி ஞானப்பிரகாசருடைய கொள்கையாகும். ஒப்பீட்டு மொழியியல் ஆய்வின் மூலம் இக்கொள்கையினை நிறுவப் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதினார். அவர் எழுதியவை கீழே தரப்படுகின்றன:

1. தமிழ் அமைப்புற்ற வரலாறு
2. தமிழ் சொற்பிறப்பாராய்ச்சி
3. தமிழ்மொழியின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி
4. தமிழ்மொழி ஆராய்ச்சி
5. *An English - Tamil Dictionary* (கையெழுத்துப்பிரதி)

அவருடைய ஆய்வுக் கட்டுரைகள் பின்வருமாறு:

1. *'The Origin of Language: A New Theory', Madras Christian College Magazine, 1929.*

2. *'The Proposed Comparative Tamil Lexicon', The Jaffna Catholic Guardian, 1929.*

3. *'Radical Relationship between the Dravidian and Indo-European Languages',*

   New Review, Nov. 1936.

4. *'Some Laws of Dravidian Etymology', The Anthropos, Vol. XI.*

5. *'The Dravidian Element in Sinhalese', The Anthropos, Vol. XXXII, 1937.*

6. *'Linguistic Evidence for the Common Origin of the Dravidian and Indo-Europeans', Tamil Culture, Vol. II, Jan. 1953*

7. *'Dravidian and Indo-Eurupean Languages', New Review, 1936.*

8. *'Pedigree of Words' , Pamphlet.*

9. *'Sumerian and Tamil', Pamphlet.*

10. *'Root words of the Dravidian Group of Languages'*

11. *'Origin of the Tamil Language'*

தமிழ் அடிச்சொற்களே ஆதிச்சொற்கள் என்பதும், அவ்வடிச் சொற்களினின்றே ஆரியச் சொற்கள் பிறந்தன என்பதும் சுவாமி ஞானப்பிரகாசருடைய கொள்கையாகும். தன் கொள்கையினை நிலைநிறுத்தப் பல்வேறு எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளார். ஓர் எடுத்துக்காட்டு மாத்திரம் இங்குத் தரப்படுகிறது.

'காற்றைக் குறித்தற்கு சமஸ்கிருதத்தில் வாத, வாயு, எனுஞ் சொற்கள் உண்டு. இவ்வாதச் சொல்லே லத்தீனில் உவந்து-ஸ் எனவும், ஆங்கிலத்தில் உவின்ட் எனவும், லித்துவேனியத்தில் உவெஜ்-ஸ் எனவும் நிற்கும் என்பர் ஜரோப்பிய மொழிநூலோர். இவ்வுருவங்களுக்கு அடி யாது எனத் தேடுங்கால் எனது தமிழ் ஊதையே என்று தோன்றும். ஊதை ஆதியில் ஊத என நின்றதென்பதற்கு மலையாளம் முதலிய பாகதங்களில் ஐகாரவீற்றுச் சொற்கள் அகரவீறாய் நிற்பது சான்று. இனி உகரம் ஆதிவகரம் எனும் இரு ஒலிகளும் இதழ்குவித்து உயிர்ப்பு விடுவதினால் எழுகின்றமையால் ஒத்த பிறப்புடையன என்பது ஒலிநூல் முடிபு. தமிழில் உழல் (திரும்பு) எனும் சொல் (வள்) வளை என வந்ததுபோல், எமது ஊதைச் சொல் வட மொழியில் உ-வாத

என்றாகியபின் வாத எனு நின்றது. அப்பால் உ-வாத இடையில் அநுநாசிகம் வரப்பெற்று உவாந்த, உவேந்த, உவெந்து-ஸ் எனக் காற்றிற்கு லத்தீனியச் சொல்லாயிற்று. உவெந்த எனும் உருவந்தான் உவெஞ்ச, உவெஜ்-ஸ் என லித்துவெனியமாயிற்று.' (தமிழ்மொழி ஆராய்ச்சி, பக். 8)

இவ்வெடுத்துக்காட்டுக்குரிய மொழியியல் கோட்பாடுகளைச் சுவாமி ஞானப்பிரகாசர் பின்வருமாறு அமைத்துள்ளார்:

(1) தமிழ்மொழி ஆரம்பத்தில் அ, இ, உ, எ எனும் நான்கு இடச்சுட்டுக்களை முதன்மையாகக் கொண்ட அடிச்சொற்களையே கொண்டமைந்தது.

(2) இவ்வுயிர் முதற் சொற்களினின்றே மெய் முதற் சொற்கள் பிறந்தன. தாழம் எனுஞ்சொல் ஆழம் என்பதிலிருந்து வந்தது. சால் என்பது ஆல் என்ற சொல்லின் திரிபு ஆகும்.

(3) தமிழ் உயிர் முதற் சொற்களே இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற்கள் பிறப்பதற்கான அடிச் சொற்களாம்.

தன்னுடைய மொழிக் கோட்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஒரு பெரிய முயற்சியிலே ஈடுபட்டார். தமிழ் மொழியின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி என்ற பிரம்மாண்டமான நூலை எழுத முயற்சித்தார். இதில் இரண்டு பகுதிகள் அடங்கியிருந்தன. ஒவ்வொன்றும் ஏறக்குறைய நூறு பக்கங்கள் கொண்ட பத்துப் பிரிவுகளை உடையது. ஆனால் முதலாவது பகுதியின் ஆறு பிரிவுகள் மட்டுமே அச்சில் வெளிவந்தன.

சுவாமி ஞானப்பிரகாசரின் மொழிக்கோட்பாட்டை நோக்குமிடத்து அது நம்முடைய திராவிடமொழி ஆய்வாளர்களுடைய கோட்பாடுகளை மீள்பார்வை பார்ப்பதாக அமைகின்றதென எண்ணக்கூடியதாயுள்ளது. தாழம்தான் தொல்திராவிடம் ஆழம் பின்னர் வந்தது என மீட்டுருவாக்கம் செய்து வந்த நிலையை மாற்றி நோக்குகின்றார் சுவாமி ஞானப்பிரகாசர். இந்த வகையில்தான் 'தமிழில் தினையும் நெல்லும்' (அ. சண்முகதாஸ், எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் இதழுக்குச் சமர்ப்பித்துள்ள கட்டுரை) என்னும் கட்டுரையில் பின்வரும் விடயத்தைக் குறிப்பிட்டேன். திராவிடவியல் ஆய்வாளர்கள் தமிழ் மொழியை ஏதோ பிந்திய கால மொழியென எண்ணுகின்ற போக்கினைத் தினை, நெல் பற்றிய சொற்கள் பற்றிய ஆய்விலே காணக்கூடியதாயுள்ளது. கிருஷ்ணமூர்த்தி போன்றோரின் ஆய்வு தெலுங்கு போன்ற மொழிகளை முன்னிலைப்படுத்தும்

முயற்சியோ என்று எண்ணுதற்கு இடமளிக்கின்றது. எனினும் இது தொடர்பாக மிக ஆழமான ஆய்வு மேற்கொள்ளவேண்டிய தேவை உண்டு. Witzel (1999) என்பவர் தன்னுடைய 'The Linguistic History of Some Indian Domestic Plants' என்னும் கட்டுரையிலே பறோ மற்றும் எமனோ தொகுத்த Dravidian Etymological Dictionary யின் போதாமை பற்றியும் திராவிட மொழி ஆய்வாளர் கிருஷ்ண மூர்த்தியின் (2003) தகவல்களில் பிழைகள் மலிந்துள்ளன என்பது பற்றியும்,

The Comparative (etymological) Dravidian dictionary by Burrow and Emeneau(DEDR, 1984) is more of a somewhat disparate collection of data instead of a truly etymological dictionary that explains all parts of a word (root, stem, ending) under onehead word, as has been done in the IA dictionary of Mayrhofer (1986-2000). A newversion of DEDR with Proto-Dravidian etymological identifications and word analysis has been envisioned for 2004, but it has not yet emerged. We can glean some data from Krishnamurti's book on the reconstruction of Proto-Dravidian. However, there are wide error bars in Krishnamurti's data.

'மெயர்ஹோபர் (1986-2000) இந்தோ-ஆரிய அகரமுதலியில் செய்ததுபோல தலைச்சொல் ஒன்றின்கீழ் ஒரு சொல்லின் எல்லாப் பகுதிகளையும் (வேர், அடி, ஈறு) விளங்கப்படுத்தும் உண்மையான சொற்பிறப்பு அகரமுதலிக்குப் பதிலாக பறோ எமனோவின் ஒப்பீட்டு (சொற்பிறப்பியல்) திராவிட அகரமுதலியானது வேறுபட்ட தகவல்கள் கொண்ட தொகுப்பாகவே அமைகின்றது. ஒரு புதிய ஒப்பீட்டு (சொற்பிறப்பியல்) திராவிட அகரமுதலி ஒன்று, தொல்திராவிட சொற்பிறப்பு இனங்காணல்களும் சொற்பகுப்பாய்வு முதலியவற்றுடன் 2004இல் வெளிவருமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது இன்னும் வெளிவரவில்லை. தொல்திராவிட மீட்டுருவாக்கம் பற்றி கிருஷ்ணமூர்த்தியின் நூலிலிருந்து சில தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். எனினும், கிருஷ்ணமூர்த்தியின் தகவலில் பல பிழைத்தடைகள் உள்ளன.' என்று கூறியிருப்பது நம்முடைய கண்களைத் திறந்துவிடுகின்றது. தொல்திராவிட ஆய்வியல் மீள்பார்வைக்கு உட்படுத்தவேண்டும் என்பதை இதன்மூலம் உணரக்கூடியதாயுள்ளது. பேராயர் றொபர்ட் கால்டுவெல்லும் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரும் இந்த மீள்பார்வைக்கு வழிகாட்டியுள்ளனர்.

உசாத்துணைகள்:

Burrow, T. and M.B. Emeneau. A Dravidian Etymological Dictionary. Second Edition. Oxford: Clarendon Press 1984

Caldwell, Robert, A Comparative Grammar of the Dravidian or South-Indian family of languages, London, Trbner, 1875.

Krishnamurti, Bh. The Dravidian Languages. Cambridge: Cambridge University Press 2003.

Michael Witzel 'The Linguistic History of Some Indian Domestic Plants' , Journal of Biosciences, 34:6, 2009, DASH, Accessed: December 11, 2013 11:25:20 AM EST

சுவாமி சா. ஞானப்பிரகாசர், தமிழ் அமைப்புற்ற வரலாறு, சுன்னாகம், இலங்கை, 1927.

சுவாமி சா. ஞானப்பிரகாசர், தமிழ் சொற்பிறப்பாராய்ச்சி, சுத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம், 1932.

சுவாமி சா. ஞானப்பிரகாசர், தமிழ்மொழியின் சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி (6 பாகங்கள்), திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1938

சுவாமி சா. ஞானப்பிரகாசர், தமிழ்மொழி ஆராய்ச்சி, கட்டுரைத் தொகுப்பு, ஞானப்பிரகாசர் ஆச்சிரமம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

❧ ❧ ❧

19. வேர்ச்சொல்: கால்டுவெல்லார் செல்நெறியும் அரசேந்திரனார் ஆய்வும்

முனைவர் இ. இராவணன்
மக்கள் நல்வாழ்வுத்துறை, திருவாரூர்.

'உலகினில் நாகரிகம் முற்றும் அழிந்து விட்டாலும் திருக்குறளும், கம்பன் காவியமும் இருந்தால் போதும்; மீண்டும் அதனைப் புதுப்பித்து விடலாம்' - பெருமகனார் கால்டுவெல்லார்

உலகில் பேசப்படும் எம்மொழியையும் வரலாற்று அடிப்படையில் ஆய்ந்தால்தான், அதன் உண்மையான இயல்பை நன்கு அறிய முடியும். அந்த வரலாறும் தோன்றல், திரிதல், கெடுதலின்றி, உள்ளதை உள்ளவாறு உரைப்பதாய் இருக்க வேண்டும். தமிழும், தமிழ் வரலாறும் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக முறையே சிதைக்கப்பட்டும், திரிக்கப்பட்டும் வந்திருந்தது. மேலும், இடைக்காலத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை ஒரு பெரும் சமற்கிருத மயக்கு தமிழைக் கவ்வியிருந்தது. இம்மயக்கினால் சமற்கிருதமே இந்திய மொழிகளுக்கும், இந்தோ - ஐரோப்பிய மொழிகளுக்கும் மூலம் எனக் கருதப்பட்டு வந்தது. சில திரவிட மொழிகளில் சமற்கிருதச் சொற்கள் மிகுதியாக உள்ளமையால் சமற்கிருதம்தான் மிகப்பழமையான மொழியென்றும், அதிலிருந்துதான் திரவிட மொழிகள் தோன்றின என்றும் மேனாட்டுச் சமற்கிருத அறிஞர்களான காரே (*Carey*) மற்றும் கோல் புரூக் (*Cole Brooke*) போன்றோர் கூறினர். இக்கருத்தை மனதிற்கொண்டே பிறரும் ஆய்ந்தனர். இவர்களுக்குப் பின் ஜி.யு. போப் பெருந்தகை, சிறு தீபமாய்த் தோன்றி, தமிழ்மொழிக்கும், ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளுக்கும் இடையே சொற்களில் பல ஒற்றுமைகள் இருப்பதைக் கூறினார்.

இந்நிலையில் தமிழின் உண்மை இயல்பை அறிய நடுநிலையும், நெஞ்சுரமும், ஆழ்நோக்கும் மட்டுமின்றி நுண்மாண் நுழை புலமும் சொல்வன்மையும் மிக்க பெருமகனார் கால்டுவெல்லார் தமிழகம்

வந்து சேர்ந்தார். மேற்கண்ட அனைத்துத் தகுதிகளுடன் 1856-ஆம் ஆண்டு நிலையான புகழுடைய 'திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலினை வெளியிட்டார். அதன் திருந்திய விரிவான இரண்டாம் பதிப்பு 1875-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர் இந்நூலின் ஒருபுறம் தமிழையும் திரவிட மொழிகளையும் - மறுபுறம் தமிழையும், 1. இந்தோ-ஐரோப்பிய மொழிகள், 2. செமித்திய மொழிகள், 3. எலாமைட் மொழிகள், 4. உரால் - அல்டாய்க் எனப்படும் சித்திய மொழிகள், 5. சப்பானிய மொழிகள், 6. ஆசுதிரேலியப் பழங்குடிகள் மொழிகள் போன்ற மொழிகளையும், இலக்கண மற்றும் சொல் ஒப்புமைகள் அடிப்படையில் ஆய்ந்து அளித்தார். மாக்கசு முல்லரால் பிரிக்கப்பட்ட உலக மொழிக் குடும்பங்கள் மூன்று. அவை ஆரியம் (Aryan), சேமியம் (Semitic), துரேனியம் (Turanian) இக்குடும்பங்களிலுள்ள பெரும்பாலான மொழிகள் அனைத்தும் கால்டுவெல்லரால் ஆயப்பட்டுள்ளன.

தமிழைத் திரவிட மொழிகளுக்கு அப்பால் விரித்து இந்திய மொழிகளோடும், உலக மொழிகளோடும் ஒப்பிட்டு ஆய்வு செய்வதை முதன்முதலாக ஒரு ஆய்வுத்தளமாக உருவாக்கிக் காட்டியவர் கால்டுவெல்லர் பெருமகனாரே ஆவார். மேலும், திரவிட மொழிகளில் உள்ள சில சொற்களும், வேர்களும் மாந்தன் முதன்மொழியில் இருந்திருக்கக்கூடிய வடிவங்களிலேயே இன்றும் உள்ளவாகக் கருத இடமுண்டு என்ற கருதுகோளையும் முன்வைத்தார். கால்டுவெல்லரின் வழியில் மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் மிகுந்த ஈடுபாட்டுடன் தன் வாழ்நாட்பணியாய் உழைத்து வெளிப்படுத்திய கூறுகள், தமிழின் முழுத் தோற்றத்தையும் தமிழே திரவிடத் தாயும், ஆரிய மூலமும் ஆகும் என்பதை நிறுவின. தன்னுடைய ஒன்பதாம் வகுப்பு முதலே பாவாணரின் நூல்களைப் படிக்கத் தொடங்கி இன்று வரை கால்டுவெல்லார் மற்றும் பாவாணர் வழியில் மொழியாய்வை மேற்கொண்டு வருபவர் முனைவர் கு.அரசேந்திரனார் ஆவர்.

கால்டுவெல்லாரால் ஆய்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுத்தரவுகள் தமிழே உலக முதன்மொழி என்ற கருதுகோளை மட்டும் முன்வைத்ததையும் (கால்டுவெல்லார் தமிழே உலக முதன்மொழி என்ற கொள்கையைக் கூறியவர் அல்லர்) பாவாணர் வழி அரசேந்திரனாரால் ஆய்ந்து எடுக்கப்பட்ட ஆய்வுத்தரவுகள் தமிழே உலக முதன்மொழி எனத் திறம்பட நிறுவுவதையும் இக்கட்டுரை இரண்டொரு சான்றுகளின் மூலம் தொட்டுக் காட்டுவதாக அமைகிறது.

இக்கட்டுரைக்குத் தேவையான கால்டுவெல்லரின் தமிழ்மொழி பற்றிய கருத்துக்களை அவர் எழுத்துக்கள் மூலம் சுருக்கமாக இங்குக் காண்போம்.

'திரவிட மொழிகளுக்கும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையிலுள்ள மொழியியல், இலக்கணவியல் உறவுகளும், சொல் வேர்ச்சொல் உறவுகளும் ஏராளமானவையும் வியக்கத்தக்கவையாம். சில உறவுகளைப் பொறுத்தவரையில் அவை தற்செயலாக நேர்ந்தவை என்று ஒதுக்கிவிட இயலவே இயலாது. எனினும், அவ்வுறவுகளின் தன்மையைப் பார்க்கும்போது இவ்விருமொழிக் குடும்பங்களுக்கும் இடையிலிருந்த உறவு கழிபழங்காலத்தைச் சார்ந்ததாகவும் எத்தன்மை வாய்ந்த உறவு எனத் திட்டவட்டமாகக் கூற இயலாததாகவும் உள்ளது என்பதே எனது கருத்து'.

'திரவிட மொழிக் குடும்பங்கள், இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்திற்கும் உரால்-அல்தாய்க் மொழிக் குடும்பமும் பிரிவதற்கு முன்னர் இருந்த காலத்திய நிலைகளை இன்றும் காட்டுவனவாக உள்ளன எனத் தோன்றுகிறது. பதிலிப் பெயர்கள் (*Pronouns*) போன்றவற்றில் திராவிட மொழிகளின் தன்மைகள் கழிபழங்கால நிலைமையைக் காட்டுவனவாக உள்ளன'.

'திரவிட மொழிகளில் உள்ள சில சொற்களும், வேர்களும் மாந்தன் முதன்மொழியில் இருந்திருக்கக்கூடிய வடிங்களிலேயே இன்றும் உள்ளனவாகக் கருத இடமுண்டு'.

'ஸ்கிதியின் மொழிகள் மட்டுமல்ல, ஐரோப்பா, ஆசியா இரண்டு கண்டங்களிலும் உள்ள அனைத்து மொழிகளும் ஒரே மூலத்திலிருந்து தோன்றியவை என்பது எல்கின்ஸ் முடிவு ஆகும். மாந்தன் மொழி வரலாற்றைப் பற்றி நமக்குத் தெரிந்துள்ள செய்திகள் பெருமளவுக்கு அம்முடிவை ஆதரிப்பனவாகவே உள்ளன. ஆயினும், அறிவியல்பூர்வமாக இம்முடிவு நிறுவப்பட இன்னும் காலம் ஆகும்'.

'இந்தோ-ஐரோப்பிய மொழிக்குடும்பத்துக்கும் துரானிய அல்லது ஸ்கிதிய மொழிக்குடும்பத்துக்கும், நடுவில் வைக்கத்தக்கது திராவிடக் குடும்பம் என்பதே எனது முடிவு, 'நடுவில்'என்பதைவிட 'ஸ்கிதியனுக்குச் சற்று அருகில்'எனலாம். (ஸ்கிதிய மொழிகள் எனக் கால்டுவெல்லாரால் அழைக்கப்பட்டது, இன்று உரால்-அல்தாய்க் மொழிக்குடும்பம் என அழைக்கப்படுகின்றது'.

கால்டுவெல்லாரால் ஆய்ந்தளிக்கப்பட்ட மேற்கண்ட தரவுகளில் இருந்து அவரது முதன்மொழி பற்றிய கொள்கையைக் கீழ்க்கண்டவாறு அறியலாம்.

1. ஆசியா, ஐரோப்பா போன்ற கண்டங்களில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் அனைத்தும் ஒரு மூலத்திலிருந்தே

தோன்றிய என்னும் எல்கின்ஸின் முடிவைக் கால்வெல்லார் ஏற்பதால் கால்டுவெல்லாரின் முடிவும் அதுவே.

2. எந்த மூலத்திலிருந்து ஆசிய, ஐரோப்பிய மொழிகள் தோன்றினவோ அதுவே மாந்தன் முதன்மொழி.

3. தமிழிய மொழிகளில் உள்ள சில சொற்களும், வேர்களும் மாந்தன் முதன்மொழியில் இருந்தவாறே இப்போதும் உள்ளன.

4. இம்முடிவு அறிவியல்பூர்வமாக நிறுவப்பட இன்னும் காலம் தேவை (1856-இல் கூறியது) மேலும்,

5. 'ஒருமொழி தன் வேர்ச்சொற்களை ஆளும் அமைப்பு முறைகளே அம்மொழியின் உண்மை நிலையினையும், சிறப்பு இயல்புகளையும் விளக்கும் சிறந்த வாயில்களாகும். இவ்வாறு வேர்ச்சொற்களை ஆளும் அமைப்பு முறைக்கண் காணப்படும் வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டே, ஐரோப்பிய, ஆசிய மொழிகள் பல்வேறு இனங்களாகப் பிரிக்கப்படுகின்றன.' (கால்-ப.237) என்று கால்டுவெல்லார் கூறுவதால் அவரின் ஆய்வு கீழ்க்கண்ட இரண்டு அடிப்படைகளில் அமைகிறது எனலாம்.

1. வேர்ச்சொல்

2. வேர்ச்சொல் ஆளப்படும் முறை

மொழியை ஆராயாமல் சொற்களையும், வேர்ச்சொற்களையும் மட்டுமே வைத்து மாந்தன் முதன்மொழியை நிறுவுதல் இயலுமா? எனக் கேட்பவர்களுக்குக் கீழ்க்கண்ட பாவாணரின் கூற்று இயலும் என விடை கூறும்.

'மொழி என்பது ஒரு மக்களினம் பேசும் பேச்சிலும், இயற்றும் இலக்கியத்திலும் ஆளும் முழுமையான சொற்றொகுதி. சொற்கள் இல்லாமல் மொழியென்று தனிவேறாக ஒன்றுமில்லை. ஆதலால், சொல்லாராய்ச்சியே மொழியாராச்சியின் அடிப்படை மொழியென்பது, சொல்லையும் ஒரு மக்களினத்தின் சொற்றொகுதியையும் குறித்தலால், மொழியாராய்ச்சி என்பது சொல்லாராய்ச்சியைக் குறிக்கும்'.

உலகின் பழமையான மொழிக்குடும்ப மொழிகளிலுள்ள பல சொற்களுக்குத் தமிழிய மொழிச் சொற்களே மூலமாக இருப்பதைக் கால்டுவெல்லார் தன் நூலின் ஏழாம் பகுதியில் (Glossurial Affinities) எடுத்துக் காட்டியுள்ளார். குறிப்பாக மேலை - இந்தோ - ஐரோப்பியச் சொற்களுக்குத் தமிழிய மொழிச் சொற்கள் மூலமாக இருப்பதைக் காட்டும் பகுதி மிகவும் வியக்கத்தக்கது. அவ்வாறு கால்டுவெல்லார்

தொட்டுக் காட்டிய சொற்களை முனைவர் கு.அரசேந்திரனார் மேலும் விளக்கியும் இவ்வாய்வை விரித்தும் காட்டியதை இக்கட்டுரையில் காணலாம்.

கால்டுவெல்லார் அருவியும் அரசேந்திரனார் Arriveவும்:

கால்டுவெல்லார் 'அருவி'என்ற தமிழ்ச்சொல் 'அரு'என்ற மூலத்திலிருந்து வந்ததென்றும், 'அரு'என்ற வேருக்குச் சிறு சிறு துளிகளாகு என்றும் பொருள் கூறினார். மேலும் அருவி என்ற தமிழ்ச்சொல்லே சிற்றாற்றைக் குறிக்கும் இலத்தீன் சொல்லான 'ரிவுஸ்'க்கும், ஆற்றைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான 'ரிவர்க்கு'ம் மூலம் என்றார். மேலும் அருவி என்ற தமிழ்ச்சொல் சிறிதும் சமற்கிருதச் சார்பற்ற ஆனால், இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற்களோடு உறவு அல்லது ஒருமைப்பாடு கொண்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார்.

அரசேந்திரனார் 'அர்' என்பது ஓர் ஒலிச்சொல். இது அரவு அரவம் என வரும். அருவி ஆர்ப்பது 'ஆர்' என்பது 'அர்'வழிப்பட்ட ஒலிச் சொல்லே. 'அருவி ஆர்க்கும் என்பது சங்கப்பாடல் பலவற்றில் காணக்கிடைப்பது. மலை மீதிருந்து சரிந்து விழும் நீர் எழுப்பு ஒலியிலிருந்தே அதனை அர்-அர்வி-அருவி என்றனர்' என அருவி, தமிழில் தோன்றிய வரலாற்றைக் கூறுகின்றார். மேலும் கால்டுவெல்லாரின் அருவி வரலாற்றை மனதிற் கொண்டு *Wilfred Funk* என்னும் ஆங்கில வேர்ச்சொல்லாய்வாளர் இயற்றிய *Word Orgins* என்ற நூலில் *Arrive, Derive* என்னும் சொற்கட்டு வரலாறு இயற்றிய இடத்தில் இச்சொற்களை *riv* ஆகிய ஆற்றோடு இணைத்ததைக் கண்ட அரசேந்திரனார் இச்சொற்களின் முழு வரலாற்றை மேலை வேர்ச்சொல் ஆய்வாளர் வழியிலேயே கீழ்க்கண்டவாறு கூறுகின்றார்.

ஓரிடத்தில் புறப்பட்டுப் பிறிதோரிடத்தில் சேருதல் ஆங்கிலத்தில் *arrive* எனப்படுகிறது. இந்தச் சொல்லின் வரலாறு நமக்குக் 'கரையேறுதல்' வழக்கினை அப்படியே நினைவுபடுத்தி மகிழவைக்கிறது. *ad* என்பதற்குச் சேரும் என்பதும் *'ripa'* என்ற இலத்தீன் சொல்லிற்கு ஆற்றின் கரை என்பதும் பொருள். *'ripa'* என்ற சொல் ஆற்றைக் குறிக்கும் *river* சொல்லுடன் நெருங்கிய தொடர்புடையது (*Merriam - Webstar's dutionary*) இந்த *ad* என்பது, வருமொழிக்கேற்ப *'ar'* எனத் திரிந்து *'arripa'* என்ற சொல்லை உருவாக்குகிறது. *'arripa'* என்ற சொல்லே, பிறகு *'arrive'* என ஆங்கிலச் சொல்லாயிற்று. பழங்காலத்தில் நீர்ச்செலவு துன்பமாக இருந்ததை ஒட்டிப் பெருந்துன்பத்தின் பின் கரையைச் சேர்ந்ததை மிகப்பெரும் ஆறுதலாகக் கருதினர். அப்பொழுது உருவாகிய சொல்தான் *arrive*

ஆனால் இன்று பொதுவில் ஒரிடம் விட்டும் ஒரிடம் தரைவழியில் சேர்வதைக் கூட *arrive* என்றே அழைக்கிறோம்.

மேலும், *derive* என்னும் சொல் ஆற்றைக் குறிக்கும், *'riv'* என்பதோடு தொடர்புடையதையும் கூறி, ஓடிவரும் ஆறு அடுத்தடுத்துப் பாய்ந்து கொண்டே செல்கிறது. இதே கருத்தடிப்படையில்தான் ஒரு மூலத்திலிருந்து கிளைக்கும், சிறு கிளைகளைக் குறிக்கவும் *derives = derive (away from, river to another bed)* என்னும் சொல் பிறந்ததாகக் கூறுகின்றார். மேலும், அருவி வழிப்பிறந்த ஆங்கில *'rivulet'* (ஜெர்மனிய *rhine* சலவேலைய *reka*, மத்திய ஐரிஸ் *rian*, கோதிக் *rinnan*, பழைய ஆங்கில *rip* மற்றும் *rinnan*, டச்சு *ril*, இலத்தின் *rhenus*, பிரெஞ்சு *rhin*, கிரேக்க *rhenos* போன்ற ஆற்றைக் குறிக்கும் பல மொழிச் சொற்களையும் காட்டுகின்றார். மேற்கண்டவாறு அருவி *river* ஆய்வை முன்னும் பின்னும் விரித்துக் காட்டுகின்றார் அரசேந்திரனார். நல்ல விதை காலம் தாழ்ந்தும் முளைக்கும் என்பது போல சற்றொப்ப நூற்றி ஐம்பது ஆண்டுகள் கழித்து அருவியின் வரலாறு மேலும் விரிவது அவ்வாய்வின் கருதுகோள் உண்மை என்பதை நிறுவும், மேலும் நல்ல ஆய்வு மென்மேலும் விரியும் என்பதையும் இவ்வாய்வு நிறுவும்.

Ireland - இல் தமிழின் பனியும் பொழுதும்

அரசேந்திரனாரின் *Ireland*-இன் சொல்வரலாறு, கால்டுவெல்லாரின் அடிப்படையைக் கட்டி எழுப்புவதாகவும், கால்டுவெல்லார் விட்ட இடத்தில் அரசேந்திரனார் தொடங்குவதாகவும் அமையும். அரசேந்திரனார் 'இமை'என்னும் சொல் உச்சி என்னும் பொருளது என்றும், உயர்ந்த உச்சியைக் கொண்ட மலையையே தமிழர் இமையம் - இமயம் என்றழைத்தனர் என்றும் கூறுகின்றார். இச்சொல் 'இமையக்காளம்'என அகம் (399, 2) லும் 'பேரிசை இமயம்'எனப் பதிற்.11, 23 லும், 'இமையம்'என (கலித். 38.1; 92.18; 105.75) லும் 'இமையவில்'எனக் கலி. 38.1 லும் ஆளப்பட்டமையை (சங்க இலக்கியங்களிலும்) அறிவிக்கின்றார். மேலும் இந்தத் தமிழின் இமையே சிமை ஆனதை அவருக்கே உரிய ஒப்புநோக்கு எடுத்துக்காட்டுகளைக் கொண்டு கீழ்க்கண்டவாறு நிறுவுகிறார்.

இப்பி > சிப்பி, இமிழ் > சிமிழ், இஞ்சிவேர் > சிஞ்சிவேர் என்பன போலவே இமை > சிமை எனத் திரிந்தது. இந்த சிமை என்ற ஆட்சி சங்க இலக்கியத்தில் (அகம் 138.8 : 145.4) இருப்பதையும் எடுத்துக் காட்டுகின்றார். தமிழின் இவ் இமையே சமற்கிருதத்தில் 'ஹிம'எனத் திரிந்து உயர்ந்த மலையைக் குறித்த தமிழ்ப்பொருள் அங்கு உயர்ந்த மலையிலிருந்த பனியைக் குறித்தது என்னும் இவர் ஆய்வு இமயத்தை விடப் பெரியது.

17. *Deraniyagala, S.U. 2004. A Bridge to India ; Frontline; Chennai 18.06.2004.*

18. *Devaneyan G.1940 Oppiyal Moli Nool.*

1966. The Primary Classical Language of the world.

2004. Nostratics, The Light from Tamil according to Devaneyan with 50 page introduction by P.Ramanathan

19. *Dixon, R.M.W. 1980. The Languages of Australia; Cambridge Uty Press.*

1997 The rise and fall of Languages. Cambridge Uty Press.

2002 Australian Languages. Cambridge Uty Press.

20. *Dunn, Michael et al. 2011 'Evolved Structure of Language shows Lineage-Specific Trends in Word-Order Universals' Nature Vol.473, 5 May 2011, pp.79-82*

21. *Fitch, W.Tecumseh 2010. The Evolution of Language, Cambridge University Press.*

22. *Flemming M.C. 2004. Submarine prehistoric Archaeology of the Indian continental shelf - a potential resource. Current Science 86:9 pp 1225-30.*

23. *Gnanaprakasar, S. 1938-48 The Etymological Comparative Lexicon of the Tamil Languages.*

24. *Gordon, Junior and Raymond 2005 Ethnologue: Languages of the world; 15th edition; Dallas pp 1272*

25. *Greenberg, J.H. 2000 / 2001 Indo-European and its closest relatives - the Eurasiatic language family. Vol-I Grammar; II Lexicon. Stanford University press; California*

26. *Grirson, G.A. 1906 Linguistic Survey of India Vol. IV Munda and Dravidian Languages.*

27. *Hakola Dr.H.P.A; 2009 Lexical Affinitics between Tamil and Finnish; Kuopio, Finland. He lists 765 word - pairs.*

28. *Haspelmath, Martin and others. 2003, The world Atlas of Language Structures O.U.P.*

29. *Heras, Father Henry 1953 Studies in Proto - Indo - Mediterranean Culture; Bombay.*

30. *Janda, Richard D and Brian D. Joseph. 2003. The handbook of Historical Linguistics; London. Blackwell*

31. *Jones, Martin. 2004. 'Archaeology and the genetic revolution' at pp 39-51 of A Companion to Archaeology (Ed. John Bintliff) Oxford; Blackwell*

32. *Kasinathan, Natana. 2004 'Date of early Tamil epigraphs' Journal of Tamil Studies; Chennai: June 2004.*

33. *Krishna, K.V.S.; 2009. Antiquity of Indian Languages; Kalvettu; Tamil Nadu State Department of Archaeology, Chennai*

34. *Krishnamurthi, Bhadriraju. 2003. The Dravidian Languages; Cambridge University Press.*

35. *Lahovary, N 1963. Dravidian Origins and the west; Orient Longmans : Madras*

36. *Larson, Richard K. et al. (2010) The Evolution of Human Language: Biolinguistic perspectives. Cambridge Uty Press.*

37. *Legrand. 1954 Tamil loan words in Greek. Tamil Culture II - 1 Jan 1954*

38. *Levin Roger. 2005 (VEdn) Human evolution, an illustrated introduction; London; Blackwell*

39. *Levitt, Stephen Hillyer. 2007. 'A Word for Horse in Chinese and Dravidian' International Journal of Dravidian Linguistics: Thiruvananthapuram June 2007.*

2010 Fortunatov's Law and Dravidian. IJDL. Jan. 2010.

40. *Majumdar, Partha P. 2003 'Peopling of India, Insights from Genetics' in Cooper. Encyclopaedia of Human Genome Vol. 4. London.*

41. *Maraimalaiyadial 1903 Mullaipattu Araichiyurai.*

42. *Masica, Colin P.2001 Paper in The Year Book of South Asian Languages and Linguistics presented at Dec 1999 Tokyo seminar on South Asian languages, Contact, Convergence and typology; New Delhi, Sage publications.*

43. *Mulvaney, John and John Kamminga. 1999. Prehistory of Australia. Sydney; Allen and Unwin*

44. *Nilakanta Sastri. 1976 (IV Edition) A History of South India; CUP*

45. *Oppenheimer, Stephen 2003. The Real Eve: Modern man's Journey out of Africa; London, Constable*

46. *Pichappan.R reports in The Hindu 23.08.2007 and 16.04.2008*

47. *Possehl, Gregory. 2002 The Indus Civilisation, a contemporary Perspective.*

48. *Rajan K. 2004 Tolliyal nokkil Tamilakam, Chennai; IITS*

49. *2005. The emergence of Early Historic period in Tamil Nadu Proceedings of Tamil Nadu History Congress: 12th Session, Mayiladuthurai.*

50. *Reports in The Hindu dated: 29.8.2011 and 15.10.2011*

51. *Ramanathan P. 1998 A New account of the History and culture of the Tamils, Chennai SISSW Publishing Society.*

2002. Situating Indus Valley civilisation in the prehistory of India. PILC Journal of Dravidic Studies; 12: 1-2:

2003. Direction of movement of Dravidian speakers in pre-historic times, Dravidian Studies (Kuppam Andhra Pradesh) 1-3 April - June 2003.

2008. (a) Nostratics - Gnana Mutal moli Aayvugalukku Pavanar tharum oli; International Institute of Tamil Studies, Chennai.

2008. (b) 'Hypothesis of the proto-Dravidian provenance of the Indus civilization - An update in the light of current progress in various disciplines' Arima Nokku Vol 2-2 July 2008.

2008. (c) Tamilar Varalaru, Inraiya Nokkil: Pantu Mutal Inru Varai, Tamil Mann; Chennai-17

52. *Renfrew Colin. 1997. 'World Linguistic diversity' and farming dispersals' in Blench, Roger and M.Spriggs: Arhcaeology and Language: Vol - I Technical and Methodological Orientations; London, Routlodge*

1999. 'Reflections on the Archaeology of Language diversity' pp 1- 32 of Sykes; 1999

53. *Ruhlen, Merritt, 1994. On the Origin of Language ; studies in Linguistic taxonomy [see at pp 277-336 Chapter on 'Global Etymologies' by John D. Bengtson and Ruhlen]; Stanford University Press.*

54. *Sebeok, Thomas A. 1971 Current trends in Linguistic, Vol. 1. Linguistics in Oceania. Part II.*

55. *Southworth F.C. 2005. Linguistic Archaeology of South Asia; London*

56. *Sjoberg, Andree F. 2009 Dravidian Language and Culture. Dravidian Uty Kuppam, Andhra Pradesh.*

57. *Sterker, Johanson 2005. Origins of language; constraints of hypothesis; Amsterdam; John Benjamin*

58. *Stringer, Chris 2000. 'Palaeoanthropology: Coasting out of Africa', Nature Vol405. 4 May 2000, pp.203-205.*

59. *Sykes, Bryan. 1999. The human inheritance - genes, language and evolution: Oxford University Press.*

60. *Swadesh, Morris, 1972. The Origin and Diversification of Language : London, Routledge*

61. *Szalek, Benon Zbigniew. 2006 Lycian, Lydian and other ancient Languages in the light of Heuristics and Cryptology - A research hypothesis: Poland.: He argues that Lycian, Lydian - even old Egyptian are closely related to Dravidian and Tamil.*

62. *Trask. R.L. (1996) Historical Linguistics; London, Arnold*

2000 The dictionary of Historical and comparative Linguistics. Edinburg University Press.

63. *Turner, Ralph Lilly. 1966. A comparative Dictionary of the Indo - Aryan Languages. O.U.P.*

64. *Vacek, Jaroslav, 1996; paper in Archiv Orientalni: 64; Praga: Czech Republic*

65. *Winston, Robert. 2008 Illustrated Encyclopaedia of the Human D.K. Publications London.*

66. *Wright, Robert. 1991. 'The quest for the Mother Tongue' The Atlantic Monthly; April 1991; pp 39- 68. (Best introduction to 'Mother Tongue studies'. But wright was not aware of the work of Caldwell, Devaneyan etc.)*

67. *Szalek Benon Zbigniew.2006. Lycian, Lydian and other ancient languages in the light of Heuristics and Cryptology - A research hypothesis. He argues that Lycian and Lydian - even old Egyptian are closely related to Tamil/Dravidian.*

68. *Zvelebil, K.V. 1972. The descent of the Dravidians; International Journal of Dravidian Linguistics I -2; Thiruvananthapuram.*

1990. Dravidian Linguistics, an introduction; Pondicherry : PILC.

1974/2005. Article on 'Dravidian Languages' in Encyclopaedia Britannica.



21. கால்டுவெல்லும் திராவிடர் இயக்கமும்

முனைவர் க. நெடுஞ்செழியன்
உலகத் தமிழ்மொழி மெய்யியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்
திருச்சி

கிறித்துவ சமயப் பரப்பலுக்காகத் தமிழ்நாடு வந்து தமிழைக் கற்று தமிழுக்கு மாபெரும் தொண்டாற்றிய அருட்பணியாளர்களுள் கால்டுவெல்லும் ஒருவர். வீரமாமுனிவர், போப் அடிகள் ஆகியோரின் வரிசையில்வைத்து எண்ணத்தக்கப் பெருஞ்சிறப்பினர். உலகமொழிகள் குடும்பங்களாக வகைப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் தமிழ்க் குடும்பத்தின் மொழிகளைப் பற்றி ஆராய்ந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலைத் தந்தவர். அதன் வாயிலாகத் தமிழின் மேன்மையை உலகறியச் செய்தவர்.

திராவிடர் இயக்கம், தமிழரின் மானமீட்பு இயக்கம். இது பல படிநிலைகளைக் கண்டது. தன்மதிப்பு இயக்க (சுயமரியாதை இயக்க)மாக, தனித்தமிழ் இயக்கமாக, இந்தி எதிர்ப்பு இயக்கமாக, தமிழிசை இயக்கமாக வடிவம் கொண்டு பின்னர் திராவிடர் இயக்கமாக மலர்ந்தது. இதனைப் பேராசிரியர் க.அன்பழகன்,

> ..மனித இனத்திலே பிறப்பினால் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என்ற பேதத்தால் ஏற்பட்ட கேட்டினை எதிர்க்கப் பிறந்த இயக்கமே சுயமரியாதை இயக்கம். இனங்களிலே உயர்வு தாழ்வு கற்பித்து, ஆரியம் அனைத்திலும் உயர்ந்தது திராவிடம் தாழ்ந்தது என்னும் ஆதிக்க வாதத்தை ஒழிக்கப் பிறந்ததே திராவிடர் இயக்கம். மொழிகளிலே வடமொழி உயர்வான, தேவமொழி, தமிழ்மொழி நீசமொழி - சூத்திர பாடிஎன்னும் பித்தந் தெளியப் பிறந்ததே தமிழ் இயக்கம்-தனித்தமிழ் இயக்கம். இந்திமொழி ஒன்றே இந்தியாவின் ஆட்சிமொழி உரிமைகொண்ட தேசியமொழி! பிற மொழிகள் யாவும், தமிழ் உட்பட இந்தியின் மேலாதிக்கத்தை ஏற்று, அதற்குப் பணிசெய்துகிடக்கும் தகுதி உடைய மொழிகளே என்னும் இழிவுக்கும் ஏளனத்திற்கும் தமிழ் ஆளாகாது காக்கப் பிறந்ததே இந்தி எதிர்ப்பு

இயக்கம். பிறப்பால், இனத்தால், மொழியால் ஏற்பட்டுவிடுகின்ற வாய்ப்புகள் வேறுபட்டதால் தமிழர்கள்- திராவிடர்கள் நான்காம்தரச் சாதியாக, தாழ்ந்த இனமாக, இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கப்படும் நிலையைத் தகர்க்கப் பிறந்ததே திராவிடர் இயக்கம்.[1]

என அடுக்கிக்காட்ட அறியலாம்.

கால்டுவெல் மொழிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றி ஆராய்ந்தவர். தமிழின் மறுமலர்ச்சிக்கும், அதன் எழுச்சிக்கும் பாடுபட்டதுடன் அம்மொழி பேசும் மக்களின் இழிநிலையைத் துடைப்பதற்கும் பாடாற்றும் இயக்கம் திராவிடர் இயக்கம். கால்டுவெல் தம்நூலை முதன் முதலாக வெளியிட்டது கி.பி.1856இல். திராவிடர் இயக்கத்தின் மூலவடிவமாகிய தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றம் கொண்டது கி.பி.1916இல். 60ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் தோன்றிய அவ்வியக்கத்திற்கு உரமாகவும் நீராகவும் கால்டுவெல்லின் நூல் எவ்வாறு அமைந்தது என்பதை ஆராய்வதே இக்கட்டுரை. அத்துடன் கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் எழுதப்படுவதற்கு முன்னரும், வெளிவந்த நிலையிலும் தமிழகத்திலும், பொதுவாக இந்தியாவிலும் ஏற்பட்ட அரசியல், குமுகவியல், மொழியில் துறைகளில் நிலவிய சூழல்களையும், அச்சூழல்களின் பின்விளைவுகளையும் குறித்து ஆராய்வதும் இக்கட்டுரையின் நோக்கம்.

திராவிடம் சொல்லாட்சி

இன்றைய தமிழக அரசியலில் திராவிடம் எனும் சொல் ஒரு விவாதப் பொருளாக மாறிவிட்டது. எரிந்தகட்சி, எரியாதகட்சி என்பதைப் போலத் திராவிடம் எனும் கருத்தியல், அவரவர் விருப்பு வெறுப்பிற்கு ஏற்ப அடிப்படையில் உருமாறி விட்டது. அதனால் அதன் வரலாற்றுப் பங்களிப்பும் இருட்டடிப்புக்கு உள்ளாகி விட்டது.

திராவிடம் என்ற சொல்லின் பிறப்புப்பற்றி மூன்று விதமான கருத்துகள் நிலவுவதை ஆய்வாளர் சே.இராசேந்திரன் எடுத்துக்காட்டுவார்.

1. திராவிடம் என்னும் வடமொழிச் சொல்லே தமிழாகத் திரிந்தது.
2. தமிழ் என்னும் சொல்லின் வடமொழித் திரிபே திராவிடமாயிற்று.
3. திருவிடம் என்பதே திராவிடமாயிற்று. [2]

இம் மூன்று நிலைகளில் வடமொழிச் சார்பாளர்களின் கூற்றே முதலாவதாகும். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய கால்டுவெல்கூட வடமொழிச் சார்பாளர்களின் நோக்கிலேயே இச்சொல்லை ஆராய்கின்றார்.

தமிழ் - திராவிட என்ற இரு சொற்களும் முற்றிலும் வேறுபடுவனவாகத் தோன்றினும், பிறப்பியல் முறையால் அவை ஒரு தன்மைய என்ற முடிவினையே நான் கொள்கிறேன். அவை இரண்டையும் ஒன்றெனவே கொண்டால், தமிழ் என்ற சொல்லில் இருந்து திராவிட என்ற சொல்லைத் தோற்றுவிப்பதைக் காட்டிலும், தமிழ் என்ற சொல்லைத் திராவிட என்ற சொல்லில்இருந்து தோற்றுவிப்பதே எளிதாம் என்பது புலனாம்.[3] எனும் அவரின் கூற்றால் அறியலாம். ஆனாலும் இச்சொல் குறித்த கால்டுவெல் தரும் கூடுதல் தகவல்கள் அவரின் மேற்கூறிய கூற்றிற்கு முரணாக அமைந்துவிடுகிறது. திரமிளர் என்னும் சொல்லில் இருந்தே திராவிடம் எனும்சொல் அமைந்திருக்கும் என ஊகிக்கும் வகையில்,

> ... 1573 இல் திபேத்திய மொழியில் எழுதப்பெற்ற 'இந்தியாவில் புத்தமதம் பரவிய வரலாறு' எனும் தாரநாதரின் நூலில் டகரம் ளகரமாகத் திரியும் திரிபால் திராவிடர் திரமிளர் என அழைக்கப்பட்டுள்ளனர். மலையாள மொழியில் எழுதப்பட்டுள்ள புராணங்களில் இச்சொல் பெறும் வடிவம் இதுவே என்று குண்டர்ட் அறிவித்துள்ளார். சிங்கள வரலாற்று நூலாகிய மகாவம்சம் எனும் பாலிமொழி நூலில் வழங்கும் வடிவம் 'தமிலோ' என்பதாகும்.[4]

என்று கூறியுள்ளது எண்ணத்தகும்.

> 'திராவிடம்' எனும் வடசொல்லின் திரிபே தமிழ் என்றால் வடவாரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பாலிமொழியில், தமிழ் எனும் சொல் சிதைந்து 'தமிலோ' என வழங்கியிருக்க முடியாது. அதனால் திராவிடம்தான் தமிழாயிற்று எனும் கூற்றில் உண்மை இருக்க முடியாது. இதற்கு மாறாகத் தமிழே திராவிடமாக மாறியது என்பாரின் கூற்றை இனிக்காணலாம். அறிஞர் கிரையர்சனின் கருத்தை, தமிழ், தமிழ், த்ரமிள, த்ரமிட, த்ரவிட, திரவிட என்று தமிழின் திரிபே திராவிடமாயிற்று. பவழம் என்னும் தமிழ்ச்சொல் ப்ரவாளம் என்று வடமொழி ஆசிரியர்களால் திரித்து வழங்கப்பட்டுள்ளதைப் போலவே தமிழும் திரிந்து வழங்கப்பட்டது.[5]

என மேற்கோள் காட்டுவார் கே.இராசேந்திரன். மேலும் இந்த மாற்றம் எந்த மொழியிலிருந்து தொடங்கியது என்பதை,

> பிராகிருத மொழியில் தமிழ் எனும் சொல் சிதைந்து திரமிளம் என்றுவழங்குகிறது. அந்தப் பிராகிருதச் சிதைவு மேற்கோள் சொல்லே திராவிடமாயிற்று என்பது 'இந்தியாவின் சமயங்கள்' எனும் நூலாசிரியரான எ.பி. கார்மர்கார் என்பாரின் கூற்றாகும்.[6]

எனவும் மேற்கோள்காட்டுவார்.

மொழிஞாயிறு பாவாணரும், 'வடநாட்டு ஆரிய (சமற்கிருத) நூல்களில் திராவிடம் என்னும் சொல் முதலாவது த்ரமிளம் என்றே வழங்கிவந்தது. ழகரம் வடமொழியில் இல்லை. சில உயிர்மெய் முதல்களை ரகரஞ் சேர்த்து த்ர, ப்ர எனப் புணர் எழுத்துக்களாகத் திரிப்பது வடநூலார் வழக்கம். எ.டு: படி - ப்ரதி, பவளம்-ப்ரவளம், இதனால் தமிழம் என்னுஞ் சொல் த்ரமிளம் எனத் திரிந்தது இயல்பே. பின்பு அது நாளடைவில் த்ரமிடம், த்ரவிடம் எனத் திரிந்தது. ள-ட, ம, வ. போலி. த்ரவிடம் என்பது மெய்ம்முதலாதலின் தமிழில் திரவிடம் என்றாகிப் பின்பு திராவிடம் என நீண்டு வழங்குகின்றது.".

எனத் தமிழம் என்பதே த்ரமிளம் - திராவிடம் எனத் திரிந்ததாகக் குறிப்பார். மேற்காட்டிய அறிஞர்களின் கூற்றில் எ.பி.கர்மர்கார் அவர்களின் கருத்தே வரலாற்று ஆவணங்களால் உறுதி பெறுகிறது.

சைனர்

சைன சமயம், பௌத்த ஆசீவகச் சமயங்கள் தோன்றிய அதே கி.மு.ஆறாம் நூற்றாண்டில் தோன்றியது. இதனைத் தோற்றுவித்தவர் மகாவீரர். இவரும் ஆசீவகத்தின் நிறுவனராகிய மற்கலியும் நண்பர்களாக இருந்து ஆதிநாதர், பார்சுவநாதர் மரபில் வந்து பின்னர்த் தனித் தனியே பிரிந்தவர்கள். ஆசீவகம் தமிழகத்தில் தோன்றி இந்தியா முழுவதும் பரவியது. கிரேக்கத்தின் வழியாக இத்தாலியில் ஸ்டாயிசமாகவும் கிளைத்தது. மகாவீரரிடம் இருந்து முரண்பட்டுப் பிரிந்ததால் சைனமும் ஆசீவகமும் நேரிட்ட பகைச் சமயங்களாகத் தம்முள் மோதிக்கொண்டன. அதே வேளையில் பௌத்தமும் ஆசீவகமும் நட்பு பாராட்டின. அசோகன் ஆசீவகத்தைப் புரந்தவன். ஆசீவகத் துறவிகளுக்குக் கற்குகைகளையும் கற்படுக்கைகளையும் அமைத்துக் கொடுத்தவன். அசோகன் பௌத்தம் தழுவி-பௌத்தக் கோட்பாடுகளைப் பரப்பிய அதே காலகட்டத்தில் தமிழக மூவேந்தர்களும் தம் மண்ணிற்குரிய ஆசீவகச் சமயத்தைப் பேணியும் தழுவியும் நின்றவர்கள். அசோகனுக்கு நண்பர்களாகவும் இருந்தவர்கள். அசோகன் தன் மகனையும், மகளையும் தமிழ்நாட்டின் வழியாக இலங்கைக்கு அனுப்பியபோது, அவ்விருவரையும் நன்கு வரவேற்றதுடன் பௌத்த சமயக் குறியீடுகளான தூண்களையும், விகாரைகளையும்கூட அமைத்துத் தந்துள்ளனர். இவற்றைப் பார்ப்பதற்காகவே யுவான்சுவாங் எனும் பௌத்தத் துறவி சீனாவில் இருந்து தமிழகம் வந்துள்ளான்.[6] அதனால் பௌத்தம் தமிழ்நாட்டில் ஏறத்தாழ அசோகன் காலத்திலேயே நன்கு வேர்விட்டிருந்தது புலனாகும். ஆசீவகமும், பௌத்தமும் சைனத்திற்குப் போட்டிச் சமயங்களாக இருந்ததாலும், அவ்விரண்டுள் தமிழகத்தில் பெருஞ்செல்வாக்கைப் பெற்ற சமயமாக ஆசீவகம் திகழ்ந்ததாலும் சைனசமயம் தமிழகத்தில் நுழைய முடியாதிருந்தது.

மூவேந்தராட்சி மறைந்து களப்பிரர்களும் பல்லவர்களும் தமிழகத்தின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்தில்தான் சைனம் தமிழகத்தில் நுழைந்தது. களப்பிரர் சைனச்சார்பினர். பல்லவர் வைதிகச் சார்பினர். இவ்விரண்டு சமயங்களும் ஆசீவகத்தின் கடும் எதிரிச்சமயங்கள். அதனால் ஆசீவகத்தை அழிக்கும் வகையில் ஆசீவக நிறுவனங்களைச் சைனர்கள் கைப்பற்றித் தமதாக்கிக் கொண்டனர்.[9] இம்முயற்சியில் பல்லவர்களின் பங்களிப்பு மிகுதி.

கி.பி.570 இல் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன் சிம்மவிஷ்ணு எனும் பல்லவன். இவன் நந்திகணத்தைச் சேர்ந்த வஜ்ரநந்தி எனும் சைனத்துறவிக்கு, ஆசீவகர்கட்குரிய 'அமண்பாக்கம்' எனும் ஊரை, குடிநீக்கி, கோல்நீக்கித் தாரை வார்த்துக் கொடுத்ததைப் பள்ளன்கோவில் செப்பேட்டால் அறியலாம். இதே வஜ்ரநந்தி எனும் சைனத் துறவிதான் சங்கம் வளர்த்த மதுரையில் முதன் முதலாகச் சைன சமயத்திற்கான பள்ளியை நிறுவியவர். அவர் நிறுவிய சங்கம் 'திரமிளசங்கம்' என்பதாகும்.[10] சைனர்களின் சமயமொழி பிராகிருதம். ஆசீவகத்தின் சமயமொழி தமிழ். ஆசீவகத்தின் மீது சைனர்கள் கொண்டிருந்த காழ்ப்பு, தமிழின் மீதுள்ள காழ்ப்பாகவும் மாறியது. அதன் காரணமாகவே சைனர்கள் தமிழைச் சிதைக்கும் வகையில் பிராகிருத மொழிக்கலப்பை ஊடுருவச் செய்தனர். அதன் விளைவே மணிப்பிரவாளநடை முதன் முதலாகத் தமிழில் தோன்றியது. இதன் தொடர்ச்சியே பின்னர் மாலியமரபினர், வைதிகம் உருவாக்கிய உரைநடைத் தமிழில் சமற்கிருதம் கலந்த மணிப்பிரவாள நடையைப் புகுத்தியதாகும்.

வஜ்ரநந்தியால் உருவாக்கப்பட்ட சைனசங்கம், தமிழ்நாட்டுக் கிளை எனும் பொருளிலேயே 'த்ரமிள சங்கம்' எனும் பெயரால் அழைக்கப்பட்டது. பாகதச் சிதைவாகிய த்ரமிளம் என்பதே சமற்கிருதத்தில் 'திராவிடம்' என உருமாறியது. திராவிடம் எனும் சொல் தற்போது கிடைக்கும் சான்றுகளின்படி குமாரிலபட்டர் எனும் மீமாம்சகரால்தான் முதன் முதலாகக் குறிக்கப்பட்டுள்ளதாக அறிஞர்கள் கூறுகின்றனர். கால்டுவெல் காட்டும் ஏ.சி.பர்னலின் மேற்கோள் வருமாறு.

நாம் அறிந்த தென்னிந்தியாவின் தொன்மைக்கால நாகரிக வரலாறு அனைத்தும் சைனர்களோடு தொடர்பு கொண்டனவாகவே உள்ளன. கி.பி.639-40 இல் ஆந்திரம்-தமிழகப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்த சீனப் பயணியாகிய யுவான்சுவாங், அப்பகுதிகளில் திகம்பரப்பிரிவு சைனர்கள் நிறைந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பௌத்தர்களும் அங்கு ஒருசிலர் இருந்ததாகக்

குறிப்பிடும் அவர் பார்ப்பனர்களைப் பற்றி ஒருவார்த்தைகூடப் பேச வில்லை. குமாரிலபட்டர், ஆந்திர-திராவிட பாஷை எனக் கூறியுள்ளது தெளிவற்றதாக இருந்தாலும் அம்மொழிகளைப் பற்றிய ஆய்வு கி.பி. எட்டாம் நூற்றாண்டளவிலேயே தோற்றம் கொள்கிறது என்பதன் அடையாளமாகவே அதனைக் கருத வேண்டும். குமாரிலப்பட்டர் தெளிவாகக் கூறவில்லை என்றாலும் ஆந்திர-திராவிட மொழிகள் இழிந்தவர்களின் மொழிகளாக-பார்ப்பனர் அல்லாத நாகரிக மற்றவர்கள் மொழிகளாகவே-அவற்றைக் கருதினார் என்பதை ஊகிக்க முடிகிறது.[11]

குமாரிலபட்டர் மீமாம்சகக் கோட்பாட்டினர். மீமாம்சகர்கள் கடவுளைவிட வேதங்கள் உயர்ந்தவை என்றனர். வேள்விச் சடங்குகளைப் போற்றிப் பாதுகாத்தனர். வேதங்களை 'ஒபுருமீயம்' அதாவது மனிதர்களாலோ கடவுள்களாலோ படைக்கப்படாதவை என்றனர். இவர்கள் வேதங்களின் இரண்டு பிரிவுகளில் ஒன்றான கர்ம காண்டத்தைப் பின்பற்றியவர்கள். மற்றொரு பிரிவான ஞானகாண்டத்தைப் பின்பற்றியோர் அத்துவைதிகள். மீமாம்சகர்கள், வேதங்கள் ஒலிமயமாக இருப்பவை என்றும், அதனால் அவை அழிவற்றவை என்றும் நம்பியவர்கள். அதன் காரணமாகவே தமிழ் மரபில் இக்கோட்பாடு மிகவும் கண்டனத்திற்கு உள்ளானது. 'ஒலி முயற்சியால் பிறத்தலின் அது அழியும் என்பது தமிழ்அறிவியல்'. அந்த அறிவியல் நோக்கே தமிழர்களை- திராவிடர்களை 'மிலேச்சர்கள்' எனக் குமாரிலபட்டர் ஏளனம் செய்து இழிவுபடுத்தியற்கான காரணமாக இருக்கவேண்டும். எனினும் ஞானகாண்டத்தைப் பின்பற்றிய அத்துவிதக் கோட்பாட்டினரான சங்கரர், 'திராவிடம்' என்னும்சொல்லைஉயர்வானபொருளிலேயேபயன்படுத்தியுள்ளதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

திராவிட சிசு

அழகின் அலைகள்' எனப் பொருள்படும் 'சௌந்தர்ய லகரி' எனும் நூல் சங்கரரால் இயற்றப்பட்டது. மலை மகளாகிய பார்வதியை ஏற்றிப்பாராட்டுவது அந்நூல். அந்நூலில் பார்வதியைப் பாராட்டும் வகையில் அவளின் முலைப்பாலைப் பருகிய ஞானசம்பந்தன் பெருங்கவிஞனாகத் திகழ்ததைக் கூறுவார். அப்பாடலின் மூலவடிவில் 'திரவிடசிசு' என்றே குறித்துள்ளார். அப்பாடலின் தமிழ் வடிவம்:

பனிமலையின் சுடர்க்கொடியே பார்வதிநின் இதயப்
பாற்கடலின் வடிகாலே பளிங்கொத்த வாணி
நனிசிறக்க வாக்கருளி நானிலமே வாழ
நல்லதொரு சுரநதியாய் நின்நகிற்பா லானாள்

கனிவுடைய தாயேநின் நகிற்பாலை உண்ட
கவுணியனும் சிவஞானப் பெரும்புலமை யுற்று
தனியுறுநன் மனம்நிறைந்தே எவர்மனமும் கவரும்
தவக்கவிஞன் ஆகிவிட்டான் தாயேநின் அருளே![12]

என்பதாகும்.

மலையரசன் மகளே! உன்னுடைய முலைப்பால் இதயத்திலிருந்து வழியும் அமுதப்பிரவாகம் போலவும், வாக்கிற்குத் தேவதையாகிய கலைமகளே அவ்வுருக் கொண்டு வந்தாற்போலவும் பெருகுவதாக நான் கருதுகிறேன். ஏனெனில், கருணை ததும்பும் உன்னுடைய பாலை அருந்திய 'திராவிடக்குழந்தை' (ஞானசம்பந்தன்) தலைசிறந்த கவிஞர்களுக்குள் மனதைக் கவரும் கவிஞனாக ஆகிவிட்டான் அன்றோ.[13] என்பது அப்பாடலின் கருத்து.

குமாரிலபட்டர், சங்கரர் இருவருமே வைதிக நெறிகளைப் போற்றியவர்கள். இருவரும் தொத்த சமயத்தைக் கடுமையாக எதிர்த்தவர்கள். தமிழ்மரபில் குறிப்பாகச் சைவ மரபில் இருவருமே பெரும் கண்டனத்துக்கு உள்ளானவர்கள். அதிலும் சங்கரர் சைவசமயத்தைக் கண்டித்தவர்; மறுத்தவர். அப்படி இருக்க, ஞானசம்பந்தரை ஏற்றிப் போற்றுவதன் காரணம் ஆராயத்தக்கது. எனினும் இங்கு நம் கவனத்திற்கு உரியவை 'திராவிட – சிசு' என்ற இருசொற்களுமே ஆகும். 'திராவிடசிசு' என்பது தமிழ்க் குழந்தை அல்லது 'தமிழகக் குழந்தை' என்ற பொருளில் ஆளப்பட்டிருப்பதே உண்மையாகும்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் வடமொழி என்றும் ஆரியம் என்றும் சமற்கிருதத்தைக் குறிப்பர். சான்றாக,

ஆரியம் தமிழோ டிசையானவன்(132-3)

எனஅப்பரும்,

வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கு
மானவன்(2055)

எனத் திருமங்கையாழ்வாரும் பாடியதைக் காட்டலாம்.[14]

வைணவ உரையாசிரியர்கள் தமிழ் பற்றிக் கூறும்போதெல்லாம், அதனைத் 'திராவிடம்' என்றே குறிக்கின்றனர். இதனை,

'தமிழ் மொழியைக் குறிப்பதற்குத் 'திராவிடம்' என்ற சொல்லை இவர் (மணவாளமா முனிகள்) பயன்படுத்துவது கவனத்திற்குரியது. (நூற்பா 40,70,75) வைணவர்களில் பெரும்பாலோர் தமிழைத்

திராவிடம் என்றே குறிப்பிடுகின்றனர். திராவிடம் என்ற சொல் சைவர்களைவிட வைணவர்களிடமே மிகுதியாகப் பயின்று வந்துள்ளது. பன்னிரு ஆழ்வார்களும் தமிழைத் 'தமிழ்' என்றே குறிப்பிட்டனர். பிற்கால வைணவர்களே தமிழைத் திராவிடம் என்றனர். 'திராவிடவேதம்' த்ராவிட வேதசாகரம்' த்ராவிடோபநிஷத் சாகரம், த்ராவிடோபநிஷத்சங்கதி' த்ராவிடசம்கதா, த்ராவிடோபநிஷத் தாத்பர்யரத்னாவளி' எனத் திராவிடம் என்ற சொல்லை வைத்தே தொடர்கள் அமைத்தனர் வைணவர். தமிழில் வில்விபுத்துரார் எழுதிய பாரதம் கூட, 'திராவிட மகாபாரதம்' என்ற பெயரால் பிற்காலத்தில் புத்தகமாக வந்தது.[15]

என மேற்கோளுடன் விளக்குவர் ப.கிருஷ்ணன்.

இச்சான்றுகள் யாவும் 'திராவிடம்' என்றசொல், 'தமிழ்' எனும் பொருளிலேயே ஆளப்பட்டுள்ளது என்பதும், இச்சொல்லும் திரமிளம் எனும் பாகதச் சிதைவிலிருந்தே வடமொழியில் புகுந்தது என்பதும் தெளிவாகிறது. இந்நிலை ஏறத்தாழ தாயுமானார் காலம் வரை நீடித்துள்ளது. 'திராவிடம்' எனும் சொல்லையும் 'தமிழ்' என்னும் சொல்லையும் ஒருபொருள் குறித்த பல சொல்' எனும் நிலையிலேயே கையாள்கிறார் தாயுமானவர். இதனை,

.....வடமொழியிலே
வல்லா னொருத் தன்வர வுந்த் ராவிடத்திலே
வந்ததாவிவ ரிப்பேன்
வல்ல தமிழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்[16]

எனும் பாடலடிகளால் அறியலாம். இவ்வாறு திராவிடம் என்றசொல் தமிழின் திரிபாகி தமிழ்-தமிழ்நாடு ஆகிய பொருள்களில் வழங்கியுள்ளமை தெளிவாகின்றது. இவ்வாறு ஒரு மொழியின் பெயராகிய இச்சொல் ஒரு மொழியினத்தின் பெயராகத் தோற்றம் கொண்டது எப்போது?

ஜோன்ஸ்

கிழக்கிந்திய குழுமம் இந்தியாவில் காலூன்றிய பொழுது இந்திய மொழிகளைப் பயிலவேண்டிய தேவை தவிர்க்க இயலாததாயிற்று. அந்த வகையில் இரண்டு பள்ளிகள் உருவாயின. ஒன்று கல்கத்தா ஆசியக்கழகம். மற்றது சென்னைக் கல்விச்சங்கம். கல்கத்தாவில் நிறுவப்பெற்ற ஆசியக்கழகம், அதில் பணியாற்றிய கிழைத்தேயவியல் (*Orientalism*) அறிஞர்கள்குழு சமற்கிருத மேலாண்மையை நிறுவமுனைந்தது. இதன் வாயிலாக ஆரிய இன மேன்மை எனும் நச்சுப்போக்கு துளிர்த்துக் கிளைத்தது. உலக

மொழிகளைக் குடும்பங்களாக வரையறை செய்த மொழியியல் ஆய்வு கீழைத் தேயவியல் அறிஞர்கட்கு முன்னோடியானது. அவ்வறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் ஜோன்ஸ் (Jones) என்பராவார். 1784 இல் கல்கத்தா ஆசியக் கழகத்தில் இந்துக்களைக் குறித்து அவர் ஆற்றிய உரை அதற்கான சான்றாகும். இதனை,

சமற்கிருத மொழி அதன் பழமை ஒருபுறம் இருக்க, ஓர் அற்புதமான கட்டமைப்பை உடையதாக, கிரேக்கத்தைவிட முழுநிறைவானதாக, இலத்தீனைவிட வளமானதாக, இரண்டையும் விட திருத்தமானதாக இருந்த போதிலும் இந்த இரண்டோடும் ஒரு தற்செயல் நிகழ்வு எனக் கூறமுடியாத அளவுக்கு, ஒரு வலுவான உறவையும் கொண்டுள்ளது. இந்த உறவு, வினைகளின் வேர்ச்சொற்களிலும், இலக்கண வடிவங்களிலும் காணப்படுகிறது. இந்த வலுவான உறவு காரணமாக இந்த மூன்று மொழிகளையும் ஆராயும் எந்தஒரு மொழிநூலாரும், இவை மூன்றும், தற்போது இல்லாதுபோன ஒரு பொது மூலத்திலிருந்து கிளைத்தவை என்று நம்பாமல் ஆராய்ச்சியை மேற்கொள்ள முடியாது. கோதிக், கெல்டிக் மொழிகளும் ஓரளவு வேறுபட்ட சொல்லமைப்பைக் கொண்டிருப்பினும், இவற்றோடு தொடர்புடையன என்றும், இவையும் சமற்கிருதத்தோடு சேர்ந்த ஒரே மூலத்தை உடையவை என்றும் கருதுதற்கு-அக்கருத்து அவ்வளவு வலுவானதன்று என்ற போதிலும் - இடமுண்டு. பாரசீகத்தின் பழமை குறித்து விவாதிக்க நேர்ந்தால் இந்தக் குடும்பத்தில் அதையும் சேர்க்க வேண்டிவரும்.[17] எனும் அவரின் கூற்றால் அறியலாம்.

ஜோன்சின் இப்பேச்சே மொழியியல் ஆய்வுக்கான தொடக்கம் என்பார் தாமசு டிரவுட்மன்.

இந்தக் கருத்தாக்கம் வியக்கத்தக்க அளவுக்கு மிகவும் புதுமையானது. ஐந்து பழைய மொழிகளைச் சுட்டி, இவையெல்லாம் ஒரு பொதுவான மூலத்திலிருந்து கிளைத்தவை, அந்தப் பொதுமொழி தற்போது வழக்கில் இல்லை' என்று கூறுவதோடு இவை ஒரே மொழிக் குடும்பத்தவை என்றும்துணிகிறது. இந்தக் குடும்பம் இந்தோஐரோப்பிய மொழிக்குடும்பம் (இந்தப் பெயர் அப்போது சூட்டப்பட்டிருக்கவில்லை.) இந்தப் பொதுமூலம் தற்போது தொல் இந்தோ-ஐரோப்பியன் என அழைக்கப்படுகிறது. இந்தக் கருத்தாக்கம் தனித்தன்மை வாய்ந்தது. இதற்குமுன் ஐரோப்பாவிலோ இந்தியாவிலோ மொழியப்பட்டதில்லை... மொழிகளை ஒப்பிடுவதன் வாயிலாக இழந்துவிட்ட வரலாற்றை மீட்டெடுக்க மொழிநூல் உதவிற்று.[1] என்பதும் தாமசு டிரவுட்மனின் கூடுதல் விளக்கம்.

ஜோன்சின் இந்த மொழிக்குடும்பம் பற்றிய கருத்தாக்கம், சமற்கிருதம் அம்மொழிக் குடும்பத்தில் ஒன்று என்ற நிலைமாறி அம்மொழிக் குடும்பங்களின் தாயே சமற்கிருதம் எனக்கூறும் அளவிற்குச் சென்றது. ஜோன்ஸ் பணியாற்றிய கீழையியல் கழகம், சமற்கிருதத்தைத் தூக்கிப்பிடித்தது. இந்தோ ஐரோப்பிய மொழிகளின் தாய் சமற்கிருதம் என்று கூறியதுடன், தொன்மைச் சிறப்புவாய்ந்த தமிழ் உட்பட்ட இந்திய மொழிகள் பலவும் சமற்கிருதத்தில் இருந்தே கிளைத்தன என்றும் அவர்கள் பரப்புரை செய்தனர். பொய்யை மெய்யாக்கிக் காட்டும் அவர்களின் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர்கள் சென்னை கோட்டைக்கல்லூரியைச் சேர்ந்த எல்லிசும் அவர்களின் தோழர்களும் ஆவர். டிரவுட்மனின் 'திராவிடச்சான்று' (தமிழ்நூல்)பற்றிய குறிப்புரையில் ஆ.இரா.வேங்கடாசலபதி, இதனை,

> விரைவும் பரபரப்புமான இந்தக்களத்தில் தான் எல்லிசின் 'திராவிட மொழிக்குடும்பம்'என்ற கருத்தாக்கம் நிறுவப்பட்டது. 1814 இலேயே தெலுங்கைத் தமிழின் சகோதரி மொழி (Sister language) என்று எல்லிசு குறிப்பிட்டிருக்கிறார். (Madras Public Consultations, July 1814 P. 3697) வேறிடத்தில் தமிழ் பிற திராவிட மொழிகளின் பெற்றோர் (Parent) என்று சுட்டியிருக்கின்றார். 1816இல் காம்பெலின் தெலுங்கு இலக்கண நூலுக்கு முகப்பாக எழுதிய விரிவான ஆய்வுரையில் தெலுங்குக்கும் சமற்கிருதத்துக்கும் குடி உறவில்லை என்பதையும், தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு முதலானவை திராவிடமொழிக் குடும்பம் என்றும், சொற்கள் அளவிலான கொள்வினையே சமற்கிருதத்துடன் உண்டு என்பதையும் எல்லிசு நிறுவிக்காட்டினார். இதைத்தான் டிரவுட்மன் 'திராவிடச்சான்று' என்று குறிப்பிடுகின்றார். [19]

என்று விளக்குவார். அத்துடன் அமையாது 'எல்லிசு முன்வைத்த இந்தத் திராவிடச் சான்றே, கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணமாக முழுமை பெற்றதையும் கூடச்சுட்டிச் செல்கிறார். ஆயினும் கால்டுவெல், எல்லிசின் பங்களிப்பு குறித்து உரிய மதிப்பீடு தரவில்லை என்பதையும் பதிவு செய்கின்றார். 24.3.1817 இல் தம் நண்பரான எர்ஸ்கினுக்கு எல்லிசு எழுதிய கடிதம் ஒன்றில் தம் வருங்காலத் திட்டம் குறித்து தெரிவித்திருந்த செய்தி, வருங்கால ஆய்விற்கான அடித்தளமாக அமைந்திருந்ததாக டிரவுட்மன் குறிக்கின்றார். அத்திட்டவரைவினை,

1. பொதுவாக இந்தியமொழிகளிலும், சிறப்பாகத் தென்னிந்திய மொழிகளிலும்காணப்படும்நெடுங்கணக்கு எழுத்துமுறையும் சிங்களம், பர்மியம், ஜாவா மொழிகளின் நெடுங்கணக்கும் எழுத்துமுறையும் தமிழிலிருந்தே பெறப்பட்டன என்பது நிறுவப்படும்.

2. செந்தமிழ், கொடுந்தமிழ்

3. தெலுங்கு

4. மலையாளம்

5. கன்னடம் மற்றும் கிளைமொழிகளான குடகு, துளு முதலியனவற்றின் தோற்றம் உறவு குறித்த ஆய்வு.[20] எனவும் பட்டியலிடுவார் டிரவுட்மன்.

கல்கத்தாவில் செயல்பட்ட கீழைத்தேயவியல்கல்லூரி மேற்கொண்ட முற்ற முழுக்கவுமான சமற்கிருதச் சார்புப்போக்கிற்கு நேர்முரணானதும் நடுவுநிலைமையானதும் ஆகிய தமிழ்-திராவிடச் சார்பு நிலையினை முன்வைத்தார் எல்லிசு. எல்லிசின் இந்த ஆய்வியல் அணுகுமுறையே பின்னாளில் கால்டுவெல் ஒப்பிலக்கணம் எழுதுவதற்கும், அதனை ஒட்டித் திராவிட இயக்கம் தோற்றம் கொள்ளவும் காரணமாயிற்று. இதனை விரிவாகவும் நுட்பமாகவும் பதிவு செய்துள்ளார் டிரவுட்மன்.

தென்னிந்திய வரலாறு, இலக்கியம், சாதி, மதம், சட்டம், நிலவுடைமை ஆகியவற்றை உள்ளடக்கிய அதன் பண்பாடு குறித்த புதிய செய்திகளை அறிவதில் எல்லிசு முழுமூச்சுடன் ஈடுபட்டார். இவற்றில் குறிப்பாக, சங்கரய்யாவுடன் சேர்ந்து உருவாக்கிய மிராசு உரிமை குறித்த ஆய்வுரையும், ரயத்துவாரிமுறை அறிமுகமும் (இது தொடர்பாகத் தாமஸ் மன்ரோவோடு எல்லிசு முரண்பட்டார்) பாராதூரமான விளைவுகளை ஏற்படுத்தித் தென்னிந்தியாவில் புதிய அரசின் நடைமுறைக்கு வழிவகுத்தன. இவற்றைப் பற்றி விரிவாக இப்போது பார்க்க வேண்டியதில்லை. எல்லிசின் இதயத்துடிப்பாக இருந்த திராவிடச் சான்றை விளக்குவதே எனது நோக்கம். இதுவும் கூடப் பழமை குறித்து அறிதல் என்ற விரிந்த பார்வையின் ஒரு பகுதியாகும் என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

> நீதிக்கட்சி முதல் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் அதன் பிரிவுகள் வரையிலான திராவிட அரசியல் இயக்கங்கள் இந்தத் திராவிடச் சான்றின் மரபில் வருகின்றன. இந்த அரசியல் இயக்கங்களின் அமைப்பில் 'திராவிடம்' என்ற சொல் ஒரு வலுவான நிலையைப் பெற்றுள்ளது. திராவிடச் சான்றுக்கும் அதன் பெயரிலான திராவிட இயக்கங்களுக்கும் மரபுசார் தொடர்பு இருப்பினும், இதன் தொடர்பை அவ்வளவு எளிதில் விளக்கிவிட முடியாது. (1856) கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் வெளிவந்து அறுபதாண்டுகளுக்குப்பின், எல்லிசு திராவிடச் சான்றை முன்மொழிந்து (1816) நூறாண்டு கழிந்தபின் திராவிட இயக்கங்கள் தோற்றம் கொள்கின்றன. திராவிடச் சான்றோடு திராவிட இயக்கத்

தோற்றத்தை நேரடியாகத் தொடர்புபடுத்துவது இரண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நிகழ்ந்த பல வரலாற்று நிகழ்வுகளின் தாக்கத்தைப் புறக்கணிப்பதாகும். மேலும் திராவிட இயக்கம் தமிழ்நாட்டோடு நின்று விட்டது மட்டுமல்ல, அது பார்ப்பன எதிர்ப்பையும் தன் தோற்றத்துக்கான தலையாய காரணமாகக் கொண்டிருந்தது. இவை திராவிடச் சான்றிலிருந்து நேரடியாக முகிழ்த்தவை என்பது அவரின் ஆய்வுரையாகும்.[21]

எல்லிசின் திராவிடச் சான்றுகளின் விரிவுபடுத்தப்பட்ட வடிவமாகவே கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அமைந்தது. எனினும் எல்லிசுக்கும் கால்டுவெல்லிற்கும் இடையிலான 30 ஆண்டு காலப்பகுதியில் கல்கத்தாவில் இயங்கிய கீழைத்தேயவியல் கல்லூரியின் செயல்பாடும், அதனை ஒட்டி இந்தியாவில் கால்பதித்த இறை இயல் கழகமும் (*Theosophical Society*) மேற்கொண்ட வைதிகப் பரப்பலும் திராவிடம் பற்றிய எண்ணப்போக்கிற்கு எதிர்வினையான உந்து விசைகளாயின. எல்லிசு உருவாக்கிய சென்னைக் கல்லூரியின் தலையாய பங்களிப்பை உடன்பாடான உந்து விசையாகக் கருதலாம்.

1804 இல் காரே என்பார் 'சமற்கிருத இலக்கணம்' எனும் நூலை வெளியிட்டார். அதில் 'இந்துஸ்தானி, தமிழ், குசராத்தி மலையாளம் ஆகிய அனைத்து மொழிகளும் சமற்கிருதத்திலிருந்து கிளைத்தவை என்பது தெளிவு; என்றாலும், முதலிரண்டு (இந்துஸ்தானி, தமிழ்) மொழிகளிலும் அயல்மொழிச் சொற்கள் ஏராளமாகக் கலந்துள்ளன என்றும், வங்காளி, மராத்தி, ஒரியா, கன்னடம், தெலுங்கு ஆகியவை முற்றமுழுக்கச் சமற்கிருதச் சொற்களால் ஆனவை என்றும் எழுதியிருந்தார். இவரைப் போன்றே வில்கின்சு என்பாரும் (1808) தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குசராத்தி முதலான மொழிகளில் சமற்கிருதம் மண்டிக்கிடப்பதாகவும், அதன் உதவியின்றி ஒரு வாக்கியத்தைக்கூட இந்த மொழிகளில் எழுதமுடியாது என்றும் கூறினார்.[22] இவரின் கருத்தை வழிமொழிந்து கோல்புரூக் என்பாரும் தென்னிந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருதத்திலிருந்து கிளைத்தவையே என வலியுறுத்தினார்.

கீழைத் தேயவியலாலர்களின் கருத்துகளை ஒட்டுமொத்தமாக மறுத்து தமிழின் மேன்மையை நிலைநாட்டியவர் எல்லிசு. அவரின் கருத்துகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. கீழைத் தேயவியலாளர் கூற்றுக்குச் சான்று காட்டும் அனைத்து மேற்கோளும் தவறானவை.

2. தமிழ், தெலுங்கு, அவற்றின் கிளைமொழிகள் யாவும் சமற்கிருதத்திலிருந்து கிளைக்கவில்லை.

3. சமற்கிருதச் சொற்கள் அம்மொழிகளில் கலந்துள்ளன என்றாலும், அச்சொற்களை நீக்கினாலும் அவை தனித்து இயங்கவல்லன.

4. சமற்கிருதச் சொற்கள் அம்மொழிகளின் வேர்ச்சொற்களோடு தொடர்பற்றவை.

5. தமிழ் முதலான மொழிகள் தங்கட்கென்று ஒரு மொழிக்குடும்பத்தைக் கொண்டவை.[23]

இவ்வாறு எல்லிசும் அவர் தோழர்களும் முன்வைத்த திராவிடச் சான்று ஆரியக் கோட்பாட்டினரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அத்துடன் சமற்கிருதச் சார்பற்ற, வைதிக எதிர்ப்பை உள்ளடக்கிய - திருக்குறள் முதலான நூல்களை வெளியிட்டதும் எல்லிசின் தலையாய பணிகளாக அமைந்தன. இதன் விளைவுதான் ஆல்காட் *(Col. H.L. Alcott)*என்பவரும், பிளாவட்சுக்கி *(Madam H.P.Blavatsky)* என்பாரும் சேர்ந்து அமெரிக்காவின் நியுயார்க் நகரில் தொடங்கியிருந்த இறையியல் கழகத்தை *(Theosophical society)* பம்பாய் நகருக்கு மாற்றினர் எனலாம். கல்கத்தா கீழைத்தேயவியல் கல்லூரியின் ஆரிய மேன்மையைத் தூக்கிப்பிடிப்பதே இறையியல் கழகத்தின் தலையாய பணியாக மாறியது. ஆல்காட்டின் ஆரிய வெறி எவ்வாறு இருந்தது என்பதை,

ஐரோப்பிய கல்வியாளரின் தாக்கத்திற்கு உட்பட்டுப் பொருண்மையராக மாறிக் கொண்டிருக்கின்றனர். இந்தியநாட்டின் இளைஞர்கள் தங்களின் மாபெரும் பழம்மரபுகளைப் பற்றி ஒன்றுமே அறியாதவர்களாக அவர்கள் இருக்கின்றனரே!.....

ஆரிய அறிவியலையும் ஆரிய மதத்தையும், ஆரிய மறைகளையும் பரப்புவதே பார்ப்பனர்களின் அவல நிலையைப் போக்கும் அருமருந்தாகும்.

பார்ப்பன வேதங்களையும் பிற பழம் தேணீசிய நூல்களையும் வேதங்கள், உபநிடதங்கள், மனு, கீதை முதலான நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்ட ஓர் இந்திய நாகரிகம் மட்டுமே கற்பாறையில் கட்டிய ஒரு வலிமை வாய்ந்த கோட்டையாக இருக்க முடியும்.[24] எனும் அவரின் கூற்றுகளால் தெளியலாம்.

ஆல்காட்டும், பிளாவட்சுக்கியும் தமிழகத்தை மையமாகக் கொண்டு சுற்றுப்பயணம் செய்து பார்ப்பனர்களின் - வைதிகத்தின்

- மேலாண்மையை நிலைநாட்டப் பெரிதும் முயன்றனர். அவர்களின் பணி எப்படிப்பட்ட விளைவுகளைப் பார்ப்பனர்களிடையே உருவாக்கிற்று? என்பதை அந்நாளில் வெளிவந்த 'மெட்ராசு மெயில்' எனும் நாளேட்டின் தலையங்கம் வாயிலாக அறியலாம்.

> அண்மையில் சில ஆண்டுகளாக இந்தியத் தேசிய உணர்வில் ஒரு முடிவான மீட்சி தென்படுகிற ஐயம் - திரிபிலா உண்மையில் ஒரு பகுதி விடையாவது பார்க்க முடிகிறது. ஒன்றோடொன்று முடிவிலாது சண்டை போட்டுக் கொண்டிருக்கின்ற சாதிமுறையின் அழிவாற்றல் ஒருபுறம் இருந்தால்கூட, இந்தியர்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்னும் உண்மையைப் புதிய தலைமுறை ஓரளவுக்காவது உணர்ந்து கொண்டது. மிக அண்மைக்காலம் வரையில் இந்தியாவைப்பற்றி பிறர் சொல்லிவந்த ஒவ்வொன்றும் சரிதானென வருத்தத்துடன் ஏற்றுக் கொள்கிறமுறையில் உள்நாட்டவர்கள் உதிர்த்து வந்தவற்றிற்கு இயல்பாய் இருக்கின்ற பழைய குரல் ஓய்ந்து, தன்னுறுதி ஒலிக்கின்ற ஒரு குரல் இப்போது தோன்றியுள்ளது. சிலர் பெருமை பேசிக்கொள்வதைப் போல், தங்களின் சொந்தமானதும், பழம்பெருமை மிக்கதுமான நூல்களைப்பற்றித் தெரிந்து கொள்ளச் சொல்லி (இந்தியர்கட்கு)ச் சொன்னதோடு அந்த ஐரோப்பிய அறிஞர்கள் நின்று விடவில்லை. அவற்றை நம்பும்படியும் கற்பித்தனர். இந்து இலக்கியமும், அறிவியலும், மதமும் நெடுங்காலத்திற்கு முற்பட்டது என்று எண்ணத் தலைப்பட்டுவிட்டால் தாங்கள் ஐரோப்பியர்களுக்கு ஈடானவர்கள் என்பதோடு நில்லாமல், அந்த ஐரோப்பியருக்கும் மேம்பட்டவர்கள் என்று ஓர் இந்து தற்பெருமை பாராட்டிக் கொள்வதற்குத் தடையேதும் இல்லை. காலம் அந்த ஆளைக் கொண்டுவந்து நிறுத்தியது. அந்த ஆள்தான் கர்னல் ஆல்காட்.[25]

இவ்வாறு அடையாளம் காட்டப்பட்ட ஆல்காட், பிளாவட்சுக்கி அம்மையாருடன் இணைந்து நாடெங்கும் சமற்கிருதப் பள்ளிகளைத் தொடங்க முற்பட்டார். அதனடிப்படையில் தேசிய சமற்கிருத இயக்கத்தைத் தொடங்கினார். அத்துடன் 1886 இல் ஆரிய மதிப்புக்கழகத்தையும் உருவாக்கினர். 10 வயது முதல் இருபது வயதுள்ள இளைஞர்களை இதில் இணைத்தார். ஆரிய மதிப்புக்கழகத்தின் நோக்கம் ஆரிய மீட்சியேயாகும். இத்தகு ஒருதலைச் சார்பான வைதிக வெறியை உயர்த்திப் பிடித்து ஆரிய மேன்மையை நிலைநாட்டும் நச்சு எண்ணப்போக்கிற்கு வித்திட்டு நீர்பாய்ச்சி உரமிட்டு வளர்த்ததே கீழைத் தேயவியல் கல்வாரியாகும். இந்தப் பின்புலங்களைக் கருத்தில் கொண்டால்தான் கால்டுவெல்லையும் திராவிட இயக்கங்களின் நோக்கங்களையும் புரிந்துகொள்ளமுடியும்.

கால்டுவெல்

எல்லிசு தொடங்கிவைத்த திராவிடச் சான்று, கால்டுவெல் அவர்களால் மேலும் செழுமை பெற்றுத் திராவிட ஒப்பிலக்கணமாக வடிவம் கொண்டது என்பதை அறிவோம்.

திராவிட மொழிகள் ஒவ்வொன்றின் இலக்கண அமைப்புமுறையும், அம்மொழி பெற்றிருக்கும் சிறப்பு இயல்பிற்கு ஏற்பவும் அம்மொழியில் நூலாசிரியர் பெற்றிருக்கும் பயிற்சிக்கு ஏற்பவும் ஆராய்ந்து தெளிவாக்கப்படும் என்றாலும், திராவிட மொழிகளுக்குள்ளே மிகப் பழைய காலத்திலேயே திருந்திய நிலை பெற்றதும், நனிமிக நாகரிகம் உடையதாக ஆக்கப் பெற்றதும், பல வகையில் அவ்வினமொழிகளின் பிரதிநிதியாக விளங்குவதுமாகிய தமிழ்மொழியின் அமைப்புமுறை பற்றிய விளக்கங்களைப் பெரும்அளவில் தருவதே இந்நூலாசிரியரின் இடைவிடாச் சிறப்பு நோக்கமாகும்.[26] எனும் முன்னுரையுடன் தம் ஆய்வைத் தொடங்கும் கால்டுவெல் தம் கூற்றுக்கு மாறாகத் தமிழ் மொழியின் ஒப்பிலக்கணம் என்றோ தமிழ்மொழிக்குடும்ப ஒப்பிலக்கணம் எனக் கூறாமல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனப் பெயரிட்டார். இது ஏன்? இது பற்றி அவர்,

> ஈண்டு ஒப்பு நோக்க நாம் எடுத்துக் கொண்ட மொழிகள் அனைத்தும் ஒரு மொழிக்கு இன்றியமையாதனவும், குறிப்பிடத்தக்க சிறப்புடையனவுமான இலக்கண இயல்புகளைப் பொதுவாகவே பெற்றுள்ளன. இதன் பயனாய், ஒரே இயல்புடையனவாகிய, மிகமிக இன்றியமையாச் சிறப்புடைய எண்ணிலா வேர்ச் சொற்களை உடைமையாய்ப் பெறுவதில் அவை அனைத்தும் ஒரே மூலத்திலிருந்து பிறந்தவை என்றும், ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்றும் மதிக்கும் உரிமை உடையனவாகின்றன. அதனால், இவ்வின மொழிகளை ஒரு பொதுப் பெயரிட்டு அழைத்துள்ளேன்.[27]

எனக் கூறுவார். மேலும்,

> இவ்வின மொழிகள், ஐரோப்பிய ஆசிரியர்களால் ஒரு காலத்தில் 'தமுலியன்' அல்லது 'தம்முலிக்' என்று பெயரிடப்பட்டிருந்தன. ஆனால், இவ்வின மொழிகளுள் தமிழ் நனிமிகப் பழமையுடைய, பெரிதும் நாகரிகம் அடைந்த மொழியாதலாலும், தன் இன உடைமைகளாய்ச் சொல்லுருவங்கள், சொல்மூலங்கள் ஆகியவற்றின் பெரும்பகுதியைப் பெற்றுள்ளது ஆதலாலும் 'தமிழ்' 'தமிழன்' எனும் சொற்களை முறையே தமிழ் மொழியையும், அதை வழங்கும் மக்களையும் குறிக்க மேற்கொள்வதே விரும்பத்தக்கதாம் ஆதலாலும் இவ்வின மொழிகள் எல்லாவற்றையும் குறிக்கப் பெருமளவில் பொருந்தக் கூடிய பிறிதொரு சொல்லை நான் மேற்கொண்டேன்.[28]

எனவும் தெளிவுபடுத்துவார். அவ்வாறு அவர் தேர்ந்தெடுத்துக் கொண்ட சொல்தான் 'திராவிடம்' என்பதாகும். இங்கே நாம் கவனிக்க வேண்டிய ஒரு புதிர் 'திராவிடர்' எனும் சொல்லுக்கு அவர் தரும் விளக்கமாகும். ஐரோப்பிய ஆசிரியர்கள் தமிழைக் குறிக்கத் தமூலியன் என்ற சொல்லைப் பயன்படுத்தியதைப் போலவே, வடவாரியர்களும் தமிழைத் திராவிடம் எனக் குறித்தனர். ஆயினும் கால்டுவெல் ஐரோப்பியரின் வழக்காற்றை ஏற்காமல், சமற்கிருத ஆசிரியர்களின் கூற்றான 'திராவிடம்' எனும் சொல்லை ஏன் ஏற்றுக் கொண்டார்? அதுபற்றி,

என்றாலும் நான் மேற்கொண்ட சொல் திராவிடம் என்பது. இறுதியாக என்னால் காணக்கூடிய தகுதி மிக்கச்சொல் இதுவே என்றாலும் இதுவும் கவர் பொருள் உடையதே என்று நானே ஏற்றுக் கொள்ளும் வகையில் தமிழ் என்ற சொல்லைப் போலவே இதுவும் வரையறுக்கப்பட்ட பொருள் நிலையிலேயே ஒரு காலத்தில் ஆளப்பட்டிருந்தது. இன்றும் ஆளப்படுகிறது. என்றாலும் தென்னாட்டு மக்களையும் மொழியையும் குறிக்கும் சொல்லாகச் சமற்கிருத மொழிநூல் ஆசிரியர்களால் வழங்கப்பட்ட சொல் இதுவே. ஆகவே இச்சொல்லின் தகுதிப்பாடு குறித்து எனக்கு ஐயம் இல்லை.[29] எனவும் உறுதி செய்து கொள்கிறார். கால்டுவெல் அவர்களின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' பற்றி மொழிஞாயிறு பாவாணர் கூறும் செய்திகள் ஆக்கமுறைத் திறனாய்விற்கான இலக்கணமாக அமைந்துள்ளது.

தமிழ் தன்னிடத்துக் கொண்டுள்ள வடசொற்களில் பெரும்பாலானவற்றை அல்லது அவை எல்லாவற்றையும் உடனே நீக்கமுடியும். அங்ஙனம் நீக்குவதால் அது நடையுயர்ந்து மிகத் தூய்மையும் நேர்த்தியுமடைகிறது.

எவ்வகையிலும் திராவிட மொழிகளுக்குள் தலைசிறப்பப் பண்படுத்தப் பெற்ற தமிழ் வேண்டுமாயின், வடமொழித் தொடர்பை அறவே விலக்குவதுடன், தனித்து வழங்குதல் மட்டுமன்று அதன் உதவியின்றித் தழைத்தோங்கவும் இயலும்.[30] எனக் கூறும் பாவாணர், கால்டுவெல் தமிழ்பற்றிக் கூறும் உண்மைகளையும் பட்டியலிடுவார்.

1. பிற திராவிட மொழிகளின் இலக்கியநடை அவற்றின் உலக நடையினின்று வேறுபட்டிருப்பதைவிடத் தமிழின் இலக்கியநடை அதன் உலக நடையினின்று வேறுபட்டுள்ளது.
2. தமிழின் அளவிறந்த சொல்வளமும் செந்தமிழிலக்கண வடிவுகளின் தொகை வகைகளும் மற்றொரு சான்றாகும். பிற திராவிட மொழிகளின் அகராதிகளை ஆயும்போது அவை தமிழகராதிகளிலுள்ள ஒருபொருட் பல

சொற்பட்டிகளைக் காட்டாமை ஒரு படிப்பாளியின் மனத்தில் மிகுத் தெளிவாய்ப்படும். தமிழில் மட்டும் வழங்குகிற அளவில் தமிழுக்கு உரியவை என்று சுருதப்படும் சொற்களை மட்டுமல்ல, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகட்குரிய சொற்களையும் தமிழ் கொண்டுள்ளது.

3. தற்காலக் கன்னடமும் தற்காலத் தெலுங்கும் தமிழினின்றும் வேறுபடுஞ் செய்திகளில் பழங்கன்னடமும் பழ மலையாளமும், துளுவும், துடவும், கோண்டும், கூவும் தமிழுடன் ஒத்திருத்தல் தமிழின் தொன்மைக்கும் தூய்மைக்கும் மற்றொரு சான்றாகும்.

4. பல தெலுங்கு வேர்களும் விகுதிகளும் தமிழ் வடிவங்களின் திரிபாயுள்ளமை, பின்னவற்றின் மிகுதொன்மையை வலிமையாய் உறுதிப்படுத்தும்.

5. தமிழின் தொன்மைக்கு மற்றொரு சான்று அதிலுள்ள தற்பவங்களின் பெருஞ்சிதைவாகும்.[31]

இவ்வாறு பட்டியலிடும் பாவாணர், கால்டுவெல்லின் பங்களிப்பிற்கு,

கால்டுவெல் கண்காணியார் மேற்கூறியவாறு திராவிட மொழிகளை, சிறப்பாகத் தமிழை ஆராய்ந்து பல உண்மைகளைக் கண்டாரெனினும், தொல்காப்பியத்தையும், கழக நூல்களையும் கல்லாமையாலும், குமரிநாட்டு வரலாற்றை அறியாமையாலும், தமிழின் திராவிடத் தாய்மையைக் காணாததுடன் திராவிட நாகரிகத்தை ஆரிய நாகரிகமாகப் பிறழக் கொண்டு சில தனித்தமிழ்ச் சொற்களையும் வட சொற்களாகக் கூறிவிட்டனர். ஆயினும் கழகநூற் பயிற்சியும், தனித்தமிழ் உணர்ச்சியும் இல்லாத அக்காலத்தில் அயல்நாட்டாரான அவர் ஆரியத்தினின்று திராவிடத்தைப் பிரித்துக் காட்டின அத்துணையே மிகச் சிறந்ததெனக் கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் அவருக்கு என்றும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.[32] என நன்றியும் பாராட்டுவார்.

மொழியியல் அடிப்படையில் தமிழ் மொழிக்குடும்பத்திற்குத் திராவிடம் எனப் பெயர் சூட்டிய கால்டுவெல், திராவிடர் இயக்கம் எனும் அரசியல் குழுக, மொழி, இனம் சார்ந்த விடுதலை இயக்கத்திற்கும் முன்னோடியானார். இதனை, உண்மையில் தமிழருடைய தன்மான இயக்க உணர்வின் 'விடிவெள்ளி' டாக்டர் கால்டுவெல் எனக்கூறினால் அது தவறாகாது. நமக்கென ஒருமொழி, நாடு, நாகரிகம், பண்பாடு உண்டு என்பதை உலகோர் அறிவதற்கு முதற்காரணமாக விளங்குபவர் டாக்டர் கால்டுவெல் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. இக் காரணங்களால் டாக்டர் கால்டுவெல்

அவர்களின் மொழியியல் ஆய்வு திராவிட இயக்க உணர்விற்குச் சூட்டப்பட்ட மணிமுடியாகத் திகழ்கிறது.[33] எனப் பேராசிரியர் கே. இராசேந்திரன் விளக்கக் காணலாம்.

திராவிடம் எனும் கருத்தியலை எல்லிசும், கால்டுவெல்லும் முன்வைத்தனர். எல்லிசு அச்சொல்லின் மூலத்தை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் கால்டுவெல் அதனை வடமொழிமூலமாகக் கண்டார். ஆயினும் கால்டுவெல்லுக்குப் பின்னர் விரிவடைந்த ஆதிச்சநல்லூர், சிந்துவெளி அகழாய்வுகள், சங்க இலக்கியப் பதிப்புகள், தமிழகத்தில் தொடர்ந்து நடந்த தொல்லியல் ஆய்வுகள் ஆகிய அனைத்தும் 'திராவிடம்' எனும் கருத்தியலை விரிந்த தளத்திற்கு இட்டுச் சென்றன. ஆபிரகாம் பண்டிதரின் தமிழிசை தொடர்பான ஆய்வுகள் தமிழிசை இயக்கம் தொடங்கக் காரணமாயிற்று. அவரைத் தொடர்ந்து மறைமலை அடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கம், நடேசமுதலியார் உருவாக்கிய திராவிட மாணவர் சங்கம். பின்னர் வந்த நீதிக்கட்சி, தந்தை பெரியார் உருவாக்கிய தன்மதிப்பியக்கம் எனும் சுயமரியாதை இயக்கம் ஆகிய அனைத்து இயக்கங்களும் திராவிடர் இயக்கத்தின் அடித்தளங்களாக அமைந்தன. இந்தக் கட்டுமானத்திற்குச் செங்கல்லாய், காரையாய், நீராய் அமைந்தவர் மனோன்மணியம் இயற்றிய சுந்தரனார் என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

மொழிகளுக்கிடையேயான ஒற்றுமைகளை கால்டுவெல் விளக்கியதோடு தமிழ் இலக்கியங்களின் பெருமைகளையும் அவை எவ்வாறு வைதிக எதிர்ப்பை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன என்பதைப் பற்றியும் அவர் கூறியுள்ள கருத்து நம் கவனத்திற்கு உரியதாகும். அவர் கூற்றில் காலவழு இருந்தாலும் அவற்றின் உள்ளடக்கம் பற்றிய அவரின் ஆய்வும் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுள்ளது. அதிலும் குறிப்பாகத் திருக்குறள் பற்றிய அவரின் கருத்துகள் மறுஆய்விற்கு உரியன என்றாலும் நம் கவனத்திற்கு உரியவை என்பதில் ஐயமில்லை.

1. திருக்குறளில் ஆதிசங்கரரின் அத்வைதக் கோட்பாட்டின் சுவடுகளே இல்லை. இது தொன்மைக்கால எண்ணிய (சாங்கிய)க் கோட்பாட்டைப் போதிக்கின்ற அதே வேளையில் சங்கரரின் கோட்பாடுகளை முற்றிலுமாகப் புறக்கணித்துள்ளது. அதனால் சங்கரரின் கோட்பாடுகள் தென்னகத்தில் செல்வாக்குப் பெறுவதற்கு முற்பட்ட காலகட்டத்திற்கு உரியது என்பது உறுதி. அதனால் திருக்குறளின் காலம் சங்கரருக்கு முன்னர் இல்லாவிட்டாலும் கி.பி. 9 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இருக்க முடியாது.

2. இதில் சைவசித்தாந்த - ஆகமக் கோட்பாடுகளின் சுவடுகள் இல்லை. இக்கோட்பாடுகள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் மிகவும் வலிமை பெற்றிருந்தன. ஆயினும் இவற்றின் தாக்கம் திருக்குறளில் இல்லை.

3. புராண மரபின் இருண்மை (mystic)க் கூறுகளோ, பக்தி இயக்கத்தின் சுவடுகளோ, அல்லது இந்து சமயத்தில் ஆர்வத்தோடு வணங்கப்படும் தெய்வங்கள் பற்றிய சுவடுகளோ இல்லை. தமிழகத்தில் போட்டிச் சமயங்களாகச் செயல்பட்டனவும் சைவ - வைணவ சமயங்களாகப் பிளவுபட்டிருந்தனவும், பின்னர் இந்து சமயத்தின் கையேடுகளாகச் செயல்பட்டனவும், புராணகாலத்திற்கு முற்பட்ட இந்து இறைமைக் கோட்பாட்டிற்கு உரியனவுமாகிய அவற்றிற்கும், வேதாந்தத்திற்கும் மகாபாரதக் காப்பியம் தொகுக்கப்பட்டதற்கும் முன்னரே திருக்குறள் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

4. சைவர்களும், சைனர்களும் தங்கள் தங்கள் நூல் என்று தனித்தனியே உரிமை பாராட்டக் கூடிய நூலாகவும் திருக்குறள் அமைந்துள்ளது. அவர்களைப் போல அல்லாவிட்டாலும் வைணவர்களும்கூடச் சொந்தம் கொண்டாடுகின்றனர். இம்மூன்று கோட்பாட்டினருள் சைனர்களின் கோரிக்கையில் ஞாயம் இருப்பதாக எனக்குத் தோன்றுகின்றது. கடவுள் வாழ்த்தில் இடம் பெற்றுள்ள செய்திகள் அதனை உறுதி செய்கின்றன. மேலும் சைனக் கோட்பாடான நிலையாமை பற்றிய செய்திகளும் துறவிகளுக்கான ஒழுக்க வரையறைகளும் அக்கருத்தினை உறுதி செய்கின்றன.

5. பதினோறாம் - பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் எழுதப்பெற்ற இலக்கணங்களும் உரைநடை நூல்களும் திருக்குறளை மேற்கோள் காட்டியுள்ளன. அதனால் திருக்குறளின் காலம் கி.பி. 10ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.[34] எனக் காரணங்களை அடுக்கிக் காட்டுவார். திருக்குறளும், சீவக சிந்தாமணியும் தமிழின் மிக உன்னதப் படைப்புகள் எனப் பாராட்டும் கால்டுவெல், திருக்குறளைச் சைனரின் கொடையாகவும் மதிப்பிடுகின்றார். கால்டுவெல் மட்டுமல்லாது அவருக்கு முன்னரும் பின்னரும் வாழ்ந்த ஐரோப்பிய அறிஞர்கள் அனைவருமே திருக்குறளைச் சைன நூலாகவே கருதினர். இருப்பினும் வள்ளுவரைப் பறையர் இனத்தவர் எனத் தவறாமல் குறித்தனர். வள்ளுவர் பற்றிய அவர்களின் ஆய்வில் இஃதோர் முரண் ஆகும்.

திருக்குறளைச் சைன இலக்கியமாகக் குறிக்கும் கால்டுவெல், அதன் மெய்யியலை எண்ணிய (சாங்கிய) மாகக் காண்பது அவரின் மதிநுட்பத்திற்குச் சான்றாகின்றது. அண்மைக்கால ஆய்வுகள், திருக்குறள் எண்ணியக் கோட்பாட்டின் பிழிவாக உள்ளதை உறுதி செய்துள்ளன. மேலும் திருக்குறளின் காலம், இந்தியாவில் பௌத்த, சைன, ஆசீவகச் சமயங்கள் தோன்றுவதற்கு முற்பட்டது என்பதும் இன்றைய ஆய்வு முடிவுகளாகும். தற்போது கால ஆய்வின் அடிப்படையில் பார்த்தால் நாம் பின்பற்றிவரும் திருவள்ளுவர் ஆண்டு முறைகூட மாற்றப்பட வேண்டியுள்ளது. பேராசிரியர் ப. மருதநாயகம், ஸ்டாயிக் மெய்யியல் வரலாற்றில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய சேனகா, மாந்த இனம் ஒன்றென்பதையும், பிறர்நலம் கருதி வாழ்தலே பெரிதென்பதையும் வற்புறுத்தியமை அவரது பெரும் பங்களிப்பு என்று மேலை அறிஞர்கள் கூறுவர். அவர்தம் கட்டுரை ஒன்றில் வள்ளுவர் பெயரைக் குறிப்பிடுகிறார் என்று பிரஞ்சு அறிஞர் பிரான்சுவா வாலெண்ட்டின் சொல்லுவதாலும் சேனகாவின் பல கட்டுரைகளில் பல குறட்கருத்துகளைக் காணமுடிவதாலும், இப்பங்களிப்பிற்கு வள்ளுவரின் தாக்கமே தூண்டுகோலாக அமைந்திருக்க வேண்டுமென்று முடிவுகட்டுவது தவறாகாது. வள்ளுவரின் காலம் பற்றிய ஆய்வு மறுபார்வை செய்யப் பெறுதல் தேவை. சேனகா கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பதால் வள்ளுவர் அவருக்கு ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதை நம்மவர் நினைவில் கொள்ளுதல் நன்று.[35] என வற்புறுத்துவதும் ஈண்டு கருதத்தக்கதாகும்.

செம்மொழியும் கால்டுவெல்லும்

இன்று தமிழ் செம்மொழியாக அதற்குரிய அனைத்துத் தகுதிகளோடும் ஏற்கப்பட்டுள்ளது. தமிழ், செம்மொழித் தகுதிபடைத்த மொழி என கால்டுவெல் கூறியதற்கும், அரசு தமிழைச் செம்மொழியாக அறிவித்ததற்கும் இடைப்பட்ட கால இடை வெளி 148 ஆண்டுகளாகும். ஆயினும் அதற்கான விதையை ஊன்றிய பெருமை கால்டுவெல் அவர்களுக்கு உரியது. தமிழைச் 'செம்மொழி' எனும் பொருளில் (Classical Tamil) எனக் குறித்து, அதற்கான காரணங்களையும் விவரித்துக் காட்டிய பெருமை அவருக்கு மட்டுமே உரியது. இதுவே திராவிடர் இயக்கத்தின் உயிர்த்துடிப்பான கோரிக்கை முழக்கமாகவும் மாறியது. கால்டுவெல் விதைத்த 'செம்மொழி' விதைக்குப் பரிதிமாற்கலைஞர் எருவிட்டு நீர்பாய்ச்சி வளர்த்தவராவார். இதற்கான வரலாற்றுப் பின்புலத்தை மிக விரிவாகவே ஆய்ந்துரைக்கின்றார் ஜெ.முத்துச்செல்வன். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அவரவர் தாய்மொழியைப் பாடமாக்க முனைந்தவர் அப்போது

இந்தியப் பகராளுநராக இருந்த கர்சன் பிரபு என்பராவார். அவரின் அந்த முயற்சியை முறியடித்து சமற்கிருதம் மட்டுமே இந்தியப் பல்கலைக்கழகங்களில் பாடமொழியாக இருக்க வேண்டும் என்று தடைபோட்டவர்கள் கர்சன் பிரபுவின் உதவியாளர்களாக இருந்த பார்ப்பனர்கள் ஆவர். இதனை,

.... தாய் மொழிக் கல்வியால் குழுமனப்பான்மை வளர்வதோடு பிரிவினையும் ஏற்படும். அதனால் ஆங்கில அரசுக்குத் தீங்கு ஏற்படும். அவரவர் தாய்மொழி என்பதற்கு மாற்றாகச் சமற்கிருதத்தைக் கற்பிக்க ஏற்பாடு செய்தால் காசுமீரம் முதல் கன்னியாகுமரிவரை ஒரே மொழி, ஒரே சிந்தனை, ஒரே பண்பாடு ஒரே பழக்கவழக்கம் நிலைபெற வாய்ப்பாக அமையும் என்று திறமையாகப் பேசித் தம் தாய்மொழியான சமற்கிருதத்தைப் பயிற்று மொழியாக்க விரும்பினர். ஆனால் விழிப்புணர்வு மிக்க கர்சன் பிரபு அதை ஏற்காமல் ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்த மொழியை எல்லா மதத்தவர்கள் மீதும் திணிப்பது முறையல்ல எனக்கூறி மறுத்துவிட்டார். ஆயினும், சமற்கிருதப் பற்றாளர்கள் விடாப்பிடியாக ஒரு குறிப்பிட்ட மதம் சார்ந்த மொழியாகச் சமற்கிருதம் இருந்தாலும், இந்திய மொழிகளிலேயே முதலில் 'செம்மொழி' *(Classical language)*என்ற தகுதியைப் பெற்ற ஒரேமொழி சமற்கிருதம். அதனால் இந்தியாவின் செம்மொழி என்ற அடிப்படையில் சமற்கிருதத்தை இந்தியக் கல்லூரிகளில் பாடமொழியாக அறிவிக்க வேண்டும்.[36] என வற்புறுத்தினர். இந்தச் சூழலில்தான், சமற்கிருதம் மட்டுமே இந்தியாவின் செம்மொழி என்ற கருத்தினை மறுத்து, செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்ற ஒரே மொழி தமிழே என முழங்கிப் போர் முரசு கொட்டினார் பரிதிமாற்கலைஞர். திராவிடர் இயக்கம் கால்கொள்ளாத அந்தத் தொடக்கநாளில் அவருக்குத் துணைநின்றவர் பிற்காலத்தில் திராவிட இயக்கச் சிந்தனையாளராகப் புகழ்பெற்ற பேராசிரியர் மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளையாவார். இருவரின் பங்களிப்பு குறித்தும்,

பரிதிமாற் கலைஞரின் போராட்டத்தை அறிந்த கர்சன் பிரபு, அப்போது இந்தியாவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகமாகத் திகழ்ந்த சென்னைப் பல்கலைக்கழகத்தை இப்பாடமொழிச் சிக்கலுக்கு உரிய தீர்வுகாணுமாறு பணித்தார். அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராகத் திகழ்ந்த வெள்ளையர் இப்பொறுப்பைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தாரிடம் ஒப்படைத்தார். இச்சூழலில் பரிதிமாற்கலைஞர் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாக்க வேண்டும் என்பதில் தீவிரமாக ஈடுபடலானார். இவர் தனக்குத் துணையாகச் சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்த மு.சி. பூர்ணலிங்கம்

பிள்ளையையும் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவரையும் சேர்த்துக் கொண்டார்.[37] என விவரிப்பார் ஜே. முத்துச்செல்வன். தமிழைச் செம்மொழியாக அடையாளம் காட்டியவர் கால்டுவெல் என்றால் அக்கருத்தை உறுதிசெய்தவர் பரிதிமாற் கலைஞராவார். 'தமிழ் மொழியின் வரலாறு' எனும் தம்நூலில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க அவர்காட்டிய சான்றுகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. அதே நேரத்தில் அறிஞர்களின் நடுவே இருந்த செம்மொழிக் கோரிக்கையை மக்களின் இயக்கமாக மாற்றியது நீதிக்கட்சியாகும். தமிழை உயர்தனிச் செம்மொழி என்ற நிலைக்கு உயர்த்தவும்நீதிக்கட்சிமாநாடுகளில்தீர்மானங்கள்இயற்றப்பட்டுள்ளன. 1918 மார்ச்சுத் திங்கள் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற பார்ப்பனர் அல்லாதரின் முதல் மாநாட்டில் இக்கோரிக்கை தீர்மான வடிவில் முன்வைக்கப்பட்டது. தீர்மானத்தை முன் மொழிந்தவர் சைவ அறிஞர் ஜே.எம். நல்லுசாமிப்பிள்ளை. வழிமொழிந்தவர் தமிழறிஞர் நா.மு. வேங்கடசாமி நாட்டார். தீர்மான வடிவம்,

1. சென்னைப் பல்கலைக் கழகம் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் திராவிட மொழிகளுக்குப் பாதகம் விளைவிக்கும் அளவில் சமற்கிருதத்திற்கு ஒரு குறிப்பிட்ட இயல்பு நோக்கு (தனிச்சலுகை) காட்டி வருவதாக இம்மாநாடு கருதுகின்றது.

2. எல்லாப் பழமையான மொழிகளைப் போல பழமையான, வளமான, உயர்தரமாக உருவாக்கப்பட்ட, பலதரப்பட்ட இலக்கியங்களைக் கொண்டது தமிழ்மொழி, இது பல்கலைக் கழகத்தால் செம்மொழி எனக் கருதப்படும் பெர்சியன், அராபிக், சமற்கிருதத்திற்கு ஈடாக மதிப்பிடப்பட வேண்டும்.

3. தமிழ் மொழியில் ஆய்வையும், சிறப்புப் பயிற்சியையும் ஊக்கி வளர்த்திட அகப்பொருள், புறப்பொருள், மெய்யியல் முதலான துறைகளில் சமற்கிருதத்தில் சிரோமணிப்பட்டம் அளிப்பது போலத் தேர்வுகளை நிறுவி இத்தகு சிறப்புப்பாடம் பயில்வோருக்குப் புலவர் என்ற பட்டத்தை அளிக்க வேண்டும்.[38]

என்பனவாம். தஞ்சை மாவட்டம் திருவையாறில் அரசின் ஆதரவுடன் பார்ப்பனர்கள் மட்டுமே பயிலும் வகையில் செயல்பட்டு வந்தது சமற்கிருதக் கல்லூரி. அரசின் நிதி ஒரு குறிப்பிட்ட மொழிக்கும், ஒரு குறிப்பிட்ட சாதிக்கும் மட்டுமே பயன்பட்டுவந்த நிலையில், அக்கல்லூரியில் தமிழ் மொழிக்கும் பார்ப்பனர் அல்லா தமிழ் இளைஞர்கட்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் அரசை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளது.[39]

பாடத்திட்டத்தில்

பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் மொழிப்பாடங்களாக இடம் பெற்றிருந்தவை சமற்கிருதம், பார்சி, அராபி முதலானவை மட்டுமே. இப்பாடங்களில் முதுகலை பயிலும் (எம்.ஏ.) மாணவர்கள் அந்தந்த மொழிகளை மட்டுமே பயின்றால் போதும். ஆனால் தமிழ் மொழியில் முதுகலைப் பட்டம் பெறுவோர் அத்துடன் திராவிட மொழிகளில் ஒன்றைக் கட்டாயம் பயில வேண்டும் என்ற விதி இருந்துள்ளது. இந்த விதிகளை மாற்றி சமற்கிருதத்திற்கும் பிற மொழிகளுக்கும் இருந்த வாய்ப்பைத் தமிழ் மொழிக்கும் பிற திராவிட மொழிகளுக்கும் வழங்கியவர்கள் நீதிக் கட்சியினரே என்பதும் எண்ணத்தகும்.

திராவிட மொழிக் குடும்பங்களை அடையாளம் காட்டி வகைப்படுத்தியதுடன் தமிழ் மொழியின் செம்மொழித் தகுதியையும் உறுதி செய்தார் கால்டுவெல். அத்துடன் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் குமுக வரலாறு பற்றிய ஆய்வையும் அவர் தொடங்கிவைத்துள்ளது தனித்த சிறப்பிற்கு உரியதாகும். அந்த வகையில் சூத்திரர் பற்றியும் பறையர் குமுகம் பற்றியும் அவர் மேற்கொண்ட ஆய்வுகள் திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாகப் பின்னாளில் வடிவம் கொண்டன. தம்கால அறிஞர்களின் கூற்றுகளில் இருந்து கால்டுவெல் கண்டுணர்ந்த சில ஆய்வுமுடிகள் இன்றைய நிலையில் மறு ஆய்வுக்கு உரியன. எனினும் பின்னாளில் ஏற்பட்ட சூத்திரப் புரட்சிக்கும், தமிழ் மறுமலர்ச்சிக்கும் அவை உந்துவிசையாக இருந்தன என்பதில் ஐயமில்லை.

சூத்திரர்

திராவிட மொழிகள் பற்றிய ஆய்வு திராவிடர் யார் என்பது பற்றிய ஆய்வாகவும் மாறுகிறது. பார்ப்பனர்களாலும், பார்ப்பனர்களின் கருத்தியலை ஒட்டி இந்திய சாதி அமைப்புகளை ஆராயப் புகுந்த ஐரோப்பியர்களாலும் ஒட்டு மொத்த திராவிடர்களும் சூத்திரர்களாகவே கருதப்படுகின்றனர். திராவிட இனத்தவரும் தாங்கள் அப்படிச் சூத்திரர்களாக அழைக்கப்படுவதில் மன நிறைவு கொள்கின்றனர். ஆனால் உண்மையில் அவர்கள் ஒரு காலத்தில் மனுவிலும் மாபாரதத்திலும் எந்தவித வேறுபாடுமின்றிச் சத்திரியர்களாக அழைக்கப்பட்டவராவர். மூயிர் அவர்களின் 'சமற்கிருத மூலங்கள்' பகுதி 1,2 இல் இடம் பெற்றுள்ள மேற்கோள்களின்படியும் வேறுபல இனவியல் வரலாறுகளின்படியும், திராவிடர்கள் அரசகுல (சத்திரியர்குல) இளவரசர்களின் வழித்தோன்றல்களே என்பது உறுதியாகிறது. பார்ப்பனர்களின் சடங்குமுறைகளைப் புறக்கணித்ததின்

காரணமாக, இவர்கள் சத்திரிய நிலையிலிருந்து விருசலர் எனும் சாதி நீக்கப்பட்டவர்களாகவும், சூத்திரர்களாகவும் கருதப்பட்டுள்ளனர் என்பதில் உண்மை இருப்பினும், அதனால் அவர்களின் முன்னைப் பெருமையில் எந்த வித இழுக்கும் நேர்ந்துவிட வில்லை.[40] என்று உறுதி செய்கின்றார்.

சூத்திரர்களை வடநாட்டவர், தென்னாட்டவர் என இரு பிரிவுகளாகப் பிரிக்கும் கால்டுவெல், அவ்விரு பிரிவினருக்கும் இடையே நிலவும் வேற்றுமைகளையும் விளக்கிக்காட்டுகின்றார்.

சூத்திரர் என்ற பட்டத்தின் தன்மை, வடநாட்டு வழக்காற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்ட நிலையில் அதாவது மிக உயர்ந்த பொருளிலேயே தென்னாட்டில் வழங்கப் பெற்றுள்ளது. வடநாட்டுச் சூத்திரர்கள் தொடக்க நாள்களில் பார்ப்பனர்களின் அடிமைகளாக அல்லது அடிமை நிலைக்கும் சற்றே மேம்பட்ட நிலையில் நடத்தப்பட்டனர். அவர்கள் தங்களுக்கென்று எந்தவித சொத்துரிமையும் அற்றவர்களாகவோ, அல்லது குடியுரிமை மறுக்கப்பட்டவர்களாகவோதான் இருந்தனர். இதற்கு முற்றிலும் மாறாகத் தென்னிந்தியாவில் திராவிட இனத்தவரில் நடுத்தர மற்றும் அதற்கு மேம்பட்ட நிலையில் இருந்தவர்கட்குச் 'சூத்திரர்' என்ற பட்டம் சூட்டப்பட்டது. வடநாட்டுச் சூத்திரர்கட்கு இணையாக இருந்த தென்னகத் திராவிடர், பள்ளிகள் என்றோ பறையர்கள் என்றோதான் அழைக்கப்பட்டனர். அம்மக்கள் இன்றும் அவ்வாறே அழைக்கப்பட்டு வருகின்றனர்.

திராவிட அரசமரபினரோ - வீரர்களோ, வேளாண்மையில் ஈடுபட்டிருந்தவர்களோ ஒருபோதும் பார்ப்பனர்களால் அடிமையாக்கப்படவோ அல்லது பார்ப்பனர்களைச் சார்ந்து வாழும்படியோ செய்யப்படவில்லை. மாறாக, வஞ்சகமாக, வஞ்சப்புகழ்ச்சியின் வாயிலாகவேதான், திராவிடர்களே தம்மைச் 'சூத்திரர்' என்று அழைப்பதில் பெருமிதம் கொள்ளும் படியான நிலைமைக்கு ஆளாயினர். உண்மை அதுதான் என்றால் பார்ப்பனர்களின் அணுகுமுறை பிசிறில்லாத வெற்றியைத் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும்[41] என அச்சொல் தமிழர் வாழ்வில் இடம் பெற்ற வரலாற்றை நன்கு விளக்குகின்றார். இம்மேற்கோளில் கால்டுவெல், 'திராவிடர்' என்று குறிப்பது தமிழச் சமூகத்தைச் சார்ந்தவர்களை மட்டுமே என்பதையும் நம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கால்டுவெல், சூத்திரர் என்ற பட்டத்தைப் பெருமையாகத் திராவிடர் (தமிழர்) கருதினர் எனக் கால்டுவெல் கூறுவதில் பகுதி

உண்மை மட்டுமே உண்டு. முழு உண்மையல்ல. பக்தி இயக்க நாளில் சைவசமயம் மட்டுமே பார்ப்பன மேலாண்மையையும் வேத மேலாண்மையும் ஏற்றுக் கொண்டது. அதிலும் காளாமுகப் பிரிவினரான ஞானசம்பந்தன், ஆகமமுறைப்படி நடந்துவந்த கபாலிகப்பிரிவு சிவன் கோவில்களை எல்லாம், வைதிக மரபுக்குரிய காளாமுகப் பிரிவுச் சிவன் கோவிலாக மாற்றியவர். கபாலிகர் சாதி வேறுபாடுகளைக் கடந்தவர்கள். ஆனால் காளாமுகப்பிரிவோ வைதிக மேலாண்மைக்குரிய அனைத்து வழிமுறைகளையும் பின்பற்றியது. சைவ சமயத்தில் வைதிக மேலாண்மை உறுதி செய்யப்பட்டபின், சைவ அடியவர்களில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்கள் கூடச் சூத்திரர் என்றே அழைக்கப்பட்டுள்ளனர். இளையான்குடி மாறநாயனார் பற்றிப் பாடும் சேக்கிழார் அவரைச் 'சூத்திரர் குலம் செய்த' தவத்தால் அவதரித்தவர் என்று புகழ்வதை அதற்கான சான்றாகக் காணலாம்.

அம்பொன் நீடிய அம்பலத்தினில்
ஆடுவார் அடிசூடுவார்
தம்பிரான் அடிமைத் திறத்துயிர்
சால்பின் மேன்மை தரித்துளார்
நம்பு வாய்மையில் நீடு சூத்திர
நற்குலஞ் செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கினார்
இளையான் குடிப்பதி மாறனார்.[42]

என்பது அப்பாடல்.

சூத்திரர் யாவர் என்பதற்கான விளக்கத்தை,

பின்னவர் சதுர்த்தர் பெருக்காளர் வளமையர்
மன்னுமுத் தொழிலர் மண்மகள் புதல்வர்
ஊழவர் ஏரினர் வாணர்கா ராளர்
வினைஞர் மேழியர் வேளாளர் என்றிவை
தொகுபெய ரெல்லாம் சூத்திரர் பெயரே.[43]

எனப் பிங்கல நிகண்டும் இலக்கணம் வகுக்கும்.

ஆனால் மாலியத்தில் 'சூத்திரத்' தன்மை பெரும் கண்டனத்திற்கு உரியதாக இருந்துள்ளது. பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராக இருந்தாலும், மாலியக் கோட்பாட்டின் மூலவராகக் கருதப்படுபவர் நம்மாழ்வார் ஆவார். இவர் சூத்திரர் - நாலாஞ்சாதியார் என்ற காரணத்தாலேயே வைதிகர்கள் கண்டித்தும் ஒதுக்கியும் அவரைப் புறக்கணித்துள்ளனர். மதுரகவி ஆழ்வார், திருமாலைவிட நம்மாழ்வாரை

ஏற்றுப் போற்றியவர். அதன் காரணமாகவே மதுரகவி ஆழ்வாரைப் பார்ப்பனர்கள் புறக்கணித்தனர். இதனை, 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் புன்மையாகக் கருதுவர் ஆயினும் அவரே எனக்கு அன்னையும் அத்தனும் ஆவார்...' என அறைகூவல் விடுப்பதில் காணலாம். நம்மாழ்வாரை வைதிகர்கள் இகழ்ந்து ஏற்க மறுத்ததன் விளைவாய், நம்மாழ்வாரையும் அவரின் பாசுரங்களையும் ஏற்றிப் போற்ற வந்ததே மணவாள மாமுனிவரின் 'ஆசாரிய இருதயமாகும்'. 75 வது நூற்பாவிற்கான உரை இதற்கான தெளிவைத் தருகிறது.

திருவாய்மொழியின் சிறப்பினையும் அர்ச்சாவதாரத்தின் (உருவ வழிபாட்டின்) வைபவத்தையும் அருளிச் செய்தார் இதுகாறும். திருவாய் மொழியும், திருவாய் மொழியிற் பேசப்படுகின்ற அர்ச்சாவதாரமும் இப்படி வேறுபட்ட சிறப்பினவாய் இருந்தனவேயாகிலும் திருவாய் மொழியை அருளிச் செய்த நம்மாழ்வார் நான்காம் வருணத்தில் அவதரித்த வரன்றோ என்ன, திருவாய் மொழியை (பாடி'யை)க் கொண்டும், அர்ச்சாவதாரத்தை (திருமால் உருவை) அது செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டும் இகழ்ந்தால் பாவம் உளதாம் என்று மேலே கூறவில்லையேயாயினும், அவை உளவாகத் திருவுள்ளம் பற்றி அவற்றை உவமையாக்கிக் கொண்டு பாகவதோதமரான இப்பெரியாருடைய பிறவியை ஆராய்தல் பெருங்குற்றமாம்.[44] எனக் கூறும் உரையாசிரியர், அது எப்படிப்பட்ட குற்றம் என்பதை கடுமையான உவமை கொண்டு விளக்குவதில் உள்ள அறச்சினம் கருதத் தக்கதாய் உள்ளது. நம்மாழ்வாரை அவர் பிறந்த சாதியைக் கொண்டு மதிக்கத் தவறுவதும், இழிவு செய்வதும் 'பெற்ற தாயின் கற்பை ஐயுறுவது' போன்றது எனும் பொருளில், ஞானிகள், அர்ச்சாவதாரத்தில் முதற் காரணத்தை நினைப்பதும் ஸ்ரீவைணவனுடைய பிறப்பினை நினைப்பதும் தாயின் யோநி பரிட்சைக்கு ஒப்பாம்.[45] என உரை கூறுவதும் எண்ணத்தக்கதாகும். வைணவம் தொடங்கிய இச் சூத்திரப்புரட்சியின் கனலைப் புறக்கணித்துவிட முடியாது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். வைணவத்தில் நடந்துள்ள புரட்சிப் போக்கு இரு கூறுகளைக் கொண்டுள்ளது. ஒன்று வடமொழி எதிர்ப்பு. இதில் தமிழின் ஆக்கப் பூர்வமான பங்களிப்பின் மேன்மையே உள்ளடக்கமாகும். மற்றது சூத்திர ஒழிப்பு. அதாவது சாதி ஒழிப்பு. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த இரு கூறுகளும் கடவுள் - மத எதிர்பை உள்ளடக்கமாகக் கொண்ட திராவிடர் இயக்கத்தில் தலையாய இடத்தை வகிப்பதை ஒரு 'வரலாற்று முரண்' எனக் கூறுவதில் பிழை இல்லை.

பறையர்

சூத்திரர் பற்றி ஆராய்ந்த அறிஞர் கால்டுவெல் தம்நூலின் இரண்டாம் பதிப்பின் பின்னிணைப்பாகப் பறையர் பற்றிய ஆய்வையும் இணைத்துள்ளார். திருக்குறளைத் தமிழ் மறையாகப் போற்றியவர்கள், வள்ளுவரைத் தேவராக வணங்கியவர்கள், அவர் பிறந்ததாகக் கருதப்படும் சாதியைத் தமிழ்ச் சாதியாகக் கூட ஏற்கவில்லை. அதைப் போன்றே தமிழ் இசைக்கு இயக்கம் கண்டவர்கள், அந்த இசையை அறிவியலாக வளர்த்துப் பாதுகாத்த பாணர்களை - (இவர்கள் பறையரில் ஒரு வகுப்பார்)யும் இழிந்த சாதியாக்கி ஒதுக்கினார்கள். தமிழர் என்ற சொல்லுக்குப் பறையர் நீங்கலான தமிழ்ச்சாதி எனப் பொருள் தரும் அளவிற்கு இவர்களின் சாதி வெறுப்பு மேலோங்கி நின்றது. அப்போதுதான் பறையர்கள் திராவிடர்களா? எனக்கேள்விகேட்டு,

.... தோடர்கள்,ஃகோண்டுகள் கோண்டுகளின் பல பிரிவினர் ஆகிய இனக்குழுவினர் எல்லாம் இந்துக்கள் அல்லர். அவர்களைப் போன்றே கால்நடைகளைக் கொள்ளையடித்து வாழும் நாடோடிக் கூட்டத்தாரும் இந்துக்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. புவியியல் அடிப்படையில் பார்த்தால் பார்ப்பனர்களைப் போல அவர்களும் இந்துக்களாகக் கருதப்பட வேண்டியவர்களே. ஆயினும் சிலபல காரணங்களைக் கொண்டு பார்த்தால் அவர்களை இந்துப்பழமை வாதிகளாகக் கருதமுடியாது என்பதும் உண்மைதான். இந்தியாவின் பல பகுதிகளில் குறிப்பாக நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ள பல மாவட்டங்களில், பறையர்களும் அவர்களை ஒத்த தாழ்ந்த சாதிமக்களும் மற்றவர்களைப் போல அவர்களும் இந்துக்களே. பார்ப்பனர்களும் பறையர்களும் சிவனைச் சமமாகவே வழிபடுகின்றார்கள். அவர்களுக்கிடையேயுள்ள ஒரே ஒரு வேறுபாடு சாதியைத் தவிர மதமே அல்ல.[46] எனவிடை காண்பார் கால்டுவெல். மேலும், 'தென்னிந்தியாவில் ஒட்டுமொத்த திராவிடரும் இந்துக்கள் என்றே குறிக்கப்படுகின்றனர். சென்னைப் பல்கலைக்கழகம் தம் மாணவர்களைப் பார்ப்பனர் என்றும், மற்ற இந்துக்கள் என்றும் இரண்டு பிரிவுகளாக மட்டுமே பிரித்துள்ளது. மற்ற இந்துக்கள் என்னும் சொல் பார்ப்பனர் அல்லாதாரை அதாவது பார்ப்பனர் என்னும் சொல் பார்ப்பனர் அல்லாத இந்துக்களைக் குறிப்பதாகும். இதற்கு முற்றிலும் மாறாகத் தென்னிந்தியாவில் உயர் சாதியினரை மட்டும் குறிப்பதாக இந்து என்ற சொல் வரையறுக்கப்பட்டு விட்டதுடன், பறையர்களுக்கும் அவர்களைப் போன்ற தாழ்நிலையில் உள்ளவர்களுக்கும் அவ்வுரிமை மறுக்கப்பட்டு விட்டது.[47] என்றும் ஆய்ந்துரைப்பார்.

இவ்வாறு பறையர்கள் இந்து மதத்தினால் புறக்கணிக்கப் பட்டாலும், அவர்களின் கடந்த கால வரலாறு அவர்களை இழிந்தோராகக் காட்டவில்லை என்பதையும் சான்றுகளுடன் நிறுவுகின்றார். பழைய தஞ்சை மாவட்டத்தின் திருவாரூர் கோவில் விழா பற்றிக் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

திருவாரூர் கோவில் திருவிழாவின் போது, பறையர் சமூகத்தைச் சார்ந்த அவர்களின் தலைவரை, கடவுளுக்கு நிகராக யானையின் மீது ஏற்றி வருவதையும், சென்னையிலும் அதைப் போன்ற நிகழ்ச்சி நடை பெறுவதையும் எடுத்துக் காட்டுவார் கால்டுவெல். அத்துடன்,

தென்னிந்தியாவில் தற்போது தாழ்நிலையில் தள்ளப்பட்டுள்ள இம்மக்கள் ஒரு காலத்தில் அதாவது ஆரியர்வருகையின் போது இந்த மண்ணின் தலைவர்களாகவும் உயர்ந்த குழுகத் தகுதி வாய்ந்தவர்களுமாக இருந்தவர்கள். தற்போது அவர்கள் பெற்றுவரும் சில சலுகைகள் எல்லாம் ஒரு காலத்தில் அவர்கள் பெற்றிருந்த உயர் நிலையின் எச்சங்களாகும். அவ் எச்சங்கள் ஒருவகையான பொறாமையோடே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அவர்களின் கடந்த கால வரலாறு மறக்கப்பட்டதுடன் பிழையாக உணரும்படியும் உருமாறிவிட்டது.[48] என்றும் மேற்கோள் காட்டி விளக்குவார். இவ்வாறு அம்மக்கள் திராவிடர்கள் தாமா? எனும் கேள்வியை முன்வைத்து அவர்கள் திராவிடர்களே எனப் பல்வேறு காரணங்களைக் காட்டிவரும் கால்டுவெல் முடிவாகக் கூறுவது நம் கவனத்திற்கு உரியதாகும்.

நிறைவாக, தற்போது திராவிட நாட்டுப் பகுதியில் தாழ்நிலையிலும் உயர்நிலையிலும் இருப்பதாகப் பாவிக்கப்படும் இவ்வேறுபாடு என்னைப் பொறுத்த மட்டில் மிகவும் தற்காலிகமானதே. ஆரியர் வருகையின் போது தென்னிந்தியாவின் தொல்குடிகளாக வாழ்ந்த அனைவரும் ஒரே இனத்தவரே என்பது முற்றிலும் உண்மை. ஆரியர் வருகைக்கு முன்னர் திராவிட இனத்தவர் பல குழுக்களாகப் பிரிந்திருக்கலாம். அப்போது அம்மக்களிடையே இருப்பவன் இல்லாதவன், தலைவன் - பணியாள் எனும் பாகுபாடுகளும் தோன்றி இருக்கலாம். அப்பாகுபாடுகளே பின்னாளில் சாதிகளுக்கான அடிப்படையாக மாறி இருக்கலாம். அதையே பார்ப்பனர்கள், தங்களுக்குச் சாதகமாக - வடநாட்டில் தாங்கள் உருவாக்கிய சாதி அமைப்பைப் போன்றதொரு குழுக அமைப்பை இங்கும் உருவாக்கி இருக்க வேண்டும்.[49] என்று உறுதிசெய்கிறார்.

சாணார்

பறையர் குமுகம் பற்றி ஆராய்ந்த அளவிற்குச் சாணார்களைப் பற்றி இந்நூலில் ஆராயவில்லை என்றாலும் அம்மக்களின் அக்காலக் குமுக நிலையைப் பற்றித் தெளிவாகவே குறித்துள்ளார். இதனை, சாணார்களில் பெரும்பான்மையானவர்கள் கிறித்துவத்தைத் தழுவியுள்ள போதும் ஐரோப்பிய அறிஞர்களில் பலர் இம்மக்களை இந்துக்களாகக் கருதவில்லை. அவ்வாறு இந்து சமயத்திலிருந்து அவர்களை ஒதுக்குவதில் எனக்கு உடன்பாடில்லை. ஆயினும் கிறித்துவத்தைத் தழுவுவதற்கு முன்னர் அம்மக்கள் பின்பற்றி வந்த சமய ஒழுகலாறுகள் இந்து சமயத்தில் உயர்வாக மதிக்கப்பட்டவையல்ல என்பதும் உண்மைதான்.[50] எனும் அவரின் கூற்றால் தெளியலாம்.

திருவாங்கூர், கொச்சி அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பகுதிகளில் இம்மக்களின் வாழ்நிலை மிகவும் இரங்கத்தக்கதாகவும் அவலம் நிறைந்ததாகவும் இருந்தது. பெண்கள் தம் மானத்தைக் காத்துக் கொள்ள மேலாடை அணிவதற்குக் கூட உரிமையற்றிருந்தனர். அவ்வாறு மாறாப்பு அணியாமல் இருந்தது அவர்களின் சாதி அடையாளமாகவும் கருதப்பட்டதாகக் கால்டுவெல் குறித்துள்ளார்.[51] மேலாடை அணிந்து தம் மானத்தை - மாண்பைக் - காக்க அம்மக்கள் நடத்திய போர் தோள்சீலைக் கலகமாக வரலாற்றில் பதிந்துவிட்டது. இப்போராட்டம் குறித்து,

மனுதர்மம் போற்றிய இந்துமதம் ஒரு குலத்திற்கு ஒரு நீதி பேசியது. பண்பாட்டுச் சிறப்பையும் நாகரிக வளர்ச்சியின் சுகங்களையும் ஒருசிலரின் சர்வாதீனங்களாக ஆக்கித் தந்தது. மனிதனை உயர்த்துவதற்குப் பதிலாகத் தாழ்த்தியது. இந்நிலையில் சமத்துவம் போற்றி, மானுடம் பேணி, புதிய வாழ்க்கை முறையையும் நாகரிகத்தையும் ஏற்றுவந்த கிறித்துவச் சமயத்தில் கேரளத்தார் பலர் சேர்ந்தனர். மதம்மாறியவர்கள் கல்வியிலும் வாழ்க்கை முறையிலும் முன்னேற்றம் அனுபவித்தனர். பெண்கள் மேலாடைகளை - குப்பாயங்களை - அணிய ஆரம்பித்தனர். அக்கம் பக்கத்து மேல்சாதியினர் இதை அங்கீகரிக்கவில்லை. பள்ளிகளையும் மாதா கோவில்களையும் எரித்தனர். இத்தகைய நிகழ்ச்சிகள் 1827 முதல் 1830 வரை பல நிகழ்ந்தன. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இதே நிகழ்ச்சிகள் மீண்டும் தலைதூக்கின. சாணார் பெண்கள் குப்பாயங்களை அணிந்ததுடன் மேல் சாதிப் பெண்களைப் போல் கைகளையும் மூடினர். அதனால் ஆத்திரமடைந்த சாதி இந்துக்கள் தாக்குதலில் இறங்கினர். அதனால் சாணார்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். அப்பொழுது சென்னையில் ஆளுனராக இருந்த சார்லஸ் டிரவெலியன்

இதில் தலையிட்டு 1859 இல் ஓர் அரசப் பிரகடனத்தை வெளியிட்டார். அதன்படி தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் மார்பினை மூடும் உரிமை பெற்றனர்.[52] என விவரிப்பார் கு.வெ.கி. ஆசான்.

இந்தியக்குமுக வரலாற்றில் சாணார்களுக்கென்று தனித்ததொரு வரலாறு உண்டு. அது அவர்களின் போராட்ட வரலாறும் ஆகும். ஆம், அதுதான் தம் இழிவைத் துடைக்க, பொதுச் சாலைகளில் நடக்க, கோவில்களில் நுழைந்து வழிபாடு செய்ய அவர்கள் தொடங்கிய போராட்டமாகும். இந்தியாவின் முதல் சாதி ஒழிப்புப் போராக வரலாற்றாசிரியர்களால் குறிக்கப்படும் வைக்கம் போராட்டமே அதுவாகும். அந்தப் போராட்டத்தின் தலைமை பெரியார் மீது திணிக்கப்பட்டது. அவரால்தான் அது வெற்றி பெற்றது. எனினும் அதனைத் தொடங்கிவைத்தவர்கள் ஈழவர்களே ஆவர். இப்போராட்டத்தை அரசு இரும்புக்கரம் கொண்டு நசுக்கியது. போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சூழலில் அப்போராட்டத்தை ஒடுக்கும் வகையில், திவான் டி. இராகவய்யா வெளியிட்ட அறிக்கை இந்து மதத்தின் கொடுங்கோன்மையை ஞாயப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது.

சில பாதைகளைச் சில சமூகங்கள் பயன்படுத்தக் கூடாதென்ற பழக்கம் இருக்கிறது. இதை எதிர்த்து வைக்கம் சத்தியாகிரகம் நடத்தப்படுகிறது. சாதிவட்டத்திலிருந்து வெளியே நிற்கும் சில சமூகங்கள் கேரளத்தில் உண்டு. சாதி இந்துக்களையோ அல்லது அவர்கள் வழிபடும் கோயில், கடவுளரையோ, சாதியில் சேராதவர்கள் தொடுவதோ அல்லது நெருங்குவதோ தீட்டு என்று துரதிஷ்டவசமாகத் தொன்மைக் காலந்தொட்டுக் கருதப்படுகிறது. இதன் விளைவாகச் சில கோயில்களுக்கு அருகில் இருக்கும் பொதுப்பாதைகளைப் பயன்படுத்த இந்தச் சாதியற்ற சமூகத்தினர் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தப் பழக்கம் இருப்பதை சாதியற்றவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

... நீண்ட காலமாக நிறுவப்பட்டுள்ள இப்பழக்கத்தை உடைத்த - தடை செய்யப்பட்டுள்ள பாதைக்குச் செல்ல - கிளர்ச்சியாளர்கள் முயலுகின்றனர்..... இது சாதி இந்துக்களின் மத நம்பிக்கைகளைப் புண்படுத்துகின்றது. நன்கு நிறுவப்பட்டுள்ள மேற்படிப் பழக்கம் திருவிதாங்கூர் நீதிமன்றத்தின் பல தீர்ப்புகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் அஃது இந்த நாட்டின் இப்போதைய சட்டமாகும்.

மானுடத்திற்கு மிகவும் புறம்பாக (*Outrageously inhuman*) இருந்தாலன்றி, மத நம்பிக்கைகள், அவற்றின் மீதமைந்த பழக்கங்கள்

ஆகியவற்றில் தலையிடாமைதான் ஒவ்வொரு அரசின் தலையாய கடமையாகும். அதோடு பொது அமைதியைக் காப்பதும், உள்ள ஏற்பாடுகளை, அமைப்புகளை நிலைநாட்டுவதும் அரசாங்கத்தின் கடமையாகும். இருக்கின்ற சட்டத்தை நீதிமன்றங்கள் எவ்வாறு விளக்குகின்றனவோ, அதற்கு ஏற்ப அதை நிலைநாட்டுவதும் செயல்படுத்துவதும்தான் ஒவ்வொரு அரசாங்கத்தின் கடமையாகும். இதைத்தான் திருவாங்கூர் அரசு செய்திருக்கிறது.[53] என்று ஞாயப்படுத்தினார். இவ்வாறு அரசு உறுதியாக கூறிய போதும், பெரியார் அவர்களைச் சிறையில் அடைத்துப் போராட்டத்தை ஒடுக்க முனைந்தும்கூட இறுதி வெற்றி தந்தை பெரியாருக்கே கிடைத்தது. அதனால்தான் தந்தை பெரியாரைத் திரு.வி.க. அவர்கள் 'வைக்கம்வீரர்' எனப் பாராட்டினார். வைக்கம் அறப்போர் - 'வைக்கம் சத்தியா கிரகம்' என்றே அழைக்கப்பட்டது. இப்போராட்டத்தின் ஒவ்வொரு அசைவையும் மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார் அம்பேத்கர் என்றும், இந்தப் போராட்டத்தின் வெற்றியே அம்பேத்கரின் அறவழிப் போராட்டத்திற்கு உந்து விசையாக இருந்தது என்றும் தனஞ்செய்கீர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு ஒட்டுமொத்த இந்தியாவின் கவனத்தை ஈர்த்ததும் இந்திய வரலாற்றின் முதல் சாதி ஒழிப்புப் போராகக் கருதப்படுவதுமான வைக்கம் போராட்டம், சாணார்களுக்காகவே நடத்தப்பட்டது என்ற உண்மையைப் பலர் மறந்துவிட்டனர். தெருவில் நடக்கும் உரிமையைப் பெற்றதை அடுத்துப் பெரியார் நடத்திய அடுத்த போராட்டம் கோவிலில் நுழைந்து தாம் விரும்பும் கடவுளை வணங்குவதற்கான கோவில் நுழைவுப் போராட்டமேயாகும். இப் போராட்டத்தின் வரலாற்றிலும் சாணார்களுக்குப் பெரும்பங்கு உண்டு. ஏனெனில் தெருவில் நடப்பதற்கான உரிமை இல்லாதது போலவே கோவிலுக்குள் நுழையவும் அம்மக்கள் உரிமையற்றிருந்தனர். அதனால்தான் ஐரோப்பிய அறிஞர்கள் சாணார்களை இந்துக்களாகக் கருதவில்லை எனலாம். இச்சூழலில்தான் நாராயணகுரு, சாணார்களின் எழுச்சிக்கு அடித்தளமானார். இந்து சமயங்களுக்கு எதிராகத் தங்களுக்கென்று தனிக் கோவில்களைக் கட்டிக் கொள்ள ஆவன செய்தார். இத்தகு வரலாற்றுப் பின்புலத்தில் தான் திராவிடர் இயக்கம் கால்கொண்டது.

திராவிடர் இயக்கம்

தமிழர்கள் - திராவிடர்கள் சூத்திரர்களாக இழிவுபடுத்தப்பட்ட நிலையில் சூத்திரர்களுக்கும் கீழாகப் பல தமிழ்ச் சாதிகள் அவமதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அவர்களின் மானமீட்பை - கல்வி பெறும் உரிமையை நோக்கமாகக் கொண்டு தோன்றியது தான் திராவிடர் இயக்கம். உரிமையை நோக்கமாகக் கொண்டு தோன்றியது தான் திராவிடர் இயக்கம். தமிழகத்தில் ஆரியப் கட்டுரையின் தொடக்கத்தில் கூறியபடி.

பண்பாட்டின் ஆளுமையை அதனால் ஏற்பட்ட குமுகச் சீரழிவை, மனித நேயத்தை மாய்க்கின்ற சாதி ஆதிக்கத்தை வீழ்த்தி, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் எனும் கோட்பாடுகளை நிலைநாட்டவும், மொழிவழியில் சமற்கிருதத்திற்கு எதிரான தமிழ்வழிப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யவும் தோன்றியதே திராவிடர் இயக்கம் அவ்வியக்கத்தின் வேராகவும் விழுதாகவும் இருந்தவர்களே தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் ஆவர். நான்யார்? எனத் தனக்குத்தானே கேள்விகேட்டுக் கொண்டு பெரியார் தந்த விளக்கம் எண்ணத்தக்கது.

Fr.வெ.ராமசாமி என்கின்ற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக் கொண்டு அதே பணியாய் இருப்பவன். அந்தத் தொண்டு செய்ய எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ இந்த நாட்டில் அந்தத் தொண்டு செய்ய யாரும் முன் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன். இதைத்தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும் பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், நான் அந்தத் தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகின்றேன். சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இது போதும் என்றே கருதுகின்றேன்.[54] என்பதாகும். 'திராவிட சமுதாயம்' மேன்மையுற - அறிவும் மானமும் பெற உழைக்கும் பெரியார், அந்தப் பெயரைத் தன் இயக்கத்திற்குச் சூட்டியதற்கான காரணம் யாது?

நாம் இந்தியர் என்பதை மறுக்கிற படியாலும், இன உணர்ச்சியும், எழுச்சியும், பெற வேண்டுவதாலும் 'திராவிடர்' என்னும் பெயரைக் கொண்டோம். இது புதிதாக உண்டாக்கியதல்ல, மறந்ததை நினைத்துக் கொண்டதேயாகும். நம்மைக் குறிக்கப் பார்ப்பனரல்லாதார் என்கிறோம். அல்லாதார் என்பதைச் சேர்த்துக்கொள்ள நாம் என்ன நாடோடிகளா? நாம் ஏன் 'அல்லாதார்' ஆக வேண்டும்.....

..... மேலும் நமக்குத் 'திராவிடர்' என்பது பெயரல்லவானால் வேறு எதுதான் பெயராகும்? பார்ப்பனர் அல்லாதார் என்பதா? பார்ப்பனர் அல்லாதார் எனக் கூறிக்கொள்ளும் ஜஸ்டிஸ்கட்சிக் காரர்கள் எந்த வகையில் பார்ப்பனர்களிடமிருந்து வேறுபடுகின்றனர்? நடை, உடை, பாவனைகளில், மதத்துறையில் வேதத்தில் பார்ப்பனரைவிட இரண்டு மடங்காகவல்லவா இருக்கின்றார்கள்!....

'திராவிடர்' என்ற பெயருக்கு ஆதாரம் தேட வேண்டிய அவசியம் இல்லை. முதல் வகுப்புச் சரித்திரப் பாடம் முதல், பெரிய வரலாறுகள் வரையில் எல்லா நூல்களிலும் இதற்கு ஆதாரம் இருக்கிறது. பழக்க வழக்கங்களிலும் ஆதாரமிருக்கிறது. கலாச்சாரங்களிலும் பல ஆதாரங்கள் இருக்கின்றன.[55] எனப் பெரியார் விவரிப்பார். இந்த விவரிப்பில் கால்டுவெல் உள்ளுறையாக இருப்பது தெளிவு.

இந்த இயக்கத்தின் பெயர் கால்டுவெல் வழங்கிய மொழிக்குடும்பத்திற்குரிய அதாவது திராவிட மொழிக் குடும்பத்திற்குரிய பொதுப் பெயராக இருந்தாலும் உண்மையில் இது 'தமிழ்' தமிழினம் - தமிழ் மொழி - தமிழ்த் தேசியம் என்ற பொருளிலேயே பயிலப்பட்டு வந்துள்ளதும் வெளிப்படையாகும். இதனை அறிஞர் அண்ணா அவர்கள் 22.8.1937 இல், இந்தி எதிர்ப்புப் போராட்டச் சூழலில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் துறையூரில் நடந்த சுயமரியாதை மாநாட்டில் ஆற்றிய சொற்பொழிவு நன்கு விளக்குகின்றது.

மத ஆபாசத்தை வகுத்து வைத்த ஆரியச் சூழ்ச்சி, பார்ப்பனருக்கு இன்றும் பெருந்துணையாக இருப்பதை யாவரும் அறிவர். சமூகத்தில் உயர்ந்த சாதியினராகவும், 'போதகாசிரியர்களாகவும்' வாழ்ந்து, ஏகபோக மிராசு செலுத்தும் பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை ஒழித்தால்தான் நாம் சுதந்திரத்தையோ சகோதரத்துவத்தையோ அனுபவிக்க முடியும் என்ற உண்மையை நாம் கண்டறிந்து அப்போரைத் தொடங்கினோம். தமிழ்மொழி இதுவே நாம் தமிழர் என்பதைக் காட்டுவது. இதற்கு ஆபத்து வந்துவிட்டால், நமது ஒற்றுமை, கலை, நாகரிகம், யாவும் நாசம்! ஆகவே தமிழைக் காப்பாற்றுங்கள்.[56] என முழங்கிய அண்ணா, தமது இயக்கத்தின் சாதனைகளையும் பட்டியலிடுவார்.

> ..... போதனையுடன் மட்டும் நாம் நின்று விடுவதில்லை. நடைமுறையிலே பலப்பல செய்துகாட்டினோம். சாதி விலங்குகளைத் தகர்த்தோம். மத ஆபாசங்களை அலசினோம். புராணக்குப்பையைக் கொளுத்தினோம். மாதரைச் சிறைமீட்டோம். விடுதலை முரசு கொட்டினோம். படைதிரண்டெழுந்தது. போர்பல புரிந்தோம். வெற்றியாவும் கண்டோம். 'தமிழா! எழு! விழி! நீ மனிதனென்பதை உணர்ந்துகொள்! உன்னைச் சுதந்திர வெளியில் போக ஒட்டாது தடுக்கும் சனியன்களை விரட்டு' என்று கூறினோம். மனிதத் தத்துவத்தை மறைத்துவந்த முகம் வெளுக்கத் தொடங்கியது. இவ்வளவு அரும்பெரும் பணிகளாற்றிய நமது இயக்கம், எதிர் காலத்திலும் சளைக்காது உழைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.[57]

என்று நம்பிக்கையுடன் அப்பட்டியல் நீளும். இந்த இயக்கத்தின் இலக்கு குமுகப்புரட்சி மட்டுமன்று; இழந்துபோன இன மானத்தை - மொழிமானத்தை - மீட்டெடுப்பதும் ஆகும். அதனால்தான் இந்தி எதிர்ப்பு என்பதை ஒரு மொழிப்போராகக் கருதாமல் பண்பாட்டுப் பாதுகாப்புப் போராக அந்த இயக்கம் நடத்தியது. இப்போருக்கான கருத்தியலும் கூட கால்டுவெல்லின் திராவிடத்திலிருந்தே முகிழ்க்கின்றது. இதனை, தோழர்களே, நாம் சுதந்திர, சகோதரத்துவத்தை விளக்குகிறோம். இவ்விரண்டும் சமுதாயத்திற்குத் தேவையாய் இருக்க, அவற்றை நாம் நுகர முடியாதபடி நம்மைத்தடுக்கும் காரணிகளை ஆராய்ந்து கண்டுபிடித்தோம். நமது நாட்டிலே ஆரியர் உள்நுழைந்த காலம் முதற்கொண்டு சமூகச் சனியன்கள் தாண்டவமாட ஆரம்பித்தன. பழங்குடிமக்களான திராவிடர்கள் நாகரிகத்தில் உச்சநிலை அடைந்திருந்தனர். திராவிட நாகரிகத்தின் மேம்பாடு, சமீபத்திலேயே மொகஞ்சதாரோ ஆரப்பா புதைபொருள் ஆய்வுகளில் இருந்து நன்கு தெரிய வருகிறது. அவ்வளவு உச்சநிலையில் இருந்துவந்தநாம், ஆரியரின் சேர்க்கைக்குப் பிறகு, நடைப்பிணங்களாக மாறினோம். திராவிடர் அடிமைப்படுத்தப்பட்டனர். இரும்பு விலங்குகளால் அல்ல, ஆனால் மத சாஸ்திரங்களால் திராவிடர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களது அரசியல் ஆதிக்கம் அழிக்கப்பட்டது. சமூகத்திலே அவர்கள் ஆரியதாசர்களாக்கப்பட்டனர். ஆரியர் அன்று வகுத்தத் திட்டம் மிருகத்தனத்தை, சூழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.[58] எனும் அண்ணாவின் முழக்கம் தெளிவுபடுத்தும்.

கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இரண்டு கூறுகளைக் கொண்டது என்பதையும், அதில் ஒரு கூறு திராவிட இன மேன்மையும் தொன்மையும் விளக்குவது என்பதையும் மற்றது தமிழின் செம்மொழித் தன்மையை அடையாளம் காட்டியது என்பதையும் நாம் அறிவோம். இவற்றில் இரண்டாவது கூறு தமிழ் மறுமலர்ச்சிக்கும் முதற்கூறு திராவிட தேசியம் அதாவது அதன் உள்ளீடான தமிழ்த் தேசியம் உருவாகவும் வழிவகுத்தது. இதனை மிகவிரிவாகவும் நுட்பமாகவும் ஆய்ந்துரைப்பார் பேராசிரியர் நம்பிஆரூரான் தமது 'தமிழ் மறுமலர்ச்சியும் திராவிடத் தேசியமும்' எனும் ஆங்கில நூலில். 1929 இல் செங்கற்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டின் விளைவுகளைப் பற்றிய தம் ஆய்வை,

அந்த மாநாடு திராவிட இயக்க வரலாற்றில் ஒரு திருப்பு முனை என்பதை நிலைநாட்டியது. அந்த மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகள் அனைத்தும் 19 ஆம் நூற்றாண்டிலிருந்து அறிஞர்களாலும் அரசியல் தலைவர்களாலும் பேசப்பட்டு வந்தவையே. காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில்

பயிற்சி பெற்றவர்களாலேயே சுயமரியாதை இயக்கம் ஒரு படையணியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. கால்டுவெல், நெல்சன், கிராண்ட்டஃப் (*Grand Duff*) போராசிரியர் சுந்தரம் பிள்ளை முதலானோரால் உருவாக்கப்பட்டிருந்த திட்டங்களும் ஒன்றிணைந்து சுயமரியாதை இயக்கமாக வடிவம் கொண்டது. அந்த இயக்கம் வழங்கியதே புதியதும் விரிந்த தன்மையைக் கொண்டதுமான திராவிட தேசியம் என்பதாகும்.[59] என விளக்குவார்.

'இத் திராவிடத் தேசியம்' என்பதும் மொழிவழிப் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதுடன், எல்லா நிலைகளிலும் தமிழ்க்குமுகத்தில் மேலாண்மை செலுத்திவந்த ஆரிய - சமற்கிருதப் பண்பாட்டிலிருந்து அதாவது இந்தியத் தேசியத்திலிருந்து முற்றிலும் விடுதலை பெறுவதையும் நோக்கமாகக் கொண்டதாகும். இந்திய தேசியம் என்பதை ஆரிய - வைதிக தேசியமாகவே உருவாக்கிவிட்டனர். அதன் காரணமாகவே அதனை மறுக்க வேண்டிய தேவை இவர்கட்கு ஏற்பட்டுவிட்டது. இந்தி எதிர்ப்பின்போது தந்தை பெரியார் முழங்கிய முழக்கம் திராவிட தேசியத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்தும். 'இது அரசியல் போராட்டமல்ல, இனப்போராட்டம். மனிதத்தன்மைப் பாதுகாப்புப் போராட்டம். தென்னாட்டவரின் மனிதத்தன்மையை அழித்து ஆரியவர்க்கத்தோடு சேர்த்துக் கொள்ளச் செய்யப்படும் சூழ்ச்சியின் முதல்படிதான் கட்டாய இந்தி நுழைப்பு. ஆகவே நாம் இதை எதிர்த்துத்தான் ஆகவேண்டும். ஒருவேளை ஆந்திரர்கள் ஆரிய வர்க்கத்தில் சேர்ந்துவிடுவார்களோ என்று கூட நினைக்க வேண்டியிருக்கிறது. எவ்வகையானும் இதை எதிர்த்துப் போராடியே தீருவோம். இப்போராட்டம் தென்னாட்டுச் சரித்திரத்தில் - திராவிட நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய மகோன்னதப் போராட்டம். இப்போராட்டத்தில் வெற்றியின்றேல் தமிழ் நாடுபோம், தமிழ் கொடிபோம், தமிழன் சிறப்பெல்லாம் தகர்ந்துபோம். நியாயம் நமது பக்கத்தில்தான் இருக்கிறது. தமிழ்காக்க வாரீர்! எங்களுக்கும் வயதாகிவிட்டது! நாங்களும் வெற்றிகாண ஆசைப்படுகிறோம். ஆகவே தன்மானத் திராவிடர்காள்! தமிழர்காள்! வெற்றிகாணப் போராட்டத்தில் ஈடுபட வாருங்கள். 'சாவேன் அல்லது வெற்றியோடு மீள்வேன்' என்ற உறுதியோடு முன் வாருங்கள்.[60]' என்ற தந்தை பெரியாரின் முழக்கம் உறுதி செய்யும்.

தமிழின் தொன்மைச் சிறப்பைச் சங்க இலக்கியங்களின் அச்சேற்றத்தாலும் தமிழின் நாகரிகச் சிறப்பைச் சிந்து வெளி அகழாய்வினாலும், தமிழின் தனித்தியங்கும் சிறப்பை மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தாலும் உறுதிசெய்த

நிலையில்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றதுடன் தமிழ் நாடு தமிழருக்கே என்ற முழக்கத்தையும் முன்வைத்தது. இத்தகைய விளைவுகளைத்தான் கால்டுவெல்லும் எதிர்பார்த்தார் என்பதை,

> கன்னிநிலம் இப்போதுதான்
> முதன்முதலாக உழப்பட்டுள்ளது!
> ஒளிக்காகவும் காற்றுக்காகவும்
> காத்துக் கிடக்கிறது.
> உயிர்த் துடிப்பான விதைகளைத்
> தூவுங்கள். உரிய
> காலத்தில் அறிவார்ந்த,
> ஒழுக்கம் சார்ந்த
> நிறைவான அறுவடையை
> எதிர்பார்ப்போமாக! [61]

எனும் அவரின் கூற்றே மெய்ப்பிக்கும். அந்த எதிர்பார்ப்பே திராவிட இயக்கமாகும். இந்திய நாடாளுமன்ற மேலவையில், இப்போது இந்தியாவின் ஒருபகுதியாக இருக்கிற நாட்டிலிருந்து நான் வந்திருக்கிறேன். அதில் வேறுபட்ட இன மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களுக்குப் பகையாளிகள் அல்லர். நான் திராவிட இனத்தைச் சார்ந்தவன்.நான் என்னைத் திராவிடன் என்று அழைத்துக் கொள்ளப் பெருமைப் படுகிறேன். இப்படிக் கூறுவதால் நான் வங்காளிக்கோ, மராட்டியருக்கோ, குசராத்தியருக்கோ, எதிரானவன் அல்லன். இராபர்ட் பர்ன்ஸ் சொன்னதுபோல, மனிதன் எப்படி இருந்தாலும் மனிதன்தான். நான் என்னைத் திராவிட இனத்தைச் சேர்ந்தவன் எனச் சொல்லிக் கொள்ளும் போது திராவிடனிடம் இந்த உலகிற்கு வழங்கத் திட்டவட்டமான தெளிவான மற்றவைகளிடமிருந்து வேறுபட்ட சில இருக்கின்றன என்று கருதுகிறேன். அதனால் எங்களுக்குச் சுய நிர்ணய உரிமை தேவை என்று விரும்புகிறோம்.[62] என முழுங்கிய முழக்கமாகும். அந்த முழக்கம் கால்டுவெல் எனும் ஆழ்கடலில் தோன்றிய அலைகளின் முழக்கம். அம்முழக்கம் ஓயாத முழக்கம். ஆம்! இந்த முழக்கம்தான் பேராசிரியர் நம்பிஆரூரான் கூறுவதைப்போலத் தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டுத் தமிழ்த் தேசியமாக - திராவிடத் தேசியமாக வேர்விட்டுக் கிளைத்தது. தமிழர் வாழ்வில் படிந்துள்ள அறியாமை இருளை அகற்றிச் சமத்துவத்தை நிலைநாட்ட அறைகூவல் விடுத்தது. தமிழ்த் தேசியத்தின் உள்ளீடான திராவிடத் தேசியத்தின் மணிக்கொடியின் இலட்சியமாக மானமீட்சியே முன்னெடுக்கப்பட்டது. புரட்சிப் பாவேந்தரின்,

வைகறை இருட்டையும் செங்கதிர் நகைப்பையும்
திராவிடர் மணிக்கொடி குறிக்கும்.
வாழ்விருள் தவிர்ப்போர் தனிப்பெரும் புரட்சியை
வரவேற்றல் கொடியின் நோக்கம்!
துய்யபன் னூறாயிரம் திராவிட மக்கள்
கொடிநெடுந் தறியினைச் சூழ்ந்தே
தோய்கருஞ் சட்டையால் துயருளங் காட்டியும்
சுடர்விழிகள் நாளின்மேல் வைத்தும்
ஐயகோ வாரீரே திராவிட மக்காள்
ஆனஉம் மானத்தைக் காப்பீர்!
அடிமையினை மிடிமையினை மாற்றுவீர் என்னவே
அழைத்தனர் இதைமறுத்தே
வையகம் எதிர்க்கட்டும்! அதிகார வர்க்கம்தான்
வாட்படையோடும் வரட்டும்
வன்சிறை இதோ என்று காட்டட்டும்! திராவிடம்
மீட்பதெம் குறியாகுமே! [63]

எனும் முழக்கமாகப் பீறிட்டது. தமிழ்த் தேசியத்தின் அரசியல் அமைப்பு - ஆட்சிமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்து, 'திராவிடத்தின் வருங்கால வாழ்வு சனநாயக நெறியில் தழைப்பதாக இருக்க வேண்டும். அந்தத் திராவிட மரபுக்கு ஏற்ற நெறியை வளர்த்திட நாம் உறுதிகொள்ள வேண்டும்' எனும் பேராசிரியர் க. அன்பழகன், ஜனநாயகம் ஓர் ஆட்சியின் அமைப்புமுறை மட்டுமல்ல, புதிய வாழ்வுக்கு அது ஓர் அழைப்பு - கடமைப் பொறுப்புகளையும் அதன் பயன்களையும் பங்கிட்டுக் கொள்ளும் கலையில் நிகழும் ஆய்வு, ஒவ்வொரு மனிதனிடமும் பொதிந்துள்ள ஆற்றலை, பொதுநலனை வளர்த்திடும் வகையில் வெளிப்படச் செய்வதற்கும், ஒருங்கிணைப்பதற்கும் செய்யும் முயற்சி. எனவே எந்தத் தனிமனிதனின் ஆற்றலும் வீணாகக் கழிய இடந்தரவியலாது. எந்த ஆணையும் பெண்ணையும், பயனற்றவர்களாக்கவோ தனியொருவனின் வளர்ச்சியைத் தடை செய்வோ, எவரும் கொடுமைக்கு ஆட்பட்டுக் கிடக்கவோ இடம்கொடுக்க முடியாது. எனவே பல்கலைக்கழகங்கள் ஆண்டுதோறும் வெளியுலகுக்கு அனுப்பிவைக்கும் படித்த பட்டதாரி இளைஞர்கள் வாயிலாகத் தன்னல ஆதிக்கத்தையும் கொடுமை இழைக்கும் சக்திகளையும் அடியோடு ஒழிப்பதுடன், சாதி வேற்றுமையையும், பிறப்பு உயர்வு பேசும் பித்தலாட்டத்தையும், எதிர்த்துப் போராடுவதன் மூலம் மானிடத்தின் மாண்பு மேலோங்கச் செய்திடப் பாடுபட வேண்டும்.[64] என அறிஞர் அண்ணாவை மேற்கோள் காட்டுவதில் கால்டுவெல்லின் எதிர்ப்பார்ப்பைக் காணலாம்.

கால்டுவெல் உருவாக்கிய திராவிடக் கருத்தியல் எவ்வாறு தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது என்பதற்கும், அது எப்படி திராவிட - தமிழ்த் தேசியமாக வடிவம் கொண்டது என்பதற்கும் அறிஞர் அண்ணா அவர்கள் தரும் விடை,

தமிழர் மறுமலர்ச்சி இயக்கம் என்னும் பேராற்றின் ஒரு கிளையாறாகத் தமிழிசை இயக்கம் தோன்றியது. தமிழ் மொழியிலே பிற மொழிக் கலப்பு வேண்டா என்பதற்கோர் எழுச்சி, தமிழினப் பற்று வளர்வதற்கான எழுச்சி, நாட்டு மக்கள் அனைவரும் சமமாக வேண்டும் என்பதற்கான புரட்சி, நாட்டு எல்லை குறிக்கப்பட வேண்டும் எனும் போராட்டம், நாட்டினுடைய செல்வம் நாட்டுக்குப் பயன்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சி, தமிழுக்குப் பயன்தரத்தக்க சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதற்கான கிளர்ச்சி முதலியன யாவும் தமிழரின் மறுமலர்ச்சி இயக்கம் என்னும் பேராற்றின் சிற்றாறுகள்.

ஆரியத்தை இலக்கியம், எண்ணம், இசை முதலிய எல்லாத் துறைகளிலும் விரட்டி ஒழித்துத் தமிழ் நாட்டைத் தமிழ் நாடாகக் காண வேண்டுமானால் தனித்தமிழ், தமிழிசை ஆகியவற்றிற்குத் தளர்ச்சியில்லாமல் உழைத்தாக வேண்டும் என்பதாகும்.[65]

மொழிநூல் ஆய்வாகத் தொடங்கிய கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம், தமிழின மீட்டுருவாக்கத்திற்கும், தமிழ் மறுமலர்ச்சிக்கும் தமிழ்ச்சாதிகளின் ஒர்மைக்கும் வித்திட்டது. அந்த விதையை நல்ல நாற்றங்காலில் விதைத்துத் தமிழ்த் தேசியம் எனும் நாற்றை வளர்த்ததே திராவிடர் இயக்கமாகும். அந்த இயக்கத்தின் செயற்பாட்டில் தேக்கம் ஏற்பட்டிருக்கலாம். ஆயினும் அது இன்றும் உயிர்த்துடிப்போடு இருக்கின்றது என்பதே உண்மை.

சான்றெண் விளக்கம்

1. பேராசிரியர் க. அன்பழகன், திராவிட இயக்கம். ப. *16*
2. கே. இராசேந்திரன், தமிழ்க்கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம். ப. *1-4*
3. கா. கோவிந்தன் (த.ஆ)கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் ப. *8*
4. மேலது
5. கே. இராசேந்திரன், மு.கு.நூல் ப. *3*
6. மேலது.ப. *3*
7. தேவநேயப் பாவாணர், திராவிடத்தாய், ப. *8*
8. வி.எஸ்.வி. இராகவன், யுவான் சுவாங் பக். *175-176*
9. க. நெடுஞ்செழியன், கீழ்க்கணக்கு நூல்களின் மெய்யியல்

கோட்பாடுகள் (ஆய்வேடு) ப. 25

10. மேலது

11. *Robert Caldwell, Comparative Grammar of the Dravidian languages P.133 F.N*

12. ரஜினி (த.ஆ) ஆதிசங்கரரின் சௌந்தர்யலகரி, பாடல் 75

13. மேலது ப. 304

14. ப. கிருஷ்ணன், தமிழ்நூல்களில் தமிழ்மொழி, தமிழ்இனம், தமிழ்நாடு, மேற்கோள். ப 183

15. மேலது. பக்205-206

16. தாயுமானவர் பாடல்கள், சித்தர்கணம், 10:2-3

17. இராம.சுந்தரம் (த.ஆ) தாமஸ்டரவுட்மன் - திராவிடச்சான்று ப. 18

18. மேலது ப. 53

19. மேலது ப. 18

20. மேலது பக்.136-137

21. மேலது பக்.233-34

22. மேலது ப. 198

23. அருணா இராசகோபால், திராவிடர் இயக்கம், கட்டுரை (தட்டச்சு) மேற்கோள். ப.12

24. மேலது ப. 18

25. கா.கோவிந்தன் (த.ஆ) மு.கு.நூல் ப.1

26. மேலது ப. 3

27. மேலது ப. 3

28. *Robert Caldwell, Opcit PP. 3-4*

29. தேவநேயப்பாவாணர், மு.கு.நூர.ப. 25-27

30. மேலது ப. 27

31. மேலது ப. 29

32. மேலது ப. 30

33. *Robert Caldwell, Opcit PP. 135-137*

34. அரிமாநோக்கு - முத்திங்கள் இதழ், அக் 2013 ப. மருதநாயகம், திருவள்ளுவரும் சைனகாவும்

35. அரிமநோக்கு அக் 2013 ஜே.முத்துச்செல்வன். செம்மொழி வரலாறு ப. 40

36. மேலது ப. 40

37. பு. இராசதுரை, ஐஸ்டிஸ் கட்சி அரசின் சாதனைகள் பக். 75-76

38. மேலது ப. 76

39. *Robert Caldwell, Opcit.P. 115*

40. *Ibid PP.120-121*

41. பெரியபுராணம், 10:440
42. பிங்கலநிகண்டு 780
43. ஆசாரிய இருதயம், பி.ஆர்.புருடோத்தமநாயுடு (த.ஆ)ப. 170
44. மேலது ப. 171
45. *Robert Caldwell, Opcit pp.714*
46. *Ibid. P. 715*
47. *Ibid. P.722*
48. *Ibid. P.728*
49. *Ibid. P. 716*
50. *Ibid. P.720-721*
51. கு.வெ.கி. ஆசான், குமாரன் ஆசான், பக். 12-13
52. மேலது ப. 13
53. வே. ஆனைமுத்து(தொ.ஆ)பெரியார் சிந்தனைகள் தொகுதி 1
54. மேலது ப. 545
55. கோ. வேள்நம்பி, தமிழனை உயர்த்திய தலைமகன் உரைகள்.ப. 21
56. மேலது ப. 26
57. மேலது ப. 28
58. *K. Nambiarooran, Tamil renaissance and Dravidian nationalism, P.161*
59. வே. ஆனைமுத்து (ப.ஆ) மு.சு.நூ.தொ. ப.1797
60. *K. Nambiarooran, Opcit P.15*
61. கோ. வேள்நம்பி, மு.குருநூல் ப. 131
62. கல்லாடன் (தொ.ஆ) பாரதிதாசன் கவிதைகள் ப. 1526
63. பேராசிரியர் க. அன்பழகன், திராவிட இயக்கம் பக் 86-87
64. மேலது ப.87
65. வே.மு. பொதியவெற்பன், திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல் ப. 43.

❧ ❧ ❧

22. இராபர்ட் கால்டுவெல்லும் தனித்தமிழ் இயக்கமும்

முனைவர் கு. திருமாறன்
மேனாள் முதல்வர்
ந.மு. வேங்கடசாமி நாட்டார் திருவருள் கல்லூரி
தஞ்சை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் சமூக அரசியல் தளங்களில் பெரும் அசைவையும், மாற்றங்களையும் ஏற்படுத்திய இயக்கங்கள் மூன்று. அவை இந்திய விடுதலை இயக்கம், இந்தியப் பொதுவுடைமை இயக்கம், திராவிட இயக்கம் ஆகியன. 1916-இல் தோன்றிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், 1925-இல் தோன்றிய தன்மதிப்பியக்கம், 1944-இல் தோன்றிய திராவிடர் கழகம், 1949-இல் தோன்றிய திராவிட முன்னேற்றக் கழகம், அதன்பின் திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றிலிருந்து கிளைத்த பல்வேறு அமைப்புகள், கட்சிகள் அனைத்தும் திராவிட இயக்கம் என்றே அழைக்கப் பெறுகின்றன. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தோன்றிய 1916-இல் மலர்ந்த தனித்தமிழியக்கம் ஒரு மொழிசார் இயக்கம் எனினும் சமூக அரசியல் இயக்கத்துக்கு உரிய உணர்வெழுச்சியோடும் உந்தாற்றலோடும் அதன் தோற்றுநரான மறைமலையடிகளால் முன்னெடுக்கப்பட்டது. பின்னர் தனித்தமிழியக்கத்தின் தலைவர்களாக விளங்கிய தேவநேயப் பாவாணர், பெருஞ்சித்திரனார் முதலியோர் மறைமலையடிகளை விட மிகுதியான உணர்வெழுச்சியோடு செயற்பட்டனர். திராவிட இயக்கம் குமுக நிலையில் பார்ப்பனர் அல்லாதாருக்கு உரிய இடத்தினைப் பெறுவதற்காகப் போராடியது. தனித்தமிழியக்கம் மொழித்துறையில் சமற்கிருத மேட்டிமையையும், தமிழில் பிற மொழிக்கலப்பையும் எதிர்த்துப் போராடியது. இரு இயக்கங்களும் சில சமயங்களில் முரணியும், பல காலகட்டங்களில் இணைந்தும் செயற்பட்டன.

இராபர்ட் கால்டுவெல் (1814-1891)

அயர்லாந்தில் பிறந்து இலண்டனில் கல்வி கற்றுக் கிறித்துவ சமயத் தொண்டாற்றத் தமிழ்நாட்டுக்கு வந்தவர் இராபர்ட் கால்டுவெல். சென்னையில் தமிழ்கற்று, நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் ஆகிய நூல்களைத் தமிழில் எழுதிய இவர் திருநெல்வேலி வரலாறு (*A History of Tinnevelli*) என்ற ஆங்கில நூலை வெளியிட்டார். முப்பத்தைந்து ஆண்டுகள் தமிழைக் கற்றுப் புலமை பெற்ற கால்டுவெல் 'பிற மொழிகளோடு ஒப்பிட்டு அறியாமல் எந்த ஒரு மொழியையும் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது' என்று உறுதியாக உணர்ந்ததன் விளைவாகத் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலை 1856-இல் வெளியிட்டார். அதன் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு 1875-இல் வெளிவந்தது. கால்டுவெல்லின் நூல்கள் அனைத்திலும் பெரும்படைப்பாகவும், பெருமைக்கு உரியதாகவும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (*A Comparitive Grammar of the Dravidian or South Indian Family of Languages*) எனும் நூல் அமைந்தது. கால்டுவெல்லின் இந்நூல் திராவிட மொழியியல் ஆய்வில் தனியொரு நூல்; அதனை விஞ்சும் வகையிலோ அதற்கு ஈடானதாகவோ ஒரு நூலைப்படைப்பதற்குரிய முயற்சியோ, ஆர்வமோ வேறு எந்த அறிஞருக்கும் ஏற்பட்டவில்லை[1] என்பார் இதன் இரண்டாம் பதிப்பை மறுவெளியீடு செய்த கவிதாசரண்.

தூயமொழி இயக்கம்

'தூய்மையம் என்பது மொழியை வளப்படுத்துவதற்குத் தன்மொழி வாயில்களைத் திறத்தலும், பிறமொழி வாயில்களை அடைத்தலும் எனலாம்'.

மொழித்தூய்மை முயற்சிகள் அல்லது இயக்கம் தோன்றி வளர அகவியற் காரணிகளோ, பிறவியல் காரணிகளோ காரணங்களாக அமையலாம். அகவியற் காரணி மொழியின் அமைப்பு, புறவியற் காரணிகள் குமுகாய, பண்பாட்டு, அரசியல் வரலாற்று அடிப்படையில் அமைவன.

பிறமொழிக் கூறுகளை மொழி ஏற்கும் முறையை மொழியின் அமைப்பு முடிவு செய்கிறது. மொழி அமைப்பைக் காட்டிலும் தாய்மொழிக் கூறுகள், பிறமொழிக்கூறுகள் ஆகியவற்றிடம் அம்மொழியினர் கொண்டுள்ள மனப்பாங்கே முகாமையானது என வெக்சுலர்பால் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். மேலும் மொழித்தூய்மைச் சிந்தனை அல்லது கோட்பாடு தோன்றச் சில

அடிப்படைகள் அல்லது காரணிகள் இருக்க வேண்டும் என அவர் கருதுகிறார்.

1. மொழி எழுத்து வழக்கு உடையதாக இருக்க வேண்டும்.
2. குமுகாய அமைப்பில் மாற்றம் நிகழ வேண்டும்.
3. புதிய செயற்பாடுகளை வெளியிடும் வண்ணம் புதுமைச் சூழல் நிலவவேண்டும்.
4. மொழியின் தனித்தன்மை அழிந்துபடுமோ என்ற அச்சம் நிலவவேண்டும்.
5. தங்கள் மொழிமீதும் பண்பாட்டின்மீதும் அம்மொழி பேசும் மக்கள் பெருமித உணர்வு கொண்டிருக்க வேண்டும்.

என்பன அந்த அடிப்படைகள்[2]

முன்னைக் கருத்தியல்கள்

தமிழர்கள் தங்கள் மொழி பற்றிய மனப்பாங்கையும், மொழிப் பெருமித உணர்வு கொள்வதற்குரிய அடிப்படைகளையும் தீர்மானிப்பதில் கால்டுவெல்லின் நூல் பெரும்பங்காற்றியுள்ளது. இப்பங்களிப்பின் தன்மையை உணரத் தமிழர்களின் முன்னை மொழி மனப்பாங்கை அறிந்து கொள்ள வேண்டும்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் பிறநாட்டாருடன் வணிக உறவுகள் கொண்டிருந்தனர். வடநாட்டு ஆரியர்கள் இராமாயண காலத்திற்குப் பின்னர் மிகுந்த அளவில் குடியேறினர். 'நாளடைவில் தமிழகத்து மன்னர்களின் நன்மதிப்பையும், நட்புறவையும் இவர்கள் ஈட்டிக்கொண்டனர். அவற்றைத் தம் நலத்திற்கும், தம் குடி நலத்திற்கும் பயன்படுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பை ஆரியர் கை நழுவவிடவில்லை. அவர்கள் ஆரிய எழுத்துக்களின் ஒலிகளையும், ஆரியச் சொற்களையும் தமிழில் கலந்தனர். தம்முடைய பழக்க வழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளையும், தெய்வ வழிபாட்டு முறைகளையும், பண்பாடுகளையும் அவர்கள் தமிழகத்தில் பரவவிட்டனர்'[3]. இதனால் தமிழிலும் சமற்கிருதச் சொற்களின் கலப்பு நிகழ்ந்தது. இதன் விளைவாகத்தான்

'வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே'

எனத் தொல்காப்பியர் விதிவகுக்க வேண்டியதாயிற்று.

சங்க காலத்தில் பார்ப்பனர்கள் சில அரசர்களைச் சார்ந்து குமுக மேனிலை பெற்றனர். எனினும் தமிழ் மொழியும், பண்பாடும் தாழ்நிலைக்குத் தள்ளப்பெறவில்லை. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழர் வாழ்வியலில் சமற்கிருதம் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுவிட்டதைச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. அருந்தமிழ் அறியாது வண்டமிழ் இகழ்ந்த வடபுல மன்னர்கள் கனகவிசயரைச் சிறைப்படுத்திக் கண்ணகி சிலைக்குக் கல்கூமக்க வைத்த சேரன் செங்குட்டுவன் மாடல மறையோனுக்கு ஆடகப் பெருநிறை அளித்துப் போற்றினான். மக்கள் நிலையில் மேட்டுக்குடியினரிடம் ஆரியப்பண்பாடு செல்வாக்குப் பெற்றிருந்ததை 'மாமுது பார்ப்பான் மறைவழிக்காட்டிடத் தீவலம் செய்து' நிகழ்ந்த கண்ணகி கோவலன் திருமண முறை சுட்டிக்காட்டுகிறது.

பின்னர் தொடர்ந்த களப்பிரர், பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், நாயக்கர் ஆட்சிக்காலங்களில் பார்ப்பனரின் மேம்பாடும், சமற்கிருத ஆளுமையும் மிகுந்து குமுக நிலையில் பார்ப்பனீயமும், மொழிநிலையில் சமற்கிருதமும் தமிழரின், தமிழ்மொழியின் இடத்தைப் பறித்துக் கொண்டன. அயன்மைச் சமயங்களின், குறிப்பாக வைதிக சமயத்தின் ஆளுமைக்கு அடிமையான தமிழர்கள் தங்கள் விழுமியங்களை இழந்தனர். சமற்கிருதம் அறிவாளர்களின் தகுதிக் குறியீடாகப் பார்ப்பனர்களால் உருவாக்கப்பெற்றுத் தமிழ்மொழி தாழ்நிலைக்குத் தள்ளப்பெற்றது. சமற்கிருதம் உயர்ந்தது. ஏனெனில் அது தேவமொழி, தமிழ் தாழ்ந்தது என்ற மயக்கம் தமிழ் அறிவாளர்களிடையே தோன்றிவிட்டது.

இத்தகு போக்குகட்கு எதிரான குரல்களும் அவ்வப்போது ஒலித்தன. பக்தி இயக்கக் காலத்தில் சிவனிய நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் தமிழின் சீர்மையையும், செழுமையையும், அருமையையும், ஆற்றலையும் தங்கள் பாடல்களில் பாடினர். தமிழ் உணர்வு மீதூறிய தங்கள் பாடல்கள் மூலம் அவர்கள் தங்கள் சமயங்களைப் பரப்பியதோடு தமிழையும் வளர்த்தனர். 'அப்பாக்கள் வடக்கு நோக்கிய அடிமைப்பண்பாட்டிற்கு எதிராகத் தமிழ்மொழியின் வளமான பண்பாட்டை அரசியற்படுத்தின'[4] என்பார் குணா.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் நிலைபெற்ற சமற்கிருத மேட்டிமை மேலும், மேலும் வலுப்பெற்று ஆட்சி, கல்வி, சமயம், வாழ்வியல் எனத்தமிழர் வாழ்வின் எல்லாத்துறைகளிலும் கோலோச்சியது. இதற்கு எதிராகப் பக்தி இயக்கப் பாவலர்கள் தொடங்கிச் சேக்கிழார், கம்பர், குமரகுருபரர், ஈறான புலவர்கள் தமிழைச் சிறப்பித்துப்பாடி வந்தனர். ஆனால் சமற்கிருதத்திற்குத் தமிழ் நிகரானது என்று நிலைநாட்டவே பெரும்பாடுபட்டனர் என்பதற்கு அவர்கள் பாடல்களே

சான்றுகளாகின்றன. இத்தகு புலவர்களின் பாடல்களைக் கேட்டும் படித்தும், சுவைத்தும் மகிழ்ந்த அக்காலத் 'தமிழ்'மன்னர்கள் இவர்கள் வயிற்றுக்குச் சிறிது ஈந்தனர். ஆனால் வடமொழிக் கல்விக்கும், பார்ப்பனர்கள் வளமாக வாழ்வதற்கும் வளமான விளைநிலங்களை வாரி இறைத்தனர். மன்னர்கள் வடமொழிவாணர்களையும், வடமொழியையும் ஏற்றுப் போற்றியதன் விளைவாகத் தமிழ் அறிஞர்களும், சமற்கிருதம் உயர்ந்தது. தமிழ் தாழ்ந்தது எனக்கூறத் தொடங்கினர். தமிழர் பேச்சு வழக்கில் குறிப்பாக உயர்சாதியினர் வழக்கில் சமற்கிருதச் சொற்கலப்பு ஏற்பட்டுப் பின்னர் எழுத்து வழக்கிலும் ஊடுருவி முதலில் உரைநடையிலும் அருணகிரிநாதர் தாயுமானவர் காலம் தொடங்கிச் செய்யுளிலும் நுழைந்துவிட்டது. உரைநடையில் 'மணிப்பிரவாளம்'எனும் புதிய மொழிநடை தோன்றி அதுவே சிறந்தது என்ற கருத்தியலும் தமிழறிஞர்களிடம் தோன்றியது. மேலும் சமற்கிருதக் கலப்பின்றித் தமிழ் இயங்காது என்ற எண்ணம் தமிழ் அறிஞர்கள் நெஞ்சங்களிலேயே தோன்றிவிட்டது.

இலக்கணர் மயக்கம்

தமிழ் இலக்கணர்கள் தங்கள் நூல்களில் வடசொற்கலப்பினை ஏற்று அதற்கு விதிவகுக்கத் தொடங்கினர். குணவீர பண்டிதரின் நேமிநாதம் புத்தமித்திரரின் வீர சோழியம், பவணந்தியின் நன்னூல் ஆகியவற்றில் வடசொற் கலப்புக்கு விதிகளைக் காணலாம். வடசொற்கலப்பு தவிர்க்க முடியாதது மட்டுமல்ல; தேவையானதும் என்ற எண்ணத்தின் விளைவே இத்தகு விதிகள் வகுக்கப்பெறக் காரணம் எனலாம். வடசொற்கலப்பு தேவை எனக் கருதியதோடு சமற்கிருதத்தின் துணையின்றித் தமிழ் தனித்து இயங்காது எனவும், தமிழ் தனித்ததொரு மொழியே அல்ல எனவும் கூறும் அளவிற்குத் தமிழ் இலக்கணர்களின் சமற்கிருத மயக்கம் இருந்தது.

வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் 'தமிழ்ச் சொல்லிற்கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்'[5] என்றார்.

'ஒரு சொல்லாய வழித்தமிழ்ச் சொல் வடபாடைக்கண் செல்லாமையாலும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொதுவாகலானும் இவை வட சொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டனவெனல் வேண்டும்'[6] என்று எழுதினார் சேனாவரையர்.

கி.பி.17-ஆம் நூற்றாண்டில் 'தமிழ் தனிமொழி அன்று'எனத் தமிழ் இலக்கணர்களே நிலைநாட்ட முயன்ற பேரவலம் நிகழ்ந்தது. 'பிரயோக விவேகம்'எனும் இலக்கண நூலாசிரியரான சுப்பிரமணிய

தீட்சிதர் 'தமிழ்'எனும் சொல்லே 'திரமிளம்'என்னும் சொல்லில் இருந்து தோன்றியதாகக் கூறினார். மேலும் தமிழுக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே எனச்சாதித்தார்[7].

'இலக்கண விளக்கம்'எழுதிய வைத்தியநாத தேசிகர் 'பொது எழுத்தானும் சிறப்பெழுத் தானும் ஈரெழுத் தானும் இயைவன வடசொல்'எனும் நன்னூல் நூற்பாவையே வடசொல்லுக்குச் சுட்டி, 'இவ்வாரியச் சொல் ஒரு நிலத்திற்கே உரியதன்றிப் பதினெண் நிலத்திற்கும் விண்ணிற்கும் புவனாதிக்கும் பொதுவாய் வருதலின் திசைச்சொல்லுள் அடங்காமையின் வேறு கூறினார்'[8] என்றெழுதினார்.

இத்தகையகருத்தியல்போக்கின்உச்சமாக இலக்கணக்கொத்தின் ஆசிரியர் சுவாமிநாத தேசிகர்

வடநூல் வழிகல வாதே தமிழைத்
தனியே நீர்தராத் தன்மை என்னெனின்
இலக்கணம் இலக்கியம் ஏது நிமித்தம்
சாத்திரம் சூத்திரம் தந்திர உத்தி
பகுதி விகுதி பதமே பதார்த்தம்
ஆதி அந்தம் அகாரம் மகாரம்
உதாரணம் மாத்திரை உவமை உருவகம்
விகற்பம் சந்தி விதியலங் காரம்
காலம் கலேசம் காரகம் ஞாபகம்
விசேடணம் விசேடியம் விகாரமதி காரம்
குணம்குணி யாதியாம் சொற்கோ ளன்றியும்
பிறிதின் இயைபின்மை நீக்குதல் பிறிதின்
இயைபு நீக்குதல் என்னும் இலக்கணம்
முதலாப் பலவும் மொழிபெயர்த் தனவும்
கொண்டனர் பண்டையர் உண்டோ இன்றோ'[9]
என வினவி,
அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே ஆயினும் தனித்தமிழ் உண்டோ
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவும் நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக'[10]

என்றெழுதினார்.

தங்கள் தனிவிருப்பிற்கும் ஒருசார் பற்றிற்கும் உரிய

கருதுகோள்களின் அடிப்படையில் இலக்கணம் யாத்த இலக்கண இரட்டையர்களான திட்சிதரும் தேசிகரும், தமிழின் தனித்தன்மையை அழிப்பதற்கான இயக்கத்தைத் தொடங்கினர் என்பார்[11]. வ.சுப. மாணிக்கம், இத்தகைய வளர்ச்சிப் போக்குக்குறித்து, 'சமற்கிருதத் தொன்மங்களும் பிற சமய இலக்கியங்களும் அறிமுகம் செய்யப்பட்ட பொழுது தமிழறிஞர்களின் கருத்துகள் மாறத்தொடங்கின. அவர்களுள் பெரும்பான்மையர் தமிழ், சமற்கிருதம் ஆகிய இருமொழிகளிலும் தொடர்புடையவராய் இருந்தனர். எனினும் வேதங்கள் தொன்மங்கள், ஆகமங்கள் முதலியன சமற்கிருதத்தில் எழுதப் பெற்றிருந்தமையால் அம்மொழியிடமே மிகுந்த அன்புடையவராய் இருந்தனர். இத்தகைய ஓரஞ்சார்ந்த அல்லது சமயப் பகையினை ஒத்த கடும்பகை உணர்வே தமிழ் சமற்கிருத வழியது எனக் கூறத்தூண்டியது'[12] எனும் எம். சீனிவாசரின் கருத்து இங்கு நினைவு கூறத்தக்கது.

ஆரியர் வருகை, பார்ப்பனர் மேலாண்மை, தமிழக மன்னர்களின் சமற்கிருதச் சார்பு, முதலியவற்றின் விளைவாகக் குறைந்த அளவில் தோன்றிய சமற்கிருதக்கலப்பு காலந்தோறும் மிகுந்து பதினோராம் நூற்றாண்டில் சமற்கிருதக் கலப்பு மிகுந்த மணிப்பிரவாள நடை தோன்றிவிட்டது. பின்னர் செய்யுளிலும் வடசொற் கலப்பு நிகழ்ந்தது.

பார்ப்பனர்களைப் பூசுரர்கள் எனத்தமிழர்கள் ஏற்றுக்கொண்டதால் அவர்கள் ஓதிய சமற்கிருதம் தேவர்களின் மொழி, கடவுளின் மொழி எனவும் தமிழர்கள், தமிழ் அறிஞர்களில் ஒருசாரார் கருதினர்.

தமிழ் இவ்வுலகமொழி; அதுவும் தமிழகத்துக்கு மட்டுமே உரியது; சமற்கிருதம் பதினெண் பூமிக்கும் விண்ணிற்கும் புவனாதிகட்கும் உரிய பொதுமொழி.

சமற்கிருதச் சொல் தமிழிற்கு வருமேயன்றித் தமிழ்ச்சொல் வடமொழிக்கண் செல்லாது.

வடமொழி எல்லா மொழிகட்கும் தாயாகித் திகழ்கின்றது.

தமிழ் என்னும் சொல்லே திரமிளம் என்னும் சொல்லிலிருந்து பிறந்தது.

வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகட்கும் இலக்கணம் ஒன்றே.

தமிழ் நூல்களுக்கு அளவில்லை. அவற்றுள் ஒன்றே ஆயினும் 'தனித்தமிழ்' இல்லை.

எ, ஒ ழ, ற, ன ஆகிய ஐந்து எழுத்துக்களை மட்டுமே தனக்கு உரியதாகக் கொண்ட மொழி தமிழ். ஐந்தெழுத்தால் மட்டும் ஒருமொழி உள்ளதெனக் கூற அறிவுடையோர் நாணுவர். ஆகிய கருத்துக்களைத் தமிழ் இலக்கணர்கள், உரையாசிரியர் ஆகியோர் கொண்டிருந்தனர் என்பதை மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம்.

தமிழறிஞர்களின் தமிழ்மொழி குறித்த கருத்து இவ்வாறிருந்த சூழலில் தமிழை 'நீச பாஷை' 'பைசாச பாஷை' என்று வடமொழியாளர் இழித்துரைத்ததில் வியப்பில்லை.

ஐரோப்பியர் வருகையும் ஆய்வுகளும்

கிறித்துவ சமயத்தைப் பரப்பும் தொண்டினைச் செய்வதற்காகத் தமிழகம் வந்த ஐரோப்பியர்களில் சிலர் தமிழைக் கற்றனர். தமிழ்மொழி, தமிழர் நாகரிகம், இலக்கியச் செழுமை முதலியவற்றை உணர்ந்தனர். அவற்றைப் பிறர்க்கு உணர்த்தும் நோக்கில் தமிழ்நூல்களை ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்த்தனர். ஒரு சிலர் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் குறித்த நூல்களை எழுதினர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் எல்லிசு, இராபர்ட் கால்டுவெல், வின்சுலோ, போப் ஆகியோர்.

ஏறத்தாழ இதே காலத்தில் வடஇந்தியாவில் சுல்கத்தாவிலும், தில்லியிலும், ஐரோப்பிய அறிஞர்கள் சமற்கிருத மொழி கற்றலிலும் ஆய்விலும் ஈடுபட்டனர். வேதங்கள், உபநிடதங்கள் முதலிய சமற்கிருத நூல்களை மொழிபெயர்த்தனர். ஐரோப்பியர்களும், இந்தியப் பார்ப்பனரும், ஆரிய இனத்தவர் எனும் கருத்தினை ஏற்றனர். சமற்கிருத மொழியின் மேன்மையையும், இலக்கணப் பெருமையையும், இலக்கியங்களின் சீர்மைகளையும் குறித்து விரிவாக எழுதினார். அந்நாள் வரை இந்திய அறிவாளர்களிடையே இருந்த 'சமற்கிருதமே இந்திய மொழிகள் அனைத்திற்கும் மூலம்' என்ற கருத்தினை ஏற்று வழிமொழிந்தனர். மாக்சுமுல்லர் வின்றர்னிசு முதலிய அறிஞர்கள் வடமொழியையும், அம்மொழி இலக்கியத்தின் பெருமைகளையுமே விரித்துக் கூறினர். கடந்த நூற்றாண்டின் இடைக்காலம்வரை இந்நிலை தொடர்ந்தது.

'மாக்சுமுல்லர், வின்றர்னிஸ் போன்றவர்கள் முதலாய், வடமொழி இலக்கியத்தின் பெருமையையே விரித்துக் கூறுவர். அவ்விந்திய இலக்கியங்களின் வரலாற்றிலே, தமிழ் இலக்கியத்தைப் பற்றியோ, திராவிட நாகரிகத்தைப் பற்றியோ, ஒரு சொல்லேனும் ஒரு

குறிப்பேனும் காணக்கிடையா இந்தியப் பண்பு, இந்திய நாகரிகம் இந்தியக் கலைகள், இந்திய மொழிகள் என அவர் மொழிவனவெல்லாம், திராவிடப் பண்பு, திராவிட நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிட மொழிகள், இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. ஆயினும் பல்லாண்டுகளாக நடுவுநிலை கடந்தோர் பலர், இவ்வுண்மையை எடுத்துக் கூறுவதற்குத்தானும் பெரிதும் மனத்துணிவு வேண்டற்பாலதாயிற்று[13] தனிநாயக அடிகள் இக்கருத்தினை வெளிப்படுத்திய ஆண்டு 1952. ஏறத்தாழ அதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன் நடுநிலைமையோடு ஆராய்ந்து, திராவிட மொழிகளை ஒப்பாய்வு செய்து தமிழின் தனித்தியங்கும் தன்மையையும் திராவிட மொழிகள் தனிமொழிக் குடும்பத்தைச் சேர்ந்தன எனும் உண்மையையும் வெளிப்படுத்திய கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'தமிழ்நாட்டு வரலாற்றில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்திய பெருமைக்கு உரிய நூலாக அமைந்தது.

கால்டுவெல்லின் கருத்துக்கள்

தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளை ஒப்பிட்டு ஆராயாமல் தமிழ் உள்ளிட்ட எந்தவொரு மொழியின் இயல்பையும் புரிந்து கொள்ளவோ, உணரவோ முடியாது என்ற முடிவுக்கு வந்த கால்டுவெல் தன் நூலான திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பயனுடையது மட்டுமன்று, இன்றியமையாததும் ஆகும் என்பர்[14].

முறையான அறிவியல் ஆய்வினை மேற்கொண்ட கால்டுவெல் தன் ஒப்பியல் ஆய்வின் முடிவில் பல உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார்.

அவற்றுள் முதன்மையான ஒன்று திராவிட மொழிகள் சமற்கிருத மூலத்தின அல்ல என்பது.

திராவிடம் சமற்கிருதத்திலிருந்து பிறந்தது என்ற கருத்து முந்தைய தலைமுறையினரான மொழிநூல் வல்லுநருக்கு ஏற்புடையதாய் விளங்கினும் இக்காலை அறவே அடிப்படையற்றுப் போய்க் கட்டுக்கதையாகிவிட்டது[15] என அறுதியிட்டுரைத்த கால்டுவெல் தம் கருத்தை அரண் செய்யப் பின்வரும் சுரணியங்களை எடுத்துரைத்தார்.

அ. திராவிடத்தில் காணலாகும் சமற்கிருதத் தன்மைகளைக் காட்டிலும் சமற்கிருதப் புறத்தன்மைகளே நணிமிக அதிகமாகும்.

ஆ. திராவிட மொழிகளின் இடப்பெயர்களும், எண்ணுப் பெயர்களும், பெயர் வினைகளின் சொல்லாக்கங்களும் வாக்கிய அமைப்பு முறைகளும் சுருங்கச் சொன்னால் ஒரு

மொழியின் உயிர்நாடியென மதிக்கத்தகும் அத்துணை இயல்புகளும் சமற்கிருத மொழியியல்புகளோடு அடிப்படையிலேயே அறவே வேறுபடுகின்றன.

இ. திராவிட மொழி நிகண்டுகள் கொண்டிருக்கும் சமற்கிருதச் சொற்கள் திராவிட மொழிப்புலவர்களால் தனித்திராவிடச் சொற்களாக என்றும், மதிக்கப் பெற்றதில்லை. மாறாக, சமற்கிருதச் சொற்களாகவே மதித்து ஏற்றுக்கொள்ளப் படுகின்றன.

ஈ. திராவிட மொழிகளில் வந்து வழங்கும் சமற்கிருதச் சொற்களைப் பழந்திராவிட வேர்ச்சொற்களிலிருந்து வேறு பிரித்தறிவதில், பொதுவாக எவ்வித இடர்ப்பாடும் இல்லை.

உ சமற்கிருதச் சொற்கள், எங்கோ அருகி இடம் பெறுவதல்லது, பொதுவாக அறவே இடம் பெறாதனவாய்த் திருந்தாத் திராவிட மொழிகள் இருக்கின்றன சமற்கிருதச் சொற்களை மேற்கொள்ளும் திராவிட மொழிகள் அச்சொற்களைப் பகட்டுப் பொருளாகவும், அழகுதரும் பொருளாகவும் மதிப்பதன்றி, மொழிவளர்ச்சிக்கு இன்றியமையாததாக மதிப்பதில்லையாதலின் அவற்றை அறவே கைவிட்டும் வழங்க வல்லன.[16]

இவை, திராவிட மொழிகளின் தனித்தன்மையை விளக்கிக் கால்டுவெல் வெளியிட்ட கருத்துகள்.

ஏனைய திராவிட மொழிகளோடு ஒப்பிட்டுத் தமிழின் தனித்தியங்கும் ஆற்றலையும் தம் நூலில் கால்டுவெல் தெளிவுபடுத்தினார்.

'தெலுங்கும்; கன்னடமும்; மலையாளமும், தத்தம் தனிநிலைகளை நிலைநாட்டுவது அறவே இயலாத அளவு சமஸ்கிருதச் சொற்களை அளவுக்கு மீறிக் கடன் வாங்கியுள்ளன; அவற்றின் துணையை எதிர் நோக்கிப் பழகிவிட்டன. தன்னுடைய சமற்கிருதக் கலவைகளைக் கைவிடுவது தெலுங்கு மொழிக்கு இப்பொழுது அரிதாம் என்பது உண்மை. கன்னடத்திற்கு அதனினும் அரிதாம்; மலையாளத்திற்கு அவை எல்லாவற்றைக் காட்டிலும் அரிதாம். அவற்றின் இயல்பு அதுவேயாயினும், திராவிட மொழிகள் அனைத்திலும் உயர்தனிச் செம்மொழியாக நிலைபெற்றிருக்கும் தமிழ் தன்னிடையே இடம்பெற்றிருக்கும் சமற்கிருதச் சொற்களை அறவே ஒழித்து விட்டு உயர்வாழ்வதோடு அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம்பெற்று வளர்வதும் இயலும்.

செந்தமிழ் என்றும் தனித்தமிழ் என்றும் சிறப்பிக்கப் பெறுவதும் பெரும்பாலும் அம்மொழி இலக்கியங்கள் அனைத்தையும் எழுதப்

பயன்படுவதுமாகிய பழந்தமிழ் அல்லது இயல்தமிழ், மிகமிகக் குறைந்த சமஸ்கிருதத் தொடர்பையே பெற்றுள்ளது. சமஸ்கிருதச் சொற்களையும் எழுத்துக்களையும் மேற்கொள்வதை வெறுத்து ஒதுக்கிவிட்டு, பழந்திராவிடச் சிறப்பு வாய்ந்த மூலங்கள், சொல்லுருவங்கள், ஒலிமுறைகளை மட்டும் மேற்கொள்வதில் காட்டும் ஆர்வத்தையும் விழிப்புணர்ச்சியையும் விடாமல் மேற்கொண்டிருப்பதாலேயே அச்செந்தமிழ் தனிமொழியின் உரைநடை, பேச்சு நடைகளோடு சிறப்பாக வேறுபடுகிறது. ஒரு தமிழ்ச் செய்யுள் இலக்கியச்சுவை மலிந்த இலக்கியம் என்ற தகுதிக்குரியதாயுள்ளது என்பது பிறமொழி இலக்கியங்களில் உள்ளதுபோல் அச்செய்யுள் ஆண்டிருக்கும் சமஸ்கிருதச் சொற்கின் எண்ணிக்கை அளவைப் பொறுத்திராமல், அச்சமஸ்கிருத ஆட்சியிலிருந்து எந்த அளவு விடுதலை பெற்றிருக்கிறது, எந்த அளவு சமஸ்கிருதச் சொல்லாட்சியை வெறுத்துள்ளது என்பதைப் பொறுத்திருக்கிறது என்று மதிக்குமளவு, கற்றுவல்ல தமிழ்ப் பெரியார்களின் உள்ளத்தில் அச்சமஸ்கிருத வெறுப்புணர்ச்சி ஆழப்பதிந்துள்ளது. நகரத்தொடர்பற்ற நாட்டுப்புறங்களில் வாழும் கல்லா மக்கள் வழங்கும் கொச்சைத் தமிழ் சமஸ்கிருத ஆட்சியைக் கைவிடுவதில் செந்தமிழ் நடையோடு பெருமளவு ஒத்துள்ளது. ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டு மொழியில் இலக்கிய நடையிலும், உழவர் போலும் கல்லாமக்கள் வழங்கும் பேச்சு நடையிலுமே அம்மொழியின் தொன்மை நிலையைக் காணமுடியும். ஆராய்ந்து எழுதப்பட்ட தமிழ் உரைநடைகளிலும் பார்ப்பனர்கள், படித்துப்பட்டம் பெற்ற தமிழ்ப் பெரியார்கள் இவர்கள் பேச்சிலுமே சமஸ்கிருதக் கலவை பெருமளவு இடம் பெற்றுள்ளது. சமஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கியிருக்கும் சொற்கள் பெரும்பாலும் சமய உண்மைகளை, உடல் இயல்பு, உயிர் இயல்பு போலும் அறிவியல் பொருள்கள், ஆடல், பாடல், சிற்பம், ஓவியம் போலும் நுண்கலைகள் ஆகியவற்றின் பொருள்களை வெளியிடத் துணைபுரிவனவே ஆகும். பிறதுறை இலக்கியங்களைக் காட்டிலும், சமஸ்கிருதச் சொற்களை மிக அதிகமாக மேற்கொள்ளும் சமயக்கருத்துக்களை வெளியிடும் உரைநடைகளிலும், தமிழ்மொழி மேற்கொண்டிருக்கும் சமஸ்கிருத அளவு, அத்துறை உரைநடைகளில் ஆங்கில மொழி இலத்தீன் மொழிச்சொற்களை மேற்கொண்டிருக்கும் அளவினும் அதிகம் அன்று[17]

கால்டுவெல் கருத்துகளும் தனித்தமிழ் இயக்கமும்

கி.பி.1916-ஆம் ஆண்டில் மறைமலையடிகளும், அவர் மகள் நீலாம்பிகையும் பிறமொழிக் கலப்பில்லாத் தனித்தமிழிலேயே பேசவும் எழுதவும் உறுதிபூண்டனர். சுவாமி வேதாசலம் மறைமலையடிகள்

ஆனார். அவர் நடத்திய 'சமரச சன்மார்க்க சங்கம்'பொதுநிலைக் கழகம் ஆயிற்று, ஞானசாகரம் எனும் இதழ் 'அறிவுக்கடல்'ஆனது. அவரின் குடும்ப உறுப்பினர் பெயர்கள் தூயதமிழாயின. தந்தைக்கும், மகளுக்கும் தனித்தமிழ் கடைப்பிடி ஆயிற்று. படைப்புகள் அனைத்தையும் தனித்தமிழில் எழுதவும், பொழிவுகளைத் தனித்தமிழில் நிகழ்த்தவும் உறுதிபூண்டு செயற்பட்டனர். முன்பே வெளியிட்ட நூல்களில் இடம்பெற்ற வடசொற்களை விலக்கித் தனித்தமிழாக்கி வெளியிடுவதை மரபாகக் கொண்டார் மறைமலையடிகள். தனித்தமிழ்க் கோட்பாட்டைத் தாம் செயற்படுத்தியதோடு,

'நமது இனிய செந்தமிழ் மொழியை அயல்மொழிச் சொற்கள் விரவாமல் பாதுகாத்துத் தூய்மையாய் வழங்கி அதனை வளம்பெறச் செய்வது தமிழராயினார். ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையாம்'[18] என்றும்

.... நம்மனோரில் கற்றவராயிருப்போர் ஆரியம் ஆங்கிலம் முதலான பிற மொழிச்சொற்களைக் கலவாமற்றனித் தமிழிற் பேசவும், எழுதவும் கடைப்பிடியாய்ப் பழகிவரல் வேண்டும்'[19] என்றும் தமிழர் அனைவரையும் வற்புறுத்தினார்.

வடசொற்கலப்பு 'தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத் தழும்பு" அது தமிழுக்குக் கேடு" அடிமைத்தனத்தின் வெளிப்பாடு" அவ்வடிமைத் தனத்திலிருந்து விடுபடுவதே முதலில் பெறவேண்டிய விடுதலை'என்றெல்லாம் மறைமலையடிகள் உணர்வெழுச்சியோடு தன் தனித்தமிழ்க் கொள்கையைப் பரப்பினார்.

இத்தகைய நிலைப்பாட்டினை மறைமலையடிகள் மேற்கொண்டு செயற்பட்டமைக்குச் சில அடிப்படைகள் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதல் அவர் காலம் வரை வெளிவந்த பன்னூல்களை ஆழமாகக் கற்றுத்தெளிந்த அவரது நிறைபுலமை, திருக்குறள் உரையாசிரியர் பரிதியார் முதல் அவர்காலத்துச் சங்கராச்சாரியார் வரை தமிழை 'நீச பாஷை" பைஸாஸ பாஷை'என்று பழித்தும், சமற்கிருதத்தைத் 'தேவபாஷை'எனப்புகழ்ந்தும் வந்தமை, திருஞான சம்பந்தர் முதல் பரஞ்சோதி முனிவர் ஈறான சைவ இலக்கியர்கள் தமிழ் வடமொழிக்கு நிகரானது என்றும், ஒரோவழி வடமொழியினை விட உயர்வானது என்றும் கூறியமை, அவரின் ஆங்கிலக்கல்வி, ஐரோப்பிய அறிஞர்களான எல்லிசு, வின்சுலோ, போப், கால்டுவெல் முதலியோர் தமிழின் பெருமைகளை உணர்ந்து போற்றியமை முதலியனவற்றை அவ்வடிப்படைகளாகக் கருதலாம்.

இவை சார்புநிலைத் தரண்டல்களாகவும், எதிர்நிலைத் தரண்டல்களாகவும் இருந்திருக்கலாம். எனினும் தூயமொழிக் கோட்பாட்டிற்கும் அது ஓர் இயக்கமாக மலர்வதற்கும் வெக்சுலர் கூறும் மொழிப் பெருமிதம் மிகவும் அடிப்படையானது.

திருஞான சம்பந்தர் முதல் கம்பர், சேக்கிழார் ஈறாகப்பலரும் தமிழ் வடமொழிக்கு நிகரானது, தெய்வஆற்றலுடையது எனப்பாடினர். அதற்கான தொன்மங்களை உருவாக்கித் தங்கள் கருத்தை நாட்ட முயன்றனர். முதல் முறையாகப் பரஞ்சோதி முனிவர்,

> 'கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
> பண்ணு றந்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
> மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
> எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ'[20]

எனத் தொன்மப் பெருமை கூட்டுவதோடு தமிழின் இலக்கண வளத்தையும் இயம்பித் 'தமிழ் உயர்ந்தது'எனும் கருத்தை முன்மொழிந்தார்.

ஆனால் கால்டுவெல்தான் தென்னிந்தியாவிலும், வடஇந்தியாவிலும் வழங்கிய பல மொழிகளை அறிவியல் அடிப்படையில் ஒப்பிட்டு ஆராய்ந்து, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், முதலிய திருந்திய மொழிகளும் வேறுபல திருந்தா மொழிகளும் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை. அவை திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று நிறுவினார்.

தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய திராவிட மொழிகள் வடமொழிச் சார்பின்றித் தனித்து இயங்கவல்லன அல்ல என்றும் தமிழ் முற்றிலும் வடமொழிச் சார்பின்றித் தனித்தியங்க வல்லது மட்டுமன்று, சமற்கிருதக் கலப்பு நீங்க, நீங்கத் தமிழ் மெலும் செழுமை பெறும் என்றும் கருத்துரைத்தார்.

கால்டுவெல்லின் இக்கருத்துகள் மறைமலையடிகளாரின் உள்ளத்தில் பிறமொழிகலவாத தனித்தமிழில் எழுதவும், பேசவும் முடியும் என்கிற தன்னம்பிக்கையையும், தமிழ்மொழியின் தனித்தன்மை, தனித்தியங்கும் ஆற்றல் முதலியன குறித்த பெருமிதத்தையும் தோற்றுவித்திருக்க வேண்டும். 'தமிழ்ப் பேரறிஞர்கட்குப் புலப்படாமல் மறைந்து கிடந்த விரிவாகவும், வியப்பாகவும் உள்ள தமிழ்மொழியறிவுப் பரப்பு பண்டாரகர் கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்வு நூலால் புலப்படலாயிற்று' எனும் மறைமலையடிகளாரின் கூற்று[21] இதற்குச் சான்றாகிறது.

பின்னர் தனித்தமிழியக்கத்தை உலகத்தமிழ்க் கழகம் எனும் அமைப்பாக உருவாக்கித் தலைமையேற்று நடத்தியவர் பாவாணர். 'மாக்சுமுல்லர் திராவிட மொழிகளைச் சரியாய் ஆராயாததாலும் அவற்றை வடமொழியின் கிளைகள் என்று தவறாக எண்ணியதாலும் திராவிடத்தின் உண்மையான இயல்புகளைக் கூற முடியவில்லை. திராவிடம் வடமொழிச் சார்பற்றதென்றும், உலக முதன்மொழிக்கு மிக நெருங்கியதென்றும், வடசொல்லென மயங்கும் பல சொற்கள் தென்சொற்களே என்றும், வடமொழியில் மயங்கும் பல சொற்கள் தென்சொற்களே என்றும், வடமொழியில் பலசொற்கள் கலந்துள்ளன என்றும் முதன்முதல் எடுத்துக்காட்டி மொழிநூற் சான்றுகளால் நிறுவியவர் கால்டுவெல் கண்காணியரே'[22] எனக் கால்டுவெல் பற்றிக்குறிப்பிடும்பாவாணர்'தமிழின்தொன்மையை உலகிற்கறிவித்தவர் கால்டுவெல் பெருமகனார்'என்று கூறுகிறாரேயன்றித் தனித்தமிழியக்கம் தோன்றக் காரணராகக் கருதவில்லை. மாறாகத் 'தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற்கலைஞர்; செடியாகத் தழைபச் செய்தவர் நிறைதமிழ் மலையாம் மறைமலையடிகளார்; நான் மரமாக வளர்த்து வருகிறேன்'[23] என்று அறிவிக்கிறார் பாவாணர்.

தனித்தமிழியக்கத் தலைவராக விளங்கும் இரா. இளங்குமரனார் பேராசிரியர் சுந்தரனாரின் மனோன்மணீயத் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடற்கருத்துக்கு 'முன்னோடியாகத் திகழ்ந்தவர் கால்டுவெல் பெருமகனார்'எனவும் கால்டுவெலார் இயற்றிய ஒப்பிலக்கண நூல் பிழிவாகவே சுந்தரனாரின் இக்கருத்து வெளிப்பட்டது எனலாம்'எனவும் 'கால்டுவெலாரின் ஒப்பிலக்கண நூலை ஆழ்ந்து கற்று அதன் கருத்துகளைத் தம் திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்டமையும் நூற்பெயரும் ஆசிரியர் பெயரும் சுட்டியமையும் பயில வழங்குகின்றன'[24] என்பர். மேலும், 'அவர்தம் ஒப்பிலக்கண நூலே தமிழுக்கு விடிவுகாலம் எனத்தக்கதாம்;'[25], எனவும் அதுவே அடிகளார் தனித்தமிழ்க் கொள்கைக்குத் தகவாம்'[26] எனவும் கருத்துரைக்கிறார்.

'தனித்தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி'எனும் தனது நூலில், 'தமிழ் மேன்மை' பற்றிய சமூக உணர்வுக்குத் தமிழ்நாட்டிலுள் வந்து கிறித்துவம் பரப்பிய பாதிரியாரின் பணியும் முக்கியமானதாகும் எனச்சுட்டி அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாகக் கால்டுவெல்லையும் போப்பையும் குறிப்பிடுவார் கா.சிவத்தம்பி.

'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற இந்நூல் தமிழை முதன்மைப்படுத்தும் மொழி இயக்கத்திலும், சமூக இயக்கத்திலும், எத்துணை முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதற்கு சைவ சித்தாந்த

கழக வெளியீடாக வந்துள்ள 'கால்டுவெல் ஒப்பிலக்கணம்'என்னும் நூலின் பதிப்புரையே போதுமானதாகும்'[27] எனக்கூறி,

'பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து தமிழ்நாடு போந்து கிறித்து சமயத் தொண்டுடன் தமிழ்தொண்டும் புரிந்த பலருள்ளும் கால்டுவெல் ஐயர் தலை சிறந்தவராவர். அவர் இயற்றியளித்த 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'என்ற ஒப்பரிய ஆராய்ச்சி நூல் தமிழ்மொழிக்கு உலக மொழிகளிடையே வியக்கத்தக்கதோருயர் நிலையையளித்தது. தமிழ் மொழி வளர்ச்சிக்குப் புத்துயிரளித்தது; தமிழ் மக்களின் பண்டைப் பெருமைக்கும், நாகரிகச் சிறப்பிற்கும், கலைவளத்திற்கும் என்றும் அழியாச் சான்று பகராநின்று வருகிறது'[28] எனும் பதிப்புரைப் பகுதியை எடுத்துக் காட்டுவார்.

மேலும், 'இது இவ்வாறிருப்பினும் தொல்சீர் தமிழ் குறைந்த அளவு சமஸ்கிருதச் சொற்களையே கொண்டுள்ளது. பேச்சு வழக்கிற் காணப்படுவதினும் பார்க்கத் தொல்சீர் தமிழில் சமஸ்கிருதச் சொற்கள் அதிகமில்லை. தொல்சீர் தமிழ் தூய்மையையும் தேசிய சுதந்தரத்தையும் (சுதந்திர உணர்வையும்?) உண்டு பண்ணுகின்றது.

அதன் தூய்மைப்பாடு (மெருகேறிய ஒழுகலாறு) அதற்குள்ளேயிருந்தே வெளிவருவதாகும்'[29] எனும் கால்டுவெல் கருத்தினை எடுத்துக்காட்டித் தனித் தமிழியக்கத்துக்கான அடிப்படை உந்துதலின் ரிஷிமூலம் இதன்மூலம் ஒரளவு புலனாகின்றதெனலாம். மேலும் 'தமிழ் சமஸ்கிருதத்தை முற்றிலும் விலக்கிவிடக்கூடியது. தனித்தியங்கக் கூடியது மட்டுமல்ல செழித்தோங்கவும் வல்லது'எனும் கால்டுவெல்லின் கருத்தைச்சுட்டி 'இதனால் தனித்தமிழ் வாதத்திற்கான நியாயப்பாடுகளின் உதயதஸ்தானங்கள் தெளிவடைகின்றவென்றே கொள்ளல் வேண்டும்'[30] என்பார். 'அடிப்படை உந்துதலின் ரிஷிமூலம்', 'நியாயப்பாடுகளின் உதயஸ்தானங்கள்'ஆகிய தொடர்கள் சிவத்தம்பியின் தனித்தமிழ் இயக்கம் குறித்த ஒருசார் பார்வையைக் காட்டுகின்றன. எனினும் கால்டுவெல்லின் ஆய்வுக்கருத்துக்கள் தனித்தமிழியக்கத்தாருக்குத் தமிழின் தனித்தியங்கும் ஆற்றலை உணர்த்தி, மொழிப்பெருமித உணர்வைத் தோற்றுவித்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

'பிராமண எதிர்ப்பு, சமஸ்கிருத எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு, தனித்தமிழ், ஆரிய திராவிடப்பூசல், திராவிட இயக்கங்கள் தோற்றம் ஆகியவற்றுக்கெல்லாம் கால்டுவெல்தான் 'ஆன்மீகத்தந்தை'என்றும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவரின் 'ஞானபுத்திரன்' என்றும், மறைமலையடிகள் போன்றோர் 'ஞானமொத்திரர்' என்றும் அங்கதச்

சுவையுடன் எழுதுவார்'எனக் கைலாசபதியின் கருத்தினைச்சுட்டி ஆரிய - திராவிடப்பூசலுக்குக் கால்டுவெல்லைக் காரணர் ஆக்கக்கூடாது என எழுதுவார் இராமசுந்தரம்[31] எனினும் தனித்தமிழியக்க அறிஞர்களுக்குக் கால்டுவெல்லின் கருத்துகள் எழுச்சியூட்டின என்பதை மறுப்பதற்கில்லை.

தொகுப்புரை

1916-இல் தோன்றிய தனித்தமிழியக்கம் ஓர் அரசியல், சமுதாய இயக்கத்துக்கு உரிய உணர்வெழுச்சியோடு செயற்பட்டது.

இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் அத்துறையில் முதல்நூல். அது தனிச்சிறப்பு வாய்ந்தது.

தூயமொழி இயக்கம் தோன்றுவதற்கு உரிய காரணிகளில் ஒன்று மொழிப்பெருமித உணர்வு.

காலந்தோறும் தமிழ்க்குமுகத்தில் பார்ப்பனர்களின் செல்வாக்கும், சமற்கிருத மேட்டிமையும் வளர்ந்து வந்தன. இதனால் சமற்கிருதம் தேவமொழி தமிழ் தாழ்ந்தது எனும் கருத்து தோன்றியது.

வடமொழிக் கலப்பால் 'மணிப்பிரவாளம்' எனும் மிகுகலப்புத் தமிழ் உரைநடை தோன்றியது.

தமிழ் இலக்கணங்களே தமிழ் தனிமொழி அன்று, 'தமிழ்'எனும் சொல்லே 'திரமிளம்'எனும் சொல்லிருந்து பிறந்தது, தமிழுக்குத் தாய்மொழி சமற்கிருதமே, அதன் துணையின்றித் தமிழ் இயங்காது எனக்கூறும் நிலை ஏற்பட்டது.

அவ்வப்போது இப்போக்குக்கு எதிர்க்குரல்கள் எழுந்தாலும் அவை உரத்து ஒலிக்கவில்லை.

கால்டுவெல் அறிவியல் நெறியில் ஒப்பாய்வு செய்து 'தமிழ் தனிமொழி, செவ்வியல் சீர்மை கொண்டது, வடமொழி துணையின்றி இயங்க வல்லது, அதனோடு கலப்பு நீங்க நீங்கத் தமிழ் வளரும், வளம் பெருகும்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் ஆரிய மொழிக் குடும்பத்திலிருந்து வேறான திராவிட மொழிக்குடும்பத்தைச் சேரந்தவை எனத் தன் ஆய்வு நூலில் வெளியிட்ட கருத்துகள் அந்நாள்வரை இருந்த மயக்கத்தினை நீக்கியது.

தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பல்வேறு இயக்கங்களுக்குக் கால்டுவெல்லின் ஆய்வு நூல் கருத்துக் கொடையை வழங்கியுள்ளது.

தனித்தமிழியக்கம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணிகளில் முதன்மையான 'தமிழ்ப்பெருமிதம்' தோன்றக் கால்டுவெல்லின் ஆய்வு முடிவுகள் முகாமையான அடிப்படையாக அமைந்ததோடு தனித்தமிழியக்கத்தார்க்கு அறிவுப்படைக் கலன்களாகவும் பயன்பட்டன.

சான்றெண்கள்

1. *Kavitharasaran, Foreword, A Comparitive Grammar of the Dravidian Languages or South Indian Languages, 2008, P - VI.*
2. *Wexler paul, Purism and Language, P - 9.*
3. பிள்ளை,கே.கே. தமிழக வரலாறு - மக்களும் பண்பாடும், *1981* ப. *62-63.*
4. *Guna, Asiatic Mode: A Socio-Cultural perspective 1984, P - 164.*
5. பெருந்தேவனார் வீரசோழியம் - நூற்பா 60 உரை.
6. சேனாவரையர், தொல்காப்பியம், எச்சவியல், நூற்பா 1 - உரை
7. சுப்பிரமணிய தீட்சிதர், பிரயோக விவேகம், காரிகை - 122 உரை.
8. வைத்திய நாத தேசிகர், இலக்கண விளக்கம்.
9. சுவாமிநாத தேசிகர், இலக்கணக் கொத்து, பாயிரம்.
10. மேற்படி.
11. *Manickam, V.S.P. Collected Papers, P - 8.*
12. *Srinivasa Iyengar, M. Tamil Studies 1982, P 151-152.*
13. தனிநாயக அடிகள், தமிழ்த்தூது, தனிநாயக அடிகளார் படைப்புகள், *2013*, ப.*331.*
14. *Caldwell Robert, Author's preface 2006, P - XIII.*
15. கால்டுவெல் இராபர்ட், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், தமிழில் கோவிந்தன், கா. இரத்தினம், க, *1977*, ப. - *64.*
16. மேற்படி, ப. *68 - 69.*
17. மேற்படி, ப. *68-70.*
18. மறைமலையடிகள், முல்லைப்பாட்டு, ஆராய்ச்சியுரை, *1919*. ப.*19.*

19. மேற்படி, ப.20.

20. பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணம், திருவாலவாய்க்காண்டம், பாடல் - 57.

21. மறைமலையடிகள் பாவாணருக்கு வழங்கிய சான்றிதழ்.

22. தேவநேயப் பாவாணர், ஞா., ஒப்பியன் மொழிநூல், 2001, ப.83.

23. பாவாணர், முதன்மொழி (இதழ்) 15.3.1971.

24. இளங்குமரனார், இரா., தனித்தமிழ் இயக்கம், 1997, ப.76.

25. மேற்படி

26. மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை, 1981, ப.55.

27. சிவத்தம்பி, கா., தனித்தமிழியக்கத்தின் அரசியற் பின்னணி, 1979, ப.26.

28. கண்ணுசாமிப்பிள்ளை, காழி.சிவ, அப்பாத்துரைப்பிள்ளை, கா., (மொழி பெயர்ப்பு) கால்டுவெல் ஒப்பிலக்கணம், 1949, ப.4.

29. சிவத்தம்பி, கா. மு.நூ. ப.28.

30. மேற்படி, ப.29.

31. இராம. சுந்தரம், கலாநிதி கைலாசபதி, 2007, ப.111-112.

23. கால்டுவெல் : தமிழ்மொழியின் அடையாளம்

திரு. பொ. வேல்சாமி
ஆய்வாளர், பதிப்பாளர்
தஞ்சாவூர்

தமிழ்மொழியானது வடமொழியில் இருந்து வேறுபட்ட தனித்துவமான பண்பு உடையது என்பதையும் இந்தியாவில் மிகப் பழமையான காலத்தில் இருந்தே தனக்கான இலக்கண இலக்கியங்களைக் கொண்டு வளர்ச்சியடைந்து வந்த ஒரு மொழி என்பதையும் உலக அறிஞர்களுக்கு நிரூபித்துக் காட்டியவர் கால்டுவெல். தமிழராக இருக்கின்ற ஒவ்வொருவரும் அவருடைய நினைவை நெஞ்சில் நிறுத்துவது நன்றியின் அடையாளமாக இருக்கும். ஏனென்றால் அவர் தமிழ்நாட்டில் (1838) காலடி எடுத்து வைத்த நாட்களில் தமிழர்களே தமிழ்மொழியின் சுழத்தை நெறித்துக் கொண்டிருந்தனர். இன்று நாம் நம்முடைய மொழியை எந்த வகையாக நாளுக்குநாள் கொன்று வருகிறோமோ அதேநிலை அன்று நிலவியது.

19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலங்களில் தமிழகமும் (இந்தியா) இலங்கையும் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆளுகைக்கு உட்பட்டுவிட்டன. அந்தக் கம்பெனியின் நிருவாகத்திற்கான ஊழியர்கள் அதிகாரம் உடையவர்களாகவும், செல்வவளம் மிக்கவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் உள்நாட்டு மக்களால் கருதப்பட்டனர். இதனால் கம்பெனியின் பதவிகளைப் பெறுவதே தமிழர்கள் பலரின் வாழ்க்கையின் குறிக்கோளாக மாறிவிட்டது. இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அவர்கள் ஆங்கிலம் படித்தவர்களாக இருக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பாரம்பரியமாக கல்வியறிவு பெற்ற வாய்ப்புடையவர்களாக நான்கு ஐந்து சாதியினரே இருந்தனர். பெரும்பாலான தமிழ்மக்கள் கைநாட்டுப் பேர்வழிகளாகத்தான் வாழ்ந்து வந்தனர். அதுகாலம் வரையில்

தமிழ்மொழியில் கல்வி கற்று வந்த அந்தச் சாதியினர் காலத்துக்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்வதற்காகத் தங்களுடைய தாய்மொழியையே புறக்கணித்து விட்டனர். இதனால் அத்தகைய சாதிக்காரர்களால் அதுகாலம்வரை பயிலப்பட்டு வந்த தமிழ்மொழி கல்விப்புலத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்டது. எனவே பல்லாயிரம் தமிழ்நூல் சுவடிகள் பேணிக்காப்போர் இல்லாமலும் படி எடுப்போர் இல்லாமலும் அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டன. இதன் விளைவாக அந்தச் காலத்துக்கு முன்பு புகழ்பெற்று இருந்த தொல்காப்பியம், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற பல நூல்களை அடுத்த தலைமுறையினர் மறந்துவிட்டனர்.

1820 தொடங்கி இலங்கையில் அமெரிக்க மிஷனரிமாரும் தமிழ்நாட்டில் ஐரோப்பிய பாதிரியார்களும் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்புவதற்காக மக்கள் மத்தியில் பல்வேறு பணிகளைச் செய்தனர். கல்வி, மருத்துவம் போன்ற சேவைகளை செய்வதற்காகப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்றவற்றை நிறுவினர். அப்படி அவர்களால் (ஆண்டர்சன்) 1837இல் நிறுவப்பட்டதுதான் சென்னைக் கிறித்தவக் கல்லூரி. 1842இல் மதுரை அமெரிக்கன் கல்லூரி தொடங்கப்பட்டது. இந்தக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கு 20 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையின் வடக்கு பகுதியில் அமெரிக்க மிஷனரிகளால் பல கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இந்தக் கல்வி நிலையங்கள் ஆங்கிலத்தின் வழியாகக் கல்வி கற்பித்தன. தமிழ் மக்கள் இத்தகைய கல்வி நிறுவனங்களால் சிறப்பான கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெற்ற அதே நேரத்தில் தங்களுடைய பாரம்பரியமான கல்வியையும் பண்பாட்டையும் இழக்கத் தொடங்கினர்.

இப்படி ஒரு இக்கட்டான நிலையில் சிக்கிக்கொண்ட நம்முடைய மொழியை அயல்நாட்டவர்களாகிய கிறிஸ்துவ பாதிரியார்களும் ஒரு சில அரசாங்க அதிகாரிகளான ஆங்கிலேயர்களும் தான் மீண்டும் உயிர்ப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்த வரலாறும் இன்றைய தமிழ்மக்களால் மறக்கப்பட்டுவிட்டது. டாக்டர் டானியல் புவர், வீவை ஸ்போல்டிங், மைரன் வின்சிலோ, டாக்டர் எச்.ஆர்.ஹொய்சிங்டன், சாமுவேல் பிஸ்க் கிரீன் போன்றவர்கள் இலங்கையிலும் எல்லிஸ், ராட்லர், ட்ரூ (drew), சார்லஸ் கிரால், டாக்டர் கால்டுவெல், ஜான்முர்டாக், எச்.பவர் போன்றவர்கள் இந்தியாவிலும் செய்த பணிகளால் அழிவுநிலையில் இருந்த தமிழ்மொழி காப்பாற்றப்பட்டது. கூடுதலாக அன்றைய கல்விநிலையங்களின் பாடத்திட்டங்களில் தமிழ் இலக்கண

இலக்கியங்கள் பாடமாகச் சேர்க்கப்பட்டன. குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் கி.பி.1868 இல் பவர் பாதிரியாரால் அச்சிடப்பட்ட சீவக சிந்தாமணியின் 'நாமகள் இலம்பகம்'என்ற நூல் அன்றை பி.ஏ. பாடத்தில் சேர்க்கப்பட்டது. அந்தப் பகுதியைப் பாடமாகப் படித்த சேலம் இராமசாமி முதலியார் (நீதிபதியாக இருந்தவர்) முழுநூலையும் அச்சில் காணவேண்டும் என்ற ஆவல் உடையவராக இருந்தார். தன்னுடைய ஆவலைப் பிற்காலங்களில் உ.வே.சாமிநாத அய்யரிடம் கூறி, அவருக்கு ஒரு முழுமையான சிந்தாமணி சுவடியையும் கொடுத்தார். சீவகசிந்தாமணி சாமிநாத அய்யரால் முதன்முதலில் முழுமையாக நச்சினார்க்கினியர் உரையுடன் வெளியிடப்பட்டது (1887). இந்த நிகழ்ச்சிதான் தமிழ்மக்களுக்குப் பழந்தமிழ் நூல்களை மீட்டுக்கொடுத்தது. சாமிநாத அய்யரைத் தமிழ்தாத்தாவாக மாற்றி அமைத்தது. 'பவர் பாதிரியார்' இல்லையென்றால் உ.வே.சா. என்ற ஒருவர் தமிழுக்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை என்று கூறலாம்.

இதேபோன்று திருக்குறளை ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்த்த ட்ரு, கிரால் போன்றவர்களால் மேல்நாட்டுக்காரர்களுக்கும், ரோமில் இருந்த போப்பாண்டவருக்கும் மற்றும் பலநாட்டு பாதிரியார்களுக்கும் பைபிள் போன்ற சிறப்புடைய நூல் திருக்குறள் என்ற கருத்து உருவானது. இந்தக் கருத்தானது இந்தியாவில் வழங்குகின்ற தமிழ்மொழியானது கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளுடன் சேர்த்து வைத்து பேசத் தகுதியான மொழியாகும் என்ற எண்ணத்தை அவர்களுக்கு உருவாக்கியது.

இப்படியான ஒரு நிலையை தமிழ்மொழி அடைந்து விட்டாலும் இந்திய மொழிகளுக்கெல்லாம் தாயாகிய மொழி சமஸ்கிருதம்தான் என்ற கருத்து பல ஐரோப்பிய அறிஞர்களிடம் மேலோங்கி இருந்தது. தமிழர்களிலும் பலர் அக்கருத்தை ஏற்றுக்கொண்டு இருந்தனர். இத்தகைய கண்ணோட்டம் சரியானதல்ல என்பதையும் உண்மைநிலை இதற்கு மாறானது என்பதையும் கால்டுவெல் தன்னுடைய ஆராய்ச்சியில் கண்டுபிடித்தார். அந்தக் கண்டுபிடிப்பை 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'என்ற நூலாக 1856 இல் வெளியிட்டார். தமிழ்மொழி மட்டும் அல்லாது தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகளும் வட இந்தியாவின் சில பகுதிகளில் பேசப்பட்ட துதம், கோதம், கோண்டு போன்ற மொழிகளும் திராவிட மொழிகளின் குடும்பத்தைச் சார்ந்தவை என்று நிறுவினார். அந்த நூலில் திராவிட மொழிகள் தங்களுக்கே உரிய தனித்தன்மைகளைக் கொண்டு செயல்படும் விதத்தை

எடுத்துக்காட்டுகளால் விளக்கி நிலைநாட்டினார். அதிலும் தமிழ்மொழி சமஸ்கிருத மொழிக்கு இணையாக இலக்கண இலக்கியங்களைக் கொண்டு நீண்ட காலமாகவே செயல்பட்டு வந்ததை மேல்நாட்டு வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டு விளக்குகின்றார்.

கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. இதனால் அந்நூலின் கருத்துக்கள் வெகுவிரைவாக ஐரோப்பிய மொழிநூல் அறிஞர்களிடையே பரவியது. அதன் விளைவாக தமிழ்மொழியின் வரலாற்றுப் பழமையையும் மொழிக் கட்டமைப்பையும் இலக்கண இலக்கிய வளத்தையும் மேனாட்டவர்கள் தெரிந்து கொண்டனர்.

சுமார் 1000 ஆண்டுகள் சாதிகளாகப் பிளவுண்டு கிடந்த தமிழர்கள் தங்களை திராவிடர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்ளும் சூழல் ஏற்பட்டது. இத்தகைய நிலை சுமார் 100 ஆண்டுகள் நிலவியது. இன்று அந்த நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இருப்பினும் எந்த வகையிலும் ஒருங்கிணைக்க முடியாத தமிழ்ச் சாதிகளைத் திராவிடம் என்ற கருத்தோட்டத்தால் ஒருங்கிணைத்த கால்டுவெல்லின் பணி மகத்தானதுதான்.

இந்த நூலை 19 ஆண்டுகளுக்குப் பின் (1875) இரண்டாம் பதிப்பாக கால்டுவெல் வெளியிட்டார். முதற்பதிப்பிற்கு பிறகு தான் செய்த ஆய்வுகளை 300 பக்கங்கள் இணைத்து இரண்டாம் பதிப்பை வெளியிட்டார். இந்த இரண்டாம் பதிப்பில் தமிழ்மொழியின் பழமை என்ற கட்டுரை புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டுரையில் தமிழ்மொழியின் இலக்கிய வரலாற்றை கால்டுவெல் எழுதியுள்ளார். தமிழ்நாட்டின் வரலாற்றை இணைத்து தமிழ் இலக்கிய வரலாற்றை முதல்முதலாக எழுதி பின் வந்த வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒரு தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர் கால்டுவெல்தான் என்றால் அது மிகையாகாது.

இந்நூலை 1913இல் சென்னைப் பல்கலைக்கழகம் மூன்றாம் பதிப்பாக வெளியிட்டது. இதில் 1875இல் இரண்டாம் பதிப்பில் இருந்து சுமார் 250 பக்கங்கள் வரை நீக்கப்பட்டுவிட்டன. அதில் அவர் பறையர்கள்தான் பழந்தமிழர்கள் என்று எழுதியிருந்த முக்கியமான ஆய்வுக் கட்டுரையும் நீக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

24. கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பதிப்புச் சிக்கல்கள்

முனைவர் எம். வேதசகாயகுமார்
மேனாள் பேராசிரியர், பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்

1

ஓர் ஆளுமையின் மரணத்திற்குப்பின், அந்த ஆளுமையின் படைப்புகள் மறுவெளியீடு காணும்போது, நிகழும் குழறுபடிகளே பதிப்புச்சிக்கல்களுக்குக் காரணமாகின்றன. ஒருவகையில் பதிப்புச் சிக்கல்கள் சென்ற நூற்றாண்டில் தமிழைப் பொறுத்த வரையில் மிகச்சாதாரணமான நிகழ்வுகளே. இதன் அடிப்படையில் தமிழ்ச்சூழலில் நீண்ட விவாதங்களும் எழுந்துள்ளன. பாரதி, புதுமைப்பித்தன் படைப்புகள் அவர்கள் மரணத்திற்குப்பின் மறுவெளியீடு கண்டபோது எழுந்த பதிப்புச்சிக்கல்களும், அவை தொடர்பான நீண்ட விவாதங்களும் இங்குக் குறிப்பிடத்தக்கன. இவ்விரு ஆளுமைகளின் எதிர்பாராத மரணம் இதற்கு வழிவகுத்தது. இதழ்களின் பக்கங்களிலிருந்து இவர்கள் படைப்புகளை மீட்க வேண்டியதிருந்தது. உள்நோக்கம் எதையும் அவசியம் கற்பித்தாக வேண்டும் என்பதில்லை. ஆனால் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மரணத்திற்குப்பின் மறுபதிப்பு கண்டபோது நிகழ்ந்த பதிப்புச் சிக்கல்கள் முற்றிலும் வேறுவிதமானவை. தவனமின்மை, போதிய ஆய்வின்மை போன்ற வழக்கமான காரணங்களில் திருப்தி அடைய இயலாது. மாறாக இதன் பின்னணியில் இயங்கிய திட்டமிட்ட சதி வியப்பூட்டுவது. இச்சதிக்கான காரணங்கள் குறித்த தேடல் தவிர்க்க இயலாததும் கூட.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தரான சுந்தரமூர்த்தியின் சொற்களை முன்வைத்து ஒப்பாய்வு குறித்துக் கால்டுவெல் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இருபதாம்

நூற்றாண்டுக்குரிய ஆய்வு நெறியில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தது. கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் அவர்தம் கடுமையான உழைப்பின் பலனாகவும், அத்துறையில் முன்னோடி நூலாகவும் விளங்குகின்றது. தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் ஆகியன அவருக்குக் கிடைக்கவில்லை. மலையாள மொழி அறிஞரான குண்டர்ட் தமிழ் அறிஞரான போப், கன்னட அறிஞரான கிட்டெல் ஆகியோர் சில திருத்தங்களைக் கூறினர். கால்டுவெல் அதனை ஏற்றுக் கொண்டு திருத்திப் பதிப்பித்தார். சென்னைப்பல்கலைக்கழகம் அதனை வெளியிட்டது.[1] சுந்தர மூர்த்தியின் இப்பதிவைக் கேள்விக்குள்ளாக்கிய மாற்றுவெளி 2008இல் வெளியான இக்கட்டுரை ஆசிரியரின் எதிர்வினையை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். 'சுந்தரமூர்த்தி தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் கால்டுவெல்லுக்குக் கிடைக்கவில்லை என்கிறார். கால்டுவெல்லுக்குத் தொல்காப்பியத்தின் முழுமை கிடைக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் தொல்காப்பியத்தின் பெரும்பகுதியைப் படித்திருந்ததை அவரே பதிவும் செய்துள்ளார். சங்கப்பாடல்களைக் குறித்து அவர் குறிப்பிடவில்லை. ஆனால்உரைநூல்களில்மேற்கோளாகச்சுட்டப்படும்சங்கப்பாடல்களைச் சுட்டி, தமிழ்க் கவிதையின் துவக்கம் இதுவென அடையாளம் காட்டுகிறார். கால்டுவெல்ஒருதிருந்தியபதிப்பினைவெளிக்கொணர்ந்தார் என்பது உண்மையே. மலையாள அறிஞரான குண்டர்ட் ஆய்வு முடிவுகளைத் திருந்திய பதிப்பிற்குப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அதே சமயம் சைவர்களுக்கு மிக நெருக்கமானவரான ஜி.யு.போப்பின் சிந்தனைகளோடு உடன்பாடான கருத்துகளை ஒருபோதும் அவர் கொண்டிருக்கவில்லை. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மீதான கோவரின் சிந்தனைகளுக்குப் பதிலளிக்கும் போது, கால்டுவெல் போப்பின் சிந்தனையாகவே அதனை இனங்காட்டுகிறார். சென்னைப் பல்கலைக்கழகமும் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தைப் பதிப்பித்தது. ஆனால் இப்பதிப்பு 1875இல் வெளியான கால்டுவெல்லின் திருந்திய இரண்டாவது பதிப்போடு எவ்வகையிலும்தொடர்புடையதல்ல. கால்டுவெல் முதல்பதிப்பில் அவர் கொண்டிருந்த கருதுகோள்களில் எதனையும்துறக்கவுமில்லை. அவற்றிற்கு வலுசேர்க்க புதிய ஆதாரங்களை இணைத்துக் கொண்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகம் இரண்டாவது பதிப்பின் மறுபதிப்பை வெளியிடவில்லை. சுந்தர மூர்த்தி இரண்டாவது பதிப்பின் மறுமதிப்பினைச் சென்னைப்பல்கலைக்கழகம் வெளியிட்டது என்கிறார். தன் அறியாமைகளின் காரணமாகக் கால்டுவெல் இழைத்தத்தவறுகளை அறிஞர்களின் ஆலோசனைகளின்படி இரண்டாவது பதிப்பில் கால்டுவெல் திருத்திக் கொண்டார். சென்னைப் பல்கலைக்கழகம் இதனை வெளியிட்டது என்கிறார். வரும் தலைமுறையினர் இப்பதிப்பைக் கால்டுவெல்லின் மூலப்பதிப்புகளில்

ஒன்றாகக் கொள்ள வேண்டுமென பிரகாரிசு செய்கிறார். உயர் தொழில் நுட்பத்தில் பொய் உண்மையாகக் கட்டமைக்கப்படுகிறது."[2] இப்பதிவின் நோக்கம் சுந்தர மூர்த்தியைப் பொய்யராகச் சித்திரிப்பதல்ல. மாறாகக் காலம் கட்டமைத்த பொய்யை அவரும் சுமந்து திரிகிறார் என்பதுவே. கால்டுவெல்லின் இரண்டாவது பதிப்பு 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெளிவந்தது. சுந்தர மூர்த்தி இருபதாம் நூற்றாண்டுக்குரிய ஆய்வு நெறியில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்ததாகக் கூறி, அப்பதிப்பினையே இருட்டிப்பு செய்துள்ளார். நியூசெஞ்சுவரி சங்க இலக்கியத்தின் பலபதிப்புகளை வெளியிட்டுள்ளது. சுந்தர மூர்த்தியின் அணிந்துரை எவ்வித மாற்றமும் இன்றி தொடர்கிறது. இப்பதிவை அவர் ஏற்கவோ மறுக்கவோ செய்யாத நிலையில் காலம் கட்டமைத்த பொய்யோடு இன்னமும் முழுமையான உடன்பாடு கொண்டுள்ளார் என்று தான் கூறவேண்டும். சுந்தர மூர்த்தி என்றும் பெயரை நீக்கிவிட்டு தமிழ்பேராசிரியர்கள் பலருடைய பெயரை இணைத்தாலும் மாறுதல் ஏதும் நிகழப்போவதில்லை.

கால்டுவெல் தன்வாழ்வில் ஒழுங்கு, நேர்மை, கட்டுப்பாடு ஆகியவற்றை உறுதியாகக் கடைபிடித்தவர். தன்னுடைய நினைவுக் குறிப்புகளில்[3] தன் நூல்களைக் குறித்து விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். நூலின் பெயர், அதன் நோக்கம், பக்கங்கள், பதிப்பாளர் பெயர், நூலுக்கான எதிர்வினைகள் அனைத்தையும் விரிவாகப் பதிவு செய்துள்ளார். நினைவுக் குறிப்புகள் நூலை எழுதியது கால்டுவெல்லே. அவர் மரணச்செய்தியை மட்டும் தந்து வாட் நூலை நிறைவு செய்துள்ளார். ஆனால் நூலைத் தொகுத்தவர் என்று வாட் பெயர் சுட்டப்பட்டுள்ளது. கால்டுவெல் காலத்தில் வெளியான நூல்களில் மாற்றங்களை நிகழ்த்துவது எளிதானதல்ல. ஆனாலும் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டு, கால்டுவெல்லே இந்த மாற்றங்களை நிகழ்த்தினார் என்றும் பொய் உறுதியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. "சிக்கல் சில பக்கங்கள் நீக்கப்பட்ட விதத்தில் அல்ல. அப்பக்கங்கள் வரலாற்றிலிருந்து திட்டமிட்டு அழிக்கப்பட்ட விதத்தில்தான் உள்ளது. அழிக்கப்பட்ட இப்பக்கங்களின் உள்ளடக்கம் சமகாலத்தில் யாருக்கும் தெரியாது என்பதல்ல. பேராசிரியர் வி.ஐ.சுப்பிரமணியம் அகஸ்தியலிங்கம் பிள்ளை போன்ற முதிய தலைமுறை பேராசிரியர்கள் இத்திருத்தங்களைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். விவாதிக்க மட்டுமே இவர்கள் விரும்பவில்லை[4] 2008இல் இந்த உண்மை வெளிப்படுத்தப்பட்ட பின்னரும் மௌனமே காத்தார்கள்.

1856ல் கால்டுவெல்லின் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம் வெளியானது.[5] 1875இல். அதன் திருந்திய இரண்டாவது பதிப்பு வெளியானது. தென்இந்திய மொழிகளின் இலக்கணம் குறித்தான

ஆய்வுகளில் நிகழ்ந்த முன்னேற்றம் இதற்குக் காரணமாகியது. கால்டுவெல்லின் மரணத்திற்குப்பின் 1813ல் இதன் மூன்றாவது பதிப்பு வெளியானது. இரண்டாவது பதிப்பின் பதிப்பாளரே மூன்றாவது பதிப்பினையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.[6] இரண்டாம் பதிப்பில் இடம் பெற்றிருந்த சில பகுதிகள் தகுந்த காரணங்கள் குறிப்பிடப்படாமல் மூன்றாம் பதிப்பில் தொகுப்பாளர்களால் நீக்கப்பட்டதையே குழுறுபடிகள் என்றும் சொல் குறிப்பிடுகிறது. இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் தமிழ் இலக்கிய வரலாற்றினை விவரிக்கும் ஒருபெரும் பகுதி மூன்றாம் பதிப்பில் நீக்கப்பட்டது. "இந்நூலின் முதல் பதிப்பு 1856ல் வெளியானது. இரண்டாவது பதிப்பு 1875இல் 'டர்பனர் அன்டு கோவால்' வெளியிடப்பட்டது. சுவனமாகச் சொல்லப்போனால் கூடுதலாகப் பதிப்பிக்கப்பட்டதால் இதன் விலை சுதேசிகளின் வாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டதாகிவிட்டது. முன்னுரை உட்பட 608 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துவிட்டது. முன்னுரை 184 பக்கங்களையும் பின்னிணைப்புகள் 96 பக்கங்களைக் கொண்டதாகவும் அமைந்தது.[7] முன்னுரையில் பெரும்பகுதியான தமிழ் இலக்கியம் குறித்ததான செய்திகளைத் தனியாக வெளியிடலாம் என்னும் உணர்வும் அவருக்கு இருந்துள்ளது. மாணவர்கள் அவசியம் வாசித்தாக வேண்டும் என்னும் சிந்தனையின் அடிப்படையில் இந்த உணர்வு எழுந்துள்ளது. இலக்கியம் குறித்த அறிவு மாணவர்களுக்கு தேவையானது என்பதையும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். மூன்றாம் பதிப்பின் முன்னுரை 118 பக்கங்களைக் கொண்டதாக அமைந்தது. 66 பக்கங்களையே முன்னுரையில் சேமிக்கவும் முடிந்துள்ளது.

மூன்றாம் பதிப்பின் ஆசிரியர்கள் இலக்கியம் தொடர்பான செய்திகளை நீக்கிவிட்டதற்கான காரணங்களை முன்வைத்துள்ளனர். "திராவிட மொழி இலக்கியம் தொடர்பான செய்திகளை உள்ளடக்கிய பிஷப் கால்டுவெல்லின் முன்னுரையின் பெரும்பகுதியை நீக்கிவிட்டோம். இரு அடிப்படைகளின் வழிகாட்டுதலில் இம்முடிவினை மேற்கொண்டோம். திராவிட இலக்கியம் தொடர்பான செய்திகள் நூலின் முதன்மை நோக்கத்திற்கு இன்றியமையாதன அல்ல. கால்டுவெல்லே இதனோடு உடன்பட்டுள்ளார். பழந்தமிழ் நூல்களின் காலம் குறித்த கால்டுவெல்லின் முடிவுகள் இந்திய சுதேச ஆய்வாளர்களின் ஆய்வின் படியும் இன்று செல்லாதன ஆக்கப்பட்டுள்ளன."[8] திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் மூன்று பதிப்புகளுமே ஐரோப்பாவில் ஐரோப்பிய வாசகர்களை முன்வைத்து வெளியிடப்பட்டவை. வடமொழி அதன் இலக்கியம் குறித்ததான அறிவு ஐரோப்பாவை உணர்ச்சிமையவாத காலத்திலேயே அடைந்திருந்தது. இந்திய துணை

கண்டத்தில் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறான, இலக்கிய வளம் கொண்ட மொழிக்குடும்பம் உள்ளது என்பதை நிறுவுவதுதானே கால்டுவெல்லின் இலக்காக இருந்திருக்க முடியும். தமிழின் இலக்கிய வளம் குறித்த செய்திகள் இந்த நோக்கத்திற்கு அவ்வாறு அன்னியமாகும். கால்டுவெல் இந்த முன்னுரையில் கால ஆராய்ச்சிக்கு முதன்மை அளித்திருக்கவில்லை. அவர் நோக்கம் தமிழ் இலக்கிய வரலாற்றின் சட்டகத்தை உருவாக்குவதும், தமிழ் இலக்கியங்களை தரப்படுத்துவதும்தான். வட்டக் கோட்பாட்டையே முன்வைத்துள்ளார். இதற்கு நேர்கோட்டிலான காலம் தேவையற்றது. சமண இலக்கிய வட்டத்தையும், இராமயண இலக்கிய வட்டத்தையுமே முன்னிலைபடுத்துகிறார். சைவ வட்டத்தை கீழிறக்குகிறார். குறளும் சிந்தாமணியுமே தமிழின் சிகரங்கள் என்கிறார். சைவத்தை ஒதுக்கித்தள்ளியதே உண்மை காரணமாகலாம்.

இரண்டாம் பதிப்பின் முன்னுரையின் இறுதி பாரா பின்னிணைப்புகளைக் குறிக்கின்றது. மூன்றாம் பதிப்பின் ஆசிரியர்கள் இதை மிகக் கவனமாக நீக்கிவிட்டுள்ளனர். பின்னிணைப்புகள் தடயமின்றி அழிக்கப்பட்டுள்ளன. 96 பக்கங்களை 12 பக்கங்களாகச் சுருக்கிவிட்டுள்ளனர். "இன்று மறக்கப்பட்டுவிட்ட அல்லது முக்கியத்துவத்தை இழந்துவிட்ட ஆசிரியர்களின் பார்வையோடு முரண்பட்டு கால்டுவெல் எழுதிய விவாதத்திற்கிடமான பகுதிகளும் நீக்கப்பட்டுவிட்டுள்ளன."[9] இது கால்டுவெல் கோவருக்கெழுதிய பதிலைக் குறிக்கின்றது. கோவரின் நூல்கள் சைவசித்தாந்த கழகத்தாரால் தொடர்ந்து வெளியிடப்பட்டன. கோவரைவிட கால்டுவெல் அவரை எதிர்கொண்ட விதம் முக்கியமானது. "கலாச்சார முன்னேற்றம் இனத்தை மட்டுமே பொறுத்ததல்ல. அதைவிட மேலாகப் பருவநிலை மற்றும் புறச்சூழலைப் பொறுத்தமைவது."[10] இராமகிருஷ்ண பிள்ளை இதனோடு முரண்படலாம். ஆனால் சமகாலப் பார்வையில் இது முக்கியமானது.

'பறையர்கள் திராவிடர்கள்தானா', 'திராவிடர்களின் உடலியல்', 'திராவிடர்களின் பழமையான சமயம்', 'நீலகிரித்தோடர்கள் திராவிடர்கள்தானா', 'சுந்தர பாண்டியன்', 'கால்டுவெல் கோவருக்கு எழுதிய பதில்' ஆகியன நீக்கப்பட்டுள்ளன. அதே சமயம் சில பகுதிகள் மூன்றாம் பதிப்பில் தொடர அனுமதிக்கவும் பட்டுள்ளன. பின்னிணைப்புகளை இரு பகுதிகளாக வகுத்துக்கொள்ளலாம். முதற்பகுதி தோடா போன்ற மொழிகளைத் திராவிட மொழிகளாகக் கருதும்படியான சான்றுகளைத் தொகுத்தளிக்கின்றது. இப்பகுதி மூன்றாம் பதிப்பிலும் நீடிக்கின்றது. இரண்டாவது பகுதியில்

இடம்பெற்றவை அனைத்தும் ஒரு மையத்தைக் கொண்டுள்ளன. இவை மொழிகளைக் குறித்தவை அல்ல. மாறாக மொழிபேசும் மக்களின் இனம் மற்றும் கலாச்சாரம் தொடர்பானவை.

கால்டுவெல் காலகட்டத்தில் 'தமிழர்' என்னும் அடையாளம் பறையர்களுக்கு மறுக்கப்பட்டது. கால்டுவெல்லுக்குப் பிற்பட்டவரான அயோத்திதாசரும் இதனைப் பதிவு செய்துள்ளார்.[11] ஐரோப்பிய அதிகாரிகள் உயர்ச்சாதியினரிடமும், பறையர்களிடமும் மட்டுமே நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தனர். உயர்ச்சாதியினர் பெரும்பாலும் அதிகாரிகள். பறையர்கள் வீட்டு வேலையாட்கள். அதிகாரிகள் செல்லும் இடமெல்லாம் உயர்ச்சாதி அதிகாரிகளும், வீட்டு வேலைக்காரர்களான பறையர்களும் தொடர்ந்தாக வேண்டும். இவ்விரு பிரிவினருக்குமிடையிலான வேறுபாடு ஐரோப்பியர்களை வியப்பில் ஆழ்த்தியது. உயர்ச்சாதியினரால் இதற்குச் சில காரணங்களும் கற்பிக்கப்பட்டன. கால்டுவெல் இக்காரணங்களைத் தொகுத்து, சிதறடித்து, பறையர்களும் நிலஉடமையாளர்களான வெள்ளாளர்களைப் போல் திராவிடர்கள்தான் என்பதை நிறுவுகிறார். பறையர்களைவிட கீழ்நிலையில் வாழும் மக்கள் சுதந்திரமானவர்களாக வாழும்போது, பறையர்கள் அடிமைப்படுத்தப்பட்டதற்கான காரணங்களைப் பதிவு செய்கிறார். ஆண்டான் அடிமை என்பது ஓரினத்தவரிலும் இருக்கக்கூடும் என்கிறார். பறையர்களைப் பழமையான திராவிடர் என நிறுவுகிறார்.

'திராவிடர்களின் உடலியல்' கட்டுரையில் கருமைநிறம் அடிமைகளின் நிறல் அல்ல மாறாகச் சூரியனுக்குக் கீழே வேலை செய்பவர்களின் நிறம் என்கிறார். பறையர்களுக்குப் பெருந்தெய்வ வழிபாடு (நிறுவன சமயம்) மறுக்கப்பட்டது. கால்டுவெல் வெறியாடுதலே திராவிடர்களின் பழமையான சமயம் என்கிறார். இலங்கையில் புத்த சமயத்தாரிடமும் இவ்வழிபாடு உள்ளதைக் குறிப்பிடும் கால்டுவெல் சித்தியர்களிடமும், (துரானியர்களிடமும்) இவ்வழிபாடு நிலவியதைச் சுட்டுகிறார். 'சுந்தர பாண்டியன்' கட்டுரையில் சைவம் காலத்தால் பிற்பட்டது. என்பதை வரலாற்று ஆய்வின் மூலம் நிறுவன முயற்சித்துள்ளார். பறையர்களை வழிபட அனுமதிக்காத (இதையும் கால்டுவெல்லுக்குப் பிற்பட்டவரான அயோத்திதாசர் பதிவு செய்துள்ளார்.) சைவம் காலத்தால் பிற்பட்டது என வாதிடுகிறார். ஆக பறையர்களை மாற்றி நிறுத்துவதற்குக் கூறப்பட்டவைகளை ஆய்விற்குள்ளாக்கி பறையர்களும் திராவிடர்களே என்றும் உண்மையை ஐரோப்பிய வாசகர்களின் முன் வைத்துள்ளார்.

சாதிவேறுபாடுகள் செயற்கையானவை. ஒரே மொழிக்குடும்பம் என்றும் கருதுகோளுடன் உடன்பட்டவர்களால் ஓரினம் என்பதோடு உடன்பாடு காண இயலவில்லை. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலின் பின்னிணைப்புகள் தடையின்றி அழிக்கப்பட்டதற்கான காரணம் இதுவே. மிகக் கீழ்த்தரமான செல்லபாடாக இதனை மதிப்பிட வேண்டும்.

2

மறுபதிப்பில் நிகழும் குழறுபடிகளுக்குத் தனிமனிதத் தவறுகள் ஒருபோதும் காரணமாவதில்லை. இக்குழறுபடிகளுக்குப் பின்னால் ஓர் அரசியல் இழையோடும். இந்த அரசியலை இனங்கண்டு சமகாலத்தின் பார்வையில் முன்வைப்பதின் மூலமாகவே வரலாற்றில் நிகழ்ந்த பிழையைச் சரிசெய்ய முடியும். குழறுபடிகளே இல்லாத ஒரு பதிப்பை வெளிக்கொணர்வது, உடனடியாகக் குழறுபடிகளுக்குக் காரணமானவர்களைத் தப்பவிடும் முயற்சியே எனவே திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலின் மூன்றாவது பதிப்பில் நிகழ்ந்த குழறுபடிகளுக்குப் பின்னால் இழையோடும் அரசியலையும் தெளிவுபடுத்தியாக வேண்டும்.

இக்கட்டுரையாளர் பழம்பொருட் சேகரிப்பாளரோ, பழங்கால வரலாற்றைத் தேடி அலைபவரோ அல்ல. இக்கட்டுரையாளரின் நோக்கம் ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்ட ஆய்வுகளை நிகழ்த்துவது மட்டுமே. எனவே கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் நூலின் பதிப்பில் நிகழ்ந்த குழறுபடிகளை முதன்முதலாகச் சமகாலத்தின் பார்வைக்கு வெளிப்படுத்தியவன் என்றும் பெருமையைக் கோரிப் பெறப்போவதில்லை. சமகாலத்தில் யாரும் இதைக் குறித்து அறிந்திருக்கவில்லை என்பது உண்மைக்கு மாறானது. 1945லேயே வையாபுரிப்பிள்ளை இதைக் குறித்து எழுதியுள்ளார். கால்டுவெல்லின் அடிக்குறிப்புகள் திருத்தப்பட்டதை வேதனையோடு பதிவும் செய்துள்ளார் மூன்றாம் பதிப்பின் பதிப்பாளர்கள் கால்டுவெல் கிரேக்க மொழியில் குறிப்பிட்டிருந்ததை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் குறித்து ஆராய்ந்தவர்கள் இதைக்குறித்து விவாதித்திருக்க வேண்டும். திராவிட மொழிகளைவிரிவாக ஆராய்ந்த அகஸ்தியலிங்கம் பிள்ளையிடம் இதை எதிர்பார்ப்பது நியாயமானதே. ஆனால் அகஸ்தியலிங்கம் பிள்ளை வையாபுரிப்பிள்ளையை இதில் பொருட்படுத்தவே இல்லை. மூன்றாம் பதிப்பில் கூடுதலாகச் சில புள்ளிவிபரங்களையும், குறிப்புகளையும் இணைத்துள்ளதாக மூன்றாம் பதிப்பின் பதிப்பாளர்கள் குறிப்பிட்டிருந்தாலும், கால்டுவெல்லின்

சிந்தனைகளுக்கு எவ்விதத்தில் இவை அரண்செய்கின்றன என்றும் கேள்வியை மொழியியல் அறிஞர்கள் விவாதித்ததற்கான பதிவுகள் இன்றுவரை இல்லை. ஆனால் சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம் நூலின் சுருக்கத்தைப் பாடப்புத்தகத் தேவையின் பொருட்டு வெளியிட்ட போது, கால்டுவெல்லோடு முரண்பட்டவரான கிரியர்சனின் ஆய்வுக்குறிப்புகளோடுதான் வெளியிட்டுள்ளனர்.

திராவிட மொழியியல் கழகத்தின் திராவிடக் கலைக்களஞ்சியம் 'கொஞ்சம் மாறுதல்களுடன்' மூன்றாம் பதிப்பு வெளிவந்தது என்று மட்டுமே சுட்டுகிறது. என்ன மாறுதல்கள் என்பதைக் குறித்து அக்கரை கொள்ளவில்லை. மூன்றாம் பதிப்பின் பதிப்பாசிரியர்களின் கல்வித் தகுதியைக் குறித்து விரிவாகப் பேசுகின்றது. மாறுதல்களை நிகழ்த்திய பதிப்பாளர்களின் கல்வித்தகுதியை முன்னிட்டு மாறுதல்களை ஏற்றுக்கொள்ள சிபாரிசு செய்கின்றது. இதை வி.ஐ. சுப்பிரமணியத்தின் குரலாகக் கொள்ளவேண்டும். திராவிட மொழியியல் கழகம் வெளியிட்ட IJDL இதழ் கட்டுரையிலும் மூன்றாம் பதிப்பு குறித்த விபரங்கள் தரப்படவில்லை. எனவே மூன்றாம் பதிப்பில் நிகழ்ந்த குழறுபடிகள் அல்லது நிகழ்த்தப்பட்ட மாறுதல்கள் யாருமே அறியாத ஒன்று என்பதல்ல. ஒரு தலைமுறை பேராசிரியர்களுக்கிடையிலான உரையாடலில் இடம்பெற்றதாகவும் இருந்தது. இதன் அரசியல் மட்டுமே சமகாலப் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக அமைகிறது.

1913ல் கால்டுவெல்லின் மருமகனான வயட் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தமிழ் ரீடராகப் பணியாற்றினார். சமயப்பணியாளர்கள் சென்னையில் பயிற்சி பெறும்போது இலக்கியக் கல்வியும் பெற்றனர். 'டிரூ' இவர்களுடைய ஆசிரியராகத் திகழ்ந்தார். குறளிலும், சிந்தாமணியிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார் போப், கால்டுவெல், பவார் இவர்கள் எல்லோரும் டிரூவின் மாணவர்களே. சிலர் தனி ஆசிரியர்கள் மூலம் தமிழறிவை வளர்த்துக்கொண்டனர். கால்டுவெல் தன் மருமகனின் தமிழறிவைக் குறித்து எங்கும் குறிப்பிடவில்லை. கால்டுவெல்லின் மகன் இருசித்தர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளதை முன்னுரையில் பதிவு செய்துள்ளார். வயட்டின் தமிழறிவைச் சோதித்து அறிவதற்கான எழுத்துப்பதிவுகள் இன்று இல்லை. போப், வயட் ஆகியவர்களுக்கு ஆக்ஸ்போர்ட், கேம்பிரிட்ஜ் பல்கலைகழகங்கள் அளித்த பதவிகள் தங்கள்பணிக்காலத்தில்அடைந்ததமிழறிவைப்பயன்படுத்திக்கொண்டு, ஓய்வின்போது நன்றியறிதாகப் பொருளாதார உதவி செய்வதின் பொருட்டாகலாம். ராமகிருஷ்ணபிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப்பாடத்திட்டக் குழுவின் தலைவராகத்

திகழ்ந்தார். தமிழ் எழுத்தின் வடிவடிவத்தை ஆன்மீகத்தளத்தில் விவரிக்கும் நூல் ஒன்றினை இவர் எழுதியதாகக் கூறப்படுகிறது. சவரிராயப் பிள்ளையுடன் இவருக்குத் தொடர்பிருந்தது. ஒரு கூட்டுச் சதியை நிறைவேற்ற கருவியாகச் செயல்பட்டுள்ளார். மூன்றாம் பதிப்பின் திருத்தங்களோடு சென்னைப் பல்கலைக்கழகத்தைத் தொடர்புபடுத்தும்படியான ஆதாரங்கள் இன்றளவும் கிடைக்கவில்லை.

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் இரண்டாம் பதிப்பு வெளியான 1875க்கும் மூன்றாம் பதிப்பு வெளிவந்த 1913க்குமிடையிலான 38 வருடங்களில் தமிழ்ச் சூழலில் நிகழ்ந்தவற்றை உன்னிப்பாகக் கவனத்தில் கொள்ளவேண்டும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழ்ச் சமூகத்தின் சாதி அடுக்குமுறை சரியத்துவங்கியது. திருநெல்வேலியிலும் திருவிதாங்கூரிலும் தோட்டத்தொழில் சாணார்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தியது. சீர்திருத்த கிறிஸ்தவம் ஆங்கிலக் கல்வியை அறிமுகப்படுத்தியபோது, சாணார்கள் மூளை உழைப்பாளர்களாக மாறத்துவங்கினர். திருநெல்வேலி பிள்ளைமார்களின் கோட்டையாகக் கருதப்பட்ட பாளையங்கோட்டை சாணார்களின் வசமாகியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோற்றம் கொண்ட பஞ்சங்கள் விவசாயிகளான வெள்ளாளர்களின் வாழ்வை அல்லல்களுக்கு உள்ளாக்கியது. கோவில்களைச் சார்ந்து வாழ்ந்த பார்ப்பனர்கள் ஆங்கிலக் கல்வி பெற்று அரசு உயர் அதிகாரிகளாகத் தங்கள் நிலையை உறுதிபடுத்திக்கொண்டனர். வர்ண அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு தாழ்ந்த சாதியினரை உயர்வர்ண கோரிக்கையை முன்னெடுத்துச் செல்ல வழிவகுத்தது.

திருவிதாங்கூரில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டபோது விவசாயிகளான வெள்ளாளர்கள் வாழ்வு சீர்குலையத் துவங்கியது. திருவிதாங்கூரில் மாட்டுச்சந்தை முதல்முறையாக அறிமுகம் செய்யப்பட்டபோது, வெள்ளாளர்கள் அதைக்கடுமையாக அறிமுகம் செய்யப்பட்டபோது, வெள்ளாளர்கள் அதைக்கடுமையாக எதிர்த்தனர். மாடுகளைவிட அடிமைகளுக்குக் குறைவாகத் தீனி போதும் என்றனர். 'லண்டன்மிஷனரி' சங்கத்தினர் அடிமைகளின் விடுதலைக்காகப் போராடினர். அடிமை வணிகம் தடை செய்யப்பட்டபோது, அது வெள்ளாளர்களின் பொருளாதாரத்தைக் கடுமையாகப்பாதித்தது.[12] ரேனியஸ் மதம்மாறிய வெள்ளாளர்களைச் சாணார்களுக்குச் சமமாக நடத்தி அவர்களை வெறுப்படையும்படி செய்துவிட்டிருந்தார்.

தமிழ்மண்ணில் ஆட்சியாளர்கள் உயர் கல்வியை அறிமுகம் செய்தபோது, சைவ இலக்கியங்கள் முக்கியத்துவத்தை இழந்தன.

சைவமடங்களும் திருநெல்வேலி கவிராயர்களும் சைவ இலக்கியங்களையே முதன்படுத்தினர். திருக்குறளும் கம்ப இராமாயணமும் மட்டுமே விதிவிலக்காக அமைந்தன. இலக்கணங்கள் சமணர்களால் எழுதப்பட்டிருந்தாலும் வேறுவழி இன்றியே கற்பிக்கப்பட்டன. வடதமிழ் நாட்டில் குறிப்பாகச் சென்னையில் சமண சமயத்தைச் சார்ந்த தமிழாசிரியர்களும் இருந்தனர். எனினும் அவர்கள் கற்பித்த நூற்களைக் குறித்த அறிவு இன்றில்லை. ஆனால் செவ்வியல் இலக்கியங்களான சிந்தாமணியும் சிலப்பதிகாரமும் உயர்கல்வியில் கற்பிக்கப்பட்டபோது சைவ இலக்கியங்கள் ஒளி இழந்தன. பார்ப்பனர்கள் செவ்வியல் இலக்கியங்களைப் பதிப்பித்து, சைவர்களை ஓரங்கட்ட முயற்சித்தனர். செவ்வியல் இலக்கியங்களை உயர்கல்வியில் இணைத்ததில் சீர்திருத்த கிறிஸ்தவ சமயப் பணியாளர்களின் பங்கினையும் மறுப்பதற்கில்லை.

திருநெல்வேலியைப் பூர்விகமாகக் கொண்டு, திருவிதாங்கூரில் வாழ்ந்த சுந்தரம் பிள்ளையே கால்டுவெல்லுக்கு எதிர்வினையாற்றியவர்களில் முன்னோடியாக அமைகிறார். சுந்தரம் பிள்ளையின் திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி, பத்துப்பாட்டு கால ஆராய்ச்சி ஆகியன கால்டுவெல்லுக்கு அவர் ஆற்றிய எதிர்வினைகளே. சுந்தரம்பிள்ளை கால்டுவெல் இருவருடைய காலக்கணிப்பும் கால ஆராய்ச்சி தொடர்பானதல்ல. கால்டுவெல் காலத்தைப் பின்னால் நகர்த்தி சைவம் காலத்தால் பிற்பட்டது, வெறியாடுதலே திராவிடர்களின் பழமையான சமயம் என நிறுவமுயல்கிறார். சுந்தரம்பிள்ளை அதை முன் நகர்த்தி சைவம் திராவிடர்களின் சமயம் என்கிறார். வெள்ளாளர்களும் வெறியாடி நாட்டார் கடவுள்களை வழிபடுபவர்கள் தான். வெள்ளாளர்கள் சாணார்கள் பறையர்கள் ஆகியோர் வழிபடும் கடவுள்கள், வழிபடும் முறை ஆகியன ஒருபோல்தான் சமகாலத்திலும் அமைந்துள்ளது. கால்டுவெல் இதைக் கணக்கிலெடுக்கவில்லை. வெள்ளாளர்கள் கூடுதலாகப் பெருந்தெய்வ வழிபாட்டு நெறியினையும் கொண்டிருந்தனர்.

சுந்தரம்பிள்ளை சாதி அடுக்கில் வெள்ளாளர்களின் நிலையை உறுதிபடுத்த தமிழ்நாடு, திருவிதாங்கூர், ஈழம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த வெள்ளாளர்களை ஒருங்கிணைத்து மகாநாடு ஒன்றை ஒருங்கிணைக்க முயன்றார். இம்முயற்சி நிகழ்வடிவம் காண்பதற்கு முன்பாகவே அவர் மரணம் நிகழ்ந்துவிட்டது. ஆனால் இம்முயற்சியில் ஈழத்தைச் சார்ந்தவரும், திருவிதாங்கூரில் நீதிபதியாகப் பணியாற்றியவருமான நல்லுசாமிப்பிள்ளைக்கு அவர் எழுதிய கடிதவரிகளை, நல்லுசாமிப் பிள்ளை 'இராமாயண உள்ளுறையும்

தென்இந்திய சாதி அமைப்பும்' நூலுக்கான முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். "திராவிட இனத்தின் மலர்களான வெள்ளாளர்கள் தங்கள் தேசீயத்தை இன்று மறந்து விட்டுள்ளனர்.....சாணார்களும் ஈழவர்களும் ஆயிரம்கேட்டால் நூறாவது கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் சத்திரியர்கள் என அழைக்க உரிமை கோருகின்றனர்". வெள்ளாளர்களின் தேசீயம் என்பது அவர்கள் சாதியைக் குறிக்கும் சொல் இனஅடையாளமாக அமைவதை நினைவுபடுத்துகின்றது. தமிழன் என்னும்சொல் அவர்களை மட்டுமே குறித்தாக வேண்டும். அல்லது முதன்மை படுத்தியாக வேண்டும். 'இராமாயண உள்ளுறையும் தென்இந்திய சாதிகளும்' நூல் வெ.சுப்பிரமணிய முதலியாரால் எழுதப்பட்டாலும், சுந்தரம் பிள்ளையின் சிந்தனைகள் என்கின்றது நூலின் முன்னுரை. இந்த நூல் தமிழ்ச்சமூகத்தின் சாதி அடுக்கு முறையை விளக்கி அதை உறுதிபடுத்துகின்றது. சாதிகள் வாழ்க்கை நிலையில் பொருளாதார நிலையில் உயர்வடையலாம். ஆனால் இந்த அடுக்குமுறை கலைந்துவிடக்கூடாது என்கிறது.

1907க்கும் 1914க்குமிடையிலான காலகட்டத்தில் 'தமிழன் ஆன்றிருரீ' ஆய்விதழ் இதை முன்னெடுத்துச் சென்றது. தொடர்ந்து எதிர்வினைகளைப் பதிவுசெய்தது. சவரிராயன்இதில்முன்னணிவகுத்தார் கோவர் மற்றும் போப் சிந்தனைகளை முன்வைத்து கால்டுவெல்லுக்கு எதிராக வாதாடினர். துரானியர்களோடுடனான திராவிடர்களின் உறவைக் கேலிக்குள்ளாக்கினர். மனு, பரதன் எல்லோரும் திராவிடர்கள்தான் என வாதிட்டனர். சிவனே திராவிடன்தான். மேற்கு தொடர்ச்சி மலையே இமயம் என்றனர். கால்டுவெல் அறிவியல் பார்வை கொண்டிராதவர் என குற்றம் சாட்டினர். 1913இல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' மூன்றாவது பதிப்பு வெளியானபோது, இவர்களின் விருப்பத்தை நிறைவு செய்தது. திராவிடம் ஒரு மொழிக்குடும்பம் என்பதை ஏற்றுக்கொண்டு திராவிட மொழி பேசுபவர்கள் ஓரின மக்கள் என்பதை மறுதலித்தது.

பதிப்புச் சிக்கல்களிலிருந்து கால்டுவெல்லின் நூலை மீட்பது, பொது சிந்தனையில் மாற்றத்தை நிகழ்த்துவதாக அமைதல்வேண்டும்.

1. சுந்தர மூர்த்தி.இ, அணிந்துரை, சங்க இலக்கியம், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2004.
2. வேதசகாயகுமார்.எம், கால்டுவெல் என்றும் சிக்கல், மாற்றுவெளி, சென்னை 2008.
3. *Wyatt, (Ed), Reminiscences of Bishop Caldwell, Addison & Co, Chennai 1984.*

4. எம்.வேதசகாயகுமார். எம், மு.கூ.நூ.ப.17.

5. *A Comparative Grammar of the Dravidian or South Indian Languages, Trulner & Co, London 1875.*

6. *Wyatt J.L, and Ramal Crishnapillai T, Editors, a Comparative Grammar of the Dravidian or South Indian Languages, Trubner & Co, London 1913.*

7. *Wyatt J.L., Reminiseences of Bishop caldwell 1984.*

8. *Wyatt J.L., Rama Krishnapillai, (1913) P.V.*

9. *Wyatt J.L., Rama Krishnapillai, (1913) P.VI*

10. கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், இரண்டாம் பதிப்பு, லண்டன் 1875. ப.534.

11. அலாய்சியஸ் ஞான, தொ.ஆ, அயோத்திதாசர் சிந்தனைகள் 111, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை 2003. ப. 8.

12. பெருமாள் அ.கா, தென்குமரியின் கதை, தமிழினி, சென்னை.

❦ ❦ ❦

25. கால்டுவெல் அரசியல் - மீளாய்வு

முனைவர் தெ. வெற்றிச்செல்வன்
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

வரலாறெழுதிகளின் அகச்சார்பு , நடுநிலையின்மை, குறுகல் மனோபாவம், கண்கட்டுப்பாய்ச்சல் போன்றவற்றின் காரணமாக வரலாறு பல தருணங்களில் குப்புறவிழுந்தும் பின் எழுந்தும் விபத்துக் காயங்களுடனும்தழும்புகளுடனும்சரியானகருத்தியல்மருத்துவத்தால் நலமாகி நிமிர்ந்தும் பயணித்தபடியே உள்ளது.

சீனாவை வரலாற்றாசிரியர்களின் சொர்க்கம் என வருணிக்குமளவு ஆவணப்படுத்தல்களும், வரலாற்றுப் பேணுகையும் செம்மாந்த நிலையிலிருந்தமைபோல, இந்திய வரலாறு கட்டமைக்கப்படவில்லை. பொற்காலங்களும் இருண்டகாலங்களும் முன் பின் முரணாகி, நிலை தடுமாறி வரலாற்றின் மீது தடித்த கல்லடுக்குகளைப்போட்டு மூடியவகையில் மூச்சு முட்டும் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர்ந்து காப்பாற்ற வரலாறெழுதிகள் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. நினைவின் துணுக்குகளைக் கொண்டு சேகரிக்கப்பட்ட வாய்மொழி வழக்காறுகள், முதுமொழிகள், சொல்லடைகள் கோலார்தங்கவயலில் 3 வாரிகளில் மண் எடுத்தால் 1 கிராம் தங்கம் கிடைப்பதைப் போல பெரும் அகழாய்வுகளில் நுணுகி நுணுகிப்பார்க்கத்தக்க தொல்லியல் தரவுகள் அனல்வாதப் புனல்வாத சமயவாதப் பக்கவாதக்காரர்களால் நீரில் தள்ளியும் நெருப்பில் எரித்தும் கழுவிலேற்றியும் கொல்லப்பட்டதுபோக குற்றுயிரும் குலையுயிருமாக மடிந்து கசங்கிய நிலையில் மீட்கப்பட்ட சுவடிகள்... நீர் நிலைகளில் எருமைகள் உராய்ந்தும் துவைகல்லாய் பயன்படுத்தியதும் போக எஞ்சிய கல்லெழுத்துத்தரவுகள்... பதிப்புக் குளறுபடிகளில் பேதமே பாடமாய் ஆன பாடங்கள் என புதையுண்ட வரலாறுகள், அரிதின் முயன்று மேற்கிளம்பியுள்ளன. திராவிட மொழியியல் வரலாறும் இத்தகையதே.

வங்காளக் கரையிலிருந்து வடக்கேகியது, காலனியக் கொள்ளைக்கூட்டம். காலனிய அறிவர்கள் வடக்கிருந்து இந்தியாவைப் பார்க்கிற பார்வையில் சமஸ்கிருதமயப்பட்ட ஆரியப்பண்பாடே இந்தியப் பண்பாடென்று கட்டமைக்கத் தொடங்கினர். மாக்ஸ் முல்லர் போன்றவர்கள் சமஸ்கிருத ஈர்ப்பில் மோட்ச மூலர் என்று தன் பெயரை மாற்றிக்கொள்ளுமளவுக்கு அது உன்மத்தமாயிற்று. எனவே தெற்குநோக்கிய அறிவுப் பரவல் வரும்வரை இந்நிலை நீடித்தது எனலாம்.

பிறகு 'திராவிட' என்னும் சொல்லின் வரலாற்று வாசிப்பு புத்தெழுச்சியாக மேற்கிளம்பியது. கால்டுவெல்லின் கடுமுழைப்பில் வெளிவந்த *'A Comparative Grammar of the Dravidiyan Languages'* நூல் எழுப்பிய சிந்தனை அலைவட்டங்கள் பெரும் விரிவாக்கப் பரப்பைத் தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கின. இப்பனுவல் தமிழ்ச்சமூகத்தால் கொண்டாடிக் கூத்தாடிக் களிக்கப்படாமல் குளத்தில் போட்ட கல்லெனக்கிடந்து பத்தொன்பது ஆண்டுகள் கழித்து இரண்டாம் பதிப்பும் (1875) பின்னர் 1913 இல் வண. வியாட் (Rev. Wyatt) மற்றும் ராமகிருஷ்ண பிள்ளை ஆகியோரால் சில பக்கங்கள் சர்ச்சைக்குரியன என நீக்கப்பட்டு பதிப்பு அரசியலோடும் பின்னர் கவிதாசரண் அவர்களால் 2008 இல் திருத்தப்பட்ட பதிப்பாகவும் வந்திருக்கிறது.

திராவிட/தமிழ்ச் சமூகத்தால் பேருவப்புடன் வரவேற்கப்பட்டிருக்க வேண்டிய கால்டுவெல்லின் இவ்வரப்பணிப்பு திராவிட / தமிழ்ச்சமூக வாளாவிருத்தலினால் ஏற்பிசைவுக்கு நேர்மாறாக ஆரியச்சமூகக் குதர்க்கத்தாலும், கோளாறான பக்கவாதத்சார்பாலும் விமர்சனம் என்ற போர்வையில் குளிர்காய்ந்ததோடு எதிர்வினைகளைத் தந்தது.

வேடிக்கை என்னவெனில், திராவிட எனும் குறிப்பு மனுவில் தொடங்கி டாக்டர்.பர்னல் மேற்கோளில் இருந்து ஆந்திர திராவிட பாஷா எனும் குறிப்பு சஸ்கிருதத்தில் சுட்டப்பட்டிருப்பது தெரிகிறது. கி. பி. 404 - ல் வராகமிகிராவைத் தொடர்ந்து குமரிலபட்டர் *(A controversial Brahman writer eminence, who is supposed to have lived at the end of the seventh centuary AD)* திராவிட எனும் பதத்தை ஆள்கிறார். (பொருத்தம் பெரியார் - புலவர் - கிறுக்கு கதை) குமரிலபட்டர் பற்றிக் கூறவரும் கால்டுவெல் *A controversial Brahman* என்ற பதத்தையே தெளிவாக ஆள்கிறார். இந்த இடத்தில் பெரியாரைச் சந்திக்கவந்த தமிழ்ப்புலவர் கதை நினைவுக்கு வரும். அய்யா உங்களைச் சந்திக்க ஒரு புலவர் வந்திருக்கிறார்.பார்க்க கொஞ்சம் கிறுக்கு போலத்

தெரிகிறார் அனுப்பட்டுமா எனக் கேட்ட பணியாளரிடம், புலவர் என்றாலேதான் புரிகிறதே அப்புறம் தனியாகவேறு எதற்கு கிறுக்கு என்று குறிப்பிடுகிறாய் என்றாராம் பெரியார்.ஆக குமரிலபட்டர் சுட்டலை அடுத்து *Doubtless it is in the same sense that 'Sathyavrata' The Indian Noah is called in the Bhagavata purana the lord of Drivida* என்று மூர் என்பாரது சமஸ்கிருத நூல் வாயிலாகவும் மேலும் அதே நூலில் பாபு ராஜேந்திரலால் மித்ராவின் சொற்பயன்பாடாக திராவிடி (*Dravidi*) என்றும் தொடர்ந்து புழக்கத்தில் இருந்த நிலையை கால்டுவெல் தக்கவாறு சான்றுகளுடன் சொல்லிச் செல்கிறார். கால்டுவெல் கூறுவதற்கு நாற்பதாண்டுகளுக்கு முன்னமே எல்லீசர், திராவிடக் கருத்தாக்கம் பற்றிப் பேசியுள்ளதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.தம்மை தமிழ் ஒலிப்புப்படி எல்லீசன் என்று அழைக்குமாறு கேட்டுக்கொண்டும் இன்னமும் நாம் எல்லீசு ஐயர் என்றும் பெரியாரின் நண்பரும் பொதுவுடைமை இயக்கச் சிந்தனையாளருமான ஏ.எசு.கே தம்மையாரும் ஏ.எசு.கே அய்யங்கார் என அழைக்கக்கூடாது ஏ.எசு.கே. என்றுதான் அழைக்கவேண்டும் என அரசிதழில் வெளியிட்டபோதும் இன்னமும் ஏ.எசு.கே அய்யங்கார் என்றும் சுட்டுவதான தமிழ்ச்சூழலை என்னவென்பது. எல்லீசர் அப்போதே 'திராவிட' எனும் சொற்பயன்பாட்டை புழங்கிவந்துள்ள போதும் கருந்தேள் கொட்டியது போல் ஆரியக்கருத்தியலாளர்கள் அலறியது கால்டுவெல் கருத்துருவாக்கத்தைக் கண்டுதான். இடதுசாரிகளால் நம்பகமானவராகவும், முன்னுதாரணமான ஆய்வாளராகவும் கருதப்பட்டவரும் தமிழ் வீரயுகம் குறித்த கருத்து முன்வைத்தவரும் ஆன கலாநிதி கைலாசபதி கூட தமிழும் சமஸ்கிருதமும் உறவுடைய மொழிகள் ஐக்கியப்பட வேண்டியவை. ஐக்கியப்படாமல் தடுத்தவர்கள் பாதிரிமார்கள் என்று ஆரியச் சைவராக அசைவப் பாதிரிமார்கள் மீது எரிந்து விழுகிறார்.

ஆக கால்டுவெல்லின் முயற்சி என்பது திராவிட அரசியல் கருத்துருவாக்கம் பல்முளைத்து வெளிவராமல் இருக்கையில் நெல்முனையால் கீறி விடுவதுபோன்றது எனலாம். அதே வேளை முன்னதாக, ஆரிய திராவிட மொழியியல் கருத்துருவாக்கம் பேருழைப்பையும், பெருமதிப்பையும் கொண்டது என்று கருதத்தக்கது.

சித்தரியமும், சைவ, வைணவ, சமண, பௌத்தமும் ஆரிய எதிர்ப்பில் பங்கு கொண்டபோதும் 'உள்வருவனவற்றை வரவு வைத்த வகையில் ஆரியத்தால் உள்ளமுக்க முயற்சிகளில் மூழ்கிய வரலாறும் கவனிக்கத்தக்கது.

நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் தோற்ற மயக்கங்களோ? வெறும் காட்சிப்பிழைதானோ? அற்ப மாயைகளோ? என்று உபநிடதங்களின் வழி ஆதிசங்கரனுக்கு ஒரு சின்னக்கவுண்ட்டராகிறார் பாரதி. பின்னர் 'ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி' என்று சாதிய நிறுத்தத்தில் இறங்கிப் போய்விடுகிறார். பிரசவ வலியால் துடித்தலறிய ஏழைத் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பெண்ணை தன் மகிழுந்தில் உயர்சாதியினர் வசிக்கும் வீதி வழியே அவசரம் கருதி அழைத்துச் சென்றதாலேயே ஆஷ் சுடப்பட்ட விவரம் வீரவாஞ்சி நாதன் சட்டைப்பையிலிருந்து எடுக்கப்பட்ட தாள் வழி தெரிய வந்துள்ளது. விடுதலைப் போராட்டத்தைவிட சாதியச் சனாதனத்தைத் தாங்கிப் பிடித்ததாலேயே கொலை முன்னெடுக்கப்பட்டது. (சான்று : ஆஷ் கொலைவழக்கு ஆ.சிவசுப்பிரமணியம் எழுதிய நூல்)

பிரஞ்சுப் பாதிரியார் ஆபெ டுபே நூலின் ஒரு பகுதி ஆக்கம் தான் ஆரியமாயை,

பேராசைப் பெருந்தகையே போற்றி!
பேசா நா இரண்டுடையாய் போற்றி!
தந்திரமூர்த்தி போற்றி!
தாசர்தம் தலைவா போற்றி!
வண்ணநாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
கோழையே போற்றி, போற்றி!
பயங்கொள்ளிப்பரமா போற்றி!
படுமோசம் புரிவாய் போற்றி!
சிண்டுமுடிந்திடுவாய் போற்றி!
சிரித்திடு நரியோ போற்றி!
எம் இனம் கொடுத்தாய் போற்றி!
FFடில்லாக் கேடே போற்றி!

எனும் போற்றித் திரு-அகவலோடு ஆரியமாயைகளை அறிஞர் அண்ணா பிழிந்து தருகிறார். தத்துவ விவேசினி போன்ற தொடக்கக்கால பரப்புரைகளைத் தொடர்ந்து திராவிட இயக்கப் பரப்புரைகள் தொடங்கினவோ இல்லையோ உடனடியாக ஆரியப் பற்றில் இருந்து விஷங்கக்க தொடங்கிவிட்டன சர்ப்பங்கள்.

கால்டுவெல் திராவிட இயக்கத்திற்கான முதல் அறிவாண்மை மிக்க ஆராய்சியாளராகத் திகழ்ந்தார் என்பது தான் அவர் கருத்தியலின் மீது ஒவ்வாமைகளும், எதிர்ப்புகளும், அவதூறுகளுமாக தொடர்ந்து கொண்டு கொட்டப்படுகின்றன.

அதுவும் திராவிட இயக்கச் செயன்மைகள் நீர்த்துப் போகியிருக்கிற இற்றைக்காலச் சூழலில் ஆரியக் கருத்தியல் வாரிசுகள், ஆரிய மாயைக்கெதிராக திராவிட மாயை என்று உளறிக் கொட்டுவதும், திராவிடத்தால் வீழ்ந்தோம் எனக் குதர்க்கம் பேசியும் குணக்கேடர்களும் குணாக்கேடர்களும் மருள்வந்து ஆடியும் வருவதைக் காண்கிறோம். இதன் தொடர்ச்சியாக ராஜீவ் மல்கோத்ரா எழுதி அரவிந்தன் நீலகண்டன் மொழிபெயர்த்து வந்திருக்கும் உடையும் இந்தியா – 'ஆரிய திராவிடப் புரட்டும் அந்நிய தலையீடுகளும்' என்ற தலைப்பில் பூநூலால் தைக்கப்பட்டு வெளிவந்திருக்கும் நூலில் இத்தகைய சிந்தனையின் முடக்குவாதங்களைக் காணமுடிகிறது. எதிர்வினையாக திராவிட இயக்கத் தரப்பிலிருந்து வே.மு.பொதியவெற்பனின் திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல் நூலும் கி. வீரமணி அவர்களின் உடையும் இந்தியாவா? உடையும் ஆரியமா? நூலும் சுபவீ அவர்களின் திராவிடத்தால் எழுந்தோம் நூலும், மஞ்சை வசந்தனின் ஆரியத்தால் வீழ்ந்தோம்! திராவிடத்தால் எழுந்தோம்! என்கிற நூலும் வந்துள்ளன.

எனினும் திராவிட இயக்க வித்துக்கான மூலக்கூறாக இருக்கிற கால்டுவெல்லை மையப்படுத்திய அரசியல் நிலையை ஒட்டியே திராவிட இயக்க அரசியல் - எதிர் அரசியல் மீளாய்வு என்பதை மேற்கொள்ளவேண்டியதிருக்கிறது. கால்டுவெல் அரசியல் மீளாய்வு என்கிற தளத்தில் ஆரிய வாதம் எனும் சிறிய பாம்பை பெரிய தடி கொண்டு அடிக்க வேண்டியதிருக்கிறது.

ஆரிய, திராவிடப் புரட்டு என்பதிலேயே முரண் இருக்கிறது. அது எதைப்போல் இருக்கிறது என்றால் காந்தியை இருவர் shoot செய்தார்கள்; ஒருவர் கோட்சே, மற்றவர் ஏ.கே.செட்டியார் என்று சொல்வதைப்போல் இருக்கிறது. ஆரியம் எப்பேர்ப்பட்டவர்களையும் காவு வாங்கிவிடும் என்பதற்கு காந்தியார் ஓர் உதாரணம். வருணக்கடமைகளை அவரவரும் மிகச்சரியாக ஆற்றவேண்டும் என்று சொன்னவர். 'ஒரு பங்கி தன் எஜமானனின் மலத்தை அள்ளும் வருணக்கடமையின் மூலம் எஜமானர் மலத்தின் தன்மையை வைத்து, அவர் தேக ஆரோக்கியம், எத்தகைய நோய்களுக்கு அவர் ஆளாவார் போன்ற தகவல்கள் தரும் புண்ணியப்பணி மூலம் சிறப்பான வருணக்கடமையை ஆற்றுகிறார்' என்றவர். தீண்டாமை என்கிற ஒரு கூற்றை மட்டும் நீக்கினாலே போதும் மற்றபடி சாதியப் படிநிலைகள், வருணப்படி நிலைகள் என்பவை பிறவிக்கடமைதான் என்ற ரீதியில் பேசிவந்தவர். ஹரிஜன், கிரிஜன் என்று வருண/சமய அடிப்படையிலேயே பெயர் சூட்டியவர். திலகர் இறந்த போது ,அவரது பாடையைத் தூக்க தோள் கொடுக்க போனபோது, பார்ப்பனரின் பூத உடலை

பனியா சுமப்பதாவது என்று புறந்தள்ளப்பட்டவர் அந்த மகாத்மா. பின்னர் அதே பார்ப்பனீயத்தால் வீழ்ந்தவர். காலம் முழுவதும் பார்ப்பனீயத்தைத் தாங்கிப்பிடித்து வருணக் கடமையாற்ற அறிவுறுத்திய போதும் நம்பகமான இந்து விசுவாசியாக இருந்த போதும் அவருக்கு இந்த நிலைதான் எனில் மற்ற சாதாரண மக்களின் கதி என்ன என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும்.

இத்தகையோர் வழிவந்த, ஆரியப் பார்ப்பனீய சூழ்ச்சிக் கூட்டம் காலங்காலமாக புதிய மொந்தையில் பழைய கள்ளை வடித்துத்தருகிறது. கால்டுவெல்கள் வந்தாலும் இருநூறு ஆண்டுகள் கண்டாலும் திராவிட இயக்கங்கள் முனைந்தாலும், எத்தருணத்திலும் இத்தர்ப்பை புல்லர்கள் தொடர்ந்து கச்சைக்கட்டி கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை நாம் முகம் கொடுக்க, எதிர்வினையாற்ற வேண்டிய தேவை, மென்மேலும் கூர்மைப்பட்டுக்கொண்டே இருக்கிறது என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

உடையும் இந்தியா நூல், ஆரிய இனத்தைக் கண்டுபிடித்தல் என்று தலைப்பிட்டுவிட்டு திராவிட இனத்தை உருவாக்குதல் என்று தலைப்பிடுகிறது. கண்டுபிடித்தல் என்பது ஏற்கனவே உள்ளதைக் கண்டுபிடிப்பது என்ற பொருள் தொனியிலும் உருவாக்குதல் என்பது இந்தியாவில் இல்லாத திராவிட இனத்தை கால்டுவெல் போன்ற பாதிரிமார்கள் உருவாக்குதல் என்ற பொருள் தொனியிலும் ஆளப்படுகிறது. எவ்வளவு வக்கிரம் பாருங்கள். ஆரியர் வருகை என்றும் இஸ்லாமியர் படையெடுப்பு என்றும் சர்வாதிகாரத்தால் மனிதத்தைக் கொன்றொழித்த முசோலினியைச் சீர்திருத்தியவாதி என்றும் புரட்சிகர செயல்பாடுகளால் ரஷ்யாவைச் சீர்திருத்திய ஸ்டாலினை சர்வாதிகாரி என்றும் பள்ளிப்பாடத்திட்டத்தில் சித்திரிக்கும் நிலையை இங்கு ஒப்பிடவேண்டும். இஸ்லாமியர் படையெடுப்பாவது, வெளிப்படையான அரசியல் படையெடுப்பு: ஆனால் ஆரியர் வருகை மறைமுகமான: நூற்றாண்டுகளை கபளீகரம் செய்யும் கொடுங்கரங்கள் கொண்டது. சைவ, வைணவ, பௌத்த, கிறித்தவப் போக்குகளில் உறவாடிக் களவாடுகிற பண்பாட்டுப் படையெடுப்பு வலிமிகுந்தது என்பது தான் உண்மை.

தவிர அந்நூல் கால்டுவெல்லின் மொழி, பண்பாட்டு அரசியலுக்கு நேரடியான; நம்பகமான; மறுப்பு சார்ந்த தரவுகளை அளிக்கவியலாமல் மட்டையடியாகப் பேசிச் செல்லும் மொக்கைத் தனங்கள் பளிச்செனப் பல்லிளிக்கின்றன.

சாம்ராஜ்யவாத மதமாற்றப் பிரச்சாரம், இந்திய இனவரைவியலை செதுக்குதல், திராவிட இனவாதம், இந்து மதத்தை திராவிட

கிறிஸ்துவத்துக்குள் செரித்தல், திராவிட கிறிஸ்துவத்தைப் பரப்புதல், இந்தியாவிற்கு வெளியே திராவிட ஆராய்ச்சியாளர் - இயக்கவாதிகள் உறவுப் பிணைப்புகள், அந்நியத் தலையீடுகள் (அந்நியர் வந்து புகலென்ன நீதி), மூக்கு அளவையிலிருந்து *Y* குரோமோசோம் வரை இனவாதத்தின் சுருக்கமான வரலாறு, சங்க இலக்கியம் காட்டும் பழந்தமிழர் சமயம் (புதிய கண்டுபிடிப்பு) வெளிநாட்டுப் பணவரவைக் கண்காணித்தல், லூத்தரன் உலகக் கூட்டமைப்பு இந்தியாவைக் குறிவைத்தல் என வார்த்தைக்கு வார்த்தை வக்கிரம் கொப்பளிக்க ஆரியப் பெருங்கதையாடலை நவீனப் பார்வை என்று எல்லாச் சொல்லும் ஆரியப் பொருள் குறித்தனவாயும், எல்லாப் புரட்டும் இதன்பால் உள இதன்பால் இல்லாப் புரட்டே இல என்னுமாப்போல தடித்தனமாக விளக்குகிறது இப்புத்தகம்.

இப்புத்தகத்தை முன்வைத்து கி.வீரமணி அவர்கள் இது ஒரு பச்சையான ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரம், ஆரியப் பார்ப்பனீயத்தின் புது அவதாரம். முகல்ஸ்தான், திராவிடஸ்தான், தலித்ஸ்தான் என அத்தியாயச் செய்திகளும், அநியாய வரைபடங்களும் கொண்டிருப்பதைச் சொல்லி அகண்ட இந்துஸ்தான், பாகிஸ்தானையும் சேர்த்து என்பது ஆர்.எஸ்.எஸ் சின் நெடுநாள் கனவு. அது பற்றிய சித்திரமே இந்நூல் என்கிறார். 12 - ஆம் பக்கத்தில் ராபர்ட் கால்டுவெல்லின் பிராமண வெறுப்பே பின்னாளைய திராவிட இயக்கத்தின் பிராமண வெறுப்பியலின் அடிப்படையாக இருந்தது என்ற மேற்கோளுக்கு நால்வகைச்சாதி இந்நாட்டினில் நாட்டினீர் என்று பாடிய கபிலர், கால்டுவெல்லுக்கு முந்தியவரா? பிந்தியவரா என்று கேட்கிறார்.

ஒரு வகையில் ஹெட்கேவாரின் *Bunch of Thoughts* என்பதும் உடையும் இந்தியா என்பதும் ஒன்றுதான். அது பழைய வடிவம். இது புதிய வடிவம். இந்நாட்டை ஒன்றுபடுத்தியவன் வெள்ளைக்காரன். பிரிவு படுத்தியவன் ஆரியன். மனித குலத்தை இணைப்பது பெரியார் தத்துவம்; மனித குலத்தை பிரிப்பது மதத்தத்துவம். என்று தெளிவு படுத்தப்படுகிறது. திருக்குறள் மனுதர்ம சாஸ்திரத்தை அடிப்படையாக கொண்ட ஓர் இந்து நூல் என்று சொல்வது கண்டிக்கப்படுகிறது. திராவிடநாடு படத்தை திறந்து திரு.வி.க. பேசிய பேச்சின் பிழிவு தரப்படுகிறது. ஸ்மிருதியிலும் பஞ்ச திராவிடம் குறிக்கப்பட்டிருக்கிறது. சபாபதி நாவலரின் திராவிடப் பிராகாசிகா என்னும் நூலிலும் காணப்படுகிறது. தேசிய கீதத்திலேயே திராவிடம் இடம் பெற்றிருக்கிறதா இல்லையா (திரு.வி.க. கேள்வியின் நீட்சியே திராவிடவியல் அறிஞர் வ.ஐ.சுப்பிரமணியன், முரளி மனோகர் ஜோஷியிடம் கேட்ட கேள்வி)

'சரத்பாதா ந தட்ஷிணா
ப்ராவர்ண தாங் மே
பர்சந்யோ ஜகர்ப்ரே' (ரிக் வேதம் 61-8)

இங்கு தட்ஷிணா என்பது தென்னாட்டையே குறித்ததாக மக்டானல், கீத் ஆகியோர் கூறியதை சரி என்றும், அமெரிக்க நன்கொடை, சங்பரிவார் வன்கொடை என்ற கல்கியின் தலையங்கமும் இங்கு நினைவுக்கூறத்தக்கது. இப்படி ஏராளமான தரவுகள் நூலில் நாம் கொடுத்த போதும், மதவாத வரலாற்று ஆராய்ச்சியாளர் என்ற பெயரில் அவர்கள் செய்கிற பித்தலாட்ட வேலைகள் நம்மை அறச்சீற்றம் கொள்ள வைக்கின்றன. கொழுப்பெடுத்த (பொருத்தம்: அண்ணா - ம.பொ.சி. வலைத்தள நிர்வாண பெண்படம் - சேகுவேரோ) சிந்தனை தடித்தனங்களை சுழித்தெடுக்க தொடர்ந்து நாம் கால்டுவெல்லைக் கையிலெடுக்கவும், முன்நகர்த்தவும் வேண்டிய தேவை உள்ளது.

நிகழ்த்தப்பட்டதை நாம் மனங்கொள்ள வேண்டும் ஓரிரவில் ஆலையின் நிலையத்தைச் சுற்றிப்பார்த்து 6 மணிநேர இரவு ஆய்வுக்குப் பின் 1400 பக்க பாதுகாப்பானது எனும் அறிக்கை அளித்த அறிவியலறிக்கைகளின் மூளைக்கடமையை என்னவென்பது? தொடர்ந்து விதண்டாவாதமும் வரட்டுவாதமும், இந்துத்துவவாதமும் கைகோர்த்துக் கொள்ளும் அடையாளங்களாக இல்லை சிந்தனைகளுக் கெல்லாம் எதிரான அரசியலை அல்லது திராவிடவியலுக்கு எதிரான அரசியலைக் கட்டமைக்கிறது இந்நூல்.

இது ஒருபுறமிருக்க, கால்டுவெல் நூற்பதிப்பு குறித்த அரசியல் தோலுரித்தலை கவிதாசரண் நிகழ்த்தியதை, பெருமுயற்சியெடுத்து புதிய பதிப்பு கொண்டு வந்ததை நன்றியறிதலோடு தமிழ்ச்சமூகம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

கால்டுவெல் நூற்பதிப்பில் முன்னர் நிகழ்ந்த அத்துமீறல் அரசியலை -

I. *The relative antiquity of Dravidian literature.* எனும் தலைப்பின் கீழ்வரும் 34 பக்கங்களிலுள்ள முழுப் பகுதியையும்

II. பின்னிணைப்புகளில்

III. *Remarks on philological portion of Mr. Gover's Folk songs of southern India.*

IV. *Sundara pandya*

V. *Are the pareiyar (pareiyas) of southern India Dravidians?*

VI. Are the neilghey (nilagiri) Tudas Dravidians?
VII. Dravidian physical type.
VIII. Ancient religion of the Dravidians

1. இந்த 6 தலைப்புகளில் மொத்தம் 76 பக்கங்கள்
2. பொருளடக்கத்தில் இவை நீக்கப்பட்ட பக்கங்கள்
3. அடிக்குறிப்புகளாகக் கொடுக்கப்பட்ட 507 வரிகள்
4. நூலின் உட்பகுதிகளிலிருந்து அங்கங்கே பத்திகளாகவும் பக்கங்களாகவும் சற்றேறக்குறைய 20 பக்கங்களுக்கு மேல் மொத்தம் நீக்கப்பட்ட பகுதிகள் மூன்றாம் பதிப்பின் அச்சு வடிவத்தில் 160 பக்கங்களுக்கு மேல் வரும்.

Our sole object has been to enable students to obtain access to so much of the authors work as retain a permanent value in view of the incressed attention paid the study of oriental languages in general என்கிற மூன்றாம் பதிப்பின் முகப்புரையில் சர்ச்சைக்குரிய பகுதிகள் நீக்கப்பட்டமை குறித்த நகாசுத்தனத்தை ஒப்புதல் வாக்குமூலமாக்கி இருப்பதைக் கவிதாசரண் கண்டிக்கிறார்.

எல்லீஸ் காலத்திலும் கால்டுவெல் காலத்திலும் நாட்டுப்புற வழக்காறு, செவ்விலக்கியப் பதிப்பு, இவற்றின் மீது வெளிச்சம் பரவ விடாமல் தடுக்கப்பட்டிருந்தது. செவ்விலக்கியச் சுவடிப் பதிப்பாகாமைக்கு சங்க இலக்கிய மார்பிலே பூணூல் இல்லை. சைவ வைணவச் சாய்வு இல்லை என்கிற நிலையில் பதிப்புச் சிகாமணிகளுக்கு ஆர்வமில்லை என்றும் சுட்டலாம். ஆகவே, காலக்கணிப்பு செவ்விலக்கிய உள்ளீடுகள் இவை குறித்து கால்டுவெல்லுக்குப் போதிய தரவுகள் கிடைத்திருக்க நியாயமில்லை. அதற்காக அவரது கருத்துக்களை சர்ச்சைகுரிய பகுதிகள் என்ற நீக்க எந்தப் பதிப்பாளனுக்கும் உரிமையில்லை.

சுவடிகளிருக்கட்டும், காலனியகால அச்சு ஊடக வளர் முகக்காலத்தில் இயங்கிய எல்லீசர் ஆக்கங்கள் அவர்தம் சமையல்காரன் பீட்டர் கோழிவறுக்கவும் அடுப்பெரிக்கவும் பயன்பட்டது எனும் அதிர்வூறும் அவலம் திராவிடச்சான்று நூலாக்கம் தந்த தாமஸ்டிரவுட்மேனுக்கு ஏற்பட்டிருப்பதை நாமறிவோம்.

இது இப்படியிருக்க, இன்றைய சமகால பிரதேசவாரிப் பிரச்சினைகளாக, கர்நாடக கேரள நீர்ப்பாசன அரசியல் சார்ந்த கருத்து நிலையிலிருந்து திராவிடத்தால் வீழ்ந்தோம் என்று தமிழ்தேசியர்கள் அலறுவதை என்னவென்பது?

'திராவிடம்' என்பதை மொழிசார் கருத்தியலாகக் கொண்டு 'ஆரியமல்லாத' என்றும் 'தொல்தமிழ்' என்றும் புரிந்துகொள்ள மறுத்து தட்டையாக நிலத்தியல் சார் கருத்தியல் இடர்ப்பாட்டில் திராவிடத்தால் அல்ல திண்மையற்ற அறிவு மயக்கத்தால் விழுந்துகிடக்கிறார்கள். பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுகிறார்கள்.

திராவிடக் கருத்தியலைத் துலக்கமாக புரிந்துகொள்ள மறுத்த ஒரு சார்பு தமிழ் தேசியர்கள் மற்றும் நச்சுக்கும்பல் ஆரியதேசியர்கள் இவை குறித்த மனந்திறந்த விரிவான வாசிப்புக்கு வருவார்களேயானால், அந்த நம்பிக்கையை முன்வைத்து அண்ணா பரிந்துரைக்கும் நூற்பட்டியல்

ராமேஷ் சந்திரதத் எழுதிய புராண இந்தியா
ராமேஷ் சந்திர மசும்தார் எழுதிய பூர்வீக இந்திய சரித்திரமும் நாகரீகமும்.
விவேகானந்தர் ,ராமயணம் என்னும் தலைப்பில் பேசிய பேச்சு
கேம்பிரிட்ஜ் பிரசுரித்த பழைய இந்தியாவின் சரித்திரம்
ராதா குமுதமுகர்ஜி எழுதிய இந்து நாகரிகம் - ரிக்வேதம்
ஜேம்ஸ் மர்ரே எழுதிய அகராதி
பண்டார்கர் கட்டுரைகள்
டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் எழுதிய தென்னிந்தியாவும் இந்தியக் கலையும்.
பி.டி. சீனிவாசய்யங்கார் எழுதிய இந்திய சரித்திரம்
ஜெகதீச சந்தர்பட் எழுதிய இந்தியா அன்றும் இன்றும்
கெ. தாஸ் எழுதிய வேதகாலம்
சி. எஸ். சீனிவாசாச்சாரியார் எழுதிய இந்திய சரித்திரம் இந்து இந்தியா
H. G. வெல்ஸ் எழுதிய உலகசரித்திரம்
சகலகலா பொக்கிஷம் என்னும் நியூ ஏஜ் என்சைக்ளோ பீடியா
கி.ஜி. வர்க்கி (மாஜி மந்திரி) எழுதிய இந்திய சரித்திரப் பாகுபாடு
ஹென்றி பெரிஜ் 1865 இல் எழுதிய விரிவான இந்திய சரித்திரம்
இ.பி. வராவெல் எழுதிய இந்தியாவில் ஆரிய ஆட்சி
ஜி.எச். ராவின்சன் எழுதிய இந்தியா
நாகேந்திரநாத்கோஷ் எழுதிய ஆரியரின் இலக்கியமும் கலையும்
வின்சண்ட் ஏஸ்மித் எழுதிய ஆக்ஸ்போடு இந்திய சரித்திரம்
இம்பீரியல் இந்தியன் கெஜட்
சர்வில்லியன் வில்சன் ஹண்டர் எழுதிய இந்திய மக்களின் சரித்திரம்
ராசோசின் எழுதிய வேதகால இந்தியா

எனப் பரிந்துரைப் பட்டியல் அளிக்கிறார் அண்ணா.

மெக்கன்சி, எட்கர்தர்ஸ்டன், டிரவுட்மென், ஏ.எல்.பாஷ்யம், திராவிட இயக்க அறிஞர்கள் என இது மேலும் நீளலாம். தேடலுள்ளவர்கள் கண்டடைவார்கள் நிறைவாக ஆய்வு - மீளாய்வு - மேலாய்வு என தொடர் செயன்மைகளை நிகழ்த்த வேண்டியிருக்கிறது.

கால்டுவெல், பல பரிமாணங்களில் பேசப்பட்டிருக்க வேண்டியவர் அது நாம் அவருக்குச் செய்யும் சிறப்பு என்பதை விட நம்மை நாமே மறுசீரமைப்பு செய்துகொள்ளும் சமூகஅக்கறையின் பாற்பட்ட முன்னெடுப்பாய் இருந்திருக்க வேண்டும்.

சீரும் சிறப்பும் செழிப்பும் மிக்க ஓர் இல்லம் சூதுக்கு இறையாகி பார்வையும் ஊடுறவ முடியாத மையிருட்டில் தன் குடிப் பெருமையைத் தொலைத்து விட்டு மௌனப்பட்டுக் கிடந்தது. எங்கிருந்தோ வந்து பார்வையளராய் வீட்டுக்குள் நுழைந்த பயணி ஒருவர் கருணையும் காதலும் மிக்கவராய் நடுவீட்டில் ஒரு மெழுகுவர்த்தியைப் பொருத்திவைத்தார். மையிருட்டில் அதுவே விடியற்காகவும் பின்வருநாளில் ஒளித்திரளாகவும் திகழ்வதற்கென பொல்லென்று பூத்த அதன் வெளிச்சத்தில் இல்லம் பெருமையை மீட்டெடுத்துக் கொண்டதோடு, அதுவரை வெளிச்சத்துக்கு வராத, தன் பழஞ்சொத்துக்களையெல்லாம் தேடி எடுத்துப் புத்தெழுச்சி பெற்றது.

இச்சித்திரத்தில் கால்டுவெல் தான் அந்தப் பயணி. அவரது நூல்தான் அவர் பொருத்திவைத்த ஒளிச்சித்திரம் இன்றும் எவ்விதச் சேதாரமும் இல்லாமல் என் மனதில் புத்தம்புதிதாய்ச் சிரித்துக் கொண்டிருக்கிறது எனும் கவிதாசரணின் வார்த்தைகளை வழிமொழிந்து கட்டுரையை நிறைவு செய்யலாம் எனத் தோன்றுகிறது.

ஃ ஃ ஃ

26. கால்டுவெல்லும் இடையன்குடியும்: ஒரு கிராமத்தின் உருவாக்கம்

முனைவர் ஞா. ஸ்டீபன்
தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

தமிழ் மண்ணில் சமயப் பணியாற்ற வந்த ஐரோப்பியத் திருத்தொண்டர்களுள் பெரும்பான்மையோர் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகள் செய்துள்ளனர். அவர்களுள் என்றும் நினைக்கத்தக்கவராக இருப்பவர்களுள் இராபர்ட் கால்டுவெல்லும் ஒருவராவார். இராபர்ட் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் தமிழுக்கும் தமிழக அரசியலுக்கும் செய்த பங்களிப்புகளின் காரணமாக அந்த நூல் இன்றளவும் பேசப்படுகின்றது. இந்த நூல் பேசப்பட்ட அளவிற்கு அவரது பிற படைப்புகள் பேசப்படவில்லை. அது போன்றே அவரது சமூகச் சமயப் பணிகளும் பேசப்படவில்லை. தமிழ்ச் சமூகச் சூழலில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் மதிப்பிடற்கரிய பங்களிப்பாக அமைந்ததால் கால்டுவெல்லின் ஏனையப் பணிகள் துலங்கவில்லை. அவ்வாறு துலங்காமல் போன ஓர் அரிய பணி இடையன்குடியின் உருவாக்கமும் அங்கு அவர் எழுப்பிய தேவாலயமுமாகும்.

அயர்லாந்து நாட்டைச் சார்ந்த இராபர்ட் கால்டுவெல் முதலில் எஸ்.எம்.எஸ். நிறுவனத்தின் திருத்தொண்டராகச் சென்னைக்கு 1838 இல் அனுப்பப்பட்டார். மூன்று ஆண்டுக் காலப் பணிக்குப்பின் எஸ்.எம்.எஸ்சை விட்டு விலகி எஸ்.பி.ஜி நிறுவனத்தில் கால்டுவெல் இணைந்தார். அதன்பின் 1841 இல் எஸ்.பி.ஜி யின் அதிகாரம் பெற்ற திருத்தொண்டராக இடையன்குடிக்கு வந்தார். கால்டுவெல் இடையன்குடிக்கு வருவதற்கு முன்பே அப்பகுதியில் கெரிக், சத்தியநாதன் ஆகியவர்கள் பணியாற்றிக் கிறித்தவத்தைப் பின்பற்றும்

ஒரு சிறு கூட்டம் உருவானது. இவர்களின் தொழுகைக்காக ஒரு சிறிய ஆலயமும் கட்டப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் கிறித்தவர்களை முறையாக வழிநடத்தும் முழுநேர திருத்தொண்டர்கள் இன்மையால் அவர்கள் கிறித்தவத்தில் முழுமையாக நிலைத்திருக்கவில்லை. மேலும் இவர்கள் வறுமையிலும் ஏழ்மையிலும் காணப்பட்டனர். இவர்கள் இடையன்குடியைச் சுற்றியுள்ள இருபது குக்கிராமங்களைச் சார்ந்தவர்களாக இருந்தனர். கால்டுவெல் திருப்பணியைத் தொடங்கும் போது இடையன்குடிக் கிறித்தவர்கள் சிதறடிக்கப்பட்டவர்களாகவும் பெரும்பான்மையினர் கிறித்தவத்தைவிட்டு வெளியேறியவர்களாகவும் காணப்பட்டனர். மேலும் அங்கிருந்த சிறிய ஆலயம் புயலால் பெரிதும் சிதைவுற்றுக்கிடந்தது.

இடையன்குடியில் இடையர்கள் மிகுதியாக வாழ்ந்ததால் அப்பெயர் பெற்றதாக வாய்மொழித் தகவல்கள் குறிப்பிடுகின்றன. வறட்சி, பஞ்சம் ஆகியவற்றின் காரணமாக இடையர்கள் குடிபெயர்ந்ததால் நாடார்கள் இப்பகுதியில் குடியமர்ந்தனர். இடையன்குடி செம்மான் தேரி ஆகும். இதன் சுற்றுவட்டாரங்களில் பனைமரங்கள் மிகுதி. எனவே நாடார்கள் இடையன்குடி வறட்சியான பகுதி என அறிந்தும் அப்பகுதியில் குடியமர்ந்தனர். கால்டுவெல் அங்கு வரும் பொழுது அது ஒரு கிராமம் என்று அழைக்கும் தகுதியைப் பெற்றிருக்கவில்லை. 'பிளந்த கள்ளியும் விரிந்த முள்ளியும் நிறைந்த தேரியில் கற்பகத் தருவெனத் தழைத்துச் செழித்து வளரும் பனைகளே அந்நிலத்தில் வாழும் மாந்தர்க்கும் பழுதற்ற செல்வமாகும். காலையும் மாலையும் பனையேறிப் பதநீர் வடித்துப் பண்புறக் காய்ச்சி, கட்டி செய்து விற்றுக் காலங்கழிக்கும் ஏழை மக்களே அவ்வூர்ப் பழங்குடிகளாவர். கால்டுவெல் ஐயர் அவ்வூரில் வந்த பொழுது கூரை வேய்ந்த குடிசைகள் தாறுமாறாகக் கட்டப்பட்டிருந்தன. மனைகளைச் சூழ்ந்து முள் நிறைந்த கள்ளியே வேலியாக அமைந்தது. நேரிய தெருக்கள் எங்கும் காணப்படவில்லை. ஊர் நடுவேயமைந்த அகன்ற வெளியிடத்தில் ஓங்கி உயர்ந்த புளி மரங்கள் ஆங்காங்கு நின்று நிழல் விரிந்தன. அவ்வெளியிடத்தில் ஒரு மூலையில் வழிபாட்டுக்குரிய கிருஸ்துவக் கோயிலும் வேதியர்க்குரிய சிறு வீடும் அமைந்திருந்தன (ரா.பி.சேதுபிள்ளை 2013:735).

கால்டுவெல்லுக்கு முன்னர் அவ்வூரில் பணியாற்றிய திருப்பணியாளர்கள் சிறிய ஆலயம் மற்றும் திருப்பணியாளர் இல்லம் ஒன்றும் அமைத்திருந்தனர். இதற்காக அவர்கள் சொற்ப அளவில் நிலமும் சொந்தமாகப் பெற்றிருந்தனர். கால்டுவெல்லுக்கு இடையன்குடி ஊரின் அமைப்பு ஒழுங்கற்றதாகவும் திட்டமிடப்பெற்ற

குடியிருப்பாகவும் தோன்றவில்லை. கால்டுவெல்லின் சமகாலத்திலும் அவருக்கு முன்னரும் திருநெல்வேலி மாவட்டத்தில் தொண்டாற்றிய ஐரோப்பியத் திருத்தொண்டர்கள் உருவாக்கிய பல கிராமங்கள் அவர் மனக்கண்முன் தோன்றின. அக்கிராமங்கள் நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் திட்டமிடப்பெற்றிருந்தன. மெஞ்ஞானபுரம், சாயர்புரம், சமாதானபுரம், நாசரேத், அடைக்கலப்பட்டணம் ஆகிய ஊர்கள் அவருக்கு முன் மாதிரிகளாக அமைந்தன. இவ்வூர்களை உருவாக்கிய ரேணியஸ், ஜி.யு.போப், மர்காசியஸ் போன்றவர்கள் அவருக்கு முன்மாதிரிகளாக அமைந்தனர். கிறித்தவத்தைத் தழுவியவர்களுக்கு அவர்களது சாதியினராலும் பிறசாதியினராலும் கொடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் இடையூறுகளுமே இத்தகைய புதிய கிறித்தவக் கிராமங்களின் உருவாக்கத்திற்குக் காரணமாக அமைந்தன. ஆனால் இடையன்குடியில் கால்டுவெல்லுக்கு அப்படியொரு சூழல் இருந்ததாகத் தெரியவில்லை. 'எஸ்.பி.சி.கே. சங்கத்தாருடன் மிகத் தோழமை கொண்டிருந்த கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தரான ஒரு ஆங்கிலோ இந்தியச் சபையினரான சாயர் என்பவருடைய பெயர் அவருக்கு நன்றியறிதலான, ஞாபகர்த்தமாக இடப்பட்டது. துன்புறுத்தப்பட்ட கிறித்தவர்கட்காக தாமிரபரணி ஆற்றின் வடபுறத்தில் 150 ஏக்கர் நிலம் வாங்கி அந்த அமைதியான சமாதானமான இடத்தில் அவர்களைக் குடியேற்றினர். 1814இல் அந்தக் கிராமமானது சாயர்புரம் என்ற பெயர் பெற்றது (ஹென்ரி பாக்கியநாதன், பக்.54). இவ்வாறு புதிதாக நிலத்தை வாங்கி அங்குக் குடியிருப்புக்களை அமைத்து ஒரு கிராமத்தை உருவாக்கும் செயலைப் பலத் திருப்பணியாளர்கள் செய்துள்ளனர்.

இடையன்குடி கால்டுவெல்லுக்குச் சவாலாக இருந்தது. அங்குக் குடிசைகள், சிறிய ஆலயம் போன்றவை ஏற்கனவே இருந்தன. இந்த அமைப்பை ஒழுங்குபடுத்துவதே கால்டுவெல்லின் நோக்கம். கால்டுவெல் குருத்துவப் பயிற்சிக்கு முன்னர் டப்ளினில் ஓவியப் படிப்புப் படித்தார். எனவே அவருக்கு அழகுணர்ச்சி இயல்பாகவே அமைந்திருந்தது. இதனால் அழகான இடையன்குடி குறித்த ஒரு ஓவியம் அவர் மனத்தில் இருந்தது. இந்தச் செயல்திட்டத்தை நிறைவேற்ற கடுமையாகப் போராடினார் அவர். 'திருக்கோயிலைச் சுற்றியிருந்த நிலங்களை விலை கொடுத்து வாங்கினார். அந்நிலங்களில் சுற்றியிருந்த நிலங்களை விலை கொடுத்து வாங்கினார். அந்நிலங்களில் வீடு கட்டுங் தொன்று தொட்டுக் குடியேற்றுரிமையின் பெயரால் வீடு கட்டுங் காலங்களில் கடமை பெற்று வந்த சில நாடார்களின் உரிமைகளைத் தக்க விலை கொடுத்து விலக்கினார். இங்ஙனம் வில்லங்கத்தைத் தீர்த்தொழித்த பின்பு அந்நிலங்களைத் திருத்தத் தொடங்கினார். எம்மருங்கும் பரந்து கிடந்த கள்ளியையும் முள்ளியையும் களைந்தெறிந்து

தெருக்களைத் திருத்தமுற வகுத்து சந்திகளில் கிணறுகளை அமைத்து நிழல் விரிக்கும் மரங்களை வீதியின் இரு புறமும் நட்டு செவ்விய முறையில் சிறு வீடுகள் கட்டுவித்தார். எண்ணும் எழுத்தும் அறியாதிருந்த அவ்வூர்ச் சிறுவர் சிறுமியர்க்கு எழுதவும் படிக்கவும் கற்பிக்கக் கருதிப் பாடசாலைகள் நிறுவினார் (ரா.பி.சேதுபிள்ளை 2013:734).

கால்டுவெல் அவர்கள் இடையன்குடி கிராமத்தை வடிவமைக்க ஒரு வரைபடம் தயாரித்ததாகச் சொல்லப்படுகின்றது. இந்த வரைபடத்தைத் தயாரிப்பதற்காக மரம் ஒன்றின் மீது ஏறி அதன் பரப்பையும் கிடப்பையும் அறிந்தார் என செவிவழிச் செய்திகள் உள்ளன (D.S. George Muller 1996:3). ஆர்.எஸ். ஜேக்கப் அவர்கள் எழுதிய பனையண்ணன் நாவலில் கால்டுவெல் பனைமரத்தின் மீது ஏறி இடக்கிடப்பை அறிந்தார் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது (ஆர். எஸ்.ஜேக்கப் 2009:95). எவ்வாறாயினும் அவர் இடையன்குடி கிராம உருவாக்கத்திற்கு வரைபடம் ஒன்று தயாரித்துச் செயல்படுத்தினார் என அறியமுடிகின்றது. நிலம் வாங்குவதற்கும் நிலத்தைச் சீர் செய்வதற்கும் தனது நண்பர்களிடமிருந்து நன்கொடைகள் பெற்றார். இவ்வேலைகளை அக்கிராமத்து மக்களுக்குச் சம்பளம் கொடுத்து செய்வித்தார். அவர்கள் பெற்ற சம்பளத்தைச் சேமிக்கச் செய்து அவர்களுக்கு வீடுகள் அமைக்கச் செய்தார். மாதிரிக்காக சில வீடுகளைக் கட்டி அதே மாதிரி வீடுகளைக் கட்டுவித்தார். 1890 இல் கடுமையானப் பஞ்சம் நிலவியது. அப்போது இடையன்குடியில் 61 வீடுகள் தீக்கிரையாயின. மனத்துயருற்ற கால்டுவெல் உடனடியாக நிவாரண உதவிகள் செய்தார் (D.S. George Muller 1996:11). இச்செய்தி இடையன்டிகுயில்கட்டப்பட்ட வீடுகள்பனையோலையால் வேணப்பெற்றவையாக இருக்கலாம் என்பதை உணர்த்துகின்றது.

கால்டுவெல் பணியாற்றிய காலம் எஸ்.பி.ஜி. மற்றும் சி.எம். எஸ். ஆகிய நற்செய்தி நிறுவனங்களுக்கிடையில் இருந்த வேற்றுமைகள் ஒரளவிற்குத் தணிந்திருந்த காலமாகும். இரு நற்செய்தி நிறுவனங்களும் பரஸ்பரம் நல்லிணக்கத்துடன் செயல்பட்ட காலம். இந்தியாவில் காலணிய ஆட்சி நிலைபெற்று நின்றது. சென்னை மாகாணமும் உருவாக்கப்பட்டிருந்தது. சீகன் பால்கு தரங்கம்பாடியில் உருவாக்கிய அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவான கல்வி நிலையங்கள் என்னும் கருத்தாக்கம் சென்னை மாகாணம் முழுவதும் பரவியிருந்தது. காலணிய அரசும் பொதுக் கல்விக்காக நிதி ஒதுக்கீடு செய்தது. 'இந்தியாவில் இலக்கிய மறுமலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இந்தியக்குடிகளிடையே கல்வியறிவை ஊக்குவிக்கவும் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பகுதிகளில்

வாழும் மக்களிடையே விஞ்ஞான அறிவைப் புகுத்தவும் அரசு வருமானத்தில் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் 1813 சாசன சட்டத்தின் 43ஆவது பிரிவு தலைமை ஆளுநருக்கு அதிகாரம் அளித்தது (சு.சதாசிவம் மேற்கோள் திராவிடப்பித்தன் 2009:36). இந்தச் சூழல் கால்டுவெல்லுக்கு இடையன்குடியில் கல்விக்கூடம் அமைப்பதற்கு வசதியாக அமைந்தது. அவர் 9 பள்ளிக்கூடங்கள் நிறுவியதாக குறிப்பகள் உள்ளன (D.S. George Muller 1996:3). பள்ளியில்படிக்கும் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்தார். பெண்கல்விக்கு இடையன்குடியில் கடும் எதிர்ப்பு இருந்தது. ஆனால் கால்டுவெல் ஊர்ப்பெரியவர்களை வாரம் ஒரு முறை சந்தித்து பெண்கல்வியின் இன்றியமையாமையை எடுத்துரைத்து அவர்களைத் தெளிவடையச் செய்தார். அவரது மனைவி எலிசாவின் உதவியுடன் பெண்களுக்குத் தையல் பயிற்சி மற்றும் கல்வி கிடைக்க வாய்ப்பளித்தார். இடையன்குடியில் 1844இல் பெண்களுக்காக உறைவிடப் பள்ளி ஒன்றைக் கால்டுவெல்லின் மனைவி எலிசா தொடங்கினார;. பொது மக்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு ஆகியவை கிடைக்க வழிவகை செய்தார். சென்னை மாகாண கவர்னர் நேப்பியாரிடம் பேசி 1870 இல் இடையன்குடியில் மருத்துவமனை ஒன்று தொடங்க உரிய ஏற்பாடுகள் செய்தார்.

இடையன்குடி நாடார்கள் மூடநம்பிக்கைகள் உடையவர்கள் என்றும் நாகரிகமற்றவர்கள் என்றும் கால்டுவெல் உணர்ந்தார். எனவே மூடநம்பிக்கைகளை அகற்றவும் பண்பட்ட வாழ்வியல் முறையைக் கற்றுக் கொடுக்கவும் தொடர்ந்து போதனை செய்து வந்தார். இடையன்குடியைப் புதியதொரு ஒழுங்கமைப்பில் அகலமான தெருக்களோடு வடிவமைத்த கால்டுவெல்லுக்கு அவ்வூரில் பிராமாண்டமான திரித்துவ ஆலயம் ஒன்று எழுப்ப விரும்பினார். இது தொடர்பாக வரைபடம் பெறுவதற்காக இங்கிலாந்திலிருந்த ஆலய நிர்மாண சங்கத்தாருக்கு வேண்டுதல் விடுத்தார். அவர்கள் திரித்துவ ஆலயத்திற்கான வரைபடம் ஒன்றை அனுப்பி வைத்தனர். வரைபடம் பெற்ற மகிழ்ச்சியில் கால்டுவெல் ஆலயம் எழுப்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி திரட்டத் தொடங்கினார். ஆலயத்திற்கான அடிக்கல்லை 1847 இல் நாட்டினார். கால்டுவெல் திட்டமிட்டபடி சில ஆண்டுகளுக்குள் ஆலயத்தைக் கட்ட இயலவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்ட பஞ்சம், கொள்ளை நோய் போன்றவற்றின் காரணமாகவும் தமிழ் ஆய்வுகளின் காரணமாகவும் போதிய நிதி கிட்டாமையாலும் ஆலயத்தைக் கட்டிமுடிக்க 33 ஆண்டுகள் ஆகின. அவர் திருநெல்வேலியின் உதவி

பிஷப்பாகப் பொறுப்பேற்றப்பின் 1880 இல் அவர்கட்டிய திரித்துவ ஆலயம் திருநிலைப்படுத்தப்பட்டது. இந்த ஆலயம் கால்டுவெல்லின் பெயரை நினைக்கச் செய்யும் மற்றொரு நினைவுச் சின்னமாகும். ஆலயத்தின் அமைப்பு, கலைநுட்பங்கள் போன்றவை கலைத்திறன் மிக்கவை.

கால்டுவெல்லின் 33 ஆண்டுக்கால உழைப்பில் உருவாகிய திரித்துவ ஆலயமும் இடையன்குடி கிராமமும் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன. 'அக்கோவிலின் ஒவ்வோரங்கமும் கண்களைக் கவரும் அழகு வாய்ந்து விளங்குகின்றது. ஆயினும் சாலச் சிறந்த அக்கோவில் சாரளங்களைக் கண்டோர் அவற்றின் அழகையும் அமைப்பையும் எந்நாளும் மறவார் என்பது திண்ணம். திருப்பணி நடைபெறும் பொழுது கால்டுவெல் ஐயர் களியினால் சாளரங்கள் செய்து அவற்றில் கோலமார் கோடுகள் வரைந்து காட்டினார் என்றும் அவற்றை மாதிரியாகக் கொண்டு தச்சரும் கொல்லரும் சாளர வேலை செய்து முடித்தாரென்றும் அவ்வூர் முதியோர் கூறுகின்றார்கள். இளமையில் கவின்கலை கல்லூரியில் பழகி ஓவியக் கலையில் பரிசு பெற்ற கால்டுவெல் ஐயரின் கைவண்ணம் இடையன்குடிக் கோவில் சாளரங்களில் இயங்கக் காணலாம் (ரா.பி.சேதுபிள்ளை 2013:735-736). கால்டுவெல்லுக்கு இருந்த ஓவியக் கலை அறிவை ஆலயத்தை வடிவமைப்பதில் நுட்பமாகப் பயன்படுத்தியுள்ளார். இதற்குப் பலர் உதவியுள்ளனர். 'அந்த ஆலயத்தின் இசை ஒலிக்கும் மணிகள் கால்டுவெல் அத்தியட்சரின் குடும்பத்தாரின் நன்கொடையாகும். கிராதி அறையின் சித்திரமயமான ஜன்னல் அக்காலத்தில் சென்னை ராஜ்ய கவர்னராகயிருந்த நேப்பியர் பிரபுவின் நன்கொடையாகும்' (ஹென்றி பாக்கியநாதன், பக்.57). இவ்வாறாக உருவாக்கப்பட்ட இடையன்குடி தூய திரித்துவ ஆலயம் கட்டிடகலை நுட்பங்களிலும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்தது.

இடையன்குடி ஆலயம் கோதிக் கட்டிடகலை மரபைச் (Gothic Arehitechture) சார்ந்து கட்டப்பட்டது. ஜெர்மனியில் கி.பி 11ஆம் நூற்றாண்டில் தோன்றிய இக்கலைமரபு 13ஆம் நூற்றாண்டில் நன்கு வளர்ச்சி பெற்றிருந்தது. கதீட்ரல் ஆலயங்கள், அரண்மனைகள், ஆடம்பர பங்களாக்கள் போன்றவை இக்கலைமரபில் கட்டப்பட்டன. இருப்பினும் கோதிக் கலைமரபு கதீட்ரல் தேவாலயங்களை அடிப்படையாகக் கொண்டே வளர்ந்தன. பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் பரவிய இக்கலை மரபு 13ஆம் நூற்றாண்டிற்குப்பின் புதிய கோதிக் கலைமரபால் உள்வாங்கப்பட்டது. கோதிக் கலை மரபில் கூர்மையான ஆர்ச், மெல்லிய உயரமான

தூண்கள், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகள், சித்திர வேலைப்பாடுகளுடன் அமைந்த ஜன்னல்கள் ஆகியவை அடிப்படையான பண்புகள் ஆகும். இப்பண்புகளை இடையன்குடி திருத்துவ ஆலயத்தில் காணலாம். கூர்மையான ஆர்ச், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகளைக் கொண்ட உயரமான தூண்கள், அத்தூண்களில் நாற்புறமாக அமைந்த ஆர்ச்சுகள் கூரையைத் தாங்குவதாக இடையன்குடி ஆலயம் அமைந்துள்ளது. சன்னல்களும் கதவுகளும் கூர்மையான ஆர்ச் வடிவம் பெற்றவை. கால்டுவெல் இடையன்குடியில் செய்த புரட்சி ஆலயத்தின் நுழைவாயிலை நடுவில் அமைக்காமல் ஓரத்தில் அமைத்ததுதான். பொதுவாகக் கதீட்ரல் ஆலயங்களில் இவ்வாறு அமைவதில்லை. நுழைவாயில் நடுவில் அமைவது தான் மரபு. இம்மரபைக் கால்டுவெல் பின்பற்றவில்லை. இதன் காரணம் அறியப்படவில்லை. ஆலயத்தின் தரை மற்றும் சுவர் கருங்கற்களால் அமைக்கப்பெற்றுள்ளது. வெளிப்புறக் கட்டிட அமைப்பு பிரஞ்சுக் கட்டிடக்கலை சார்ந்தது. குறிப்பாக வெளிப்புறச் சுவரின் தூண்கள் அமையுமிடங்களிலும் மூலைகளிலும் பளுதாங்கிச் சாய்வுச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது பிரஞ்சு மரபு ஆகும்.

ஆலயத்தின் ஆல்டரின் மேற்கூரை ஆல்டரைச் சுற்றியுள்ள சன்னல்கள் அனைத்தும் கோதிக் கலை மரபைப் பின்பற்றியக் கதீட்ரல் ஆலய அமைப்பாகும். ஆனால் சித்திரங்கள் கால்டுவெல்லின் கைவண்ணம் எனச் சொல்லப்படுகின்றது. கோயிலின் உட்புறத்தில் கூர்மையான 5 ஆர்ச்சுகள் உள்ளன. இந்த ஆர்ச்சுகளின் மீது மரத்தால் கூரை வேயப்பட்டுள்ளது. கூரை செங்குத்துச் சாய்வாக அமைந்துள்ளது. பனிப்பிரதேசங்களில் அமையும் கூரை வடிவம் இதுவாகும். கோதிக் கலைமரபைப் பின்பற்றி இடையன்குடி ஆலயம் அமைக்கப்பெற்றிருந்தாலும் கோதிக் மரபின் வளமை இடையன்குடியில் காணப்படவில்லை. இதற்குப் போதுமான நிதி கிடைத்திருக்காது என்பதே காரணமாகலாம்.

சென்னை மாகாண கவர்னர் நேப்பியார் இடையன்குடிக்குக் கால்டுவெல்லின் பணிகளைப் பார்வையிட வந்த போது அவருக்கு 1000 பனைமரங்கள் பயிரிடத் தேவையான நன்கொடைகள் வழங்கினார். இங்கிலாந்திலிருந்த போதகர் ஜே.எம். வென்டன் என்பவர் வழங்கிய 100 பவுண்டு நன்கொடையைக் கொண்டு அரசு நன்கொடையாக வழங்கிய மலைச்சரிவில் கால்டுவெல் எஸ்டேட் ஒன்றை உருவாக்கினார் (D.S. George Muller 1996:9). கால்டுவெல்லுக்குச் சுற்றுச் சூழல் குறித்த உணர்வு இருந்தது என்பதையே இக்குறிப்புகள் உணர்த்துகின்றன. இடையன்குடி ஊரில்

ஏராளமான மரங்களை நட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தின் வறட்சி குறிப்பாக தேரிக்காட்டின் வெப்பம், அவ்வவ்போது ஏற்பட்ட பஞ்சம் ஆகியவற்றை நேரடியாக உணர்ந்த கால்டுவெல் மழைவளம் பெற மரம் வளர்க்க வேண்டும் எனப் போதித்தார். அதைத் தானும் செய்து காட்டினார். வாழிடம் என்பது வெறும் நிலம் மட்டுமல்ல என்பதில் கால்டுவெல் உறுதியாக இருந்தார்.

ஒரு கிராமத்தை உருவாக்குவது என்பது எளிதான ஒன்று அல்ல. நிலத்தைப் பிரித்து தெருக்கள், வீட்டு மனைகள், கோயிலுக்கான இடம் என பருப்பொருளாகக் காண்பது எளிது. அதுமட்டுமே ஒரு கிராமாகிவிடாது. அங்கு மக்கள் குடியமர வேண்டும். வீடுகள் அமையவேண்டும். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட வேண்டும். ஆலயம், பள்ளிகள், மருத்துவமனை, கிணறுகள், வேலைவாய்ப்புத் திட்டங்கள் போன்றவை அனைத்தும் ஒருங்கே அமைந்தால்தான் அது வாழிடக் கிராமம் ஆகும். இதனை இடையன் குடியில் கால்டுவெல் வெற்றிகரமாகச் செய்துக் காட்டியுள்ளார். இடையன்குடி ஒரு மாதிரி கிராமமாக அமைந்துள்ளது. அண்மையில் இந்திய அரசின் சிறந்த திட்டமிடப்பட்ட கிராமம் என்னும் விருதை இக்கிராமம் பெற்றுள்ளது என்பது கால்டுவெல்லின் கிராம உருவாக்கத்திற்குக் கிடைத்த அங்கீகாரம் என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. ஹென்றி பாக்கியநாதன், ஆ.இ.: நெல்லைத் திருச்சபை: இருநூறாண்டு சரித்திரம் (1780-1980), திருநெல்வேலி.
2. சண்முகசுந்தரம் (ப.ஆ) 2013 ரா.பி.சேதுரியம், சென்னை: காவ்யா
3. ரம்பாலாபோஸ்கோ,1980: கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள், தூத்துக்குடி.: கிறித்தவத் தமிழ் இலக்கியக் கழகம்.
4. ஜேக்கப்,ஆர்.எஸ், 2009: பனையண்ணன், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
5. திராவிடப்பித்தன் 2009: திராவிட நாட்டுக் கல்வி வரலாறு, சென்னை: கயல்கவின்.
6. *George Muller, 1996: Bishop Robert Caldwell, Tirunelveli: Bishop Stephen Neil Study & Research Centre.*

❦ ❦ ❦

27. கால்டுவெல்லின் சமூகவரலாற்றுப் பார்வை

முனைவர் பு. ஜார்ஜ்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

சமத்துவ சமூகமாக திராவிட சமூகத்தை உருவாக்கிவிட வேண்டுமென்று கனவு கண்டார் கால்டுவெல். சமத்துவமாக நடத்தப்படாதிருந்த மிகவும் தாழ்நிலையிலிருந்த ஓர் பிரிவினரான சாணாரை எப்படியும் உயர்த்திவிட வேண்டுமென்று இடையன்குடியில் தமது சமூகப்பணி மையத்தை அமைத்துக் கொண்டார். சுமார் அரை நூற்றாண்டுக் காலம் அவர்களோடு வாழ்ந்தும் வாழச் சொல்லிக் கொடுத்தும் அவர்களை உயர்த்தினார். திராவிடராக சாணார் எண்ணப்படாதிருந்த அந்தக் காலத்தில் அவர்களும் திராவிடர்கள்தாம் என்றும் பிற திராவிடரைப் போலவே இந்துக்கள்தாம் என்றும் ஆராய்ந்து நிறுவினார். அவருடனிருந்து வாழ்ந்தவர்களும் அவரால் வளர்க்கப்பட்டவர்களும் பின்னர் சுயநலவாதிகளாகமாறிப்போனார்கள். அனைத்துச் சாதியினரும் கலந்துண்ணல்; கலப்பு மணம் செய்தல்; கூட்டு வழிபாடு செய்தல் ஆகியன கால்டுவெல்லால் முன்னெடுக்கப்பட்டன. இவை கிறித்துவத்தின் மையக் கருத்தான சமத்துவ நோக்கிற்கு உகந்தன. ஆனால், கால்டுவெல்லால் வளர்க்கப்பட்டவர்கள் இவற்றிற்கு உடன்படவில்லை. கால்டுவெல்லிற்கு எதிராக 'இந்து கிறித்துவ சபை' என்ற ஒன்று, சட்டாம்பிள்ளை என்ற அருமைநாயகத்தின் தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. ஒட்டுமொத்த சகோதரத்துவமான புதிய ஏற்பாட்டிற்கு உடன்படாத, இந்தப் பழைய ஏற்பாட்டுப் போக்கு, சமூக சகோதரத்துவத்திலிருந்து அவர்கள் விலகிச் செல்வதையும் சாதிய சகோதரத்துவத்தை முன்னெடுப்பதையும் அடையாளம் காட்டியது. கிறித்துவத்தின் புதிய ஏற்பாட்டு வீரியத்தை பழைய ஏற்பாட்டில் நீர்த்துப்போகச் செய்யும் இந்தப் போக்கிற்கு கால்டுவெல் எதிர்ப்புத் தெரிவித்தார். உண்மையில் சட்டாம்பிள்ளையோ,

சாமுவேல் சற்குணரோ, ஒய்.ஞானமுத்து நாடாரோ பழைமைவாதிகளாக சாதிய அடையாளப்பட்டதை கால்டுவெல்லால் அங்கீகரிக்க முடியவில்லை. 'அப்படி அதனை அங்கீகரித்தால் நான் சாதியத்தை நேரடியாக ஆதரித்தவனாகிவிடுவேன்' என்று எச்சரிக்கையுணர்வோடு கால்டுவெல் இருந்திருக்கிறார்.[1] 'சாதியம் என்பது சமூகத்திற்கு மட்டும் கேடானதல்ல சமயத்திற்கும் கேடானது என்பதை அவர் நன்கறிந்திருந்தார்' என்று இவரைப் பற்றி இவருடன் நெருங்கிப் பழகிப் பணியாற்றிய ஜே.ஏ.ஷராக் குறிப்பிட்டுள்ளார்.[2] 'இந்து கிறித்துவ சபை என்பது, சாணார் கிறித்துவரிடையே இருந்த உறுதியான சாதிய உணர்வை,அந்த சாதியைச் சார்ந்த சில சாதியத் தலைவர்கள் பயன்படுத்திக்கொண்டதன் கீழ்த்தரமான விளைவே தவிர வேறொன்றுமில்லை' என கால்டுவெல் குறிப்பிட்டிருப்பதை வின்சென்ட் குமாரதாஸ் எடுத்துக்காட்டுகிறார்.[3] கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு சாதியானது, சமூக விரோதமானதாய் அதன் இயல்பில் தோற்றத்தையும் வரலாற்றையும் கொண்டுள்ளது. எனவே அது கிறித்துவத்திற்கு எதிரானது என்று கால்டுவெல் தெளிவான பார்வை கொண்டிருந்தார்[4] என்பதே இதற்குக் காரணம். 1849இல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட துண்டறிக்கையைப் படிக்கக்கூடிய ஒருவர்கூட இல்லாதிருந்த சாணார் சமூகச் சூழலைப் பதிவு செய்கிறார் கால்டுவெல். ஆனால் 1883இல் கால்டுவெல்லுக்கு எதிராக எழுதும் அளவுக்கு அவர்கள் எழுத்தறிவு பெற்றதற்குக் காரணமே கால்டுவெல்தான் என்பது இதனால் பெறப்படுகிறது. சமத்துவம் பேசிய, நிலைநாட்டிய அவரை 'கால்டுவெல்லுக்குச் செருப்படி' என்று எழுதித் தீர்த்தது அவரால் பயன்கொண்ட அந்தச் சமூகம். சென்னைக் கிறித்துவக் கல்லூரி நடத்திய இக்கருத்தரங்கிலும் மேற்கண்டதன் தொடர்ச்சியாக 'கால்டுவெல்லுக்கு இறையியல் தெரியாது' என்று ஒரு குரல் ஓங்கி ஒலித்ததைச் செவிமடுக்க வேண்டியிருந்தது. 'இல்லாதது எதையும்நான்திரித்து எழுதிவிடவில்லை; உலகத்தார்க்கு உணர்த்தவே உள்ள நிலைமையை அப்படியே எடுத்துரைத்தேன்' என்று அப்பழுக்கற்ற நிலையில் கால்டுவெல், சாணார் பற்றிய தமது நிலைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.[5]

கால்டுவெல் இன்றிருந்திருந்தால், சாதி திராவிடர்களாலும் இதேபோல்தான் நடத்தப்பட்டிருப்பார் என்றே தோன்றுகிறது. பறையர் குறித்து மிகஆழ்ந்து, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் அவர் சொன்னவைகளும் அவற்றிற்கு ஆதரவாக அவர் எடுத்துக்காட்டியவைகளும் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் நீக்கப்பட்டு விட்டமை இதற்குத் தக்க ஆதாரமாகும். கால்டுவெல்லின் உழைப்பைத் தங்களுக்கு ஆதரவாக மட்டுமே பயன்படுத்திக்கொள்ளும்

சுயநலத்தின் வெளிப்பாடு இது. ஆனால் கால்டுவெல்லோ, சாதாரண மக்களுக்கு எதிரான அதிகாரம் எங்கெங்கு தலையெடுக்கிறதோ அங்கெல்லாம் தம் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளார். எனவேதான், ஆங்கிலேய காலனிய ஆதிக்கவாதிகளுக்கு அவர் ஓர் காலனிய எதிர்ப்பாளராகவும் இந்திய ஆதரவாளராகவும் அறியப்பட்டார்; இந்திய அதிகாரமாகச் செயல்பட்ட சமஸ்கிருதவாதிகளுக்கு எதிர்ப்பாளராகவும் திராவிட ஆதரவாளராகவும் தென்பட்டார்; திராவிட அதிகாரமாய்ச் செயல்பட்ட சாதி திராவிடர்களின் எதிரியாகவும், அந்த எதிரிகளால் தாழ்த்தப்பட்டுக் கிடந்த திராவிடர் என்றே ஒப்புக்கொள்ளப்படாதவர்களின் ஆதரவாளராகவும் அடையாளப்பட்டார். படிப்படியாகப் புலப்படும் எந்தவிதமான மானுடவிரோத அதிகார நடவடிக்கைகளுக்கும் எதிரானவராகத் தம்மை இறுதிவரை அடையாளப்படுத்திக் கொண்டவர் கால்டுவெல். இன்றைய அதிகாரங்கள் அவரின் முழுமையை மூடி மறைக்கப் பார்க்கலாம். ஆனால், காலம் இவையனைத்தையும் கிழித்தெறிந்து கால்டுவெல்லை அப்பழுக்கற்ற சமூக சமத்துவப் போராளி என உலகிற்கு உரக்கப் பறை சாற்றும்.

மானுட விரோத அதிகார நடவடிக்கைக்கு எதிரான அவருடைய செயல்பாட்டை அவரது திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூலில் காணலாம். தென்னிந்தியப் பறையர் திராவிடரா? எனும் தலைப்பிலான கட்டுரை ஒன்று அதில் உள்ளது. அதில் பறையர் குறித்த ஆழமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இடையன்குடிக்குச் செல்லும்முன் சென்னையில் இருந்த மூன்றரையாண்டுக் காலத்தில் பறையர்களோடு நெருங்கிப் பழகியிருந்தார் கால்டுவெல். பறையர்கள் திராவிடர்கள் அல்லர் என்றும் அவர்கள் வேற்றினத்தவர் என்றும் கருதி அவர்கள் மீது பகைமை பாராட்டப்பட்ட காலத்தில், கால்டுவெல் அறிவியல் பூர்வமாக, பறையர்கள் திராவிடர்கள்தாம் என்று பல்வேறு கோணங்களில் நிரூபித்தார். அந்த நிரூபணக் கட்டுரை, சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் நீக்கப்பட்டுள்ளது.[6] இதற்கு ஆதரவான, திராவிடர் அனைவரின் உடலமைப்பும் ஒரேமாதிரியாக உள்ளது என நிரூபித்து அவர் எழுதிய கட்டுரை(*Dravidian Physical Type*)யும் திட்டமிட்டு நீக்கப்பட்டு மறைக்கப்பட்டுள்ளது. எல்லோரும் ஓரினம் என்று கால்டுவெல் அறிவியல் பூர்வமாகக் கூறுவதை சாதியர்கள் எப்படி ஒப்புக்கொள்வோம்? ஆனால், கால்டுவெல் பதிப்பித்தவற்றை அப்படியே எதையும் நீக்காமல் மறுபதிப்பாக கவிதாசரண் மீண்டும் முழுமையாக வெளிக்கொண்டு வந்துள்ளார்.[7]

பறையர்கள் கள்ள உறவில் பிறந்தவர்களென்றும் தாங்கள் செய்த குற்றங்களுக்காக சாதி விலக்கம் செய்யப்பட்டவர்களென்றும் சொல்லப்படுவதைக் கடுமையாகக் கண்டிக்கும் கால்டுவெல், 'இப்படிப் பேசுவது பகுத்தறிவிற்கு ஒவ்வாத, அடிப்படையற்ற கனவு' என்கிறார். 'பார்ப்பனரும் மேல்சாதியினரும் பறையர்களிடம் கடைப்பிடித்த சகிப்புத்தன்மையற்ற, சமூக இணக்கமற்ற நடத்தைகளை நியாயப்படுத்தவே இப்படிக் கதை கட்டுகிறார்கள்' என்கிறார். ஐரோப்பியர் இதனை நம்பி ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைத்தும் இப்படிச் செய்தார்கள்' என்கிறார். 'இப்படிச் செய்வது இந்துமனத்தின் பிழைபட்ட ஊகம்' எனும் கால்டுவெல் 'பறையர்களை மேல்சாதிக்காரர்கள் நடத்தும் விதம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அநியாயமானது, சமாதானம் சொல்லமுடியாதது' என்றும் சமூக விஞ்ஞான நோக்கில் தீர்ப்பளிக்கிறார். 'பறையரொழிந்த தமிழ்ச்சாதியாரே தமிழர்'[8] என்று சொல்வதும் உள்ளத்தில் அதை வைத்துக் காத்து வருவதும்கூட இதே தீர்ப்பிற்கு உள்ளாகவேண்டிய மடமை என்று மேலும் நாம் புரிந்துகொள்ளலாம். 'இந்தவிதமான மடமையான கற்பிதங்களைக் கேட்க நேர்ந்தால், பறையர்கள் உள்ளம் கொதித்துப் போவார்கள்' என்று பாதிக்கப்பட்டவர்களின் பக்கம் நின்று கால்டுவெல் எடுத்துக்காட்டுகிறார்.

அருந்ததியர், சாணார், பள்ளர் என மிகவும் ஒடுக்கப்பட்டுக் கிடந்தோர்க்கான கால்டுவெல்லின் பணியைத் தனித்தனியே அடையாளப்படுத்தமுடியும் என்றாலும் அவரது சமூகப் பார்வையைப் பறையர் குறித்த அவரது கட்டுரையை மட்டும் கொண்டு புரிந்துகொள்ள இனி முயற்சிக்கலாம்.[9] பறையர்கள் திராவிடர்கள்தாம் என்பது மிகுந்த நம்பகத்தன்மைக்குரியது என்றும், திராவிடர்கள் ஆரியர்களால் முந்தப்பட்டதுபோல் தொல்பழமையும் கருமை நிறமும் கொண்ட ஓர் இனம் திராவிடரால் முந்தப்பட்டிருக்கலாம்; பின்வந்தவர்கள் அவர்களை வென்று அடிமைநிலைக்குத் தள்ளியிருக்கலாம் என்பது கால்டுவெல்லின் தொடக்கக் கருதுகோள். பறையர்களிடமுள்ள சுவர்ணபரம்பரைக் கதைகள், அவர்கள் கௌரவமான உயர்நிலையில் இருந்ததைச் சொல்லுவனவாய் உள்ளமையை எடுத்து விளக்குகிறார். முடிவாக, பார்ப்பன வருகையின்போது உண்மையிலேயே இம்மண்ணின் எஜமானர்களாகப் பறையர்கள் இருந்தார்கள் என்பதைத் தெரிவிக்கிறார். கால்டுவெல் குறிப்பிடுவதுபோல பார்ப்பன வருகையொன்று நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. வட இந்திய மொழிகள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டு செல்வாக்குப் பெற்றனவே யொழிய வட இந்திய ஆரிய இனப் புலப்பெயர்வினால் நிகழ்ந்ததல்ல என்பதை எடுத்துக்காட்டும் முருகர் குணசிங்கத்தின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.[10]

தங்கள் இனமே தங்கள் இனத்தை அடிமை செய்யும் உலகப்பொதுமை போலவே திராவிடரால் அடிமை செய்யப்பட்ட திராவிடரே பறையர் என்று பல்வேறு சான்றுகளால் கால்டுவெல் உறுதிப்படுத்துகிறார். வானிலை வேறுபாடுகள், இனத்தாழ்ச்சி என்பதற்கெல்லாம் மேலாக, பறையர்களின் தாழ்நிலைக்குக் காரணம், போரினால் அவர்கள் வெல்லப்பட்ட நிலைமைதான் என்கிறார். வறுமை; தொழும்பர்களாக வைத்து வேலைவாங்கும் பண்ணை அடிமைமுறை; அடிமை வணிகமுறையிலான சமூக அமைப்பு ஆகியவற்றாலும் இந்த நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கலாம் என்றாலும் கால்டுவெல்லால் இவற்றை மூலகாரணங்களாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் பறையர்களைவிட மிகத்தாழ்வாக அமுக்கப்பட்ட நிலையிலுள்ள வேறுசில சாதிகள், முழுக்க சுதந்திரவாளிகளாய் உள்ளமையை அவர் அறிந்திருந்தார்.

சாதி திராவிடரிலிருந்து பறையர்கள் வேறுபட்ட இனத்தினர் என்பதற்கு அவர்களது உடற்கூறுகள்; வடிவஅமைப்பு; தோலின் நிறம் போன்ற எதுவும் துணை செய்யவில்லை என்று உடற்கூறுமானிடவியலின் அடிப்படையில் ஆய்ந்து தீர்ப்பளிக்கிறார். அவர்களின் கூடுதல் கருப்பு நிறம் அவர்களை நீக்ரோ இனத்தவர் என்று கருதத் தூண்டலாம்; ஆனால், அப்படிப்பட்ட புனைவுகள் தேவையற்றவை என்கிறார். கடும் வெயிலில் வேலை செய்யக் கட்டாயப் படுத்தப்பட்டவர்களின் கரிய நிறத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்களைப் பிற திராவிட இனத்திலிருந்து வேறுபடுத்திக் காண்பது பொறுப்பற்றச் செயல் எனக் கண்டிக்கிறார். இப்படிப்பட்ட சாதி திராவிடர்களின் பொறுப்பற்றச் செயலால் பறையர்கள் தங்களது வாழ்நிலையையே இழக்கும்படி நடத்தப்படும் பலவித கீழ்த்தரமான நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு அவற்றை உலகத்தார்க்கு வெளிச்சமிட்டுக் காட்டுகிறார். அவை வருமாறு:

1. காலாகாலத்துக்கும் விவசாயக் கூலிகளாக அல்லது அடிமைகளாக நாட்டு மக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து வைத்திருப்பது.
2. எளிதான சூழல்களில்கூட அக்குடும்பங்களோடு திருமண உறவுகளைத் தடை செய்து வைத்திருப்பது.
3. மதிப்புமிக்க குடும்பங்களிலிருந்து தொலைவில் தள்ளி வைத்து, ஆக மோசமான குடிசைகளில் தன் கையே தனக்குதவியாக வாழச் செய்திருப்பது.
4. ஆண்டுக்கு இரண்டுமுறை தலைக்குமேல் சூரியன் தகிக்கும் வெப்ப நாட்டில் ஆண்டு முழுவதும் கடுமையாக உழைக்கும்படி கட்டாயப் படுத்துவது.

5. வாழ்க்கையில் உயரும் எல்லா வாய்ப்புகளையும் மறுப்பது.
6. நிழலான சூழலில் அமர்ந்து பணியாற்றும் எல்லாச் சந்தர்ப்பங்களையும் முற்றாகத் தடை செய்வது.
7. கல்வியை மறுப்பது.
8. செய்த வேலைக்குக் கூலி கொடுக்காமலிருப்பது.
9. வயிறு ஒட்டிப் போகுமளவிற்கே சோறிடுவது.
10. மானம் காக்க முடியாதபடிக்குத் துணி கொடுப்பது.
11. சாராயம் குடிக்கவும் செத்த மாட்டைத் தின்னவும் ஊக்கப்படுத்துவது.
12. குறைந்தபட்ச வெட்கத்தை மறைக்கும்படியேனும் பெண்கள் உடுத்துவதைத் தடுப்பது.

பார்ப்பனரும் உயர்சாதி திராவிடர்களும் பறையரை நடத்தும் விதங்களாகப் பட்டியலிடப்பட்ட இந்த முறைகளிலெல்லாம் இரக்கமின்றி உயர்சாதியைச் சேர்ந்த ஒருவரை நடத்தினாலும் அவர் பறையர் போல ஆகிவிடுவார் என்றும், பிறகு அவரின் சொரசொரப்பான வடிவமைப்பிற்கும் குள்ளமான தோற்றத்திற்கும் காரணம் காண நீகரோவைக் கலப்படம் செய்யும் கருத்தை அவர்மீது திணிப்பது மோசமானது என்றும் கால்டுவெல் கூறுகிறார். மாறாக, உயர்சாதியாரின் சூழலில் பறையரை வைத்தால் வெகுவிரைவில் அவர்களுக்கு இணையாக மாறிவிடுவார்கள் என்கிறார். இப்படிப்பட்ட நல்லதொரு சூழலை அவர்களுக்கு அளித்துவிடக்கூடாது என்பது 'திராவிடர் திட்டம்' என்கிறார். புறக்காரணிகள் ஒருபுறம் இருந்தாலும் தென்னாட்டிலுள்ள அனைவரது தலையமைப்பும் ஒரேமாதிரியாக அமைவதால் அனைத்துச் சாதியினரும் திராவிடரே என்று உலகம் ஒப்பும் வகையில் முடிவு செய்கிறார். இதனை மேலும் நிரூபிக்கத்தான் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண ஆய்வில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. பொதுவாக, மொழி சார்ந்த ஆய்வாக மட்டுமே இந்த ஒப்பிலக்கண ஆய்வு பெரும்பாலும் குறுகிய பார்வையில் பார்க்கப்பட்டு வருகிறது. இந்த ஆய்வின் முடிவாக கால்டுவெல் கூறுவன மிகவும் கவனிக்கத்தக்கன. எல்லா திராவிடர்களின் மொழிக் கூறுகளும் அவர்கள் யாவரும் ஒரினத்தவரே எனும் முடிவிற்கு இட்டுச்செல்கின்றன என்றும், பறையர் மற்றும் பிற அடிமைச் சாதியினர், உயர்சாதியினர் ஆகிய பலவகைத் திராவிடர்களின் மொழிக்கூறுகளிலோ தனித்தன்மையுள்ள சொற்களிலோ ஒரு வேறுபாடும் இல்லை என்றும் திராவிட மொழிகளின் இப்படிப்பட்ட ஒருமைத்தன்மையானது, தாழ்த்தப்பட்ட மக்களையும் உள்ளடக்கிய

இனரீதியான ஒருமைத்தன்மையை மெய்ப்பிக்கிறது என்றும் தீர்ப்பளிக்கிறார். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதற்கான நிரூபண ஆய்வாகத் தமது ஒப்பிலக்கண ஆய்வை முன்னெடுத்தார்.

கால்டுவெல்லின் இப்படிப்பட்ட சமத்துவ சமூகப் பார்வை அமைந்த முக்கியமான கட்டுரையினை நீக்கி, சென்னைப் பல்கலைக்கழகமே கால்டுவெல்லை இருட்டடிப்புச் செய்திருக்கிறது என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஆனால் ஏழைகளிடமிருந்து விலகாத, ஏழைகளுக்குத் துரோகமிழைக்காத வீரியமிக்க ஒரு உண்மைக் கிறித்துவத் தொண்டராக கால்டுவெல்லைக் காணமுடிகிறது.

பறையர்கள் தங்களின் பண்டைய உயர்நிலை வாழ்வு பற்றித் தங்களது வாய்மொழி மரபில் காத்துவரும் தரவுகளை எடுத்து விளக்கிவிட்டு, நிரூபணத்திற்கு அவை போதா என்றும், வரலாற்றுத் தரவுகளோடு பொருந்தி நின்று அவற்றை நிரூபிக்கவேண்டுமென்றும் கால்டுவெல் விதித்துச் சென்றிருக்கிறார். பறையரின் பண்டைய உயர்நிலை வாழ்வை வரலாற்றுத் தரவுகளோடு பொருத்தி நிரூபிக்க வேண்டுமென்று அவர் விதித்துச் சென்ற பணியை இனி வரும் பகுதியில் மேற்கொள்ளலாம்.

II

பாண்டியன் நெடுஞ்செழியன்(ஆட்சிக்காலம் கி.மு.307 - 247) கல்வெட்டு மதுரை மாங்குளத்தில் உள்ளது.[11] தமிழ்நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுகளில் இதுவே காலத்தால் முந்தையது. அசோகர் காலத்து பிராமி எழுத்து வரிவடிவில், தம்மம் (*Dhammam*) என்கிற பாலி மொழிச்சொல் அதே உச்சரிப்புக்கேற்ப எழுதப்பட்டுள்ளது. அதிலுள்ள வர்க்க எழுத்தான 'த' (*Dha*) தமிழி வடிவ 'த' (*Tha*) அல்ல என்பது கவனிக்கத்தக்கது. இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனுடைய மகன்தான் பெருவழுதி. 'பண்ணன் கடலன் வழுதி' என்று அதே மாங்குளம் பிராமி கல்வெட்டில் பெருவழுதி குறிக்கப்படுகிறார். பண்ணன் என்பது 'பஞ்ஞா' எனும் பௌத்தச் சொல்லாடலின் பண்டைய வடிவமெனத் தெரிகிறது. பௌத்த அறங்களை மனத்திலிருத்தி வைத்திருந்தவர்கள் பாணர் (பாணகர்)[12] எனப்பட்டனர். அவ்வகையிலும் பெருவழுதியைப் பாணன் எனக் கொள்ளமுடிகிறது. பௌத்தப் பேரறிவாளன் மகாதிஸன் எனும் பொருள்பட 'மகாபஞ்ஞா மகாதிஸன்'[13] என பெருவழுதி குறிக்கப்படுகிறார். இலங்கையின் திஸமகரமப் பகுதியில் கிடைக்கும் நாணயம் கடலன் வழுதியின் பெயரைத் தாங்கியுள்ளது.[14] பெரும் வள்ளல் தன்மையுடையவனாக கடலனை ஆலம்பேரி சாத்தனார் குறிப்பிடுகிறார்.[15] மாபோதி மரம்

அசோகரிடமிருந்து சங்கமிதாவுடன் வருவதை இலங்கையில் எங்கிருந்து முதன்முதலாக மகாதிஸன் கண்டாரோ அந்த இடத்தைப் பிரசித்திப்படுத்த அவரால் கட்டப்பட்ட மண்டபத்திற்கு 'ஸமுத பண்ணசாலா' என்று பெயர் வைக்கப்பட்டதை மகாவம்சம் குறிப்பிடுகிறது.[16] இதில் குறிப்பிடப்படும் 'ஸமுத பண்ண' என்பது 'கடலன் பண்ணன்' என மாங்குளக் கல்வெட்டு குறிப்பிடுவதோடு பொருந்தி வருவதைக் காணலாம். உண்மையான மதத்தையும் அதன் வரலாற்றையும் அறிந்துவைத்திருப்பவராக கடலனை (ஸமுத) தீபவம்சம் குறிப்பிடுகிறது.[17] இலங்கைக்கும் தமிழகத்திற்குமான பழம்பெரும் உறவை இவை கோடிட்டுக் காட்டுகின்றன. தமிழகத்தில் மதுரையைச் சுற்றிலும் பிற இடங்களிலுமுள்ள தமிழ் பிராமி கல்வெட்டுகள் பௌத்தம் சார்ந்தன அல்ல என்றும் அவை ஜைன சமயத்தைச் சார்ந்தவை என்றும் ஐராவதம் மகாதேவன் முடிவு செய்துள்ளார்.[18] அதுவே பொதுக்கருத்தாக தொல்லியல் மற்றும் வரலாற்று ஆய்வாளர்களால் பெரும்பாலும் இன்றுவரை கருதப்பட்டு வருகிறது. தொல்லியல் நோக்கில் சங்க காலத்தை ஆராய்ந்துள்ள கா.ராஜன், அனைத்துக் கல்வெட்டுகளும் சமணம் சார்ந்தவை எனும் கருத்தைப் போகிறபோக்கில் ஏற்றுச் செல்வதை இதற்குச் சிறந்த சான்றாக்கலாம்.[19] தமிழ் பிராமி கல்வெட்டுகள் பெரும்பாலும் சமண முனிவர்களுக்கு அச்சமயத்தார் வழங்கிய குகைக்கொடைகள் பற்றியனவாகவே உள்ளன என்று கா.சிவத்தம்பி கருத்து கொண்டிருந்ததையும் இங்குச் சுட்டலாம்.[20] சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் சமணத்தோடோ பௌத்தத்தோடோ தொடர்புபடுத்தி ஆய்வுகள் இதுவரை நிகழ்த்தப்படவில்லை. கி.மு.4ஆம் நூற்றாண்டில் சமணர்களும் பௌத்தர்களும் தமிழகத்திற்கு வந்துவிட்டதாகக் குறிப்பிடும் பி.டி.சீனிவாச ஐயங்கார், கி.பி.5ஆம் நூற்றாண்டு வரையில் சாமானிய மனிதர்களின் வாழ்வில் அவை தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும் எனவேதான் தொடக்ககாலத் தமிழர் பாடல்களில் அவர்கள் பற்றிய செய்திகள் இல்லை என்றும் கூறியிருப்பதுகூட பொதுக்கருத்தாகவே நிலைத்திருக்கிறது.[21] இந்தப் பொதுப் புரிதலிலிருந்து நூலிழையளவிற்கு விலகிச் சிந்தித்த போக்கைப் பிற்காலத்தில் காணமுடிகின்றது. பிடகங்கள் முதலான பௌத்த நூல்களை சங்கப் புலவர்களில் ஒருசிலரேனும் பயின்றிருக்க வேண்டும் என்று கருதும் சோ.ந.கந்தசாமி தம் கருத்துக்குச் சான்றாக 187ஆம் புறநானூற்றுப் பாடலையும் தம்மபதத்தில் அரஹந்தவக்கத்தின் 9ஆம் பாடலையும் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார்.[22] புறநானூற்றுப்

பாடல்களின் கருத்துக்களும் பௌத்த நிகாயங்களின் கருத்துக்களும் ஒத்திருப்பதை அடையாளங் காட்டியுள்ளார் ரங்கநாயகி மகாபாத்ரா.[23] மாங்குளக் கல்வெட்டு குறிப்பிடும் கணிநந்தாசிரியரை ஆசீவகத்தோடு தொடர்புபடுத்தி, புதிய கோணத்தில் ஆராய்ந்துள்ள இரா. நெடுஞ்செழியன், தமிழகத்திலுள்ள கற்படுக்கைகள் யாவும் ஆசீவகர்களுக்கு மட்டுமே உரியன என்கிறார்.[24] சங்க இலக்கியங்களும் ஆசீவக நெறிப்பட்டன எனக் கருதுகிறார். சங்ககாலத் தமிழகத்தின் தேசிய சமயமாக ஆசீவகமே விளங்கியது என்கிறார்.[25] ஜிராவதம் மகாதேவனோ தமிழ்க்குகைகளோடு ஆசீவகர்களுக்குத் தொடர்பிருந்தது என்பதற்கான எந்தச் சான்றினையும் தமிழ்பிராமி குகைக்கல்வெட்டுக்கள் அளிக்கவில்லை என்பார்.[26] இலங்கையிலுள்ள குகைத்தள பிராமி கல்வெட்டுகளின் அமைப்பு தமிழகத்தில் உள்ளவை போன்றுள்ளன என்று அவரே சுட்டிக்காட்டுகிறார். ஆனால் இலங்கையிலுள்ள ஏராளமான பிராமி கல்வெட்டுகளில் ஒரு சில (ஆசீவகம் சார்ந்தவை) தவிர யாவும் பௌத்தம் சார்ந்தவை என்பது இங்கு கவனிப்பிற்குரியது. இலங்கை வரலாற்றை மகாவம்சம் மிகத் தெளிவாகப் பதிவு செய்துள்ளதாக கால்டுவெல் கருதியதில் நியாயம் இருப்பதை அவதானிக்கமுடிகிறது. இலங்கைக்கும் தமிழகத்திற்குமான தொடர்பு சேனன், குட்டகன் (கி.மு. 177 - 155) எனும் தமிழ் அரசர்களின் காலம் முதல் ஏற்பட்டதாக மகாவம்சம், தீபவம்சம், தூதவம்சம், பூஜாவளி, ராஜாவளி ஆகிய நூல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழக வரலாற்று ஆசிரியர்களும்[27] இலங்கை வரலாற்றாசிரியர்களும்[28] பொதுவாக இதுவரை கருதிவருகிறார்கள். மனுநீதி சோழனது ஆட்சியில் நடந்ததாகக் கருதப்படும் 'இளவரசனும் கன்றும்' பற்றிய கதையைத்தவிர தொடக்ககால இலங்கை வரலாறு பற்றிய வேறு எந்தச் செய்தியும் தமிழ் இலக்கியத்தில் இல்லை என கே.ஏ.நீலகண்டசாஸ்திரி கருதியதை இதற்குச் சான்றாக்கலாம்.[29] எலாரன் (ஈழராயன்) இந்த மனுநீதி சோழனாக எண்ணப்படுகிறார். ஆனால், கி.மு.3ஆம் நூற்றாண்டு மதுரை மாங்குளக் கல்வெட்டின் பிராமிப் பதிவும் கடலன் வழுதியைக் குறிப்பதோடு இலங்கையின் திஸமகரமம் பகுதியில் கிடைத்த நாணயமும் 'கபதி கடலன்' என்று வழுதியைக் குறிக்கிறது.[30] பெருவழுதியின் பெயர் இரண்டு முறை பொறிக்கப்பட்டுள்ள நாணயமொன்றை இரா.கிருஷ்ணமூர்த்தி வெளிக்கொண்டு வந்துள்ளார்.31 அவர் வெளியிட்டுள்ள அந்த நாணயத்தின் புகைப்படமும் வரைபடமும் அவர் தந்துள்ளவாறு இங்கே தரப்படுகிறது.



இதில் 'பெருவழுதி' என்று தமிழிலும் 'பெருவழுதிஸ்' என்று பிராகிருதத்திலும் என இருமுறை பெருவழுதியின் பெயர் உள்ளதை அடையாளங்காட்டுகிறார் ஐராவதம் மகாதேவன்.[32] இந்நாணயத்தில் குதிரையின் காலடியின் கீழ் உள்ள வடிவம் மூன்று கையுடைய சின்னம் (*Triskle*) என கிருஷ்ணமூர்த்தியால் கூறப்படுவது. பிராமி எழுத்தான 'ஸ்' என்று ஐராவதம் மகாதேவனால் படிக்கப்பட்டுள்ளது. இந்தப் புரிதலே 'பெருவழுதிஸ்'னை மகாதிஸன் எனப் புரிந்துகொள்ள இங்கு வழிவகை செய்கிறது. தமிழகத்து மேட்டுப்பட்டி பிராமி கல்வெட்டில் இவ்வடிவம் உள்ளது. நாணயத்தில் முதலிலுள்ள பெருவழுதி' என்பது பட்டிப்ரோலு எழுத்து வகையைப் பயன்படுத்திப் பொறிக்கப்பட்டுள்ளதால் இந்த எழுத்து முறை வழக்கில் இருந்த பகுதியிலும் பெருவழுதியின் ஆட்சி இருந்திருக்கலாம்.[33] கிருஷ்ணா நதி முகப்பில் உள்ள பட்டிப்ரோலு ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட புத்த விகாரத்தில் காணப்பட்ட பேழையொன்றில் 62 பாண்டி நாட்டு முத்துக்கள் இருந்தமை34 பெருவழுதியின் ஆட்சிப் பகுதியாக பட்டிப்ரோலு திகழ்ந்தமைக்கு மேலும் சான்றளிக்கிறது. அசோகர் காலத்தில் அவருக்கு நண்பராயிருந்த மகாதிஸன் எனும் தேவனாம்பியதிஸன்தான் பெருவழுதி(ஸ்)யாக இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. மகாதிஸனில் வரும் முதல் பகுதியான 'மகா' என்பது 'பெரிய' என்ற பொருள் தரும் 'பெரு' என்ற தமிழ்ப் பெயராய் அமைந்து 'பெருவழுதி' என வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மகாதிஸன் அசோகரின் மகனான மகாதேரர் மகேந்திரரை(மஹிந்தர்) இலங்கைக்கு அழைத்து வந்து பௌத்தம் செழிக்கச் செய்தவர் என்று மகாவம்சம் கூறுகிறது. தமிழகத்தில் தாமிரபரணி தொடங்குமிடத்தில் பொதிகை மலை (பொதியம். பொதியில்) அமைந்துள்ளது. இதற்கு மகேந்திரமலை என்றும் பெயர். இம்மலை வால்மீகி இராமாயணத்தில் (ஆரண்ய காண்டம்:16-21) மகேந்திரகிரி என்று குறிக்கப்பட்டுள்ளது. அசோகரின் மகன் மகேந்திரர் இவ்விடத்தில் தேரராக வாழ்ந்திருக்க

வேண்டும்; அல்லது அவர் தமிழ்நாட்டின் வழியாக இலங்கைக்குச் செல்லும் வழியில் பொதிகைமலையில் தங்கிச் சென்றிருக்கவேண்டும்; அதனால்தான் பொதிகைமலையானது மகேந்திரமலை எனப்படுகிறது. பொதிகை மலையின் உச்சி செங்குத்தாக உயரத் தொடங்குமிடத்தில் அமைந்துள்ள ஒரு மேட்டுநிலம் சங்கமுத்திரை என்று வழங்கப்படுகிறது; மகேந்திரரையடுத்து பிக்குணியாகத் தென்னாடு வந்த அசோகரின் மகளான சங்கமித்திரையை இது நினைவுபடுத்துகிறது; மகேந்திரரையும் சங்கமித்திரையையும் பின்பற்றி. பிற்காலத்திலும் இலங்கையிலிருந்து பௌத்தர்கள் இம்மலைக்கு வழிபட வருகிறார்கள்.[35] மகேந்திரரே அகத்திய முனியாக இருக்கலாம். பொதிகை மலை அகத்தியர் மலை என்றும் அழைக்கபடுவது இக்கருத்திற்கு வலுசேர்க்கிறது. மகாதேரர் எனும் சொல் அகத்தியராக திரிந்திருக்க வாய்ப்பிருக்கிறது. தாமிரபரணி, சிவனால் அகத்தியருக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.[36] அதாவது நெடுஞ்செழியனால் மகேந்திரருக்கு அளிக்கப்பட்டது என்று இதனைப் புரிந்துகொள்ளலாம். அகத்தியர் முதல்சங்கத்திலும் இடைச்சங்கத்திலும் வீற்றிருந்த புலவராவார். இவர் சங்கஇலக்கியத்திற்கான பௌத்த தத்துவப் பின்புலத்தை; அதற்கான இலக்கணத்தை அகத்தியம் என்ற பெயரில் ஆக்கித் தந்தவர். இந்தியப் பண்பாட்டைப் பிறநாடுகளுக்குக் கொண்டு சென்ற முனிவராகக் கதைகளில் இவர் கூறப்படுகிறார். கீழைக்கடல் நாடுகளில் அப்படித்தான் கருதப்படுகிறார்.[37] இலங்கையிலிருந்துதான் தேரவாத பௌத்தம் கீழைநாடுகளுக்குப் பரப்பப்பட்டது. இதில் மகேந்திரருக்கு (அகத்தியர்) முதன்மை இடம் இருந்திருக்க வேண்டும். அகத்தியரை அவலோகிதரின் மாணவராய் பௌத்தம் ஏற்றுக்கொண்டுள்ளது போலவே சைவர்களும்; அகத்தியரின் குருவாக அவலோகிதீஸ்வரரை ஏற்றுக்கொண்டுள்ளனர்.[38] இவர் சிவனால் (நெடுஞ்செழியன்) தென்னாட்டிற்கு அழைக்கப்பட்டவரென்றும் சிவனால் தமிழ் கற்பிக்கப்பட்டவரென்றும் திருத்தணிகையில் தமிழர் பண்பாட்டு இலக்கண மரபை இவருக்குச் சொல்லித்தந்தது முருகன் (நெடுஞ்செழியனின் மகனாகிய பெருவழுதி)என்றும் சொல்லப்படுவன பொருத்தமாகவே இருக்கின்றன. கபிலர் குறிப்பிடும் வடபால் முனிவன் (புறநானூறு. 201:8) அகத்தியர் ஆவாரென அடையாளப்படுத்துகிறார் ஐராவதம் மகாதேவன்.[39] அகத்தியரின் மாணவர் ஒருவருக்குத் தேரர் தேரையரி என்ற பெயர் உள்ளமை அகத்தியரின் பௌத்த உறவை மேலும் கூட்டுகிறது.[40] நீரால் பிரிக்கப்படாத தாமிரபரணி ஆறு பாயும் நிலப்பகுதியாக முதற்சங்ககாலத்தில் இலங்கை இருந்திருக்க வேண்டுமென்பர் வரலாற்றாளர்.[41] அதனால்தான் இலங்கைப் பகுதி தம்மபண்ணி என்று அசோகரால் குறிக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் வடமேற்குக்

கடற்கரையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டு தம்மபண்ணி (தாம்ரபரணி) என்ற இடம் இருந்ததாகப் பாலி வரலாற்று நூல்களிலிருந்து எடுத்துக்காட்டும் முருகர் குணசிங்கம். இந்த இடம் பொம்பரிப்பின் அருகில்(புத்தளம் மாவட்டம்) இருந்திருக்க வேண்டும் என்றும் இப்பகுதியிலும் ஆதி இரும்புக்கால பண்பாட்டுக்குரிய மக்கள் பரவலாகவும் செறிவாகவும் வாழ்ந்தனர் என்றும் கூறுவன கவனிக்கத்தக்கன.[42] அங்குக் கிடைக்கும் தரவுகளும் தமிழகத்திலுள்ள இரும்புக்கால மொழி, பண்பாட்டுத் தரவுகளை ஒத்துள்ளன. மகேந்திரர் இலங்கைக்குச் சென்றதை மட்டும் மகாவம்சம் பதிவு செய்துள்ளது; இன்றைய தமிழகத்துடனான அவரது தொடர்பை நேரடியாகக் குறிப்பிடவில்லை.

பெண்களைத் தேரிகளாக அங்கீகரிக்கும் தீட்சையினை வழங்க ஆண் துறவியால் முடியாது; அதற்கு சங்க விதிகள் இடம் தரா. எனவே தமது தங்கை சங்கமித்ராவை அதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்ன மகேந்திரரின் ஆலோசனையின்படி, மகாதிஸனின் முதன்மை மந்திரியும் மருமகனுமான அரிட்டர் (மகா அரித்த) அசோகரிடம் சென்று அவரது மகளான சங்கமிதா தேரியை போதி மரக்கிளையுடன் இலங்கைக்கு அழைத்துவந்தார்.[43] இந்த அரிட்டர், அசோகரால் தமது படைக்குச் சேனாபதியாக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டவர். சங்கமிதாவை அழைத்துவந்தவுடன் தாமும் துறவேற்பதாக ஏற்கெனவே தமது மாமன் பெருவழுதியிடம் செய்துகொண்ட ஒப்பந்தப்படி அரிட்டர் தேரரானார்.[44] அவர் பெயரில் அமைந்துள்ள ஊர்தான் தமிழகத்து மதுரைக்கருகிலுள்ள அரிட்டாபட்டி. அரிட்டர் (அரித்த) தமிழர்தான் என்பது இதனால் தெளிவாகத் தெரிகிறது. அரிட்டர் பெயரை மாங்குளம், திருவாதவூர், உசிலம்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள தமிழி (தமிழ்பிராமி) கல்வெட்டுகள் பதிவு செய்துள்ளன.[45] 'எழைய்ஊர் அரிதின்பளீ' என்று கருங்காலக் குடி கல்வெட்டு அரிட்டரின் ஈழத்தொடர்பை உறுதி செய்கிறது.[46] இலங்கையிலுள்ள இந்த ஈழஊரில் சங்ககாலத்தைச் சார்ந்த இரும்புக்காலப் பண்பாட்டுத் தடயங்கள் கிடைத்துள்ளன.[47] மகாதிஸனின் முதன்மந்திரியாக அரிட்டர் (மகாஅரித்த) இருந்தார் என்று மகாவம்சம் கூறுவது இவற்றால் உறுதிப்படுகிறது. பாண்டியன் பெருவழுதியின் முதன்மந்திரியாக அரிட்டர் இருந்தார் என்கிற தமிழர் வரலாற்றைத்தான் சிங்கள வரலாறாக மகாவம்சம் மேற்கண்டவாறு பதிவு செய்துள்ளது. தீபவம்சத்திலும் இதனைக் காணலாம். கபதிகடலன் என்று மாங்குளக் கல்வெட்டில் பெருவழுதி குறிக்கப்பட்டுள்ளார். பல விகாரைகளை தானமளித்தவராக ஸமுத (சமுத்திரன்) எனும் அரசர் ஒருவர் இலங்கைக் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறார். உதாரணமாக இலங்கையின்

தயிகாவலவில் உள்ள பிராமி கல்வெட்டைச் சுட்டலாம்.[48] இதில் 'பருமக ஸமுத' எனக் குறிக்கப்பட்டுள்ளது. பருமக என்று பெரும்பான்மை இலங்கை பிராமி கல்வெட்டுக்களில் பயின்று வருவது, பெருமகன் எனும் தமிழ் வடிவாகும்.[49] சமுத்திரன் என்பதற்குத் தமிழில் கடலன் என்பது பொருளாகும். ஆக, 'பெருமகன் கடலன்' என்றே இக்கல்வெட்டு தமிழில் கொள்ளத்தக்கதாய் உள்ளது. இது கடலன் வழுதியைக் குறிப்பதாகும்.

ககபதி (கிருகபதி) என்பதன் பிராகிருத மாற்று வடிவம் கபதி/கபிதி ஆகும். தமிழில் குடும்பிகன் என்றும் காவிதி/காவுட்இ50 என்றும் கிருகபதி குறிப்பிடப் படுகிறார். காவிதி என்ற பெயரில் பல சங்க இலக்கியப் புலவர்கள் உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.51 உபாசகர் என்று பௌத்தத்தில் கிருகபதி அழைக்கப்படுகிறார். காவிதி என்னும் பெயரைத் தமிழ் பிராமி கல்வெட்டுகள் குடும்பிகன் என்றும் குறிப்பிடுகின்றன. பௌத்தத்தில் துறவிகளைவிட உபாசகரே பெரும்பான்மையர். இவர்களே குடிகளை நல்வழிப்படுத்துகின்ற துறவிகளைக் காக்கும் குடும்பிகள். அப்படியாக பௌத்தம் போற்றிய குடும்பிதான் பெருவழுதி. எனவேதான் 'கபதி கடலன் வழுதி' என மாங்குளம் தமிழ்க்கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளார். கபதி என்பது இலங்கை பிராமி கல்வெட்டுகளில் பௌத்த உபாசகரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பொதுச்சொல்லாகும். பண்ணன் என சங்க இலக்கியத்தில் (அகம்-54,177; புறம்-70,173,181,388) குறிக்கப்படுபவர் இவரே. 'வாய்வாட் பண்ணன்', 'கழற்கால் பண்ணன்' என சங்க இலக்கியங்கள் இவரை வீரத்தோடு பொருத்திக் குறிப்பிடுகின்றன. தமிழக வரலாற்றாசிரியர்கள் இவரைப் பண்ணையாரென்று புரிந்து கொண்டிருக்கிறார்கள்.[52] ஆனால் இந்தப் பண்ணன் பண்ணையாராக இருக்க வாய்ப்பில்லை என்பதை மேற்கண்ட வாள், கழல் ஆகிய அடைகள் உணர்த்துகின்றன. தனது தந்தை நெடுஞ்செழியனின் பிரதிநிதியாகப் பாண்டிய நாட்டிற்கு வடபுலத்தில் போர் தொடுத்தவன் அப்போது இளவரசனாக இருந்த இந்த(இளம்)வழுதியே. இவர் பின்னர் முதுகுடுமிப் பெருவழுதியாகக் கருதப்பட்டவராக இருக்கலாம் எனத் தெரிகிறது. பல நல்யாகங்கள் (அன்ன தானம்) இவரால் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால்தான் பல்(யாகி)சாலை முதுகுடுமிப் பெருவழுதி என இவர் பெயர் பெற்றார். குடுமி (குடும்பி) பௌத்தச் சொல்லாடல் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஆனால் வைதிக மரபுப்படி யாகம் செய்தவராக முதுகுடுமிப் பெருவழுதியை இரா. கிருஷ்ணமூர்த்தி அடையாளப்படுத்துகிறார்.[53] பெருவழுதியின் நாணயங்களில் காணப்படும் மண்டபம் போன்ற அமைப்பைக் கோயில் சின்னம் என்கிறார்; அடும்பரா நாணயங்களில் காணப்படும்

இவ்வகைச் சின்னத்தைக் கோயிலாகக் கொண்டு சைவத்தோடு தொடர்பு படுத்துகிறவர்களின் கருத்தையொட்டித் தாமும் அக்கருத்துக்கு உடன்படுகிறார்.[54] கோயில் சின்னத்திற்கு அருகிலிருக்கும் திரிசூலத்தை அடும்பரா நாணயங்களோடு ஒப்பிடும் அவர்கள் சைவ அடையாளமாகக் காண்கிறார்கள்.



சோகுரத்தகடு (நெற்களஞ்சியங்கள்)

ஆனால், மேற்கண்ட 'கோயில் சின்ன வடிவம்' மௌரிய நெற்களஞ்சியங்களாக சோகுரத் தகட்டில்(மௌரிய செப்புத்தகடு) இடம்பெற்றுள்ளமையை டி.டி.கோசாம்பிஎடுத்துக்காட்டுகிறார்.[55]



பெருவழுதி நாணயம்

எனவே, பெருவழுதி நாணயங்களில் இடம்பெற்றுள்ளவை நெற்களஞ்சியங்களேயன்றி கோயில்கள் அல்ல என்பது பெறப்படுகிறது. அசோகரைப் போலவே பல அன்னதான சாலைகளை பெருவழுதி அமைத்ததன் அடையாளமாக நெற்களஞ்சியச் சின்னம் பதிக்கப்பட்டுள்ளது. பெருவழுதிநாணயங்களிலுள்ள திரிசூலச் சின்னம் பௌத்தத்தின் மூன்று (திரி) சரணங்களை அடையாளப்படுத்துவதாய் உள்ளது.

மகாதிஸனாகிய பெருவழுதியைப் பின்வரும் இலங்கையின் இசிலம்பட்டை கல்வெட்டு,



கொற்கையின் (தனுஷ்கோடி, மலையக்கோடி, கவாடபுரம், கபாடபுரம், மதுரோதயநல்லூர்) அரசனாகக் கூறுகிறது.[56] கி.மு.3ஆம் நூற்றாண்டில் பாண்டியர் தங்கள் தலைநகரை கபாடபுரத்திலிருந்து மதுரைக்கு மாற்றியிருக்கலாம்.[57] கொற்கைப் பொருநன் என்று பாண்டியன் நெடுஞ்செழியனை பேராலவாயர்(அகம்.296:10-11)குறிப்பிடுகிறார். இந்த நெடுஞ்செழியனின் மகனான பெருவழுதி(மகாதிஸன்)யையும் கொற்கை அரசனாகவே மேற்கண்ட கல்வெட்டு பதிவு செய்திருப்பது நோக்கத்தக்கது. மதுரைக் கணக்காயனாரும் 'மறப்போர் பாண்டியர் அறத்தின் காக்கும்/கொற்கை அம்பெருந் துறை'(அகம்.27:8-9) எனப் பாடியிருக்கிறார். சங்கப் புலவராகிய வெண்கண்ணனாரும் கொற்கைப்பட்டினம் வழுதியுடையது எனப் பதிவுசெய்துள்ளார்.[58] பாலைக் கௌதமனார் தர்மபுத்திரனைப் பாடியதாக ஒரு பாடல் (புறம்:366) உள்ளது. தருமன் என்பவர் 'நெடுஞ்செழியன்' ஆவார். இலங்கை பிராமி கல்வெட்டுகள் இவரை தமராஜா (தர்மராஜன்) என்றே பதிவு செய்துள்ளன. அப்படியானால் அவரது புத்திரன், மகாதிஸன் எனும் 'பெருவழுதி' ஆவார் என்பது பெறப்படுகிறது. மேற்கண்ட பாடல் அறவோன் மகன் என தர்மபுத்திரனைக் குறிப்பிடுகிறது. தருமன் எனப்படும் நெடுஞ்செழியனே அறவோன் எனப்படுவதும் இதனால் தெரியவருகிறது. இந்த அறவன்(தர்மன், முத்தசிவன்) பெயராலேயே தமிழானது அரவம் என்று அழைக்கப்பெற்றதுடன் தமிழரும் அரவர் என்று பெயர் பெற்றனர். ஒழுக்கம் கற்பிக்கும் அறநூல்கள் எந்த மொழியையும்விடத் தமிழில் சிறந்தும் உயர்ந்தும் விளங்குவதால் தமிழர்கள் அரவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்போலும் என்ற குண்டர்ட்டின் கருத்தைச் சுட்டும் கால்டுவெல், அரவர் என்பது நல்லொழுக்கம் உடையாரைக் குறிக்கிறது என்றும் அறம் எனும் தமிழ்ச்சொல் புத்தரின் பெயராதலால் அரவர் என்பது பௌத்தர்களைக் குறிக்கும் என்று எடுத்துக்காட்டுகிறார்; அரவர் என்பது நீதியைக் குறிக்கும் அறம் எனும் தமிழ்ச்சொல் அரவு என்று கன்னடத்தில் வழங்குவதையும் சுட்டுகிறார்.[59]

வின்சென்ட் ஏ ஸ்மித் மற்றும் தி.க.சர்க்கார் ஆகிய இருவரையும் பின்பற்றிப் பெரும்பாலான ஆய்வாளர்கள் சோகுரத் தகட்டின் காலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டு என்பர்.[60] எனவே சோகுரத் தகட்டைப் போல் பெருவழுதி நாணய முத்திரைகளும் உள்ளமையால் பெருவழுதி காலமும் கி.மு. 3ஆம் நூற்றாண்டு என்பது உறுதியாகிறது. மூன்றாம் தமிழ் சங்கம் இன்றைய மதுரையில் நிறுவப்பட்டதும் அதற்கு முன்பு கொற்கையில் (கபாடபுரம்) இரண்டாம் சங்கம் நிறுவப்பட்டதும் பொதுச் செய்தி. முதல் சங்கம் இருந்த தென்மதுரை தற்பொழுது கொற்கை என்று அழைக்கப்படும் ஊருக்கு அருகே இருந்திருக்கலாம்; கி.மு.800க்கும் கி.மு.500க்கும் இடைப்பட்ட காலத்தில் அந்நகர் அழிந்து போயிருக்கலாம் என்பார் இரா.கிருஷ்ணமூர்த்தி.[61] ஆனால் முதல் சங்கம் தென்மதுரை எனக்கொள்ளத்தக்க இன்றைய இலங்கையிலுள்ள மதுரையில்தான் நிறுவப்பட்டிருக்க வேண்டும் என்பது இப்போது புலப்படுகிறது. ஏனெனில் இக்கட்டுரையில் இதுவரை கண்டதுபோல் சங்கம் என்பது, பௌத்த சங்கம் என்பதாலும் இலங்கையிலுள்ள தென்மதுரையானது பாண்டியர் ஆட்சிப் பகுதியாய் இருந்தது என்பதாலும் இது முற்றும் முழுக்க சாத்தியமே. தேவனாம்பிய திஸனின் காலத்தில் கி.மு.306இல் கொழும்பு நகரை அடுத்திருந்த கரைப் பிரதேசம் கடலில் அழிந்ததாக இராஜாவளி குறிப்பிடுவது இதற்கு வலுசேர்க்கிறது.[62] முதல் சங்கம் கடல்கோளால் அழிந்தது என்பது இதனால் பொருத்தமாகத் தெரிகிறது. கொழும்புக்கு அடுத்துள்ள இன்றைய இலங்கையின் தென்கோடிக் கரைப்பிரதேசம் (தென்) மதுரையாக உள்ளமையே இதற்கு சாட்சி. திஸமகரம(திஸமகா ஆராமம்) எனும் பகுதி இலங்கையின் மதுரைப் பகுதியில் இன்றும் உள்ளது. இது மகாவம்சம் குறிப்பிடும் மகாதிஸனாகிய பெருவழுதியின் பெயராலாமைந்த பௌத்த ஆராமத்தை நினைவுபடுத்துகிறது. சிலப்பதிகார உரையாசிரியர் குமரியைப் பற்றிக் குறிப்பிடுகையில் குமரிமுனை என்று உரை வகுக்காமல் குமரியாறு என்றே உரை செய்திருக்கிறார்.[63] குமரியாறும் அதனோடு சேர்ந்த நிலப்பகுதிகளும் கடல்கோளால் கொள்ளப்பட்டன என்பது அடியார்க்குநல்லாரின் முடிவு. குமரி ஆற்றுக்குத் தெற்கே இருந்த பஃறுளியாறு வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்கிற நெடுஞ்செழியனால் உண்டாக்கப்பட்டது. அதுவும் கடல்கோளால் அழிந்தது. பஃறுளியாற்றுக்கும் அதன் தெற்கே இருந்த குமரியாற்றுக்கும் இடைப்பட்ட பகுதிகளான ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணக்கரைநாடு, ஏழ்குறும்பனைநாடு என மொத்தம் 49 நாடுகள் கடல்கோளால் அழிந்தன என்பார் அடியார்க்குநல்லார்.[64] முன்னொட்டாக வரும் எண்ணிக்கையைக் குறிக்கும் ஏழ் என்பது ஏழு என்பதாக கொள்ளப்பட்டு 7x7=49 எனப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது.

ஏழ்ஏழ் என வரும் ஒரே மாதிரியிலான தன்மை ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை எனும் ஆ.வேலுப்பிள்ளை இந்த ஏழ் எனும் முன்னொட்டு 'ஈழம்' என்பதோடு தொடர்புடையதாக இருக்க வேண்டுமெனகிறார். முன்உயிர்களான இகரமும் எகரமும் மிக நெருக்கமான உறவுள்ளவை என்பதை எடுத்துக்காட்டி ஏழகம் என்று இருந்து பின்பு ஈழகம் என்றாகி ஈழம் என்றானதற்கும் தமிழ்நாட்டின் பண்டைய பெயராகிய தமிழகத்திற்கும் தொடர்பு இருப்பதைச் சுட்டுகிறார்.[65] கடல்கோளால் அழிந்ததாக மேலே குறிக்கப்பட்ட ஏழ்மதுரைநாடுதான் ஈழமதுரைநாடு (இலங்கையில் உள்ள மதுரைமாவட்டம் சார்ந்த பகுதி) என்பது பெறப்படுகிறது. எனவே முதல் தமிழ்சங்கம் நிறுவப்பட்டிருந்த இடம் இந்த தென்மதுரைதான் எனலாம். மேலே குறிப்பிட்ட ஏழகமும் (ஏழு நாடுகளும்) பௌத்த தம்ம நெறிக்குட்பட்டிருந்தன என்பதால் தம்மஏழகம் என அவை வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது தம்ம ஈழகம் என்றாகி 'தம்மீழகம்' என்றும் 'தமிழகம்'(புறம்.168:18) என்றும் மாறிவந்திருக்க வேண்டும். தாலமியும் பெரிப்ளூசும் குறிப்பிடும் 'தமிரிக்கெ', 'தைமர்கெ', 'திமிரகெ' எனும் சொற்களில் வரும் தமிர், தைமிர், திமிர் என்ற மூன்றும் தமிழ் என்ற சொல்லையே உணர்த்துகின்றன என கால்டுவெல் குறிப்பிடுகிறார்.[66] தமிழகம் என்னும் மூலச்சொல்லின் திரிபுகளாக இவை இருப்பதை அவதானிக்க முடிகிறது. தர்மராஜன் (முத்தசிவன்) ஆண்ட தர்மபூமியாக இருந்த ஏழகத்துக்கும் 'தர்மஏழகம்' என்று பெயர் வழங்கப்பட்டுப் பின்னர் அது தர்மேழகம் - தர்மீழகம் - தமீழகம் - தமிழகம் என்றும் வழங்கியிருக்கலாம். தமிழகத்தை அயலவர் குறிப்பிடும் மேற்கண்ட சொற்களில் இடம்பெறும் ரகரம் வருவதற்கு தர்மம் எனும் சொல் காரணமாக இருந்திருக்க வேண்டும்;. 'திராவிட' எனும் சொல்லும் 'த்ரமிள', 'த்ரமிட' எனும் சொற்களிலிருந்து மேற்கண்ட வகையில் பெறப்பட்ட சொல்லாகலாம். பிராகிருதத்தில் 'தமிட' எனத் தமிழ் பிராமிக் கல்வெட்டுகளில் குறிக்கப்படும் சொல்லும் 'த்ரமிள', 'த்ரமிட' எனும் சொற்களும் தர்மஏழ்மதுரைநாடு எனும் சொல்லில் இருந்து பெறப்பட்டவையாகலாம். ஏழ்மதுரைநாடு தொடக்கத்தில் ஏழிடம் என வழங்கப்பட்டுப் பின்னர் தர்மஏழிடம் என்ற பெயர் பெற்று தர்மேழிடம் - தர்மேடம் - தர்மீடம் - தர்மிடம் - தமிடம் - தமிட என வந்திருக்கலாம். தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள அஞ்சூர் என்பது சங்க காலத்தில் அஞ்சில்(ஐந்து இல்லம்) என்று வழங்கப்பட்டதை ஒப்பிட்டுப் பார்த்தால் ஏழிடம் என்பது ஏழ்நாடாக மாறியிருப்பதற்கு வாய்ப்பிருப்பதை அறிந்துகொள்ளலாம். ஏனெனில் தமராஜா(நெடுஞ்செழியன்) ஆட்சிப்பகுதியாகத் தமிழகம் அன்றைக்கு இருந்தது. 'ஏழ்உலகும் ஆளி'(பரிபாடல் 8:64) என்று முருகன் பாடப்பட்டிருப்பதும்

கவனிக்கத்தக்கது. அப்படியானால் கி.மு நான்காம் மூன்றாம் நூற்றாண்டுகளில் சிலோனில் வாழ்ந்தவர்களும் அதனை ஆண்டவர்களும் தமிழர் என்பது வெளிப்படை. இலங்கையின் ஆதி இரும்புக் காலத்தின் பிற்பகுதியில் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களிலும் மற்ற இடங்களிலும் செல்வாக்கு பெற்ற மொழியாகத் தமிழ் இருந்திருக்கிறது.[67] தர்மராஜன் எனும் முத்து சிவன் (நெடுஞ்செழியன்) மற்றும் மகாதிஸன் (பெருவழுதி) ஆகியோரது இலங்கை பௌத்தவிகாரக் கொடைகளில் அரச முத்திரையாக மீன் சின்னம் வடிக்கப்பட்டுள்ளது; இதுவரை கூறிய பாண்டியரின் பௌத்த உறவை நிரூபிக்கப் போதுமான, வலுவான சான்றாக இது அமைகின்றது. இலங்கையிலுள்ள பின்வரும் பிராமி கல்வெட்டுகள் மூன்றிலும் (68-70) மீன் சின்னத்துடன் தொடரி ஸ்வஸ்திகமும் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.



68



69



70

மூவேந்தரின் மீன், புலி, வில் சின்னம் போல் இலங்கையர் இந்தத் தொடரி ஸ்வஸ்திகத்தைத் தங்கள் பழங்கால ஆட்சிச் சின்னமாகக் கருதுகிறார்கள். மகாதிஸனின் நாணயத்தில் இச்சின்னத்தைக் காணலாம்.[71]

தொடரி ஸ்வஸ்திகமாக இல்லாமலும் மகாதிஸனின் கல்வெட்டில் ஸ்வஸ்திகம் இடம்பெற்றுள்ளது.



மீன் சின்னத்துடன் இது உள்ளதால் பாண்டியரின் பௌத்தச் சின்னமாக இதனைப் புரிந்துகொள்ளலாம். பாண்டியன் நெடுஞ்செழியனின் சதுரவடிவ செப்பு நாணயத்திலும் இந்த ஸ்வஸ்திகச் சின்னத்தை மீன் சின்னத்துடனும் யானைச் சின்னத்துடனும் காணலாம்.[72]



இது அசோகரது நாணயங்களில் காணப்படும் சின்னமாகும்

இதிலுள்ள 'ழி' எழுத்து மாங்குளக் கல்வெட்டிலுள்ள 'ழி' எழுத்தை ஒத்திருக்கிறது. மேற்கண்ட இலங்கை கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள 'அ'கரத்தைக் குறிக்கும் எழுத்து வடிவம் அசோகரது அகர வடிவமல்ல தமிழகத்திலுள்ள தமிழ் பிராமி வடிவமென்று அடையாளப்படுத்தப்பட்டுள்ள அகர வடிவமாகும். கி.மு 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என இலங்கை பிராமி கல்வெட்டுகள் முடிவு செய்யப்பட்டுள்ளன என்பதைச் சுட்டும் இரா.கிருஷ்ணமூர்த்தி

பெருவழுதி நாணயங்களிலுள்ள 'வ' எழுத்துக்கள் இலங்கை கல்வெட்டுகளிலுள்ள எழுத்துக்களை ஒத்துள்ளன என்கிறார். அதாவது இந்த நாணயங்கள் கி.மு 3ஆம் நூற்றாண்டின என்கிறார்.[73]

மற்றொரு சின்னம் தேவனாம்பியதிஸனுடையது எனக் கருதப்படும் நாணயங்களில் காணப்படுகிறது இது கொடிமரம் எனக் கருதப்படுகிறது. முன்பக்கத்திலுள்ள மகாதிஸனின் நாணயத்தில் இச்சின்னம் உள்ளது.



இந்தக் கொடிமரச் சின்னம் பெருவழுதியுடையது எனக் கருதப்படும் பின்வரும் நாணயத்திலும் காணப்படுகிறது.[74]



ஒரே காலகட்டத்தைச் சேர்ந்த இந்நாணயங்கள் ஒரே அரசனால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அதாவது, பெருவழுதி எனப்படும் மகாதிஸனால் (தேவனாம்பியதிஸன்) வெளியிடப்பட்டவை என்பது உறுதி. இது அசோகரது சின்னம் எனக் கருதப்படுகிறது. பெருவழுதியின் பௌத்தத் தொடர்பை இச்சின்னம் உறுதிப்படுத்துகிறது.

பின்வரும் பெருவழுதியின் நாணயங்களிலுள்ள சதுரவடிவத்தைப் பீடம் என்றும் அதற்குள்ளிருக்கும் வட்ட வடிவம் சிவலிங்கமென்றும் இரா.கிருஷ்ணமூர்த்தி கூறுகிறார்[75]



சதுர வடிவச் சின்னம்

ஆனால், இச்சின்னம் ஸ்தூபியாக இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. பர்ஹித், சாஞ்சி, பெஸ்நகர் ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள அசோகரது ஸ்தூபிகளைச் சுற்றிலும் வேலிஅடைப்பு அல்லது கிராதிஅடைப்பு காணப்படுகிறது. இது சதுர வடிவிலான வேலியாகும். இந்த வேலிக்கு 'அசோகர் வேலி' எனப் பெயர்.[76] எனவே, பெருவழுதி நாணயத்தில் காணப்படும் சதுர வடிவிலான வேலிக்குள் இருப்பது ஸ்தூபி என்ற முடிவிற்கு வரமுடிகிறது. அது சிவலிங்கமல்ல என்பது இதனால் பெறப்படுகின்றது. இதைப்போலவே தமிழகத்து பெருவழுதி நாணயங்களில் காணப்படும் திரிசூலம் இலங்கை கந்தரோடைப் பகுதியில் கிடைத்த நாணயத்திலும் இருப்பதைச் சுட்டும் இரா. கிருஷ்ணமூர்த்தி இதனை சிவனின் அடையாளமாகக் காண்கிறார்.[77]



திரிசூலமாகக்கருதப்படும்சின்னம்

ஆனால், பி.எல்.குப்தா இந்தச் சின்னத்தை மௌரிய நாணயங்களில் உள்ள சின்னத்தோடு தொடர்புபடுத்திக் காண்கிறார்.[78] எனவே அசோகருடனான பெருவழுதியின் பௌத்தத் தொடர்பை இச்சின்னங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

தாமிரபரணியாற்றின் மற்றொரு பெயராக 'சோலேன்' குறிக்கப்படுகிறது.[79] முச்சங்க வரலாற்றில் முருகனாக இடம்பெறுபவர் பெருவழுதி. அவரே குமரன். அதாவது முத்துசிவனின் குமாரன்(முத்துக்குமரன்). பௌத்தப் பேரறிவாளன்(மகாபஞ்ஞா) எனப்பட்ட இவரே ஞானப்பழம் என வழங்கப்படும் முருகனாவார். மகாவம்சம் தேவனாம்பியதிஸனின் தந்தையாக முத்தசிவனைக் குறிப்பிடுகிறது. இந்த முத்தசிவன்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். தம்மராஜா என இலங்கைக் கல்வெட்டுகள் இவரைக் குறிப்பிடுகின்றன. இலங்கையின் ஹண்டகலவில் உள்ள பிராமி கல்வெட்டு திஸனை (மகாதிஸன், பெருவழுதி) பெருமகன் பாண்டியனின் மகனாகவே அடையாளப்படுத்துகின்றன.[80] அலெக்சாண்டரின் காலத்தில் இந்தியாவிற்கு வந்த கிரேக்கத் தூதுவர் மெகஸ்தனீஸ் (கி.மு.302-296) பாண்டியநாடு பற்றிக் குறிப்பிடுகையில் அது சிவனின் மகளால் ஆளப்படுவதாகக் குறிப்பிடுகிறார்.[81] இந்த சிவகுமாரியின் பெயரால் குமரியாறு என்ற பெயர் உருவாகியிருக்கலாம். இந்த சிவன் பாண்டியன் நெடுஞ்செழியனாகத்தான் இருக்கவேண்டும் எனத் தோன்றுகிறது. பின்னாளிலும் மாணிக்கவாசகர் பாண்டிய நாட்டை சிவனுக்குரியதாகக் காட்டுகிறார்.[82] தடாதகைப் பிராட்டியார் சிவனை மணந்தார். இவர்களுக்கு உக்கிர குமாரப் பாண்டியன் மகனாகப் பிறந்தார். காய்சினவழுதி[83], உக்கிரப்பெருவழுதி (புறநானூறு.21:) என்றெல்லாம் இவர் அழைக்கப்பட்டார். தடாதகைப் பிராட்டியாரின் தாய் காஞ்சனமாலை. தந்தை மலையத்துவசப் பாண்டியன்.84 தந்தையும்(நெடுஞ்செழியன்) மகனும்(பெருவழுதி) சேர்ந்துதான் சங்க இலக்கியத்தை அதாவது பௌத்த சங்க இலக்கியத்தைத் தொகுப்பித்தவர்கள். தொகைசெய்மரபு பௌத்தத்திற்கு உரியது. 'தொகையாக்கினானும் சிவனே' என ஞானசம்பந்தர் சங்க இலக்கியத்தோடு சிவனைத் தொடர்பு படுத்துவதற்கான மரபானது வழக்கில் இருந்திருக்கிறது.[85] நெடியோன் எனப்படும் நெடுஞ்செழியனை பரிபாடல் ஆற்றோடு தம் புறநானூற்றுப் பாடலில் நெட்டிமையார் தொடர்புபடுத்துகிறார்.[86] சிவனாகவும் முருகனாகவும் சங்கத்தில் அமர்ந்திருந்தவர்கள் நெடுஞ்செழியன் (முத்துசிவன்) மற்றும் பெருவழுதி (குமரன்) ஆகியோரே. இவர்களே தென்னாட்டுக் கடவுளர்களாக வணங்கப்படுபவர்கள். கமில்சுவலபில் இத்தொடர்பைத் தொன்மங்கள் வழி தந்தை(நெடுஞ்செழியன்) மகன்(பெருவழுதி)

உறவாக சிவனாகவும் முருகனாகவும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.[87] பொதிகை மலையில் சைவர்கள் வழிபடும் அவலோகிதீஸ்வரர் தமது மனைவி உமையுடன் வீற்றிருக்கும் காட்சி சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இதே சிற்பத்தை பௌத்தர்கள் அவலோகித போதிசத்துவராக வழிபடுகின்றனர். அவலோகிதரை குவன் என பௌத்த மரபு கருதுகிறது.[88] பகவன் என்பது புத்தருக்கு வழங்கப்பட்ட பெயர். பேச்சு வழக்கில் பகுவன் என்று வழங்கப்படுவதைக் காணலாம். பகுவன் என்பதிலுள்ள பகரம் குறைந்து குவன் என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். மாங்குளக் கல்வெட்டுகளில் வரும் 'குவன்' எனும் சொல்லாடல் பூர்வபௌத்தச் சொல்லாடல் என்பதை இது உறுதி செய்கிறது.[89] அவலோகிதரின் அருகிலிருப்பது அவரது மனைவி தாரா என பௌத்தர்களால் கருதப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பௌத்தத் தலமான தேரூர் (தேரனூர்) கிராமத்திலுள்ள அவலோகிதீஸ்வரர் ஆலயம், அங்குள்ள மக்களால் இன்றைக்கு நாயனார்கோயில் என்று அழைக்கப்படுகிறது. தாராதேவியுடன் வீற்றிருக்கும் அந்த அவலோகிதீஸ்வரருக்கு புத்தர் பிறந்த நாளான சித்திரா பௌர்ணமியில் விழா எடுக்கப்படுகிறது. தாராசுக்கம் எனும் பௌத்த நூல் புத்தலகிரி (பொதிகை) நிவாசினியாக அவலோகிதரைக் குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கது.[90] நெடுஞ்செழியனின் ஆட்சிப்பகுதியாக இருந்ததால்தான் இது 'தென்னவன் பொதியில்' என்றும் வழங்கப்பட்டுள்ளது.[91] முச்சங்கம் என்பது கற்பனையல்ல என்பது மேற்கண்ட வரலாற்றுத் தரவுகளால் உறுதியாகிறது. எனவே, சங்க இலக்கியங்கள் எனப்படுபவை பௌத்த சங்க இலக்கியங்கள் எனத் தெரியவருகின்றன.

மகாதிஸனின் தம்பியாக மகாநாகன் என்பவரை மகாவம்சம் சுட்டுகிறது. இந்த மகாநாகன் உரோகண நாட்டில் (இலங்கையின் தெற்குப்பகுதி) அரசாண்டு கொண்டிருந்த பாண்டியப் பரம்பரையை அழித்து அப்பகுதியைத் தனதாக்கிக்கொண்டான் என்றும் அனுராதபுரத்தில் (இலங்கையின் வடக்குப்பகுதி) ஆண்டுகொண்டிருந்த சிங்கள அரசரான மகாதிஸனின் தம்பி இந்த மகாநாகன் என்று தமிழக வரலாற்றாசிரியர்களும் நம்பி வருகிறார்கள்.[92] ஆனால் மகாதிஸனும் மகாநாகனும் சிங்கள அரசர்கள் அல்லர்; தமிழ் அரசர்கள்தாம். இந்த மகாநாகன் முரஞ்சியூர் முடிநாகராயர் என அறியப்படும் சங்கப் புலவராக இருக்கலாம். முரஞ்சியூர் முடிநாகராயரால் தொகுக்கப்பட்டதாக அகநானூறு கருதப்படுகிறது. இளநாகனார் (ஈழநாகனார்) என்ற சங்க இலக்கியப் புலவரும் ஈழத்தை ஆண்ட தமிழ் அரசராக இருக்க வேண்டும்.[93] இலங்கை பிராமிக் கல்வெட்டும் மகாவம்சமும் ஈழநாகன்

என்னும் அரசன் பற்றி குறிப்பிடுகின்றனர்.[94] நக்கீரரின் இறையனார் (நெடுஞ்செழியன்) அகப்பொருள் உரையைக் கேட்ட வர்களில் இவரும் ஒருவர் எனக் கருதப்படுகிறார். பொத்த நெறியின்படி வாழ்ந்தவரை இறைவன்(தெய்வம்) என்கிறது குறள்.[95] இதன்படி இறைவன் என்று இங்குக் குறிப்பிடப்படுபவர் நெடுஞ்செழியன்தான் எனலாம். இறையனார் களவியல், நெடுஞ்செழியனால் செய்யப்பட்டதாகக் கொள்ளலாம். நெடுஞ்செழியனின் அவைப் புலவர் நக்கீரர் அதற்கு உரை செய்திருக்கவும் வாய்ப்பிருப்பதை அவதானிக்கமுடிகிறது. மகாதிஸனாகிய பெருவழுதியின் தங்கை வருணத்தா சங்க இலக்கியப் புலவரான சங்கவருணராக இருத்தல் வேண்டும். ஈழத்து பூதஞ்சேந்தனார் முதலிய ஈழத்தைச் சேர்ந்த வேறு புலவர் பலரும் சங்க இலக்கியம் செய்துள்ளனர். சங்கஇலக்கியம் (புறம்:158,168) குறிப்பிடும் குதிரைமலை குறுநில மன்னர்களான எழினி மற்றும் பிட்டன்கொற்றன் ஆகியோரும் ஈழத்தைச் சார்ந்தவர்கள் என்று ஏற்கெனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.[96] ஆகமொத்தத்தில் முத்து சிவனின் காலத்திலும் (கி.மு.307-247) அவரது மகனான பெருவழுதியின்; காலத்திலும் (கி.மு.247-207) இன்றையத் தமிழகமும் இலங்கையும் ஒட்டுமொத்தமாக பௌத்த அரசாட்சிக்குள் விளங்கியிருந்தன எனக் கருதலாம். தமிழ்நாட்டிலுள்ள பிராமிகல்வெட்டுகள் கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்று முதன் முதலில் கே.வி.சுப்பிரமணிய ஐயரால் கூறப்பட்டது.[97] ஆனால் இக்கருத்து பண்பாட்டின் பிற கூறுகளில் இருந்து ஆதரவான சான்று கிடைக்காதவரை ஒப்புக்கொள்ளத் தக்கதன்று என்று கருதப்பட்டது.[98] சங்ககால நாணயங்களை ஆராய்ந்த நாணயவியலாளர் இரா.கிருஷ்ணமூர்த்தி தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் முத்திரை நாணயங்கள் குறித்தொரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்; நந்தர்களின் முத்திரை நாணயங்களைவிட மௌரியர் நாணயங்களே தமிழகத்தில் அதிகமாகக் கிடைத்துள்ளன என்பதைச் சுட்டும் அவர் தமிழகத்துடன் மௌரியர் நெருக்கமான உறவு கொண்டிருந்தனர் என்பதற்கு இவை சாட்சியங்களாயுள்ளன என்கிறார்.[99] பௌத்த அரசாட்சிக்குச் சான்றாக, மேலும் மூவேந்தருடைய நாணயங்களிலும் ஒரு பக்கத்தில் யானைச் சின்னமும் அசோகரின் நாணயங்களில் காணப்படுவது போன்ற புத்தரது ஆலயம் எனப்படும் மும்முகடு, தூபி, வேலியிட்ட (போதி) மரம் முதலிய பௌத்தச் சின்னங்கள் பொதுவாகவும் அடுத்த பக்கத்தில் மூவேந்தருக்கும் தனித்தனியே உரிய அவரவரது மீன், வில்,புலி ஆகியன சிறப்பாகவும் இடம் பெற்றிருப்பதைக் கவனிக்கலாம். கிருஷ்ணமூர்த்தியின் நாணயப் படங்களில் இப்பதிவுகளைக் காணலாம்.



பாண்டியர் நாணயம்



சேரர் நாணயம்



யானைபுத்தரது அடையாளம் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. உத்தரபிரதேசத்திலுள்ள கல்சி நகரப் பாறையில் அசோகரால் யானை வடிவம் ஒன்று வடிக்கப்பட்டு, சிறந்த யானை எனப் பொருள்படும் கஜோதமஹ் என்று பிராமிச் சொற்றொடரில் குறிக்கப்பட்டுள்ளது.[100] இதேபோல் ஒரிசாவின் பூரி நகரத்திலுள்ள தொலி எனும் இடத்தில் உள்ள பாறைக் கல்வெட்டிலும் யானை உருவம் பொறிக்கப்பட்டு, அதற்குப் பக்கத்தில் 'வெள்ளையானை' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகில் 'உலகம் முழுமைக்கும் மகிழ்ச்சியை அளிப்பவர்' எனும் குறிப்பு உள்ளது. அசோகரது கல்வெட்டுகளைத் தொகுத்தவரான கி.க.சர்க்கார் இந்த யானை பற்றிக் குறிப்பிடுகையில் இது புத்தரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு குறியீடு என்கிறார்.[101] வின்சென்ட் ஏ ஸ்மித் இதே கருத்தை ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்.[102]

மதுரைக் காஞ்சியில் (397) மாங்குடி மருதனாரும் நெடுநல்வாடையில் (39-40) நக்கீரரும் பிடகம் எனும் பௌத்தச் சொல்லாடலையே தங்களது பாடல்களில் நேரடியாகப்

பயன்படுத்தியுள்ளனர். பாண்டியன் நெடுஞ்செழியனின் மீது அவரது அவைப் புலவர்களால் பாடப்பட்டவை மேற்குறிப்பிட்ட இரண்டு பாடல்களும் என்பது கவனிக்கத்தக்கது. அகத்தியரிடம் மாணவராகும்படி நக்கீரரை சிவன் அனுப்பியதாகக் கூறப்படுவதும் இங்கு நோக்கத்தக்கது.[103] இதனை, பௌத்த நெறியைப் பயில அனுப்பினார் எனப் புரிந்துகொள்ளலாம். இந்தப் பின்னணியில் நாணயங்களையும் கல்வெட்டுகளையும் கொண்டு, மூவேந்தர்களாலும் பௌத்தம் போற்றப்பட்டது என்ற முடிவிற்கு வரமுடிகிறது. நெடுஞ்செழியன் சேர, சோழ, குறுநில மன்னர்களையும் வென்று ஒருகுடையின் கீழ் கொண்டுவந்திருந்ததையும் இங்கு நினைவில் கொள்ளவேண்டியுள்ளது. அசோகரின் பௌத்த மதமாற்ற காலத்திற்கு(கி.மு.261) முன்னரே பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சி தென்னகத்தில் ஏறத்தாழ 45 ஆண்டுகளைக் கடந்திருந்தது என மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், அசோகருக்கு முன்னோடியாகத் தென்னகத்தில் பௌத்தம் வளர்த்தவர் நெடுஞ்செழியன் என்பது புலனாகும்.

கரிகால் சோழனுடையது என்று கருதப்படும் நாணயம் இதுவாகும்.[104]



இந்த நாணயத்தில் வில்லும் புலியும் ஒரு பக்கமும் மீன் மற்றொரு பக்கமும் இடம்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. இதில் மீன் சின்னம் மட்டும் தனியாக ஒரு பக்கத்தில் பெரிய அளவில் அமைந்திருப்பது பாண்டியர்க்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதை உணர்த்துகிறது. இது பாண்டியன் நெடுஞ்செழியன் அல்லது பெருவழுதியின் நாணயமாதல் வேண்டும். பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சேரன் மாரிவெண்கோ, சோழன் ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி ஆகிய மூவேந்தரும் ஒருங்கிருந்த காட்சியைப் பாராட்டி வாழ்த்துகிறார் ஔவையார். அதில் நாகலோகத்தைப் போன்ற வளமுடைய பகுதிகளைக் கொண்ட இந்த நிலவுலகம் தமது என்று உரிமை

கொள்ளப்பட்டனவாயிருந்தாலும் அது அவருடன் செல்லாது வேற்றோருக்கே சென்று ஒழியும். எனவே, வாழும் காலத்து நல்வினை புரிந்து நீங்கள் மூவரும் வானத்து விண்மீன்கள் மற்றும் மழைத்துளிகள் ஆகியவற்றைக் காட்டிலும் நீண்ட நாட்கள் வாழ்க என வாழ்த்துகிறார்(புறம்.367). இப்பாடலில் ஔவையாரால் பௌத்த நிலையாமை கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மூவேந்தரும் ஒன்றுபட்டிருந்த நிலைமையைக் கூறும் அவ்வையாரின் இந்தப் பாடல் மூலம் மேற்கண்ட நாணயம் பெருவழுதிக்குரியதாக இருக்கலாம் என்ற முடிவுக்கு வரமுடிகிறது.

இலங்கையிலும் (அன்றைய தம்மபண்ணி) பாண்டியர் ஆட்சியில் பௌத்தம் பரவியிருந்தது. தொடக்ககால தமிழ்பிராமி கல்வெட்டுகளைத் தமது இறுதி முடிவின்படி கி.மு.200க்கு முன் ஜிராவதம் மகாதேவன் நகர்த்தவில்லை.[105] ஆனால் இதுவரை கண்ட சான்றுகளால், மூன்று பௌத்த தமிழ்சங்கங்கள் நிகழ்ந்த காலகட்டம் கி.மு.3ஆம் நூற்றாண்டு என்றும், அவற்றை நடத்திய நெடுஞ்செழியன் மற்றும் பெருவழுதி ஆகியோரின் கல்வெட்டுகளும் அதே கி.மு.3ஆம் நூற்றாண்டுக் காலகட்டத்தைச் சார்ந்தவை என்றும் முடிவுசெய்யலாம். எனவே, சங்க இலக்கியங்களில் முற்பட்டவை இக்காலத்தன எனலாம். கி.மு.302இல் சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்கு வந்திருந்த மெகஸ்தனீஸ், தப்ரோபணி (தம்மபனி என அசோகரால் குறிக்கப்படும் இலங்கை) முதன்மை நிலத்தில் இருந்த ஆறு ஒன்றினால் பிரிக்கப்பட்டிருந்ததாகவும் அங்கு வாழ்பவர்கள் தூயநெறி சார்ந்து வாழ்ந்த மக்கள் ஆவர் என்பதாகவும் கூட்டுகிறார்.[106] மெகஸ்தனீஸ் குறிப்பிடுவது பௌத்த நெறி சார்ந்து வாழ்ந்துவந்த மக்களை என்பது தெளிவாகத் தெரிகிறது. நெடுஞ்செழியனின் ஆட்சிக்காலத்து பௌத்த நிலைமையினை இந்தக் குறிப்பு உறுதி செய்கிறது. தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் மௌரியர் கால வடஇந்திய கறுப்பு வண்ணப் பானை ஓடுகள் தமிழகத்துடன் மௌரியர் கொண்டிருந்த உறவிற்குச் சான்றுகளாய் நின்று மேலும் வலுசேர்க்கின்றன. இலங்கையிலும் தமிழகத்திலும் பரவலாக அகழ்வாய்வுகளில் கிடைத்த பானைஓடுகளில் கிடைக்கும் பிராமி எழுத்துகள் பொதுமைத்தன்மை உடையனவாய் உள்ளமை தற்போது ஆய்ந்தறியப்பட்டுள்ளது.[107] அவை பௌத்தம் சார்ந்தவையாக உள்ளன. எனவே, பண்டைத் தமிழகமான இலங்கையிலிருந்தும் பௌத்தப் புலவர்கள் சங்க இலக்கியத்தை ஆக்கியிருக்கிறார்கள்என்பது தெளிவாகிறது. ஆனால்சங்கசெய்யுட்களில் பௌத்த. சமண குகைகளைப் பற்றியோ முனிவர்களைப் பற்றியோ செய்திகள் இல்லை என்ற முடிவிற்கு வந்துவிட்ட மயிலை சீனிவேங்கடசாமி, சங்க இலக்கியங்கள் பெரும்பான்மையும்

சைவ-வைணவர்களால் எழுதப்பட்டவை என்கிறார்; காதலையும் வீரத்தையும் பாடிய பாடல்களில் சமண. பௌத்தத் துறவிகள் இடம்பெறவேண்டிய அவசியம் இல்லை என்கிறார்.[108] பௌத்தத்தில் பெரும்பான்மையினராய் குடும்பிகள் இருப்பதை மயிலையார் இவ்விடத்தில் கணக்கில் எடுத்துக்கொண்டிருந்தால் இப்படியொரு முடிவிற்கு வந்திருக்க மாட்டார். குடும்பிகளை நல்வழிப்படுத்துவது பௌத்தத் துறவிகளின் முதன்மையான கடமையாகும். இல்லறத்தாரிடம் பிட்சையெடுக்கும்படி பிட்சுகளுக்கு விதிக்கப்பட்டதென்பது இந்தக் காரணத்தை மையமிட்ட திட்டமாகும். தொகைநூல்களில் சமண-பௌத்தச் சிந்தனைகளை அவ்வளவாகக் காணஇயலவில்லை; அதேவேளையில் வைதீகக் கருத்துகள் உறுதியாக இடம்பெற்றுள்ளன என்பார் சேவியர் தனிநாயகம் அடிகள்.[109] ஆனால், இப்பொழுது இந்தப் புதிய வாசிப்பில் இங்கு பொதுவாக பௌத்தத் தத்துவங்களை வலியுறுத்துவனவாய் சங்க இலக்கியங்கள் மிளிர்கின்றன. சாத்தன், நாகன் என்ற சங்கப்புலவர்களின் பெயர்கள் பௌத்தம் சார்ந்தவையாய் உள்ளன.[110] வீரயுகப் பாடல்கள், கதைகூறும் காலத்தைச் சார்ந்தவை என்பதையும் தொடர்நிலைச் செய்யுட் காலத்தைச் சார்ந்தவை என்பதையும் நினைவுபடுத்தும் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார். இவ்விரு தன்மைகளும் சங்க இலக்கியத்தில் இல்லை என்கிறார். மேலும் பெரும்பான்மை சங்கப் பாடல்கள், பெயர் தெரிந்த புலவர்களால் பாடப்பட்டுள்ளன என்பதையும் தெரியாதனகூட பெயர் குறிக்கப்பட்டுப் பின்னர் மறைந்திருக்கவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி, சங்கப்பாடல்கள் வீரயுகப்பாடல்கள் அல்ல என்பார்[111] இக்கருத்து ஏற்றுக்கொள்ளத்தக்கதாய் உள்ளது. சங்கப் பாடல்கள் பௌத்தம் சார்ந்த புலவர்களால் வாய்மொழி மரபை உள்வாங்கிப் பாடப்பட்டவை எனலாம். இதற்கு தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் கருத்தும் வலுசேர்ப்பதாய் உள்ளது.

பௌத்த அறத்தைத் தலைமையேற்றுப் பறைசாற்றியவர்கள் பறையர்கள் எனப்பட்டனர். களப்பிரர் காலம் வரை தொடர்ந்து செல்வாக்கிலிருந்த பௌத்தம், வைதீகப் பல்லவர்களால் அழிக்கப்பட்டபோது, பௌத்த காலத்தில் பெருமதிப்பிற்குரியவர்களாய் இருந்த பறையர்கள் கால்டுவெல் குறிப்பிடுவது போன்று போரில் வென்றெடுக்கப்பட்டு, வெற்றி பெற்ற திராவிட இனத்தாரின் ஒவ்வொரு ஊரிலும் சேரிகளில் அடிமைகளாகச் சிறை வைக்கப்பட்டார்கள். இனிதே ஆண்ட பரம்பரையையும் உலகிற்கு அறம் சொன்ன பரம்பரையையும் சேர்ந்த மாங்குடி மருதன்தான் பாண்டியன் நெடுஞ்செழியனின் சங்கத்துத் தலைமைப் புலவர். அவரால் பாடப்படுவதைப் பெருமையாக நினைத்தவன் பாண்டியன்

நெடுஞ்செழியன். அசோகரின் பௌத்த மதமாற்ற காலத்திற்கு(கி. மு.261) முன்னரே பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆட்சி தென்னகத்தில் ஏறத்தாழ 45 ஆண்டுகளைக் கடந்திருந்தது என்பதை மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால் அசோகருக்கு முன்னோடியாகத் தென்னகத்தில் பௌத்தம்வளர்த்தவர் நெடுஞ்செழியன் என்பது புலனாகும். இந்தப் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு பௌத்த அறமாகிய நிலையாமை கோட்பாட்டை வலியுறுத்தவே மதுரைக்காஞ்சியை மாங்குடி மருதனார் பாடினார். நெடுஞ்செழியனின் மகனான தருமபுத்திரன் எனும் பெருவழுதிக்கும் இந்த நிலையாமை கோட்பாட்டை பாலைகௌதமனார் வலியுறுத்தியுள்ளார் (புறம்:366). சங்கத்துக் காஞ்சித் திணைப் பாடல்கள் பௌத்த நிலையாமை கோட்பாட்டை வலியுறுத்துவனவேயன்றி வேறல்ல.[112] இந்த நிலையாமை கோட்பாடு (*Impermanance Theory*) என்பது, 'எதுவுமே நிரந்தரமானது இல்லை, எல்லாமே மாற்றத்துக்கு உரியன' என்ற இயங்கியல் தத்துவத்தின் மூல ஊற்றாகும். இக்கோட்பாடு பௌத்தத்திலிருந்து கிரேக்கத்துக்குச் சென்று ஹெராக்ளீட்டஸால் எடுத்துரைக்கப்பட்டது. அதுவே மீண்டும் மார்க்சிய மூலவர்களால் விஞ்ஞான உலகத்திற்குத் தகுந்த முறையில் நவீனப் புரிதல்களோடு இயங்கியல் தத்துவமாக வடித்தெடுக்கப்பட்டது.[113] மார்க்சியத்திற்கு மூலஊற்றாய் கிறித்துவம் உள்ளதையும் அந்தக் கிறித்துவத்திற்கு மூலஊற்றாய் பௌத்தம் திகழ்வதையும் ஆழமாய்ப் புரிந்துகொள்ளமுடிகிறது.[114] ஆனால் இதுவரை அசோகரது கல்வெட்டுகளோ பௌத்த சமயக் கோட்பாடுகள் அடங்கிய அக்காலத்து இலக்கியமோ தமிழ்நாட்டில் இல்லையாதலால் அசோகர் பரப்பிய பௌத்த சமயத்தையோ அவரது எழுத்துகளையோ தமிழர்கள் ஏற்கவில்லை என்ற கருத்து தொடர்ந்து நிலவிவருகிறது.[115]

துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான் கல்லது குடியுமில்லை[116]

என்று மாங்குடி மருதனால் பெருமிதமாகப் பேசப்படும் உயர்நிலையில் அன்றைக்குப் பறையர் இருந்துள்ளனர் என்பது மிகத் தெளிவாகிறது. சாதி அடையாளங்களை பௌத்தம் வெறுத்து ஒதுக்கியது. அன்றைய பரந்த இந்தியாவில் அரச நெறியாக பௌத்தம் இருந்தபோது இன்றைய எல்லா சாதியினரும் பௌத்தர்களாய் இருந்தார்கள். அதனால் சங்க இலக்கியத்தைப் பாடியவர்களாய் அனைத்துப் பிரிவினரையும் காணலாம். இன்றையப் பறையர் என்போர் அன்று பௌத்தம் போற்றி அதைப் பறைசாற்றி அறிவித்த அனைத்துப் பிரிவினரும் உள்ளடங்கிய ஒரு தொகுப்பு எனலாம். பறையின் மூலமாகச் சொல்லப்படும் செய்தி நிலையாமை தத்துவத்தை வலியுறுத்துவதாய் உள்ளது.[117] பாணர்

என்போரும் இதேபோல பௌத்த அறங்களை மனத்தில் இருத்தி பிறருக்கு எடுத்துரைத்தோரே. துடியர், கடம்பர் என்போரையும் இவ்வகையில் கருதவேண்டியிருக்கிறது. சாதி அடையாளமாக இல்லாமல் பௌத்தநெறி பரப்பிய குடிகள் என்ற அடிப்படையிலேயே இந்நான்கு வகையாரையும் உயர்நிலையில் வைத்துப் புரிந்துகொள்ளல் வேண்டும். எனவேதான் பௌத்தம்வளர்த்த இந்நான்குகுடியினைப்போல் சிறப்புடைய குடி இல்லையென்று பௌத்த மாங்குடி மருதன் கருதியதாகத் தெரிகிறது. கால்டுவெல் சங்க இலக்கியப் பயிற்சி உடையவராய் இருந்ததாகத் தெரியவில்லை என்றாலும், ஆரிய வருகையின் போது இம்மண்ணின் ஏஜமானர்களாக இருந்தவர்கள் என்று பறையர் பற்றி அவர் கணித்த கணிப்பு மிகச் சரியானதே என்பது இதுவரை கண்டவற்றால் உறுதிப்படுகிறது. பௌத்த நெறி சார்ந்து வாழ்ந்து வந்த பௌத்தர்களான பறையர் எனப்பட்ட திராவிடர்கள் பௌத்த நெறி சாராத மற்ற திராவிடரால் வெற்றிகொள்ளப் பட்டார்கள் என்று நிரூபிப்பதற்குப் போதுமான சான்றாக அவரது திராவிடர் குறித்த உடற்கூறு மானுடவியல் கட்டுரை உள்ளது. எனவேதான் பௌத்த நெறி சாராத திராவிடரால் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் அக்கட்டுரை நீக்கப்பட்டுள்ளது. இலங்கையை 'பறையர்கள்ஊர்' என்று இராமாயணக் கீர்த்தனை சுட்டுவது பௌத்தர்களைக் குறிக்கும் மற்றொரு சொல் பறையர் என்பதற்கு ஆதாரமாகும்.[118]

உயரிய அறங்களோடு கூடிய பண்பட்ட ஒரு சமுதாயமாக சங்க சமுதாயம் அமைந்திருந்தது. பௌத்தம் அதற்கு அடிப்படையாய் இருந்தது. அசோகரும் அவரது பிள்ளைகளும்; நெடுஞ்செழியனும் அவரது பிள்ளைகளும் தங்களது அர்ப்பணிப்பு வாழ்க்கையாலும் அன்பினாலும் தலைமையேற்று அந்த உயரிய சமூகத்தை ஆக்கித் தந்தார்கள். எவ்வித ஏற்றத்தாழ்வுகளுமற்ற உயரிய சமுதாயம் ஆட்சியாளர்களாலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அநேகமாக கால்டுவெல்லும் அவரது குடும்பத்தாரும் கிறித்துவ நெறிப்படி காண விழைந்தது அப்படிப்பட்ட ஒரு சமத்துவ சமுதாயமே. எனவேதான் கால்டுவெல்லின் ஆய்வுகளிலும் சமூகச் செயற்பாடுகளிலும் 'தன்னைப் போல் பிறரை நேசி' எனும் மானுடத்தன்மை உயிர்த்துடிப்புடன் அசைவாடிக் கொண்டிருப்பதை அடையாளம் காணமுடிகிறது.

கொற்கையில் அகழ்வாய்வைத் தொடங்கிய கால்டுவெல்லின் நோக்கம், புதையுண்டு கிடக்கும் இப்படிப்பட்ட பெருமைமிகு வரலாறுகளைத் தோண்டியெடுக்கவேண்டுமென்பதே. இலங்கை வரலாற்றில் முதலரசனாக அறியப்படும் விசயன் வடக்கிலிருந்து

வந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. விசயனுக்குப் பிள்ளை இல்லையாதலால் அவனது தம்பி மகனான பாண்டு வமிச தேவனை அரசனாக நியமித்தான். விசயனைப்போலவே இவனும் வடக்கிலிருந்து வந்ததாகச் சொல்லப்படுவதைச் சுட்டும் கால்டுவெல். உண்மையில் பாண்டுவாசன் (கி.மு.444-414) பாண்டிய வமிசத்து இளவரசன் என்று சொல்வதில் பெரும்பிழையில்லை என்கிறார். இங்கு வடக்கு என்பதை இலங்கைக்கு வடக்கு என்றே கொள்ளவேண்டும். பாண்டியப் பெயரை உடைய இரு அரசர்கள் பெயரால் இலங்கையில் கட்டப்பட்டுள்ள மூன்று நீர்த்தேக்கங்களையும் இதற்குச் சாட்சியங்கள் ஆக்குகிறார். ஆரிய நாகரிகம் கி.மு.500க்குப் பின் நுழைந்திருக்க முடியாது என்றும் அதற்கு முன்பே பாண்டியர்கள் சிறப்புடன் விளங்கியிருக்கவேண்டும் என்றும் கருதி கி.மு.700இல் ஆரிய நாகரிகம் பாண்டிய நாட்டில் அல்லது கொற்கையில் பரவியிருக்கவேண்டும் என்று முடிவு செய்கிறார்.[119] தாம் மேற்கொண்ட கொற்கை அகழ்வாய்வின் பலனாக கால்டுவெல் இந்த முடிவுக்கு வந்திருக்கலாம். தமிழகத்திலும் இலங்கையிலும் பரவலாக அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் காலம் கரிமப் பகுப்பாய்வு(C14) மூலம் கி.மு.7ஆம் நூற்றாண்டு என இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ளமை கால்டுவெல்லின் கருத்து உறுதிப்பட வகைசெய்துள்ளது. மதுரை அரசர்கள் வரிசையிலுள்ள எல்லா அரசர்களுடைய பெயரும் முழுக் கற்பனைஎன்று கால்டுவெல்கருதவில்லை. ஆனால். கல்வெட்டுகளினால் உண்மை நிறுவப்படும் வரையில் அவற்றின் தன்மை நம்பக்கூடியதன்று என்று தெரிவித்திருக்கிறார்.[120] இப்பொழுது இந்தக் கட்டுரையில் கல்வெட்டுகளாலும் நாணயங்களாலும் பிறவற்றாலும் கால்டுவெல் விரும்பியவாறு பாண்டியர் வரலாறு குறிப்பாக நெடுஞ்செழியன். பெருவழுதி ஆகியோரின் காலத்து வரலாறு நிறுவப்பட்டுள்ளது. கால்டுவெல் விரும்பிய சமத்துவ சமூகம் அந்தப் பழந்தமிழகத்தில் பௌத்தத்தால் ஏற்கெனவே சாத்தியப்படுத்தப்பட்டிருக்கிறது.

குறிப்புதவி நூல்கள் மற்றும் குறிப்புகள்

1. *Annual Report of the SPG for the Year : 106-107(Y.Vincent Kumara Doss,2008 (Reprint):193-194*
2. *J.A.Sharrock, Bishop Caldwell :A Memoir: 15(Y.Vincent Kumara Doss,2008 (Reprint):195*
3. *Y. Vincent Kumara Doss, Robert Caldwell: A Scholar - Missionary in Colonial South India, 2008(Reprint) :198*
4. *Ibid : 192*
5. *Letter from Caldwell to Revd.H.W.Tucker, Secretary to the SPG, London, June 20, 1883, CLR 52, Madras VII(August 1880 - April 1886): 241 - 243. Rhodes House, Oxford.*

(Y.Vincent KumaraDoss, 2008(Reprint) : 203

6. Robert Caldwell, A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages, Chennai : University of Madras, 1956

7. Ibid, Chennai: kavithasaran, 2008 (Second edition Reprint)

8. எஸ்.வையாபுரிப் பிள்ளை(ப.ஆ.), தமிழ்ப் பேரகராதி - தொகுதி 3, சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம், 1982(ம.அ.)

9. Are the Pariars(Parayas) of Southern India Dravidians? எனும் இக்கட்டுரை சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்பில் நீக்கப்பட்டுள்ளது. இக்கட்டுரை கவிதாசரணால் 'தென்னிந்தியாவைச் சேர்ந்த பறையர்கள் திராவிடர்களா?' எனும் தலைப்பில் 'தமிழ்ச் சமூகமும் தலித்தியக் கருத்தாடலும்'; நூலில் (194 - 212) தமிழாக்கம் செய்யப்பட்டுத் தரப்பட்டுள்ளது.

10. முருகர்.குணசிங்கம், இலங்கையில் தமிழர் ஒரு முழுமையான வரலாறு(கி.மு.300 - கி.பி.2000),சிட்னி: ஆ.ஏ. வெளியீடு, தென்னாசியவியல் மையம், 2008:40

11. Iravatham Mahadevan, Early Tamil Epigraphy, the earliest to the 6th Century, A.D., Chennai:Cre - A and U.S.A.: Harvard University, 2003: 314 - 317

12. அம்பேத்கர், அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும், தொகுதி 22,புதுடில்லி: டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,சமூகநீதி மற்றும் அதிகாரமளிப்பு அமைச்சகம், 2000:487

13. Hermann OldenBerg(Edr.), The Dipavamsa, Asian Educational Services, Delhi, 2006 (Fourth reprint): 19.27

14. Iravatham Mahadevan, ibid:62

15. இரா. செபபால்(உ.ஆ),அகநானூறு,புத்தகம்1,சென்னை: நியூ ஞெகரி புக்ஹவுஸ்(பி)லிட்2004:பாடல் 81:13

16. வில்ஹெம்கெய்கர்,மகாவம்ச,தமிழில்எஸ்.பொ., சிங்களர்கதை, சென்னை:மித்ர கிரியேஷன்ஸ், 19.27

17. Hermann OldenBerg(Edr),ibid: 18.41

18. Iravatham Mahadevan, ibid: 126 -137

19. கா.ராஜன், தொல்லியல் நோக்கில் சங்க காலம், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,2004:59

20. கா.சிவத்தம்பி. சங்கஇலக்கியம் கவிதையும் கருத்தும், சென்னை:உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2009:7,8 &130

21. P.T. Srinivasa Iyengar, History of the Tamils from the Earliest times to 600 A.D., New Delhi - Madras Asian Educational services, 1989(Third AES reprint):246

22. சோ.ந.கந்தசாமி தத்துவ நோக்கில் தமிழ் இலக்கியம், சென்னை:மெய்யப்பன் பதிப்பகம்,2005:77 - 78

23. ரங்கநாயகி மகாபாத்ரா, 'புறநானூறும் பௌத்த நிகாயங்களும் காட்டும் அரசன் - ஓர் ஒப்பீடு',தமிழியல் ஆய்விதழ் 57 &58, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,2000:43 - 52

24. க.நெடுஞ்செழியன், சித்தண்ணவாயில், சென்னை: பாலம், 2006:74

25. மேலவர், சங்ககால தமிழர் சமயம், சென்னை: பாலம், 2006 :27
26. *Iravatham Mahadevan, ibid: 127*
27. தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, தமிழ்நாட்டு வரலாறு - சங்க காலம் - அரசியல், சென்னை: தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983:615-617
28. *K.Indrapala, The Evolution of an Ethnic Identity, The Tamils in Srilanka (300BCE To 1200CE, Chennai/Colombo: Kumaran Book House, 2006:170 - 171*
29. *K.A.Nilakanta Sastri, The Colas, Chennai: University of Madras, 2000(Reprint):25*
30. *Iravatham Mahadevan, ibid:62*
31. இரா.கிருஷ்ணமூர்த்தி, பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், சென்னை, 1987:15-16
32. *Iravatham Mahadevan, ibid:62*
33. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது: 23
34. மேலது: 2
35. *Shu Hikosaka, 'The Potiyil Mountain in Tamilnadu and the Origin of the Avlokiteswara Cult', Buddhism in Tamilnadu collected Papers, Chennai: Institute of Asian Studies, 1998:129*
36. ஆ.சிங்கார வேலு முதலியார், அபிதான சிந்தாமணி, சென்னை: சீதை பதிப்பகம், 2004
37. தெ.பொ.மீனாட்சி சுந்தரன், தமிழ் இலக்கிய வரலாறு - சங்ககாலம், மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை, 1981:22
38. *Shu Hikosaka, ibid: 135*
39. ஐராவதம் மகாதேவன், தமிழில் பா.ரா.சுப்பிரமணியன், சிந்துவெளிப்பண்பாடும் சங்க இலக்கியமும், சென்னை: செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2010: 33-34
40. அ.சதாசிவம்பிள்ளை, பாவலர் சரித்திர தீபகம், புதுடில்லி - சென்னை: ஏசியன் எஜுகேஷனல் சர்விஸஸ், 2006(ஏழாவது மறு அச்சு): 184-185
41. *K.K.Pillai, South India and Srilanka, Chennai: University of Madras, 2001:40 - 41*
42. முருகர் குணசிங்கம், மேலது: 38
43. வில்ஹெம் கெய்கர், மேலது, 15:20-23, 19:20-23
44. மேலது, 19:66
45. *Early Tamil Epigraphy, ibid:322,327,343*
46. *Ibid:365*
47. முருகர் குணசிங்கம், மேலது. 37
48. *S.Paranavitana (Ed.), Inscriptions of Ceylon , vol I: Early Brahmi inscriptions, Colombo: Archaeological survey of Ceylon, 1970. 28 Plate no. 1048*
49. *Mudaliyar C. Rasanayagam, Ancient Jafna, Chennai: Asian Educational Services, 2003(AES Reprint): 65(foot note)*

50. *Iravatham Mahadevan, ibid:319, 385*
51. *N.Subrahmanian, Pre - Pallavan Tamil Index, Madras: University of Madras, 1990:26*
52. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, மேலது.
53. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது:*12*
54. மேலது:*60*
55. டி.டி.கோசாம்பி,தமிழில்: சிங்கராயர், இந்திய வரலாறு ஓர் அறிமுகம், கோவை: விடியல் பதிப்பகம், *2011:329*
56. *S. Paranavitana. Ibid, plate no. 385*
57. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது:4
58. இரா.செபபால்(உ.ஆ), மேலது: பாடல் *130:11*
59. இரா. கால்டுவெல், தமிழில்: க.கோவிந்தன்& க.ரத்னம், திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம், சென்னை: திருமகள் நிலையம், *1982*(மூ.ப.) *:21*
60. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது: *50*
61. மேலது: *4*
62. எஸ். வையாபுரிப்பிள்ளை, 'தமிழிலக்கியத்தின் தொன்மை வரலாற்றுச்செய்திகள்' இலக்கியச்சிந்தனைகள், வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியம், தொகுதி-1, சென்னை, வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம், *1989:41*
63. உ.வே.சாமிநாதையர்(ப.ஆ), சிலப்பதிகார மூலமும் அரும்ப வத உரையும் அடியார்க்கு நல்லார் உரையும், சென்னை: உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், *2001*(பத்தாம் பதிப்பு) : வேனிற் காதை *1-2*
64. மேலது
65. *A.Velu Pillai, Epigraphical Evidences for Tamil Studies, Chennai: International Institute of Tamil Studies, 1980:59*
66. இரா.கால்டுவெல், மேலது:*181*
67. *B.Krishna Murti, Dravidian Languages, London : Cambridge University Press, 2003: 2*
68. *S. Paranavitana., Ibid, plate no.562*
69. *Ibid, plate no.556*
70. *Ibid, plate no.565*
71. *Images for collection of Parker coins- Sri Lankan Coins, http// srimunasha word press.com, 3rd Jan. 2015*
72. இரா.கிருஷ்ணமூர்த்தி, சங்ககால கொற்கைப் பாண்டியர் வெளியிட்ட செழிய,செழியன் நாணயங்கள், சென்னை:காரல்டெட் பப்ளிஷர், 2014:70
73. மேலவர், பாண்டியர் பெருவழுதி நாணயங்கள், மேலது: 22
74. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது: 57
75. மேலது: *41-42*
76. வின்சென்ட் *A* ஸ்மித், தமிழில்: சிவ முருகேசன், அசோகர் இந்தியாவின் பௌத்தப் பேரரசர், சென்னை: சந்தியா பதிப்பகம்,

2009:88-89

77. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது:*62*

78. பி.எல்.குப்தா, தமிழில்: அ.குழந்தை, *இந்திய நாடும் மக்களும், புதுடில்லி: நேஷனல் புக் ட்ரஸ்ட், 1975(1969):67*

79. இரா.கால்டுவெல், மேலது:*135*

80. *S. Paravitana.,Ibid, Plate no. 1134*

81. கால்டுவெல், தமிழில் ந.சஞ்சீவி, கிருட்டிணா சஞ்சீவி, திருநெல்வேலி சரித்திரம், சென்னை : காவ்யா, 2011(இ.ப.):*24*

82 *G.U.Pope (Edr.& Trl.), The Thiruvacagam, New Delhi - Madras : Asian Educational Services, 1995(1900) :40*

83. நக்கீரர்(உ.ஆ.), களவியல் என்ற இறையனார் அகப்பொருள், சென்னை : திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், *1976:5*

84. ஆ.சிங்காரவேலு முதலியார், மேலது

85. தெ.பொ.மீனாட்சிசுந்தரன், தமிழ் இலக்கிய வரலாறு - சங்க காலம், *:22*

86. எஸ். வையாபுரிப் பிள்ளை(ப.ஆ), சங்க இலக்கியம் பாட்டும் தொகையும், இரண்டாம் பகுதி, சென்னை: பாரிநிலையம், *1967(இ.ப):861(பாடல்.9)*

87. *Kamil V.Zvelebil, Tamil Traditions on Subrahmanya Murugan, Madras: Institute of Asian Studies,1991:20,21*

88. *Van Hien Study Group, The Seekers Glossary of Buddhism, Newyork & Canada, 1993(Third Edn.): 50,368*

89. *Iravatham Mahadevan, ibid: 314 - 319*

90. *Shu Hikosaka, ibid:132 - 133*

91. தமிழ் நாட்டு வரலாற்றுக் குழு, மேலது: *347*

92. மேலது: *608-609*

93. *K.K.Pillai, ibid:37*

94. *Edward Muller, Ancient Inscriptions in Ceylon; collected and published for the government, Vol.I - Primary source edition, London : Trubner & Co, 1883:26,27,29*

95. ஆசிரியர் குழு(பதி.),பதினெண்கீழ்க்கணக்கு, சென்னை: நியு செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,*1981(1957):குறள் 50*

96. *ibid:40*

97. *K.V.Subrahmanya Aiyer, The Earliest Monuments of the Pandya Country and Their Inscriptions. In Proceedings and Transactions of the Third All - India Oriental conference, Madras,1924 :280*

98. ஆ.வேலுப்பிள்ளை, சாசனமும் தமிழும், கொழும்பு - சென்னை : குமரன் புத்தக இல்லம், *2011(இ.ப.) :21*

99. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது:*33*

100. தினேஷ் சந்திர சர்க்கார், தமிழில்: தி.கி.இரகுநாதன், அசோகர் கல்வெட்டுகள், சென்னை: சாரதம், *2004:26*

101. மேலது :19

102. வின்சென்ட் A. ஸ்மித், மேலது: 140-141

103. Kamil V.Zvelebil, ibid: 26

104. இரா.கிருஷ்ணமூர்த்தி, மேலது:69

105. Iravatham Mahadevan, ibid:168

106. K.A.Nilakanta Sastri, Foreign Notices of South India from Megasthenes to Mahuan, Madras: University of Madras,2001(Third Edn.):41

107. K. Indrapala, ibid:43

108. மயிலை சீனி.வேங்கடசாமி, சங்ககால வரலாற்று ஆய்வுகள் - இரண்டாம் தொகுப்பு, சென்னை: தமிழ் வளர்ச்சிப் பேரவை, 2001:57

109. சேவியர் தனிநாயகம் அடிகள்,தமிழில்: ந.மனோகரன், பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, சென்னை : மாற்று வெளியீட்டகம், 2009 : 82

110. பு.ஜார்ஜ், 'பௌத்தமாய்த் திமிறும் சங்கப் பிரதிகள் - வரலாற்றின் கலையும் வெளிகள்', புறனடை-(இதழ்), சென்னை, ஜனவரி 2012 : 41-45

111. தெ.பொ.மீனாட்சி சுந்தரன், மேலது:48

112. பு.ஜார்ஜ், பௌத்தமாய்த் திமிறும் சங்கப் பிரதிகள் - வரலாற்றின் கலையும் வெளிகள் II, செந்தலைக் குருவி(கலை இலக்கியக் காலாண்டிதழ்)5&6: 8-14, சென்னை, 2014

113. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, தமிழில்: வெ. கிருஷ்ணமூர்த்தி, இந்திய தத்துவம் ஓர் அறிமுகம், சென்னை: படைப்பாளிகள் பதிப்பகம், 2008:227

114. பு. ஜார்ஜ், 'கால்டுவெல்லின் சமுதாயப்பணி', பிஷப் கால்டுவெல்லின் பன்முகப் பணிகள், சென்னை : சென்னைப் பேராயம், 2014 :77-96

115. பி.ஆர்.ஜீவிதாசன், 'தமிழகத்தின் மிகப்பழைய கல்வெட்டுகள் ஒரு குறிப்பு', தொல்லியல் நோக்கில் தமிழகம், சென்னை: தொல்பொருள் ஆய்வுத்துறை,தமிழ்நாடு அரசு, 1999 : 76

116. ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (விளக்க உ.ஆ), புறநானூறு, திருநெல்வேலி&சென்னை: திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1962:பாடல் 385

117. P.George, The Philosophical Message of the Dalit Drum(Parai) Un Published Paper

118. ஞான.அலாய்சியஸ்(தொ.ஆ). அயோத்திதாசர் சிந்தனைகள், தொகுதி II, பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் மையம், தூய சவேரியார்(தன்னாட்சி)கல்லூரி, 1999:459

119. கால்டுவெல், மேலது : 21-22

120. மேலது : 41

28. இராபர்ட் கால்டுவெல் - இருநூற்றாண்டு (1814-2014): திராவிடக் கருத்தியல் - வரலாறும் கருத்து நிலையும்

முனைவர் வீ. அரசு
தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் (ஓய்வு)
சென்னைப் பல்கலைக்கழகம்

இராபர்ட் கால்டுவெல் (1814 - 2014) என்னும் மனிதரின் இருநூறு ஆண்டு நினைவைக் கொண்டாட வேண்டும். இருநூறு ஆண்டுகளில் தமிழ்ச் சமூகத்தில் உரையாடலுக்குட்பட்ட 'திராவிட இயல்' என்னும் கருத்துநிலை தொடர்பான உரையாடலுக்கு வழிகண்ட மனிதர்களுள் கால்டுவெல் முதன்மையானவர். திராவிட இயல் என்னும் கருத்துநிலையின் இருநூறு ஆண்டுகள் பயணத்தில், கால்டுவெல் குறியீடாக அமைகிறார். இந்தக் குறியீட்டின் இருநூற்றாண்டுப் பயணத்தை மதிப்பீடு செய்து, அதன் பல்வேறு பரிமாணங்களைப் புரிந்துகொள்ள வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. இந்தப் பின்புலத்தில் கால்டுவெல் என்னும் ஆளுமையின் நினைவைப் போற்றும் கடமையும் நமக்கிருக்கிறது. கால்டுவெல்லைப் புரிந்துகொள்வதற்கு உதவும் நோக்கத்தில் பின் கண்ட வரையறைகளை உருவாக்கிக்கொள்வோம்.

- காலனியப் புலமையாளர்கள், அவர்களால் கட்டமைக்கப்பட்ட 'இந்தியா'என்ற நிலப் பகுதியில் செயல்பட்ட இனம், மொழி குறித்த மதிப்பீடுகளை உருவாக்கிய முறைகள்.
- சென்னை மாநிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் செயல்பட்ட புலமைத்துவச் செயல்பாடுகள்.
- கால்டுவெல் உருவாக்கிய 'ஒப்பிலக்கணம்'என்னும் துறை சார்ந்து, தமிழ்ச்சூழலில்முன்னெடுக்கப்பட்ட, மொழிசார்ந்தும் அம்மொழியைப் பேசும் மக்கள் சார்ந்தும் உருவான கருத்து நிலைகள்.

- தந்தை பெரியார் என்று அழைக்கப்படும் ஈ.வெ.ராமசாமி கட்டமைத்த, கருத்து நிலையை கால்டுவெல் - கருத்துநிலையின் தொடர்ச்சியாகப் புரிந்துகொள்ளும் தேவை.

- பெரியார் மறைவுக்குப் பின் திராவிடக் கருத்துநிலை சார்ந்த செயல்பாடுகளைக் கால்டுவெல் உருவாக்கிய கருத்துநிலையின் வீழ்ச்சியா? அல்லது அக்கருத்துநிலை வேறு பரிமாணத்தில் உள்வாங்கும் தேவை இருக்கிறதா? என்ற உரையாடல்.

மேற்குறித்த உரையாடல் இருநூறு ஆண்டுகளில், தமிழ் மொழி பேசும் நிலப்பகுதியின் பண்பாட்டு வரலாற்றோடு இணைந்தும் இருக்கிறது. இந்த வரலாற்றை கால்டுவெல் நினைவு சார்ந்து மதிப்பீடு செய்வதற்கான சூழல் உருப்பெற்றிருப்பதாகக் கருதலாம். தமிழ்ச்சூழல், பண்பாட்டு நெருக்கடியில் இப்போது தத்தளிக்கிறது. இதற்கான காரணங்கள் குறித்த உரையாடலும் அடுத்தகட்ட நகர்விற்கு அக்கருத்துநிலை தொடர்பான மதிப்பீட்டைச் செய்ய வேண்டும். அதன் மூலம் புதிய நடைமுறைகளைக் கட்டமைக்க முடியும். பொருளாதார நெருக்கடிகள் நம்மால் புரிந்துகொள்ளும் அளவிற்கு மொழி, இனம் சார்ந்த பண்பாட்டு நெருக்கடிகள் புரிந்துகொள்வதற்கான சூழலும் தேடலும் மிகவும் குறைவாகவே இருப்பதை உணர்கிறோம். 'தனிமனிதச் செயல்பாடு' சார்ந்து மதிப்பீடு செய்வதின் மூலம், அம்மனிதர் முன்னெடுத்த கருத்துநிலைக்கும் சமூகத்தில் அக்கருத்துநிலை சார்ந்த செயல்பாட்டிற்கும் உள்ள உறவைப் புரிந்துகொள்ளலாம்.

1784-ஆம் ஆண்டு 'ஆசியவியல் கழகம்' என்னும் அமைப்பைக் கல்கத்தாவில் வில்லியம் ஜோன்ஸ் (1746-1794) உருவாக்கினார். இலண்டன் நகரில் செயல்பட்ட ஆசியவியல் கழகத்தின் கிளையாகவே இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு, ஆசியாக்கண்டம் சார்ந்த நிலப்பகுதி மற்றும் ஆப்பிரிக்கா நிலப்பகுதியில் வாழும் மனிதரகள் சார்ந்த இனவியல் ஆய்வுகளில் அக்கறையுடன் செயல்பட்டது. இவ்வமைப்பில் செயல்பட்ட பலரும் 'இந்தியா' என்னும் நிலப்பகுதியின் மக்கள் என்பவர்கள் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதினர். இந்நிலப் பகுதியில் பேசப்படும் மொழிகள் இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த சமசுகிருத மொழியிலிருந்து உருவான மொழிகள் என்றும் கருதினர். சமசுகிருத மூல மொழியிலிருந்தே இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளும் கிளைத்திருக்க வேண்டும் என்னும் கருதுகோளை முன்னிறுத்தியே ஆய்வு செய்தனர். கி.பி. 1812 இல் சென்னையில் சென்னை இலக்கியச் சங்கம் உருவாக்கப்படும் வரை, மேற்குறித்த கருத்துநிலைதான் நடைமுறையில் இருந்தது.

1784-1812 என்ற காலச்சூழலில் காலனியப் புலமைத்துவச் செயல்பாட்டில், திராவிட மொழிக்குடும்பம் என்னும் கருத்துநிலை இடம்பெறவில்லை. இதன் மூலம் காலனியப் புலமையாளர்கள் கட்டமைத்த கருத்துநிலைகளைப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

- 'இந்தியா' என்று காலனிய ஆட்சி அதிகாரத்தில் கட்டமைக்கப்பட்ட நிலப் பகுதியின் மூலமொழி சமசுகிருதம் என்னும் நிலைப்பாடு
- சமசுகிருத மொழியில் உள்ள நூல்கள் தான், 'இந்தியா' என்ற நிலப்பகுதியின் பண்பாட்டுக் கூறுகளைப் புரிந்துகொள்ள உதவும் என்னும் புரிதல்.
- சமசுகிருத மொழி வழி அறியப்படும் 'இந்து மதம்' என்னும் கருத்துநிலை. அதுவே இந்தியா தொடர்பான சட்ட மரபுகளை உருவாக்க உதவும் என்னும் புரிதல். இந்துமதம் சார்ந்த 'மநுநூல்' பதிவுகளே இந்தியாவின் அறநூல் மரபாகக் கொள்ள வேண்டும் என்ற செயல்பாடு.

மேற்குறித்த பின்புலத்தில், 'தென்னிந்தியா' என்ற நிலப்பகுதி குறித்தோ, அப்பகுதியில் மக்கள் பேசும் மொழி குறித்தோ எவ்விதமான புரிதல் அற்றதாகக் காலனியப் புலமைத்தளம் செயல்பட்டதைக் காண்கிறோம். இந்நிலையைக் கி.பி. 1816 இல் பிரான்சிஸ் வைட் எல்லீஸ் (1777-1819) என்னும் காலனிய ஆட்சியாளர் மறுபரிசீலனைக்கு உட்படுத்துகிறார். ஏ.டி.காம்பெல் (1789-1857) என்பவர் 1816 இல் எழுதிய தெலுங்கு இலக்கண நூலுக்கு முன்குறிப்பை எழுதுகிறார் எல்லீஸ். இதில் தென்னிந்திய மொழிகள் பல இருப்பதைக் குறிக்கிறார். எல்லீஸ் வெளிப்படுத்திய குறிப்பு சார்ந்து பின்வரும் செய்திகளைத் தொகுத்துக் கொள்ள முடியும்.

- இந்தோ - ஆரிய மொழிக் குடும்பம் என்று ஆசியவியல் கழகம் கருதும் கருத்துநிலைக்கு மாறாக தென்னிந்தியப் பகுதியில் வேறு மொழிக்குடும்பம் நடைமுறையில் இருப்பது அறியப்படுகிறது.
- சமசுகிருத மொழிக்கும், தென்னிந்தியப் பகுதியில் இருக்கும் மொழிகளுக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பது குறித்தும் உலகுக்கு அறிவிக்கப்படுகிறது.
- எல்லீஸ் வெளிப்படுத்திய மேற்குறித்த கருத்து நிலையைத் திராவிட அடையாளம் (*Dravidian proof*) என்று தாமஸ் ட்ரவுமன் பின்னர் வரையறை செய்யும் வாய்ப்பு உருப்பெறுகிறது.

எல்லீஸ் வழி உருவான மேற்குறித்த அடையாளம், சென்னையில் காலனிய ஆட்சியாளர்களால், குறிப்பாக எல்லீஸ் அவர்களால் உருவாக்கப்பட்ட 'சென்னை இலக்கியச் சங்கம்' (1812) மற்றும் புனித ஜார்ஜ் கல்லூரி ஆகியவற்றின் செயல்பாடுகள் மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது. மேற்குறித்த அமைப்புகளின் மூலம் அச்சகம் உருவாக்கப்படுகிறது. நூல்வெளியீட்டகம் அமைக்கப்படுகிறது. பல்வேறு நூல்கள் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. இவ்வமைப்பின் செயல்பாடுகள் 1812-1854 என்ற காலப்பகுதியில் வளமாகச் செயல்படுகிறது. திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் குறித்த வேறுபட்ட புரிதல் இவ்வமைப்பால் கட்டமைக்கப்பட்டது. காலனியப் புலமையாளர்கள், உள்ளூர்ப் புலமையாளர்களுடன் இணைந்து செயல்படும் சூழல் உருவானது. இவ்வகைச் செயல்பாட்டை இப்போது சென்னைக் கீழ்த்திசைப்பள்ளி (*Madras School of Orientalism*) என்று தாமஸ் ட்ரவுமன் போன்றவர்கள் அழைக்கிறார்கள். இக்கருத்துநிலை மூலம் உருவான புதிய தன்மைகளாய்ப் பின்கண்டவற்றைத் தொகுக்கலாம்.

- சமசுகிருத மொழி சார்ந்த அடையாளம் என்ற தன்மையிலிருந்து வேறுபட்ட பிறிதொரு அடையாளம் வெளிப்படுத்தப்படுகிறது.
- மேற்குறித்த அடையாளம் திராவிட அடையாளம் என்னும் 'திராவிடமொழிக் குடும்பம்'என்ற பிறிதொரு மொழிக் குடும்பமும் இந்திய நிலப்பகுதியில் செயல்படுவதும் உறுதிப்படுத்தப்பட்டது.
- 1784 இல் உருவாக்கப்பட்ட ஆசியவியல் கழகத்தின் கருத்து நிலைகள், மொழி, இனம், பண்பாடு, நிலவியல் ஆகிய பல்வேறு கூறுகளிலும் தவறானவை என்பது உலகுக்கு அறிவிக்கப்படுகிறது.

1784 - 1812 என்ற காலநிலையில் உருவாக்கப்பட்ட கருத்துநிலைகள் 1812 - 1856 உள்ளிட்ட காலப்பகுதியில் 'சென்னைக் கீழைத்தேயவியல் பள்ளி' என்னும் கருத்துநிலையாக உருப்பெற்றுவிடுகிறது. காலனிய அதிகாரத்தில் உருவாகப்பட்ட இந்தியா என்னும் நிலப்பகுதி இருவேறுபட்ட மொழிக்குடும்பங்கள் செயல்படும் பூமியாக இருப்பது உறுதியாகிறது. இதன் மூலம் 'கீழைத்தேயவியல்' என்னும் கருத்துநிலையில் அடிப்படையான மாற்றங்களை முன்வைக்கும் சூழல் உருப்பெற்றதாகக் கருதலாம். அதனைப் பின்வருமாறு தொகுத்துக் கொள்வோம்.

- மேற்குலகைச் சேரந்த காலனிய மனநிலையாளர்களால் உருவாக்கப்பட்ட கீழைத்தேயவியல் (*Orientalism*) என்னும்

கருத்து நிலையில், இந்தியா என்னும் நிலப்பகுதியில் சமசுகிருத மொழிசார்ந்த ஆக்கங்கள் மட்டுமே இடம்பெற்றிருந்தன.

- புதிய கருத்துநிலையில், தென்னிந்திய மொழிகள், அதிலும் குறிப்பாக 'தமிழ்' என்பதும் இடம்பெற்றது. சமசுகிருத மொழிக்கு இணையான பழமை உடையதாகவும் தமிழ் அறியப்பட்டது.

- கீழைத்தேயவியல் என்னும் கருத்துநிலையில், வரலாற்றுப் போக்கில் தமிழ்மொழி, அதனைப் பேசும் மக்கள் ஆகியோர் குறித்த கருத்துநிலை இடம் பெற வேண்டியதன் தேவை முன்வைக்கப்பட்டது.

- தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றுமுள்ள திராவிட மொழிகள் சார்ந்த பல்வேறு கூறுகளும் 'கீழைத்தேயவியல்'என்னும் கருத்து நிலைக்குள் வரும் தன்மையும் உலகுக்கு அறிவிக்கப்பட்டது.

- மேற்குறித்த பின்புலத்தில் இராபர்ட் கால்டுவெல் (1814-1891) என்னும் மனிதரின் செயல்பாடுகளை மதிப்பீடு செய்யும் தேவை உண்டு. மேற்குறித்த 1784-1856 கால இடைவெளியில் உருவான 'திராவிட இயல்' என்னும் கருத்துநிலைகளைக் கால்டுவெல் எவ்வகையில் எதிர்கொண்டார் என்பதைக் காண்பதன் மூலம் அவரது தனித்த ஆளுமையைப் புரிந்துகொள்ள இயலும். கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதுவதற்கு முன்பு, தமிழியல் தொடர்பாகச் செயல்பட உருவான சூழல் குறித்தும் பதிவு செய்வது அவசியம். 1812-1854 காலச்சூழலில் செயல்பட்ட, சென்னைக் கல்விச் சங்கம் மற்றும் சென்னை ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியின் மூலமாகப் பல்வேறு செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், கால்டுவெல் சென்னைக்கு வந்து சேர்கிறார். கோட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர் ஆகிய பிற தமிழறிஞர்கள் கோட்டைக் கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்தச்சூழல் தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம் ஆகியவற்றைப் பிரித்தானியர்கள் எளிதாகக் கற்று அறியும் வாய்ப்பை உருவாக்கியது. கால்டுவெல் 1838 இல் சென்னை வந்தடைந்தபின் அவருக்குக் கிடைத்த புறச்சூழலின் தன்மைகளைக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ள இயலும்.

அன்ட்ரிச் அடிகள் (1520-1600), இராபர்ட் டி-நொபிலி (1577-1656), வீரமாமுனிவர் (1680-1746), சீகன்பால்கு

(1682-1719) ஆகிய பலர் தமிழியல் தொடர்பாக உருவாக்கியிருந்த பின்புலம், கால்டுவெல் இயல்பாகச் செயல்பட வாய்ப்பாக அமைந்தது.

- துரு. கால்டுவெலின் நெருக்கமான நண்பர். இவர் இராமானுசச் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். திருக்குறளில் 63 அதிகாரங்களை மொழிபெயர்த்தவர். மேலும் பவர் (1812-1885) அவர்களும் கால்டுவெல்லின் நண்பராவார். இவர் சீவகசிந்தாமணி நாமகள் இலம்பகம் வரை மொழிபெயர்த்தவர். சென்னைக் கிறித்தவக் கல்லூரியை உருவாக்கிய அந்தர்ஸன் கால்டுவெல்லுக்கு நெருக்கமான நண்பராக இருந்தார்.

- 1841 ஆம் ஆண்டில் சென்னையில் மாநிலப் பள்ளி (Presidency School) உருவாக்கப்பட்டது. இதில் ஆசிரியராக பவர் பணியாற்றினார். இந்தக் காலத்தில் கால்டுவெல் உடனிருந்தார். கரந்தை இராசாராம் முதலியார் என்பவரிடம் தமிழ்பயின்றார்.

கால்டுவெல் மேற்குறித்த தமிழ்ச்சூழலில் 1838-1841 ஆண்டுகளில் சென்னையில் வாழ்ந்தார். பின்னர் கால்நடையாகவே திருநெல்வேலி சென்றடையத் திட்டமிட்டார். சிதம்பரம் வழியாகத் தரங்கம்பாடியைச் சென்றடைந்தார். அங்குச் செயல்பட்டுக் கொண்டிருந்த டேனிஸ் ஏசு சபைச் செயல்பாடுகளை நேரில் கண்டறியும் வாய்ப்பு கிடைத்தது. பின்னர் தஞ்சாவூரில் இருந்த சுவார்த் (1726-1798) அவர்களைச் சென்று பார்த்தார். அவருடன் சில காலம் தங்கியிருந்தார். சுவார்த் தமிழ் - இலத்தின் அகராதியைத் தொகுத்தவர். பின்னர் நீலகிரி, கோயம்புத்தூர் வழியாக மதுரையைச் சென்றடைந்தார். இப்பொழுது செயல்படும் அமெரிக்கன் கல்லூரி உருவாவதற்கு மூலமாக அமைந்த பள்ளிக்கூடத்தைத் திருமங்கலத்தில் உருவாக்கிய திரேசி அவர்களையும் மதுரையில் சந்தித்தார். சென்னைப் பல்கலைக்கழக அகராதியை (Tamil Lexicon) மதுரையில் தொடங்கி வைத்த சாந்தலர் என்பவரையும் கால்டுவெல் சந்தித்தார். இவ்வகையில் தமிழகத்தின் நிலவியல் கூறுகள், பல்வேறு வகைப்பட்ட மக்களின் வாழ்முறைகள் ஆகியவற்றை அறிந்துகொண்டு 1841 இல் திருநெல்வேலி நாசரத் சிற்றூரைச் சென்றடைந்தார். பின்னர் நிலையாக இடையன்குடியில் தங்கிச் சமயப் பணியாற்றத் தொடங்கினார். இவர் இடையன்குடியில் பணியாற்றிய போது மிக அருகில் இருந்து சாயர்புரத்தில் ஜி.யூ.போப் (1820-1908) பணியாற்றிக்கொண்டிருந்தார். இடையன்குடியிலிருந்து ஐந்துகல்தொலைவில் இருந்த சுவிசேஷபுரத்தில் சச்சந்தர் சமயப் பணிபுரிந்தார். நாகர்கோவிலில் மால்த் என்பவர்

சமயப் பணிபுரிந்து வந்தார். இவருடைய மகள் எலிஜா அவர்களைத்தான் கால்டுவெல் பின்னர் திருமணம் செய்த கொண்டார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் திருநெல்வேலிச் சீமை முழுவதும் இவ்வகை கிறித்தவத் தொண்டர்களின் சமயப்பணி நடைபெற்ற சூழலில் கால்டுவெல் பணியாற்றினார். இவருக்கு தட்பவெட்பச் சூழல், உடல்நலம் கெட வாய்ப்பாயிற்று. எனவே, 1854 இல் தமது தாயகத்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கு ஓய்வாக இருந்து திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலை உருவாக்கி 1856 இல் இலண்டன் நகரத்தில் அச்சிட்டு வெளியிட்டார். கால்டுவெல் உருவாக்கிய இந்நூல் தென்னிந்திய திராவிட மொழிக்குடும்பம் குறித்த நிலையான ஆவணமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து 1857 இல் போப் - உருவாக்கிய தமிழ் இலக்கண நூலும், 1858 இல் சாமுவெல்பிள்ளை உருவாக்கிய தொல்காப்பிய நன்னூல் என்னும் நூலும் 1862 இல் வின்சுலோ உருவாக்கிய தமிழ்-ஆங்கில அகராதி மற்றும் ஆங்கில - தமிழ் அகராதியும் தமிழியல் ஆய்வு வளர்ச்சியில் முக்கிய பணிகளாக உருப்பெற்றன. 1860 இல் பர்னல் எழுதிய 'தென்னிந்திய தொல்லெழுத்தியல் கூறுகள்' குறித்த நூலும் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்தது. கால்டுவெல் செயல்பட்ட இச்சூழலில், தமிழ்ச்சூழல் எவ்வகையில் செயல்பட்டுக் கொண்டிருந்தது என்பது குறித்த புரிதல் தேவை. இதனைப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

- வடலூர் இராமலிங்கர் என்னும் வள்ளலார் (1823-1874) சமரச சுத்த சன்மார்க்கம் என்னும் சமயச் சீர்திருத்தப் பணியைச் செய்துகொண்டிருந்த காலம்.
- சைவ சமய மறுமலர்ச்சியைக் காலனியத்தின் மூலம் உருப்பெறும் மறுமலர்ச்சிக்கு இணையாகக் கட்டமைக்க ஆறுமுகநாவலர் (1822-1879) முயற்சி எடுத்துக்கொண்ட காலமும் இதுவாகும்.
- பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் போன்ற சமயச்சீர்திருத்த இயக்கங்கள் செயல்பட்ட காலமும் இதுவாகும்.
- சென்னை இலௌகிக சங்கம் (1878-1888) என்னும் நாத்திக இயக்கம் செயல்பட்ட காலமும் இதுவாகும்.

மேற்குறித்த அமைப்புகள் எதுவும் கட்டமைக்காத கருத்துநிலையைக் கால்டுவெல் தமது நூலின் மூலமாகக் கட்டமைத்தார். 'திராவிடம்' என்னும் அக்கருத்துநிலை, அவரால் 1856 இல் உருவாக்கப்பட்டு, அவர் தமது நூலை 1875 இல் இரண்டாம்

பதிப்பாகக் கொண்டு வரும் போது மேலும் வளர்த்தெடுத்த நிலையைக் காணமுடிகிறது. 1856-1875 காலச்சூழலில், தமிழ்ச்சூழலில் உருவான புதிய கூறுகள் அனைத்தையும் தமது நூலில் அவர் இணைத்தார். அந்நூல் சென்னைப் பல்கலைக்கழகப் பாடநூல் ஆக்கப்பட்டது. கால்டுவெல், சென்னைப் பல்கலைக்கழக - ஆட்சிமன்ற உறுப்பினராக அங்கீகரிக்கப்பட்டார். 1879 இல் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் தகுதியும் அவருக்கு ஏற்பட்டது. 1913 இல் கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலைச் சில மாற்றங்களுடன் பல்கலைக்கழகம் வெளியிட்டது. அந்நூலில் செய்யப்பட்ட மாற்றங்கள், கால்டுவெல் முன்னெடுத்த திராவிட இயல் குறித்த கருத்து நிலையைத் தமிழ்ச்சமூகம் எதிர்கொண்டதற்கான ஆதாரமாகக் கொள்ள இயலும். அந்நூலில் நீக்கப்பட்ட பகுதிகள், எவ்வகையான கருத்துநிலை சார்ந்து செயல்பட்டது என்பதைத் தொகுத்துக் கொள்வோம்.

- கால்டுவெல், தமிழ் இலக்கிய உருவாக்கம் நடைபெற்ற போக்குகளை அவரது கண்ணோட்டத்தில் பதிவு செய்து இருந்தார். அதில் 'சமண இலக்கிய வட்டம்' என்னும் பகுதியும், 'பார்ப்பனிய எதிர்ப்பு இலக்கிய வட்டம்' என்னும் பகுதியும் இடம்பெற்றிருந்தது.
- பறையர்கள் என்னும் மக்கள், ஆதிதிராவிடர்கள் என்னும் கருத்து நிலை சார்ந்த கருத்துக்களை கால்டுவெல் பதிவு செய்திருந்தார். 1849 இல் ஒடுக்கப்பட்ட சாணர்கள் குறித்த இனவரைவியல் நூலை கால்டுவெல் எழுதியிருந்தார். இந்தப் பின்புலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் குறித்த பதிவைச் செய்தார்.
- இந்து மத நடவடிக்கைகள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இருப்பதையும் பிற்காலத்தில் விரிவாகப் பதிவு செய்தார். இந்தக் கருத்தின் பல கூறுகளும் இவரது நூலில் இடம் பெற்றிருந்தன.

கால்டுவெல் நூலிலிருந்து அகற்றப்பட்ட பகுதிகளின் அரசியல் கருத்துநிலையைப் புரிந்துகொள்ளப் பின்கண்ட வரையறையை முன்வைக்கலாம்.

- சைவ மற்றும் வைதீக மரபுக்கு மாறான சமண மரபு முன்வைக்கப்படுகிறது.
- சாதிய அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்கள் திராவிடர்கள் என்னும் அடையாளத்திற்குள் கொண்டு வரப்படுகிறார்கள்.
- சமசுகிருத கருத்துநிலை சார்ந்த நிலைப்பாட்டிற்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

'இந்துமதம்' என்னும் கட்டமைப்பு கேள்விக்கு ஆளாக்கப்படுகிறது.

கால்டுவெல் நூலில் நீக்கப்பட்ட பகுதிகள் மூலம், திராவிட இயல் சார்ந்த கருத்துக்களாக கால்டுவெல் கருதியவை நீக்கப்பட்டு சுத்தமாக்கப்படும் சூழல் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1913) உருவானது. இத்தன்மை உருப்பெற்றதற்கான காரணம், 'வைதீகக் கருத்துநிலை சார்ந்தவர்கள்', குறிப்பாக சைவர்கள், கால்டுவெல் சொல்லும் திராவிடக் கருத்தியலை ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள். சைவ மரபு சார்ந்த திராவிடக் கருத்தியலை முன்னெடுக்க முயன்றவர்கள். சமூகத்தின் ஆதிக்க சாதியாக இருந்த வெள்ளாளர்கள் மற்றும் பார்ப்பனர்கள் கட்ட விரும்பிய திராவிட இயலுக்குப் புறம்பானதாக கால்டுவெல் கூறும் திராவிட இயல் அமைந்திருக்கிறது. வைதீக மரபுகள் சார்ந்த சாதியப் படிநிலைகளை ஏற்றுக் கொண்டவர்கள் கருதும் திராவிடம், கால்டுவெல் பேசும் திராவிடத்தை ஏற்கும் வகையில் இல்லை. இந்த முரண்தான் கால்டுவெல் நூலின் பகுதிகளை நீக்குவதற்கு அடிப்படையாக அமைவதைப் புரிந்துகொள்ள வேண்டும். மேற்குறித்த சைவம் சார்ந்த திராவிட மரபுகளை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை (1855–1897) தொடங்கி, மறைமலையடிகள் (1876–1950) வழியாக உருவான திராவிட வெள்ளாள மரபைப் புரிந்துகொள்ள முடியும். இவ்வகையில் கால்டுவெல் கட்டமைத்த திராவிட இயல் என்பது பின்வரும் கூறுகளில் கவனத்தில் கொள்ளத்தக்கது.

- ஐரோப்பிய புத்தொளி மரபில் உருவான மொழியியல் மரபுகளை அடிப்படையாகக் கொண்டு, திராவிடமொழிக் குடும்பம் என்பதைக் கண்டறிந்தது.
- திராவிட மொழிகளைப் பேசுபவர்கள் கொண்டிருந்த சாதிய மரபுகளை ஏற்றுக் கொள்ளாதது.
- இந்து மதம் என்னும் பெயரில் வைதீகம் கட்டமைத்த கருத்துக்களுக்கு முற்றிலும் மாறானது.
- சாதிய படிநிலைச் சமூக உளவியல் தன்மையில் வாழும், ஆதிக்க சாதி மற்றும் ஆதிக்க சமயம் ஆகியவற்றுக்கு முரணானது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, அந்த நூற்றாண்டின் இறுதிக்குள் கால்டுவெல் கட்டமைத்த திராவிட இயல் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உருவான பின்கண்ட கூறுகளால் வலுவானது. அக்கூறுகள் வருமாறு.

- காலனிய புத்தொளி மரபில் உருவான தொல்லியல்துறை (1864) பல்வேறு புதிய வரலாற்றுத்தரவுகளைக் கண்டெடுத்தது. இதன் உச்சமாக சிந்துசமவெளி அகழாய்வு தொடர்பான கருத்துநிலைகள் உருப்பெற்றன.

- அச்சுக்கருவி வருகையில், நமது தொல்லிலக்கண மரபு, தொல்லிலக்கிய மரபு ஆகியவை பரவலாக அறியும் வாய்ப்பு உருவானது. அதன் மூலம் உலகம் தழுவிய மரபுகளில் ஒன்றாக திராவிட இயல் மரபின் தொன்மை அறியப்பட்டது.

மேற்குறித்த தன்மைகள் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு மேலாக வலுப்பெற்று வந்திருந்த வைதீக மரபு, சமசுகிருத மரபு, ஆதிக்க சாதியக் கருத்துநிலை ஆகிய பலவற்றைக் கேள்விக்கு உட்படுத்தியது. தமிழ்ச் சமூகத்தின் இயங்குநிலை மூன்று அடிப்படையான கூறுகளில் செயல்படத் தொடங்கியது. அதற்குள் திராவிடக் கருத்துநிலை உள்வாங்கப்பட்டது.

- வைதீகத்தை அடிப்படையாகக் கொண்ட, சைவ, வைணவ இணைவில் உருப்பெற்ற 'இந்துத்துவா' கருத்துநிலை பின்னர் உருப்பெற மூலமாக அமைந்த சாதியப்படிநிலை அமைப்பு.

- ஒடுக்கப்பட்ட மக்கள், தங்களை அடையாளப்படுத்த ஆதிதிராவிடக்குடிகள் என்னும் கருத்து நிலை சார்ந்து, பௌத்த, சமண, சாங்கியக் கருத்து நிலைகளை முன்னெடுத்த சூழல்.

- இந்தியா என்ற தேசம் கட்டப்பட்ட சூழலில், அதில் செயல்படும் சாதி, மதம் ஆகிய அனைத்துக் கூறுகளையும் மறுக்கும் சுயமரியாதை இயக்க மரபு.

மேற்குறித்த மூன்று நிலைகளில், இறுதியாகக் கூறப்பட்ட சுயமரியாதை இயக்க மரபு, கால்டுவெல் முன்னெடுத்த 'திராவிட கருத்துநிலை'மரபை ஏற்றுக்கொண்ட மரபாகப் புரிந்து கொள்ள முடியும். அயோத்திதாசர், பெரியாருக்கு முன் இத்தன்மைகளை பௌத்த மரபாக முன்னெடுத்தார். இம்மரபுகளை எல்லாம் மறுத்த 'சென்னை இலெளகிக சங்கம்'பத்தொன்பதாம் நூற்றாண்டில் செயல்பட்டது. இருபத்தோராம் நூற்றாண்டில் இருக்கும் நாம், கால்டுவெல் வழியாகக் கட்டப்பட்ட திராவிட இயல் கருத்துநிலையின் இன்றைய வளர்ச்சி, பொருத்தப்பாடு ஆகிய புரிதலுக்குள் செயல்பட வேண்டிய நெருக்கடி உருவாகியுள்ளது. இதனை விவாதிக்கக் கீழ்க்காணும் கால ஒழுங்கிலான ஒரு பாகுபாட்டை வசதிக்காக உருவாக்கிக் கொள்வோம்.

- 1784-1816 என்ற காலச்சூழலில் ஐரோப்பிய புத்தொளி மரபு மூலமாக, நமது மரபுகளைப் புரிந்துகொள்ள முற்பட்ட போது, திராவிட இயல் என்னும் கருத்துநிலை இல்லை.

- *1816-1856* என்ற காலச்சூழலில் 'சென்னை கீழைத் தேயப்பள்ளி' என்னும் கருத்துநிலை சார்ந்து இந்தோ - ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்ட இன்னொரு மொழிக் குடும்பம் என்னும் 'திராவிட அடையாளம்' உருப்பெற்ற காலம்.

- *1856-1925* என்ற காலச்சூழலில், கால்டுவெல் கட்டமைத்த திராவிட இயல் என்னும் மொழி மற்றும் இனக்குழு சார்ந்த கருத்துநிலை உரையாடலுக்கு உட்படுத்தப்பட்ட காலம், சமயம் சார்ந்த மரபிலிருந்து வேறுபட்டு மொழிநூல் என்ற பயில்துறை மூலம் உலகம் தழுவிய புத்தொளி மரபில் புரிதல் உருவான காலம், இதன் மூலம் 'திராவிட இயல்' அங்கீகரிக்கப்பட்ட காலம்.

- *1925-1973* என்ற காலச்சூழலில், ஈ.வெ.ராமசாமி என்னும் செயல்பட்ட காலம். திராவிடக் கருத்துநிலை, பாரப்பனீய ஆதிக்கம், வைதீக-சமய ஆதிக்கம். வடநாட்டு முதலாளிகள் ஆதிக்கம். சமசுகிருத வழி வந்த இந்துஸ்தானி எனப்படும் இந்தி மொழித்திணிப்புக்கு எதிரான போர் என்று திராவிடக் கருத்துநிலை புரிந்துகொள்ளப்பட்ட காலம்.

- *1973-2014* என்ற நமது சமகாலம். பெரியார் முன்னெடுத்த திராவிடக் கருத்துநிலை என்பது 'தேர்தல் சார்ந்த கட்சிகளுக்கான அடையாளமாகக் கட்டமைக்கப்பட்டு, பல்வேறு பண்பாட்டுச் சீரழிவுகள் உருப்பெற்றுள்ள காலம். கால்டுவெல் உருவாக்கிய கருத்துநிலை இரண்டு நூற்றாண்டு காலமாகப் பயணம் செய்து வந்த காலத்தின் இறுதிப்பகுதி.

மேலே நாம் பகுபடுத்திய காலப்பகுதிகள் சார்ந்து, முதல் மூன்று பகுதிகளை கால்டுவெல்லை முதன்மைப்படுத்தி உரையாடலுக்கு உட்படுத்தினோம். இறுதி இரண்டு காலப் பகுதிகளில் செயல்பட்ட திராவிடக் கருத்தியல் சார்ந்த உரையாடல் நம்முன் உள்ளது. இதனை இடதுசாரிக் கண்ணோட்டம் கொண்ட இயக்கவியல் கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்தவர்களின் கருத்துநிலைகளை, மீண்டும் உரையாடலுக்கு உட்படுத்த வேண்டும். இடதுசாரி அமைப்புகள், இனம், மொழி சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை மதிப்பிடு செய்வதில் முந்தைய நிலைப்பாடுகளிலிருந்து சில மாற்றங்கள் உள்வாங்கியிருப்பதைக் காண்கிறோம். இந்தக் கண்ணோட்டத்தில், திராவிடக் கருத்துநிலை மொழி, இனம் சார்ந்த அடையாளமாகச் செயல்பட்டு, அது இன்று செயல்படும் நிலையில் உருவாகியுள்ள சிக்கல்களை எப்படிப் புரிந்துகொள்வது? என்ற உரையாடலை கால்டுவெல்லின் இருநூறாம் ஆண்டுச் செயல்பாடாக முன்னெடுக்க வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

சான்றாதாரங்கள்

நூல்கள்

1827 - *Document Transactions of the Literary society of Madras. Part - I; Longman, Rees, Orme, Brown and Green. Paternoster Row. London*

1875 - *Caldwell Robert. A comparative Grammar of the Dravidian of South Indian family of Languages - London. Trubner & Co., Ludgate Hill. First Renewed Print - 2008 by Kavithasaran pathipagam, Chennai - 19.*

1922 - *No Author; Eminent Orientlists - Reprinted by Asian Educational Series 1991.*

1958 - கந்தசாமிப்பிள்ளை. நீ. கால்டுவெல்லும் அவர் வாழ்ந்த காலமும்(கட்டுரை) தமிழ்ப் பொழில் - கால்டுவெல் நூற்றாண்டு மலர்.

1982 - டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். தமிழில் கா. கோவிந்தன், கி.ரத்னம், திருமகள் நிலையம், சென்னை - 1.

2006 - *Trautmann R. Thomas. Languages and Nations. The Dravidian proof in Colonial Madras. Yoda Press. New Delhi - 1.*

2008 - மாற்றுவெளி: கால்டுவெல் சிறப்பிதழ் - சிறப்பாசிரியர் - வீ.அரசு, சென்னை.

2010 - சாமுவேல்பிள்ளை. கி. பதிப்பு: இரா.வெங்கடேசன், வெ.பிரகாஷ், தொல்காப்பிய நன்னூல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை - 98 (முதல் பதிப்பு - 1858)

2012 - அரசு.வீ. திராவிட இயக்கம் நூறு ஆண்டுகள் (குறுநூல்) நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் - சென்னை - 98.

2012 - நஜ்மா.மு, கஸ்தூரி.மு, மோகனா.அ, காமாட்சி.மு (தொகுப்பாளர்கள்) காஞ்சி: ஐரோப்பிய, அமெரிக்கத் தமிழியல் அறிஞர்கள், பரிசல், சென்னை - 106.

❧ ❧ ❧

29. கால்டுவெல் முன்னெடுத்த கீழ்த்திசையியல்: தமிழ் இனவியம் பற்றிய நோக்குநிலை

முனைவர் பக்தவத்சல பாரதி
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் உலகின் பிற நாடுகளுக்குச் சென்று ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து குடியேற்ற நாடுகளின் மரபுகளையெல்லாம் நுட்பமாக ஆராயத் தொடங்கினார்கள். கீழ்த்திசை நாடுகள் பற்றி ஐரோப்பியர்கள் உருவாக்கிக் கொண்ட அறிவுமுறையும் அதன்வழி உருவாக்கிய மேலாண்மையும் ஒரு கருத்தினமாக மாறி, அதுவே பின்னாளில் 'கீழ்த்திசையியல்' (*Orientalism*) என இனங்காணப்பட்டது.

கீழ்த்திசையியல் பற்றிய நுட்பமான ஒரு வரைவினை எட்வர்டு சைத் (*Edward Said, 1978*) முன்வைத்துள்ளார். அது பற்றிய ஆய்வில் சைத் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: 'கீழ்த்திசையியல் என்பது கீழ்த்திசை நாடுகளோடு இணைக்கப்பட்டுக் கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும்; கீழ்த்திசை நாடுகள் குறித்த அறிக்கை தருதல், அது தொடர்பான கருத்துக்களை ஏற்றல், விளக்குதல், கற்பித்தல், சரி ப்படுத்தல், ஆட்சிக்கு உட்படுத்துதல் என்பதாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், கீழ்த்திசையியல் என்பது கீழைநாடுகளின் மீது மேற்கின் மேலாதிக்கம், மறுகட்டமைப்பு, அதிகாரம் ஆகியவற்றை நிலைப்படுத்துவதாகும்' (சைத் *1978: 3*; டிரவுட்மன் *2007: 258*).

கிழக்கிந்தியக் கும்பினி *1757* இல் முகலாயரைத் தோற்கடித்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய காலத்தில் வங்காளத்தில் ஒரு வலுவான மையத்தை உருவாக்க வேண்டியதன் தேவையை உணர்ந்தது. இதனையடுத்து கொல்கத்தாவில் வில்லியம் ஜோன்ஸ் *1784* இல் உருவாக்கிய வங்க ஆசியக் கழகத்தின் ஊடாகக் கீழ்த்திசையியல் ஒரு முறையான தொடக்கத்தைக் கண்டது. *1804* இல் வில்லியம்

கோட்டைக் கல்லூரியும், அதேயாண்டில் பம்பாய் இலக்கியக் கழகமும் உருவாயின. வில்லியம் ஜோன்ஸ் தொடங்கி கோல்புரூக், மேக்ஸ் முல்லர் ஊடாக எண்ணற்ற ஐரோப்பிய அறிஞர்கள் சமஸ்கிருத மொழியானது இந்தோ - ஐரோப்பிய மொழிகளோடு இன உறவுடையது எனக் கண்டறிந்த பின்னர் இந்தியப் பண்பாடும் நாகரிகமும் சமஸ்கிருத வேத மரபுகளிலிருந்தே உருவாயின எனும் கருத்தை முன்னெடுத்தார்கள். இதனாலேயே டிரவுட்மன் போன்ற அறிஞர்கள் இக்குழுவினர் முன்னெடுத்தவற்றைக் 'கல்கத்தா கீழ்த்திசையியல்' என்பார்கள் (டிரவுட்மன் 2007: 260).

கல்கத்தாவுக்கு இணையாகக் கிழக்கிந்தியக் கும்பினி சென்னையை மையமாகக் கொண்டு செயல்பட்டபோது இங்கிலாந்திலிருந்து நேரடியாக ஒரு குழுவினர் இங்கு வந்து தங்கிச் செயல்பட்டார்கள். 1812 இல் ஃபிரான்சிஸ் வொயிட் எல்லிஸ் (1777 - 1819) புனித ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை உருவாக்கி ஆங்கில அதிகாரிகளுக்கான மொழிப் பயிற்சியையும் ஆங்கில நிர்வாகத்திற்கான தேவைகளையும் மேற்கொண்டார். சமஸ்கிருதமே இந்திய மொழிகளுக்கு மூலம் என்று கல்கத்தா கீழ்த்திசையியலார் பேசிவந்த நிலையில் அலெக்சாண்டர் டங்கன் காம்ப்பெல் தெலுங்கு மொழிக்கு ஓர் இலக்கணத்தை 1816 இல் உருவாக்கினார். அந்நூலுக்கு முன்னுரை எழுதிய எல்லிஸ் திராவிட மொழிகள் தனித்துவமானவை என்பதற்கான சான்றுகளைச் சுட்டிக்காட்டினார்.

காம்ப்பெல் நூலுக்குப் பின்னரும் திராவிடம் தனித்துவமானது என்பதை நிறுவுவதற்கான சான்றுகளை எல்லிஸ் தேடிக்கொண்டே இருந்தார். காம்ப்பெல், எல்லிஸ் தொடங்கி கால்டுவெல் ஊடாக திராவிடச் சான்று மெல்ல மெல்ல உறுதியானது. இந்நிலையில் சென்னையிலிருந்து கீழ்த்திசையியலுக்குப் பணியாற்றியவர்கள் 'சென்னைக் கீழ்த்திசையியல்' குழுவினர் எனப் பெயர் பெற்றனர் (மேலது: 149). இது பற்றிய மிக விரிவான புரிதலை டிரவுட்மன் தன்னுடைய 'திராவிடச் சான்று: எல்லிஸும் திராவிட மொழிகளும்' (2007) நூலில் ஆராய்ந்திருக்கிறார்.

இனிக் கால்டுவெல் முன்னெடுத்த கீழ்த்திசையியல் பற்றிக் காண்போம்.

கால்டுவெல் முன்னெடுத்த கீழ்த்திசையியல்

சென்னையை மையமிட்டுச் செயல்பட்ட கீழ்த்திசையியல் முன்னோடிகளில் கால்டுவெல் பாதிரியார் (1814 - 1891) முக்கியமானவர்; இவரின் பங்களிப்பு தனித்துவமானது. 'திராவிட-

மொழிக் குடும்பம்' என்ற ஒன்றைக் கண்டறிந்து உலகுக்கு அறிவித்தவர். இது தவிர கால்டுவெல் பல்வேறு நிலைகளில் கீழ்த்திசையியலுக்குப் பங்காற்றியுள்ளார். அவர் எழுதியவற்றில் முக்கியமானவை வருமாறு:

1. இடையன்குடி மிஷன் (1844, 1847)
2. திருநெல்வேலி சாணார்கள் (1849)
3. திராவிட ஒப்பிலக்கணம் (1856)
4. திருநெல்வெலி மிஷன் பற்றிய சொற்பொழிவுகள் (1857)
5. இந்தியாவில் கிறித்தவத்தின் வளர்ச்சி (1857)
6. இந்துக்களின் இறைவிளக்கம் (1863)
7. இந்தியாவின் மொழிகளும் மறைப்பணிகளோடு அவற்றின் உறவுகளும் (1875)
8. உயர்சாதி மக்களிடம் மறைப்பணியாற்றுதல் (1876, 1877, 1878)
9. திருநெல்வேலி மிஷனின் முதல் நூற்றாண்டு (1880)
10. தொடக்கக் காலம் முதல் ஆங்கில ஆட்சிவரையிலான திருநெல்வேலி மாவட்டத்தின் அரசியல் வரலாறும் பொது வரலாறும் (1881)
11. திருநெல்வேலி மிஷனின் தொடக்க கால வரலாறு பற்றிய ஆவணங்கள் (1881)
12. இந்தியாவில் திருச்சபைப் பள்ளிகளில் சமய போதனைகளை மேற்கொள்ளுதல் (1881)
13. தென்னிந்தியாவில் பூத வழிபாடு (1886)
14. கிறித்தவமும் இந்துத்துவமும் (1893)

கால்டுவெல் பங்களிப்புகளில் மிகவும் முதன்மையானது திராவிட மொழிக் குடும்பம் பற்றியதாகும். கீழ்த்திசையியல் புலத்தில் அதுவரை யாரும் வெளிப்படுத்தாத ஒரு புதிய கண்டுபிடிப்பினைக் கால்டுவெல் செய்தார். 'திராவிட மொழிக்குடும்பம்' எனும் ஒரு புதிய கருத்துருவாக்கத்தை முன்னெடுத்து உலக அளவில் உள்ள மொழிக்குடும்பங்களில் ஒரு புதிய மொழிக் குடும்பத்தை வெளிப்படுத்தினார். கால்டுவெல் இங்கிலாந்தில் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் மொழியியல் படித்தவர்; கிரேக்கப் பேராசிரியர் டேனியல் சான்ஃபோர்டு என்பவரிடம் ஒப்பியல் மொழியியல் கற்றவர். தென்னிந்தியாவில் சமயப் பணியாற்றுவதற்காகவே லண்டன்

மிஷன் இவரை மொழியியல் கற்கவைத்தது. கால்டுவெல் புலமை மிகுந்தவராக மாறினார். அவருக்கு லத்தீன், கிரேக்கம், ஜெர்மன் உள்ளிட்ட மொழிகள் தெரியும். மேலும், மொழியியல், இனவியல், வரலாறு, சமயம் ஆகிய துறை அறிவுகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

தமிழ்ச் சமூகத்தாருடன் மறைப்பணியாற்றிய காலத்தில் கால்டுவெல் மொழிக்கு அப்பால் நின்று தமிழ் இனவியம் (*Tamil ethnicity*) சார்ந்து பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார். திராவிட மொழிக்குடும்பம் எனும் ஒரு புதிய கருத்துருவாக்கத்தை உலகுக்கு உணர்த்தித் தனிப்பெரும் புகழை அடைந்த அவர் அம்மொழிச் சமூகத்தாரின் இனவியம் பற்றிக் கூறியவை இக்கட்டுரையில் சுருக்க மாக ஆராயப்படுகின்றன. இவற்றை மானிடவியல் அணுகுமுறையில் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் இனவியம்

ஓர் இனக்குழுவின் அடையாளம் சார்ந்த அனைத்து விடயங்களும் 'இனவியம்' (*ethnicity*) எனப் பொருள்கொள்ளலாம். இனவியத்தில் பல கூறுகள் அடங்கியுள்ளன. இனப்பெயர், மொழிப்பெயர், இனவரலாறு, தோற்றத் தொன்மம், புலப்பெயர்வு, இனப்பரவல், இன இயைபு, இனமுரண்கள், பிற்கால - இக்கால அசைவியக்கம் எனப் பலவும் இதிலடங்கும். தனி அடையாளம் கொண்டுள்ள ஒவ்வோர் இனக்குழுவும் (*ethnic group*) தனக்கான அடையாளத்தை உருவாக்கிய வரலாறு இனவியத்தில் முதன்மை பெறுகிறது. கால்டுவெல் தன்னுடைய மொழி ஆய்வினூடாகத் தமிழ் இனவியம் சார்ந்து பல கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்.

முதலில் இனம் (*race*)பற்றிய அவருடைய கருத்துகளைக் காண்போம். திராவிடர்களின் உடலமைப்பு பற்றியும் அவர்களுடைய இனவகைமை (*racial type*) பற்றியும் கால்டுவெல் அறிய முயன்றார் (*1856:1998: 610*). அவர் காலத்திய ஐரோப்பிய வல்லுநர் ஹாட்சன் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த தொல்குடிகள் பற்றி ஆராய்ந்தார். அவ்வரிசையில் தென்னிந்தியத் தொல்குடிகள் பற்றிய கட்டுரையில் (*Aborigines of Southern India, 1849*) பின்வருமாறு கூறியுள்ளார். அக்கருத்துக்களை ஓர்ந்து ஆராய்ந்த பின்னர் அவற்றை மறுதலிக்கும் முகமாகக் கால்டுவெல் மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தார். முதலில் ஹாட்சன் (*Hodgson, 1849*) கூறியவற்றைக் காண்போம்.

'பட்டறிவு நிறைந்த பார்வையுடன் காணும் எவரும் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் இடையே காணப்படும்

உடற்கூற்று வேறுபாடுகளை எளிதில் உணருவார்கள். ஆரியர்கள் உயரமானவர்கள், சீர்மையுடையவர்கள், மிருதுவான நிறமுடையவர்கள், நெளிவு சுளிவு கொண்டவர்கள். ஆனால் இவற்றிற்கு மாறாகத் திராவிடர்கள் உயரம் குறைந்தவர்கள், சீர்மை குறைந்தவர்கள் (less symmetric) குண்டாகவும் மந்தமாகவும் இருப்பவர்கள் என்று கூறியிருந்தார் (கால்டுவெல் 1856: 506-507).

ஹாட்சனின் இக்கருத்துகளைக் கால்டுவெல் பின்வருமாறு மறுக்கிறார்.

'பண்பட்ட உயர்சாதித் திராவிடர்களை நாம் காணும்போது இவர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுவதில்லை. பல்வேறு நிலைகளில் நோக்கும்போது திராவிடப் பெண்கள் மென்மைத் தன்மை கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். மேலும், பிராமணர்களுக்கு நிகரான தோற்றத்தைக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்கள், தெலுங்கு முன்ஷிக்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பண்டிட்டுகள் போன்றோரின் தலையமைப்பு வெள்ளையர்களிடமிருந்துதான் வேறுபடுகிறது. திராவிடர்கள் சிறிய, குறுகிய தலையைக் கொண்டிருக்கிறார்கள்' (மேலது: 510-515).

திராவிடர்களின் இனவகைமை பற்றி ஆராய்ந்த கால்டுவெல் திராவிடர்கள் சித்திய இனத்தின் (Scythian race) தொல் மூலத்திலிருந்து பிரிந்தவர்கள் என்று தம் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூலில் கூறுகிறார் (1998: 610). திராவிட மொழிக் குடும்பத்தார் ஆதியில் சித்திய தேசத்திலிருந்து நடு ஆசியா வழியாக வடமேற்கு இந்தியாவில் ஆரியர்களுக்கு முன்னர் குடியேறினார்கள் என்பது கால்டுவெல் முடிவாகும். மொழிக்கூறுகளின் உறவை முன்வைத்துத் திராவிட-சித்திய இன உறவை முதன்மைப்படுத்தினார். சித்திய மொழியின் பல்வேறு இலக்கணக் கூறுகளும் சொல் ஒப்புமைகளும் திராவிட மொழிகளோடு நெருங்கிக் காணப்படுவதால் கால்டுவெல் இம்முடிவுக்கு வந்தார் (1998: 39, 49-53, 610-624). புராதன சித்திய இனத்தின் ஒரு கால்வழியாகப் பிரிந்தவர்களே திராவிடர்கள் என்பது கால்டுவெல் கருத்தாகும். கமில் சுவலபில் (1972: 57-63; 1990: 48), ஆன்ட்ரி சோபெர்க் (2009: 130-134) போன்ற மொழியியல் அறிஞர்களும் திராவிடர்கள் ஈரான் வழியாக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள் என்கின்றனர்.

தமிழர்களைச் சித்திய இனத்தோடு இணைக்கும் கால்டுவெல்லின் முடிவு இன்றைய மானிடவியலர்களால் ஏற்றுக்கொள்ளப் பெறவில்லை. மனித இனங்களை வகைப்படுத்துவதில் இன்று உடற்கூறுகளே முதன்மை பெறுகின்றன. மக்களின்

குணாதிசியங்களும் பிற உடல்சாரா பண்புகளும் இடம்பெறுவதில்லை. கால்டுவெல் தமிழர்களை மந்தமானவர்கள், மன ஆற்றல் குறைந்தவர்கள், மறைமுக வழிமுறைகளைக் கையாளுபவர்கள், நெகிழ்வுத் தன்மை கொண்டவர்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார். இவை நடத்தைமுறைசார்ந்த பண்புகளாகும். இப்பண்புகளைக் கொண்டு மானிடவியலர்கள் மனித இனங்களை வகைப்படுத்தவில்லை. இன்றைய தமிழர்கள் உள்ளிட்ட திராவிடச் சமூகத்தார் தொன்மை ஆஸ்திரேலியர் (*proto-Australoid*) இனவகையைச் சேர்ந்தவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர் (விரிவுக்குக் காண்க: பக்தவத்சல பாரதி, திராவிட மானிடவியல், அச்சில்).

எனினும் கால்டுவெல் கண்டறிந்த 'திராவிட மொழிக்குடும்பம்' எனும் கண்டுபிடிப்பு மொழிநூல் வழி அறிவியல் தன்மையானவொன்று; எக்காலத்தும் அழியாதவொன்று. மொழிநூல் ஆய்வில் அவர் கண்டறிந்த புறவியல் கருத்துகளாக அமைந்த இனம், சமயம், சமூகம் பற்றிய கருத்துகள் அவருடைய முதன்மையான மொழிநூல் ஆய்விற்குப் பாதிப்பாக அமையாது.

தமிழ் இனவியம் பற்றிய இன்னும் சில கருத்துகளைக் கால்டுவெல் திருநெல்வேலி சாணார்கள் (*The Tinnevelly Shanars, 1849*) எனும் நூலில் விவாதிக்கிறார். இந்நூலின் துணைத் தலைப்பாகிய 'சாணார்களின் சமயம், நன்னடத்தை நெறிகள் (*morals*), ஒரு சாதியாகச் செயல்படும் பண்புகள், அவர்கள் கிறித்துவத்தை நோக்கி நகர்வதில் உள்ள வாய்ப்புகள், தடைகள்' இந்நூலின் பொருளை உணர்த்துகிறது. தமிழ்ச் சமூகம் பற்றிய பல்வேறு கருத்துருவாக்கங்களை உருவாக்கிக் கொள்ள முனைந்த கால்டுவெல் சாணார்களை ஒரு விடயகலை ஆய்வாக (*case study*) எடுத்துக்கொண்டு ஆராய்ந்தார்.

இது பற்றிய புரிதலை உருவாக்க முனைந்த போது கால்டுவெல் திராவிடச் சமூகத்தின் தொல்படிவமான வடிவங்கள் (*prototypes*) பலவற்றையும் தேடுகிறார். அதில் ஒன்று தமிழர்களின் தொல் சமயம் பற்றியதாகும். தன் ஒப்பிலக்கண நூலில் நான்காம் பின்னிணைப்பில் 'திராவிடர்களின் பண்டைய சமயம்' (*Ancient Religion of the Dravidians*) எனும் தலைப்பில் இதனை எழுதியிருக்கிறார். இதில் 'திராவிடர்களின் பூத வழிபாடு' எனும் தொடரினை வெளிப்படையாகக் கையாளுகிறார் (1856: 521-522). வேத சமயத்தைக் காட்டிலும் தொன்மையானது திராவிடர்களின் பூத வழிபாடு என்றும், அது பிராமணர்களின் சமய நெறியிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்றும் விவாதிக்கிறார்.

கால்டுவெலின் இந்த ஆய்வு விரிவானதும் ஒப்பியல் நிலையில் மேற்கொள்ளப்பட்டதும் ஆகும். கால்டுவெல் தொல் சமயம் பற்றிய அனைத்துக் கோட்பாடுகளையும் முழுமையாகப் படித்த பின்னர், சமயங்களின் வரலாற்றையும் அறிந்து கொண்டார். அதன் பின்னர் திராவிடர்களின் மொழிக் கூறுகளையும் பண்பாட்டுக் கூறுகளையும் முன்வைத்துப் பூத வழிபாடு பற்றிய கருத்துகளை நிறுவுகிறார். இவருடைய விவாதத்தில் ஓரிடத்தில் குறிப்பிடும் போது 'இந்திய நாகரிகத்தில் நாம் காணும் பல கருத்துகள் நீக்ரோ மக்களைவிட சற்று மேம்பட்டதாக உள்ளது; இந்தியாவின் பரந்துபட்ட பல்வேறு கருத்துகளில் ஒரு தனி வகையினமாக அது திருநெல்வெலியில் காணப்படுகிறது; இவையாவும்ஐரோப்பியர்களுக்கு அறிமுகமாகாதவை' என்கிறார் கால்டுவெல் (மேலது: 29).

இவ் விவாதத்தில் இன்னுமொரு கருத்தையும் முன்மொழிகிறார். 'கடவுள்கள் எப்படியோ அப்படியே தேசங்களும்' (*nations are what their Gods are.... 1849: 32*) சாணார்கள் பற்றிய நூலின் இரண்டாம் இயலில் குறிப்பிடுகிறார். பூத வழிபாடு கொண்டிருந்த சாணார்கள் கீழ்நிலைச் சாதியாராகவும், அறநெறியில் ஏதுமற்றவர்களாகவும் மேலோரால் கருதப்பட்டதாலேயே அவர்கள் கிறித்துவத்தை ஏற்றுக்கொள்ள வேகமாக முன்வந்தனர் என்கிறார். சாதி அடிமைத்தனம், பஞ்சம், வறுமை முதலான சமூகக் காரணிகள் சமய மாற்றத்திற்கு உதவியாக அமைந்ததையும் கூறுகிறார்.

தமிழ் இனவியம் பற்றிய கால்டுவெலின் இன்னொரு கருத்து நம் கவனத்திற்குரியது. உலகில் ஒவ்வோர் இனத்திற்கும் ஒரு மூலப்படிவத் தொன்மம் உண்டு. அது இனத் தோற்றம் பற்றியதாக அமையும்; இன்னும் சில தொன்மைகளைச் சுட்டக்கூடியதாகவும் அமையும். கால்டுவெல் ஆரியர், திராவிடர் ஆகிய இருவருக்குமான ஒரு பொது மூலப்படிவத் தொன்மத்தை எடுத்துக் கொள்கிறார். அது அகத்தியர் பற்றியதாகும். அகத்தியர் வேத ஆசிரியர்களில் ஒருவர் என்றும், பெருங் காடுகளில் வேள்வியும் தவமும் புரியும் முனிவர்களின் தலைவர் என்றும், ஆரியர் குடும்பத்தின் தலைவர் என்றும் கூறப்படும் தொன்மத்தை ஒருபுறம் காண்கிறார். மறுபுறம், அகத்தியர் தமிழ் மரபின் மூலவர் எனக் கருதும் தொன்மத்தையும் காண்கிறார். இவ்விரண்டு துருவக் கருத்துகளை ஆராயுமிடத்து அவர் ஒர் அயலினப் பார்வையோடு அதனைப் 'புராணங்கள் உருவாக்கிவிட்ட ஒரு திருவுருவமே அகத்தியர் எனக் கொள்வதுதான் பொருத்தமானது' என்கிறார் (*1998: 114-115*). ஆனால் தொன்மங்களை மக்கள் காணும் அகவயப் பார்வையுடன் ஆராய்வது அவசியமாகும்.

திராவிட மொழிக்குடும்பத்தின் தனித்துவத்தை வெளிப்படுத்திய கால்டுவெல் அகத்தியர் தொன்மங்கள் இருவேறுபட்ட மரபுகளில் ஒற்றுமையைவிட வேற்றுமையைக் குறித்து நிற்கின்றன என்பதை வெளிப்படுத்த முனையவில்லை. இந்த இருவேறுபட்ட வடிவங்களுக்குமான பொருண்மைகளை ஆரிய, திராவிட நோக்கோடு அணுகாமல் தன்னியல்பான தன் இனமையப் பார்வையில் அதனை ஒரு புராணகக் கட்டுமானம் எனப் பொதுமைப்படுத்திவிட்டார். திராவிடம் நோக்கிய அவருடைய முன்னெடுப்பில் மொழியலுக்கு அப்பால் நிற்கும் புராணங்களை அவர் முதன்மைப்படுத்தவில்லை என்றே கருதவேண்டியுள்ளது. உண்மையில் அகத்தியர் தொன்மமானது தமிழின் மூலப்படிவத் தொன்மங்களில் மிகமுக்கியமான ஒன்றாகும் எனபதை இனவரலாற்று ஆய்வுமுறையில் உணரமுடியும்.

இனப்பெயர்

நீண்ட வரலாறு கொண்ட எந்தவொரு தேசத்திலும் பேரினங்களின் பெயர்களும், இனப் பெயர்களும் *(ethnonyms)*>சமூகங்களின் பெயர்களும் காலவோட்டத்தில் வெவ்வேறு நிலையில் மாறி வந்திருக்கின்றன. இம்மாற்றத்தில் மக்களின் 'அகப்பார்வை' *(insider's view)* ஒருபுறமும், அம்மக்க ளைச் சுற்றி வாழும் பிற இனத்தவர்களின் 'அயல்பார்வை' *(outsider's view)* மறுபுறமும் தொழிற்படுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் அயலவர்களாக விளங்கிய வடமொழியாரும் தெலுங்கர், கன்னடியர் உள்ளிட்ட தென்புலத்தாரும் தமிழரைப் பின்வருமாறு இனங்கண்டனர். அதனைக் கால்டுவெல் நுட்பமாக உணர்ந்து தம் திராவிட ஒப்பிலக்கண ஆய்வில் பின்வருமாறு விளக்கிச் செல்கிறார் *(1998: 14-16)*.

கால்டுவெல் பின்வருமாறு எழுதுகிறார்: தமிழுக்கு 'அரவம்' என்றொரு பெயருண்டு. தக்காண முசல்மான்கள், தெலுங்கர்கள், கன்னடியர் ஆகியோர் தமிழை அரவம் என அழைக்கின்றனர். அரவம் என்ற சொல் எப்படி வந்தது? இதன் தோற்றம் தெளிவாகப் புரியவில்லை என்கிறார் *(1998: 14)*. தமிழ் இலக்கியம் மற்ற இலக்கியங்களை விட நீதிநெறிகளை மிகுதியாகப் பேசுவதால் தமிழரை 'அரவர்' என்று அழைத்திருக்க வேண்டுமென குண்டர்ட் கருதியதைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறார்.

இக்கருத்துப்படி அரவர் என்றால் அறம் சார்ந்தவர்கள் என்பது பொருள். தமிழில் அறம் என்பது நீதிநெறிகளைக் குறிப்பதால் இக் கருத்து பொருத்தமானதாகும் எனக் கருதுகிறார். இச்சொல் புத்த சமயத்தாரையும் குறிக்க வாய்ப்புள்ளது. 'அறவன்' என்பது தமிழில் புத்தரின் பெயர்களில் ஒன்று. இவ்வாறு பொருள் காண்பதற்குத்

தெலுங்கிலும் கன்னடத்திலும் அரவம் என்ற சொல்லில் வரும் இடையின 'ர' கரம் தமிழில் அறம் என்ற சொல்லில் 'ற' கரம் வல்லினமாக உள்ளது தடையாக இருக்க முடியாது. ஏனெனில் தமிழ் 'ற்' தெலுங்கிலும் கன்னடத்திலும் 'ர்' ஆக மாறுவது வழக்கம். அறம் என்ற தமிழ்ச் சொல் கன்னடத்தில் அரவு என உள்ளது. இச்சொல்லுக்கு இன்னொரு பொருள்கோடலும் உண்டு. மக்கள் இனங்களில் தமிழர்கள் அறிவாளிகளாகக் கருதப்படுவதால் 'அறிவு' எனும் தமிழ்ச் சொல்லிலிருந்து அரவம் என்னும் சொல் வந்ததாக இன்னொரு கருத்துள்ளது.

தமிழ் இலக்கணக்காரர்கள் குறிப்பிடும் கொடுந்தமிழ் வழங்கும் பன்னிரண்டு மாநிலங்களில் எங்கோ ஓரிடத்தில் இடம் அறியாமல் கிடக்கும் ஒரு மாவட்டத்தின் பெயர் அரவா என்பதால் அதிலிருந்து அரவா வந்திருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இந்த விளக்கங்கள் எல்லாவற்றிலும் உள்ள பெரும் சிக்கல் என்னவெனில், இவை தமிழ் பற்றியவை என்றாலும் அரவம் எனும் சொல் தமிழுக்கோ தமிழ் பேசுவோருக்கோ உள்ள பெயராகத் தமிழில் முற்றிலும் அறியப்படவில்லை. தெலுங்கர், கன்னடியர், தக்காணர்கள் ஆகியோரால் இந்தப் பெயர் பயன்படுத்தபடுவதால் இதன் உருவாக்கத்தினைத் தமிழ் நாட்டுக்கு வெளியிலிருந்து தேடவேண்டும் என்கிறார்.

கால்டுவெல் கலந்துரையாடிய தெலுங்குப் பண்டிதர்களின் கருத்துப்படி அரவா என்ற சொல் திராவிடச் சொல் அல்ல, அதுவொரு வடமொழிச் சொல். ஒலியற்றது எனப் பொருள்படும் அரவ என்பதிலிருந்து இது பெறப்பட்டதாகும். வலிந்து ஒலிக்க வேண்டிய வல்லொலி எழுத்துக்களைத் தமிழ் இழந்துள்ளமையால் தமிழர்களுக்கு அவர்களின் வடமொழி நண்பர்களால் அப்பெயர் இடப்பட்டது என அத்தெலுங்காசிரியர்கள் கருதினார்கள். இந்திய மொழிகளில் உரத்த ஒலி எழுத்துக்களை இழந்துள்ள ஒரே மொழி தமிழ் ஆதலின், அதைக் குறையாகக் கருதிய வெளியாரால் எள்ளி நகைக்கப்பெற்றது. அதனால்தான் தமிழ் ஒலியற்றது -'அரவ'- என அழைக்கப்பெற்றது. இதுதான் உண்மையான மூலம் என்றால் தமிழர்கள் தங்கள் மொழியில் இப்பெயரை ஏற்றுக்கொள்வது சாத்தியமில்லை என்றும் கால்டுவெல் கருதினார்.

தெலுங்கில் அரவமு எனத் தமிழ்மொழிக்குப் பெயர் வைத்ததுடன் தெலுங்கர்கள் ஒருபடி மேலே சென்று தமிழ் பேசிய மக்களை 'அரவாலு' எனவும் அழைத்தனர். தமிழ் மொழியைக் குறிக்கும் அரவமு எனும் தெலுங்குச் சொல்லையும், சத்தத்தைக்

குறிக்கும் அரவம் என்ற தமிழ்ச் சொல்லையும் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. பிந்தையது 'சத்தம்' எனவும் முந்தையது 'சத்தம் அற்றது' எனவும் பொருள் தருவது வேடிக்கையான சூழலாகும். தமிழ்ச் சொல்லில் மொழி முதல் எழுத்தாக வரும் 'அ' கரம் வடமொழியின் எதிர்மறை 'அ' கரம் அல்ல. இது 'ர்' ஒலியில் தொடங்கும் வடசொற்களைத் தமிழில் எழுதச் சேர்க்கும் 'அ' (வடமொழியில் ராஜர் தமிழில் அரசன் என வருவதை ஒப்பிட்டு நோக்கலாம்). வடமொழிச் சொல் 'ரவ' என்பது உரத்த பேரொலி எனும் பொருளைக் குறிக்க , 'அரவம்' எனும் தமிழ்ச் சொல் நுண்ணிய ஒலி எனும் பொருளைக் கொண்டிருப்பது கவனிக்கத்தக்கது (மேலது: 15).

தமிழ் இனவியத்தில் பெயர்சார்ந்த கருத்தினங்களைக் கால்டுவெல் மிகவும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றைத் திராவிட ஒப்பிலக்கணம் நூலில் முன்பகுதியில் விளக்கிச் செல்கிறார். தமிழுக்கும் தமிழருக்கும் இன்னொரு அடையாளமாக 'மலபார்' எவ்வாறு தோன்றி வளர்ந்தது என்பதையும் கூட கால்டுவெல் நுட்பமாக விளக்கியிருக்கிறார். கொரமண்டல் (சோழமண்டலம்) என்ற சொல்லுக்கான ஆய்வும் குறிப்பிடத்தக்கது (மேலது: 20-25). இனமும் சமூகமும் காலகதியில் ஏற்றுக்கொள்கின்ற பெயர்கள் அகவயமாகவும் புறவயமாகவும் நிகழ்கின்றன. இவை அந்தந்த இனத்தின் இனவரலாறாக அமைகின்றன. தமிழர்களின் இனவரலாற்றை ஆராய்வதில் கால்டுவெல் புறவயக் கூறுகளையும் கணக்கிலெடுத்திருப்பது அவருடைய ஆய்வு முழுமை சார்ந்தது (*holistic*) என்பதை நிறுவுகின்றது.

சமயமும் சமூகமும்

கால்டுவெல் 1837 இல் சென்னைக்கு வந்து மூன்றரை ஆண்டுகள் தங்கி, அதன் பின்னர் 1841 ஆம் ஆண்டு இறுதியில் திருநெல்வேலி சென்றடைந்தார். அதன் பின்னர் தமிழ்ச் சமூகம் பற்றிய அடிப்படைகளை உருவாக்கிக் கொண்ட காலகட்டத்தில் சமயம், சமூகம் பற்றிப் பல்வேறு கருத்துகளை முன்வைத்தார். தமிழர்களின் பரவலான சமய நம்பிக்கை பேய் பிசாசு சார்ந்த பூதவழிபாடு (*demonolatry*) என அழுத்தம் திருத்தமாகப் பல இடங்களில் எழுதினார் (1886). தமிழர்களின் பன்மைத் தன்மையுடைய, நீண்ட நெடிய வரலாறு கொண்ட வழிபாட்டு முறைகளையெல்லாம் அறிந்த கால்டுவெல் அவற்றை ஒருமுகப்படுத்தி பூதவழிபாடு என ஒற்றை வழிபாட்டு முறைக்குள் கொண்டுவந்தார். இந்த அணுகுமுறையானது கீழ்த்திசையியல் அறிஞர்களின் ஐரோப்பிய மையவாதம் சார்ந்தது என்பதை எளிதில் உணர்ந்துவிடலாம்.

கால்டுவெல் தொடங்கி மறைத்திரு ஹென்றி வொயிட்ஹெட், தியோடர் எல்மோர் உட்பட அனைத்துக் கீழ்த்திசையியல் அறிஞர்களும் இந்து மதத்தினரை 'சிலை வழிபாட்டினர்' என வருணித்தனர். கடவுளைக் கல்லாக்கி வழிபடும் சிலை வழிபாட்டினரை அவர்கள் மிகவும் விநோதமாகவும் வேடிக்கையாகவும் பார்த்தார்கள். இந்து சமயத்தின் பன்முகத் தன்மையைச் சிலை வழிபாடு என்ற ஒற்றைக் கருத்தினமாகச் சுருக்கிவிட்டது என்பது ஐரோப்பிய மையவாதத்தின் இனமையச் சார்புடைய (*ethnocentrism*) கருத்தாகும்.

கால்டுவெலிடம் ஐரோப்பிய மையவாதச் சார்பு இருந்தாலும் திராவிடச் சான்றினை நிறுவிய போது, அது ஆரியத்திலிருந்து வேறுபட்டது என்பதை உறுதிப்படுத்தித் தன்னுடைய கருத்தை முழுமையாக நிறுவினார். கல்கத்தா கீழ்த்திசையியலார் இந்திய நாகரிகத்தின் மூலம் சமஸ்கிருதம் என்ற வாதத்தை முன்னெடுத்த காலகட்டத்தில் சென்னைக் கீழ்த்திசையியலார் திராவிடச் சமூகம், பண்பாடு, நாகரிகம் தனித்துவமானது; அது ஒரு தனிமரபு என்பதை ஓங்கி உரைத்தனர். இந்நிலையில் சமூகம் பற்றிய கால்டுவெல் பங்களிப்புகளில் மிகவும் கூர்மையுடையதாக என்னைக் கவர்ந்தது 'சூத்திரர்' பற்றிய அவருடைய அவதானிப்பாகும். இந்தியத் துணைக்கண்டத்தில் இருவேறு சமூக, பண்பாட்டு முறைகளைக் கண்டறிந்த கால்டுவெல் சூத்திரர் எனும் வகையினத்தை முன்மொழிந்தார். ஆரியவயப்பட்ட ஒரு சமூகக் கருத்தினமாக தொல்குடிகளை மட்டும் பண்டைய சிந்து நதிக்கரையில் வாழ்ந்த தொல்குடிகளை மட்டும் குறித்து வந்த சூத்திரர் எனும் சொல் பிற்காலத்தில் அனைத்திந்திய வழக்கில் பயன்பாட்டுக்கு வந்த வரலாற்றைக் கால்டுவெல் மிகச் சிறப்பாக ஆராய்ந்திருக்கிறார் (*1998: 109-115*).

சிந்து நதிக்கரையில் இருந்த 'சித்ரொஸ்' எனும் நகரத்தையோ அந்நகரில் வாழ்ந்த 'சுத்ரொகி' எனும் இனத்தாரையோ குறித்து நின்ற அந்நகரில் வாழ்ந்த 'சுத்ரொகி' எனும் இனத்தாரையோ குறித்து நின்ற ஒரு வழக்கை அடிப்படையாகக் கொண்டு அம்மக்களை வென்று அடிமைப்படுத்திய ஆரியர்கள் அவர்களைச் 'சூத்ர' என்று வழங்கலாயினர். அதே காலத்தில் வாழ்ந்த 'தஸ்யூ', 'மிலேச்சர்' ஆகியோர் ஆரியர்களுக்கு அடங்காத சுதேசி இனமாகக் காணப்பட்டார்கள். இது பற்றிய தன் நுட்பமான ஆய்வில் கால்டுவெல் பின்வரும் கருத்தினை நன்கு விவரிக்கிறார்:

'சூத்திரர் என்ற பட்டப்பெயர், வட நாட்டைக் காட்டிலும் தென்னாட்டில் உயர்ந்த பொருளுடையதாகவே வழங்கலாயிற்று. வடஇந்தியாவைச் சேர்ந்த பழங்குடிச் சூத்திரர்கள், ஆரியருக்கு அடிமைகளாகவும், தமக்கென ஓர் உடைமையும் உரிமையும்

அற்றவர்களாகவும் விளங்குகின்றனர்; தென்னிந்தியாவிலோ என்றால், அதற்கு மாறாக, திராவிடர்களில், இடைநிலை, உயர்நிலை மக்களுக்கே சூத்திரர் என்ற அப்பட்டம் இடப்பட்டிருந்தது. வடஇந்தியச் சூத்திரர்களுக்கு நிகரான இனத்தவர், சூத்திர் என்று அழைக்கப்பெறாமல் பள்ளி, பறையன் என்றே அழைக்கப்பட்டனர்..... (ஆரியர்) அமைதியாகக் குடியேறி, வஞ்சப் புகழ்ச்சியால் வாழிடம் பெற்ற ஆரியப்பார்ப்பனர்கள், சூத்திரர்என்று அழைப்பதால்திராவிடர்களுக்குச் சிறப்புப் பெயர் சூட்டிப் பெருமை செய்வதாக அத்திராவிடர்களை நம்பும்படி செய்திருத்தல் வேண்டும்..... திராவிட இனத்தவர், சூத்திரர் என்ற பெயரை வெறுக்காது ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே, வட இந்தியாவில் சூத்திரர் என்றால் இழிகுலத்தவராக, தென்னிந்தியாவில் பார்ப்பனருக்கு அடுத்த நிலையில் இருக்கத்தக்கவராவர். திராவிட இனத்தவரைக் குறிக்க சத்திரிய, வைசிக என்ற பெயர்கள் எவ்வளவு பொருத்தமற்றனவோ, அவ்வளவு பொருத்தமற்றது சூத்திரர் என்ற பெயரும். திராவிட இனத்தவரை, அறவே பொருத்தமற்ற முறையாகிய மனுமுறைப்படி பிரித்து வழங்காது, ஆங்காங்குள்ள வழக்காற்றையொட்டி, 'வேளாளர்', 'நாயக்கர்' என்பன போலும் அவரவர் குலப்பெயரால் பெயரிட்டு அழைப்பதே சாலப்பொருந்தும்' (மேலது: 112-113).

இந்தியத் துணைக்கண்டத்தில் ஆரியச் சமூகமும் திராவிடச் சமூகமும் வெவ்வேறானவை என்பதைக் கால்டுவெல் சூத்திரர் எனும் சமூக வகையினத்தைக் கொண்டு சான்றுகளுடன் நிறுவியுள்ளார். திராவிட மொழிக் குடும்பம் என்ற மொழியியல் கண்டுபிடிப்புடன் அவர் கண்டறிந்த சமூகம் (சூத்திரர்) பற்றிய கருத்தினமும் மிகவும் மெய்யானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமாகும். இதற்கு அவர் கையாண்ட மொழி நூல் சார்ந்த விளக்கங்கள் துணை நின்றன என்பதை அறிய முடிகிறது.

வடமொழியாளர்கள் சூத்திரர் என்போரைத் தனிவகையினமாகக் கருதினார்கள். அதனைக் கால்டுவெல் நுணுகி ஆராய்ந்து 'தென்னிந்தியாவில் பறையர்கள் திராவிடர்களா?' (*Are the Pariars of Southern India Dravidians?*) எனும் கட்டுரையை எழுதினார். அதில் மொழிவழியாகவும் இனவியல் வழியாகவும் பறையர்கள் திராவிடர்கள் என்பதை நிறுவுகிறார்.

உண்மையில் ஆரியர்களின் வருகைக்கு முன்னர் தமிழ்ச் சமூகம் 'குடி' முறையிலான சமூகமாகவே இருந்தது. ஒவ்வொரு திணையிலும் வாழ்ந்த சமூகத்தார் குடி என்றே அடையாளம் பெற்றிருந்தனர். அம்குடி, முதுகுடி, குரம்பைக்குடி, வேட்டக்குடி, நீள்குடி, விழுக்குடி,

வீழ்குடி, செழுங்குடி, பல்குடி என்றெல்லாம் சங்ககாலத்தில் குடிகள் அழைக்கப்பெற்றன. இத்தகைய குடியமைப்புடைய தமிழ்ச் சமூகம் ஆரியர்களின் குடியமர்வுக்குப் பின்னர் சாதி அமைப்புடைய சமூகமாக மாற்றப்பட்டது (பக்தவத்சல பாரதி 2013: 10).

பின்னுரை

கால்டுவெல் கண்டறிந்த 'திராவிட மொழிக் குடும்பம்' என்பது மொழிநூல் ஆய்வுகளில் அவருக்கு முன்னர் எவரும் கண்டறியாத ஒரு கருத்தினமாகும். உண்மையில் 'திராவிட' எனும் சொல் பல காலமாகவே பயின்று வந்துள்ள ஒரு சொல்லாகும். இச் சொல்லின் வரலாற்றைக் கால்டுவெல் குறிப்பிடுகிறார் (1998: 3-6). குமாரிலபட்டர் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். இதற்கு முன்பே மனு இச்சொல்லைக் கையாண்டிருக்கிறார். பாரத தேசத்தின் பல்வேறு இனங்களைக் குறிப்பிடும் போது 'பவுண்ட்ரிகர், ஒட்டர், திராவிடர், காம்போஜர், யவனர், சாகர், பாரதர், பல்லவர், சீனர், கிராதர், தரதர், கஸர்... போன்றவர்கள் மெல்ல மெல்ல இழிந்த இனத்தவராகிவிட்டனர்' என்கிறார் மனு (து. 43-44; காண்க கால்டுவெல் 1998: 4).

மனு தொடங்கி குமாரிலபட்டர், இலங்கையில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டு முதல் வழங்கப்படும் பாலி மொழிச் சொல், பெகிஸ்தன் நாட்டுக் கல்வெட்டுக் குறிப்புகள் ஊடாகப் பின்னர் ஏற்பட்ட இராமாயாணம், மகாபாரதம் வரையில் இச் சொல்லின் தொடர்ச்சி காணப்படுகிறது. திராவிடம் எனும் சொல்லின் மூலத்தையும் வரலாற்றையும் ஆராய்ந்துள்ள மொழியியல் அறிஞர் பி. எம். ஜோசப் (1989) கட்டுரையை நோக்கும் போது இச்சொல்லின் தொன்மையை வாய்ந்தது அறியமுடிகிறது. திராவிடம் எனும் சொல் தொன்மை வாய்ந்தது என்றாலும் கால்டுவெல் கண்டறிந்த 'திராவிட மொழிக் குடும்பம்' எனும் கண்டுபிடிப்பு மகத்தானது; அறிவியல் தன்மையானது.

மொழி நூலில் உருவான இக்கண்டுபிடிப்பினை அடுத்து திராவிடம் எனும் கருத்தாக்கம் தென்னிந்தியச் சமூகங்களின் பல்வேறு மரபுகளுக்கும் சுட்டப்படும் ஒரு முதன்மையான அடைமொழியாக உருவானது. திராவிட உறவுமுறை, திராவிடச் சடங்குகள், திராவிடர் திருமணம் என்பன போன்ற பல்வேறு சுட்டுகைகள் இவ்வரிசையில் சொல்லலாம். உலகளவில் காணக்கூடிய ஆறுவகையான உறவுமுறைகளில் 'திராவிட உறவுமுறை' என்றவொரு தனிவகையினம் மானிடவியலர்களால் இனங்காட்டப்பட்டுள்ளது. ஏனைய உலகப் பண்பாடுகளை ஒப்பிட்டு அறியும் போதும் இந்தக் கருத்தினம் துணைபுரிகின்றது.

கால்டுவெல் முன்னெடுத்த மொழிநூல் ஆய்வுகளில் இலைமறை காயாக இடம்பெற்ற தமிழ் இனவியம் சார்ந்த சில முதன்மையான கருத்துகள் மட்டும் இங்குக் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. இன்னும் விரிவாக ஆராய்வதற்குக் களங்கள் உள்ளன.

துணைநூல்கள்

இராமச்சந்திரன், எஸ், அ. கணேசன். 2010. தோள்சீலைக் கலகம்: தெரிந்த பொய்கள் தெரியாத உண்மைகள். சென்னை: தென்னிந்தியச் சமூக வரலாற்று ஆய்வு நிறுவனம்.

கால்டுவெல், இராபர்ட் (தமிழில் கோவிந்தன், கா. ரூ க. ரத்னம்). 1977 (1959). திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம். சென்னை: குறள் நிலையம்.

சிவசுப்பிரமணியின், ஆ. 2001. கிறித்தவமும் சாதியும். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

டிரவுட்மன், தாமஸ் (தமிழில் இராம. சுந்தரம்). 2007. திராவிடச் சான்று: எல்லிஸும் திராவிடமொழிகளும். சென்னை: சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம். நாகர்கோவில்: காலச்சுவடு பதிப்பகம்.

பக்தவத்சல பாரதி. 2013. வரலாற்று மானிடவியல். புத்தாநத்தம்: அடையாளம்.

Caldwell, Robert. 1844. Mission of Edeyenkoody, in the District of Tinnevelly, andeDiocese of Madras (Part One). Missions to the Heathen. London: SPG.

1847. Mission of Edeyankoody, in the District of Tinnevelly, and Diocese of Madras (Part Three). Missions to the Heathen. London: SPG.

1849. The Tinnevely Shanars: A Sketch of Their Religion and Their Moral Condition, and Characteristics as a Caste: With Special Reference to the Facilities and Hindrances to the Progress of Christianity Amongst Them. Madras: R. Twigg.

1998 (1856). A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages. New Delhi: Asian Educational Services.(third edition, revised and edited by the Rev. J. L. Wyatt and T. Ramakrishna Pillai).

1857a. Lectures on the Tinnevelly Missions,

Descriptive of the Field, the Work, and the Results: With an Introductory Lecture on the Progress of Christianity in India. London: Bell and Daldy.

1857b. Progress of Christianity in India: The Tinnevelly Missions No. 1-VII. colonial Church Chronicle and Missionary Journal 11: 88-103, 129-136, 177-186, 244-253, 286296, 332-345, 65-378, 494-510.

1875. The Languages of India in Their Relation to Missionary Work. London.

1879. On Reserve in Communicating Religious Instruction to Non-Christians in Mission Schools in India: a Letter to the Right Reverend The Lord Bishop of Madras. Madras.

1880. The First Centenary of the Tinnevelly Mission. Palamcottah: Church Mission Press.

1881. Records of the Early History of the Tinnevelly Mission of the Society of Promoting Christian Knowledge and the Society for the Propagation of the Gospel in Foreign Parts. Madras: Higginbotham.

1881. A Political and General History of the District of Tinnevelly from the Earliest Period to its Cession to the English Government in A.D. 1801. Madras.

1886. On Demonolatry in South India. Journal of the Anthropological Society of Bombay 1, 1: 91-105.

Hodgson, B.H.1849. Aborigines of Southern India. Journal of the Asiatic Society of Bengal 18: 350-59.

Joseph, P. M. 1989. The Word Dravida. International Journal of Dravidian Linguistics XVIII, 2: 134-142.

Ravindiran, V. 1996. The Unanticipated Legacy of Robert Caldwell and the Dravidian Movement. South Indian Studies 1: 83-110.

Said, Edward. 1978. Orientalism. New York: Pantheon Books.

Schroder, Ulrike. 2010. No Religion, But Ritual?: Robert Caldwell and the Tinnevelly Shanars. In Ritual, Caste and Religion in Colonial South India, eds., Michael Bergunder et al. , pp.131-160. Halle: Verlagder

Franckeschen Stiffungen.

Sjoberg, Andree F. 2009. Dravidian Language and Culture. KUP pam: Dravidian University.

Surguner, Samuel. 1883. Bishop Caldwell and the Tinnevelly Shanars. Palamcottah: Pillai.

Wyatt, Joseph L (ed.). 1894. Reminiscences of Bishop Caldwell. Madras: Addison & Co.

Zvelebil, Kamil. 1972. The Descent of the Dravidians. International Journal of Dravidian Linguistics 2: 57-63.

_____.1990. Dravidian Linguistics: An Introduction. Pondicherry: Pondicherry Institute of Linguistics and Culture.

❀ ❀ ❀

30. The Art of Writing Tamil History in Nineteenth Century British India and Robert Caldwell's Historical Outlook

Dr. S. Jeyaseela Stephen
Professor of Maritime History (retd.)
Vishvaa Bharathi University, Culcutta

Robert Caldwell (1814-1891) is well known as a missionary till date for his burning zeal of evangelical work conducted in the southern parts of Tamil country. He is also equally popular and reputed as an outstanding scholar in philology for his contribution to the study of comparative grammar of the Dravidian languages. His numerous sermons and lectures delivered, in addition to the pamphlets and books published have been used by many writers in the beginning to examine his two faces both as a missionary and linguist. Some have later preferred to use his writings to understand better in the context of religion and society in the nineteenth century scenario of British India. While this being the situation I must confess that Caldwell has not been understood properly from the historical view point. Hence this paper aims to trace the neglected aspects of his contribution to Tamil history and to the commencement of the Tamil historiography. Writing Indian history by foreigners had just begun at that time and further, the art of writing the history of India was only in the early phase.[1] Caldwell was the product of the nineteenth century, and his writings and contributions have also a lot to do with British India, it only remains therefore, for us to explore his writings on Tamil history developed and how and why it has not been so popular

till date among the scholars. We shall also trace his methods and approaches in writing Tamil history between 1841 and 1881.

Caldwell arrived Madras in 1838 at the age of twenty three.[2] He had stated openly that he got inspired a lot in his missionary work by John Anderson who did commendable work and lived there (set up a school then called Anderson's school which had later developed into Madras Christian College).[3] Caldwell had to go to Tirunelveli to join the protestant mission and he did so. After arrival he began his evangelical work on Sunday, 28 November 1841. He was stationed at Palayamkottai and Nazareth in the beginning the two important protestant mission stations.[4]

சாணார்கள் இந்துக்கள் என்று சொல்லப்பட்டாலும் அது பார்ப்பனப் பொருளைக் குறிக்காது. அவர்கள் தமிழ்ப் பழக்கவழக்கங்களைக் கொண்டவர்கள், அது பார்ப்பன வழக்கத்திலிருந்து வேறுபட்டது. சாணார்களின் சமயம் என்பது பேய் வழிபாட்டோடு தொடர்புடையது. இது பார்ப்பனச் சமயத்துக்குப் புறம்பானது. பார்ப்பனச் சடங்குகளிலிருந்தும் கருத்துக்களிலிருந்தும் மாறுபட்டது. பேய் பிசாசுக்களை அவற்றின் கோபத்தைத் தணிக்கும் பொருட்டு இரத்தப்பலியிட்டும் சாமியாடியும் அவர்கள் வழிபடுவர். எனவே சாணார்கள் தனித்த வழிபாட்டைக் கொண்ட சமயத்தினர் என்பது கால்டுவெல்லின் விளக்கம்.

சாணார்களின் சமயம் என்பது இந்து சமயம் என்று கால்டுவெல்லால் சொல்ல இயலாமல் ஹிந்து, ஹிந்துத்துவம் ஆகிய சொற்களின் பொருண்மையை விளக்குகிறார். இந்து சமயம் என்பது ஒருபடித்தானதன்று என்பதை அவர் குறிப்பிடுகிறார். இந்து சமயம் என்ற பொதுப்பெயரைப் பயன்படுத்துவதால் இந்தியாவில் வழக்கிலுள்ள திணைசார் சமயங்கள் பற்றிப் பேசும் போது வேறுபட்ட அர்த்தங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. ஒன்றுக்கொன்று முரண்பட்ட சமயங்களும் இந்து சமயத்திற்குள் அடக்கப்பட்டுள்ளன என்பதைக் கால்டுவெல் விவரிக்கிறார். இந்து சமயம் என்பது பல தெய்வங்களை உள்ளடக்கியுள்ளது என்பதைக் கால்டுவெல் தெளிவுபடுத்துகிறார். பிராமணியம் தனது வழிபாட்டுத் தலங்களில் சாணார்களை அனுமதிப்பதில்லை என்பதையும் கால்டுவெல் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறார்.

சாணார்கள் 'பேய்'வழிபாட்டினர் என்பதைக் குறிப்பிடும் கால்டுவெல் பேய் என்ற சொல் தமிழ்ச் சொல்லே என்று நிறுவுகிறார். அந்தப் பேய்கள் சக்தி வாய்ந்தவையாகவும், கொடூரமாகவும் விளங்குபவை. பேய் பிடித்து ஆடுவதைக் கால்டுவெல் குறிப்பிட்டு அதனைக் குணப்படுத்துவதற்கும் சாணார் சாதியில் உள்ளூர் வைத்தியர்கள் இருப்பதையும் குறிப்பிடுகிறார். அவர்களின் நடவடிக்கைகள் சமயஞ்சார்ந்ததாக விளங்குகிறது என்பதையும் அவர் குறிப்பிடுகிறார். ஒரு பெண்ணுக்குப் பேய் பிடிக்கிறது. உள்ளூர் வைத்தியர் வருகிறார். அவர் தம்முடைய நூலகத்தைக் கையில் வைத்திருப்பார் (*He brings his library with him*). அவரால் அதனைப் படிக்க இயலாது. ஆனால், அது அவருடைய நினைவில் பத்திரமாக இருக்கும். '*his complete science of medicine in one hundred stanzas, as revealed by the sage Agastya to his disciple Pulastya*'. சாமியாட்டம் நிகழ்வதற்கும் இசைக்கப்படும் இசை பற்றியும் அவர் குறிப்பிடுகிறார்.

ஒழுங்கமைக்கப்பட்ட வழிபாட்டினை அவர்கள் கொண்டுள்ளனர் என்பதும் கால்டுவெல் அவர்களுடைய கூற்றாகும். விருதுப்பட்டியில் தாம் முதன் முதலாக ஒழுங்கமைக்கப்பட்ட பேய் வழிபாட்டினைக் கண்டதாக அவர் குறிப்பிடுகிறார். காளிக்குக் கோவில் கட்டி வழிபடுவதை அவர் உற்று நோக்கியுள்ளார். ஆனால் பெரும்பாலான பேய்க் கோவில்கள் கட்டடமின்றி காணப்படுவதையும் அவர் விளக்குகிறார். வழிபாட்டுத் தலங்களில் பீடங்கள் இருப்பதையும் அவர் குறிப்பிடுகிறார். சாமியாட்டத்தின் போது அணியப்படும் வண்ண உடை பற்றியும் விளக்கியுள்ளார். இந்தியக் கொட்டு (தவில்)

Indian drum) நாகசுவரம் ஆகியவை இசைக்கப்படுவதை விளக்குகிறார். வழிபாட்டுத் தலங்களில் வில்லுப்பாட்டு இசைக்கப்படுவதையும் அவர் குறிப்பிடுகிறார். சேவற்கோழியும் ஆடும் பலியிடப்படுவதையும் அவர் உற்று நோக்கியுள்ளார்.

தாம் மறைப்பணியாற்றிய இடையன் குடியைச் சுற்றியுள்ள கிராமங்களில் நாடார் சாதியினர் வாழ்வதைக் கால்டுவெல் சுட்டிக் காட்டுவதோடு அவர்களை '*lords of the soil*' என்றும் குறிப்பிடுகிறார். அவர்கள் நிலக்கிழார்களாக இருக்கும்போது அதே சாதிப் பிரிவாகிய சாணார்கள் அந்நிலங்களில் வளர்ந்துள்ள பனைகளில் பதனீர் சேகரிப்பவர்களாக உள்ளனர் என்று குறிப்பிடுகிறார்.

(இதுபோன்ற நிலவுடைமைக் கூறுகளை நான் களஆய்வு செய்து சேகரித்த கதைப்பாடல்களிலும் காண முடிந்தது. குமரிமாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் வடக்குச் சூரங்குடியில் பிச்சைக்காலன் வழிபாடு வழக்கிலுள்ளது.. அதிரம் சேனைக்குட்டி நாடார் பிச்சைக்காலனுக்காகத் தமது பண்ணை வயல்களிலும் பணங்காடுகளிலும் வேலை பார்க்கும் சிலம்பன்மார்கள் என்ற சாணார் பிரிவினருக்குக் கும்பியார பதநீர் கொடுப்பதில்லை என்றும் வயல்களில் வேலைசெய்தால் கூலி கொடுப்பதில்லை என்றும் அவர்கள் புலம்புவதாகக் கதைப்பாடல் குறிப்பிடுகிறது.)

கால்டுவெல்லின் பதிவுகள் இனவரைவியல் தன்மை கொண்டவை என்று வின்சென்ட் குமாரதாஸ் கூறியுள்ளார். கால்டுவெல்லின் காலத்தில் இனவரைவியல் என்ற முறையியல் உருவாகவில்லை. இருப்பினும் மிஷனரிகளுக்குத் தாம் பணி செய்யும் இடம் குறித்த தெளிவான கண்ணோட்டம் இருக்க வேண்டும் என்பதற்காக இதுபோன்ற பதிவுகள் அவசியம் என்று கால்டுவெல் உணர்ந்ததால் இந்நூலை ஆக்கியுள்ளார்.

'*Ethnography*' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் 'இனவரைவியல்' என்ற பதத்தை மானிடவியலர்களும் நாட்டார் வழக்காற்றியலரும் பயன்படுத்துகின்றனர். 'இனவிளக்கவியல்' என்று அவர்களுள் ஒருசிலர் தொடக்கத்தில் குறிப்பிட்டனர். பக்தவத்சல பாரதி 'பண்பாட்டு மானிடவியல்' (*1990*) என்ற தமது நூலில் 'இனக்குழுவியல்' என்ற பதத்தைக் கையாண்டுள்ளார். ஆனால், அவர் தாம் எழுதிய 'மானிடவியல் கோட்பாடுகள்' (*2005*) என்ற நூலில் 'இனவரைவியல்' என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். தற்பொழுது இனவரைவியல் என்ற சொல் பொதுவாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

'குறிப்பிட்ட ஒரு மானிடக் குழுவில் அல்லது வட்டாரத்தில் காணப்படும் அனைத்து வகையான மரபுகள் பற்றி மேற்கொள்ளப்படும் விளக்கமுறை ஆய்வே இனவரைவியல் ஆகும்' என்று புருன்வாண்ட் (*Brunvand*) குறிப்பிடுகிறார்.

இவரது கூற்றில் மரபு என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மரபு ரீதியாக மக்கள் குழுவினர் பின்பற்றுபவற்றை புருன்வாண்ட் கவனத்தில் கொண்டுள்ளார்.

"எழுத்தாளன் யாரைப்பற்றி எழுதுகிறானோ, அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்க உரைகள், விவர அறிக்கைகளை உருவாக்கக் கூடிய விசாரணை முறை மற்றும் எழுத்து வடிவமே இனவரைவியல் ஆகும்' என்று டென்சின் (*Denzin*) கூறுகிறார்.

இனவரைவியல் கீழ்க்கண்டவற்றுள் கவனம் செலுத்துவதை தே.அ. மாசிலாமணி பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

அன்றாட வாழ்க்கையில் மக்கள் என்னென்ன செய்கிறார்கள்? (சான்றாக அவர்கள் ஈடுபடும் செயல்பாடுகள் யாவை? எவ்வாறு, யாரால், யாருக்காக ஒருங்கிணைக்கப்படுகின்றனர்?

எவ்வெவற்றை உற்பத்தி செய்து பயன்படுத்துகின்றனர்?

பொருட்கள், தொழில்நுட்பங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வது யாருடைய கட்டுப்பாட்டில் உள்ளது?

மக்கள் அறிந்து கொள்பவை, நினைப்பவை, உணர்பவை யாவை? தங்களிடையே கருத்துப்புலப்படுத்தம் செய்வது எவ்வாறு நடைபெறுகிறது?

எவ்வாறு முடிவுகள் எடுக்கிறார்கள்? (எது சரி? எது தவறு? அங்கீகாரம் பெறுவது எவ்வாறு? விநோதமானவை எவை? அசாதாரணமானவை எவை? உண்மையானவை எவை?)

பொருட்கள், விலங்குகள், மக்கள், இயற்கை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் போன்றவற்றை எங்ஙனம் வகைப்படுத்துகின்றனர்?

வேலைப் பிரிவினை எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகிறது? (பால், வயது, சமூக வரர்க்கங்கள், தகுதிப்பாட்டுத் தரம் போன்ற அடிப்படைகளில்)

குடும்பம் மற்றும் வீடு சார்ந்த வாழ்க்கை நெறிமுறைகள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன?

மேலே குறிப்பிடப்பட்டவை இனவரைவியல் தரவுகளைச் சேகரிப்பதற்கு உறுதுணையாக இருப்பவை.

ஓர் இனவரைவியல் தொகுப்பில் பின்வரும் கூறுகள் இடம்பெற வேண்டுமென்று பக்தவத்சல பாரதி குறிப்பிடுகிறார்: 'புவிச் சூழலியல் (topography), சுற்றுச் சூழல் (environment), காலநிலை (climate), குடியிருப்பு முறை (settlement pattern), பொருள்சார் பண்பாடு (material culture), குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை (residence pattern), வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பாண்பாட்டுவயமாக்க முறை (enculturation), மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்கு முறை, வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence economy), தொழிற் பகுப்பு (division of labour), உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள் (customary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுக்கள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள் (folklore), ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனக்குழுவியல் நூல்கள் அனைத்தும் 'தனிவரைவு நூல்கள்' (monographs) எனக் கூறப்பெறும்'.

மேற்கண்ட விளக்கங்கள் யாவும் ஓரளவு இனவரைவியலைப் புரிந்து கொள்வதற்கு உறுதுணையாக இருக்கும்.

கால்டுவெல்லின் இந்த நூலுக்கு நாடார் சாதியினரிடம் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. அவர் நாடார்களைத் தரக்குறைவாகப் பேசியுள்ளதாக விமர்சித்துச் சட்டாம் பிள்ளை வேதம் என்ற புதிய சமய உருவாக்கம் நடைபெற்றதையும் வரலாறு பேசுகிறது. ஆனால், 'தென்னாட்டு நாடார்களுடைய உயர்வைக் கூறும் ஒரு நூல் 1937இல் வெளியிடப்பட்டது. அது 'நாடார் மன்னரும் நாயக்க மன்னரும்' என்பது. இந்நூலாசிரியர்கள் வேதங்களையும் புராணங்களில் கூறப்படும் வருணப் பிரிவினையையும் ஒதுக்கிவிட்டுத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் 'சான்றோர்' என்னும் சொல் தம் சாதியையே குறிக்கும் என்று கொண்டு தமது மேன்மையை நிலைநாட்ட முயன்றுள்ளார்கள். தமது தொழில் கள்ளிறக்குதல் இல்லையென்றும் பொதி மாட்டு வாணிகமே என்றும் கூறுகின்றனர். இத்தொழில்களில் முதலாவதைப் பெரும்பான்மையான ஏழை நாடார்கள் செய்து வந்தனர். இச்சாதியினரில் ஒரு சிறு பகுதியினர் வணிகமும் செய்து வந்தனர்.

அச்சிறு பகுதியினரின் கருத்துக்களையும் ஆர்வங்களையுமே இந்நூல் வெளியிடுகிறது. அவர்கள் தம்மையே பாண்டியர் மரபினர் என்றழைத்துக் கொண்டனர். நாயக்கர்கள் தங்கள் முன்னோர்களிடமிருந்து நாட்டைக் கவர்ந்து கொண்டதாக இவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் மிகவும் தாழ்ந்த சாதியினரென்று கருதப்பட்டதால் இவர்கள் தங்களோடு ஒத்தவர்களையும் சாதி எதிர்ப்புப் போராட்டத்தில் கவர்ந்துகொள்ளப் பல கருத்துக்களை உருவாக்கினர். நூலின் முகவுரையில், 'இந்நூல் ஜாதி சம்பந்தமான நூல். ஜாதியெனவொன்று தோன்றிய காலத்திலிருந்தே அதனை அடியோடழிக்கும் கிளர்ச்சியும் தோன்றிவிட்டது. சிலரகவல் இதற்குச் சான்று பகரும்'என்று ஆசிரியர்கள் கூறுகிறார்கள். ஆயினும் இவர்களும் தங்கள் சாதி உற்பத்தியைக் கூறுமிடத்துப் புதிய கதைகளைப் புனைந்து கொண்டு தமக்குச் சிறப்புத் தேடிக்கொள்ள முயன்றார்கள்.

நாடார் திருமண வாழ்த்துக்கள் என்னும் நாட்டுப்பாடல்களில் இத்தகைய கதைகளைக் காணலாம்.

உயர்ந்த சிங்கக் கொடியாதிபதி,
சம்பரனை வென்று இரட்டைச் சங்கேந்தினோன்,
ஈழம் திறை கொண்டோன்,
இலங்காபுரி வேந்தன்,
செட்டி தோளேறும் பெருமாள்,
வாழைக் கிருதலை வரக்கண்டோன்
பத்திரகாளி வரபுத்திரன்

பஞ்சதிராவிட முதல்வன்,
பரம்பரைப் பாண்டிய நாடன்,
கல்விச் சங்கமுடையவன்,
காசு முத்திரை விடுத்தவன்,
சப்த கன்னி புத்திரன்
தமிழைக் குறுமுனிக் குரைத்தவன்

தங்கள் குலத்தின் உயர்வை இவ்வாறு இப்பாடலில் அவர்கள் கூறுகிறார்கள்.

சம்பரனை வென்றவன் தசரதன். ஈழத்தை வென்றவன் இராமன். இலங்காபுரி வேந்தன் இராவணன். இவ்வாறு புராணக் கதைகளிலிருந்து தங்கள் குலமுதல்வர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள். 'பத்திரகாளி வரபுத்திரன்', 'சப்தகன்னி புத்திரன்' என்பது வலங்கையர் சரிதம் என்னும் நாட்டுப் பாடலில் காணப்படும்

செய்தி. சப்த கன்னியர்களுக்கு சத்தி முனியின் ரிஷி கர்ப்பமாகப் பிறந்தவர்கள் வலங்கையர். அவர்களை வளர்த்துக் கல்வி கற்பித்தவள் பத்திரகாளி. இனித் தாங்கள் அரச பரம்பரையினர் என்று சொல்லிக் கொள்வதற்காகப் 'பரம்பரைப் பாண்டிய நாடன்' என்றும் இப்பாடலில் குறிப்பிடுகிறார்கள்.

எனவே கால்டுவெல்லின் குறிப்புக்களின் மீது எழுந்த விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் நேர்மறையாகவும் பார்க்க முடியும். ஏனெனில் சாதிசமத்துவத்தைப் பெறுவதற்கான போராட்டம் என்று கூட அதனைக் கூறலாம்.

❦ ❦ ❦

33. தொல்லியல் நோக்கில் கால்டுவெல் ஆய்வுகள்

திரு. மோ. பிரசன்னா
தொல்பொருள் ஆய்வாளர்
இந்தியத் தொல்லியல் துறை, சென்னை

ஆயர் கால்டுவெல் தமிழகத்தின் தென்பகுதியான திருநெல்வேலி மாவட்டத்தைப் (தூத்துக்குடி மாவட்டத்தையும் உள்ளடக்கிய) பற்றிய ஆய்வுகள் அம்மாவட்டத்தின் கலாச்சாரம், வரலாறு போன்றவற்றை உலகின் வெளிச்சத்திற்குக் கொண்டு வர மிக முக்கிய காரணியாக திகழ்ந்தார்.

இம்மாவட்டம் வரலாற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதபட்டாலும் வரலாற்று அறிஞர்களால் குறைந்தபட்ச அளவே ஆய்வுகள் மேற்கொள்ளபட்டு இருக்கின்றது. சுதந்திர இந்தியாவிற்கு முன்பு ஆயர் கால்டுவெல், *Jagar, Louis Lapicque, Alexandar Rea, J.K. Kearns, K.T.Kearns* போன்றவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் இம்மாவட்டத்தின் தொல்லியலின் முக்கியத்துவத்தை வெளிகொணர்வதற்கு முக்கிய காரணியாக அமைந்தன.

தற்போதுள்ள தூத்துக்குடி மாவட்டத்தையும் உள்ளடக்கிய திருநெல்வேலி மாவட்டத்தின் பண்பாட்டு வளர்ச்சி நிலைகளை பழங்கற்காலம், நுண்ணிய கற்காலம், புதிய கற்காலம், இரும்புக்காலம் அல்லது பெருங்கற்காலம், வரலாற்றுத் தொடக்க காலம், வரலாற்றுக் காலம் எனப் பிரிக்கலாம்.

மேற்கூறப்பட்ட பிரிவுகளில் ஆயர் கால்டுவெல் அவர்களின் ஆய்வுகள் இரும்புக்காலம் அல்லது பெருங்கற்காலத்தைச் சார்ந்ததாகவே இருந்தது என்பதனை அவருடைய தொல்லியல் சார்ந்த கட்டுரைகள் மூலம் அறிய முடிகிறது. அவை:

1. *Explorations at Korkai and Kayal (1887), Indian Antiquary Vol.6, 80-82*

2. *Excavations at Kayal (1887), Indian Antiquary Vol.6, 82-83*

3. *Sepulchral Urns in Southern India (1887) Indian Antiquary Vol.6, 279-280*

ஆயர் கால்டுவெல் ஆய்வு செய்த பெருங்கற்காலம் அல்லது இரும்புக்காலம்

இறந்தவர்கள் நினைவாக பெரிய கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் விந்திய மலைக்குத் தெற்கே இந்தியாவின் தீபகற்பப் பகுதியில் நிறைந்து காணப்படுகின்றன. பெருங்கற்களைக் கொண்டு நீத்தோர் நினைவுச் சின்னங்கள் உருவாக்கப்பட்டதன் காரணத்தால் இக்காலம் 'பெருங்கற்காலம்' என அழைக்கப்படுகின்றது. தென்தமிழகத்திலும், ஆற்றுப்படுக்கைகளிலும் பெருங்கற்படைகளுக்கு பதிலாக ஈமத்தாழிகள் பயன்படுத்தப்பட்டன. இவ்வழக்கம் தமிழகத்தில் ஏறக்குறைய கி.மு 1500 முதல் கி.பி முதலாம் நூற்றாண்டு வரை இருந்தது.

பொதுவாக பெருங்கற்காலத்தில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைக் கற்பதுக்கை, கற்திட்டை, கல்வட்டம், ஈமத்தாழி, தொப்பிக்கல், குடைக்கல், குடைவரைக்கல்லறை என்று பிரிக்கலாம்.

ஈமச்சின்னங்களில் பல வகைகள் காணப்பட்டாலும் திருநெல்வேலி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாழிகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களே அதிக அளவில் காணப்படுகின்றன. தாழிகளால் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்கள் பெரும்பாலும் அப்பகுதியில் 'பரம்பு' என்றழைக்கப்படும் அதிக பளிங்கு கற்களுடன் கூடிய மணல் பகுதியிலே அமைக்கப்பட்டுள்ளன. ஆயர் அவர்கள் ஆய்வு செய்த இடங்களான கொற்கை, காயல், மாறமங்கலம், இலஞ்சி, புதுக்குடி போன்ற பகுதிகளில் பெரும்பாலும் முதுமக்கள் தாழிகளே கிடைத்தன.

அகழாய்வுகள்

மனிதன் தோன்றியகாலம் முதல் எழுத்தாவணங்களான இலக்கியங்கள் படைக்கப்பட்ட காலம் வரையிலான, இடைப்பட்ட காலகட்டத்தில் வாழ்ந்த மனிதனின் நடவடிக்கைகளைத் தெரிவிப்பது அவன் விட்டுச்சென்ற தொல்பொருள்களே. அவை இம்மண்ணுலகில் மறைந்து மட்கி மண்மூடி மேடுகளாய் காட்சியளிக்கின்றன. அவற்றை வெளிக்கொணரும் முயற்சியே தொல்லியலின் முதுகெலும்பாக விளங்கும் அகழாய்வு ஆகும்.

ஆயர் அவர்கள் அகழாய்வு என்ற ஒன்று இந்தியாவில் அறியப்படாத காலங்களிலே அப்பணியினை செய்து தொல்லியல் ஆய்வாளர்களில் முன்னோடியாக திகழ்கிறார். ஆயர் அகழாய்வும் களஆய்வும் செய்த பகுதிகள்: கொற்கை, காயல், மாறமங்கலம், இலஞ்சி, புதுக்குடி

கொற்கை

தற்போதுள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் அமைந்துள்ள கொற்கை சங்ககாலத்தில் புகழ்பெற்ற துறைமுகமாக விளங்கிய இவ்வூர் பாண்டியர்களின் தலைநகரமாகவும் விளங்கியது. 'புகழ்மலி சிறப்பின் கொற்கை' முத்துபடு பரப்பின் கொற்கை முன்துறை' எனப் பலவாறாக சங்க இலக்கியங்கள் இவ்வூரினைப் பற்றிப் புகழ்ந்துரைக்கின்றன.பாண்டிய மன்னர்கள் 'கொற்கைக் கோமான்' 'கொற்கை வேந்து' என்றும் வெற்றிவேற் செழியனுடைய தலைநகர் என்றும் கொற்கையுடன் இணைத்துப் புகழப்படுகின்றனர்.

இவ்வாறு பெருமை மிகுந்த கொற்கையில் ஆயர் அவர்கள் மேற்கொண்ட அகழாய்வில் 10 அல்லது 12 கூலியாட்களைக் கொண்டு அப்பகுதியில் வெவ்வேறு இடங்களில் அகழாய்வு செய்ததின் மூலம் 3 இடங்களில் முதுமக்கள் தாழியினைக் கண்டறிந்தார். அவற்றில் 2 முதுமக்கள் தாழியினுள் எவ்வித ஈமச்சின்னங்கள் மற்றும் அரிய பொருட்கள் கிடைக்கவில்லை எனவும் ஆனால் அம்முதுமக்கள் தாழியினுள் மட்கிய நிலையில் மனித எலும்புகள் துகள்களாக இருந்ததாகவும், மூன்றாவதாக கிடைத்த முதுமக்கள் தாழியினுள் முழுமையான மனித எலும்புகள் உடைந்த நிலையில் தான் கண்டறிந்ததையும், மேலும் அவ்வாறு கிடைத்த முதுமக்கள் தாழிகளில் ஒரு தாழியானது 11 அடி சுற்றளவுடன் உடைந்த நிலையில் காணப்பட்டதையும் தன் கட்டுரையில் ஆயர் அவர்கள் பதிவு செய்கிறார்.

காயல்பட்டினம்

காயல் அல்லது பழையகாயல் என்று அழைக்கப்படும் இப்பகுதி சங்ககாலத் துறைமகமாகிய கொற்கையின் புகழ் மங்கிய பிறகு அதே பகுதியில் இடைக்காலத்தில் பாண்டியர்களின் சிறந்த துறைமுகமாகக் காயல்பட்டினம் உருவானது.

கி.பி.13ஆம் நூற்றாண்டில் இத்தாலிய கடல் பயணி மார்க்கோ போலோ சீனாவிலிருந்து கடல்வழியாக இத்துறைமுக நகரை வந்தடைந்த அவர் இத்துறைமுக நகரை காயல் (Cail) என்று குறிப்பிடுவதோடு மட்டுமின்றி, ஒரு சிறந்த மாபெரும் நகராகவும் குறிப்பிடுகின்றார்.

மார்க்கோ போலோ இத்துறைமுக நகரைப் பற்றி விவரிக்குமிடத்தில்'மேற்கத்திய நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள்யாவும் இத்துறைமுகம் வந்து சென்றதாகவும், அரேபியர்கள் மிக அதிகமாக வாழும் செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவிற்கு இடைப்பட்ட பகுதிகளில் காணப்படும் கடல்சார் நாடுகள் குறிப்பாக ஆர்மோஸ், கிஸ் மற்றும் ஏடன் பகுதிகளிலிருந்து அதிகமாக இத்துறைமுகத்திற்கு குதிரைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதாகவும் இதன்வழி பிற நாடுகளைச் சேர்ந்த வணிகர்களின் இறக்குமதிப் பொருட்களுக்கு முக்கிய வியாபாரத் தலமாகவும் காயல் இருந்தது' எனக் குறிப்பிடுவதை தன்னுடைய ஆய்விலும் ஆயர் அவர்கள் குறிப்பிடுகிறார்.

ஆயர் அவர்கள் இப்பகுதியில் செய்த களஆய்வில் கிடைத்த பானையோடுகளில் மூலம் இப்பகுதியானது வாணிப நகரமாக இருந்திருக்கக்கூடும் என்றும் மேலும் அவர்கள் தான் அமைத்த கூலியாட்களைப் பயன்படுத்தி ஏரியின் அருகே ஒரு பகுதியினை அகழாய்வு செய்து கொற்கையில் கண்டுறியப்பட்ட முதுமக்கள் தாழியினை போன்றே 11 அடி சுற்றளவு உள்ள முதுமக்கள் தாழியினை கண்டறிந்தார் என்பதனையும் குறிப்பிடுகிறார்.

மேலும் இப்பகுதியில் முதுமக்கள் தாழியினை உள்ளூர் மக்கள் மதமதக்கான்தாழி என்று அழைப்பதனையும் அத்தாழியில் மனித எலும்புகளும், மண்டையோடு கிடைத்ததைத் தெரிவித்ததோடு மட்டுமில்லாமல் அம்மண்டையோட்டில் ஆயுதத்தைப் பயன்படுத்தி துளையிடப்பட்டதையும் தன் ஆய்வில் தெரிவிக்கிறார்.

மேலும் காயல்பட்டினம் மற்றும் கொற்கை அருகேயுள்ள மாறமங்கலத்திலும், தென்காசி அருகேயுள்ள இலஞ்சியிலும் முதுமக்கள் தாழியினைத் தான் கண்டறிந்ததையும் தன் ஆய்வில் தெரிவிக்கிறார்.

தன் ஆய்வுகளை முதுமக்கள் தாழியினைக் கண்டு அறிவதோடு மட்டும் நிறுத்தி விடாமல் இலஞ்சியில் முதுமக்கள் தாழியினுள் கிடைத்த மண்டையோடுகள் மற்றும் பற்களை *Dr.Fry, Surgeon to the Resident of Travancore* அவர்களிடம் கொடுத்து ஆய்வு செய்தார். அவ்வாய்வில் அப்பகுதி மக்கள் தானியங்களை உணவாக உட்கொண்டனர்கள் என்பதனையும் ஆய்வில் கிடைத்த முடிவினை தன் கட்டுரையில் பதிவு செய்து தொல்லியலை மென்மேலும் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்றார் ஆயர்.

❧ ❧ ❧

34. Robert Caldwell's Lectures on the Tinnevelly Missions:

Descriptive of the field, the work and the Results with an Introductory Lecture on the progress of Christianity in India.

Rev. Dr. D.Arthur Jeyakumar
Gurukul Theological College. Chennai

This presentation is a summary of the above mentioned Lectures of Robert Caldwell. It was republished from the magazine Colonial Church Chronicle in a book form of 134 pages by Bell and Daldy publishers, London in 1857.

Robert Caldwell was born in 1814 and died in 1891. He came as a missionary of the London Missionary Society to Madras in 1838. After a few years he joined the Society for the Propagation of the Gospel in Foreign Parts (S.P.G.) and was sent as its missionary to Edeyenkoody in Tinnevelly district in 1841, which was his headquarters till he moved over to Tuticorin in 1883. In 1844 he got married to Eliza, the eldest daughter of Mrs. and Rev. Charles Mault a pioneer L.M.S. missionary of South Travancore. Since then Robert and Eliza Caldwell got engaged in educational ministry, empowerment of women, building up of Christian communities in villages around Edeyenkoody along with direct evangelism. On 11th March 1877 he was consecrated as a Bishop for the SPG mission areas in Tinnevelly, which office he relinquished in January 1891 and died on 28th August 1891 in Kodaikanal.

Caldwell was a missionary when he gave the Lectures to an audience of SPG members, supporters and well-wishers. Presumably, he would have been asked by the SPG to share about

the field, his work and its results when he was in England in 1857 may be on a holiday or furlough. Such programmes were quite common among the missionary societies and the term used was 'deputation work'. He was also an honorary member of the Royal Asiatic Society at that time.

The Lectures contain (1) an Introductory Lecture; (2) Lecture I: The Field; (3) Lecture II: The Work and (4) Lecture III: The Results.

Caldwell in his introductory lecture introduces to the audience the country of his missionary work viz. India and then the actual geographical area of his mission. He gives the picture of the large geographical area of India, 'an area which is equal to the half of Europe leaving out Russia'. The population of India in 1851 was 171859055 which was nearly a quarter of the whole population of the world. The two most southern 'collectorates' in the Madras Presidency, ie. Tinnevelly and Madura, had a population of more than three millions. The Europeans - civilians, military men, Missionaries, merchants etc. - numbered less than 300. Then he raises a question: 'why should so many submit to the (British) government of so few?' He says that the people in India had 'submitted peaceably and contentedly'. According to him some opined that Indians were brought under the British by military force while some reflecting the views of Hindus opined that the Indian support to the British was a mark of gratitude for the rescue act from the 'tyranny of the Mahommedan (sic) conquerors. Yet the Indians grumbled because of the pressure of taxation, the defective system of judicial administration system etc. But for Caldwell, the rule of the English in India was because of the will of the Most High, the Supreme Ruler of the nations, and it was for the benefit of India.

Caldwell reminds his audience that the British Government in India before 1857 was patronising 'heathenism' (meaning Hinduism) but after that the British Indian Government adopted religious neutrality. Caldwell lists the benefits of such a government such as abolition of widows - burning, female infanticide, slavery and legalisation of widow remarriage, encouragement of female education, and introduction of

grant- in- aid system as part of a comprehensive scheme of native education and the like.

Then Caldwell moves over to present his audience the then Christian presence in India. He says that among the three Presidencies of the then India, Bombay had the least number of Protestant Christians with not a single SPG missionary there. According to him, Bengal Presidency had a better presence of missionaries and Protestant Christians. Then he explains the presence of Protestant Christianity in the Madras presidency where he estimates 80000 converts to Christianity, out of which about 58000 belonged to the two Missions of the Church of England, viz. CMS and SPG.

He then goes on to talk about the two classes among the Indian Missions; (1) those who endeavoured to reach the higher castes/classes through English education/schools such as the Scottish Presbyterians and (2) those who wished to reach the common people in the villages through vernacular preaching and vernacular education e.g. the Missions of the Church of England in Tinnevelly. According to Caldwell those who accepted Christianity through Higher educational institutions such as those of the Scottish ones, were very small, yet they played a very influential role among their own friends, families and relatives. He states that chiefly because of influence of English education many social reforms were making progress among the higher castes /classes of the Hindus. As he considered higher education as 'one of very great importance', he proposed to the SPG / Church of England to establish such in big cities and seats of government and commerce.

Then he gives a bird's eye-view of Christian Mission work in the Madras Presidency including in Tinnevelly, which according to him 'has the largest, the most thriving and the most progressive Christian community in India'. He informs his audience that a very cordial harmonious relationship was existing between the SPG and the CMS missionaries in Tinnevelly.

Caldwell makes a very perceptive observation about Hinduism which he says respects diversities. 'It is also to be

borne in mind that Brahmanism (Hinduism) is peculiarly tolerant of diversities. The Hindus are accustomed to regard truth, not as one-sided, but as many-sided, and their most popular philosophy represents this as a necessary result of Divine knowledge coming in contact with the multiplied varieties of human ignorance.'

Caldwells first lecture after the Introductory one deals with the Field. He describes very elaborately Tinnevelly - its location, climate, landscape, vegetation, people, caste-system and religioiu practices. He describes in detail the sandy stretches of Tinnevelly, its ubiquitous Palmyra tree and the uses of every part of Palmyra tree. He says, 'The unripe fruit is greatly preferable, in as much as it contains the purest, most wholesome, and most refreshing vegetable jelly in existence'.

Then he goes on to talk about the caste divisions among the Tinnevelly people and the difficulties arising out of it. He speaks highly of the Sudras who had reached a higher point of civilization than the 'Brahmins'. In the context of caste, he mentions the Shanars who were the Palmyra cultivators amongst whom Christianity had made progress. 'Shanar Christianity still forms the staple of the Christianity of Tinnevelly' says Caldwell. He observes, 'Hitherto from a variety of causes, Christianity and the Palmyra have appeared to flourish together. Where the Palmyra abounds, there Christian congregations and schools abound also; and where the Palmyra disappears, there the signs of Christian progress are rarely seen'.

Caldwell informs his audience in England the peculiarities of the social conditions and character of the Shanars in Tinnevelly. He says, 'In some respects the position of the Shanars in the scale of castes is peculiar. Their abstinence from spirituous liquors and from beef and the circumstance that their widows are not allowed to marry again connect them with the Sudra group of castes'. But they were not allowed to enter temples, were not permitted to enter the courts of justice and their women were not permitted to cover their bodies waist upwards. Caldwell goes on to describe the 'devil-dancing'; he says 'the essential features of the demonolatry of Siberia, commonly called Shamanism, and of the demonolatry of Tinnevelly are identical.' Both in Siberia and Tinnevelly bloody sacrifices were offered to appease the anger of the demons.

In the next lecture, Caldwell talks about the Mission work in Tinnevelly. He begins it with the introduction of Protestant Christianity there by Christian Friedrich Schwartz on behalf of the Society for Promoting Christian Knowledge and then goes on to describe the Mission work carried out by Jaenicke, Christian Wilhelm Gericke, James Hough and a native catechist Satyanadan, who organized the first village of Christian Shanars, called Mudalur. Caldwell mentions the background to the entry of SPG Mission in Tinnevelly in 1835. The Church Mission Society (CMS) entered Tinnevelly in 1820 at the request of James Hough who was in Palamcottah as a military chaplain of the British East India Company. Both CMS and SPG began to revive the Christian congregations established earlier by the SPCK but were left as sheep without a shepherd from 1792. The whole Tinnevelly mission area was divided between the SPG and the CMS in a fair and friendly spirit. Caldwell describes then the mission methods of direct evangelism / itinerant preaching tours, pastoral care, establishment of schools, boarding homes, and other types of educational institutions; the steps taken to make the local congregations self-supportive as well as to develop the capacity of self- government and self-propagation; he details the Catechist system which was intended to raise up indigenous ministry. Caldwell then proceeds to speak about the motives of the converts - both secular and spiritual and expresses his belief that that it was 'the Gospel of Christ's saving love and the message of reconciliation to God through the blood of Christ that brought people to Christianity.'

Caldwell then talks about his as well as his wife Eliza's work in Edeyenkoody (Shepherd's Habitation), the formation of Church Building Society for self-support, his plan to have a Church building at Edeyenkoody to accommodate 1200 people, his catechetical teaching method, Adult and Children's Sunday Schools etc. He mentions a sarcastic comment of men-folk 'Are you going to teach the cows next?' when his wife started schools for Girls. Eliza Caldwell's lace-work industry among Edeyenkoody women is explained by Caldwell, and appeals to English people to support the Tinnevelly Mission's girl pupils.

The last lecture is titled 'the Results'. The purpose of this lecture was to remove the false impressions about the Tinnevelly

Christians held by the English and to highlight the positive side of the native Christians' life. He points out the differences between a Christian village and a non-Christian one: the Christian ones such as Edeyenkoody having orderly streets and rows of trees, clean roads and houses, cleanliness in external appearance of both men and women. He says that the Tinnevelly Christians had risen in social scale and were contributing liberally to religious and charitable purposes such as to the Church Building Society, fund for the relief of the Christian Poor, Tinnevelly Tract and Book Society, and Gospel Fund to support native itinerant preachers / evangelists. He also mentions the local Christians' interest in attending public meetings of the Mission. He commends them to the prayers and support of the English Christians.

Conclusions:

'I once visited a certain town in England for the purpose of attending a Missionary Meeting, and on my arrival at the clergyman's house, was accosted thus; 'Oh, Mr.C. you have arrived just in time to settle a dispute between my wife and me. We have been disputing as to where Tinnevelly is: my wife maintains it is in India, and I maintain it is in South Africa; now which of us is right?' On another occasion I was actually advertised in a large town as 'a Missionary from Tinnevelly, Southern Africa' so writes Caldwell in a foot-note of Lectures. This can explain the importance of Robert Caldwell's Lectures to the English. The Lectures, in addition to giving a description of the Tinnevelly Mission, the work carried out, its results up to 1857, helps us to discern the personality of Caldwell, - his perceptive mind, clarity of thought, zeal for his work and love and concern for the Shanar Christians of Edeyenkoody and Tinnevelly.

Note:

Names of cities / places are given as found in Caldwell's Lectures

❦ ❦ ❦

35. கால்டுவெல் அடிகளாரின் சமய ஒப்பாய்வு - ஒரு கண்ணோட்டம்

முனைவர் மோசசு மைக்கேல் பாரடே
தமிழ்த்துறைத் தலைவர்(ஓய்வு)
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

தமிழினத்துக்கு ஒரு தனி அடையாளத்தைத் தேடிக் கொடுத்தவரும் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு வேர்களையும் வரலாற்று விழுதுகளையும் ஆழநுணுகி ஆய்ந்து தெளிந்தவரும் தமிழ் மக்களின் பன்முக உயர்வுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டவருமான பேரறிஞர் ராபர்ட் கால்டுவெல் அவர்கள் அடிப்படையில் ஒரு சமயப் பணியாளராகவே நம் தாயத்தமிழகம் வந்தார் என்பது வரலாற்றுண்மை. எனினும் அச்சமயப்பணியோடு தம்மைக் குறுக்கிக்கொள்ளாது - அல்லது சமயப்பணியின் வரையறைகளைச் சுருக்கிக் கொள்ளாது, விரிந்த எல்லையில் நின்று பரந்த பார்வையோடும் அதேநேரம் தெளிந்த சிந்தையோடும் துணிந்த நெஞ்சோடும் தொண்டாற்றியவர் அவர். அன்னாரது சமய ஒப்பாய்வினை அவரது இரு ஆழ்ந்த ஆய்வுரைகளின் அடிப்படையில் கண்ணோக்கி, அவரது கண்ணோட்டம்பற்றியசிலகருத்தோட்டங்களை முன்வைப்பதே இச்சிறு ஆய்வுக்கட்டுரையின் நோக்கம் *'Christianity and Hinduism' - a lecture addressed to educated Hindus'* என்ற பெயரில் நமக்குக் கிடைக்கும் ஓர் ஆய்வுப்பேருரையையும், அவ்வுரையைப் பெரிதும் தழுவி 1874 அக்டோபரில் இங்கிலாந்திலுள்ள பிரைட்டனில் நடந்த திருச்சபைப்பேரவை (*Church Congress*) யில் அவர் படித்த ஆய்வுக் கட்டுரையையும், தழுவியே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

நூற்பொருள் சுருக்கம்

இவ்விரு ஆய்வுரைகளையும் ஒரு நூலாகக்கருதி, அது கூறும் பொருட் சுருக்கம் காண்போம். குறிப்பாக, முதல் உரையில், இந்நூல்

சமயத்தை ஒப்பீட்டு நோக்கில் கண்டு, முதலாவது அதன் மானிடம் - தெய்விகம் - இரண்டன் கலவை ஆகிய முக்கூறுகளை உடையதாக அதனை விளக்கித் தொடர்கிறார். பின்னர் உண்மையான சமய ஒப்பாய்வின் சில இலக்கணங்களைச் சுட்டி, கிறித்தவத்தையும் இந்து சமயத்தையும், ஒப்பிடும் போது அது முழுமையானதாக அமைய வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இரு சமயங்களின் ஒற்றுமைகளை மட்டுமின்றி, வேற்றுமைகளையும் காணத்தவறக்கூடாது என்கிறார். இந்து சமயத்தையும், அதன் புனித நூல்களில் வெளிப்படும் தத்துவங்களை வைத்து மட்டும் ஆராயாது, மக்கள் வாழ்வில் அது எப்படி நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதையும் ஆய்வுக்குட்படுத்த வேண்டும் என விளக்குகிறார். மேலும் கிறித்தவத்தின் முக்கிய நிகழ்வுகளை - அருஞ்செயல்களை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டும் எனத் தெளிவுபடுத்துகிறார். தொடர்ந்து பல்வேறு நாடுகளின் வரலாற்றிலும் வாழ்விலும் கிறித்தவ நம்பிக்கை விளைத்த மாற்றங்களையும் ஏற்றங்களையும் ஒப்பீட்டு நோக்கில் ஆய்ந்து காண அழைக்கிறார். நிறைவாக, இந்து சமயத்தில் 'கடவுள்' என்பதொருவர் யாரெனக் காட்டப்படவே இல்லை என்றும் சிறு தெய்வங்களே வணங்கப்படுகின்றன எனவும் ஓர் ஆழமான இறையியல் சார்ந்த உண்மையை நிறுவமுனைகிறார் 'கடவுளின் அன்பு' (*Love of God*) என்பது தெள்ளத்தெளிவாக வெளிப்படுவது கிறித்துவத்தில் மட்டுமே எனச் சான்று காட்டி நிலை நாட்ட முயல்கிறார். இத்தகு ஆய்வின் நிறைவாக, மெய்க்கடவுள் யார்? மெய்ச்சமயம் எது என நன்குணர்ந்த ஒருவர், அக்கடவுளையும் சமயத்தையும் தாழுவத் தயங்கலாகாது எனவும் பரிந்துரைத்து முடிக்கிறார்.

ஆய்வுரையார் தகுதி

எத்தகு ஒப்பாய்வையும் மேற்கொள்ள முனைவார்க்கு அதற்குரிய தகுதிகள் அமையப்பெற வேண்டும். இருசமய ஒப்பாய்வுக்குள் துணிந்து நுழையும் டாக்டர் கால்டுவெல் அவர்களுக்கு இத்தகுதி முழுமையாக அமைந்திருந்தது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஒரு மாபெரும் திருச்சபைப்பிரிவின் தலைவராக - அதாவது முதன்மைப் பாதிரியாராக (*Bishop*)வும், தம் தாயத்திலிருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட அருள் பணியாளராக (*missionary*) வும் அமைந்த அவரது கிறித்தவ மறைநூற்புலமையை நாம் ஐயுற வேண்டிய தேவையில்லை. அதே நேரம் இந்து சமயத்தைப் பற்றி ஆய்ந்துரைப்பதற்கு, நாற்பதாண்டுகளுக்கும் மேலாக இத்தமிழ் மண்ணில் வாழ்ந்து சமயப்பணியாற்றி வருவதோடு, இச்சமயத்தவரின் சமயநூல்களை ஆழக்கற்றும் பொதுமக்களின் சமயப்பழக்கவழக்கங்களை நுணுகிநோக்கியும் கற்று வந்ததே தம் தகுதியென அவரே உரையின்

தொடக்கத்தில் குறிப்பிடுகிறார். இதற்கு மேல் அவர் 'பரதகண்ட புராதனம்' என்ற பெயரில் இந்து சமய இதிகாசங்கள், நான்கு வேதங்கள், பதிணென்புராணங்கள் பற்றி எழுதியுள்ள விரிவான - திகைப்பூட்டும் உண்மைகள் அடங்கிய ஆய்வுநூலே அவரது ஆழந்த சமய நூற்புலமையை அறிவிக்கப் போதுமானதாகும். அவர் எழுதியுள்ள பிற ஆய்வு நூல்களிலும் ஆற்றியுள்ள பிற விரிவுரைகளிலும் அவர் தம்மை ஒரு மாபெரும் சமயக்கணக்காக நிலைநிறுத்திக் கொள்வதைக் கற்பார் எவரும் எளிதில் உணரலாகும்.

ஆய்வின் அணுகுமுறைகள்

இனி அறிஞர் கால்டுவெல் அவர்கள், தமது சமய ஒப்பாய்வில் பின்பற்றிய அணுகுமுறைகள் சிலவற்றை ஆய்வு நோக்கில் சுருங்கக் காண்போம்.

உடன்பாட்டு அணுகுமுறை (Positive Approch)

ஒரு கிறித்தவ சமயப்பணியாளராக, இந்து சமயத்தைத் தம் சமயத்துடன் ஒப்பிட முனையும் கால்டுவெல்லார் இந்து சமயத்தை உடன்பாட்டு நோக்கிலேயே அணுகி அச்சமயத்தின் நல்ல கூறுகளையும், அச்சமயத்தைப் பின்பற்றுவாரிடம் காணப்படும் உயர்ந்த பண்பாடுகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் பாராட்டிப் பேசுகிறார். இத்தகைய நல்ல பழக்க வழக்கங்களும் அவர்தம் உள்ளத்தில் உள்ள உயர்ந்த லட்சியங்களும் அச்சமயச் சான்றோர் பேசும் உன்னத நாட்டங்களும் கிறிஸ்து சமயம் தழுவுவதால் நிறைவேறும் (*Fullfillment*) எனவும் அதனால் அவர்கள் வாழ்வு ஒளிபெறும் எனவும் சுட்டிக்காட்டுகிறார். மேலும் கிறித்துவத்தைப் பற்றி பேசும் போதும், அது எங்கெங்கெல்லாம் பரவியதோ, அங்கெல்லாம் அறிவு வளர்ச்சி (*Knowledge*) மேலோங்கியுள்ளதெனவும் அறிவே ஆற்றல், அறிவே வெற்றி, அறிவியல் கண்டுபிடிப்புகளும் அதிசயங்களுமே, உலக வாழ்வை உயர்வுடையதாக்குவன எனவும் கற்பிக்கிறார். மேலும் இயேசு கிறிஸ்துவில் காணப்படும் உயர்ந்த பெரும் பண்புகளையும், அவர் பின்பற்றிய பேரறங்களையும் சுட்டி, அவரைப் பின்பற்றுவாரும் அத்தகு நற்பண்புகளை எய்திட முடியும் என ஊக்குவிக்கிறார். ஒருவகையில் ஒரு நிலைவரை கிறித்தவமும் இந்து மார்க்கமும் ஒரே குறிக்கோள் உடையனவே என்று சுட்டும் அறிஞர், மனிதனின் பாவத்தையும் அதிலிருந்து ஈடேற்றம் பெறும் முறையையும் பற்றிய போதனைகளில்தான் அவை வேறுபடுவதாக நயமுற உணர்த்துகிறார். இவ்வாறாக, பிறசமயத்தார் மனத்தைப் புண்படுத்தாது, பண்பட்ட நெறிக்கு அவர்களை நடத்தி, அவர்கள் வாழ்வை மாண்புறுத்துவதே தம் நோக்கம் என்று தெளிவுறுத்துகிறார்.

தெளிவுறுத்தும் அணுகுமுறை (Clarifying Approach)

தமது ஒப்பாய்வில், பொதுவாக பல ஒப்பாய்வாளர்கள் மேம்போக்காகக் சொல்லி, குழப்பத்தைத் தெளிவியதாது செல்லும் போக்கைத் தவிர்த்து, கருகலான பல செய்திகளைத் தெளிவுறுத்துகிறார். உண்மையான ஒப்பாய்வு, பொதுவான ஒற்றுமைகளை மட்டும் சொல்லிச் செல்லாது, ஆழ்நிலையில் உள்ள வேற்றுமைகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்கிறார். ஒப்பாய்வில் பலரும் செய்யும் தவறுகளையும், துணிவாக வெளிப்படுத்துகிறார். கிருஷ்ண அவதாரம் தொடர்பான பல செய்திகள், கிறிஸ்துவைப் பற்றி நற்செய்தி நூல்கள் கூறும் செய்திகளின் திரிந்த வடிவங்களோ என்றும் ஐயுறுகிறார். ஆனால் பல நல்ல செய்திகளே, காலப்போக்கில் குழப்பப்பட்டு, களங்கப்படுத்தப்பட்டு, வெறும் ஊனியல் இச்சைக்குரியதாக - இறைத்தன்மை இழந்தனவாக மாறிவிட்டன என விளக்கிக்காட்டுகிறார். மேலும் இந்து சமயத்தின் நம்பிக்கைகளும், நடைமுறைகளும் சடங்குகளும், இந்திய நாட்டில் மட்டுமே பின்பற்றத்தக்கனவாக உள்ளன. கிறித்தவ சமயமோ எந்நாட்டவரும் ஏற்றுக் கொள்வர் எனத் தெளிவுறுத்துகிறார். மேலும் கிறித்து சமய மூலவரும் இந்நற்செய்தியை எவ்வுலகினருக்கும் பறைசாற்ற வேண்டுமெனத் தம்மடியார்க்கு இட்டுச் சென்றுள்ள கட்டளையையும் சுட்டிச் செல்லுகிறார். மேலும் மனித பாவத்தையும் அதன் மீட்பையும் தன் நற்செய்தியின் மையத்தில் கொண்டுள்ள கிறித்துவத்துக்கு எதிராக மாற்றுச் சமயத்தார் எழுப்பும் வினாக்களுக்குத் தருக்கரீதியான விடைகளைத் தர முயல்கிறார். பாவமே செய்திடவியலாப் பொறியாக - இயந்திரமாக மனிதன் படைக்கப்பட்டிருந்தால், கடவுளுக்கும் சமயத்துக்கும் அறத்துக்கும் தேவையே இல்லாமல் போயிருக்குமே என நம் சிந்தனையைக் கிளறிவிட்டுத் தெளிவூட்டுகிறார்.

நடப்பியல் அணுகுமுறை (Practical Approach)

சமய ஒப்பாய்வு வெறும் சமய தத்துவங்களை ஆய்வதாக அமைவதில் பயனில்லை. அது நடைமுறைச் சமய வாழ்வை அலசுவதாகவும் அமைதல் வேண்டும். வேத நூல்களிலும் உபநிஷத்துகளிலும் உள்ள தத்துவங்களையும் கிறித்துவ, இசுலாம் வேதநூல்களாம் பைபிள், குரான் கூறும் இறைக் கோட்பாடுகளையும் ஒப்பிட்டாய்ந்தால் போதுமா? அவை மக்கள் வாழ்வில் என்ன பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன? மக்கள் அவற்றை எவ்வாறு பின்பற்றுகிறார்கள் என்பதல்லவா முக்கியம்? என்கிறார். இல்லாவிட்டால் அவை வெறும் தத்துவங்களாகவே நின்றுவிடும்! மனித வாழ்வுக்குரிய மார்க்கங்களாக இரா என்று கூறி, இந்து சமய அறநூல்களின் - புனித நூல்களின் சில பகுதிகள் அறநெறிகளைக் கூறினாலும், பல இடங்களில் கடவுளரின் அவதாரங்கள் ஒழுக்கக்

கேட்டையும் வஞ்சனையான வழி முறைகளையும் போதிப்பனவாகவே உள்ளன. அவையே மக்கள் வாழ்வைப் பெரிதும் பாதித்துவிடுகின்றன. கிருஷ்ணர் அவதாரத்தில் காணப்படும் பல தூய்மைக் குறைவுகளை மக்கள் பின்பற்ற முயலக்கூடாது. அவை கடவுளரின் செயல்கள் எனப் பாகவத புராணம் கூறுகிறது. மக்கள் பின்பற்றக் கூடாத இறைக்கருதுகோள் சமுதாயத்துக்கு நலம் தருமா என்றெல்லாம் நடப்பியல் நோக்கில் வாதாடுகிறார். உலக நாடுகளின் வரலாற்றையும் வாழ்வையும், ஆய்ந்து நோக்கி, கிறித்தவம் பரவிய நாடுளெல்லாம் கண்டுள்ள ஏற்றத்தையும் பெற்றுள்ள மாற்றங்களையும் அவை பின்பற்றும் அறக் கோட்பாடுகளையும் (*Moral Teachings*) அவற்றுக்கு மூலகாரணமாகப் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் உள்ள போதனைகள் விளங்குவதையும் சுட்டிக்காட்டுகிறார்.

துணிந்துரைக்கும் அணுகுமுறை (Bold Approach)

அறிவர் கால்டுவெல் தமது கிறித்துவ சமய உண்மைகளும் கிறித்து பெருமான் காட்டும் வழியும் எதனினும் எவரினும் உயர்ந்தவை - அவற்றைப் பின்பற்றுவோர் பெருமைக்குரிய வாழ்வுபெறுவர் என்பதை எடுத்துரைப்பதில் எவ்வகைத் தயக்கமோ மயக்கமோ காட்டிடவில்லை. தம் மனதில் உண்மையென்று கண்டவைகளைப் பிறரும் ஏற்குமாறு துணிந்து வேண்டுகிறார். இந்து சமயப்புனித நூல்கள் - இதிகாசங்கள் எனப்படுபவற்றில் மக்களை அறவாழ்வுக்கு நடத்தும் நற்கருத்துகளிலும், தியொழுக்கங்களுக்கு இட்டுச் செல்லும் போதனைகளும் முன் மாதிரிகளுமே மண்டிக்கிடக்கின்றன. கல்வி நிலையங்களில் பயிலும் இளைஞர்க்கு முழுமையான பாடநூல்களாக வைக்கத்தக்க புனித நூல்கள் இல்லையே என மனம் வெதும்புகிறார். அவ்வாறே கிறித்தவ நற்செய்தியில் கூறப்படும் இயேசுவின் விந்தைப்பிறப்பு, உயிர்ப்பு முதலிய செய்திகளையும் இஸ்ரவேல்தேசம் - யூத மக்களின் வரலாறு முதலியவற்றையும் வரலாற்று நோக்கில் பார்த்து - வரலாற்றாதாரங்களை ஆய்ந்து பார்த்து உண்மைதெளியும் போக்கு இந்தியரிடையே பெரிதும் இல்லை எனக் கவல்கிறார் அவர். சமய உண்மைகளை வெறும் கற்பனை கலந்த நம்பிக்கைச் செய்திகளாக மட்டுமே பார்க்கும் போக்கை அவர் கடிந்து கொள்கிறார். மேலும் சமயநூல்கள் ஒரே கடவுளரைப் பற்றிப் பேசுவதிலும் தம்முள் முரண்படுவதை அம்பலப்படுத்துகிறார். சான்றாக, பகவத்கீதையும் பாகவதபுராணமும் திருஷ்ணரைப் பற்றிக் கூறும் செய்திகளில் உள்ள முரண்பாடுகளை வெளிப்படுத்துகிறார். ஜெர்மானியப் பேரறிஞர் மாக்ஸ்முல்லர் கருத்துரைகளையும் கூட நயமாகவும், அதே நேரம் துணிவாகவும் மறுத்துரைத்து 'அன்பே கடவுள்' என அனைத்து மதங்களும் கூற முனைந்தாலும் அன்பான கடவுளை வெளிப்படுத்துவது கிறித்துவம் மட்டுமே என ஆதாரம் காட்டிப்பேசுகிறார்.

ஆழங்காணும் அணுகுமுறை (In-depth Search Approach)

சமய ஒப்பாய்வுகள் மேலோட்டமான ஒப்பீடுகளை மட்டும் தந்து, சமரசப்போக்கில் முடிந்துவிடுவது கால்டுவெல்லாருக்கு உடன்பாடில்லை. ஒவ்வொரு சமயத்தின் ஆழங்கண்டு வேர்களின் விலாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவர் வேணவா. சான்றாக மனிதர்களையும் விலங்குகளையும் வெறுமனே அவர்தம் உருவ ஒற்றுமைக்காக ஒப்பிட்டுவிட்டு மனிதனின் ஆன்ம ஏக்கம், அறிவுத்திறன், பேச்சாற்றல் போன்றவைகளை விட்டுவிட்டால் அது சரியான ஒப்பீடாகுமா? அதுபோலவே, சமயங்களையும் சரியாக ஒப்பிட, ஆழங்காணும் அணுகுமுறை வேண்டுமென்பதை வலியுறுத்திவிட்டு, இந்து - கிறித்தவ சமயம் பற்றிய சில ஆழ்நிலைப் பார்வைகளை அளிக்கிறார். குறிப்பாக, இந்து சமயத்தின் புனித நூல்கள் முழுமுதற்கடவுளாக யாரையும் காட்டவில்லை. அதுவும் நான்கு வேதநூல்களில் மெய்யான கடவுளைப்பற்றிய பேச்சே இல்லை. கடவுளார் என இந்திய நாட்டில் சொல்லப்படுபவை பரம் பொருளான கடவுள் (Supreme God) எனச் சொல்லக் கூடியன அல்ல என்றெல்லாம் ஆழ்நிலை விவாதத்துக்கு நம்மை அழைக்கிறார். அவ்வாறே, கடவுளுக்கு அன்பு, இரக்கம், மன்னிக்கும் தன்மை முதலிய பண்புகளை ஏற்றினால், அவரும் மானிடப் பண்பினர் ஆகி விடமாட்டாரா? (Anthropomorphism) என்ற கேள்வி எழுவதைக் குறிப்பிட்டு, அதற்கு பதிலளிக்க முற்படுகிறார். கடவுள் தன்மையை நாம்புரிந்து கொள்ளவே, கடவுள் மனித உருவில், மண்ணில் பிறந்ததையும், கடவுள் மனிதனுக்கு வழங்கிய தம் சாயலை அவன் இழந்துவிட்டதால் அதை அவன் மீட்டுருவாக்கம் செய்து கொள்ள அவர் அவனை மீட்டெடுக்க விழைவதைக் கிறித்தவம் போதிப்பதையும் அவர் ஒப்பிட்டுரைக்கிறார்.

முடிவெடுக்கத் தூண்டும் அணுகுமுறை (Decision Inducing Approach)

இத்தனை விதமாக தம் சமய ஒப்பாய்வை மேற்கொள்ளும் அவர், அந்த ஆய்வை ஆய்வாகவே நிறுத்திக் கொள்ள விழையவில்லை. தம் ஆய்வை அறியும் எவரும் அந்த ஆய்வின் விளைவாக, தம் வாழ்வுசார்ந்த முக்கிய முடிவுகளை மேற்கொள்ள வேண்டுமென ஊக்குவிக்கிறார். வெறும் அறிவு உதவாது, அறிவோடு கூடிய செயல்பாடே வாழ்வுக்கு நலம் தரும் என்பது அவர் கொள்கை. ஆங்கில மருத்துவ முறைதம்நோய் தீர்க்க நல்ல வழி என்று கண்டால் அதை இந்தியர் உடனே ஏற்கிறார் அன்றோ? அது போல, பாவப்பிடியிலிருந்து தம்மை மீட்டு விடுவிக்கக்கூடிய மீட்பர் கிறிஸ்து என உணர்ந்தால் அவரை ஏற்பதில் என்ன தயக்கம் என வலியுறுத்தி வேண்டியே தம் ஆய்வினை முடிக்கிறார்.

ஆய்வில் நிலை நாட்டிய உண்மைகள் (Findings of the Study)

இவ்வாறாக அறிஞர் கால்டுவெல், தம் இருசமய ஒப்பாய்வில் நிலை நாட்ட முனைகிற உண்மைகளுள் முக்கியமானவையாக இவற்றைக் கருதலாம்:

1. சமய உண்மைகளை, வெறும் தத்துவங்களாக ஏடுகளில் வாழ்வதில் பயனில்லை. அன்றாட மக்கள் வாழ்வில் அறநெறிச் செயல்களுக்கும் ஒழுக்க வாழ்வுக்கும் அவை அவர்களை வழி நடத்த வேண்டும்.

2. சமய ஒப்பாய்வில் மேம்போக்கான ஒற்றுமைகளை மட்டும் காட்டாது, ஆழமான தனித்தன்மைகளை அகழ்ந்து காட்டவேண்டும்.

3. இந்து சமயம் பெரும்பாலும் இந்தியர் மட்டுமே பின்பற்றத்தக்க நிலையில் அமைந்திருக்க, கிறித்துவின் மார்க்கம் எந்நாட்டவரும் ஏற்றொழுகத்தக்கதாக அமைந்துள்ளது.

4. உண்மையான முழுமுதற் கடவுள் யாரென இந்து சமய நூல்கள் தெளிவு படுத்தாத நிலையில், கிறித்தவம் மெய்க் கடவுளைத் திருமறைப் போதனைகள் வழியாகவும் இயேசுபெருமானின் மானிட வாழ்வின் வழியாகவும் வெளிப்படுத்துகிறது.

5. கடவுளின் அன்பு என்பது பொதுவாக பல சமயங்களிலும் ஒரு கோட்பாடாகப் (Concept) பேசப்பட்டாலும், அன்பான ஒரு கடவுளை நிதரிசனமாகக் காட்டும் போக்கு கிறித்தவத்திலேயே உள்ளது.

6. பாவம் என்ற கோட்பாடும் அதன் மீட்பும் கிறித்தவத்தில் மையமாக அமைந்திருக்க இந்து சமயம் அதை மிக முனைப்பாகப் பேசவில்லை.

தொகுப்புரை

இத்தகைய அரிய ஒப்பாய்வின் முடிவுகளை அனைவரும் ஏற்றாலும் ஏற்காவிடினும், இவ்வொப்பாய்வை மேற்கொண்ட அறிஞர் கால்டுவெல்லின் பரந்த சமய நூற்புலமையையும் பட்டறிவின் ஆழத்தையும் கட்டற்ற மனித நேயத்தையும் உறுதிப்படுத்துவதாக இவ்வொப்பாய்வு ஒளிர்கிறது.

முதன்மை ஆதாரங்கள்

1. *Christianity and Hinduism-A Lecture Addressed to Educated Hindus 4 parts. SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE, LONDON,*

2. *Relation of Christianity of Hinduism: A paper read at the church congress held at Brighton in Oct. 1874 R. Clay & Sons and Tailor Printers, LONDON*

❦ ❦ ❦

36. கால்டுவெல்லின் இராமாயண ஆய்வும் திராவிட இயக்க இராமாயண எதிர்ப்பில் அதன் பங்கும்

முனைவர் சா. பாலுசாமி
இணைப் பேராசிரியர்
சென்னைக் கிறித்துவக் கல்லூரி

கிறித்துவின் நற்செய்தியைப் பரப்புவதற்காகப் பல்வேறு இடங்களுக்குச் சென்ற கிறித்தவ அருட்தொண்டர்களின் முன் இரண்டு கடமைகள் இருந்தன. தாங்கள் கால்பதித்த மண்ணின் மரபுகளை அறிதல் ஒன்று; அவற்றைப் பிற அருட்தொண்டர்களுக்கும் ஐரோப்பிய மக்களுக்கும் அறிமுகம் செய்தல் இரண்டு. அருட்பணியாற்றி இவ்வாறு புலமைச் செயற்பாடுகளை மேற்கொண்டவர்களுள் டாக்டர் கால்டுவெல் வரலாறு படைத்த சாதனையாளராவார். மொழி, வரலாறு, பண்பாடு ஆகியன குறித்த ஆழ்ந்த புலமையும் துணிவு மிக்க ஆய்வு முடிவுகளும் அவர் வாழ்ந்த தமிழகத்திற்கு மட்டுமன்றி, உலக அறிஞர்கள் அனைவருக்கும் புதிய ஒளியை ஊட்டி, புதிய வழியைக் காட்டின. அதற்கும் மேலாக, இன வரலாற்றில் புதிய சிந்தனைகளும் இயக்கங்களும் மலரச் செய்து தனித்தன்மை கொண்ட அரசியல் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தின.

ஒப்பிலக்கணம் படைத்து, திராவிட இனத்தின் தனித்தன்மைகளை வெளிக்கொணர்ந்த கால்டுவெல் எழுதிய 'பரதகண்ட புராதனம்' என்னும் நூல், இந்தியச் சமயங்களுள் இந்து சமயத்தைப் புரிந்து கொள்ளும் நோக்கில் மேற்கொண்ட தேடலின் விளைகனியாகும். 1893ஆம் ஆண்டு வெளியிடப் பெற்றதாகக் கருதப்படும் இந்நூல், நான்கு பாகங்களைக் கொண்டது. இரண்டாம் பாகம் இராமாயணம் பற்றியது. மூன்றாம் பாகம் மகாபாரதம் குறித்தும் நான்காம் பாகம் புராணங்களைக் குறித்தும் அவர்தம் கருத்துப்பதிவுகளைக் கொண்டுள்ளன. இந்நான்கு பாகங்களும் நூல்களின் அறிமுகம் மற்றும் அவற்றின் காலம் பற்றிய கருத்துக்களைக்

கூறல், அடுத்து நூலின் உட்கருத்துகள் அல்லது கதைகளை விளக்கியுரைத்தல், இறுதியாக அந்நூல் குறித்த விமர்சனங்கள் மற்றும் சுவனிக்கத் தக்க சிறப்புக்களைக் குறிப்பிடுதல் என்னும் அடிப்படையில் எழுதப்பெற்றுள்ளன.

இவற்றுள் இராமாயணம் குறித்த அவர்தம் கட்டுரை 27 பக்கங்களுக்குள் எழுதப்பட்டதே ஆயினும் அந்நூல் குறித்த அடிப்படை அறிவையும் ஆய்வு நோக்கையும் ஏற்படுத்த வல்லதாக அமைந்துள்ளது.

'ஆரியர்கள்' என்னும் சொல்வழக்கிற்குப் பதிலாக 'இந்துக்கள்' என்னும் சொல்லைக் கைக்கொள்ளும் கால்டுவெல், சிந்துநதியைக் கடந்து பஞ்சாப் பகுதியில் அவர்கள் குடியேறிய காலத்தில் இருக்கு வேதம் இயற்றப்பட்டதாகவும் பின்னர் யமுனையைக் கடந்து கங்கைச் சமவெளி முழுதும் பரவிய காலத்தில் இராமாயணம் எழுதப்பட்டதாகவும் குறிப்பிடுகிறார். ஏறக்குறைய இருக்குவேதமும் இராமாயணமும் ஐந்நூறு ஆண்டுகால இடைவெளி கொண்டவை என்கிறார்.

கங்கைச் சமவெளியை ஆண்ட அரசகுளுள் சூரிய மற்றும் சந்திர வம்சங்களே முக்கியமானவை. இராமாயணமும் மகாபாரதமும் அவற்றின் புகழ்பாடுவனவேயாகும்.

அயோத்தியும் அஸ்தினாபுரமும் அவர்கள்தம் தலைநகர்களாக இருந்தன எனக்குறிக்கும் கால்டுவெல், இவ்விரண்டு நூல்கள் தொடர்பான சில கருத்துகளை முன்வைக்கிறார்.

வேதகாலத்திற்கும் இவ்விதிகாச காலங்களுக்கும் அடிப்படையான வேறுபாடுண்டு. வேதகாலம் இயற்கை வழிபாட்டை மேற்கொண்டிருந்த காலம். ஆனால் இதிகாசங்கள் வீரர்களின் காலம் என்று குறிப்பிடுகிறார்.

பற்பல காலத்திலுள்ள பற்பல பேர் செய்த வீரிய கிரியைகளை ஒன்றாகத் திரட்டி, ஒரே ஒரு வீரன் அவைகளைச் செய்தது போலக்காட்டி, வரவர அந்தக் கிரியைகளை நடப்பித்தவனை வீரனாகப் புகழ்ந்தது போதாதென்று சொல்லி அவனைத் தேவனாகவும் பாராட்டி, பின்பு மேலான தேவனென்று அக்காலத்து ஜனங்கள் வணங்கி வந்த தேவனெவனோ அவனோடே இவனை சம்பந்தப்படுத்தி அந்தத் தேவனே இந்த வீரனாக அவதரித்தான் என்று புகட்டினார்கள். (கால்டுவெல், 2012, ப.28)

வீரயுக காலத்தின் இயல்புகளையும் அக்கால இலக்கியத்தின் இயல்புகளையும் உணர்ந்து, இந்தியாவின் அவதாரக் கதைகள் எவ்வாறு உருவாக்கப்பட்டன என்பதையும் நுட்பமாக கால்டுவெல் புலப்படுத்தியுள்ளார்.

பதினெண் புராணங்களே இந்து மதத்திற்கு ஆதாரமாக அமைவதைச் சுட்டிக்காட்டி, இராமாயணமும் மகாபாரதமும் புராணங்களல்ல என்று தெளிவுபடுத்தியுள்ளார். அதற்குமேல் பல்வேறு பழங்கதைகளைக் கொண்டுள்ள காரணத்தால் மகாபாரதமே இதிகாசம் என வழங்கத்தக்கது. இராமாயணம் அத்தகு பண்பில்லாததாலும் ஒருவரால் இயற்றப்பட்டுள்ளதாலும் அது காவியமென்றே அழைக்கத்தக்கது என்று முடிவு செய்துள்ளார். இத்தகைய விளக்கம் வேறுயாராலும் அதுகாறும் செய்யப்படாதது என்றே தோன்றுகிறது.

இவ்விரு நூல்களும் தோன்றிய காலத்தை வரையறுக்கும் கால்டுவெல், மகாபாரதத்தைவிட இராமாயணம் தொன்மையானது; ஆயினும் இருக்கு வேதத்தைக் காட்டிலும் காலத்தால் பிற்பட்டது என்று துணிந்துள்ளார். புத்தசமயத்தின் தோற்றத்திற்குப் பின்னும் கிறித்துப் பிறப்பிற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னும் இராமாயணம் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்று உறுதிசெய்கிறார்.

இராமாயணம் பிற்காலச் சேர்க்கைகளையும் கொண்டுள்ளது என உரைக்கும் கால்டுவெல், வால்மீகி இருக்கு வேதகாலத்தவராதலின் அவரால் இயற்றப்பட்டிருக்க முடியாது என்கிறார். 'குசலவர்' என்பது அரண்மனைக் கவிராயர்களைக் குறிக்கும் பெயர். அக்கவிராயர்கள் பாடிய இராமன் கதையே செவிவழியாகக் கேட்டு மக்கள், மாற்றியும் கூட்டியும் வழங்கி வந்து, பிற்காலத்தில் எழுதப்பெற்றிருக்க வேண்டும் என வீரகாலக் கவிதைகள் வாய்மொழி இலக்கியங்களாக வழங்கிப் பின் ஏட்டிலக்கியங்களாக நிலைபெற்ற தன்மை பற்றி, வீரநிலைக்கால இலக்கியமாக இராமாயணம் அனைத்து வகைகளிலும் திகழ்வதை உணர்த்துகிறார். 'கறையான் புற்று' எனப் பொருள்படும் வால்மீகி என்னும் பெயர், அதன் பழமையை உயர்த்துவதற்காகப் பிற்காலப் புலவர்களிட்ட பெயர் என முடிவு செய்துள்ளார்.

பல மொழிகளிலும் இராமாயணம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் கம்பநாடன் 'இன்பமான செய்யுளலங்காரம்' கொண்ட நூலாகப் படைத்துள்ளதையும் அது கிறித்துப்பிறந்து 1000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டது என்றும் கல்வெட்டுச் சான்று கொண்டு முடிவுசெய்கிறார்.

இதனைத் தொடர்ந்து ஏறக்குறைய பத்துப் பக்கங்களில் இராமன் கதையை விவரித்துள்ளார்.

அதன்பின் இராமாயணம் குறித்து தனது விவாதக் கருத்துகளை கால்டுவெல் முன்வைத்துள்ளார். அவற்றை மூன்றாக நாம் பகுத்துணர முடியும்.

1. இராமாயணத்திலுள்ள அடிப்படை உண்மை வரலாற்றை அதன்மீது கட்டப்பட்டுள்ள வீண்கதைகள் மறைக்கின்றன என்பது அறிஞர் துணிபு. அறிவுக்குப் புறம்பான கதைகளை மிக்க ஆர்வத்துடன் பண்டைய இந்துக்கள் எழுதியுள்ளனர். வருணித்துச் சொல்லும் திறமை மிகுதியாகக் கொண்டிருந்த அவர்களுக்குப் பகுத்தறியும் விவேகம் குறைவு. அரக்கர்களையும் பூதங்களையும் குறித்த அவர்கள் தம் சித்திரிப்புகளை ஐரோப்பாவிலுள்ள குழந்தைகளால் மட்டுமே நம்பி இரசிக்கமுடியும். வளர்ந்தவர்களால் நம்பமுடியாது. ஆனால் இந்தியாவிலோ பேதை மக்கள் எல்லோரும் அவற்றை நம்புகிறார்கள்; அக்கதையைக் கேட்பது புண்ணியச்செயல் என்று எண்ணுகின்றனர்.

2. தொடக்கத்தில் இக்கதையை உரைத்த கவிஞன் இராமனை வீரனாகச் சித்திரித்தானேயொழிய தெய்வமாகக் காட்டவில்லை. ஆனால் பிற்காலப் புலவர்கள் அவனைத் தெய்வமாகக் காட்ட முற்பட்டுள்ளனர். இராமனுடைய செயற்பாடுகள் வீரனுக்குரியவையேயன்றித் தெய்வத்திற்குரியனவல்ல. இராமன் தெய்வமாக இருந்திருப்பின் குரங்குகளையும் பறவைகளையும் கொண்டு சீதையைத் தேடியிருக்க மாட்டான். அவனை வீரனாகக் கூறிச் செல்லும் கதைப் போக்கிற்கு இடையூறு விளைப்பதாகவும் ஒட்டாததாகவுமே தெய்வமாகக் காட்ட முயலும் பாடல்கள் உள்ளன.

3. இராமனுடைய உண்மை வரலாறு குறித்து ஐரோப்பிய அறிஞர்கள் சிலர், சில ஆய்வு முடிவுகளைத் தருகின்றனர்:

அ. வடநாட்டிலிருந்த அரசன் இராமன் என்பவன் தென்னாட்டின்மீது மேற்கொண்ட படையெடுப்பே இராமாயணமாகப் பிற்காலப் புலவர்களால் புனைந்து பாடப்பட்டுள்ளது.

ஆ. இராமன் என்ற ஒருவன் வரலாற்றில் இருந்ததில்லை. தென்னிந்தியக் காடுகளில் முதன்முதல் தவம் செய்யவந்த முனிவர்களைக் காப்பாற்றுவதற்காக வடநாட்டு அரசர்கள் பலர் படையெடுத்து வந்தனர். அவர்களை 'இராமன்' என்று பெயர் சூட்டி அழைத்திருக்கலாம்.

வடபுலத்து மக்கள் தங்களது வேளாண்மைக்குத் தென்னக மக்களால் நேர்ந்த இடையூறைத் தடுக்கவும் தங்கள் வேளாண்மையையும் பழக்கவழக்கங்களையும் தென்னகத்தில் பரப்பவும் முயன்றபோது இப்போர்கள் நேர்ந்திருக்கலாம்.

> ஏனெனில் 'சீதை' என்ற பெயர் வேளாண்மையோடு தொடர்புடையதாக உள்ளது. ஆரியர்களுடைய வேளாண்மையை இராவணன் முதலிய இராட்சதர்கள் கொள்ளையடித்துச் சென்றதையும் இராமன் என்பது வேளாண்மையைக் காத்த ஆரிய அரசர்களையும் குறிக்கும் எனவும் பலராமன் என்ற அவதார புருடனும் கலப்பையை ஆயுதமாகக் கொண்டிருப்பதை இத்துடன் இணைத்து எண்ணவேண்டும்.

இராமாயணம் குறித்த இக்கருத்துகளை முன்வைத்த அறிஞர்கள் பெயர்களை கால்டுவெல் கூட்டவில்லை. ஆயினும் 'மேற்கண்ட அபிப்பிராயங்கள் ருசுவாயிருக்கிறதென்று இதுவரைக்கும் சொல்லக்கூடாது. ஆயினும் அவைகள் விவேகமுள்ள அபிப்பிராயங்கள் என்பதற்குச் சந்தேகமில்லை' (ப.43) என்று ஓர் ஆய்வாளராக நடுநின்று உரைத்துள்ளார்.

மேலும் அவர், இராமாயணம் இயற்றிய கவிஞனுக்குத் தென்னகத்திலிருந்த மக்கள் குறித்துத் தெளிவான அறிவில்லை. முனிவர்கள் தன்னிடம் கூறியவற்றை உண்மையென நம்பித் தென்னகத்து மக்களை இராட்சதர்களாகவும் குரங்குகளாகவும் சித்திரித்துள்ளான் என்கிறார்.

யமுனையைக் கடந்தவுடன் தண்டகாரண்யம் உள்ளது எனவும் பூதங்களும் இராட்சதரும் குரங்குகளும் அங்கு உள்ளதாகவும் ஊர்களும் மக்களும் இல்லையெனவும் இலங்கையிலும் இராட்சதர்களே இருந்தார்கள் எனவும் கொண்டமையால் இராமாயண ஆசிரியனுக்குத் தென்னிந்தியா குறித்த எந்தவொரு அறிவும் இல்லை என எடுத்துரைக்கிறார். இதனாலேயே இராமாயணத்தில் சொல்லியுள்ள அதிசயமான கதைகளை உண்மையெனக் கொண்டு இன்றும் இலங்கையில் வீடணன் ஆட்சி புரிவதாக நம்பி வருகின்றனர் என எடுத்துரைக்கிறார். மேலும், வட இந்தியாவைச் சேர்ந்த முனிவர்கள் விந்தியமலைக்கு வந்தபோது அங்கு வேற்றுமொழி பேசிய காட்டு மக்களைக் கண்டனர்; அவர்கள் முனிவர்களைத் துன்புறுத்துவோராகவும் வேளாண்மையை அழிப்போராகவும் உள்ளதைக் கண்டு, அவர்களைப் பூதங்களாகவும் இராட்சதர்களாகவும் கூறினர்; ஆரியர்களுக்கு உதவிய,

சற்று சாதுவான பழங்குடிகளை இராட்சதர்கள் என்று கூறாமல் நிந்தையாகக் குரங்குகள் என்று கூறினார்கள் என்று முடிவுசெய்துள்ளார்.

இருக்குவேதம் சொல்லும் சமய நடவடிக்கைகளுக்கும் புராணங்கள் சொல்லும் சமய நடவடிக்கைகளுக்கும் இடைப்பட்டதாகவும் மனுநீதி சொல்லும் சமய நடவடிக்கையோடு ஒத்துச் செல்வதாகவும் இராமாயணம் கூறும் ஆச்சாரங்கள் உள்ளன என்று குறிப்பிடும் கால்டுவெல்,

> 'நாராயணனையும் அரியையும்' ஒன்றாக்கி
> அவ்விருவரையும் விஷ்ணுவோடொன்றாக்கி
> இவ்வகையாய்ப் பெரிய தேவனாகத் திரண்ட விஷ்ணுவை
> விசேஷித்த தேவனென்று சிலர் வணங்கினார்கள். ஆங்கங்கே
> எழும்பின திசை தேவர்களின் கிரீசனென்னும்
> பேரையுடைய இமயகிரித் தேவனாகிய
> சிவனோடே ருத்திரன், பசுபதி, அரன் முதலான
> தேவர்களை ஒன்றாக்கி அந்தச் சிவனைப் பிரதான
> தேவனென்று வேறுசிலர் வணங்கினார்கள் (ப.45)

என்று அக்காலப் பகுதியில் நிகழ்ந்த தெய்வ இணைப்புகளையும் முதன்மைபெற்ற தெய்வங்களையும் நுட்பமாக வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் வேதங்களையும் இராமாயணத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்துக்கள் பூர்வீகத்தில் அநுசரித்த மதம் வெகுவாய் மாறினதாக விளங்கும் என்றும் புலப்படுத்தியுள்ளார். மேலும் பண்டைக் கால முனிவர்கள் இராமாயண காலத்திலும் இருந்ததாகச் சித்திரித்த போதும் அவர்கள் இந்திரனைத் தொழுது நின்ற நிலை மாறி, தேவர்களையும் அரசர்களையும் நடுங்கச் செய்வோராய் மாறியதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராமாயணம் குறித்த இக்கட்டுரை கால்டுவெலின் பார்வை விரிவை உணர்த்துகிறது. மிகக் கடினமான உழைப்பில், இந்துமத அடிப்படை நூல்களை மூலத்திலேயே கற்றிருப்பதாகத் தெரிகிறது. நூல்களைக் குறித்த ஆய்வு நூல்களையும் வாசித்துணர்ந்த அறிவுடன் அவர் அவற்றை விவரிக்கிறார். மிக விரிந்த பரப்பில் அமையும் பார்வையினால் வேத காலம் தொடங்கிப் புராணகாலங்கள் வரை நிகழ்ந்த கடவுளர் உருவாக்கங்கள், அவற்றினூடாக மதச் செயற்பாடுகளில் விளைந்த மாற்றங்கள், அவற்றின் காரணங்கள் என விரித்துரை செய்கிறார். தொன்மம் குறித்த அறிஞர்களின் விவரிப்புகளை எடுத்துரைக்கின்ற கால்டுவெல் அவை சிந்திப்பதற்குரியன என்ற எல்லையில் நிறுத்துகிறார். இத்தகைய அடித்தளத்தில் இராமாயணம்

குறித்து கால்டுவெல் முன்வைக்கும் கருத்துகளில் முக்கியமானவை:

- வடஇந்தியா, தென்னிந்தியா என இந்தியா பல்வேறு வகையில் மாறுபட்ட இரு நிலப்பகுதிகளைக்கொண்டது.
- வடஇந்தியா ஆரிய அரசர்களால் ஆளப்பட்டது; வேளாண்மை சிறந்து விளங்கியது; சமய நிகழ்வுகள் அங்கு நிகழ்ந்தன; முனிவர்கள் பலர் அங்கு வாழ்ந்தனர்; நடு இந்தியப் பகுதிக்கும் அவர்கள் வந்தனர்.
- தென்னிந்தியப் பகுதி வேளாண் நாகரிகம் பெறாததாய், தொல்பழங்குடிகள் வாழும் காட்டுப்பகுதிகள் கொண்டதாய் இருந்தது.
- அங்கு வாழ்ந்த தொல்பழங்குடிகள் ஆரியர்களின் வேளாண் செயற்பாடுகள் எதிர்ப்பவர்களாகவும் அழிப்பவர்களாகவும் இருந்தனர்.
- அப்பழங்குடிகள், முனிவர்களுக்கும் அவர்கள் தம் தவத்திற்கும் வேள்விகளுக்கும் இடையூறு விளைத்தனர்.
- அதனால் வடபுலத்து இராமாயணக்கவி, தென்புல மக்களை இராட்சதர்களாகவும் குரங்குகளாகவும் சித்திரித்துள்ளான். நம்பகத் தன்மையற்ற, குழந்தைத்தனமான இவ்வருணனை களைப் படிப்பறிவற்ற மக்கள் உண்மையெனக் கொண்டனர்.
- இருக்குவேத காலத்திலிருந்த இயற்கை வழிபாடு மாறுபட்டு, வீரர்களைப் போற்றும் காலத்தின் பின்னர், அவ்வீரர்கள் கடவுளர்களோடு இணைக்கப்பட்டுத் தொழுவதற்கு உரியவர்களாக மாற்றப்பட்டனர்.

ஐரோப்பிய அறிஞர்கள் விவரித்த தொன்ம விளக்கங்களைத் தொடர்ந்து வெளியிடப்பெற்ற கால்டுவெல் அவர்களின் இக்கருத்தியல் தமிழக வரலாற்றில் பெரும் எழுச்சிகளுக்குக் காரணமாகத் திகழ்ந்துள்ளது எனலாம்.

சாதிவாரியான சமத்துவம் வேண்டியும், பிராமண மேலாண்மைக்கு எதிராகச் சுயமரியாதை உணர்வை எழுப்பவும் திராவிட இயக்கம் கண்ட தந்தை இராமசாமி பெரியார், காங்கிரசில் இருந்தபோதே, 1922ஆம் ஆண்டு நடைபெற்ற திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் மனுதர்மத்தையும் இராமாயணத்தையும் கொளுத்த வேண்டும் என்றார். அதற்குப் பெரியார் முன்வைத்த காரணம் சாதி ஒழிப்பாகும். (கி.வீரமணி, 2003, ப.5) பின்னர் காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர் 'இராமாயண ஆராய்ச்சி' என்று தொடர்ந்து

குடியரசு பத்திரிகையில் எழுதினார் (1929). பின் 1965 இல் கம்பராமாயணத்தை தீயிட்டு எரிக்கும் நிகழ்ச்சி தமிழகமெங்கும் நிகழ்ந்தது (சாமி.சிதம்பரனார், 1994, ப.255 & 264).

இதனையொட்டி வாத-பிரதிவாதங்கள் நடைபெற்றன. அரசியல்வாதிகளும் அறிஞர்களும் கலந்துகொண்டனர். அறிஞர் அண்ணா, இரா.பி.சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதி முதலியோர் இவ்வகையில் முக்கியமானவர்களாவர்.

இவ்விவாதங்களில் முதன்மை பெற்றவை வடநாடு - தென்னாடு, ஆரியர் - திராவிடர் என்ற கருத்தியல்களே ஆகும். தென்னிந்திய திராவிடர் மீதான வட இந்திய ஆரியர்களின் வெற்றியைக் கொண்டாடும் நூலாகவே கம்பராமாயணம் பார்க்கப்பட்டது. சேதுப்பிள்ளை போன்றவர்கள் முன்வைத்த 'இராவணன் ஆரியன்' என்ற கருத்தியல் புறக்கணிக்கப்பட்டது.

திராவிடன் என்றால் தமிழன் என்று கொள்ளப்பட்டு, இராவணன் திராவிட நாகரிகத்தை நிலைநிறுத்தியவனாகக் கருதப்பட்டான்.

இவ்வெழுச்சியின் விளைவாகவே,

தென்றிசையைப் பார்க்கின்றேன் - என்சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெலாம் பூரிக்கு தடடா
அன்றந்த லங்கையினை ஆண்டமறத் தமிழன்'

என்று பாவேந்தர் பூரிப்புடன் எழுதினார். புலவர் குழந்தை 'இராவண காவியம்' என்றொரு காவியமே இயற்றினார்.

ஆயினும், இக்கருத்துருவாக்கத்தில் கால்டுவெல் சிந்தனையின் பங்கு பெரியதாகப் விதந்து பேசப்பட்டதாகத் தெரியவில்லை. வருணதர்மத்தை நிலைநாட்டி, ஆரிய நாகரிகத்தினைப் பரப்பும் ஓர் முயற்சியே இராமாயணம் என்று அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டது.

கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் 1856இல் வெளிவந்த பின்னர் திராவிட இனம் குறித்தும் திராவிட மொழி குறித்தும் புதிய விழிப்பு ஏற்பட்டது. மூல திராவிடமொழி தமிழே என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் தமிழ்மொழி போற்றப்பட்டது. இதனூடாக வடமொழி எதிர்ப்பு, வேதமறுப்பு, ஆரியர்களின் நால்வருணப் பாகுபாட்டிற்கு எதிர்ப்பு ஆகியவை அழுத்தமாக முன்வைக்கப்பட்டன. இக்கருத்தியலின் ஒட்டுமொத்த

வெளிப்பாடாகவே சுந்தரனாரின் மனோன்மணியத் தமிழ்த்தாய் வாழ்த்து வடிக்கப்பெற்றது. 'திராவிட மொழிகள் யாவும் தமிழிலிருந்து தோன்றின என்ற கருத்து முன்வைக்கப்பட்டு தமிழ்-வடமொழி-பிராமணியம் இவற்றிற்கான எதிர்நிலையே அடையாளத் தேடுதலாகி விட்டது' (கு.சீனிச்சாமி, 2010, ப.127). 1897இல் சுந்தரனாரின் மனோன்மணியம் வெளிப்படும் முன்னரே ஆதிதிராவிட ஜனசபையை 1892 ஆம் ஆண்டிலும் ஆதிதிராவிட மகாஜன சபையை 1894 ஆம் ஆண்டிலும் அயோத்திதாசர் நிறுவியிருந்தார். இவர்களின் திராவிட உணர்விற்கு கால்டுவெல்லே மூலம் என்பதில் ஐயமில்லை. இராமாயணம் குறித்து வாதிடும்போது, 'மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்களும் சைவத் திருவாளர் வி.பி.சுப்பிரமணிய முதலியாரும் திராவிட மேம்பாட்டை எடுத்துரைத்தார் (கி.என். அண்ணாதுரை, 2013, ப.10) என்று அண்ணா குறிப்பிட்டுள்ளார். அண்ணாவின் கருத்துகளுக்கான தனது மறுப்புரையில், 'இராமாயணம் ஆரிய திராவிட போராட்டக் கதை என்று வடநாட்டிலுள்ள ஒரு பண்டித ஜவஹரும் தென்னாட்டுச் சுந்தரம்பிள்ளையும் இடையே உள்ள வி.பி.சுப்பிரமணிய முதலியாரும் கூறினர் என்று கூறினார்' என இரா.பி.சேதுப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். (மேலது, ப.20)

மேலும், அண்ணா தனது வாதத்தில்,

... வானரர்கள் என்று இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் வாழ்ந்த இடம் விந்தியமலைக்குக்கீழே, கோதாவரி வரையிலே உள்ள நிலப்பரப்பிலே ஒரு பகுதியாகவே இருக்கிறது. அங்கு ஆரியர்களோ, மற்றவரோ இல்லை; தமிழரே வாழ்ந்தனர். எனவே அகச்சான்று, புறச்சான்று எனும் எதன்படி நோக்கினும் வானரர் என்பது பல அறிஞர்கள் கூறியுள்ளபடி தமிழரையே குறிக்கும்' (மேலது, பக்.38-39)

என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

திராவிடமொழி என்பது அடிப்படையில் தமிழே என்று கொள்ளப்பட அதே பான்மையில் விந்தியத்திற்குப் பின்னிருந்த 'காட்டு ஜனங்கள்' என்று கால்டுவெல் குறிப்பிட்ட பழங்குடியினர் தமிழர்களே என்று கொள்ளப்பட்டே இராமாயணப் போராட்டம் தமிழகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஐரோப்பிய அறிஞர்கள் நிகழ்த்திய இராமாயணத் தொன்ம விளக்கங்களுடன் கால்டுவெல் முன்வைத்த கருத்துகளும் சுந்தரனார் போன்றோரின் வழியாகத் தமிழகத்தில் பெரிய அரசியல் அசைவியக்கத்திற்குக் காரணமாகியுள்ளன என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்

கால்டுவெல். பரதகண்ட புராதனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2012.

அண்ணாதுரை, சி.என். தீ பரவட்டும், திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, சென்னை, 2013.

வீரமணி, கி. பெரியாரியல் - இராமாயண ஆய்வுச் சொற்பொழிவுகள், திராவிடர் கழக வெளியீடு, சென்னை, 2003.

சிதம்பரனார், சாமி. தமிழர் தலைவர், பெரியார் சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 1994.

பூங்குன்றன், கலி. இயக்க வரலாற்றில் இராமாயண எதிர்ப்பு, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை, 1998.

சீனிச்சாமி, து. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, சந்தியா பதிப்பகம், சென்னை, 2010.

❦ ❦ ❦

37. கால்டுவெல்லின் நற்கருணைத் தியானமாலை

முனைவர் இரா.செ. டென்சன் எக்டர்
தமிழ்நாடு இறையியல் கல்லூரி
அரசரடி, மதுரை.

முன்னுரை

இராபர்ட் கால்டுவெல் (1814-1891) அயர்லாந்தில் பெல்வாஸ்ட் நகருக்கு அருகிலுள்ள ஓரிடத்தில் பிறந்தவர். 1834 ஆம் ஆண்டு இலண்டன் தூதுரைப் பணிச்சங்கத்தில் தூதுரைப் பணிக்கென்று ஏற்றுக்கொள்ளப் பெற்றார். 1838ஆம் ஆண்டு சென்னைக்கு புறப்படுவதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு ஆயராக அருட்பொழிவு பெற்றார். 1841 ஆம் ஆண்டு இடையன்குடியில் குடியேறினார். 1877 ஆம் ஆண்டு கால்டுவெல்லின் நண்பர் எட்வர்ட் சார்ஜன்ட் ஆயருடன் தனக்குரிய இடத்தைத் தமிழகத்தில் பெறுவதற்கு இவர்தம் திருநெல்வேலியின் உதவிப்பேராயராகத் திருநிலைப் படுத்தப்பெற்றார். இருபத்தோரு திருச்சபைகளையும், ஒன்பது பள்ளிகளையும் மேற்பார்வையிடும் பொறுப்பைப் பெற்றார். இவர் தமிழறிஞராகவும், இலக்கணியாகவும் திகழ்ந்தார். தமிழ்மொழி மொழியாராய்ச்சி மிகப்பெரும் பங்களித்துள்ளது.

இந்த கட்டுரையில் பார்க்கவிருக்கின்ற நற்கருணைத் தியானமாலை என்ற நூலின் முதற்பதிப்பு 1859ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இருபத்தேழாம் நாள் இடையன்குடிச் சீமையில் வெளியிடப்பட்டது. கால்டுவெல்லார் பேராயராகத் திருபொழிவு பெருவதற்கு முன்பே அவர் இந்நூலை எழுதியிருக்கிறார். இறைமக்கள் தங்கள் பற்றுறுதியில் எவ்வாறு உண்மையுடன் வளரவேண்டும் என்பதை இந்த நூலின் வழியாக அறிந்து கொள்ளலாம்.

நற்கருணைத் தியானமாலை நூலின் முன்னட்டையில் 'கர்த்தருடைய இராப்போஜனமாகிய தேவ நற்கருணையைப் பரிமாறும் ஒழுங்கும், அவ்வொழுங்கை விவரித்து விளக்கிய பிரசங்கமும், தேவ நற்கருணைக்கென்று ஆயத்தம் பண்ணுங்காலத்திலும் அதை வாங்குந்

தருணத்திலும் செய்யத்தக்க தியானங்களும், செயல்களும் அடங்கியிருக்கின்றன' என்று அச்சிட்டுள்ளார். இது இந்த நூலை ஓர் ஆயராக எந்த நோக்கத்துடன் எழுதியுள்ளார் என்பதை வெளிப்படுத்துகிறது.

இந்தக் கட்டுரையில் நற்கருணைத் தியானமாலை நூலமைப்பைப் பற்றியும், கால்டுவெல்லார் எடுத்தாண்டுள்ள விவிலியமறைத் திருமறைத் திருமொழிகள் குறித்தும் செய்திகள் இடம்பற்றுள்ளன.

நற்கருணைத் தியானமாலை - நூலமைப்பு

நற்கருணைத் தியானமாலை நூலினமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றிய செய்திகள் இனி இடம் பெறுகினறன.

பச்சாத்தாபத் தியானங்கள்

ஆண்டவரின் திருவிருந்து பரிமற்றத்திற்கு முன்னுள்ள நிழமைகளில் ஒருவர் தம்மையே ஆய்வு செய்வதற்கும் இறையன்பைப் பெருக்கிக் கொள்வதற்கும் உதவியாக தியானங்கள் முதலாவது அமைந்துள்ளன. இப்பகுதிக்குப் 'பச்சாத்தாபத் தியானங்கள்' என்பது பெயர். மொத்தம் ஐந்து தியானங்களைக் கொண்டுள்ளது. இந்த ஐந்து தியானங்களும் தொடங்கும் முன் ஓர் இறைவேண்டலும், ஐந்து தியானங்களுக்கும் முடிவில் ஓர் இறைவேண்டலும் இடம் பெற்றுள்ளன. இங்கு எடுத்தாளப்பெற்றுள்ள விவிலிமறைப் பகுதிகள் *சங்கீதம் 40:12; 25:11 51:4; யோபு29:2; 1கொரிந்தியர் 11:31*

விசுவாச தியானங்கள்

திருவிருந்தைப் பெறுவதற்கு ஆயத்தமாக ஒருவர் கடவுளின் உதவியுடன் தாம் பாவி என்பதை உணர்ந்து தாம் செய்த பாவங்களுக்காக வருந்துவதற்கு உதவியாகப் பச்சாத்தாபத் தியானங்கள் அமைந்தன. விசுவாசத் தியானங்கள் என்பவை கடவுளுடைய இரக்கத்தையும் இயேசு கிறிஸ்துவினுடைய மீட்பையும் அவர் நாம் ஈடேறுவதற்காகச் செய்து நிறைவேற்றிய மீட்புச் செயல்களையும் கைவிடப்பெற்ற நிலையிலிருக்கும் பாவிகளாகிய நம்மை ஏற்றுக்கொள்கிற அவர் இரக்கத்தையும் பற்றியவை. இப்பிரிவில் மொத்தம் ஐந்து தியானங்கள் உள்ளன. *சங்கீதம் 31:19, 42:11, 61:2, 2கொரிந்தியர்4:21, எபிரேயர்2:9* ஆகிய திருமொழிகளை இப்பகுதிக்காக எடுத்தாண்டுள்ளார்.

தேவசிநேகத் தியானங்கள்

இப்பகுதியில் பாவங்களையுணர்ந்த ஒருவர் அதற்காக மனம் வருந்துகிறார். கிறிஸ்துவிடம் நல் மனம் பொருந்துகிறார். கிறிஸ்து

அருளியிருக்கும் மீட்புக்காக அவரைப் போற்றுகிறார். அடுத்தபடியாக அவருடைய உறுப்புகளாக இருக்கும் சகோதர சகோதரிகளிடம் அன்பாயிருக்குமாறு ஏவி விடுவதற்குரிய தியானங்களாக இவை அமைகின்றன. மொத்தம் நான்கு தியானங்களும் ஒரு மன்றாட்டுமாக இப்பகுதி அமைகின்றது. இடம் பெற்றுள்ள திருமொழிகள் 1யோவான் 3:1; பேதுரு1:8; 1யோவான்4:19; பிலிப்பியர்2:4.

பந்திப்பரிட்சைத் தியானங்கள்

தம் பாவங்கள் உணர்த்தப் பெறுகிறார். மனம் வருந்தி இறையுதவியை நாடுகிறார். கிறிஸ்துவுடனும் உடன் வாழ்பவருடனும் அன்பு செய்ய நாடுகிறார். இப்பந்திப்பரிட்சைத் தியானங்கள் இறையருளிலும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும் வளர்ந்திருக்கிறோமா என்று தன்னாய்வு செயலில் வளரும் போது, கிறிஸ்துவை வாழ்வின் மையவிடத்தினின்று விலக்கி வைத்து மானுட வலிமை மீது நம்பிக்கை வைக்க நேர்வோம் என்பதால் அதைத் தடுக்கும் ஒரு பகுதியாக இதை இங்கு வைத்திருக்கிறார். இப்பகுதியில் மூன்று தியானங்களும் ஓர் இறைவேண்டலும் உள்ளன. இப்பகுதியில் இடம்பெற்றுள்ள திருமொழிகள் 2கொரிந்தியர் 13:5; பேதுரு 3:18

ஆயத்தத் தியானங்கள்

நற்கருணைத் தியான மாலை என்கிற இந்நூலின் இரண்டாவது பெரும் பகுதியாக இப்பகுதி அமைகின்றது. முதற்பகுதியிலமைந்த தியானங்களும் மன்றாட்டுகளும் திருவிருந்து வழங்கப்பெறும் நாளுக்கு முன் அதில் பங்கு பெறப்போகின்றவர் தம்மைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு உதவுபவை. இப்பகுதியில் திருவிருந்து வழங்கப்பெறும் நாளின் காலைப்பொழுதில் வழிபாட்டுக்குச் செல்வதற்கு முன் ஒருவர் தம்மை ஆயத்தமாக்கி இறைவேண்டல் செய்வதற்கு இப்பகுதியிலுள்ளன. எடுத்தாளப் பெற்றிருக்கும் விவிலியமறைப் பகுதிகளாவன: மத்தேயு22:4; சங்கீதம்51:17; லூக்கா22:19; 1கொரிந்தியர்11:28; திருப்பாடல்116:12; யோவான்6:63; உரோமையர்8:23; மத்தேயு11:28; ஆகியவை.

ஆயத்த செபங்கள்

இந்த எட்டு தியானங்களையும் தொடர்ந்து மிக நீண்ட ஆயத்த செபங்களாக நான்கு இறைவேண்டல்கள் இடம்பெற்றன. இந்தத் தியானங்களும், மன்றாட்டுகளும் திருவிருந்து வழிபாட்டில் பங்கு பெறுவதற்குச் செல்வதற்கு முன் தனிமையில் செய்ய வேண்டியவை என்ற ஒழுங்கின் கீழ் வருபவை இடம் பெற்றுள்ள இறைவேண்டல்கள் ஆழமானவை. ஒவ்வொரு குறிப்பையும் வைத்து விரிவான கருத்துகளைப் பெற முடியும்.

வழியாட்டு விளக்கம்

'கர்த்தருடைய இராபோசனமாகிய தேவநற்கருணையைப் பரிமாறும் ஒழுங்கை விஸ்தரித்து விளக்கிய பிரசங்கம்' என்கிற தலைப்பின் கீழ் இப்பகுதி அமைந்துள்ளது. திருவிருந்து வழிபாட்டு முறையில் இடம்பெற்றுள்ள கூறுபாடுகளைக் குறித்த விளக்கம் இதில் அமைந்துள்ளது. திருவிருந்து வழிபாட்டுக்குரிய உரை விளக்கம் போன்றுள்ளது. திருவிருந்து வழிபாடு 'மனந்திரும்புதலையும் விசுவாசத்தையும், அன்பையும் எழுப்பி வர்த்திக்கப் பண்ணுகிறதற்கேற்ற நல்ல எத்தனமென்று விளங்கும்' என்பதில் அதன் நோக்கம் விளக்கம் பெறுகிறது.

நற்கருணைத் தியானங்கள்

இப்பகுதியில் மொத்தம் பதினான்கு தியானங்கள் இடம்பெற்றுள்ளன. பதினான்கு விவிலியத் திருமொழிகளை இங்குக் கால்டுவெல்லார் எடுத்தாண்டுள்ளார். அவை,

நீதிமொழிகள்4:26; லூக்கா22:9; லூக்கா22:44; எசாயா53:5; யோவான்1:29; லூக்கா23:42; மத்தேயு26:26; யோவான்6:55; எசாயா56:4; மலாக்கி4:2; சங்கீதம்39:7; சங்கீதம்17:3; லூக்கா23:34; கொரிந்தியர்11:26;

இப்பகுதியைத் தொடர்ந்து மேலும் ஆறு தியானங்கள் அமைகின்றன. இந்தத் தியானங்களுக்குத் தரப்பெற்றுள்ள குறிப்பில் 'நற்கருணை வாங்கித் தான் இருந்த இடத்திற்குத் திரும்பிப் போய் நூற்றுப் பதினோராம் பக்கமுதல் கண்டிருக்கும் தோத்திரங்களையும், செபங்களையும் செய்து, பின்பு சமயங்கிடைத்தால் இதில் அடியிற் கண்டிருக்கும் தியானங்களை வாசிக்க வேண்டியது' என்றுள்ளது. இப்பகுதியில் மொத்தம் ஆறு தியானங்கள் உள்ளன. இப்பகுதியில் இடம்பெற்றிருக்கும் திருமொழிகளாவன உன்னதப்பாட்டு2:3; பிலிப்பியர்4:4; யோபு23:3; மீக்கா7:18, 19; யோவான்21:15; சங்கீதம்17:5.

திருவிருந்தில் பங்குபெற்ற இறைமக்கள் எவ்வகையில் இறையுறவில் மானுடர்க்கிடையேயான உறவில் நிலைத்திருக்க வேண்டும் என்பதை இத்தியானங்கள் அனைத்தும் வலியுறுத்துகின்றன.

இல்லத் தியானங்கள்

திருவிருந்து வழிபாட்டில் பங்கேற்று இல்லம் திரும்பியபின் செய்யவேண்டிய தியானங்கள் இப்பகுதியில் உள்ளன. இப்பகுதிதான் இந்நூலின் நிறைவுபகுதி. 'தேவாலயத்தை விட்டு வீட்டுக்குத்

திரும்பிப்போயிருக்கும் பொழுது செய்யதக்க செபத்தியானங்கள் என்கிற இந்தத் தலைப்பின் கீழ் ஒரு தியானமும், இரண்டு இறைவேண்டல்களும் இடம்பெற்றுள்ளன. நிறைவாக, 'எங்கள் பிரார்த்தனைக்கும் கருத்துக்கும் மேலாக மிகவும் அதிகமாய் அருளிச்செய்ய வல்லவருக்கு கிறிஸ்து இயேசு மூலமாய், சபைக்குள்ளே தலைமுறைதோறும், சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக, ஆமேன்' என்கின்ற எபேசியருக்கு எழுதப்பெற்றத் திருமுகம் மூன்றாம் பிரிவு, இறுபது இறுபத்தொன்று திருமொழிகளுடன் இந்நூல் நிறைவு பெறுகிறது.

நற்கருணைத் தியானமாலையும், விவிலிய மொழிபெயர்ப்பும்

மொத்தம் நாற்பத்து நான்கு திருமொழிகளை பேராயர் கால்டுவெல்லார் இந்நூலில் எடுத்தாண்டுள்ளார். இத்திருவிவிலிய மேற்கோள்களை விவிலியமறையின் எந்த மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்தாண்டுள்ளார் என்பதை அறிய வேண்டியுள்ளது. இங்கே இந்நூலில் இடம்பெற்றிருக்கும் நாற்பத்து நான்கு திருமொழிகளையும் ஒப்புநோக்கப் போவதில்லை. இருபத்தியைந்து திருமொழிகள் மட்டுமே எடுத்துக்காட்டாக ஒப்புநோக்கப் பெறுகின்றன. இவ்வாறு ஒப்புநோக்கப் பெறவேண்டுவதன் தேவையென்ன என்கின்ற வினா எழலாம்.

நற்கருணைத் தியானமாலை என்ற இந்த நூலின் முதற்பதிப்பு *1859* ஆம் ஆண்டு வெளிவந்தது. *1850*ஆம் ஆண்டு பீற்றர் பெர்சிவெல் திருப்புதல் வெளிவந்தது. கால்டுவெல்லார் இந்த மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தியிருக்கலாம் அல்லது *1840*ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தியிருக்கலாம். இதில் பழைய ஏற்பாடு பெப்ரீசியஸ் ஆயருடையது. புதிய ஏற்பாடு இரேனியஸ் ஆயருடையது. இது மீண்டும் இரண்டாவது பதிப்பாக *1844*ஆம் ஆண்டு வெளிவந்தது. இவ்விரு மொழிபெயர்ப்புகளிலிருந்து மட்டுமே கால்டுவெல்லார் தம் விவிலியமறை மேற்கோள்களை எடுத்தாண்டிருக்கக் கூடும் என்று துணியலாம். ஏனெனில் தேவியனடிப்படையில் விவிலியமறை புதிய மொழிபெயர்ப்புகளைக் காண்கிறது. கற்றறிந்தவரான ஆயர் தம் தியான நூலுக்குக் காலத்தால் முந்திய மொழிபெயர்ப்புகளை எடுத்தாண்டிருப்பார் எனக் கூறவியலாது. ஆனால் எடுத்தாண்டுள்ள திருமொழிகளுக்கும் நற்கருணைத் தியானமாலை நூலில் இடம்பெறும் திருமொழிகளுக்குமிடையே வேறுபாடு உள்ளமைதான் இந்நூலில் இடம்பெற்றிருக்கும் விவிலியமறை மொழிபெயர்ப்பு எதுவாக இருக்கக்கூடும் என்ற ஐயத்தை எழுப்புகிறது. இது இவ்வாறு திருமொழிகளை ஒப்புநோக்க வேண்டுவதன் தேவையை ஏற்படுத்துகிறது.

பேராயர் கால்டுவெல் விவிலியமறையின் எந்தத் தமிழ் மொழிபெயர்ப்பைப் பயன்படுத்தி இருக்கலாம் என்பது குறித்து இனிப்பார்க்கலாம். நற்கருணைத் தியானமாலை நூலில் முதலதிகாரத்தைத் தொடர்ந்து வருகிற இருபத்தைந்து திருமொழிகள் மட்டுமே ஆய்வுக்குட்படுகின்றன. பச்சாதாபத் தியானங்களில் இடம்பெறும் சங்கீதம் 40:12; 25:11; 51:4; யோபு 29:2; கொரிந்தியர் 11:31; தேவசிநேகத் தியனங்களில் இடம்பெறும் 1யோவான் 3:1; 1பேதுரு 1:8; 1யோவான் 4:19; பிலிப்பியர் 2:4; ஆயத்தத் தியானங்களில் இடம்பெறும் மத்தேயு 22:4; சங்கீதம் 22:4; சங்கீதம் 116:12, 13; யோவான் 6:63; ரோமர் 8:23; மத்தேயு 11:28; ஆகியவை முதலில் இடம்பெரும் திருமொழி கால்டுவெல்லின் நூலில் உள்ளது.

இரண்டாவது இடம்பெறுவது 1844இல் வெளியான பப்ரீசியஸ் பழைய ஏற்பாடும் இரேனியஸ் புதிய ஏற்பாடும் இணைந்து வெளியான விவிலியமறை மொழிபெயர்ப்புக்குட்பட்டது.

சங்கீதம் 40:12

என்னுடைய அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்துபிடித்தது. அவைகள் என் தலைமயிரிலும் அதிகமாயிருக்கின்றன,

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

என்னுடைய அக்கிரமங்கள் என்னைத் தொடர்ந்து பிடித்தன. அவைகள் என் தலையின் மயிர்களிலும் அதிகமாயிருக்கின்றதினால்.....

என்று தொடர்கின்றது. இத்திருமொழியில் வேறுபாடு ஏதுமில்லை. நூலாசிரியர் தம் தியானத்துக்குத் தேவையான பகுதியை மட்டும் எடுத்து பயன்படுத்துகிறார்.

சங்கீதம் 25:11

உமது நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னியும். ஏனெனில் அது பெரியது.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

உமது நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னியும். ஏனெனில் இது பெரியது. கால்டுவெல்லார் 'அது பெரியது' என்று சேப்மைச் சுட்டினைப் பயன்படுத்துகிறார். பப்ரீசியஸ் மொழி பெயர்ப்பிலோ 'இது பெரியது' என்று அண்மைச்சுட்டாக அமைகிறது.

சங்கீதம் 51:4

தேவரீர் ஒருவருக்கே விரோதமாய்ப் பாவத்தை நடப்பித்தேன்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவத்தை நடப்பித்து.....

இத்திருமொழியிலும் தம் தியானத்துக்குத் தேவையான பகுதியை மட்டும் கால்டுவெல்லார் எடுத்தாள்கிறார். எனினும் 'தேவரீர் ஒருவருக்கே' என்று தேற்றேகாரம் அமைந்திருக்க பப்ரீசியஸ் மொழிபெயர்ப்பில் 'தேவரீர் ஒருவருக்கு' என்று அமைந்திருப்பது கருத்திற் கொள்ளவேண்டியது. கால்டுவெல்லார் சங்கீதம் 51:4 என்று மேற்கோள் காட்ட பப்ரீசியஸ் மொழிபெயர்ப்பில் இத்திருமொழி சங்கீதம் 51:5 என்று சுட்டப்பெறுகிறது.

யோபு 29:2

பராபரனுடைய தீபம் என் சிரசின்மேல் பிரகாசித்த மாதங்களில் எனக்கிருந்த சீரை எனக்குக் கொடுப்பவனார்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

பராபரனுடைய தீபம் என் சிரசின் மேற் பிரகாசிக்கிறதினால்..... பூர்வ மாதங்களிலும்..... எனக்கிருந்த சீரை எனக்கு கொடுப்பவனார்.

பப்ரீசியஸ் மொழிபெயர்ப்பில் இத்திருமொழி மூன்றாவது திருமொழியாக அமைகிறது.

இரண்டு திருமொழிகளை இணைத்திருக்கிறார். 'பிரகாசிக்கிறதினால்' என்று பப்ரீசியஸ் மொழிபெயர்ப்பில் இருப்பதை கால்டுவெல்லார் 'பிரகாசித்த' என்று இறந்த காலத்துக்கு மாற்றியிருப்பதால் பொருள் பொருத்தமுடையதாக்கியிருக்கிறார் எனலாம்.

1கொரிந்தியர் 11:31

நம்மை நாமே நியாயந் தீர்த்தால் நாம் நியாயந்தீர்க்கப் படுவதில்லை

இரேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

நம்மைந்நாமே நிதானித்து விசாரித்தால் நியாயந்தீர்க்கப்படோம்

'நிதானித்து விசாரித்தால் நியாயம் தீர்க்கப்படோம்' என்பதை 'நியாயந்தீர்த்தால் நாம் நியாயம் தீர்க்கப்படுவதில்லை' என்று ஆள்கிறார். நியாயந்தீர்ப்பது என்பது 'நிதானித்து விசாரித்தால் மட்டுமே முறையானதாக அமையும் என்பதை முன் வைத்து இவ்வாறு மாற்றியிருக்க வாய்ப்புள்ளது.

சங்கீதம் 31:19

உம்முடைய நன்மை எவ்வளவு திரள்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

உம்முடைய நன்மையெத்தனைத் திரள்.

'எத்தனை' என்பது 'எவ்வளவு' என்று மாற்றி ஆண்டுள்ளார் எத்தனை எவ்வளவு என்கிற சொற்க்கள் காலவளவையும். கொள்ளளவையும் இருநிலைகளிலும் சுட்டுவதற்குப் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படுவனதாம். 'திரள்' என்கிற சொல் வருமொழியக வருவதால் எவ்வளவு என்பது பொருத்தமானதாக இருக்கும் என்று கால்டுவெல்லார் எண்ணியருக்கக்கூடும். 'எத்தனைத்திரள்' என்று ஒற்று மிகுத்துப் பிழையுற அச்சிட்டிருப்பதும் கருத்திற் கொள்ள வேண்டியதே.

சங்கீதம் 42:11

என் இதயம் தொய்யும் போது, நான் இருக்கிறதிலும் உயரமான கன்மலையில் என்னைக் கொண்டுபோய்விடும்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

'என்னிதயந்தொய்யும்போது' என்பதை 'என் இருதயம் தொய்யும் போது' என்று பிரித்துப் பயன்படுத்துகிறார். இவ்வாறு பிரிப்பது பொருள் தெளிவுக்காகவிருக்கலாம். 'நிற்கிறதிலும்' என்பதை 'இருக்கிறதிலும்' என்று மாற்றுகிறார். இங்கு இச்சொற்களுக்கான நிகரன்கள் மூலமொழியில் இல்லை. எனவே சோர்வுற்ற ஒருவர் மலையில் அமர்ந்திருக்கதான் இயலுமே தவிர நிற்பது கடினம் என்று கொண்டு ஆற்றல்சார் மொழிபெயர்ப்பாக இதனைச் செய்திருக்கலாம். பொது விவிலியத்தில் உள்ளது போன்று 'என் உள்ளம் சோர்வுற்றிருக்கின்றது. உயரமான குன்றுக்கு என்னை அழைத்துச் செல்லும் என்பதுதான் அதன் உண்மைப்பொருள்.

2கொரிந்தியர் 5:21

அவர் நமக்காக பாவமாக்கப்பட்டார்.

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

அவரை நமக்காக பாவமாக்கினார்.

இத்திருமொழியின் பொருள் கடவுள் கிறிஸ்துவின் வழியாகத் தமக்கு மக்கள் ஏற்புடையவராவதற்கென்று கிறிஸ்துவை நமக்காக பாவமாக்கினார். அதாவது பாவத்தை ஏற்றுக்கொள்ளச் செய்தார் என்பது கால்டுவெல்லார் தம் தியானத்துக்கேற்ப அவர் நமக்காக பாவமாக்கப்பட்டார் என்று செயப்பாட்டுவினையைப் பயன்படத்துகிறார். இரேனியஸ் 1844 பதிப்பில் கொரிந்தியர் என்பது கொறிந்தியர் என்று அச்சாகியுள்ளது.

எபிரேயர் 2:9

இயேசுவானவர் கொஞ்சக்காலமாய்த் தேவதூதரிலும் சிறியவராக்கப்பட்டு மரணத்தைச் சகித்ததினாலே, மகிமையோடுங் கனத்தோடும் முடிசூட்டப்படக் காண்கிறோம்.

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

கொஞ்சத்தியால தெய்வதூதரிலுஞ் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்தபின்பு மகிமையினாலுங் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்.

'கொஞ்சத்தியால' 'உத்திரித்தபின்பு' என்கின்ற சொற்களைக் கால்டுவெல்லார் மாற்றிப் பயன்படுத்துகிறார் 'உத்தரித்தல்' என்பதற்கு ஏற்றுக்கொள்ளுதல், துன்புறுதல், பொறுத்துக் கொள்ளுதல் என்கின்ற 'சகித்தல்' என்கின்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். 'கொஞ்சத்தியால' என்பது இலங்கைத் தமிழ் வழக்காகவும் கூடும். 'கொஞ்சகாலமாய்' என்று இதனை மாற்றுகிறார்.'முடி சூட்டப்பட்டதை காண்கிறோம்' என்று தொலைவிலிருந்து பார்ப்பதாக உணர்த்தும் ஒன்றினை'முடிசூட்டப்படக் காண்கிறோம்' என்று அருகிலிருந்து பார்ப்பதாக உணர்த்தும் கூற்றாக மாற்றுகிறார்.

1யோவான் 3:1

நாம் பராபரனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படும்படி பிதாவானவர் நமக்குக் காண்பித்த மிகுந்த அன்பை நோக்கி பாருங்கள்

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

நாம் பராபரனுடைய பிள்ளைகளென்றழைக்கப்படுவதிலே, பிதா நமக்கெத்தனை பெரிய சிநேகத்தை அருளினாரென்று பாருங்கள்.

கால்டுவெல்லார் இத்திருமொழியிலும் சொற்பிரிப்பைச் செய்து பொருள் தெளிவு ஏற்படுத்தியிருக்கிறார். பப்ரீசியஸ் 'சிநேகம்' என்று பயன்படுத்தியிருப்பதை இரேனியஸ் 'அன்பு' என்று மாற்றியிருப்பதாகச் சொல்வதுண்டு (சபாபதி குலேந்திரன், கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, பக்கம் 110) ஆனால் 1844இல் வெளிவந்திருக்கும் பதிப்பில் இரேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பில் 'சிநேகம்'என்கின்ற சொல்லே இடம்பெற்றுள்ளது. ஒருவேளை பதிப்பாசிரியர் சீர்மை கருதி இவ்வாறு மாற்றியிருக்க இடமுண்டு.

1பேதுரு 1:8

அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள்.

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

அவரைக் காணாமல் சிநேகிக்கிறவர்களும் இப்போது தெரிசியாமல் அவர்மேல் விசுவாசிக்கிறவர்களுமாகிய.....

இங்கே கால்டுவெல்லார் தம் தியானக்குறிப்புக்குத் தேவையானதொரு திருமொழியை எடுத்துப் பயன்படுத்தியிருந்தாலும் பொருள் தெளிவாக விளங்குமாறு அதனை எடுத்துப் பயன்படுத்தியுள்ளமையைக் காண முடிகிறது. 'தெரிசியாமல்' என்பது பின்னர் 'தரிசியாமல்' என்று பவர் மொழிபெயர்ப்பிலும், மோனகன் மொழிபெயர்ப்பிலும் மாற்றம் பெற்றுள்ளது.

1யோவான் 4:19

அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்பு கூறுகிறோம்.

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம். ஏனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தார்.

இவ்விரண்டிலும் பொருள் வேறுபட்டுள்ளது. கிறிஸ்து நம்மிடத்தில் நாம் அவரிடத்து அன்பு செய்வதற்கு முன்பே நம்மிடத்தில் அன்பு செய்திருக்கிறார். இதனால் அவரிடத்து நாம் அன்பு செய்கிறோம் என்பது கால்டுவெல்லார் காட்டியிருக்கும் மேற்கோளிலிருந்து நாம் பெறுவது.

கிறிஸ்து நம்மிடத்து முந்தி அன்பு செய்தார் இதனால் நாம் அவரை அன்பு செய்ய வேண்டும் என்ற கட்டளைப் பொருளாக வருகிறது.

பிலிப்பியர்

அவரவர் தங்களுக்கானவைகளை மாத்திரமல்ல, பிறர்க்கானவைகளையும் நோக்குவார்களாக.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

அவனவன் தனக்கானதுகளையல்ல பிறருக்கானதுகளையும் நோக்கியிருங்கள்.

கால்டுவெல்லார் தருகின்ற விவிலியமறையின் தமிழ் மொழிபெயர்ப்பு மேற்கோள் ஒருவர் தங்களுக்குரிய நன்மைகளை மட்டும் கருத்திற்கொண்டு தன்னலத்தோடன்று, பிறர்நலத்தையும் நாட வேண்டும் என்ற பொருளைத் தருகிறது. 'அவனவன்' என்றிருப்பதை 'அவரவர்' என்று மாற்றியிருக்கிறார்.

இரேனியஸ் மொழிபெயர்ப்பு 'தனக்கானதுகளையல்ல பிறனுக்கானதுகளையும்' என்று அமையும்போது முதலில் பிறருக்கான நலனை மட்டுமே ஒருவர் கருத்திற்கொள் வேண்டும் என்பது போல் பொருள் தந்து 'பிறருக்கானதுகளையும்' என்பதில் ஒருவர் தமக்குரியவற்றையும் கருத்திற்கொள்ளலாம் என்ற பொருளைப் பின்னர் தருகிறது. இந்த மயக்கத்தைக் கால்டுவெல்லார் தவிர்த்திருக்கிறார்.

2கொரிந்தியர் 13:5

உங்களுக்கு விசுவாசம் உண்டோ? அதைக்குறித்து உங்களைச் சோதியுங்கள்

இரேனியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

'விசுவசத்திறிலேயயிருக்கிறீர்களோவென்று உங்களைத்தானெ சோதித்து உங்களைத் தானே விசாரித்தறியுங்கள்'

இரேனியஸ் மொழிபெயர்ப்பிலிருக்கும் நீண்ட தொடர்கள் பொருள் தெளிவைத் தருவதற்கு ஆயர் கால்டுவெல்லார் எத்தகைய முயற்சியை மேற்கொண்டுள்ளர் என்பது தெரிகிறது.

சங்கீதம் 16:5

கர்த்தர் என் சுதந்திரத்தின் வீதமும், என் பாத்திரத்தின் பங்குமானவர்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

கடவுளே எனக்கு எல்லாம் என்று கூறவருகிற பகுதி இது. பப்ரீசியஸ் 'பங்கு' என்கிற சொல்லையே இரண்டு இடங்களிலும் பயன்படுத்துகிறார். கால்டுவெல்லார் 'சுதந்திரம்' 'பங்கு' என்கிற இருவேறு சொற்களைப் பயன்படுத்துவதன் வழி பொருள் தெளிவு வழங்குகிறார்.

2பேதுரு 3:18

இயேசு கிறிஸ்துவின் கிருபையும், அவரை அறிகிற அறிவையும் அதிகமதிமாய் அடைந்து கொள்வீர்களாக.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

இயேசு கிறிஸ்துவினுடைய கிறுபையிலும், அவரையறிகிற அறிவிலும் வளருங்கள்.

கால்டுவெல்லார் 'இயேசு கிறிஸ்து' என்று தம் நூலில் குறிப்பிடுவது அச்சுப்பிழையென்று விட்டுவிடவியலாது. ஏனெனில் நற்கருணை தியான மாலை நூலில் நூற்றியேழு, நூற்றியெட்டு முப்பத்தேழு பக்கங்களிலும் இப்பெயர் ஒற்றுமிகுந்தே அச்சாகியுள்ளது. ஒருவேளை இது கால்டுவெல்லாரின் கிறிஸ்தியல் நிலைப்பட்டைக் காட்டுகின்றதோ? இயேசுவும் பெயர்ச்சொல் கிறிஸ்துவும் பெயர்ச்சொல் பொதுவாக இயேசு கிறிஸ்து என்று ஒரே சொல்லாகப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் இயேசு என்பது கன்னிமரியாவின் மகனின் பெயர். கிறிஸ்து என்பது அவருக்குரிய பட்டப்பெயர். கிறிஸ்து இயேசுவானாரா, இயேசு கிறிஸ்துவாக்கப்பெற்றாரா என்பது கிறிஸ்தியல் சார்ந்து பேசப்படுகின்ற ஒன்று. கால்டுவெல்லார், 'இயேசுகிறிஸ்து' என்று பயன்படுத்துவதன் வாயிலாகத் தத்தெடுப்புக் கிறிஸ்தியலை தம் நிலைப்பாடாகப் பெற்றிருக்கக் கூடும் எனலாம். கிறிஸ்தியலின் இருநிலைப்பாடுகளுமே விவிலியமறை சார்ந்தவைதாம்.

மத்தேயு 22:4

எல்லாம் எத்தனமாயிருக்கிறது. கலியாணத்திற்கு வாருங்கள்.

இரேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

இங்கே 'ஆயத்தமாச்சு' என்கின்ற பேச்சுவழக்குச் சொல்லைத் தவிர்த்துக் கால்டுவெல்லார் 'எத்தனமாயிருக்கிறது' என்கின்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். 'எத்தனம்' என்பதற்கு முயற்சி என்கின்ற பொருளுமுண்டு, இங்கே, 'ஆயத்தம்' என்ற அதன் மற்றொரு பொருளிலேயே கால்டுவெல்லார் பயன்படுத்துகிறார்.

சங்கீதம் 51;18

பராபரனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்.

பப்ரீசியஸ் பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

பராபரனுக்கேற்கும் பெலிகள் நொருகுண்ட ஆவிதான்.

பதினேழாம் திருமொழி பதினெட்டு என்று அச்சாகியுள்ளது. 'பெலிகள்' என்பதைப் 'பலிகள்' என்று மாற்றியிருக்கிறார்.

லூக்கா 22:19

என்னை நினைவுகூரும்படி இப்படிச் செய்யுங்கள்.

இரேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

இதை என்னை நினைக்கிறதுக்காகச் செய்யுங்களென்றார்.

கால்டுவெல்லார் இலக்கிண வழக்கைப் பின்பற்றி மாற்றியமைத்தள்ளமை இங்குத் தெரிகிறது. நினைகிறதுக்காக என்பதை 'நினைவுகூரும்படி' என்ற திருத்தியிருக்கிறார்.

1 கொரிந்தியர் 11:28

எவனாகிலும் தன்னைத்தானே சோதித்தறிந்து, பின்பு இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம் பண்ணக்கடவேன்.

இரேனியுஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

மனுஷன் தன்னைத்தானே சோதித்தறிந்து இப்படியே இந்த அப்பத்திலே பொசித்து இந்தப் பாத்திரத்திலே குடிக்கக்கடவன்.

திருவிருந்தில் பங்கு பெறுவதற்கு முன் ஒருவர் தம்மைத்தாமே ஆய்ந்துபார்த்துக் கொள்வது இன்றியமையாதது என்பது கால்டுவெல்லாரின் மேற்கோளிலே அழுத்தமாக வெளிவருகிறது. 'பொசித்து' என்பதைப் 'புசித்து' 'குடிக்கக்கடவன்' என்பதைப் 'பானம் பண்ணக்கடவன்' என்றும் மாற்றியுள்ளார்.

சங்கீதம் 116:12,13

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக்கு எந்த இட்டைச் செலுத்தவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை வாங்கி கர்த்தருடைய நாமத்தைப் பற்றி கூப்பிடுவேன்.

பப்ரீசியஸ் பழைய எற்பாட்டு மொழிபெயர்ப்பு

கர்த்தர் எனக்குச் செய்த எல்லாவுபகாரங்களுக்காகவும் அவருக்கென்ன ஈட்டைச் செலுத்துவேன். இரட்சிப்புகளின் பாத்திரத்தை வாங்கி கர்த்தருடைய நாமத்தைப் பற்றிக் கூப்பிடுவேன்.

பிற இடங்களைப் போலவே கால்டுவெல்லார் பொருள் தெளிவுக்காகச் சொற்களைப் பிரித்துத் தருகிறார். இரட்சிப்புகள் என்று பன்மையில் பப்ரீசியஸ் குறிப்பிடுவதை 'இரட்சிப்பு' என்று ஒருமையாக மாற்றுகிறார்.

சபாபதி குலேந்திரனார் தம் கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு என்ற நூலில் 1844ஆம் ஆண்டு வெளிவந்த விவிலியமறைப் பதிப்பைப்பற்றி எழுதும் போது, 'இப்பிரதியில் வீரமாமுனிவர் தமிழ் நெடுங்கணக்கில் செய்த திருத்தங்கள் முழுவதுமாய், அங்கிகரிக்கப்படா விடினும், மிகுதியானவை அங்கீகரிக்கப்பட்டுள்ளமை' (பக்கம் 109) என்கிறார். இகர உயிரெழுத்து நெடில் வரிவடிவத்தைக் கால்டுவெல்லார் 1859ஆம் ஆண்டு தாம் வெளியிட்டுள்ள நூலில் ஏன் பயன்படுத்தியுள்ளார் என்பது வினவிற்குரியதே.

யோவான் 6:63

நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியுமாய்ச் ஜீவனுமாயிருக்கின்றன.

இயேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

நான் உங்களுக்குச் சொல்லுகிற வால்த்தைகள் ஆவியுமாய்ச் சீவனுமாயிருக்கிறது.

இரேனியுஸ் 'வார்த்தைகள்' என்பதை 'வசனங்கள்' என்று மாற்றியுள்ளார். 'ஆவியுமாய் சீவனுமாயிருக்குது' என்பதை 'ஆவியுமாய்ச் சீவனுமாயிருக்கின்றன' என்று பன்மை முடிவு தந்து கால்டுவெல்லார் திருத்தியுள்ளார்.

ரோமர் 8:23

ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்கப்படுதலாகிய பத்தய சுவீகாரம் வருவதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.

இரேனியஸ் புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பு

ஆவியின் முதல் வரங்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீரத்தின் மீட்பாகிய புத்திர சவீகாரத்துக்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்.

இரேனியஸ் 'சரீரத்தின் மீட்பாகிய புத்திர சுவீகாரம்' என்பதை கால்டுவெல்லார் 'சரீர மீட்சுப்படுதலாகிய புத்திர சுவிகாரம்' என்று திருத்துவன் வழியே 'ஒட்டுமொத்த மீட்பு' என்கின்ற விவிலியமறைக் கருத்து மறைந்து போகாமலிருக்க உதவுகிறார். இல்லையென்றால் 'உடல்' என்பது தனித்து மீட்கப்பெற வேண்டும் என்பதுபோன்று பொருள் மயக்கம் ஏற்பட இடமுண்டு. ரோமர் என்று இம்மயக்கத்தின் பெயர் அச்சாகியுள்ளது.

மத்தேயு 11:28

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்து கொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேன்.

இரேனியஸ் புதிய எற்பாட்டு மொழிபெயர்ப்பு

பிரயாசப்பட்டுப் பாருஞ் சுமந்தவர்களாகிய நீங்களெல்லாரும் என்ணண்டைக்கு வாருங்கள். நான் உங்களை மூசிப்பாற்றுவேன்.

இரேனியஸ் 'பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள்' என்று இறந்தகாலத்தில் சுட்டுவதைக் கால்டுவெல்லார் 'பாரஞ்சுமந்து கொள்ளுகிறவர்களாகிய' என்று நிகழ்காலத்தில் மாற்றுகிறார். 'மூசிப்பாற்றுவேன்' என்பதை 'ஆறுதல் செய்வேன்' என்று கால்டுவெல்லார் மாற்றுகிறார்.

நிறைவாக அறிந்து கொள்வது

கால்டுவெல்லார் தம் 'நற்கருணைத்தியான மாலை' நூலில் விவிலியமறைக்கான எந்தத் தமிழ் மொழிபெயர்ப்பை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளார் என்பதைப் பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்தது. 1844ஆம் ஆண்டு வெளிவந்த மறுபதிப்பான பப்ரீசியஸ் பழைய எற்பாட்டையும், இரேனியஸ் புதிய எற்பாட்டையும் கொண்ட விவிலியமறை மொழிபெயர்ப்பை அப்படியே பயன்படுத்தாமல் தேவையான திருத்தங்கள் செய்து பயன்படுத்தியுள்ளார் என்று துணியலாம். கால்டுவெல்லார், பீற்றர் பெர்சிவல் ஐயரின் தலைமையின் கீழ் வெளிவந்த மொழிபெயர்ப்பையும் பயன்படுத்தியிருக்க முடியாது. ஏனெனில், 'இருசாராரும் கடவுளின் இடுகுறிப்பெயரை மொழிபெயர்ப்பதில்லையென ஏற்றுக்கொண்டார்' என்று சபாபதி குலேந்திரனார் தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பு வரலாறு (பக்கம் 115) என்ற தம் நூலில் குறிப்பிடுகிறார். இவர் குறிப்பிடும் இரு சாரார் கொழும்பு வேதாகமச் சங்கத்தாரும், சென்னை வேதாகமச் சங்கத்தாருமே இந்த நூலாசிரியர் 'யாழ்ப்பாணத் திருப்புதலைக் கண்ட ஆர். கால்டுவெல் சாலிஜன்ட் ஐயர்மார் அதை மிக மெச்சிப் பேசினர்' (பக்கம் 131) என்கிறார். இக்கட்டுரையில் எடுத்தாண்டிருக்கும் விவிலியமறை மொழிபெயர்ப்பு பெர்சிவெல்லுடையதாயின் கால்டுவெல்லார் மெச்சிப்பேசியிருக்க முடியாது என்பது தெரிகிறது. மேலும் தெளிவுகளுக்கு மூலமொழியுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நற்பயன் நல்கும். மட்டுமன்று கடவுளின் இடுகுறிப்பெயரைக் கால்டுவெல் பயன்படுத்தியிருப்பதும் இவர் பெர்சிவெல்லாரின் திருத்தத்தைப் பயன்படுத்தியிருக்கமாட்டார் என்பதைக் காட்டுகிறது. தமக்குமுன் 1844ஆம் ஆண்டு பதிக்கப்பெற்ற விவிலியமறையை வைத்துக்கொண்டு தேவையான திருத்தங்களைச் செய்து பயன்படுத்தியுள்ளார் என்று நிறைவாகக் கூறலாம்.

துணைநின்ற நூல்கள்

1. நற்கருணைத் தியானமாலை, இராபர்ட் கால்டுவெல், ஜ.எஸ்.பி.சி.கே.வேப்பேரி, சென்னை, 1871.
2. திருமறையின் தமிழ்மொழிபெயர்ப்பு பப்ரீசியஸ், இரேனியஸ், அமெரிக்கன் மிஷன் அச்சகம், சென்னை,1844
3. கிறிஸ்தவ தமிழ் வேதாகமத்தின் வரலாறு, சபாபதி குலேந்திரன், இந்திய வேதாகமச் சங்கம், பெங்களூர், 1967.



38. கால்டுவெல் வகுத்த 'தமிழ் இலக்கிய வரலாறு'

முனைவர் ப. டேவிட் பிரபாகர்
இணைப் பேராசிரியர் - தமிழ்
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, கலைகள், சமயம், வழிபாடு தொடர்பாக, கால்டுவெல் நிகழ்த்திய திராவிடவியல் ஆய்வுகளைப் புலமைச் செயல்பாடாக மட்டும் நோக்க முடியாது. அவற்றைத் தென்னிந்திய மக்களின் மறைக்கப்பட்ட பெருமைகளையும் தனித்தன்மைகளையும் உலகுக்கு உணர்த்தும் சமூதாய அக்கறை கொண்டதாகவும் நோக்க வேண்டும்.

'இந்தியவியல்'என்றாலே'சமஸ்கிருதவியல்'என்ற மேனாட்டாரின் எண்ணத்தைக் கால்டுவெல்லின் பன்முக ஆய்வுகள் தகர்த்தெறிந்தன. அவர் மேற்கொண்ட மொழி ஒப்பியல், சமய ஆய்வு, வரலாற்று ஆய்வு, கல்வெட்டு ஆய்வு, அகழ்வாய்வு ஆகியன தனித்தன்மை வாய்ந்த தமிழ் - திராவிடப் பாரம்பரியத்தை எடுத்துரைப்பதாக அமைந்தன. இந்த நோக்கில்தான் திராவிடமொழி இலக்கியங்கள் குறித்த கால்டுவெல்லின் பார்வையை நாம் அணுக வேண்டியுள்ளது.

கால்டுவெல் தம் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண நூலின் முன்னுரைப் பகுதியில், 'திராவிட இலக்கியங்களின் தொன்மை'எனும் தலைப்பில் தெலுங்கு, கன்னட, மலையாள, தமிழ் மொழி இலக்கியங்கள் பற்றி விவரித்துள்ளார். தமிழ் இலக்கியங்கள் குறித்தும் அவற்றின் காலம் குறித்தும் 29 பக்கங்களில் (1875:130-158) விரிவான ஆய்வினைக் கால்டுவெல் நிகழ்த்தியுள்ளார். தமிழ் இலக்கியங்களைக் காலமுறையில் அமைந்த ஆறு வட்டங்களாக (Cycle) அவர் பகுத்துள்ளார். மேலும் 'சமகால படைப்பாளர்கள்'எனும் ஏழாவது பகுப்பையும் கால்டுவெல் அமைத்துள்ளார்.

தம் காலத்தில் கிடைத்த மிகக் குறைந்த அளவிலான தமிழ் இலக்கியத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் இலக்கியப்

பரப்பையும் போக்கையும் கால்டுவெல் பகுத்துள்ளார். திருக்குறள் உள்ளிட்ட பல்வேறு தமிழ் இலக்கியங்களின் காலத்தை இன்றைய ஏற்புக்குப் பிந்தையதாக வரையறுக்க முற்படும் கால்டுவெல் ஆய்வுகள் மறுஆய்வுக்கு உரியவை என்றாலும், காலமுறையில் பகுக்கப்பெற்ற தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான தொடக்கத்தை அவர் வழங்கியுள்ளதை ஏற்க வேண்டியுள்ளது. மேலும், திராவிட மொழிகளைப் போன்றே, திராவிட இலக்கியங்களும் சமஸ்கிருதம் தழுவாத தனித்த உயர் மரபைக் கொண்டவை என்பதை நிலைநாட்ட முற்படும் அவர்தம் உள்ளக்கிடக்கையையும் அறிய இயலும்.

தமிழ் இலக்கிய வரலாற்று முயற்சிகள்

காலந்தோறும் தமிழில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இலக்கியத் தொகுப்பாக்கங்கள் ஒரு வகையில் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கான முயற்சிகளாகச் சுட்டத்தக்கவை. பாட்டும் தொகையும், பெரு-சிறு காப்பியப் பகுப்பும், திருமுறை, நாலாயிரத் தொகுப்பும் தமிழில் நிகழ்ந்த முன்னோடி இலக்கியத் தொகுப்பாக்கங்கள். இத்தகைய இலக்கியத் தொகுப்புகளைத் தனித்தனியாக எடுத்துக்கொண்டாலும் அவை காலமுறையை அடியொற்றி அமையாமை எளிதில் புலனாகும். காலத்தால் முற்பட்ட காரைக்கால் அம்மையாரின் பாடல்கள், முதல் திருமுறையாக ஏற்கப்படாத நிலையையும், சம்பந்தருக்கு முற்பட்டவரான நாவுக்கரசர் பாடல்கள் 4,5,6ஆம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளதையும் கூ.வேங்கடராமன் (2004:27,28) எடுத்துக்காட்டுகிறார். நாதமுனிகளின் நாலாயிரத்திலும் காலவரிசை பின்பற்றப்படவில்லை என்பதையும் அவர் சுட்டியுள்ளார்.

தரங்கையில் வாழ்ந்த டேனிஷ் அருள்தொண்டர் சீகன்பால்கு தமது '*Bibliotheca Malabarica*' (1708) எனும் நூலில் 119 தமிழ் நூல்களை அவற்றின் பொருளமைதி, இலக்கிய வடிவம் பற்றிய குறிப்புகளுடன் தந்துள்ளார். இது தமிழ்நாட்டவர்களுக்காக எழுதப்பட்டதன்று. 17ஆம் நூற்றாண்டு தொடங்கி, தமிழ்ப் புலவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சிலவும் தமிழ் இலக்கிய வரலாற்றின் மூலங்களாகக் கொள்ளத்தக்கவை. இவ்வகையில், பெயர் அறியப்படாத புலவர் இயற்றிய 'தமிழ் நாவலர் சரிதை'குறிப்பிடத்தக்கதாகும். புலவர்களின்வரலாற்றைக்காலமுறையில் சொல்ல முற்படும் செய்யுளில் அமைந்த இந்நூலில் சங்ககாலம் தொடங்கி அந்தகக்கவி வீரராகவ முதலியார் (கி.பி.16ஆம் நூற்றாண்டு) முடியவுள்ள புலவர்களின் வரலாற்றை வெளிப்படுத்துகிறது. இந்நூல் கால்டுவெல் காலத்திற்குப் பின்னரே அச்சில் (1916) வெளிவந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய 'புலவர் புராணம்'தமிழ்ப் புலவர்களின் வாழ்வையும் படைப்புகளையும் 72 படலங்களில் 3005 பாடல்களில் விவரிக்கிறது.

சைமன் காசி செட்டியின் 'Tamil Plutarch' தமிழ்ப்புலவர்களை அகர வரிசையில், அவர்தம் வாழ்வு, படைப்பு பற்றிய செய்திகளோடு வழங்குகிறது. இந்நூலின் முதல்பதிப்பு 1859இல் வெளிவந்துள்ளது.

இதுபோன்றே ஜே.ஆர். அர்னால்டு பதிப்பில் 1886இல் வெளிவந்த பாழ்ப்பாணம் அ. சதாசிவம் பிள்ளையின் 'பாவலர் சரித்திர தீபகம்'214 புலவர்கள் பற்றிய செய்திகளை அகர வரிசையில் வழங்கியுள்ளது. யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலரின் 'திராவிடப் பிரகாசிகை' (1899) வீராசாமி செட்டியாரால் தொகுக்கப்பட்ட 'வினோதரசமஞ்சரி' (1860), சுன்னாகம் குமாரசாமி புலவரின் 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' (1916) ஆகியன இவ்வகையில் சுட்டத்தக்கவை.

கால்டுவெல்லுக்கு முன்னரும், அவர் காலத்துக்கு சற்று பிற்பட்ட காலத்திலும் மேற்கொள்ளப்பட்ட இலக்கியத் தொகுப்பாக்கங்களும், புலவர் வரலாறுகளும் தமிழ் இலக்கிய பரப்பை கருத்தில்கொண்டு காரணகாரிய முறையில் அவற்றைக் கால வரிசையில் வகுத்துக் காட்டியதற்கான சான்றுகள் இல்லை. கால்டுவெல் தமக்குக் கிடைத்த தமிழ் இலக்கியத் தரவு மூலங்கள் முழுமையையும் கருத்தில் கொண்டு, அவற்றைக் காலமுறையில் அமைந்த ஏழு பகுதிகளாகப் (வட்டங்களாக) பகுத்து அவற்றுக்குப் பெயரிட்டுள்ளார்.

சி.வை.தாமோதரம் பிள்ளை (வீரசோழிய பதிப்பின் முன்னுரை - 1881) வி.கோ. சூரியநாராயண சாஸ்திரி, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் 'A Primer of Tamil Literature' (1904) போன்றோர் படைப்புகளில்தான் முதல்முறையாகக் காலமுறையில் அமைந்த இலக்கியக் காலப்பகுதிகளைப் பார்க்கிறோம். இவர்களைத் தொடர்ந்து எம்.சீனிவாச ஐயங்கார் (1914) கே.எஸ். சீனிவாசப்பிள்ளை (1922) மேற்கொண்ட முயற்சிகளும் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை. எம். எஸ். பூர்ணலிங்கம் பகுப்பில் கால்டுவெல் பகுப்பின் சாயல் இருப்பதையும் காணமுடியும்.

கால்டுவெல்லின் இலக்கிய வரலாற்றுப் பகுப்பு

தமிழ் இலக்கியம் குறித்த கால்டுவெல் ஆய்வுகள் அவர்தம் நோக்கைப் புலப்படுத்துகின்றன. அவை:

அ. தமிழ் இலக்கியத்தின் தொன்மையை, தனித்தன்மையை உணர்த்துவது.

ஆ. தமிழ் இலக்கியப் பரப்பைக் காலமுறையில் பகுத்துப் பெயரிடுவது.

இ. தமிழ் இலக்கியங்களின் சிறப்பைப் பற்றிக் குறிப்பிடுவதோடு, தற்காலத்தில் அது நன்கு வளர எதிர்பார்ப்பது.

கால்டுவெல் பின்வரும் காலப்பகுப்பைத் தம் நூலில் வழங்கியுள்ளார் (1875:130-158). அவை:

1. *சமண வட்டம் அல்லது மதுரைச் சங்க வட்டம்*
2. *தமிழ் இராமாயண வட்டம்*
3. *சைவ எழுச்சி வட்டம்*
4. *வைணவ வட்டம்*
5. *இலக்கிய எழுச்சி வட்டம்*
6. *எதிர் பார்ப்பனிய வட்டம்*
7. *இக்காலப் படைப்பாளர்கள்*

கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்த 1875ஆம் ஆண்டு வரையில் சங்க இலக்கியங்கள் பதிப்பிக்கப்படவில்லை. 1887இல் கலித்தொகை தொடங்கி, சங்கப் பனுவல்கள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. அதனால் சங்க இலக்கியம் எனும் பகுப்பை அவர் அமைக்கவில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில் சமண வட்டத்தையே முதல் காலப் பகுதியாக கால்டுவெல் குறிப்பிடுகிறார். ஆயினும் சமண வட்டத்திற்கு முன்பாக அகத்தியர், தொல்காப்பியம் பற்றிய செய்திகளை மூன்று பக்கங்களில் கால்டுவெல் விரிவாக விவரித்துள்ளார்.

தமிழ் இலக்கணத்திற்கு மட்டுமின்றி, வானியல், மருத்துவம், வேதியியல் முதலிய பல்வேறு துறைகளுக்கும் முன்னோடியாக அகத்தியர் சுட்டப்படுவதைக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். மேலும், அகத்தியரின் பெயரால் வழங்கப்படும் நூல்கள் பலவும் பழங்காலத்ததாக இருக்க முடியாது எனக் குறிப்பிடும் கால்டுவெல் அவர் பாடியதாகக் கருதப்படும் 'ஞான நூறு' நூலில் கிறித்தவத்தின் தாக்கம் இருப்பதையும் சுட்டியுள்ளார். அகத்தியர் என்பவர் உண்மையான மாந்தரா? அல்லது ஒரு காலத்தின் தொன்மமா? என்ற ஐயப்பாட்டையும் அவர் எழுப்பியுள்ளார்.

தொல்காப்பியரைச் சைவராகக் கருதும் கால்டுவெல், இந்த சைவம் வேதாந்த அல்லது சைவ சித்தாந்தத்தைச் சார்ந்தல்ல எனவும் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு வகையான பாக்களுக்குத் தொல்காப்பியர் விரிவான விதிகளை உருவாக்கி வழங்கியுள்ளார் எனக் குறிப்பிடும் கால்டுவெல், தொல்காப்பியத்துக்கு எத்தகைய பழமையை வழங்கினாலும், அதற்கு முன்னர் பல நூற்றாண்டுகள் தமிழில் இலக்கண, இலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும் என்பதையும் உறுதியாகக் கூறுகிறார். இதற்குச் சான்றாக, 'என்பனார் புலவர்', 'என்பர் ஆகிய தொல்காப்பியச் சொல்லாட்சிகளை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

'Whatever antiquity maybe attributed to the Tholkappiyam, it must have been preceded by many centuries of literary culture. It lays down rules for different kinds of poetical composition, which must have been decided from examples furnished by the best authors whose works were then in existence. A rule is simply an observed custom. Grammars, as well as poems, had preceded the Tholkappiyam, for it continually cites rules which had been laid down by proceeded grammarians. Hence the formula which so frequently recurs, 'enmanar pular'. (1875:131-132)

சமண வட்டம் அல்லது மதுரைச் சங்க வட்டம்

தமிழில் குறள் சிந்தாமணி எழுந்த காலம் தமிழ் இலக்கியம் தமது உச்சத்தை எட்டிய காலம் என்பது கால்டுவெல் கருத்து. ஆயினும், இவற்றின் காலத்தை வரையறுப்பதற்கு நம்பிக்கைக்குரிய சான்றுகள் இல்லை என்பதையும் கால்டுவெல் சுட்டுகிறார். பாண்டிநாட்டுச் சமணர்களிடம் எதிர் பார்பனிய உணர்வு தொழிற்பட்டதையும் அவர் குறிப்பிடுகிறார். மேலும், திகம்பரர்களையும் சில பௌத்தர்களையும் குறிப்பிடும் யுவாங்சுவாங் (கி.பி. 39-40) பிராமணர்கள் பற்றிக் குறிப்பிடாததை, பர்னல் (Dr.Burnell) ஆய்வினை மேற்கோள் காட்டி கால்டுவெல் சுட்டியுள்ளார். (1875:133) சமணர்களின் காலத்தை 8 (அ) 9ஆம் நூற்றாண்டு தொடங்கி 12 (அ) 13 நூற்றாண்டுகளுக்குரியதாக கால்டுவெல் கருதுகிறார். இந்தக் காலப்பகுதிக்குரிய இலக்கியங்கள் இம்மண்ணுக்குரியவை சமஸ்கிருதச் சாயல் கொண்டவையல்ல எனக் குறிப்பிடும் கால்டுவெல், குறிப்பாக தமிழ் அற இலக்கியங்கள் தனித்தன்மை வாய்ந்தவை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சுந்தரபாண்டியன் (கூன் பாண்டியன்) காலத்தில் சமண சமயம் வெளியேற்றப்பட்டதைக் குறிப்பிடும் கால்டுவெல், இதற்கு விதிவிலக்காக மண்டல புருஷரால் பின்னர் இயற்றப்பட்ட சூடாமணி நிகண்டைக் குறிப்பிடுகிறார்.

திருக்குறளின் அமைப்பு, உள்ளடக்கம் பற்றிக் குறிப்பிடும் கால்டுவெல் அதனைச் சிறந்த பழமையான தமிழ் இலக்கியமாகப் புகழ்ந்துரைத்துள்ளார். எந்த வகையிலும் திருக்குறளை 10ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தையதாகக் கருதமுடியாது என்பது கால்டுவெல் கருத்தாகும். இதற்குக் கால்டுவெல் காரணங்களையும் தந்துள்ளார்.

அ. குறளில் சங்கரரின் தத்துவம் இடம்பெறவில்லை, குறள் அதனை மறுப்பதோடு, சாங்கிய தத்துவம் பேசுகிறது. எனவே 9ஆம் நூற்றாண்டினரான சங்கரரின் தத்துவம் தென்னகத்தில் பரவுவதற்கு முன்னர் இது எழுதப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. ஆகம அல்லது சைவ சித்தாந்த சாயல் வள்ளுவத்தில் இல்லை. இவற்றின் காலம் 11ஆம் நூற்றாண்டு.

இ. திருக்குறள் 11 (அ) 12ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல்கள் பலவற்றில் மேற்கோளாக ஆளப்பட்டுள்ளது.

சைவ வைணவ மரபுகளுக்கு முந்தையதாகத் திருக்குறளை முன்னிறுத்தும் கால்டுவெல் நோக்கை இது தெளிவாகக் காட்டுகிறது. குறளைச் சங்கம் முதலில் ஏற்க மறுத்த கதை, நக்கீரர் காலம், திருவள்ளுவரின் உடன்பிறப்பாக கூறப்படும் ஔவையாரின் காலம், குலோத்துங்க சோழன் காலம், வள்ளுவரின் குலம், பிறப்புக் கதைகள் போன்ற பலவற்றையும் குறளின் காலம் குறித்த விவாதத்தில் கால்டுவெல் எடுத்தாண்டுள்ளார்.

நாலடியாரின் சிறப்புகளைப் பேசும் கால்டுவெல், அது ஒருவரால் இயற்றப்பட்டதல்ல என்று தமிழ் அறிஞர்களால் கருதப்படும் நிலையையும் பதிவு செய்துள்ளார். சீவக சிந்தாமணியை மாதிரியாக கொண்டு வீரமாமுனிவரின் தேம்பாவணி இயற்றப்பட்டுதைக் கால்டுவெல் குறிப்பிட்டு, பெஸ்கியின் கூற்றை மேற்கோள்காட்டி 'சிந்தாமணி மிகச் சிறந்த தமிழ்க்காப்பியம், கம்பனை விட மேலானது' எனக் குறிப்பிடுகிறார்.

மேலும், இக்காலப் பகுதியில் எழுந்த திவாகரம், பிங்கலத்தை, சூடாமணி நிகண்டு ஆகியவற்றையும் கால்டுவெல் சுட்டியுள்ளார். பவணந்தியின் நன்னூலை அதிகாரப்பூர்வமான தரம் வாய்ந்த இலக்கண நூல் என அவர் குறிப்பிடுகிறார். தொல்காப்பியரைச் சமணர் எனக் கால்டுவெல் கருதியதால், சமணர்களால் எழுதப்பட்ட முதல் இலக்கண நூல் நன்னூல் எனக் குறிப்பிட்டுள்ளார் (1875:137).

தமிழ் இராமாயண வட்டம்

தமிழ் இராமாயணம் வால்மிகியின் மொழிபெயர்ப்பு அன்று; தழுவல் எனக் குறிப்பிடும் கால்டுவெல் அதன் இலக்கிய நயத்தைப் போற்றியுள்ளார். தமிழ்ச் செவிகளுக்கு அது நல்கும் ஓசை இன்பத்தையும் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார். சிந்தாமணி மட்டுமே இராமாயணத்துக்கு இணையானது எனவும் அவர் குறிப்பிடுகிறார். கம்பர் இயற்றியதாக கூறப்படும் 'ஏர் எழுபது' பற்றியும் கால்டுவெல் சுட்டியுள்ளார். புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவையார் முதலிய சமகாலப் புலவர்களையும் அவர் சுட்டுகிறார்.

இராமாயணத்திலுள்ள அகச் சான்றுகள், சமகாலப் புலவர்களின் வரலாறுகள், கல்வெட்டுகள், இரசேந்திரன் மற்றும் குலோத்துங்களின் காலம் பற்றிய செய்திகளை இணைத்து மிக விரிவான கால ஆராய்ச்சியினைக் கால்டுவெல் நிகழ்த்தியுள்ளார் (1875: 139-141)

'சடகோபர் அந்தாதியை முன்வைத்து கம்பர் இராமநுசருக்குப் பிந்தையவர் எனக் கருத வேண்டியுள்ளதைக் குறிப்பிடும் கால்டுவெல், சடகோபர் அந்தாதி உண்மையில் கம்பரால் எழுதப்பட்டதா என்ற ஐயப்பாட்டையும் எழுப்பியுள்ளார். கம்பரின் சமகாலத்துப் புலவர்களின் கதைகள், படைப்புகளை கால்டுவெல் ஆய்வுக்கு உட்படுத்துகிறார். வள்ளுவரின் உடன்பிறப்பாக கூறப்படும் ஔவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்கள், மூதுரையில் காணப்படும் 'வான்கோழி' பற்றிய குறிப்பு ஆகியவற்றையும் தம் ஆய்விற்கு கால்டுவெல் உட்படுத்தியுள்ளார். கால்டுவெல்லின் கால வரையறை எதுவாக இருப்பினும் அதற்கான சான்றாதாரங்களை முன்வைத்தல், விவாதித்தல் ஆகியவற்றில் கால்டுவெல்லின் பார்வையும் பங்களிப்பும் முக்கியமானதாக அமைகின்றன.

சைவ எழுச்சி வட்டம்

சைவ பக்திப் பனுவல்கள் தொகுக்கப் பெற்ற காலமாக இதனைக் கால்டுவெல் காணுகிறார். மாணிக்கவாசகர், சம்பந்தர் படைப்புகள் குறித்தும், தலபுராணங்கள் குறித்தும், சேக்கிழாரின் பெரியபுராணம் குறித்தும், திருவிளையாடல் புராணம் குறித்தும் கால்டுவெல் விவரித்துள்ளார். குறிப்பாக, சுந்தரபாண்டியன் குறித்த கால ஆராய்ச்சியை மிக விரிவாக்க் கால்டுவெல் நிகழ்த்தியுள்ளார். சுந்தரபாண்டியன் மதமாற்றம், எண்ணாயிரம் சமணர்களை கழுவில் ஏற்றியது, மார்கோ போலேவின் தூதர் வருகை, அது குறித்த இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்கள், ஐரோப்பிய வரலாற்று அறிஞர்களின் கருத்துகள் ஆகியவற்றின் அடிப்படையில் சுந்தரபாண்டியன் காலத்தை நிறுவ முற்படுகிறார் கால்டுவெல். ஒப்பிலக்கண நூலின் பின்னிணைப்பிலும் சுந்தரபாண்டியன் காலம் பற்றிய தனிக்கட்டுரை இடம் பெற்றுள்ளது.

வைண வட்டம்

நாலாயிர திவ்ய பிரபந்தம் அல்லது பெரிய பிரபந்தம் சமய உணர்விலும் இலக்கியத் தரத்திலும் சைவப் பனுவல்களுக்கு குறைந்தவை அல்ல. திருவாசகம், தேவாரங்கள் 'தமிழ் வேதம்' என அழைக்கப்பட்டதையும் போன்றே நாலாயிர திவ்ய பிரபந்தமும் வைணவர்களால் கருதப்படுவதைக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இராமாநுசரின் காலத்தை 12ஆம் நூற்றாண்டாக தோராயமாக கணித்துள்ளார் கால்டுவெல்.

இலக்கிய மறுமலர்ச்சி வட்டம்

கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்ட இலக்கிய மறுமலர்ச்சியாக இக்காலத்தைக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இக்காலப் பகுதியில் அதிவீரராம பாண்டியனின் நைடதம் (நளன்

கதை) காசி காண்டம், தமிழில் செய்யப்பட்ட சமஸ்கிருத புராணங்களான லிங்க புராணம், கூர்ம புராணம் பற்றிக் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

மேலும், வெற்றி வேற்கை, வில்லிபுத்தூராரின் 'மகாபாரதம்' அகம் அல்லது சைவசித்தாந்த மரபிற்குரிய சிவஞானபோதம், சிவஞான சித்தி பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணற்ற மருத்துவ நூல்கள் காமம் சான்ற சிற்றின்ப நூல்களை இக்காலத்திற்குரியவையாக அவர் சுட்டியுள்ளார். வல்லப தேவன் எனும் இயற்பெயர் கொண்ட அதிவீரராமன் பற்றியும் அவனது காலம் பற்றியும் விரிவான ஆய்வையும் கால்டுவெல் நிகழ்த்தியுள்ளார்.

எதிர் பார்பனிய வட்டம்

சித்தர் சிந்தனை மரபில் எழுந்த பாடல்களை இந்தக் காலப்பகுதியில் கால்டுவெல் அடக்குகிறார். உள்ளடக்கத்தாலும் நடையாலும் இப்பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தவை எனவும் இப்பாடல்கள் 'சிவ' எனும் கடவுள் பெயரைக் கொண்டிருப்பினும் சைவ சித்தாந்தத்திற்கு மாறுபட்ட போக்கைக் கொண்டிருப்பதையும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இவற்றை நவீன தன்மை மற்றும் பேச்சு வழக்கை அடியொற்றி சாதாரண மக்களை நோக்கி எழுதப்பட்டவை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகத்தியர், கபிலர், கௌதமர், திருமூலர் போன்ற பெயர்களில் சித்தர் பாடல்கள் அமைந்திருப்பதையும் கால்டுவெல் சுட்டியுள்ளார். இப்பாடல்களில் 'சத்குரு' என வரும் இடங்கள் கிறிஸ்துவை உணர்த்தும் தன்மையையும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். கொங்கணர், பத்ரகிரியார், சிவவாக்கியர் பாடல்களை எடுத்துக்காட்டும் கால்டுவெல், சில மொழிபெயர்ப்புகளையும் சான்றுகளாகத் தந்துள்ளார். இவை ஓரிறை கொள்கை, மறுஜென்ம மறுப்பு, சாத்திர எதிர்ப்பு ஆகியவற்றுக்குச் சான்றுகளாக அமைவன.

சமகாலப் படைப்பாளர்கள்

18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுப் படைப்பாளர்களை இக்காலப் பகுதியில் கால்டுவெல் அடக்குகிறார். இக்காலப் பகுதிக்கு கால்டுவெல் 'வட்டம்' என்ற பெயரைத் தவிர்த்துள்ளார்.

வீர சைவ மரபில் அமைந்து, கன்னட மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட 'பிரபுலிங்க லீலை' சிறிய அறநூலான 'நீதிநெறி விளக்கம்' ஆகியவற்றை இக்காலப் பகுதிக்குரியதாகக் கால்டுவெல் சுட்டுகிறார். தாயுமானவரையும் (உள்நாட்டவரி) பெஸ்கி

(வெளிநாட்டவர்) ஆகிய இருவரையும் சமகாலத்தின் பெரும் புலவர்கள் என அவர் குறிப்பிடுகிறார். பெஸ்கியின் உரைநடை, அகராதி, இலக்கண நூல்களையும் குறிப்பிட கால்டுவெல் தவறவில்லை. அச்சு ஊடக வளர்ச்சியால் தமிழில் ஏற்பட்டுவரும் இலக்கிய வளர்ச்சியையும் கால்டுவெல் விவரித்துள்ளார். இக்காலப் பகுதியில் எழுந்த நாடகங்கள் பக்திப் பாசுரங்கள், தாண்டவராய முதலியாரின் 'பஞ்சதந்திர கதை' ஆகியவற்றையும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

திராவிட மொழிக் கவிதைகள் பற்றிய மதிப்பீட்டையும் இறுதிப் பகுதியில் கால்டுவெல் முன்வைத்துள்ளார். திராவிடக் கவிதைகளில் 'ஒலிநயம்' தனித்தன்மை வாய்ந்தது எனக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். 'ஏரைத்தேடில் கீரை தேடு' எனும் ஏனவை பாடலை ஒலிநயத்திற்கு எடுத்துக்காட்டாக அவர் காட்டியுள்ளார். கடந்த இருநூறு ஆண்டுகளாகத் திராவிட இலக்கியங்கள் உண்மையான வளர்ச்சியைப் பெறவில்லை எனக் கருதும் கால்டுவெல், நவீன கல்வி முறையும், கல்வி வாய்ப்பும் எதிர்பார்க்கும் வளர்ச்சியை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

முடிவுரை

தமிழுக்குத் தனித்தியங்கும் ஆற்றல் இல்லை; ஐந்தெழுத்தால் ஓர் பாடையும் உண்டென்று அறையவும் நாணுவர்' எனத் தமிழ் ஏளனம் செய்யப்பட்டது. 'இனி இப்பாலேய் தமிழின் தொன்மையை உணராதவர்களில் வடமொழி வலவர் சிலர், 'என்ன ஐயா, தமிழ், தமிழ் எனப் பெரு மலைவு செய்யா நின்றீர்? உங்கட்கு வடமொழியைத் தழுவாத இலக்கியங்கள் உண்டா? பார காவியங்கள் உண்டா? தர்க்கம், வேதாந்தம் முதலான சாத்திரங்கள் உண்டா? உங்கள் தமிழைக் கட்டி வையுங்கள். எல்லாம் நாங்கள் சப்பி உமிழ்ந்த சக்கை தானே' எனக் கூறித் தமிழை ஏளனப்படுத்தும் வடமொழி வலவர் கூற்றை செல்வகேசவராய முதலியார் எடுத்துக்காட்டியுள்ளார் (கா. சிவத்தம்பி 2000 150) மற்றொரு புறத்தில், தமிழ் இலக்கியத்தில் தொன்மையை வைதிக மரபின், சைவ மரபின் அங்கமாக ஆக்குவதற்கான ஐதீகவாக்கங்களும் தமிழகத்தில் செயல்பட்டு வந்துள்ளன.

இந்தச் சூழலில் தான், வைதீக நெறிக்கு மாறுபட்ட சமஸ்கிருதச் சார்பற்ற தமிழ் இலக்கியத் தொன்மையை எடுத்துரைக்க கால்டுவெல் முற்பட்டுள்ளார். தமிழ் மொழியைப் போலவே தமிழ் இலக்கியங்களும், தமிழ்ப் பண்பாடும், வரலாறும் வடமொழிச் சார்பற்ற தனித்தன்மை வாய்ந்த போக்கைக் கொண்டிருப்பதை அவர் உணர்த்த முற்பட்டுள்ளார். தமக்குக் கிடைத்த இலக்கியத் தரவுகளைத் தொகுத்துக் கொண்டு, அவற்றுக்கான காலப்பகுப்பு முறையினை அவர் மேற்கொண்டார்.

இதற்கு, நூலின் அகச்சான்றுகள், புலவர்கள் பற்றிய வரலாறுகள், கல்வெட்டுகள், அகழ்வாய்வுகள், வரலாற்று ஆய்வுகள், வெளிநாட்டுப் பயணியின் குறிப்புகள், சமகாலப் புலவர்களின் வரலாறுகள், சமகால மன்னர்களில் வரலாறுகள் போன்ற சான்றாதாரங்கள் பலவற்றைத் தேடித் தொகுத்து அவற்றை விரிவான ஆய்வுக்கு உட்படுத்தி தமிழ் இலக்கியக் காலப்பகுதியை இன்றைய சூழலில் கால்டுவெல் வரையறுத்துள்ளார். தமிழ் இலக்கியங்களுக்குக் கால்டுவெல் வகுத்தளித்துள்ள கால வரையறை முழுமையான ஏற்புக்கு உரியதன்று. ஆயினும், காலமுறையில் அமைந்த தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு அவர் முன்னோடியாக விளங்குவதை மறுப்பதற்கு இயலாது.

துணைநூல்கள்

கண்ணுசாமிப் பிள்ளை காழி. சிவ. கால்டுவெல் ஒப்பிலக்கணம்

அப்பாத்துரைப்பிள்ளைகா. (மொ.ஆ), (கிரீயர்சன்மொழியாராய்ச்சி குறிப்புகளுடன்), சாரதாபதிப்பகம், சென்னை, 2010

சிவத்தம்பி கா., தமிழில் இலக்கிய வரலாறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2000

தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2005.

பூரணச்சந்திரன் க., 'தமிழ் இலக்கிய வரலாறு உருவாக்கத்தின் பிரச்சினைகள்', 'சிறகு', தமிழ் வார(மின்) இதழ்),அக்டோபர், 2013

மாற்றுவெளி - 1 (கால்டுவெல் சிறப்பிதழ்) நவம்பர், 2008

வேங்கடராமன் கு. அறியப்படாத தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2004

Caldwell Robert Rt. Rev. A Comparative Grammar of the Dravidian or South Indian family of languages. (A complete and & unabridged second edition) Kavithaasaran, Chennai - 19, 2008

Caldwell Robert Rt. Rev., A Comparative grammar of the Dravidian or South Indian family of languages. University of Madras, Chennai - 5, 2008 Reprint III Edition.

Simon Casie Chitty, The Tamil Plutarch, Asian Educational Services, New Delhi, 1972 (2nd revised edition)

Vaiyapuripillai S., History of Tamil Language and Literature, NCBH, Chennai, 1988(2nd revised)

ꕥ ꕥ ꕥ

39. கால்டுவெல்லின் பார்வையில் தமிழ்ப் புலவர்கள்

(திருநெல்வேலி சரித்திரம் நூலை முன்வைத்து)

முனைவர் பா. இரவிக்குமார்
துணைப் பேராசிரியர்- தமிழியற்புலம்,
புதுவைப் பல்கலைக்கழகம்.

அயர்லாந்தில் 'கிளாடி' என்னும் ஆற்றின்கரையில் அமைந்த சிற்றூரில், 1814ஆம் ஆண்டு பிறந்து, 1891ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தன் இறுதி மூச்சை நிறுத்திக் கொண்ட ராபர்ட் கால்டுவெல்லை ஒரு மொழியியல் வல்லுநராகவும் அகழ்வாராய்ச்சி செய்தவராகவும் மட்டுமே அறிஞர்கள் அறிவர். ஆனால், இலக்கியங்கள் மீது மாறாத தாகம் கொண்ட கால்டுவெல், தமிழ் இலக்கிய வரலாறு முறையாக எழுதப்படாத காலத்திலேயே, தமிழ்ப் புலவர்களை நன்கு அறிந்திருந்தார். தன் எழுத்துகளில் பல்வேறு புலவர்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் தந்துள்ளார். அயல்நாட்டுத் தமிழ் அறிஞர்களான வீரமாமுனிவர் (பெஸ்கி), ட்ரூ போன்றவர்களைப் பற்றிக் குறிப்புகள் தந்துள்ளதுடன், வின்சுலோ, போப், பவர், ஆண்டர்சன் முதலானவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தார்.

தமிழ்ப் புலவர்கள்மீது எத்தகைய மதிப்பீட்டைக் கால்டுவெல் கொண்டிருந்தார் என்பதையும், வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் பெஸ்கியின் வரலாற்றை எவ்வாறு கட்டமைத்துள்ளார் என்பதையும் ஆராய்வதன் மூலம், கால்டுவெல்லை ஒரு மொழியியல் வல்லுநராக மட்டும் சுருக்கிவிட முடியாது என்ற முடிவை எய்த இயலும். அவ்வகையில், கால்டுவெல்லின் தமிழ்ப் புலவர்கள் பற்றிய குறிப்புகளை ஆராயும் வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

கால்டுவெல்லின் பார்வையில் தமிழ்ப் புலவர்கள்

'திருநெல்வேலி சரித்திரம்' என்னும் நூலின் இறுதிப் பகுதியில் பிற்சேர்க்கையாகக் கால்டுவெல் சில தமிழ்ப் புலவர்களின் பெயர்களையும், அவர்களைப் பற்றிய குறிப்புகளையும் தந்துள்ளார்.

'திருநெல்வேலி மாவட்டத்தினின்று தகுதி வாய்ந்த இலக்கியங்கள் பல புலவர்களால் இயற்றப்பட்டிருப்பினும், தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடம்பெறும் வகையில் நால்வர் விளங்குகின்றனர்'[1] என்று குறிப்பிடுகிறார் கால்டுவெல். இதில் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் பதம் நோக்கத்தக்கது. கால்டுவெல்லின் காலத்தில் தமிழ் இலக்கிய வரலாறு முறையாக எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. கால்டுவெல் ஒரு மொழியியல் அறிஞராக விளங்கினாலும், தமிழ் இலக்கியங்களையும், தமிழ்ப் புலவர்களையும் நன்கு அறிந்திருந்தார் என்றே கருதத் தோன்றுகிறது. இலக்கியத்தைப் படைத்த படைப்பாளன், அவனுடைய பின்னணி, காலச் சூழல் முதலியவற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் கால்டுவெல் அணுகியுள்ளார் என்று கருதுவதில் தவறில்லை. இலக்கியப் படைப்பாளர்கள், இலக்கியம் தோன்றிய காலம் முதலியவற்றைப் பற்றிக் கால்டுவெல் தவறான முடிவுகளுக்கு வந்துள்ளார் என்றுகூட ஒருவர் அவரை விமர்சனம் செய்யலாம். ஆனால், சரியோ, தவறோ, இலக்கியவாதிகளை அணுகுவதில் அவருக்கென்று தனித்த பார்வை இருந்தது என்றுதான் கருதத் தோன்றுகிறது.

கால்டுவெல்லின் பார்வையில் வள்ளுவர்

திருநெல்வேலி மாவட்ட நூலாசிரியர்கள் என்னும் தலைப்பில், தமிழ்ப் புலவர்கள் குறித்து எழுத வந்த கால்டுவெல், மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்ததையும், மூன்றாவது சங்கத்தில் திருவள்ளுவர் வாழ்ந்ததாகவும் கூறுவர் என்றும் குறிப்பிடுகிறார். 'நாலடியாரும் இங்கு வாழ்ந்ததாக ஒப்புக் கொண்டுள்ளனர்'[2] என்று எழுதுவதன் மூலம், 'நாலடியார்' என்னும் நூல் பெயரை, ஆசிரியரின் பெயராகத் தவறாகக் குறிப்பிடுகிறார். வள்ளுவரைப் பற்றி இவர் கூறும் ஒரு கருத்து குறிப்பிடத்தக்கது.

'வள்ளுவர் என்னும் பறைச்சாதியில் தோன்றிய திருவள்ளுவர் புலவர்களுள் இளவரசனாகத் திகழ்கிறார். இவர் பறையராக இருந்தாலும், சங்கப் பலகையில் இடம்பெற்றது வியப்புக்குரியதே. இக்கதையின் உண்மை ஒப்புக்கொள்ள முடியாததாக இருக்கின்றது'[3]

என்று எழுதும் கால்டுவெல், திருநெல்வேலி சரித்திரம் குறித்து எழுதும்போது, இச்சர்ச்சை தேவையற்றது என்பதையும் குறிப்பிடுகிறார். அகத்தியர் என்னும் பெயருடைய 'தென்மூனி' தமிழ் இலக்கணம், மருத்துவம், இரசவாதம் முதலியவற்றை எழுதினார் என்று குறிப்பிடும் கால்டுவெல், இதற்கு வரலாற்றுச் சான்றுகள் இல்லை என்பதைக் குறிப்பிடவும் தவறவில்லை.

கால்டுவெல்லின் பார்வையில் நம்மாழ்வார்

அடுத்ததாகக் கால்டுவெல் குறிப்பிடுவது நம்மாழ்வார் என்னும் ஆழ்வாரை. வைணவ இலக்கியத்தில் உள்ள 4,000 பாடல்களுள், 1000 பாடல்கள் திருநெல்வேலியைச் சார்ந்தவை என்ற குறிப்பைத் தரும் கால்டுவெல், நம்மாழ்வாரை இராமானுச ஆச்சாரியாரின் சீடர் என்றும், இவர்கள் பார்ப்பன ஆதரவாளர்கள் என்றும் குறிப்பிடுகிறார். நம்மாழ்வாரின் காலத்தைக் கால்டுவெல்லால் கணிக்க இயலவில்லை.

நம்மாழ்வாரின் பெயரால், திருநெல்வேலியில் 'ஆழ்வார் திருநகரி' என்னும் ஊர் உள்ளதையும், இதன் பழைய பெயர் 'குறுங்கை' அல்லது 'குறுங்காபுரி' என்பதையும் குறிப்பிடுகிறார். கல்வெட்டில் இதன் பெயர் 'தென்கரை' என்பதையும், 5,600 மக்கள் உள்ள நகரமாக இது திகழ்ந்ததையும், நம்மாழ்வாரின் இயற்பெயர் சடகோபர் என்பதையும் எழுதிச் செல்கிறார்.

இலக்கிய வரலாறு எழுதுவோர், ஒரு படைப்பாளனின் சாதிப் பின்னணி, ஊர், தந்தை பெயர், ஊரிலுள்ள மக்களின் எண்ணிக்கை முதலியவற்றை இவ்வளவு விரிவாகவும், துல்லியமாகவும் பெரும்பாலும் தருவதில்லை. கால்டுவெல் இத்தகைய தகவல்களை எதன் அடிப்படையில், எவ்வாறு திரட்டினார் என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை.

கால்டுவெல்லின் பார்வையில் வில்லிப்புத்தூரார்

நம்மாழ்வாரைப் போலவே கால்டுவெல் மகாபாரதத்தைத் தமிழில் பெயர்த்த வில்லிப்புத்தூராரைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறார். வில்லிப்புத்தூராரின் இயற்பெயர் சர்வபௌன அய்யங்கார். காப்பியம் புகழ்பெற்ற காரணத்தால், ஸ்ரீ, திரு என்னும் அடைகளை, ஊர் பெற்றதாகவும் குறிப்பிடுகிறார்.

'காவிய அழகில் வில்லிபாரதம் கம்பராமாயணத்தோடும், சிந்தாமணி, குறள் போன்றவற்றோடும் ஒப்புமையுடையது'[4] என்று கால்டுவெல் தரும் குறிப்பு வியக்கத்தக்கது. கால்டுவெல் கம்பராமாயணத்தின் காவிய அழகு குறித்து அறியாமல், இத்தகைய ஒப்புமைக் குறிப்புகளைத் தர இயலாது. ஸ்ரீவில்லிப்புத்தூராரின் காலத்தைக் கால்டுவெல்லால் துல்லியமாக அறிய இயலவில்லை யென்றாலும், அவருடைய காலத்தை நாயக்கர் ஆட்சி நிறைந்த காலமாக வரையறை செய்கிறார். வில்லிப்புத்தூர் என்பதற்கு வில்லுக்காரர்களின் புதிய ஊர் என்று பொருள் என்பதையும், ஆழ்வார் திருநகரிக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் திகழ்கிறது என்பதையும் குறிப்பிடும் கால்டுவெல், அந்த ஊரில் திருமலை நாயக்கருக்கு ஓர் அரண்மனை உண்டு என்பதையும் பதிவு செய்கிறார்.

அரசு ஆவணங்களையும் ஒப்பிட்டு, கால்டுவெல் சில தகவல்களைத் தருகிறார். அரசு ஆவணங்களில் ஸ்ரீவில்லிப்புத்தூர் 'நாச்சியார் கோயில்' என்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், 14,000 மக்கள் இந்த ஊரில் வாழ்ந்துள்ளனர் என்பதாக ஒரு குறிப்புண்டு என்கிறார்.

கால்டுவெல்லின் பார்வையில் பரிமேலழகர்

திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்தவராகக் கால்டுவெல்லால் குறிப்பிடப்படும் மற்றொருவர் பரிமேலழகர் ஆவார். திருக்குறளுக்கு உரை எழுதியதன்மூலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறந்ததொரு இடத்தைப் பெற்றுவிட்டார் என்று கால்டுவெல் பரிமேலழகரைக் குறிப்பிட்டுள்ளார்.

'இலக்கியங்களுள் திருக்குறள் சிறந்து விளங்குவது போன்று உரைகளுள் பரிமேலழகர் உரை சிறந்து விளங்குகின்றது எனத் தமிழ் மக்கள் கருதுகின்றனர்'[5]

என்று குறிப்பிடுவதன்மூலம், கால்டுவெல்லின் காலத்தில் பரிமேலழகருக்கு மக்களிடையே வரவேற்பு இருந்ததை உணர முடிகிறது. பிற புலவர்களைப் போலவே, பரிமேலழகரின் வகுப்பு என்னவாக இருக்கும் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார் கால்டுவெல். பரிமேலழகரைப் பற்றி அவர் தரும் பின்வரும் குறிப்பு சுவாரஸ்யமானது.

'இவரை ஒரு பிராமணராக வடக்குப் பகுதியில் குறிப்பிடுகின்றனர். சிலர் சாணார் அல்லாதவராக இருப்பினும் இவரைச் சாணராகக் கருதுகின்றனர். சிலர் இவரைப் பிராமணரும் அல்லர் சாணாரும் அல்லர் வெ:ளாளர் என்று கருதுகின்றனர்'[6]

என்று குறிப்பிடும் கால்டுவெல், பரிமேலழகரின் காலத்தையும் உறுதியாகக் கூறவில்லை.

கால்டுவெல்லின் பார்வையில் குமரகுருபரர்

'குமரகுருபரத் தம்பிரான்' எழுதிய நீதிநெறி விளக்கம் என்னும் நூல், திருநெல்வேலி மாவட்டத்தில், கால்டுவெல் வாழ்ந்த காலத்திற்கு முன்னால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலைத் திருக்குறளுக்கும், நாலடியாருக்கும் இணையாகக் கருதுகிறார் கால்டுவெல். 'தம்புரான்' என்பது சைவ மடத்தின் தலைநகர் என்பதைக் குறிப்பிட்டு, குமரகுருபரர் சைவ மடத்தின் தலைவரல்லர் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

நாயக்கர் காலத்தைச் சார்ந்த குமரகுருபரர் 'குமரகுருபர சுவாமிகள்' என்று அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்பட்டால், இவரது காலம் 1623-1659 எனக் குறிப்பிடலாம் என்று பதிவு செய்கிறார் கால்டுவெல்.

தாமிரபரணியின் வடகரையில் உள்ள ஸ்ரீவைகுண்டத்தைச் சேர்ந்தவர் குமரகுருபரர் என்பதையும், ஸ்ரீவைகுண்டத்தில் 7,000 மக்களுக்கு மேல் வாழ்கின்றனர் என்பதையும் குறிப்பிட்டுள்ளார் கால்டுவெல். கால்டுவெல்லின் எழுத்துகளைப் படிக்கும்போது, அவர் தமிழ் இலக்கிய வரலாற்றின் ஒரு பகுதியை அறிந்திருப்பார் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், திருநெல்வேலி சரித்திரத்தில் அவர் பதிவு செய்வது திருவள்ளுவர், அகத்தியர், நம்மாழ்வார், ஸ்ரீவில்லிப்புத்தூரார், பரிமேலழகர், குமரகுருபரர் ஆகிய தமிழ்ப்புலவர்களை மட்டுமே.

கால்டுவெல்லின் பார்வையில் கம்பர்

திருநெல்வேலி சரித்திரத்தில், சோழர்கள் மற்றும் பிற்காலப் பாண்டியர்களின் வரலாற்றை எழுதிக் கொண்டு வருகையில், கம்பனின் காலம் கி.பி.1100 ஆக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார் கால்டுவெல்.

தென்னிந்தியாவிலேயெ மிக முக்கியமான நூற்றாண்டாகக் கால்டுவெல் கருதுவது 12ஆம் நூற்றாண்டைத்தான். டாக்டர் பர்ன்வெல் மற்றும் ரைஸ் ஆகியோரின் கல்வெட்டு ஆய்வுகளோடு, தன் ஆய்வு ஒத்திருப்பதையும் கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

'தமிழ்க் காவியமாகிய இராமாயண காவியத்தின் ஆசிரியராகிய கம்பர் தாமியற்றிய சடகோபர் அந்தாதியில், இராமானுஜரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். கம்பரது காலம் கி.பி. 1100 ஆக இருக்கலாம். ஏதோ ஒர் இராமாயண நினைவுப் பாடல் கூறுவது போல கி.பி. 886 ஆக இருக்கவியலாது என்பதை நாம் அறிவோம்'[7]

என்றும் கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார். கால்டுவெல்லின் கவனம், கல்வெட்டுகளின் மூலம் சோழ, பாண்டிய வம்சத்தினரை வரையறை செய்வது. அதிலும் குறிப்பாக, திருநெல்வேலிக் கல்வெட்டுகளில் காணப்படும் இராசேந்திர சோழனை (1064-1113 ஆட்சி) டாக்டர் பர்னலின் ஆய்வுகளோடு ஒப்பிடுவது என்ற போதும், கம்பரின் காலத்தையும் குறிப்பிட்டுள்ளார். இதன்மூலம், கம்பரைப் பற்றிய குறிப்புகளையும் கால்டுவெல்லின் பிரதியிலிருந்து காணமுடிகிறது.

கால்டுவெல்லின் பார்வையில் வேதநாயகர்

கால்டுவெல் தன்னுடைய காலத்தில் வாழ்ந்த சமகாலத் தமிழ்ப் புலவர்களையும் நன்கு அறிந்திருந்தார். குறிப்பாக, 1841ஆம் ஆண்டு முதல் கால்டுவெல்லுக்குத் தஞ்சை வேதநாயக சாஸ்திரியாரிடம் தொடர்பு இருந்ததை, தன்னுடைய ஆய்வு நூலொன்றில் (தஞ்சை வேதநாயகர் தமிழ்க்கொடை - ப. 8) மோசசு மைக்கேல் ஃபாரடே குறிப்பிடுகிறார். 'தஞ்சை வேதநாயகரது கவியாற்றலைப் பேராயர் டாக்டர் கால்டுவெல் பெரிதும் புகழ்ந்து போற்றியிருக்கிறார்'[8] என்ற அரிய செய்தியை மோசசு மைக்கேல் ஃபாரடே தந்துள்ளார். தஞ்சை வேதநாயக சாஸ்திரியாருக்கும் கால்டுவெல்லுக்கும் இருக்கும் தொடர்பு தனியே ஆராயத்தக்கது.

கால்டுவெல்லின் பார்வையில் பெஸ்கி

'திருநெல்வேலி சரித்திரம்' என்னும் நூலில் பெஸ்கியின் வாழ்க்கை வரலாற்றை, வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் கால்டுவெல் அணுகியுள்ளார் என்பதை அறியமுடிகிறது. பெஸ்கியைப் பற்றியும் அவருடைய 'தேம்பாவணி' நூல் குறித்தும் கால்டுவெல் தரும் குறிப்புகள் சுட்டத்தக்கன.

'இவர் தமிழரல்ல; ஓர் இத்தாலியர். ஏசு சங்கத்தைச் சார்ந்த சமயத்தைப் பரப்புகின்ற மதகுரு. இவர் தமிழில் புலமைமிக்கவர். சிறப்பாக இலக்கிய மொழி ஆராய்ச்சியில் வல்லவர். அந்த அளவுக்கு வேறு எந்த இந்திய மொழிகளிலும் வேறெந்த ஒரு ஐரோப்பியரும் திறமை பெற்றிருக்கவில்லை. அவருடைய உரைநடை நூல்கள் கொச்சை மொழியாலமைந்தது. சிறப்புடையது எனினும் ஈடு எடுப்பற்ற முதன்மையான மேம்பாடுடையதன்று. ஆனால் அவருடைய இலக்கிய மொழியில் இயற்றப்பட்ட பாடல்கள் இந்துக்களின் உயர்ந்த கருத்துக்களைக் கூறும் நோக்கில் கண்டால் அவை மிகச் சிறந்தவையே. அதிலும் சிறப்பாக அவருடைய புகழ் பெற்ற காவியம் தேம்பாவணி - சமயச் சார்புடைய உயர்ந்த தொடர் காவியம். அது சிந்தாமணியின் அமைப்பை ஒத்தது. அதாவது அது பரந்த உண்மைகளைக் கொண்டது. சிறப்பாக அணி செய்யப்பட்டது. மாறாக ஒருமைப் பண்புடையது. எனவே இரண்டாம் வகை தமிழ்க் கவிஞர்களில் முதன்மை இடத்தை அடையும் பேற்றினை விருப்பு வெறுப்பற்ற தமிழ்நாட்டுக் கவிஞர்களின் விருப்பத்தின் பேரிலேயே அடையலாம் என்பதில் எனக்கொன்றும் ஐயமில்லை. குறள், சிந்தாமணி, இராமாயணம், நாலடியார் இவற்றுள் மூன்று அதிகப்படியானால் நான்கு காவிங்கள் மட்டும் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றன என்பதை நினைவுக்குக் கொண்டுவரும்போது அத்தகைய மதிப்பு வாய்ந்த பேரிடத்தை ஓர் அயல்நாட்டவர் பெற்றது மிக்க வியப்புக்குரியது என்றே நான் நினைக்கிறேன்.'[9]

பெஸ்கியின் இந்திய வருகையையும் அவருடைய மறைவையும் கால்டுவெல் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் தன்னுடைய நூலில் (திருநெல்வேலி சரித்திரம்) பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல்லின் இலக்கியப் பகுப்பு

மொழியியல் வல்லுநராக இருந்த கால்டுவெல், 'The Relative antiquity of Dravidian Literature' என்னும் தலைப்பில் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். கால்டுவெல்லின் புகழ்பெற்ற நூலின் மூன்றாம் பதிப்பில் இக்கட்டுரை நீக்கப்பட்டுள்ளதைக் கவிதாசரண் சுட்டியுள்ளார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலின் மையக்கருத்துக்கு இக்கட்டுரை தேவையில்லாதது என்று நினைத்து, அந்தப் பகுதியை நீக்கியதாகக் காரணம் கூறப்பட்டாலும், கால்டுவெல்லின் இலக்கியப் பகுப்பை ஆராய்வதற்கு அக்கட்டுரை அவசியம் தேவையாகும்.

தமிழ் இலக்கியத்தை,

1. ஜைனர் காலம்
2. தமிழ் இராமாயணக் காலம்
3. சைவ மறுமலர்ச்சிக் காலம்
4. வைணவக் காலம்
5. இலக்கிய மறுமலர்ச்சிக் காலம்
6. பிராமண எதிர்ப்புக் காலம்
7. தற்கால எழுத்தாளர்கள் காலம்

என்று வகைப்படுத்திப் பேசியுள்ளமை சுட்டத்தக்கது.

பல தமிழ்ப்புலவர்களின் இலக்கியங்களை அறியாமல், கால்டுவெல்லால் இத்தகைய பாகுபாட்டைத் தந்திருக்க இயலாது. கவிதாசரணின் ஒரு கூற்றை இங்குத் தருவது பொருந்தும்.

'இதில், சித்தர் இலக்கியக் காலத்தைப் பிராமணர் எதிர்ப்புக் காலம் என வகைப்படுத்துவது மிகுந்த பொருளுடையதாகிறது. தமிழ் இலக்கிய வெளியில் ஒளிந்திருக்கும் நீர்க்கோட்டினை வெளிப்படையாகப் பட்டியலிட்ட முதல் மொழியியல் வல்லுநர் இவராகத்தான் இருக்க வேண்டும்'[10] என்பது கவிதாசரணின் கணிப்பு. திருக்குறள் போன்ற நூலைக் கால நிர்ணயம் செய்வதில் கால்டுவெல் தவறு செய்துவிட்டார் என்றாலும்,

'அது போன்றதொரு நூலை ஈன்றெடுப்பதற்கு இந்தத் தமிழ்மொழி எத்துணை தொன்மையும், செழுமையும் மிக்க வரலாற்றைக் கொண்டிருக்க வேண்டும் என்று பூரிக்கிறாரே, அந்த பூரிப்புதான் அவருக்கான அறிவியல் நேர்மை'[11]

என்பதைக் கவிதாசரண் பதிவு செய்திருப்பதையும் இங்குச் சுட்ட வேண்டும்.

கால்டுவெல்லுக்குத் தொல்காப்பியரைப் பற்றி எதுவும் தெரியாது என்ற நினைப்பையும் கவிதாசரணின் ஆய்வு தகர்த்தெறிகிறது. 'கால்டுவெல் தொல்காப்பியத்தை அறிந்திருந்தார் என்பது இன்றுவரை இருட்டடிப்புச் செய்யப்பட்டே வருகிறது. ஆனால் உண்மை என்னவெனில் அவர் தொல்காப்பியத்தை அறிந்திருந்தார் என்பதுதான். தொல்காப்பியத்தில் 'என்மனார் புலவர்' எனப்படுவது தொன்மையை நிலைநாட்டும் பொருட்டு என்பதாகியது. ஆனால், 'என்மனார்' என்பதற்கு மாற்றாக 'என்பர்' என்று சொன்னாலே அது தொன்மையைச் சுட்டக்கூடியதுதான் என்கிறார் கால்டுவெல்'12 என்பதையும் கவிதாசரண் குறிப்பிட்டுள்ளார்.

'திருநெல்வெலி சரித்திரம்' என்னும் நூலில் நாயக்கர்கள், பாளையக்காரர்கள் முதலியவர்களைப் பற்றிப் பேசும் கால்டுவெல், ஏன் சிற்றிலக்கியங்களைப் பேசவில்லை என்பது புரியவில்லை. எது எப்படியிருப்பினும், வள்ளுவர், நம்மாழ்வார், ஸ்ரீவில்லிப்புத்தூரார், குமரகுருபரர், பரிமேலழகர், கம்பர் முதலியவர்களை மட்டும் அறியாமல், இன்னும் மிகுதியான புலவர்களைக் கால்டுவெல் அறிந்திருக்கக்கூடும் என்ற முடிவிற்கு வருவதில் யாதொரு தடையும் இல்லை.

குறிப்புகள்

1. கால்டுவெல், திருநெல்வேலி சரித்திரம், மொழியாக்கம் : பேரா. ந. சஞ்ஜீவி, பேரா. கிருஷ்ணா சஞ்ஜீவி, ப. 435.
2. மேலது.
3. மேலது.
4. மேலது, ப. 436.
5. மேலது, ப. 437.
6. மேலது.
7. மேலது, ப. 45.
8. முனைவர் மோசஸ் மைக்கேல் ஃபாரடே, தஞ்சை வேதநாயகர் தமிழ்க்கொடை, ப. 8.
9. கால்டுவெல், திருநெல்வேலி சரித்திரம், மொழியாக்கம் : பேரா. ந. சஞ்ஜீவி, பேரா. கிருஷ்ணா சஞ்ஜீவி, ப. 389.
10. கவிதா சரண், தமிழ்ச் சமூகமும் தலித்தியக் கருத்தாடலும், ப. 26.
11. மேலது, ப. 126.
12. மேலது, ப. 82.

40. கால்டுவெல்லாரின் கட்டட, சிற்ப, ஓவிய, இசைப் பங்களிப்பு

த. செபுலோன் பிரபுதுரை
தமிழ்த்துறை
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

கால்டுவெல்லார் மொழியியல், இலக்கிய வரலாற்றியல், தொல்லியல், குமுகாயவியல், அகழ்வாய்வியல், ஒப்பியல், இனவரைவியல், மொழிபெயர்ப்பியல், அருளுரையியல், திருப்பணிவிடையியல் என பல துறைகளில் முத்திரை பதித்துள்ளார். குறிப்பாகக் கலைக்கல்லூரி மாணவரான இவரது கலைப்பங்களிப்பிற்குச் சான்றாகத்திகழும் இடையன்குடி தூய திரித்துவ தேவாலயத்தின் கட்டட, சிற்ப, ஓவிய, இசைப் பங்களிப்பு பற்றி விளக்குவதற்கு இக்கட்டுரை முற்படுகிறது.

கலைப்பயிற்சி

1830இல் தன்னுடைய 16வது வயதில் அண்ணனுடன் டப்ளின் (Dublin) எனும் இடத்தில் தங்கி ஓவியக் கல்லூரியில் தனது கலைப்பயிற்சியைத் தொடங்கினார் கால்டுவெல். அடிப்படையிலேயே ஓவியம், சிற்பம், இசை முதலிய துறைகளில் ஈடுபாடு கொண்டு பயின்றதைத் தமிழகத்தில் அவரது செயல்கள் காட்டி நிற்கின்றன.

தமிழகத்தில் கால்டுவெல்

1838ஆம் ஆண்டு 24 வயதில் சென்னை வந்திறங்கிய கால்டுவெல், திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திரு. டபுல்யு.ஹெட்.ட்ரூ (W.H.Drew) எனும் ஐரோப்பிய அறிஞரிடம் தமிழை முறையாகக் கற்றார். சென்னையிலிருந்து இடையன் குடிக்கு நடந்து சென்ற (1300 கி.மீ) கால்டுவெல்லாருக்கு, அந்தந்த வட்டார மக்களின் பேச்சு முறைகளால் தமிழ் இசைப்புடைய மொழி என்பது புரிந்திருக்கும்.

தஞ்சை செல்லும் வழியில், தஞ்சை சுவிசேடக் கவிராயர் வேதநாயக சாஸ்திரியாரைச் சந்தித்ததைத் தனது நினைவுக் குறிப்புகளில்

பதிவுசெய்துள்ளார் கால்டுவெல். 'அவர் இலக்கிய படைப்புகள் காலத்தை வென்று நிற்கும்'[1] என்று குறிப்பிடுவதோடு, விழாக்காலங்களில் மக்கள் வேதநாயக சாஸ்திரியார் பாடல்களை விரும்பிப் பாடியதையும் பதிவுசெய்துள்ளார்.ஐரோப்பாவிலிருந்துதமிழகம்வந்தகால்டுவெல்லுக்குத் தமிழ்த் தொடர்புடைய இசை மரபை அறிமுகப்படுத்தியவர் வேதநாயக சாஸ்திரியாராக இருக்கலாம். அவரது பாடல்களைப் பதிவு செய்திருக்கும் கால்டுவெல், தமிழிசை (கருநாடக இசை)பற்றிய அறிமுகத்தையும் அங்கேயே பெற்றிருக்கலாம். ஏனெனில் சாஸ்திரியார் இயற்றிய அனைத்துப் பாடல்களும் தமிழ் மரபு சார்ந்தவையே.

சோழநாட்டுக் கோயில்கள் கால்டுவெல்லாரை அதிகம் ஈர்த்தன. தஞ்சை பெரிய கோயிலின் சிறப்பை எண்ணி மகிழ்ந்து வியப்போடு விரிவாகக் குறிப்பிடும் கால்டுவெல்லார் திருச்சி, சிறீரங்கம் பெருமாள் கோயில் அவரைப் பெரிதும் ஈர்க்காததையும் பதிவுசெய்துள்ளார். இப்பதிவுகள் கால்டுவெல் ஒரு கிறித்தவ மிஷனரி மட்டுமல்ல அவர் ஒரு கவின்கலைக் கலைஞர் என்பதையும் காட்டுகிறது.

இடையன் குடியில் கலைப்பணி

1843 ஆம் ஆண்டு இடையன் குடிக்கு வந்து சேர்ந்தார் கால்டுவெல்லார். இடையன் குடியில் 1847 முதல் 1880 வரையிலான 33 ஆண்டுகள் அவருடைய முயற்சியின் விளைவாய் எழுந்தது தூய திரித்துவ ஆலயம். இத்திருக்கோயில் அவருடைய கட்டட, சிற்ப, ஓவிய, இசைப் பங்களிப்புகளுக்குச் சான்றாக நிற்கிறது.

கட்டடக் கலை

கால்டுவெல்லாரின் மனத்தில் தான் பணியாற்ற வந்த இடையன்குடி மக்களுக்காக ஒரு பெருங்கோயிலைக் கட்டவேண்டும் என்ற நீண்டகாலத் திட்டம் இருந்தது. தனது எண்ணங்களைக் குறிப்புகளாக வைத்திருந்தார். இக்கோயிலை கோதிக் (Gothic) கட்டடக்கலை முறையில் வடிவமைத்தார். இக்கலை மரபு கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியில் தோன்றியது. கி.பி.13ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் பேராலயங்கள், அரண்மனைகள், மாளிகைகள் இம்முறையிலேயே கட்டப்பட்டன. குறிப்பாக, கத்தீட்ரல் தேவாலங்களிலேயே இக்கலைமரபு வளர்ச்சியடைந்தது. கூர்மையான வளைவுகள் (Arch), மெல்லிய உயரமான தூண்கள், வெளிப்புறமாகப் புடைத்த கோடுகள், சித்திரவேலைப்பாடுகளுடன் அமைந்த காலதர்கள் (ஜன்னல்கள்) ஆகியன இக்கலைமரபின் அடிப்படைப் பண்புகளாகும்.

இவ்வடிவங்கள் தூய திரித்துவ திருக்கோயிலில் காணமுடிகிறது. காலதர்களும் கதவுகளும் கூர்மையான வளைவைக் கொண்டுள்ளன. இத்திருக்கோயிலின் நுழைவாயில் திருபீடத்துக்கு நேரே அமைக்கப்படவில்லை. மாறாக, வலப்பக்க ஓரத்தில்

அமைக்கப்பட்டுள்ளது. இப்படி அமைக்கப்பட்டதற்குக் காரணம், 'அக்காலத்தில் சிறுதெய்வ வழிபாடு மேள தாளத்தோடு சாமி ஆட்டங்களுடன் நிகழும்; இந்த ஆட்டங்கள், தேவாலய வழிபாட்டிற்கு இடையூறாய் இருக்குமென்றெண்ணி வாயிலை பீடத்திற்கு நேரே அமைக்காமல் வலப்பக்க ஓரத்தில் அமைத்துள்ளார் கால்டுவெல்' என்று ஆய்வாளர் ஞா.ஸ்டீபன்[2] தரும் விளக்கம் ஏற்கத்தக்கதே.

மேலும் திருக்கோயில் முழுமையும் கருங்கற்களாலேயே கட்ட முடிவு செய்தார் கால்டுவெல். நார்தம்டன்ஷா என்ற இடத்தில் தான் கண்டு வியந்த திருக்கோயிலின் வரைபடத்தைப் பெற்றுவந்து 1847 ஆம் ஆண்டு அடிக்கல்லிடப்பட்ட இக்கோயில் 1880ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம்நாள் திருஒப்படைப்பு செய்யப்பட்டது. 1200 பேர் அமரும் வகையில் விரிவாக அமைக்கப்பட்ட அக்கோயிலின் திருவாயில் தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. முகப்பு இடப்பக்கம் 25அடி உயரத்தில் தொடங்கி இரண்டாம் பங்கு மூன்றாம் பங்கு என 65 அடி வரை உயருகிறது. முதற்பங்கு கோயிலின் இடப்பகுதியாகவும் இரண்டாம் பங்கு பலிபீடமிருக்கும் நடுப்பகுதியாகவும் மூன்றாம் பங்கு வலப்பகுதியாகவும் குறிப்பாக மணிகளின் கூண்டு இருக்கும் கோபுரமாக அமைக்கப்பட்டுள்ளது.

திருப்பீடத்தின் மேற்கூரையும் சுற்றி உள்ள காலதர்களும் கோதிக் கலைமரபைச் சார்ந்தவை. பீடச்சுவரில் இருக்கும் திரித்துவக் கோட்பாட்டை விளக்கும் புடைப்போவியங்கள் கால்டுவெல்லின் படைப்பாகும். கண்ணாடிகளில் வரையப் பெற்றுள்ள வண்ண ஓவியங்கள் ரோம மற்றும் அரபுக் கலை மரபைச் சார்ந்தவை. உட்புறத்தில் ஐந்து கூர்மையான வளைவுகளின் மீது மரத்தாலான கட்டைகள் (Repper)மேல் கூரை வேயப்பட்டுள்ளது. செங்குத்து சாய்வாக அமைக்கப்பெற்றுள்ள கூரை அமைப்பு பனி பெய்யும் நிலங்களில் அமைக்கப்பெறும் முறையாகும்.

திருக்கோயிலின் சுவர்களும் தூண்களும் கருங்கற்களால் ஆனவை. மேல் பகுதியைத் தாங்கும் தாங்கிகளும் கதவு, காலதர்களில் இருக்கும் சிறு கட்டைகள், பலகைகள், கண்ணாடிகள் தவிர மீதம் யாவும் கருங்கற்களால் ஆனவை. கதவுகள், காலதர்கள் மேல் இருக்கும் சிற்ப வேலைப்பாடுகள் அனைத்தும் கால்டுவெல்லால் களிமண்ணில் மாதிரிகளாக முதலில் செய்துகாட்டப்பட்டு. பின்னரே கல் மற்றும் மரத் தச்சர்களால் செதுக்கப்பட்டவை. கருங்கற்களால் செதுக்கப்பட்ட நெடிய தூண்களும் காலதர் மேலிருக்கும் கலைவடிவங்களும் வண்ணம் பூசப்பட்டதால் அவை சுதைமா (Cement) வேலைப்பாடுகள் என்றே எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அவை கருங்கற்களால் செதுக்கப்பட்டவைகளாகும்.

கால்டுவெல்லாரின் இடையன்குடி அருட்பணி மாவட்டத்தில் 27 திருச்சபைகள் இருந்தன. அவற்றுள் 11 கால்டுவெல்லாரால் கட்டப்பெற்றவை. இவற்றுள் இடையன்குடியின் தூய திரித்தவ தேவாலயம் பிற திருச்சபைகளுக்குத் தாய் திருச்சபை என கால்டுவெல்லாரால் அழைக்கப்பெற்றது. இடையன்குடி நீங்கலாகப் பிற கோயில்கள் இயல்பான கோயில் அமைப்பிலேயே கட்டப்பட்டுள்ளவேயொழிய இடையன்குடி போன்று பெருங்கவனம் எடுத்துக்கட்டப்பெற்றவை அல்ல.[3] இங்குக் கோடைக்கானலில் கால்டுவெல்லாரால் கட்டப்பட்ட தூய பேதுரு ஆலயமும் திரித்துவ ஆலயம் போன்று சிறப்புறக் கட்டப்பட்டதன்று.

ஓவியக் கலை

கோயிலின் திருப்பீடச்சுவரில் இருக்கும் சிற்ப ஓவியங்கள் தனிச்சிறப்புடையன. புடைப்பு சிற்ப முறையில் அமைக்கப்பட்டுள்ள பீடச்சுவர், திரித்துவத்தைக் கலை வடிவத்தில் எடுத்தியம்புகிறது. தந்தை, மகன், தூய ஆவியார் எனும் திரித்துவத்தை விளக்கப் பல்வேறு வகையான வடிவங்களையும் நுட்பங்களையும் கையாளுவர். இங்குத் தூய ஆவியாருக்கு மேலிருந்து கீழறங்கும் புறாவையும், மகனுக்குத் திருச்சிலுவைகளும், தந்தைக்குத் திராட்சைக் கொடி போன்ற குறியீட்டையும் கொண்ட புடைப்பு சிற்பம் அமைக்கப்பட்டு வண்ணம் பூசப்பட்டுள்ளது. இவைகளுக்கு மேலே கூரை போன்ற அமைப்பில் வானம், வெண்மேகம் போன்றவை ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. வண்ணம் தீட்டப்பட்டிருக்கும் பீடச்சுவர் (*Tabernacle*) காண்போரைக் கவரும் வகையில் உள்ளது. கோடைக்கானல் ஆலயத்தின் பீடத்திலிலுள்ள கண்ணாடி ஓவியம் (*Glass Painting*) இறக்குமதி செய்யப்பட்டதன்றி கால்டுவெல்லாரால் வரையப்பட்டதன்று.

இசை

கிறித்தவ சமயம், இசையைப் பெரிதும் பயன்படுத்துகின்ற வழிபாட்டு முறையைக் கொண்டிருக்கிறது. இறைவழிபாடானது, நான்கில் மூன்று பங்கு இசைவடிவமாகவே உள்ளது. இறைவழிபாட்டில் இறைவேண்டல், திருமறை வாசிப்பு, அருளுரை, பாடல்கள் போன்றவை இன்றியமையாதவையாகும். பாடலில்லாமல் எந்தக் கிறித்தவ இறை வழிபாடும் நிகழ்த்தப்படுவதில்லை. இதையுணர்ந்த கால்டுவெல்லார், முதலில் சில பாமாலைகளை மொழிபெயர்த்தார். 'ஏசையா பிளந்த ஆதிமலையே மோசநாளில் உன்னில் ஒளிர்பேனே' என்ற பாடல் கால்டுவெல்லாரால் இயற்றப்பட்டது. இவ்வழிபாட்டுப் பாடல் பல்லவி, சரணங்கள் முதலிய கீர்த்தனை வடிவங்களைக் கொண்டுள்ளது. முன்பு இப்பாடல், 1938ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கிறித்தவக் கீர்த்தனைத் தொகுப்பில் ராக் ஆப் ஏஜஸ் (*Rock of Ages*) எனும் தலைப்பில் இடம்பெற்றிருந்தது. இப்போதும் இக்கீர்த்தனை இறைவழிபாட்டில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

கால்டுவெல்லாருக்குத் தமிழ்மொழியில் உள்ள இசை வடிவங்கள் நன்கு அறிமுகமாகி இருந்தன. வேதநாயக சாஸ்திரியாரைச் சந்தித்தபோதும்; தஞ்சை, திருவரங்கம் முதலிய கோயில்களைக் கண்டபோதும் ஆங்குக் கிடைத்த தமிழகத்து இசை மரபு அவரை ஈர்த்திருக்கும். இதன் வாயிலாகவே மேற்கண்ட பாடல், ஹிந்துஸ்தானி, சங்கராபரணம் ஆகிய பண்களோடு ரூபகதாளம்[4] ஆகியன பொருத்தி இசைக்குமளவிற்குப் பாடல் புனைவதில் ஆற்றல் பெற்றிருந்தார்.

இசைக்கதை நிகழ்ச்சி

'1876ஆம் ஆண்டில் ஆழ்வார்திருநகரி, குலசேகரப்பட்டணம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களுக்குத் தம் குழுவினரோடு சென்று இரவு நேரத்தில் கீதப்பிரசங்கம் மூலமாகச் செய்தியளிப்பது வழக்கம்; இல்லையேல் வேத, புராண, சாஸ்திரங்களைக் குறித்த தெளிவான அறிவோடு சொற்பொழிவாற்றினார்.'[5] மேற்சொன்ன இடங்களுக்குச் சென்று கால்டுவெல்லார் தனது குழுவினருடன் மாலை நேரங்களில் இசைக்கதை நிகழ்ச்சி (கீதப்பிரசங்கம், காதாகாலட்சேபம்) செய்திருக்கிறார். இசைக்கதை நிகழ்ச்சி என்பது கதைகூறும் பகுதி குறைவாகவும், பாடல்கள் அதிகமாகவும் இடம்பெறும் நிகழ்த்து முறையாகும். மேலும் புராணச் செய்திகளோடு தெளிவாக விளக்கமும் அளித்தார் எனும் குறிப்பு இந்திய குறிப்பாகத் தமிழக இசை மரபைச் சார்ந்தவையாகவே இருந்திருக்கும்.

தூய திரித்துவ ஆலயத்தின் மணிகள்

இடையன் குடியில் உள்ள தூய திரித்துவ ஆலயத்தில் நான்கு மணிகள் தனித்தன்மை வாய்ந்தவை. இக்கோயில் கட்டப்பட்டபோது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியானவை இரண்டு முதன்மையான பொருள்கள். ஒன்று *Shropshire* குடும்பத்தார் வழங்கிய பளிங்குக் கல்லாலான திருமுழுக்குத் தொட்டி. மற்றொன்று கால்டுவெல்லின் சகோதரர் ஜேம்ஸ் கால்டுவெல் வழங்கிய நான்கு இசை மணிகள்.

மணிக்கூண்டு கோபுரம்

தூய திரித்துவ கோயிலின் கோபுரமும், மணிகளும் ஆசியாவிலேயே வேறு எங்கும் காண இயலாதவையாகும் (திருநெல்வேலி மாவட்டத்தில் டோனா ஊரில் ஏமி கார்மெக்கல் அம்மையாரால் கட்டப்பட்ட திருக்கோயிலிலிருக்கும் இசைமணிகள் வேறு வகையைச் சேர்ந்தவை). நுழைவாயிலின் வலப்பக்கம் கோபுரத்துக்குச் செல்லும் முப்பத்தியோரு கல்லாலான படிக்கட்டுகள் செய்நேர்த்திமிக்கவை. ஒரு கல்லிலேயே படிக்கட்டும் மையப்பகுதியும் செதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னர் ஏறக்குறைய செங்குத்தான மரத்தாலான படிக்கட்டுகள் நான்கு படிநிலைகளாக அமைக்கப்பட்டுள்ளன. முதல் படிநிலையில் முறையே 10, 12, 10, 12

படிகளால் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் படிநிலையில் நான்கு மணிகள் பொருத்தப்பட்ட மரத்தாலான தளம் உள்ளது. மரத்தளத்திற்கு நான்கடி உயரத்தில் மணிகள் பொருத்தப்பட்டுள்ளன. மணியின் நாவுக்கு மரத்தளத்திற்கும் ஓர் அடி இடைவெளியுள்ளது.

மணிகளின் அமைப்பு

மரத்தளத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு மணிகளும் *Vickers sons and limited Sheffield pattern cast steel* எனும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டவை. அம்மணிகளில்,

- *Vickers sons and limited Sheffield 1876 pattern cast steel 6494*
- *Vickers sons and limited Sheffield 1877 pattern cast steel 6348*
- *Vickers sons and limited Sheffield 1879 pattern cast steel 6786*
- *Vickers sons and limited Sheffield 1880 pattern cast steel 6860*

மேற்கண்டவாறு பொறிக்கப்பட்டுள்ளன. இந்நான்கு மணிகளும் இசைக்குறிப்புகளோடு உள்ளன. முதல் மணி *C* (சி) எனும் இசைக்குறிப்பையும், இரண்டாம் மணி *D* (ரி) எனும் இசைக்குறிப்பையும் மூன்றாம் மணி *E* (க) எனும் இசைக்குறிப்பையும் நான்காம் மணி *F* (ம) எனும் இசைக்குறிப்பையும் இசைக்கும்போது தருகின்றன. அடிப்படையில் ஏழு சுரங்கள் ச,ரி,க,ம,ப,த,நி உள்ளன. அவற்றுள் முதல் பங்கான நான்கு சுரங்களை இம்மணிகளில் பெறமுடிகிறது. இம்மணிகளின் மூலம் பாடல்கள் இசைக்கப்படுகிறன.

மணியின் பொதுப்பயன்பாடு

காலையில் 8.15 மணிக்கு ஒற்றைமணியடிக்கப்படும். இது பள்ளிக்கு மாணவர்கள் செல்ல உதவுகிறது. நண்பகல் 12 மணிக்கு 41 முறை மணியடிக்கப்படுகிறது. இது கால்டுவெல்லார் காலத்தில் காலராவால் இறந்துபோன 41 பேரை நினைவேந்தும் நிகழ்வாக உள்ளது. 1.45க்கு பெண்கள் கூடுகைக்காக மணியடிக்கப்படுகிறது. பின்னர் 4.40க்கும் 7மணிக்கும் மணியடிக்கப்படுகிறது. ஏதேனும் அவசரத் தேவையெனில் அபாயமணி எனும் அடிப்பு முறை அடிக்கப்படுகிறது. இது வேகமாக ஒலியெழுவதால் மக்கள் எச்சரிக்கையாகி வெளியே வருவர். குறிப்பாக மரண நிகழ்ச்சியின் போது இறந்தவரின் உடல் கோயிலுக்குள் கொண்டுவரும் போது அடிக்கப்படும் மணி துக்க மணியாக அறியப்படுகிறது. இதன் அடிப்பு முறையிலேயே இறந்தவரின் வயது, பால் அறிவிக்கப்படுகிறது. இவ்வாறு பொது நிகழ்வுகளுக்கு அடிக்கப்படும்போது மூன்றாம் மணியாகிய *C* மணி கையிறால் இழுக்கப்பட்டு தரையிலிருந்தவாறே அடிக்கப்படுகிறது.

மணியின் சிறப்புப் பயன்பாடு

இந்நான்கு மணிகளும் நான்கு இசைக் குறிப்புகளோடு இசைக்கப்படுவதால் இம்மணிகளில் பாடல்கள் இசைக்கப்படுகின்றன. தொடக்க காலத்தில் மொழிபெயர்ப்பு பாடல்களான பாமாலைகளே இசைக்கப்பட்டன. தற்பொழுது பிறந்தநாள் வாழ்த்துப்பாட்டு*, தேசிய கீதம் நீங்கலாக 98 விழுக்காடு தமிழ்க் கிறித்தவக் கீர்த்தனைகளும் புத்தெழுச்சிப்பாடல்களும் இசைக்கப்படுகின்றன. காலை 5, 6.40, 9.40, மாலை 3.40 போன்ற நேரங்களில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் வெள்ளிக் கிழமைகளில் கூடுதலாக 4.40, 5 மற்றும் 6.40க்கு பாடல்கள் இசைக்கப்படுகின்றன.

இயல்பான வார நாட்களில் வியாழன், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் பாடல்கள் இசைக்கபடுகின்றன. தவக் காலங்களில் புதன், வெள்ளிக் கிழமைகளில் கூடுதலாக இசைக்கப்படுகின்றன. திருமணத்தின்போது இசைக்கப்படும் ஜாய்பெல் எனப்படும் அதிவேக இசைப்பு முறை கேட்போரை ஈர்க்கக் கூடியது.

கிறித்து பிறப்புக் காலங்களில் கிறிஸ்மஸ் பாடல்கள் மட்டும் இசைக்கப்படுகின்றன. இதுபோலவே தவக் காலங்களில் துக்கப்பாடல்களும் உயிர்ப்பு விழா அன்று உயிர்த்தெழுந்த பாடல்களும் இசைக்கப்படுகின்றன.

மணிகள் பற்றிய செய்திகள்

தொடக்கத்தில் மணிகள் கோயில் மணியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இடையன்குடி மக்களுக்கு மணியை இசைக்கும் இசைப்பு முறையைக் கற்றுக்கொடுக்க கால்டுவெல்லார் சில காலம் விட்டிருக்கலாம். மணிகள் யானைகளின் மீது வந்தன. முதலில் அதற்கு மேலே பொருத்தப்பட்டிருக்கும் கட்டைகளை அசைத்தே மணியை இசைத்தனர் என்றும் பின்னர் கயிறுகளில் நாவினைக் கட்டி இழுத்து, கீழிருந்து இசைத்தனர் என்றும் இதனால் மணியின் வலிய அதிர்வில் கோயில்சுவர்களில் விரிசல் உண்டானதால், கட்டைகளாலும் கயிறுகளாலும் அசைத்தும் இழுத்தும் இசைக்கப்பெற்ற மணிகள், மணியின் நாவைக் கையால் பற்றி மணியோடு மோதவிடப்பட்டு இப்போது இசைக்கப்படுகிறது. மேலும் மணியின் ஒலியளவைக் குறைக்க மணியின் உட்பகுதியில் யானைத் தந்தங்களை வைத்து தேய்த்து குறைத்தனர். மேலும் மணியின் நாவில் தோலை ஒட்டிவைத்தும் ஒலியளவைக் குறைத்தனர். மணிகள் பழமையானதால் அவற்றைப் பாதுகாக்க முதல் மணியில் மட்டும் வண்ணம் தீட்டியுள்ளனர். ஆனால் மணியினுடைய இசைக்குறிப்பு மாறுபட்டதால் மீண்டும் வண்ணத்தை அகற்றியுள்ளனர்.

தற்போது இசைக்கப்படும் பாடல்கள்

பக்தரே வாரும்..., சாலேமின் ராஜா..., சமாதானம் ஒதும்.., பெத்தலையில் பிறந்தவரை.., நம்பி வந்தேன் ஏசையா..., தேவனே நான் உமதண்டையில்..., சிர்ஏசு நாதனுக்கு..., வாராவினை வந்தாலும்..., குருசினில் தொங்கிய... முதலிய கீர்த்தனைகளையும் இன்னருள் நாதா..., பாவிவா.. பாவிவா.., நாற்பது நாள் ராப்பகல்..., பாவநாசப்பட்ட..., சிலுவையண்டையில்..., பிளவுண்ட மலையே..., உருகாயோ.. நெஞ்சமே... முதலிய பாமாலைகளையும் தேனினிமையிலும்... என்ற பாடல் தொடங்கி, குயவனே.. குயவனே.. எனும் அண்மைக்காலங்களில் வந்த பாடல்கள் வரை இசைக்கப்படுகின்றன.

இசைப்போர்

ஆறாம் வகுப்பு முதல் 12 வகுப்பு வரை பயிலும் இடையன்குடியைச் சேர்ந்த மாணவர்களே இம்மணியை இசைக்கின்றனர். பெண் மாணவர்கள் இசைப்பதில்லை. முதலில் வருவோர் இரண்டு மாதங்கள் மரப்படிகளில் அமர்ந்து இசைப்பதைக் கவனித்தல் வேண்டும். பின்னர் நாவைப் பிடித்திசைக்காமல் மணியின் மேல் பகுதியில் கைகளில் தட்டி பயிற்சியளிக்கப் படுகிறது. முதலில் இசைப்போர் காலை 4.40 மணியிலேயே இசைக்க அனுமதிக்கப்படுகின்றனர். ஏனெனில் பிழையேற்படுமாயின் திருத்திக்கொள்வதற்கு அந்நேரம் வாய்ப்பாக அமைகிறது. பின்னர் தெளிவு ஏற்பட்ட பின்னரே நாவினைப் பிடித்து இசைக்க அனுமதிக்கப்படுகின்றனர். புதிய பாடல்களுக்கான இசைக்குறிப்பைக் கோயிலின் இசையாசிரியர் மூலம் பெற்றுக் கொள்கின்றனர். பின்னர் சி, டி மணிகளை ஒருவரும் இ, எஃப் மணிகளை ஒருவருமாக இருவரமர்ந்து நான்கு மணிகளில் பாடல்களை இசைக்கின்றனர்.

தமிழிசை ஆய்வுக்கு கால்டுவெல்லாரின் கடைக்கால்

இந்தியத் துணைக் கண்டத்தில் கருநாடக இசை, இந்துஸ்தானி இசை என்று இரண்டு செவ்வியலிசை மரபுகள் உள்ளன என்று இந்திய இசைகளைப் பற்றி இசையறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், 12ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே கருநாடக இசையும், 16ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே இந்துஸ்தானி இசையும் வளவடிவம் பெற்றன. இதற்கு முன்னர் ஐந்திணையின் யாழ், குழல், பறை இயக்கிய தமிழிசை மரபுப் பற்றிய செய்தியை எவரும் குறித்திலர். ஐந்திணை இசைமரபான தமிழிசையுடன் சமற்கிருத மொழிப் பண்பாட்டுக்கூறுகள் கலந்த கலவையே கருநாடக இசை என்றும் மூலத் தமிழிசையுடன் பாரசீக மொழிப் பண்பாட்டுக் கூறுகளும், வடமொழிக்கூறுகளும் கலந்த கலவையே இந்துஸ்தானி என்றும் ஆய்வாளர்' குறிப்பிடுகின்றார்.

இந்திய இசை மரபிற்குத் தமிழரின் தமிழிசையே கடைக்காலாக இருந்தது என்னும் ஆய்வை நிகழ்த்துவதற்குக் கால்டுவெல்லாரின்

மொழி ஆய்வே அடிகோலியது. 'சமற்கிருதப் பண்பாடே இந்தியப் பண்பாடு என்றும் இந்துஸ்தானி இசை மரபே இந்தியாவின் இசை மரபு என்ற கருத்தும் 19ஆம் நூற்றாண்டு வரை அதாவது கால்டுவெல்லின் ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளியாகும் வரை வலுப்பெற்றிருந்தது.....' '1856ஆம் ஆண்டு பேராயர் கால்டுவெல்லின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூல் வெளிவந்தது. எவ்வாறு டெரிடாவின் குறியீடு, அமைப்பு, விளையாடல் என்ற கட்டுரை 1966ஆம் ஆண்டு அமைப்பியல் ஆய்வுகளுக்கு ஈறு ஆகியதோ, அவ்வாறே கால்டுவெல்லின் நூல் 1856இல் இந்தியாவில் இந்தியவியல் ஆய்வுகளுக்கு ஒரு முடிவு கண்டது. 1917இல் ஆப்ரஹாம் பண்டிதர் கருணாமிர்த சாகரம் என்ற தமிழிசையியல் நூலைத் தோற்றுவிக்க வழிகோலியது' என்று நிர்மல் செல்வமணி[7] குறிப்பிடுகிறார்.

மேலும் இக்காலத்தில் வழக்கத்தில் இருக்கும் கருநாடக இசை எனும் மரபு, தமிழரின் இசை மரபே எனும் கருதுகோலை நிறுவுவதற்குக் கால்டுவெல்லாரின் ஆய்வு உதவுவது குறித்து குறிப்பிடும்போது, *'Dravida Corresponds to Tamil in Sanskrit; the use of the term is of considerable antiquity, as we find it in Varaha-mitra at the beginning of the 5th century A.D.... Carnatic is the exclusively the country below the Ghauts, in the coramendel coast, including the whole of the Tamil country and the district of Nellore only in the Telugu country'* என்று கூறும் கால்டுவெல்லின் கூற்றினை மேற்கோளிட்டு 'இந்தச் சான்றுகளே போதுமானவை - இந்தக் காலம் கருநாடக இசை என்று அழைக்கப்படுவது, பண்டைய தமிழிசையே என்று நிறுவ மாய்ந்து மாய்ந்து ஆய்வு செய்ய வேண்டிய தேவை இல்லை; வண்டி வண்டியாகச் சான்றுகளும் தேவையில்லை' என்கிறார் நா.மம்மது.[8]

உயர் மொழியின் உயிர் வளையை நீஷ பாஷை என நச்சு நாவுகளால் இறுக்கி, தன் மண்ணிலேயே இழிவு படுத்தப்பட்ட தமிழை உயர்தனிச் செம்மொழி என உரக்கச் சொல்ல ஆற்றல் அளித்தவர் கால்டுவெல்லே. அவ்வாற்றலே, பெயர்மாற்றிப் பறித்துக்கொண்ட தமிழிசையை மீட்டெடுக்க வந்த ஆபிரகாம் பண்டிதருக்கு வலுசேர்த்திருக்கிறது எனலாம். கருணாமிர்த சாகரம் 1917ஆம் ஆண்டு வெளிவந்திருக்கிறது. முதலில் சித்த மருத்துவத்திற்காகவும் பின்னர் தமிழிசைக்காகவும் தரவுகளைச் சேகரித்து, தமிழிசை ஆய்வு மாநாடுகளை நிகழ்த்திய ஆபிரகாமிற்கு 1856இல் வெளிவந்த கால்டுவெல்லின் ஒப்பிலக்கண நூல் கிடைக்கப் பெற்றிருக்கலாம்.

தமிழக ஆய்வு வரலாற்றில் மொழி, தொல்லியல் முதலிய பல்வேறு துறைகளுக்குத் தன் ஆய்வுகளால் கடைக்கால் அமைத்த கால்டுவெல் தமிழிசை ஆய்வு வரலாறுக்கும் அடிகோலியிருக்கிறார்.

'கால்டுவெல் கிறித்தவ மதம் பரப்ப வந்த வெளிநாட்டு மிஷனெரி; ஒன்றிணைந்த பாரதத்தைப் பிரித்தாள எண்ணிய ஐரோப்பியர்களின் சூழ்ச்சியே திராவிடம் -தமிழ்' என்ற கருத்து நிலவிவரும் சூழலில் தன் ஒற்றை நூலால் தமிழ் மொழிக்கும் மக்களுக்கும் மானமும் அறிவும் புத்துணர்ச்சியும் அளித்த பேராயர் இராபர்ட் கால்டுவெல் சிலருக்கு அவ்வாறு தெரியலாம். ஆனால், வடமொழியின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட தமிழருக்கு கால்டுவெல் மீட்பராகத்தான் தெரிகிறார். அவரது ஆய்வுகள் இன்னும் பல ஆய்வுகளை நிகழ்த்த கருதுகோள்களை முன்வைத்து கொண்டே இருக்கின்றன.

செய்தி அடிக்குறிப்பு

*ஜனவரி 26 மற்றும் ஆகஸ்டு 15 தேதிகளில் ஜன கன மனகதியும் இசைக்கப்படுகிறது. பேராயர் இராபர்ட் கால்டுவெல்லாரின் பிறந்தநாளான மே மாதம் ஏழாம்தேதி அன்று பிறந்தநாள் வாழ்த்துப் பாடலான *Happy Birthday to You* எனும் பாடல் இசைக்கப்படுகிறது.

**நேர்காணல்: திரு. சுவிசேச முத்து, திருமதி டாரத்தி சுவிசேசமுத்து (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்).

மணியிசைக்கும் மாணவர்கள், கால்டுவெல், பிளஸ்சிங், சாம், டானியல், பிரின்ஸ், பீட்டர், லிப்னிக்.(இடையன்குடி.).

அடிக்குறிப்புகள்

1. தேவசகாயகுமார் (க.அ), கால்டுவெல் எனும் சிக்கல், மாற்றுவெளி, கால்டுவெல் சிறப்பிதழ்-1,2008. பரிசல் புத்தக நிலையம், ப.23.
2. ஞா.ஸ்டீபன் (க.அ), கால்டுவெல்லும் இடையன் குடியும்: ஒரு கிராமத்தின் உருவாக்கம், உங்கள் நூலகம், மலர்-5, இதழ்-11, 2014,ப.18.
3. குணசேகரன் கோயில் பிள்ளை (க.அ), பிஷப் கால்டுவெல்லின் பன்முகப்பணிகள், 2014, கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை வெளியீடு, ப.126
4. யோ.ஞானசந்திர ஜான்சன், 2009, கிறிஸ்தவக் கீர்த்தனைக் கவிஞர்கள், கீர்த்தனாப் பதிப்பகம், ப.62.
5. குணசேகரன் கோயில் பிள்ளை (க.அ), பிஷப் கால்டுவெல்லின் பன்முகப்பணிகள், 2014, கிறித்தவ இலக்கியத் தமிழ்ப்பேரவை வெளியீடு, ப.131.
6. தமிழரல்லாரின் தமிழிசைப் பணி, நிர்மல் செல்வமணி (க.அ), *V.Rajagopalan(edit.), 2003-'04, Madras Christion College Magazine, Vol LXIX.*, ப.115.
7. மேலது, ப.117
8. நா.மம்மது, ஆபிரகாம் பண்டிதர், சாகித்ய அகாதெமி, 2013, ப.66.

❀ ❀ ❀



மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, இனவரைவியல், கலை, சமயம் தொடர்பாக, கால்டுவெல் (1814–1891) நிகழ்த்திய திராவிடவியல் ஆய்வுகளைப் புலமைச் செயல்பாடுகளாக மட்டும் கருத இயலாது. அவற்றைத் தென்னிந்திய மக்களைப் பற்றிய மறைக்கப்பட்ட பெருமைகளையும் தனித்தன்மைகளையும் உலகுக்கு உணர்த்தும் அக்கறை கொண்டதாகவும் நோக்க வேண்டும். காலனியம், இனம், சாதியம், கல்வி பற்றிய கால்டுவெல் பார்வையும் தனித்துவமானது. பின்தங்கிய வறண்ட பகுதியைத் தம் பணிக்களமாகக் கொண்டு, அடித்தள மக்களின் கல்விக்கும் விடுதலைக்கும் அவர் பாடுபட்டார்.

சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் நிறுவனர் ஜான் ஆண்டர்சன் குறித்து...

> ***John Anderson*** *was my great friend in Madras at that time. He was one of the ablest and most zealous and devoted missionaries I ever met, and was certainly the most enthusiastic.*
>
> **- Dr. Caldwell**

சென்னைக் கிறித்தவக் கல்லூரி 175 ஆண்டுகளைக் கடந்த வரலாற்றுச் சிறப்பும் புதுமைப் பொலிவும் கொண்டிலங்கும் உயர்கல்வி நிறுவனம். இக்கல்லூரியில் 1871 ஆம் ஆண்டு முதல் மொழித்துறையின் முதன்மைத் துறையாக விளங்கிய தமிழ்த்துறை, 1968 ஆம் ஆண்டு முதல் தனித்துறையாகச் செயல்பட்டத் தொடங்கி, படிப்படியாக இளங்கலை முதல் முனைவர் பட்ட ஆய்வு வரை தரம் வாய்ந்த கல்வியை இன்று வழங்கி வருகிறது. பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் போன்றோர் இத்துறையில் பணியாற்றியவர்கள்; இராஜம் அய்யர், அ.மாதவையா, டி.கே.சி. வையாபுரிப் பிள்ளை, சோமசுந்தர பாரதியார் போன்றோர் இங்குப் பயின்றவர்கள்.